இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
21வது தமிழ்நாடு மாநில மாநாடு

2015 - பிப்ரவரி 16-19 - சென்னை

அரசியல் - ஸ்தாபன அறிக்கை

சர்வதேச நிலைமை

1.1 நமது கடந்த அகில இந்திய மாநாட்டுத் தீர்மானத்தில் சர்வதேச நிலைமை குறித்தும், உலகப்பொருளாதார நிலைமை குறித்தும் பல்வேறு விபரங்கள் மற்றும் மதிப்பீடுகள் குறிப்பிடப்பட்டிருந்தன. இந்த 3 ஆண்டு கால அனுபவம் நமது மதிப்பீடு சரியானது என்பதை நிரூபித்துள்ளது. 2007-08ல் துவங்கி நீடித்துவரும் நெருக்கடியிலிருந்து வளர்ச்சியடைந்த நாடுகள் மீள முடியாமல் திணறிக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக இந்நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் உழைக்கும் மக்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் மீது தாக்குதல் தொடுக்கும் காலமாகவே கடந்த 3 ஆண்டுகளும் இருந்துள்ளன.

ஆளும் வர்க்கத் தாக்கதலுக்கு எதிராக

1.2 வளர்ச்சியடைந்த நாடுகளில் ஆளும் வர்க்க நலன் கருதி மேற்கொள்ளப்பட்ட சிக்கன நடவடிக்கைகள் அரசு மற்றும் சமூக நலத்திட்டங்களில் செய்யப்பட்டுள்ள கடுமையான வெட்டு இவற்றின் விளைவாக இந்நாடுகளில் வறுமை, வேலையின்மை உள்ளிட்ட துயரங்கள் அதிகரித்துள்ளன. ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் பொதுத்துறை ஊழியர்களுக்கு ஊதிய முடக்கம் மற்றும் ஊதிய குறைப்பு அமலாகி வருகிறது. அமெரிக்காவிலும் கூட பெரும்பாலான தொழிலாளர்களின் உண்மை ஊதியம் 1970லிருந்து எவ்வித மாற்றமுமின்றி நீடித்து வருகிறது.

1.3 இத்தகைய தாக்குதல்களுக்கு எதிராக வளர்ச்சியடைந்த நாடுகளில் பரவலாக வேலை நிறுத்தங்கள், கண்டன ஆர்ப்பாட்டங்கள் உள்ளிட்ட போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. 2014ல் ஃபிரான்சில் 55 லட்சம் பேர் பங்கேற்ற ஒரு நாள் வேலைநிறுத்தம், பெல்ஜியம், ஸ்பெயினில் பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் நடத்திய பல வேலைநிறுத்தங்கள், இத்தாலியில் ஆசிரியர்கள், சமூகநலப்பணியாளர்கள், நகராட்சி ஊழியர்கள் நடத்திய வேலைநிறுத்தம், தென் ஆப்பிரிக்காவில் சுரங்கத் தொழிலாளர்கள் நடத்திய 5 மாத கால வேலைநிறுத்தம், பிரிட்டனில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்கள்

என 10 லட்சம் பொதுத்துறை ஊழியர்கள் நடத்திய ஒரு நாள் வேலைநிறுத்தம், கிரீஸில் தொழிலாளர்கள் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டது போன்ற பல போராட்டங்களை இங்கு குறிப்பிட முடியும். கிரீசில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சிக்கன நடவடிக்கைகளை எதிர்த்து கடுமையாகப் போராடிய சிரிசா என்ற இடதுசாரிக்கட்சி வெற்றி பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது.

மேற்கு ஆசியா – அரேபியா

1.4 அரேபியா மற்றும் மேற்கு ஆசியாவின் பல நாடுகளிலும் அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகள் தங்கள் மேலாதிக்கத்தை பலப்படுத்தவும் எண்ணெய் வளத்தைக் கொள்ளையிடவும் பல்வேறு தலையீடுகளை திட்டமிட்டு செய்து வருகின்றன. ஐ.எஸ். (முன்பு ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற அழைக்கப்பட்டது) என்ற பயங்கரவாத அமைப்பு சிரியாவின் பல பகுதிகளிலும் வடக்கு ஈராக்கிலும் இஸ்லாமிய அடிப்படைவாத ஆட்சியமைப்பை உருவாக்கியுள்ளது. சிரியாவில் இக்காலத்தில் தூண்டிவிடப்பட்ட உள்நாட்டு யுத்தத்தில் 30 ஆயித்திற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் மரணமடைந்துள்ளனர். 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் சிரியாவிலிருந்து வெளியேறி துருக்கி மற்றும் ஜோர்டானில் அகதிகள் முகாமில் வாழ்ந்து வருகின்றனர். ஈராக் தற்போது மதப்பிரிவுகளின் அடிப்படையில் மூன்றாகத் துண்டாடப்படும் அபாய நிலையில் உள்ளது. இந்நாட்டில் தற்போது மையப்படுத்தப்பட்ட அரசு என்பது அநேகமாக இல்லை: எகிப்து நாட்டில் ராணுவத் தளபதி சிசி அதிபர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அந்நாட்டில் எதேச்சதிகார ஆட்சியொன்றை உருவாக்கியுள்ளார்.

1.5 கடந்த அகில இந்திய மாநாட்டில் குறிப்பிடப்பட்ட ஜனநாயகத்தன்மை கொண்ட அரேபிய எழுச்சியானது ஏகாதிபத்திய தலையீடு, குறுங்குழு தன்மை வாய்ந்த ஷியா, சன்னி பிரிவினரின் மோதல்கள், இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளின் தாக்குதல்கள், எதேச்சதிகார எதிர்த்தாக்குதல்கள் போன்றவற்றால் இவ்வாறு பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

காசா மீதான தாக்குதல்

1.6 இக்காலத்தில் காசா பகுதியின் மீது இஸ்ரேல் மூர்க்கத்தனமான தாக்குதல் நடத்தியது. கடந்த 6 ஆண்டுகளில் நீண்டதொரு தாக்குதலாக இது இருந்தது. 30 நாட்களுக்கு மேல் நீடித்த இத்தாக்குதல்களில் 1800 பேருக்கு மேல் உயிரிழந்தனர் என்பதோடு அதில் பெரும்பாலோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் தான் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்கத்திய நாடுகள் இஸ்ரேலை ஆதரித்து வருகிற போதிலும் அந்நாடுகளில் உள்ள ஒரு பகுதி மக்கள் மத்தியில் இஸ்ரேலின் இத்தகைய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு எதிராக வெறுப்பு உள்ளது.

லத்தீன் அமெரிக்கா

1.7 லத்தீன் அமெரிக்க நாடுகளில் இடதுசாரிகளின் பிடிப்பும் செல்வாக்கும் தொடர்கின்றன. சாவேஸ் மறைவிற்குப் பிறகு வெனிசுலாவில் நடைபெற்ற தேர்தலில் அவரது கட்சியின் வேட்பாளர் நிக்கலோஸ் மதுரோ குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றதும் பல சவால்களைச் சந்தித்து அங்கு, இடதுசாரி ஆட்சி தொடர்வதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். பொலிவியா, பிரேசில், ஈகுவடார், உருகுவே, நிகாரகுவா ஆகிய நாடுகளில் நடைபெற்ற தேர்தல்களிலும் இடதுசாரி வேட்பாளர்கள் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர். முதலாளித்துவ சமூக அமைப்புக்கு உள்ளேயே ஏகாதிபத்திய, தாராளமய கொள்கைகளுக்கு மாற்றான முறையில் செயல்படும் ஆட்சிகளாக லத்தீன் அமெரிக்காவின் பல நாடுகளிலும் நடைபெறும் இடதுசாரிகளின் ஆட்சி திகழ்கிறது.

சோசலிச நாடுகள்

1.8 உலக அளவில் தாராளமயக் கொள்கைகள் தீவிரமாக அமல்படுத்தப்படும் பாதகமான

சூழலிலும் சோதனைகள், சவால்களை சந்தித்துக் கொண்டு சோசலிச நாடுகள் தங்கள் நாடுகளின் பொருளாதாரத்தை பலப்படுத்தி வருகின்றன. அமெரிக்காவின் வளர்ச்சி 2014ல் 2 சதவிகிதத்திற்கு மேல் இருக்காது என மதிப்பிடப்படும் நிலையில் சீனாவில் வளர்ச்சி 7.4 சதவிகிதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் காணவும் முனைப்பான முயற்சிகளை சீன அரசு செய்து வருகிறது. இருப்பினும் அசமத்துவமான வளர்ச்சி, வருமான ஏற்றத்தாழ்வு, ஊழல் போன்ற பிரச்சனைகளையும் அது சமாளிக்க வேண்டியுள்ளது. சோசலிச கியூபாவிற்கு எதிராக 50 ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்கா மேற்கொண்டு வந்த பொருளாதாரத் தடைகள் மற்றும் மிரட்டல்களை சந்தித்து பலதுறைகளிலும் அந்நாடு முன்னேறியுள்ளது. தற்போது அமெரிக்கா கியூபாவுடன் ராஜிய உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள எடுத்துள்ள முடிவு இடதுசாரி மற்றும் சோசலிச சக்திகளுக்கு கிடைத்த வெற்றியாகும். இதேபோலஉள்நாட்டில் பல்வேறு பிரச்சனைகள், சவால்களைச் சந்தித்துக் கொண்டே வியட்நாம் பொருளாதாரமும் ஓரளவு முன்னேற்றமடைந்துள்ளது. வடகொரியாவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பல்வேறு தடைகளையும், மிரட்டல்களையும் உறுதியாக எதிர்கொண்டு வருகிறது.

ஒரு துருவ உலகிற்கு எதிராக

1.9 அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகள் ஒரு துருவ உலகத்தைத் தொடர முயற்சிகளை மேற்கொண்டு வருகிற போதிலும் பல துருவப்போக்குகள் உருவாவதை அவற்றால் தடுக்க முடியவில்லை. சோசலிச நாடுகள், லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மட்டுமின்றி இக்காலத்தில் பிரதேச அடிப்படையிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருவதையும் காண முடிகிறது. சார்க் நாடுகள் (SAARC) இக்காலத்தில் சில கூட்டங்களை நடத்தி வளர்ச்சியடைந்த நாடுகளின் நிர்ப்பந்தங்களை சமாளிப்பது, தமக்குள் ஒத்துழைப்பை பலப்படுத்துவது உட்பட உள்ள அம்சங்களை விவாதித்து பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. இதேபோல பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா நாடுகளால் உருவாக்கப்பட்ட பிரிக்ஸ் அமைப்பும் பல முக்கிய முடிவுகளை மேற்கொண்டுள்ளது. இவை உருவாக்கியுள்ள புதிய வளர்ச்சி வங்கி (NDB) மற்றும் சி.ஆர்.ஏ. (அவசர நிதியுதவிக்கான ஏற்பாடு) ஆகிய நிதி நிறுவனங்கள் தமக்குள் நிதிப்பரிவர்த்தனைகளை உருவாக்கிக் கொள்ளவும், சுயசார்பை பலப்படுத்தவும் உதவும் என்பதில் ஐயமில்லை. இதேபோல ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் இடம் பெற்றுள்ள நாடுகளும் தங்களுக்குள் இக்காலத்தில் ஒத்துழைப்பை பலப்படுத்தியுள்ளன. இதோடு வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் என்ற முறையில் உக்ரைன் சம்பந்தமான பிரச்சனையில் அமெரிக்கா மற்றும் மேற்காசிய நாடுகளுக்கும், மறுபுறம் ரஷ்யாவிற்கும் கடுமையான முரண்பாடு மற்றும் மோதல்போக்கு ஏற்பட்டுள்ளதையும் கவனிக்க வேண்டும்.

அண்டை நாடுகள்

1.10 இந்தியாவின் அண்டை நாடுகளில் நிலவும் நிலைமைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

வங்க தேசம்

1.11 வங்கதேச தேர்தலில் மதசார்பற்ற அவாமி லீக் தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றது. ஆயினும் இஸ்லாமிய மத அடிப்படைவாத சக்திகள் தங்களது தீவிரவாத நடவடிக்கைகளைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்பதை சேர்த்துக் கவனிக்க வேண்டியுள்ளது.

நேபாளம்

1.12 நேபாளத்தில் அரசியல் நிர்ணய சபைக்கு நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு நேபாள காங்கிரஸ்,

நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (யு.எம்.எல்) இணைந்து கூட்டணி அரசை உருவாக்கியுள்ளன. ஐக்கிய நேபாள கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) எதிர்க்கட்சி வரிசையில் உள்ளது. அரசியல் அமைப்புச் சட்டத்தை இறுதிப்படுத்தும் பணியை இந்த அரசியல் நிர்ணய சபை எவ்வாறு நிறைவேற்றப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

பாகிஸ்தான்

1.13 பாகிஸ்தானில் மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஆட்சி முதன்முதலாக 5 ஆண்டுகாலம் பதவியில் இருந்து 2013ல் மீண்டும் தேர்தல் நடைபெற்று நவாஸ் ஷெரீப் பிரதமராகியுள்ளார். பாகிஸ்தானிலும் மத அடிப்படைவாதிகளின் நடவடிக்கைகளும் பயங்கரவாதச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. சமீபத்தில் பெஷாவரில் பயங்கரவாதிகள் 132 குழந்தைகளைச் சுட்டுக் கொன்ற சம்பவம் உலகை குலுக்கியது. இந்திய பாகிஸ்தான் உறவில் அவ்வப்போது சர்ச்சைகள் ஏற்பட்டு வருகின்றன. இரு நாடுகளுக்கும் நல்லுறவு பேணப்படுவதும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நீடிப்பதும் இப்பிராந்தியத்தின் அமைதிக்கும் வளர்ச்சிக்கும் தேவையான அம்சங்களாகும்.

சீனா

1.14 இந்திய சீன உறவில் எல்லைப் பகுதியில் சில பிரச்சனைகள் ஏற்பட்டபோதிலும் பொதுவாக முன்னேற்றம் உள்ளது. சீன ஜனாதிபதியின் இந்தியப் பயணம் இதனை அடைய மேலும் உதவியுள்ளது.

இலங்கை

1.15 இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிவடைந்து 5 ஆண்டுகள் கடந்த பின்பும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படாத நிலை நீடிக்கிறது. 13வது அரசியல் சட்டத்திருத்தத்தை அமல்படுத்துவது பற்றி ராஜபக்சே அரசு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை. இலங்கை தமிழர்களுக்கு சம உரிமை, சம அந்தஸ்து வழங்க மறுக்கும் நிலை தொடர்கிறது. அதேபோல ஆயுத மோதலின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து இதுவரை நியாயமான விசாரணை நடைபெறவில்லை. இத்தகைய அடிப்படையான பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படாமல் இலங்கையில் இணக்கமான சூழலை ஏற்படுத்த இயலாது. பொதுவாக ராஜபக்சே அரசு உட்பட இலங்கையில் இதுவரை செயல்பட்ட அரசுகள் அனைத்தும் தம் மீது அந்நாட்டு மக்களிடையே உருவாகும் அதிருப்தியை திசை திருப்ப இனவெறியைக் கிளப்பி இலங்கைத் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண மறுக்கும் நிலையையே எடுத்து வந்துள்ளன. தற்போது இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்சே தோல்வியடைந்து மைத்ரிபால சிறிசேன ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவருக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவு அளித்திருந்தது. இலங்கைத் தமிழர் பிரச்சனைகள் அனைத்திற்கும் தீர்வு காண இந்திய அரசு தன் ராஜிய ரீதியான நிர்ப்பந்தங்களைத் தொடர வேண்டும்.

தேசிய நிலைமை

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு செயல்பாடு

2.1 கடந்த 3 ஆண்டுகளில் தேசிய அரசியலில் பல்வேறு அரசியல் நிகழ்வுகளையும் மாற்றங்களையும் சந்தித்தோம். 2014 மே மாதம் வரை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அதிகாரத்தில் இருந்தது. இந்த அரசு கடைபிடித்த தாராளமய பொருளாதார கொள்கைகள் நாட்டின் பொருளாதாரத்திலும் மக்கள் வாழ்நிலையிலும் மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின.

2.2 ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் உணவுப் பொருட்கள் உட்பட அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் தாறுமாறாக உயர்ந்தன. பெட்ரோல் விலை நிர்ணயிப்பதில் அரசு கட்டுப்பாடு நீக்கப்பட்டு பெட்ரோலிய கம்பெனிகளே தீர்மானிக்க அனுமதிக்கப்பட்டதும், 2013ம் ஆண்டு மட்டும் 7 முறை இதன் விலை உயர்த்தப்பட்டதும், இதேபோல இக்காலத்தில் டீசல் விலை பலமுறை உயர்த்தப்பட்டதும், இத்தகைய விலைவாசி. உயர்வுக்கான மிக முக்கிய காரணங்களாகும். இப்பின்னணியில் மத்திய அரசு கொண்டு வந்த உணவுப்பாதுகாப்புச் சட்டம் அனைத்து மக்களுக்கும் பொருந்தும் வகையில் அமையவில்லை. ஒரு பகுதி மக்கள் இச்சட்டத்திற்கு வெளியே நிறுத்தப்பட்டனர்.

2.3 மறுபுறம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த உயர்மட்ட ஊழல்கள் வரலாறு காணாதவையாக இருந்தன. இவ்வாறு பல்வேறு அம்சங்களிலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் செயல்பாடுகளால் 2014ல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது.

நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள்

2.4 நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு 44 இடங்களும் 19.3 சதவிகித வாக்குகளும் மட்டுமே கிடைத்தன. பாஜக 31 சதவிகித வாக்குகள் மட்டுமே பெற்று 282 (52 சதம்) இடங்களுடன் தனிப் பெரும்பான்மை பெற்றது. நம் நாட்டின் தேர்தல் முறையில உள்ள குறைபாடு இது. நாம் கோரும் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை அமலானால்தான் அரசியல் கட்சிகளுக்கு ஜனநாயகபூர்வமான சரியான பிரதிநிதித்துவம் கிடைக்கும்.

2.5 மாநிலக் கட்சிகளில் அஇஅதிமுக 37 இடங்களும், பிஜு ஜனதா தளம் 20 இடங்களும், திரிணாமுல் காங்கிரஸ் 34 இடங்களும், தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி 17 இடங்களும் பெற்று குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றன. சமாஜ்வாதி கட்சி 5 இடங்களும், ஐக்கிய ஜனதா தளம் 2 இடங்களும், மதசார்பற்ற ஜனதா தளம் 2 இடங்களும், ஆம் ஆத்மி கட்சிக்கு 4 இடங்களும் பெற்று பெரும் பின்னடைவைச் சந்தித்தன. பகுஜன் சமாஜ் கட்சிக்கும், அஸ்ஸாம் கன பரிஷத் கட்சிக்கும் ஒரு இடம் கூட கிடைக்கவில்லை. ஆந்திராவில் உள்ள ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் 9 இடங்களைப் பெற்றது. இடதுசாரிக் கட்சிகள் இத்தேர்தலில் பெரும் பின்னடைவையே சந்தித்தன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 9 இடங்களும் 3.2 சதவிகித வாக்குகளும், சிபிஐக்கு ஒரு இடமும் 1 சதவிகித வாக்கும் கிடைத்தன. கேரளாவில் இடது ஜனநாயக முன்னணி ஆதரவு பெற்ற சுயேட்சைகள் 2 பேர் வெற்றி பெற்றனர். ஆக இடதுசாரிகளுக்கு இத்தேர்தலில் 12 இடங்கள் மட்டுமே கிடைத்தன.

பாஜக அரசின் செயல்பாடு

2.6 நரேந்திர மோடி தலைமையிலான அரசில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள கட்சிகள் இடம் பெற்றிருந்தாலும் அடிப்படையில் இது ஒரு பிஜேபி அரசே ஆகும். நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் இந்திய அரசியலில் ஒரு வலதுசாரி திருப்பத்தை உறுதிப்படுத்தியுள்ளது. பெரு நிறுவனங்களின் நலன்கள் மற்றும் ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான இந்துத்துவா சக்திகள் ஆகியவற்றின் பிரதிநிதியாக மோடி அரசு செயல்படுகிறது.

தொழில் - பொருளாதாரக் கொள்கைகள்

2.7 காங்கிரஸ் அறிமுகப்படுத்திய தாராளமயக் கொள்கையை பிஜேபி அதைவிடத் தீவிரமாக அமல்படுத்தி வருகிறது. பன்னாட்டு நிறுவனங்கள், இந்தியாவில் பெரும் நிறுவனங்கள் விரும்புவது போல தொழிலாளர் நலச் சட்டங்களை திருத்துவது, இன்சூரன்ஸ், பாதுகாப்புத்துறை உட்பட

பல்வேறு துறைகளிலும் அன்னிய நேரடி மூலதனத்தின் பங்கை அதிகரிப்பது போன்றவற்றை அமலாக்கியது. நாடாளுமன்ற கூட்டத் தொடர் முடிந்த உடனேயே நிலம் கையகப்படுத்துவது, நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு தொடர்பான அவசரச் சட்டங்களை கொண்டு வந்துள்ளது. ஏழை, எளிய நடுத்தர மக்கள் மீது பெரும் சுமைகளை ஏற்றும் வகையில் ரயில்வே பயணிகள் மற்றும் சரக்கு கட்டண உயர்வு, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை கணிசமாகக் குறைந்தாலும் அதன் பயன் முழுமையாக மக்களுக்கு கிடைக்காதபடி அவற்றின் மீதான விற்பனை வரியை உயர்த்துவது, அத்தியாவசிய மருந்து உட்பட அனைத்து மருந்துகளின் விலைகள் உயர அனுமதிப்பது, கிராமப்புற வேலை உறுதிச் சட்டத்தை படிப்படியாக முடக்க திட்டமிடுவது என பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அரசு நிர்வாகத்தில் – ஆர்.எஸ்.எஸ்.

2.8 மறுபுறம் அரசு கட்டமைப்புக்குள் ஆர்.எஸ்.எஸ். பிடிப்பை உருவாக்க திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆளுநர்கள் நியமனம், வரலாறு, கல்வி, கலாச்சார ஆய்வு நிறுவனங்களில் நியமனம் போன்வற்றில் தங்கு தடையின்றி ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்துத்துவா சிந்தனை உள்ளவர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். மோடி அரசு பொறுப்பேற்ற பின்பு குஜராத்தில் அகமதாபாத், வதோதரா, கர்நாடகாவில் பீஜப்பூர், மங்களூர், ஹரியானாவில் குர்கான், மராட்டிய மாநிலத்தில் பூனா உட்பட பல இடங்களில் வகுப்புவாத வன்முறைச் சம்பவங் கள் நடந்துள்ளன. மொத்தத்தில் அதிதீவிர தாராளமயக் கொள்கைகள் கூடவே வகுப்புவாத அணுகுமுறை என்ற கலவையான செயல்பாடுகளுடன் மோடி அரசு இயங்கி வருகிறது.

நமது தளங்கள்

2.9 மேற்கு வங்கத்தில் நாடாளுமன்றத் தேர்தலை தொடர்ந்து சிபிஐ (எம்) மற்றும் இடதுசாரி இயக்க ஊழியர்கள், ஆதரவாளர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். இதில் பலர் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரம் பேர் தங்கள் உடைமைகள், வாழ்வாதாரங்களை இழந்து குடியிருப்பு பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டியதாயிற்று. இத்தாக்குதலையும் சூழலையும் நமது தோழர்கள் உறுதியுடன் எதிர்கொண்டு வருகின்றனர். மறுபுறம் இச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அங்கு பாஜக தன்னை வலுப்படுத்த பிரத்யேகமான முயற்சிகளை மேற்கொள்கிறது. திரிணாமுல் காங்கிரஸ் அரசின் தவறான செயல்பாடுகள், சாரதா சிட் பண்ட் ஊழல், அக்கட்சி நடத்தி வரும் வன்முறைகளை பாஜக பயன்படுத்தி ஆதாயம் தேட முனைகிறது. இடதுசாரி இயக்கங்களைப் பொறுத்த வரை நம் மீதான தாக்குதல்களை சந்தித்துக் கொண்டே திரிணாமுல் காங்கிரசை மட்டுமல்ல வகுப்புவாத சக்திகளின் சவாலையும் முறியடிக்க வேண்டிய பொறுப்பு அங்கு ஏற்பட்டுள்ளது. தொடர்ச்சியான பல மக்கள் இயக்கங்கள் அங்கு நடத்தப்பட்டு வருகின்றன. கேரள மாநிலத்தில் நாம் எதிர்பார்த்த வெற்றி நாடாளுமன்ற தேர்தலில் கிடைக்காவிட்டாலும் முன்னைவிட சற்று அபிவிருத்தி செய்து நாம் ஒரு வலுவான சக்தி என்பதை நிரூபித்துள்ளோம். அங்கும் மக்களின் பல்வேறு பிரச்சனைகளில் எழுச்சிமிக்க போராட்டங்களை சிபிஐ (எம்) மற்றும் இடது ஜனநாயக முன்னணி நடத்தி வருகிறது. திரிபுராவில் முன்னைவிட அதிக வாக்குகளில் 2 நாடாளுமன்ற தொகுதிகளையும் கைப்பற்றியதோடு அதன்பிறகு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலிலும் மகத்தான வெற்றி பெற்றுள்ளோம்.

இடதுசாரி இயக்கங்கள்

2.10 நாடாளுமன்ற தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவைத் தொடர்ந்து இடதுசாரி இயக்கங்கள் மீது ஆளும் வர்க்கங்கள் அரசியல் மற்றும் சித்தாந்த ரீதியான தாக்குதல்களை கூர்மைப்படுத்தியுள்ளன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடதுசாரி இயக்கத்திற்கும் இனி எதிர்காலம் இல்லை என ஆளும் வர்க்க ஊடகங்கள் பிரச்சாரம் செய்து வருகின்றன. இவற்றை உறுதியுடன் எதிர்கொள்ள வேண்டிய தேவை நமக்கு உள்ளது.

2.11 தேர்தலில் நமக்கு ஏற்பட்ட பின்னடைவு, வாக்கு வங்கியில் ஏற்பட்ட சரிவு ஆகிய அம்சங்களை நமது மத்தியக்குழு விரிவாக விவாதித்து பலவீனங்கள், அனுபவங்கள் - படிப்பினைகளை இறுதிப்படுத்தி எதிர்கால கடமைகளை வரையறுத்துள்ளது. 20 ஆண்டு கால தாராளமய கொள்கைகளின் தாக்கம் பல்வேறு துறைகளை எவ்வாறு பாதித்துள்ளது என ஆய்வு செய்து பொருத்தமான எதிர்கால முழக்கங்களை உருவாக்க இருக்கிறோம். இக்காலத்தில் இடதுசாரி ஒற்றுமை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. சில கூட்டு இயக்கங்களும் நடத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து பலப்படுத்தும் கடமை நம்முன் உள்ளது.

தமிழகப் பொருளாதார நிலைமை

3.1 கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் திமுக, அஇஅதிமுக ஆட்சிகள் மாறி மாறி தாராளமயக் கொள்கைகளையே தீவிரமாக அமல்படுத்தி வந்துள்ளன. இதனால் அகில இந்திய அளவில் மட்டுமல்ல தமிழகத்திலும் விவசாயமும், தொழிலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

விவசாய நிலைமை

3.2 1991ல் மொத்த உற்பத்தி மதிப்பில் விவசாயத் துறையின் பங்கு (வேளாண்மை, கால்நடை, வனம் மற்றும் மீன்வளம்) 23 சதவிகிதமாக இருந்தது. இது 2013-14ல் 7.76 சதவிகிதமாக சரிந்துள்ளது. இக்காலத்தில் தொழில்துறையின் பங்கு 1991ல் 33 சதவிகிதமாக இருந்தது. 2013-14ல் 28.54 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. மறுபுறம் இக்காலத்தில் சேவைத்துறையின் பங்கு 1991ல் 44 சதவிகிதமாக இருந்தது. 2013-14ல் 63.70 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. ஆக 20 ஆண்டுகளில் தமிழக பொருளாதார வளர்ச்சி என்பது விவசாயத்துறையில் பின்னடைவும், தொழில்துறையில் மந்த நிலையும் உள்ளபோது சேவைத்துறையில் மட்டுமே முன்னேற்றத்தைச் சந்தித்துள்ளது. இந்த சேவைத்துறை வளர்ச்சி என்பதிலும் வீடு கட்டுதல், ரியல் எஸ்டேட் போன்ற பிரிவுகளில்தான் கூடுதலான முன்னேற்றம் உள்ளது.

3.3 தாராளமயக் கொள்கைகள் அமலாக்கத்தின் காரணமாக விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்பும், விளைவுகளும் கடுமையானதாகும். மத்திய மாநில அரசுகள் விவசாயத்துறைக்கான நிதி ஒதுக்கீடுகளைக் குறைத்தது, உரம், பூச்சி மருந்துகள், எரிபொருள், விலை உயர்வு, இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டது, விளை பொருள் விலை வீழ்ச்சி, கடன் வசதி குறைந்தது, கடனுக்கான வட்டி விகிதம் அதிகரிப்பு, வேளாண் ஆராய்ச்சிக்கான ஒதுக்கீடுகளைக் குறைத்தது, போதுமான விரிவாக்கப் பணிகள் இல்லாமை என பலமுனைத் தாக்குதலை விவசாயத்துறை சந்தித்தது. இதனால் ஏராளமான சிறு குறு விவசாயிகளுக்கு விவசாயம் செய்வது என்பது கட்டுப்படியாகக் கூடிய வருவாயைத் தராததால் விவசாயத்தை கைவிடும் நிலை உருவாகியுள்ளது. இப்பின்னணியில் ஏராளமான விவசாய விளை நிலங்கள் விவசாயம் அல்லாத பயன்பாடுகளுக்கு அதாவது ரியல் எஸ்டேட், வீடுகள் கட்டுதல், ஆலைகள், கல்விக்கூடங்கள் உருவாதல், நகர்மயமாதல் போன்றவற்றிற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இக்காலத்தில் உணவு தானிய உற்பத்தியும், சோளம், கரும்பு, கேழ்வரகு, பருப்பு வகைகளின் உற்பத்தியும் சரிந்துள்ளன. 1990களில் அரிசி உற்பத்தி ஆண்டு ஒன்றிற்கு 67.16 லட்சம் டன்னாக இருந்தது. இது 2010ல் 53.52 லட்சம் டன்னாகக் குறைந்தது. மறுபுறம் சிறுபகுதியினரான நிலப்பிரபுக்களும் பணக்கார விவசாயிகளும், பண்ணை உடைமையாளர்களும் இக்காலத்தில் ஏராளமான நிலங்களையும் வேளாண் இயந்திரங்கள் உள்ளிட்ட சொத்துக்களையும் வாங்கிக் குவித்துள்ளனர்.

3.4 2011ம் ஆண்டு விவசாய சென்செஸ் கணக்குப்படி 10 ஏக்கருக்கும் அதிகமான நிலங்களை

சாகுபடி செய்பவர்கள் மொத்த சாகுபடியாளர்களில் 2 சதவிகிதம் தான். ஆனால் மொத்த சாகுபடி நிலத்தில் 20 சதவிகிதம் இவர்கள் கையில் உள்ளது. மறுபுறம் 5 ஏக்கருக்கும் குறைவாக உள்ளவர்கள் 92 சதவிகிதம் உள்ளபோதும் இவர்கள் கையில் உள்ள நிலம் 61 சதவிகிதம் தான்.

3.5 இக்காலத்தில் பல்வேறு விவசாயப் பணிகள் மென்மேலும் இயந்திரமயமாக்கப்பட்டுள்ளன. விவசாய நிலப்பரப்பும் குறைந்து, விவசாய வேலைகளும் கணிசமாக இயந்திரமயமாகியுள்ள நிலையில் விவசாயக் கூலி வேலை நாட்கள் பெரிதும் குறைந்துள்ளன. இதனால் கிராமப்புறங்களிலிருந்து பிழைப்புக்காக நகர்ப்புறம் நோக்கி கிராமப்புற உழைப்பாளிகள் நகரும் போக்கு அதிகரித்துள்ளது. ஆனால் நகர்ப்புற நிலை இவர்களின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இல்லை.

தொழில் நிலைமை

3.6 மறுபுறம் தாராளமயக் கொள்கைகள் காரணமாக பல அந்நிய நிறுவனங்களுக்கும் இந்திய ஏகபோக நிறுவனங்களுக்கும் குறைந்த விலையில் நிலம், ஏராளமான வரிச்சலுகைகள், குறைந்த மின் கட்டணம், தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்தாமை, குறைந்த கூலி என பல்வேறு வசதிகள் உருவாக்கித் தரப்பட்டு அவற்றின் மூலதனங்கள் வரவேற்கப்பட்டன. ஆயினும் தமிழகத்தில் மொத்த பொருளுற்பத்தியில் தொழில் உற்பத்தியின் பங்கு உயரவில்லை என்பதை முன்பகுதியில் பார்த்தோம். இந்த முதலீடுகள் வேலைவாய்ப்பைக் குறிப்பிடத்தக்க அளவில் உருவாக்கவில்லை. வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 75.04 லட்சத்திலிருந்து 89.40 லட்சமாக உயர்ந்துள்ளது. இதில் 20 லட்சத்திற்கு அதிகமானவர்கள் பட்டப்படிப்பு முடித்தவர்கள். ஏராளமான அந்நிய, உள்நாட்டு மூலதனம் தமிழகத்திற்கு வந்துள்ளதாகவும் இதனால் வேலைவாய்ப்புகள் பெருகி உள்ளதாகவும் தமிழக அரசால் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிற போதிலும் உண்மை நிலவரம் இது தான்.

3.7 மேலும் தமிழக மின்உற்பத்தி தொடர்ந்து பற்றாக்குறை நிலையிலேயே உள்ளது. இது அனைத்துத் தொழிற்துறையையும் பாதிக்கிறது. பயன்படுத்தப்படும் மின்சாரத்தில் கணிசமான பகுதி அதிக விலை கொடுத்து வாங்கப்படுகிறது. இதனால் மின் கட்டணங்கள் உயர்த்தப்பட்டு தொழில்கள் குறிப்பாக, சிறு, நடுத்தர தொழில்கள் கடுமையாக பாதிக்கப்படுவது தொடர்கிறது. இது உற்பத்திச் செலவுகளை அதிகமாக்கி மேற்படி தொழில்களை நட்டத்திற்கு இட்டுச் செல்கிறது.

3.8 ஆலை பொருட்களின் ஏற்றுமதிச் சந்தை இக்காலத்தில் மந்தமாகவே உள்ளது. ஜவுளி, இன்ஜினியரிங் தொழில்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பின்னணியில் 2007-11 வரையிலான 4 ஆண்டுகளில் ஆலைப் பொருட்களின் உற்பத்தி வளர்ச்சி 4.36 சதவிகிதம் மட்டுமே இருந்தது. 2014-15 வரையிலான 3 ஆண்டு காலத்தில் இது இன்னும் குறையவே செய்யும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இக்காலத்தில் கைத்தறி, விசைத்தறி, தீப்பெட்டி, உப்பளம் உள்ளிட்ட சிறு, குறு தொழில்கள் தமிழகத்தில் கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளன.

உழைப்பாளர் நிலை

3.9 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மொத்த உழைப்பாளிகளின் எண்ணிக்கை 3 கோடியே 29 லட்சம் பேர். இவர்களில் 1 கோடியே 88 லட்சத்து 62 ஆயிரம் பேர் கிராமப்புற உழைப்பபாளிகள். எஞ்சிய 1 கோடியே 40 லட்சத்து 38 ஆயிரம் பேர் நகர்ப்புற உழைப்பாளிகள். கிராமப்பற உழைப்பாளிகளில் 42 லட்சத்து 50 ஆயிரம் பேர் சாகுபடி செய்பவர்கள். 96 லட்சம் பேர் விவசாயத் தொழிலாளர்கள். வீட்டு வேலை உள்ளிட்ட தொழில் செய்வோர் 13 லட்சத்து 66 ஆயிரம் பேர். மற்றவர்கள் இதர அனைத்துப் பிரிவுகளிலிலும்

பணிபுரிபவர்கள். நகர்ப்புற உழைப்பாளிகளில் அமைப்பு சார்ந்த துறைகளில் பணிபுரிவோர் 23 லட்சம் பேர் தான். மற்றவர்கள் அனைவரும் அமைப்பு சாரா மற்றும் இதர பணிகளில் ஈடுபடுபவர்கள். ஏறத்தாழ 90 லட்சத்திற்கும் அதிகமானவர்கள் கிராமங்களில் விவசாயம் அல்லாத இதர தொழில்களில் ஈடுபடுவோராகும். மேலும் கட்டுமானம் உள்ளிட்ட தொழில்களில் பணியாற்ற ஏராளமான வெளி மாநிலத் தொழிலாளர்கள் தமிழகத்திற்கு வந்துள்ளனர்.

வறுமை நிலை

3.10 தமிழகத்தில் வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களின் எண்ணிக்கை 2009-10ல் 1 கோடியே 97 லட்சம் என ரங்கராஜன் குழு மதிப்பிட்டுள்ளது. இவர்களில் கிராமங்களில் 96 லட்சம் பேரும், நகரங்களில் 1 கோடியே 1 லட்சம் பேரும் வாழ்வதாக இந்த மதிப்பீடு கூறுகிறது. அரசு நிர்ணயித்துள்ள மிகக்குறைந்த வருவாய் அடிப்படையிலான வறுமைக்கோடு அளவின் படியே இந்த எண்ணிக்கை கணக்கிடப்பட்டுள்ளது. உண்மையில் வறுமையில் வாடுபவர்களின் எண்ணிக்கை இதைவிட அதிகமாகவே இருக்கும். மேற்கண்ட மதிப்பீட்டின் படியே தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு வறுமை கோட்டிற்குக் கீழே உள்ளனர் என்பது அரசு கூறும் வளர்ச்சியின் மக்கள் விரோதத் தன்மையை அம்பலப்படுத்துகிறது.

நகர்மயமும் தொழில் வளர்ச்சியும்

3.11 தமிழக மக்கள் தொகையில் சரிபாதிப்பேர் (48.41%) நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர். எனினும் நகர்மயம் என்பது மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசமாக உள்ளது. சென்னை (100%), குமரி (82%), திருவள்ளூர் (65%), காஞ்சிபுரம்(64%), கோவை (76%), திருப்பூர்(61%), மற்றும் மதுரை (61%) ஆகிய மாவட்டங்களில் 60 சதவிகிதத்திற்கும் அதிகமான மக்கள் நகர்ப்புறங்களில் உள்ளனர். மறுபுறம் விழுப்புரம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திருவாரூர் மற்றும் நாகை மாவட்டங்களில் முக்கால்வாசிக்கும் அதிகமான மக்கள் கிராமங்களில்தான் உள்ளனர்.

3.12 தொழில்வளர்ச்சி என்பது சில மாவட்டங்களில் மட்டுமே குறிப்பிடும்படியாக உள்ளது. சென்னை, திருவள்ளூர், காஞ்சி, வேலூரின் ஒரு பகுதி என வட மாவட்டங்களிலும், கோவை, திருப்பூர், ஈரோடு என மேற்கு மாவட்டங்களிலும், திருச்சி, கரூர், தூத்துக்குடி, விருதுநகர் என சில நகரங்களிலும் இவ்வளர்சச்சி உள்ளது. இப்பகுதிகளிலும் பெருமளவு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் வளர்ச்சி அமையவில்லை. பெரும்பாலான மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி குறைவானதாகவே உள்ளது. சேவைத்துறையில் சில வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது. அதுவும் சென்னை உள்ளிட்ட சில நகரங்களில் ஓரளவு மட்டுமே ஏற்பட்டுள்ளது.

சுற்றுச் சூழல்

3.13 தமிழகத்தின் சுற்றுச் சூழல் பாதிப்பு நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. அரசின் தாராளமயக் கொள்கைகளால் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிப்பதை விட முதலீடுகளை ஊக்குவிப்பது என்ற பெயரில் பெரும் நிறுவனங்களுக்கு சலுகைகள் அளிக்கும் போக்கே அதிகம் உள்ளது. சுற்றுச்சூழல் விதிகளை தளர்த்தி பல தொழில் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. புதிய தொழிற்சாலை தொடங்குவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த பொதுவிசாரணை சம்பிரதாயமான முறையில் நடைபெறும் போக்கே அதிகம் உள்ளது. தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுகள் ஆற்றுநீருக்கும் சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. இதில் நீதிமன்றங்கள் வெளியிடும் உத்தரவுகள் கூட முறையாக அமல்படுத்தப்படுவது இல்லை. மறுபுறம் நிலத்தடி நீர்வளம் கார்ப்பரேட் மற்றும் தனியார் நிறுவனங்களால் பெருமளவு கொள்ளையிடப்படுகிறது. நகர்ப்புறங்களில் முக்கிய சுற்றுச்சூழல் பிரச்சனையாக திடக்கழிவு

மேலாண்மை உள்ளது. இதற்கான முறையான ஏற்பாடுகள் பல இடங்களில் இல்லாததால் நமது நீர்வளமும், மண்வளமும் பாதிக்கப்படுகிறது. இதேபோல மருத்துவமனைகளின் மருத்துவக் கழிவுகள் மேலாண்மைப் பிரச்சனையும் நகராட்சி மற்றும் பெருநகரங்களில் முக்கிய பிரச்சனையாக முன்னுக்கு வந்துள்ளது. இவைபற்றியெல்லாம் அரசு நிர்வாகம் போதுமான கவனம் செலுத்துவதில்லை. இதேபோல காற்று மாசுபடுவதும் பெரும் பிரச்சனையாக நகரங்களில் முன்னுக்கு வந்துள்ளது. தனியார் வாகனங்கள் அதிகரித்து வருவது இதற்கு முக்கிய காரணமாகும். இதனைக் குறைக்க வெகுஜன போக்குவரத்து வழிமுறைகளை பலப்படுத்துவதும், ஊக்குவிப்பதும் தேவையாகும். பொதுவாக நிலம், நீர், காற்று, மண்வளம் ஆகிய அடிப்படைத் தேவைகள் அனைத்தும் கடைச்சரக்குகளாக மாற்றப்பட்டு பன்னாட்டு மற்றும் இந்திய ஏகபோக நிறுவனங்கள் கொள்ளையிடுவதற்கு அனுமதிக்கும் அரசின் கொள்கைகள் சுற்றுச்சூழலின் பெரும் பாதிப்பிற்கு முக்கிய காரணமாகும்.

தமிழக அரசியல் நிலைமை

3.14 20வது மாநில மாநாட்டிற்குப் பிறகு கடந்த 3 ஆண்டு காலத்தில் தமிழகத்தில் அரசியல் ரீதியாக பல மாற்றங்களையும், 2014 நாடாளுமன்றத் தேர்தல் உள்ளிட்ட சில முக்கிய நிகழ்வுகளையும் சந்தித்தோம். இத்தேர்தலையொட்டி தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளின் அணிசேர்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. இடதுசாரிக் கட்சிகளைப் பொறுத்த வரை அகில இந்திய அளவில் மட்டுமல்ல தமிழகத்திலும் இந்த 3 ஆண்டுகாலம் சோதனைகளும், சவால்களும் நிறைந்த காலமாகவே இருந்தது. நமது கட்சியைப் பொறுத்தவரை அவ்வப்போது நிலவும் அரசியல் நிலைமைகளை கட்சியின் மாநிலக்குழுவில் விவாதித்து பொருத்தமான முடிவுகளை மேற்கொண்டோம்.

3.15 தமிழகத்தில் நடைபெற்று வரும் அஇஅதிமுக ஆட்சியின் பால் நமது அணுகுமுறை எவ்வாறு இருக்க வேண்டுமென்பதை நமது கட்சியின் கடந்த மாநில மாநாடு கீழ்க்கண்டவாறு வரையறுத்தது.

“பொதுவாகக் கடந்த 9 மாத கால அஇஅதிமுகவின் செயல்பாடு சில நலத்திட்டங்களை அமல்படுத்தியதே தவிர பல்வேறு பிரச்சனைகளில் மக்களின் நலன்களுக்கு எதிராகவே அமைந்துள்ளது. தமிழக அரசின் தவறான கொள்கைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் நாம் உறுதியான எதிர்ப்பை எதிர்காலத்திலும் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்...

திமுக இடம்பெற்றுள்ள மத்திய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்தும் மாநில அஇஅதிமுக அரசின் தவறான கொள்கைகளை எதிர்த்தும் கட்சி சுயேட்சையான இயக்கங்களை மேற்கொள்ளும். மேலும் இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து கூட்டு இயக்கங்கள் நடத்துவதோடு மதச்சார்பற்ற கட்சிகளுடன் இணைந்து கூட்டு இயக்கத்திற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.”

மேற்கண்ட அணுகுமுறைக்கு உட்பட்டு அஇஅதிமுக அரசின்பால் கடந்த 3 ஆண்டுகளில் நமது பொதுவான நிலைபாடுகள் இருந்தன.

அஇஅதிமுக அரசின் செயல்பாடு

3.16 அஇஅதிமுக அரசு ஏற்கனவே கடைப்பிடித்து வந்த தாராளமயக் கொள்கைகள் இந்த 3 ஆண்டுகளிலும் தொடர்ந்தன. இதனால் மக்களின் சுமைகள் அதிகரிக்கும் போது பல நலத்திட்டங்களையும் இந்த அரசு அறிவித்து வருகிறது. ஏற்கனவே இருந்த நலத்திட்டங்களோடு இக்காலத்தில் நகர்ப்புறப் பகுதிகளில் அம்மா உணவகம் மற்றும் சில நலத்திட்டங்களும்

அறிவிக்கப்பட்டன. பொதுவாக இந்த நலத்திட்டங்களுக்கு பரவலான மக்கள் மத்தியில் வரவேற்பு இருப்பதோடு தாராளமயக் கொள்கைகளால் துயருறும் மக்களுக்கு இவை ஓரளவு நிவாரணம் அளிப்பதாகவும் விளங்கி வருகின்றன. அதே சமயம் இவற்றை நடைமுறைப்படுத்துவதில் குறைபாடுகள் நீடிக்கின்றன.

3.17 மத்தியில் 2014 மே மாதம் வரை ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசை அஇஅதிமுக பல அம்சங்களில் எதிர்த்து வந்துள்ளது. ரயில்வே கட்டணம், பெட்ரோல், டீசல், விலை உயர்வு, சில்லரை வர்த்தகத்தில் அன்னிய மூலதனம், உணவுப் பாதுகாப்பு சட்டம், என்.எல்.சி. பங்கு விற்பனை, மண்ணெண்ணெய் மானியக் குறைப்பு உள்ளிட்ட மத்திய அரசின் பல நடவடிக்கைகளை கண்டித்து வந்துள்ளது. மாநில உரிமைகள், நலன்களுக்கு பாதிப்பு ஏற்பட்ட போது அதற்கு எதிராகக் குரல் கொடுத்தது. ஆனால் தமிழகத்தில் தாராளமயக் கொள்கைகளை வேறு பல அடிப்படையான அம்சங்களில் செயல்படுத்தத் தயங்கவில்லை. தற்போது மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு பாஜக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள நிலையில் தாராளமயக் கொள்கைகள் முன்னிலும் தீவிரமாக அமல்படுத்தப்பட்டு வரும் நிலையில் அஇஅதிமுக அரசு பெரிதாக விமர்சிப்பதில்லை.

3.18 அரசின் 3 ஆண்டுகால நிதிநிலை அறிக்கைகள் இந்நிலைபாட்டிற்கு உட்பட்டே இருந்துள்ளன. தமிழக மக்களின் அடிப்படையான பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் இவை அமைந்திருக்கவில்லை.

தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவாக - தொழிலாளர்களுக்கு எதிராக

3.19 தமிழகத்தில் செயல்படும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு மத்திய அரசு மட்டுமின்றி மாநில அஇஅதிமுக அரசும் பல்வேறு சலுகைகளை அளித்து வருகிறது. தமிழகத்தில் கடும் மின்வெட்டு நிலவிய காலத்தில் இந்நிறுவனங்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டதோடு மிகக்குறைந்த கட்டணத்தில் வழங்குவதும் வேறுபல வரிச்சலுகைகளும் தொடர்கின்றன. இவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மிகக்குறைந்த ஊதியமே வழங்கப்படுகிறது. தொழில்தகராறு சட்டங்களை இந்நிறுவனங்கள் ஒரு பொருட்டாக ஒருபோதும் மதிக்காத போது தமிழக அரசு இதில் தலையிடுவதே இல்லை. இவ்வளவு சலுகைகளை பெற்ற போதும் சென்னையில் உள்ள நோக்கியா நிறுவனம் திடீரென ஆலை மூடல் செய்து இதில் பணியாற்றும் 8500 தொழிலாளர்களை நடுத்தெருவில் நிறுத்தியது. அடுத்து பாக்ஸ்கான் தொழிற்சாலை நிர்வாகமும் ஆலை மூடலுக்கான நடவடிக்கையை மேற்கொண்டது 1700 தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை உள்ளது. வேறு பல நிறுவனங்களிலும் உற்பத்தியைக் குறைப்பது, ஆட்குறைப்பு, ஆலை மூடல் போன்ற தாக்குதல்கள் நடந்துள்ளன. மத்திய, மாநில அரசுகள் பிரச்சனையைத் தீர்க்க உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. தமிழகத்தில் உள்ள பெரும் தொழில் நிறுவனங்களும் இதர தொழிற்சாலைகளும் தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்துவதில்லை. தமிழக அரசின் தொழிலாளர்துறை ஏறத்தாழ செயல்படாத துறையாகவே உள்ளது. தமிழகத்தில் உள்ள லட்சக்கணக்கான அணிதிரட்டப்படாத உழைப்பாளிகள் குறைந்த ஊதியத்துடன் சொல்லொணா துயரங்களுக்கு ஆளாகின்றனர். நலவாரிய செயல்பாடுகள் முடங்கிக் கிடக்கின்றன.

மின்வெட்டு

3.20 தமிழகத்தில் 2 ஆண்டுகள் மின்வெட்டு கடுமையாக நீடித்தது. தற்போது நிலைமையில் ஓரளவு முன்னேற்றம் இருப்பினும் இது எவ்வளவு காலம் நீடிக்கும் என்று கூற முடியாது. இதனால் பொதுமக்கள், விவசாயிகள், மாணவர்கள் மட்டுமல்ல சிறு - குறு தொழில் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் கடும் பாதிப்பைச் சந்தித்தன. உதாரணமாக கோவையில் சுமார் 30

ஆயிரம் சிறு குறு தொழில்கள் உள்ளன. இவற்றில் 3 லட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். இங்கு 50 சதவிகித உற்பத்தியே நடைமுறையில் உள்ளது. இதனால் தொழிலாளர்கள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதோடு இந்நிறுவனங்கள் பெற்ற வங்கிக் கடனை திரும்பச் செலுத்த முடியவில்லை. கோவையில் மட்டுமல்ல மாநிலம் முழுவதும் சிறு, குறு தொழில்களின் நிலை இது தான். கடந்த காலங்களில் செயல்பட்ட திமுக, அஇஅதிமுக அரசுகள் கூடுதலான மின் உற்பத்திக்கு உருப்படியாக திட்டமிடாததே இத்தகைய மின்சார வெட்டிற்கு முக்கிய காரணமாகும். தற்போது தனியார் நிறுவனங்களிடமிருந்து மிகக் கூடுதலான விலையில் மின்சாரம் வாங்கி சமாளிக்கும் நிலைமை உள்ளது. மின் கட்டண உயர்விற்கு இதுவும் முக்கிய காரணம்.

விவசாயிகள் - விவசாயத் தொழிலாளர்கள் நிலை

3.21 தமிழகத்தில் விவசாய நிலை குறித்து முற்பகுதியில் சுட்டிக்காட்டிய அடிப்படையில் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் கொண்டுவரப்பட்ட கிராமப்புற வேலை உறுதிச் சட்டம் இதுவரை சரிவர அமல்படுத்தப்படவில்லை. தமிழகத்தில் இச்சட்டத்தின் கீழ் பெண் தொழிலாளர்கள் 94.67 லட்சமும் ஆண் தொழிலாளர்கள் 55.34 லட்சமும் ஆக 1 1/2 கோடிப்பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு 1.4.2014 முதல் ரூ. 167 தின ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும் கடினமான வேலைச் சுமை காரணமாக நாள் ஒன்றுக்கு ரூ. 100 முதல் ரூ. 130 வரை மட்டுமே ஊதியம் கிடைக்கிறது. இத்திட்டத்திற்கான நடப்பு ஆண்டு நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசு குறைத்துள்ளது. படிப்படியாக இத்திட்டத்திற்கு மூடுவிழா நடத்திட பாஜக அரசு திட்டமிட்டுள்ளது. தமிழகத்திலுள்ள 384 ஒன்றியங்களில் 2015-16 ஆம் ஆண்டுகளில் 98 ஒன்றியங்களில் மட்டுமே இத்திட்டம் அமல்படுத்தப்படும் என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதனால் கிராமப்புற ஏழை, எளிய மக்கள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். தமிழகத்தில் வீட்டுமனைப் பட்டா கோரி பல லட்சம் பேர் விண்ணப்பித்துள்ள போதிலும் ஒரு சிறு பகுதியினருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் சுமைகள்

3.22 அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் பால் விற்பனை விலை 2 முறை கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளது. பேருந்து கட்டணமும் ஒருமுறை பெருமளவில் உயர்த்தப்பட்டது. மின்சாரக் கட்டணமும் 2012ல் கடுமையாக உயர்த்தப்பட்டது. தற்போது மீண்டும் மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவுப்படி மின்சார வாரியம் 15 சதவிகிதம் வரை உயர்த்தியுள்ளது. 500 யூனிட் வரை பயன்படுத்துபவர்களுக்கான கட்டண உயர்வை தமிழக அரசே மானியமாக வழங்கும் என அறிவித்துள்ளபோதிலும் மத்தியதர வர்க்கத்தினர், சிறு தொழில் உடைமையாளர்கள் உட்பட பரவலான பகுதியினர் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். பன்னாட்டு நிறுவனங்களுக்கும் பெரும் தொழில் நிறுவனங்களுக்கும் ஏராளமான சலுகைகள் வழங்கப்படும் போது ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு அத்தியாவசியமான தேவைகளுக்கு கூட போதுமான மானியம் வழங்க மறுப்பது அஇஅதிமுக அரசின் ஆளும் வர்க்க ஆதரவுப்போக்கை வெளிப்படுத்துகிறது. அதிமுக அரசு பொறுப்பேற்ற இந்த மூன்றாண்டு காலத்தில் 15,000 கோடி அளவிற்கு மக்கள் மீது விலையுயர்வு மற்றும் கட்டண உயர்வை சுமத்தியுள்ளது. இத்தகைய உயர்வுகள் மூலம் கிடைக்கும் வருமானத்தை விட குறைந்த தொகையே அரசின் நலத்திட்டங்களுக்கு செலவிடப்படுகிறது. மேலும் புதிய ரேஷன் கார்டு விண்ணப்பித்துள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு ரேஷன் கார்டுகள் வழங்கப்படாத நிலை உள்ளது. முதியோர், விதவை, ஆதரவற்றோர், மாற்றுத் திறனாளி உதவித் தொகை கடந்த 8 மாதங்களாகப் பரவலாக நிறுத்தப்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கு - ஜனநாயக உரிமைகள்

3.23 தமிழகத்தில் காவல்துறையின் கட்டமைப்பை மேம்படுத்த ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரம் கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. இருப்பினும் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை. கொலை, கொள்ளை, சமூகவிரோதச் செயல்கள் அதிகரித்துள்ளன. தலித்துகள், பெண்கள் மற்றும் பல்வேறு பகுதி மக்களுக்கு பாதுகாப்பற்ற நிலை அதிகரித்துள்ளது.

குற்றங்கள்

ஆண்டு	பெண்கள் மீதான தாக்குதல்	குழந்தைகள் மீதான தாக்குதல்	தலித் மீதான தாக்குதல்
2010	6708	810	1631
2013	7475	1188	1845

மாநிலத்தின் பல பகுதிகளில் கூலிப் படைகள் இயங்கி வருகின்றன. இவர்கள் மீது காவல்துறை உரிய நடவடிக்கை எடுப்பதில்லை. இக்காலத்தில் காவல்நிலைய மரணங்கள் பலவும் நடந்துள்ளன.

3.24 மறுபுறம் ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல்கள் அதிகரித்த வண்ணம் உள்ளது. தமிழகத்தின் பல பகுதிகளில் ஊர்வலம், ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் போன்ற ஜனநாயக இயக்கங்களுக்கு காவல்துறை அனுமதியளிக்க மறுக்கிறது. பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கான இடங்கள் குறைக்கப்படுகின்றன. தமிழக அரசையோ, முதல்வரையோ விமர்சித்தற்காக பலர் மீது அவதூறு வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. மணல் கொள்ளை பிரச்சனையில் கண்டன அறிக்கை வெளியிட்டதற்காக நம் கட்சியின் மாநிலச் செயலாளர் மீது அவதூறு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. தர்மபுரி, விழுப்புரம் போன்ற சில மாவட்டங்களில் தொடர்ச்சியாக பல மாதங்கள் 144 தடையுத்தரவு நீடித்தது. சென்னை மாநகரில் ஊர்வலம் நடத்த நிரந்தர தடை உள்ளது. துண்டு பிரசுரம் விநியோகிக்கக் கூட காவல்துறையின் அனுமதி தேவை என பல பகுதிகளில் காவல்துறையால் வற்புறுத்தப்படுகிறது. மத்திய மாநில அரசுகளின் கொள்கைகளுக்கு எதிராக மக்கள் மத்தியில் அதிருப்தி வளர்ந்து வரும் நிலையில் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுவதற்கு எதிராக நாம் தீவிரமாகப் போராட வேண்டியுள்ளது.

ஊழல்

3.25 அரசு நிர்வாகத்தின் அனைத்துத் துறைகளிலும் ஊழல் தலைவிரித்தாடுகிறது. அனைத்து நியமனங்களுக்கும் கையூட்டுக் கட்டணங்கள் தீர்மானிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. அரசுப் பணிகளில் இடமாற்றத்திற்குக் கூட கையூட்டு அளிக்க வேண்டிய நிலை உள்ளது. அரசுப் பணிகள் முழுமையாக காண்டிராக்ட் விடப்படுவதும் அதில் அமைச்சர்கள் வரை கமிஷன் பெறுவதும் சர்வ சாதாரணமாக நடைபெறுகிறது. சத்துணவுக்குத் தேவையான முட்டைகள் கொள்முதல் செய்வதிலும், ஆவின் பால் நிறுவனத்திலும் நடைபெற்ற ஊழல் சமீபத்தில் வெளிவந்துள்ளன. உயர்மட்ட ஊழல், முறைகேடுகளுக்கு எதிராகச் செயல்படும் பல அதிகாரிகள் மாற்றம் செய்யப்படுவது சர்வ சாதாரணமாக நடைபெறுகிறது. கிரானைட் ஊழலைக் கண்டறிந்த உ. சகாயம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது இதற்கொரு உதாரணம்.

கூட்டுறவு தேர்தல் - உள்ளாட்சி இடைத் தேர்தல்

3.26 தமிழகத்தில் திமுக ஆட்சியில் மட்டுமல்லாது அஇஅதிமுக ஆட்சியிலும் கூட்டுறவுத் தேர்தல்கள் ஜனநாயகப் பூர்வமாக நடத்தப்படவில்லை. 10 ஆண்டுகளுக்குப்பிறகு நடத்தப்பட்ட கூட்டுறவுத் தேர்தலில் ஆளும் கட்சியினர் தவிர இதர கட்சிகள், அமைப்புகள், தனிநபர்கள் பல இடங்களில் வேட்புமனுத்தாக்கல் செய்ய விடாமல் அதிமுகவினர் அராஜக நடவடிக்கைகளை மேற்கொண்டனர், தாக்குதல்களையும் நடத்தினர். கூட்டுறவு தேர்தல் ஆணையம்

வெறும் பார்வையாளராகவே செயல்பட்டது. இதேபோல உள்ளாட்சி இடைத் தேர்தலிலும் ஆளும்கட்சியினர் ஜனநாயகத்திற்குப் புறம்பான விதிமுறைகளைக் கையாண்டனர். வேட்புமனுத் தாக்கலுக்கு போதிய அவகாசம் கொடுக்கப்படவில்லை. எதிர்கட்சியினரை வேட்புமனுத்தாக்கல் செய்ய அனுமதிக்காதது, மனுதாக்கலுக்கும் பிறகு எதிர்கட்சியினர் வேட்புமனுவை நிராகரித்தது, வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்தது, தேர்தல் நாளன்று முறைகேடாக சில இடங்களில் வாக்குப்பதிவு செய்தது உள்ளிட்ட அத்துமீறல்களையும், ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும் நிகழ்த்தியே ஆளும்கட்சியினர் தேர்தலில் வெற்றிபெற்றனர்.

3.27 கல்வி

அ) தனியார் கல்வி நிறுவனங்கள் புற்றீசல் போல அதிகரித்துள்ளன. 2012-13ம் ஆண்டு கணக்குப்படி தமிழகத்தில் எட்டாம் வகுப்பு வரையிலான மொத்த பள்ளிகளில் 38 சதவிகிதம் அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளாகும். இவற்றில் நடைபெறும் கட்டணக் கொள்ளை சாதாரண, நடுத்தர மக்களை கடுமையாகப் பாதிக்கிறது. அரசுப் பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கும் திறன் உட்பட்ட தரக்குறைவும், ஆயிரம் அரசுப் பள்ளிகள் மூடப்பட்டிருப்பதும், மேலும் பள்ளிகள் மூடப்படும் அபாயம் இருப்பதும், பெற்றோர்கள் தம் குழந்தைகளைத் தனியார் கல்வி நிறுவனங்களில் சேர்க்கும் போக்கை அதிகரித்துள்ளது. மதிய உணவு, இலவச சீருடை, புத்தகங்கள், மடிக்கணினி வழங்குவது போன்ற நலத்திட்டங்கள் அமல்படுத்தப்படுகிற போதிலும் கல்விக்கு போதுமான அளவில் நிதி ஒதுக்காமை, ஆசிரியர் காலியிடங்கள் முழுமையாக நிரப்பப்படாமை, கட்டிட விஸ்தரிப்பு - பராமரிப்பு மேற்கொள்ளப்படாமை, போதுமான உபகரணங்கள் இல்லாமை போன்ற பிரச்சனைகளால் அரசுப் பள்ளிகளின் தரம் வெகுவாகக் குறைந்துள்ளது. தாய்மொழி வழிக் கல்வியை ஊக்குவிப்பது, அரசுப் பள்ளிகளின் தரத்தை உயர்த்துவது போன்ற அம்சங்களில் தமிழக அரசின் தலையீடும், கவனமும் போதாது. தனியார் பள்ளிகளில் ஏழை மாணவ, மாணவிகளுக்கு 25 சதவிகிதம் இடஒதுக்கீடு செய்யப்படும் என மத்திய சட்டம் இயற்றப்பட்டுள்ள போதிலும் இது சரிவர அமல்படுத்த உறுதியான நடவடிக்கைகள் இல்லை.

ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர், தேன்கனிக்கோட்டை, வேப்பனபள்ளி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட பகுதிகளில் தெலுங்கு, கன்னட மொழிகளை தாய்மொழியாகக் கொண்ட கணிசமான மக்கள் உள்ளனர். அரசுப் பள்ளிகளில் இந்த மொழி ஆசிரியர்கள் நியமனம் இல்லாததால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். இதுபோல் இதர மாநில மொழிகளை தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்கள் குவியலாக மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும் உள்ளனர். அப்பகுதி மக்களும் தங்கள் குழந்தைகளின் கல்விப் பிரச்சனையில் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். இத்தகைய பிரச்சனை உருது மொழி பேசும் இஸ்லாமிய மக்களுக்கும் உள்ளன. இதில் நாம் தலையீடு செய்து பள்ளிக் கல்வியில் தாய்மொழிவழிக் கல்விக்கான வசதிகளை அரசுப் பள்ளிகளில் செய்திட இயக்கம் நடத்திட வேண்டியுள்ளது.

சுகாதாரம்

3.28 கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்தின் சுகாதாரக் குறியீடுகளில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் மக்கள் தொகை வளர்ச்சியையும், அதிகரித்து வரும் மருத்துவச் செலவையும் கணக்கில் கொள்ளும்போது அரசின் நிதி ஒதுக்கீடுகள் குறைவானதாகவே உள்ளது. போதிய புதிய மருத்துவமனைகள் உருவாக்கப்படாமை, செயல்படும் அரசு மருத்துவமனைகளில் கட்டமைப்பு போதுமான அளவிற்கு பலப்படுத்தப்படாமை, மருந்து, மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவர் தட்டுப்பாடு போன்ற அம்சங்களால் பாதிப்பு ஏற்படுகிறது. அரசின் சுகாதாரக் கொள்கையும் பொது மருத்துவம் மற்றும் சுகாதாரம் சீர்கெட்டுப் போயிருப்பதற்கான காரணமாக உள்ளது. தர்மபுரி, சேலம் அரசு பொது மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்த பல பச்சிளங்குழந்தைகள் உயிரிழந்த கொடூர சம்பவமும் இக்காலத்தில்

நடந்துள்ளது. தமிழகத்தில் 64 சதவிகித குழந்தைகள் ரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். பெண்கள் மத்தியில் ஊட்டச்சத்துக் குறைவும் பெரும் பிரச்சனையாக உள்ளது. மறுபுறம் புற்றீசல் போல பெருகி வரும் தனியார் மருத்துவமனைகளின் கட்டணமும், மருந்துகள் விலை உயர்வும் சாதாரண, நடுத்தர மக்களை பெரிதும் பாதிக்க வைக்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. மறுபுறம் சுற்றுச்சூழல் பாதிப்பால் மக்கள் பல விதமான நோய்களுக்கு ஆளாகும் போக்கு வளர்ந்து வருகிறது. 2011 மக்கள் தொகைக் கணக்கின்படி கிராமப்புறங்களில் 73 சதவிகித மக்களுக்கு கழிப்பிட வசதியில்லை. நகரங்களில் நான்கில் ஒரு பங்கினருக்கு அவர்கள் வசிக்கும் இடத்தில் கழிப்பறை இல்லை. மொத்தத்தில் கணிசமான மக்கள் சுகாதாரமாக வாழ வழியில்லாத நிலையே உள்ளது.

சாதிய சக்திகள் – ஒடுக்குமுறைகள்

3.29 தமிழகத்தில் சாதிய ஒடுக்குமுறைகளும் வன்முறை சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. தர்மபுரியில் தலித் இளைஞன் இளவரசன் சாதி இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த திவ்யா காதல் திருமணத்திற்கு பிறகு ஆத்திரமடைந்த சாதிய சக்திகள் நத்தம், அண்ணாநகர், கொண்டம்பட்டி ஆகிய தலித் கிராமங்கள் மீது கொடூரத் தாக்குதல் நடத்தி நூற்றுக்கணக்கான வீடுகளையும், சொத்துக்களையும் சேதப்படுத்தினர். இப்பிரச்சனையில் குற்றவாளிகள் மீது மாநில அரசு உடனடியாகவும், துரிதமாகவும் நடவடிக்கை எடுக்கத் தவறியது. நீதிமன்ற தலையீடுகள், பல ஜனநாயக அமைப்புகளின் கண்டனத்திற்குப் பிறகே ஒரு பகுதி குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். அதன் பிறகு நடைபெற்ற மரக்காணம் தலித் மக்கள் மீதான தாக்குதலுக்குப் பிறகு பாமக தொண்டர்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டனர். 2011ல் தலித்துகள் மீதான பரமக்குடி துப்பாக்கிச் சூடு குறித்து தமிழக அரசு கண்துடைப்பு விசாரணையாக சம்பத் கமிஷனை நியமனம் செய்திருந்தது. இக்காலத்தில் காவல்துறை துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்தி இக்கமிஷன் அறிக்கை அளித்தது. இதன் மீது சட்டமன்றத்தில் விவாதிக்கக் கூட தமிழக அரசு மறுத்துள்ளது. இப்பிரச்சனையில் தீண்டாமை ஒழிப்பு முன்னணி சார்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. சிபிஐ விசாரணை அறிக்கை இன்னமும் வெளியிடப்படவில்லை.

3.30 தமிழகத்தில் கௌரவக் கொலைகள் அதிகரித்து வருகின்றன. சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்ட பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தலித்துகள் மீதான வன்கொடுமை தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. அதேசமயம் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டுமென சாதிய சக்திகள் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றன. பல சாதிய அமைப்புகள் இணைந்து கூட்டமைப்புகளை உருவாக்கி இத்தகைய பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றன. பாமக தலைமையிலான ஒரு கூட்டமைப்பு மாமல்லபுரத்தில் இதற்கான மாநாடு நடத்தியபோது அங்கு சாதி வெறியைத் தூண்டும் வகையில் பேச்சுகள் அமைந்திருந்தன. இதனையொட்டி காடுவெட்டி குரு குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். வேறொரு சந்தர்ப்பத்தில் மருத்துவர் ச. இராமதாசும் கைது செய்யப்பட்டார். காடுவெட்டி குருவை கிரிமினல் வழக்குகளில் கைது செய்வதற்குப் பதில் குண்டர் சட்டம் பயன்படுத்தப்பட்டதை ஆட்சேபித்து மாநில செயற்குழு சார்பாக அறிக்கை வெளியிட்டோம். வன்முறை தூண்டிவிடப்பட்டிருந்த அச்சூழலில் அத்தகைய அறிக்கை வெளியிட்டதைத் தவிர்த்திருக்கலாம் என மாநிலக்குழுவில் சுட்டிக்காட்டப்பட்ட போது செயற்குழு சுய விமர்சனமாக அதை ஏற்றுக் கொண்டது.

3.31 மலைவாழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் படியான சில சம்பவங்களும் இக்காலத்தில் நடந்துள்ளன. வனஉரிமைச் சட்டம் அரசு நிர்வாகத்தால் உறுதிபட அமலாக்கப்படாத நிலை தொடர்கிறது. சில பகுதிகளில் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக வைக்கப்பட்டிருந்த சம்பவங்களும் இக்காலத்தில் வெளிவந்தன.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

3.32 பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் இக்காலத்தில் அதிகரித்துள்ளன. தமிழகத்தின் பல பகுதிகளில் பெண் குழந்தைகள் உள்பட பல பெண்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாயினர். பெண் கருக்கொலைகளும் பல மாவட்டங்களில் முக்கிய பிரச்சனையாக தொடர்கின்றன. சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டதையொட்டி நடைபெற்ற கௌரவக் கொலைகளில் பல பெண்களும் மரணத்தை சந்திக்க நேரிட்டது. தேசிய குற்றப் பதிவு அமைப்பு தெரிவிக்கும் தகவலின்படி தமிழகத்தில் 2013ம் ஆண்டு 923 பாலியல் வல்லுறவு கொடுமைகள் உட்பட 7475 வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சிறுபான்மை மக்கள்

3.33 சிறுபான்மை மக்களுக்கு எதிரான பிரச்சனைகள் பலவும் நீடிக்கின்றன. இவர்களின் சமூக, பொருளாதார நிலை இதர பகுதியினரோடு ஒப்பிடும்போது பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. அரசு மற்றும் காவல்துறையில் இவர்களின் வேலைவாய்ப்பு ஒப்பு நோக்கில் குறைவாகவே உள்ளது. இஸ்லாமிய மதத்தை சேர்ந்த அப்பாவி இளைஞர்கள் காவல்துறையினரால் தீவிரவாதிகள் என்ற பெயரில் கைது செய்யப்படும் சில சம்பவங்களும் இக்காலத்தில் நடந்துள்ளன. பொதுவாக சிறுபான்மை மக்கள் அச்சத்துடன் வாழும் சூழல் அதிகரித்துள்ளது.

கனிம வளக் கொள்ளை

3.34 தமிழகத்தில் இயற்கை வளங்கள், கனிம வளங்கள், தாது மணல் கொள்ளையிடப்படும் சம்பவங்கள் தொடர்கின்றன. ஆற்றுப்படுகையில் விதிமுறைகளை மீறி மணல் அள்ளுவது தங்கு தடையின்றி நடைபெறுகிறது. மணல் கொள்ளைக்கு எதிரான நிலை எடுப்பவர்கள் மிரட்டப்படுவதும், கொல்லப்படுவதுமான பல நிகழ்வுகள் இக்காலத்தில் நடைபெற்றன. வேலூர் மாவட்டத்தில் ஒரு தலைமை காவலர் உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளனர். மதுரை மாவட்டத்தில் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள கிரானைட் கொள்ளையிடப்பட்ட பின்னணியில், கனிம வளங்கள் கொள்ளை போவது பற்றிய பொது நலன் சார்ந்த வழக்கில் உயர்நீதிமன்றம் உ.சகாயம் தலைமையில் விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டது. தமிழக அரசு இதனை தடுக்க எடுத்திட்ட நடவடிக்கைகள் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டன. தற்போது தமிழகம் முழுவதும் விசாரணை நடத்துவதற்குப் பதிலாக மதுரை மாவட்டத்தில் மட்டும் விசாரணை நடத்திட உத்தரவிட்டுள்ளது.

ஜெயலலிதா கைது – புதிய முதல்வர் தேர்வு

3.35 1991-96 ஆட்சிக் காலத்தில் ஜெயலலிதா முதல்வராக இருந்த போது வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக தொடரப்பட்ட வழக்கில் அவர் குற்றவாளி எனவும், அதனால் நான்காண்டுகள் சிறைத் தண்டனையும் 100 கோடி ரூபாய் அபராதமும் விதித்து பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அவர் உடனடியாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதன் பிறகு புதிய முதல்வராக ஓ. பன்னீர்செல்வம் பொறுப்பேற்றார். ஊழல் என்பதைப் பின்னுக்குத் தள்ளி, அரசு நிர்வாகத்தைப் பயன்படுத்தி அத்தீர்ப்புக்கு எதிராக பல்வேறு போராட்டங்களை அஇஅதிமுக நடத்தியது. தொழில்துறை நிறுவனங்கள், வணிக நிறுவனங்களை இப்போராட்டத்தில் ஈடுபடுத்த அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் உட்பட தலையிட்டனர். தனியார் கல்வி நிறுவனங்களையும் ஒரு நாள் மூட எடுத்த நடவடிக்கைகள் நமது கட்சி மற்றும் இதர அமைப்புகளின் முயற்சியால் தடுத்து நிறுத்தப்பட்டது.

3.36 ஜெயலலிதாவுக்கு எதிரான தீர்ப்பையொட்டி தனது பலத்தையும், செல்வாக்கையும் நிரூபிப்பதற்காக அஇஅதிமுக பல போராட்டங்களையும் இயக்கங்களையும் நடத்திய போதிலும் இப்பிரச்சனையால் அக்கட்சிக்கு அரசியல் ரீதியாக பின்னடைவான சூழல் ஏற்பட்டுள்ளது.

அத்தீர்ப்பு இக்கட்சிக்கு எதிரான பரவலான சர்ச்சையை ஏற்படுத்தியது. ஜெயலலிதா முதல்வர் பதவியிலிருந்து வெளியேறிய பிறகு அரசு நிர்வாகத்தின் செயல்பாட்டிலும் பாதிப்பு ஏற்பட்டு அதுவும் சர்ச்சையாகியுள்ளது. அஇஅதிமுக இச்சூழ்நிலையை சமாளிக்க எடுத்து வரும் நடவடிக்கைகளை நாம் பொறுத்திருந்து கவனிக்க வேண்டியுள்ளது.

நமது அணுகுமுறை

3.37 இக்காலத்தில் அஇஅதிமுக அரசின் பல்வேறு நலத்திட்டங்களை நாம் வரவேற்றோம். இதேபோல ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் பல தவறான முடிவுகளையும், நடவடிக்கைகளையும் முன்பகுதியில் குறிப்பிட்டள்ளபடி மாநில அரசு கண்டனம் செய்த போது அதற்கும் நமது வரவேற்பைத் தெரிவித்தோம்.

3.38 மறுபுறம் பேருந்துக் கட்டண உயர்வு, பால்விலை உயர்வு, மின் கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு அதற்கு எதிராக கண்டன இயக்கங்களையும் நடத்தினோம். தமிழகத்தின் பல மாவட்டங்களில் கடும் வறட்சி ஏற்பட்டபோது வறட்சி நிவாரணம் கோரி பல்வேறு இயக்கங்களை நடத்தினோம். சமூக விரோத சக்திகள் - காவல்துறை நெருக்கம், ஜனநாயக உரிமைகள் பறிப்பு, தலித்துகள் - பெண்கள் மீதான தாக்குதல்கள், கிரானைட், மணல் கொள்ளை, மருத்துவமனை சீர்கேடுகள் போன்றவற்றைக் கண்டித்து கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகள் சார்பாக தமிழகத்தின் பல பகுதிகளில் பல்வேறு இயக்கங்களை நடத்தியுள்ளோம். அரசுப் பள்ளிகளை பாதுகாக்க வலியுறுத்தியும் தாய்மொழிக் கல்வியை ஊக்குவிக்கக் கோரியும் சென்னையில் கருத்தரங்கம் நடத்தினோம். தமிழக அரசின் பல தவறான நடவடிக்கைகள், முடிவுகளை விமர்சித்து அவ்வப்போது பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டுள்ளோம். மேற்கண்ட பல்வேறு பிரச்சனைகளிலும் சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியினருக்கு ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டபோது பல சந்தர்ப்பங்களிலும் நமது எதிர்ப்பை வெளிப்படுத்தினோம். பல பிரச்சனைகளில் வெளிநடப்பும் செய்துள்ளோம். இதேபோல இக்காலத்தில் தமிழகத்தின் பல பகுதிகளில் பல்வேறு பிரச்சனைகளில் நமது கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகள் தலையிட்டு போராட்டங்கள் நடத்தி நிவர்ரணம் பெற்றுத் தந்த பல சம்பவங்களை இங்கு குறிப்பிட முடியும்.

3.39 இருப்பினும் அஇஅதிமுகவை விமர்சிப்பதில் சில சமயங்களில் தயக்கமும், தடுமாற்றமும் இருந்தன. கூட்டுறவு தேர்தலில் அஇஅதிமுகவுடன் உடன்பாடு ஏற்பட்ட இடங்களில் அவர்களது அராஜக நடவடிக்கைகளை கண்டுகொள்ள தவறியது, அரசு நிர்வாகத்தில் அனைத்துத் துறைகளிலும் ஊழல்போக்கு தலைவிரித்தாடுகிறபோது அதற்கு எதிரான நமது விமர்சனங்களை காலத்தில் வெளிப்படுத்தத் தவறியது, திமுக ஆட்சிக் காலத்தில் புதிதாக கட்டப்பட்டு செயல்படத் துவங்கிய சட்டமன்றம் - தலைமை செயலகத்தை மீண்டும் பழைய கட்டிடத்திற்கே அஇஅதிமுக ஆட்சி மாற்றிய போதும், எம்.ஜி.ஆர். சமாதி மற்றும் அரசு சிற்றுந்துகளில் அஇஅதிமுகவின் தேர்தல் சின்னத்தை காட்சிப்படுத்திய போதும் நமது கண்டனத்தை வெளிப்படுத்தத் தவறியது ஆகிய அம்சங்களையும் சுயவிமர்சனமாக இங்கு குறிப்பட முடியும். இருப்பினும் கடந்த 3 ஆண்டு கால அஇஅதிமுக அரசை பல்வேறு பிரச்சனைகளில் விமர்சனப் பூர்வமாக அணுகினோம் என்ற அம்சமே மேலோங்கி இருந்தது.

டாஸ்மாக் கடைகள் - போதை பழக்கத்திற்கு எதிராக

3.40 தமிழகத்தில் அரசு நிர்வாகம் டாஸ்மாக் கடைகள் நடத்தி வருவதையும் அதன் மூலம் பெரும் வருமானம் ஈட்டி வருவதையும் நாம் அறிவோம். தமிழகத்தில் பொதுவாக மது அருந்தும் பழக்கம் அதிகரித்து வருவதும் அதனால் கலாச்சார ரீதியான சீரழிவும், வன்முறையும் ஏற்பட்டு வருவதும் பெண்கள் உள்ளிட்ட பரவலான மக்களிடையே கோபத்தை ஏற்படுத்தி

வருகிறது. இளைஞர்களிடையே இப்பழக்கமும் இதன் தாக்கமும் அதிகரித்து வருகிறது. பல ஜனநாயக இயக்கங்களும் சில அரசியல் கட்சிகளும் மதுபான விற்பனைக்கு தடை விதிக்க வேண்டுமென பிரச்சாரமும், கிளர்ச்சிகளும் செய்து வருகின்றன. இப்பிரச்சனை குறித்து கட்சியின் மாநில செயற்குழுவில் ஒருமுறை விவாதித்துள்ளோம். கட்சி அகில இந்திய அளவில் பூரண மதுவிலக்கைக் கோராத நிலையில் தமிழகத்தில் மது உற்பத்தி மற்றும் விற்பனையை கட்டுப்படுத்துவதும், போதை பழக்கத்திற்கு எதிரான விரிவான பிரச்சாரத்தை வற்புறுத்துவதும் நம்முடைய அணுகுமுறையாக இருக்கலாம். அத்துடன் பொதுமக்கள் பரவலாகக் கூடும் இடங்கள், குடியிருப்புப் பகுதிகள், பள்ளிக் கூடங்கள், வழிபாட்டுத் தலங்களில் மதுபானக் கடைகள் செயல்படுவதை நிறுத்த வலியுறுத்தி இயக்கங்கள் நடத்தலாம் என்றும் முடிவு செய்திருக்கிறோம்.

மாநிலங்களவை தேர்தல்

3.41 2013லிலும், 2014லிலும் மாநிலங்களவைத் தேர்தல்கள் நடந்தன. 2013ல் நடைபெற்ற மாநிலங்களவை தேர்தலில் தமிழ்நாட்டின் 6 காலியிடங்களுக்கான தேர்தல் நடைபெற்றது. ஏற்கனவே மாநிலங்களவை உறுப்பினராக இருந்த டி. ராஜாவின் பதவிக் காலம் முடிவடைந்ததால் அப்பதவிக்கு போட்டியிட சிபிஐ விரும்பியது. இதற்காக சிபிஐ தலைமை அஇஅதிமுக தலைமையை அணுகிய போது அதிமுக தரப்பில் தாங்கள் 5 இடங்களுக்கு போட்டியிடப்போவதாகவும் சிபிஐயை ஆதரிப்பதற்கு தம்மிடம் வாக்குகள் இல்லையென்றும் துவக்கத்தில் கூறப்பட்டது. இந்நிலையில் அஇஅதிமுக ஆதரவு இல்லாமல் போட்டியிட சிபிஐ தலைமைக்கு தயக்கமிருந்தது. ஆனால் சிபிஐ உறுதியாகப் போட்டியிட வேண்டுமென்ற கருத்தை நமது கட்சியின் மாநிலத் தலைமையும், அகில இந்தியத் தலைமையும் சிபிஐ தலைமைக்கு வற்புறுத்தினோம். பின்னர் சிபிஐ தலைமை போட்டியிடப்பேவாதாக தெரிவித்து டி. ராஜாவை வேட்பாளராக அறிவித்தது. இதன்பின்னரே அஇஅதிமுக தனது 5வது வேட்பாளரை வாபஸ் பெற்று சிபிஐ வேட்பாளரை ஆதரிப்பதாக தெரிவித்ததோடு அஇஅதிமுகவும் இடதுசாரிக் கட்சிகளும் ஓரணியில் இருப்பதாகவும் அறிவித்தது. அதிமுக 4 இடங்களிலும், சிபிஐ ஒரு இடத்திலும் வெற்றி பெற்றது. காங்கிரஸ் ஆதரவோடு திமுக ஒரு இடத்தில் வெற்றிபெற்றது. இலங்கைத் தமிழர் பிரச்சனையில் மத்திய அரசின் செயல்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்து ஐக்கிய முற்போக்கு கூட்டணியிலிருந்தும் அதன் அரசிலிருந்தும் திமுக விலகிக் கொண்ட பிறகு இத்தேர்தலில் வெற்றி பெறுவதற்காக காங்கிரஸ் ஆதரவை திமுக கோரியதும், காங்கிரஸ் அதற்கு ஆதரவளித்ததும் குறிப்பிடத்தக்கது. தேமுதிக ஒரு இடத்திற்கு போட்டியிட்டு தோல்வியடைந்தது.

3.42 2014 பிப்ரவரியில் தமிழகத்தின் 6 காலியிடங்களுக்கான மாநிலங்களவைத் தேர்தல் நடைபெற்றது. தோழர் டி.கே.ரெங்கராஜன் பதவிக்காலம் முடிவடைந்ததையொட்டி இதில் ஒரு இடத்தை சிபிஐ(எம்)-க்கு ஒதுக்கி ஆதரவு தருமாறு அஇஅதிமுக தலைமையிடம் பேச்சுவார்த்தை நடத்தினோம். அஇஅதிமுக தலைமையும் ஒரு இடம் ஒதுக்கி ஆதரவு தர ஒப்புக்கொண்டது. தோழர் டி.கே.ஆர் அவர்களையே கட்சி சார்பாக வேட்பாளராக நிறுத்தினோம். 4 இடங்களில் அஇஅதிமுக வேட்பாளர்களை நிறுத்தியது. திமுக தரப்பில் ஒரு வேட்பாளரை நிறுத்தியது. கூடுதலாக யாரும் போட்டியிடாத நிலையில் வேட்பாளர்களாகப் போட்டியிட்ட 6 பேரும் ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர். நாடாளுமன்ற தேர்தலுக்கு சற்று முன்னதாக நடைபெற்ற இந்த மாநிலங்களவைத் தேர்தல், அரசியல் அணி சேர்க்கையின் அடையாளமாகக் கருதப்பட்டது.

இடைத்தேர்தல்கள்

3.43 இக்காலத்தில் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் காலமானதையொட்டி சங்கரன்கோவில், புதுக்கோட்டை (2012), ஏற்காடு (2013) ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல்கள் நடைபெற்றன. இத்தேர்தல்களில் அவ்வப்போது நிலவிய அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப நாம் முடிவுகள் மேற்கொண்டோம். 2011 இறுதியில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் அஇஅதிமுக நம்முடன் நியாயமான உடன்பாட்டுக்கு வர மறுத்த நிலையில் தேமுதிகவுடன் நாம் உடன்பாடு செய்து போட்டியிட்டோம். இதனைக் கடந்த மாநில மாநாட்டிலேயே பரிசீலித்துள்ளோம். இதன் தொடர்ச்சியாக சில மாதங்களில் நடைபெற்ற சங்கரன்கோவில், புதுக்கோட்டை ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தலில் தேமுதிக வேட்பாளர்களை ஆதரித்தோம். 2014 நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ், பாஜகவை தோற்கடிக்கும் நோக்கத்துடன் ஓராண்டு காலத்திற்கு முன்னமேயே நாடு தழுவிய அளவில் மதச்சார்பற்ற கட்சிகளுடன் உடன்பாடு காணும் முயற்சியில் மத்தியக்குழு ஈடுபட்டது. அதன் ஒரு பகுதியாக தமிழகத்தில் அஇஅதிமுகவுடன் உடன்பாடு காண நம் கட்சி முயற்சித்தது. இப்பின்னணியில் ஏற்காடு தொகுதிக்கான தேர்தலில் நாம் அஇஅதிமுக வேட்பாளரை ஆதரித்தோம். மேற்கண்ட தொகுதிகளில் அஇஅதிமுக வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். இதில் புதுக்கோட்டை தொகுதியில் தேர்தல் ஜனநாயகப் பூர்வமாக நடைபெறாது எனக் கூறி திமுக போட்டியிடவில்லை. இங்கு தேமுதிக இரண்டாவது இடம் பெற்றது. இதர 2 தொகுதிகளிலும் திமுக போட்டியிட்டு 2வது இடம் பெற்றது.

2014 நாடாளுமன்றத் தேர்தல்

3.44 2014 நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் மற்றும் பாஜகவை தோற்கடிக்கும் நோக்கத்துடன் அஇஅதிமுகவுடன் தொகுதி உடன்பாடு காண நாம் முயற்சிகள் மேற்கொண்டதை முன்பகுதியில் குறிப்பிட்டுள்ளோம். இதில் அஇஅதிமுகவின் அணுகுமுறை இடதுசாரிக் கட்சிகளுடன் உடன்பாடு காணும் வகையில் அமையவில்லை. இடதுசாரிக் கட்சிகளுடன் உடன்பாடு காணப்போவதாக பகிரங்கமாக அறிவித்துவிட்டு பேச்சுவார்த்தைக்கான குழுவையும் அறிவித்து பலகட்ட பேச்சுவார்த்தைகளை நடத்திய பின்னர், அஇஅதிமுக திடீரென அந்த நிலைபாட்டை மாற்றிக்கொண்டது. ஆயினும் இதற்கான காரணத்தை அக்கட்சி வெளிப்படையாக அறிவிக்கவில்லை. பின்னர் இது குறித்து பரிசீலித்த நமது கட்சியின் மாநிலக்குழு “தேர்தலுக்குப் பிறகு பாஜகவுடன் ஆட்சியில் பங்கேற்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டால் அதையும் பயன்படுத்த வேண்டுமென்ற அஇஅதிமுக தலைமையில் ஏற்பட்ட அணுகுமுறை மாற்றமே இடதுசாரிக் கட்சிகளோடு அதிமுக உறவை முறித்துக் கொண்டதற்கு காரணம்” எனக் குறிப்பிட்டது. இடதுசாரிகளுடன் உடன்பாடு காணமால் வெற்றிபெற முடியும் என அக்கட்சி நம்பியதும் அஇஅதிமுகவின் இந்த உடனடி முடிவுக்கான காரணங்களில் ஒன்றாகும். அஇஅதிமுகவின் இந்த நிலைபாட்டிற்குப் பிறகு நமக்கும் அஇஅதிமுகவிற்கும் உள்ள உறவும் தொடர்புகளும் முறிந்து போயின.

3.45 இப்பின்னணியில் அஇஅதிமுக இத்தேர்தலில் தனித்துப் போட்டியிட்டது. திமுக, விடுதலை சிறுத்தைகள், மனிதநேய மக்கள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், புதிய தமிழகம் ஆகிய கட்சிகள் தொகுதி உடன்பாடு கண்டு போட்டியிட்டன. பாஜக, தேமுதிக, பாமக, மதிமுக, இந்திய ஜனநாயகக் கட்சி, புதிய நீதிக்கட்சி, கொங்குவேளாளார் முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகள் இணைந்து போட்டியிட்டன. காங்கிரஸ் கட்சி தனித்துப் போட்டியிட்டது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இணைந்து போட்டியிட்டோம். ஆரம்பத்தில்

நம்முடன் இணைந்து செயல்படுவதாக ஏற்றுக்கொண்ட பார்வர்டு பிளாக் பின்னர் நம்மிடம் தகவல் எதுவும் தெரிவிக்காமல் அஇஅதிமுக ஆதரவு நிலை எடுத்தது. ஆக நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் 5 முனை போட்டி இருந்தது.

3.46 இத்தேர்தலில் அஇஅதிமுக 37 தொகுதிகளிலும், பாஜக, பாமக தலா ஒரு தொகுதியிலும், புதுவையில் என்.ஆர். காங்கிரசும் வெற்றி பெற்றன. திமுக அணிக்கு ஒரு இடம் கூட கிடைக்கவில்லை. 40 தொகுதிகளில் 31 இடங்களில் திமுக இரண்டாவது இடத்தை பிடித்தது. பாஜக அணி 2ல் வெற்றிபெற்றதோடு 7 இடங்களில் 2வது இடத்தைப் பிடித்தது. காங்கிரஸ் ஒரு தொகுதியிலும் வெற்றிபெறவில்லை. அக்கட்சிக்கு 4.3 சதவிகித வாக்குகள் கிடைத்தது. சிபிஎம், சிபிஐ தலா 0.5 சதவிகிதம் வீதம் 1 சதவிகித வாக்குகளையே பெற முடிந்தது.

3.47 திமுக, காங்கிரசுக்கு எதிரான வாக்குகள் கணிசமாக அஇஅதிமுகவிற்கே விழுந்தன. அஇஅதிமுக 3 ஆண்டு காலமாக அமல்படுத்திய சமூகநலத்திட்டங்கள் அதற்குச் சாதகமாக அமைந்தன. இதோடு காங்கிரசுக்கு எதிராகத் தொடர்ந்து எடுத்துவந்த நிலைபாடு, 2ஜி அலைக்கற்றை ஊழல் பிரச்சனை உட்பட திமுக, காங்கிரசுக்கு எதிராக நடத்திய பிரச்சாரம், காவிரிப் பிரச்சனையில் எடுத்த நிலைபாடு, இலங்கை தமிழர் பிரச்சனையில் தமிழ்தேசியக் கட்சிகளை மிஞ்சும் வகையில் எடுத்த நிலைபாடு, தேர்தலில் ஏற்பட்ட 5 முனைப்போட்டி போன்றவை அஇஅதிமுகவின் வெற்றிக்குப் பெரிதும் உதவின. தேர்தலுக்கு முந்தைய இரு நாட்களில் அஇஅதிமுக, வாக்காளர்களுக்குப் பரவலாகப் பண விநியோகமும் செய்தது. அஇஅதிமுக தேர்தல் பிரச்சாரத்தில் பாஜக குறித்து ஒரு மென்மையான அணுகுமுறையையே கடைபிடித்தது. தேர்தல் பிரச்சாரத்தின் கடைசிக் கட்டத்தில் ஜெயலலிதா பாஜகவை காவிரிநீர் பிரச்சனையில் விமர்சித்தாலும் அதன் வகுப்புவாத அணுகுமுறையை விமர்சிக்கவில்லை.

3.48 திமுக தரப்பில் காங்கிரஸ், பாஜகவை பெயரளவில் மட்டுமே விமர்சனம் செய்தது. 9 ஆண்டு காலம் காங்கிரஸ் தலைமையிலான அணியில் திமுக இடம்பெற்றது, அலைக்கற்றை ஊழலில் திமுக தலைவரின் குடும்ப உறுப்பினர்கள் இடம்பெற்றதும் அதன் தோல்விக்கு முக்கிய காரணங்களாகும். பாஜக அணி 18.5 சதவிகித வாக்குகளைப் பெற்றதும் 3 தொகுதிகளில் வெற்றி பெற்றதும் கவனத்தில் கொள்ள வேண்டிய வளர்ச்சிப்போக்காகும். கன்னியாகுமரி தொகுதியில் வகுப்புவாத அடிப்படையிலும், தர்மபுரி தொகுதியில் சாதி வெறியைத் தூண்டிய அடிப்படையிலும் முறையே பாஜக, பாமக வெற்றிபெற்றன. காங்கிரஸ் கட்சிக்கு குறிப்பிடத்தக்க வாக்கு வங்கி இருந்ததையே அது பெற்ற வாக்குகள் சுட்டிக்காட்டுகிறது.

3.49 தேர்தல் நெருங்கும் நேரத்தில் அஇஅதிமுக இடதுசாரிக்கட்சிகளுடன் உள்ள உறவை முறித்துக் கொண்ட திடீர் சூழ்நிலையை மிகுந்த சிரமங்களுடன் நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தனித்துபோட்டியிடும் வகையில் தேர்தல் தயாரிப்பு செய்வதற்கு இடதுசாரிக் கட்சிகளுக்கு போதுமான அவகாசம் இருக்கவில்லை. இருப்பினும் சிபிஎம், சிபிஐ உடன்பாடு செய்து கொண்டு போட்டியிட்டோம். தொகுதி உடன்பாடு, வேட்பாளர் தேர்வு, நிதிவசூல் உள்ளிட்ட பணிகளை அவசர அவசரமாக செய்ய வேண்டியிருந்தது. காங்கிரஸ், பாஜக அணிகளை எதிர்ப்பதோடு திமுக அணி, அஇஅதிமுகவையும் எதிர்த்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டோம். காங்கிரஸ், பாஜக, திமுக அணிகளை விமர்சிப்பதுபோல அஇஅதிமுகவை விமர்சிக்க இயலாது என்ற நிலையில் பாஜக குறித்த அதன் ஊசலாட்டத்தையும் கூடவே மின்வெட்டு மற்றும் அதன் சில தவறான கொள்கைகளையும் விமர்சித்து பிரச்சாரம் மேற்கொண்டோம்.

3.50 சிபிஎம், சிபிஐ மட்டும் இணைந்து போட்டியிடுவது என்ற நிலையும் உடன்பாடும் இரு கட்சி அணிகளிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தின. பண பலம், அதிகார பலம், சாதியம், வகுப்புவாத அணுகுமுறையை இருகட்சி அணிகளும் தேர்தல் களத்தில் உறுதியாக எதிர்த்து நின்று செயல்பட்டனர். இருப்பினும் இரு கட்சிகளுக்கும் தேர்தலில் குறைவான வாக்குகளே

கிடைத்தன. இதனைப் பரிசீலித்த நமது கட்சியின் மாநிலக்குழு சுட்டிக்காட்டிய முக்கிய அம்சங்கள் மற்றும் படிப்பினைகள் வருமாறு:

- இரு கட்சிகளின் அணிகள் மற்றும் நெருக்கமான ஆதரவாளர்களின் வாக்குகள் மட்டுமே நமக்கு கிடைத்துள்ளன. நமது வர்க்க, வெகுஜன ஸ்தாபன உறுப்பினர்கள் பலம் கிடைத்த வாக்குகளில் பிரதிபலிக்கவில்லை.
- கடந்த காலங்களை விட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வாக்கு பலம் வெகுவாக சரிந்துள்ளதையே 9 தொகுதிகளில் நாம் பெற்ற வாக்குகள் சுட்டிக்காட்டுகிறது.
- ஆண்டுதோறும் வர்க்க, வெகுஜன அரங்க ஊறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இவர்களில் குறிப்பிடத்தக்க பகுதியினரை நமக்கு வாக்களிக்க செய்ய முடியவில்லை. வர்க்க, வெகுஜன அரங்கங்களில் கட்சி கட்டும் பணியிலும் அதில் இணைந்துள்ள மக்களை அரசியல்படுத்தும் பணியிலும் பல ஆவணங்களை உருவாக்கினாலும், பல ஆண்டுகள் விவாதித்தாலும் நம்மால் முன்னேற்றம் காண முடியவில்லை. எதிர்காலத்தில் இதில் கவனம் செலுத்த வேண்டும்.
- மக்கள் சந்திக்கும் பல பிரச்சனைகளில் முன்முயற்சி எடுத்து இயக்கங்கள் நடத்தி தீர்வு கண்டுள்ளோம். ஆனால், பயன்பெற்றுள்ள மக்கள் மத்தியில் நம் அரசியலை கொண்டுசெல்ல தவறியுள்ளோம். வருங்காலத்தில் வலுவாகக் கவனிக்க வேண்டிய கடமை இது.

சட்டமன்றத்தில் நாம்

3.51 இக்காலத்தில் சட்டமன்றத்திற்குள் நமது உறுப்பினர்களின் செயல்பாடும், பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும். தமிழக அரசியல் களத்தில் முன்னுக்கு வந்த பிரதான பிரச்சனைகள், தமிழக அரசு செயல்பாடு, மக்கள் மீது ஏற்றப்பட்ட சுமைகள், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நாம் தலையிட்ட பிரதான பிரச்சனைகள் - நடத்திய இயக்கங்கள் எனப் பல அம்சங்களில் நமது தலையீடும், பங்களிப்பும் சட்டமன்றத்திற்குள் இருந்துள்ளது. பொதுவாக திமுக, அஇஅதிமுக, இரு கட்சிகளுமே தங்களது ஆட்சிக் காலத்தில் சட்டமன்றக் கூட்டத் தொடரை குறைவான நாட்கள் நடத்துவதிலேயே கவனம் செலுத்தி வந்துள்ளன. இந்த நாட்களுக்குள் நமது கட்சிக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச கால அவகாசத்தில்தான் பிரச்சனைகளை எழுப்பவும் பேசவும் முடிந்தது. அதுவும் நமது உறுப்பினர்களின் உரைக்கு மத்தியில் அமைச்சர்களின் தலையீடுகள் நமக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தை மேலும் குறைப்பதாகவே அமைந்திருந்தன.

3.52 சட்டமன்றக் கூட்டத் தொடர் தொடங்குவதற்கு முன்பு உறுப்பினர்கள் கூட்டத்தை நடத்தி தொடர் முழுவதற்கும் நமது அணுகுமுறை தீர்மானிக்கப்படுவதில் மாநில மையம் உதவுகிறது. கூட்டத் தொடர் நடைபெறும் காலங்களில் அநேகமாக நாள்தோறும் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடத்தப்பட்டு மறுநாள் விவாதத்திற்கு வழிகாட்டப்படுகிறது. தமிழக அரசின் சில நலத்திட்டங்களுக்கு வரவேற்பை நாம் அவ்வப்போது தெரிவித்து வந்த போதிலும் பேருந்துக் கட்டணம், மின்சாரக் கட்டணம், பால்விலை, முத்திரைத்தாள் பதிவுக் கட்டணம் உயர்வுகளைக் கண்டித்தும், மின்வெட்டை எதிர்த்தும், சீரழிந்து வரும் சட்டம் - ஒழுங்கு பற்றியும் அழுத்தமான முறையில் நமது கருத்துக்கள் சட்டமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் பன்னாட்டு - ஏகபோக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்படுவது - தொழிலாளர்துறை செயல்படாமை, நலவாரியங்கள் முடக்கப்படுவது, விவசாய விளை நிலம் குறைந்து கொண்டே வருவது, கிராமப்புற வேலை உறுதிச் சட்டம் சரிவர அமல்படுத்தப்படாதது, லட்சக்கணக்கான மக்களுக்கு பட்டா வழங்கப்படாதது, சிறு உடைமையாளர் பாதிப்பு, வேலையின்மை, சேது சமுத்திரத்திட்டம் செயல்படாமை போன்றவற்றிற்கு எதிராகவும் வலுவான குரல் கொடுத்துள்ளோம்.

3.53 தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையின் போது, துறைவாரியான மானியக் கோரிக்கைகள் மீது கட்சி நிலைபாட்டில் நின்று பொதுவாக நமது தோழர்கள் உரையாற்றியுள்ளனர். தமிழக மக்களின் கோரிக்கைகள், அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகள் என ஏராளமான கவனஈர்ப்பு தீர்மானங்களை முன்மொழிந்துள்ளனர். எனினும் ஒரு சில மட்டுமே சபாநாயகரால் அனுமதிக்கப்பட்டுள்ளன. சட்டமன்ற ஜனநாயகம் சபைக்குள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் நாம் ஓரளவு தலையீடுகளைச் செய்துள்ளோம். திமுக, அதிமுகவைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பனர்கள் ஒருவரையொருவர் கடுமையான வார்த்தைப் பிரயோகம் செய்யும்போதும், அவரவர் தலைவர்களை வானளாவ புகழ்ந்து நேரம் வீணடிக்கப்படும்போதும் நாம் பார்வையாளராக இருக்க வேண்டிய நிலையே உள்ளது.

3.54 இருப்பினும் சட்டசபையில் நமது குறுக்கீடுகள், வற்புறுத்தல்கள் காரணமாக பல சாதகமான அறிவிப்புகளை தமிழக அரசு வெளியிட்ட நிகழ்வுகள் இக்காலத்தில் நடந்துள்ளன. குறிப்பாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வறட்சி நிவாரணம், அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தை அரசே ஏற்று நடத்துவது, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த கிலோவிற்கு ரூ. 20 அரிசி போடுவதை பரவலாக்குவது, ஹோட்டல்களில் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள், விசைத்தறிக்கு மின் கட்டணக் குறைப்பு குமாரி, நீலகிரி மாவட்டங்களில் தனியார் காடுகள் பாதுகாப்பு சட்ட விளிம்பிலிருந்து சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளை விடுவிக்க வேண்டும் என்பதை ஏற்று அதைப் பரிசீலிக்க குழு அமைத்தது, தானே புயலால் பாதித்த கறிக்கோழி விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கியது, கலைவாணர் அரங்கத்தை மீண்டும் கட்டுவது, திண்டுக்கல் குடிநீர் திட்டம், புதிய அரசு கலைக்கல்லூரிகள் திறப்பது, ஆசிரியர் தகுதித் தேர்வில் இடஒதுக்கீட்டு சமூகங்களுக்கு தகுதி மதிப்பெண்களை குறைத்து நிர்ணயித்தது, நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள், சகஜானந்தா, திப்பு சுல்தானுக்கு நினைவகங்கள், புதிய வட்டங்கள் அமைத்தல் போன்ற பல அறிவிப்புகளைக் கூற முடியும்.

3.55 இக்காலத்தில் அரசின் தவறான அணுகுமுறை மற்றும் முடிவுகளை எதிர்த்து பல முறை வெளிநடப்பு செய்துள்ளோம். மின்கட்டண உயர்வு, மின்வெட்டு, கூட்டுறவுத் தேர்தல் மோசடிகள், நாம் முன்மொழிந்த பல கவனஈர்ப்புத் தீர்மானங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாதது, விஜயகாந்த் மீதும் பின்னர் 5 தேமுதிக உறுப்பினர்கள் மீதும் கடுமையான இடை நீக்க உத்தரவுகள், தூத்துக்குடி மாவட்டத்தில் நமது தோழர்களைக் குறி வைத்து சமூக விரோத சக்திகள் நடத்திய வெடிகுண்டு வீசிய பிரச்சனையில் காவல்துறையின் தவறான அணுகுமுறை, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரை 3 நாட்கள் மட்டுமே நடத்த தீர்மானித்தது போன்ற பல அம்சங்களில் நமது வெளிநடப்புகள் இருந்துள்ளன.

3.56 இருப்பினும் தமிழக அரசு - அமைச்சர்கள் பற்றிய கருத்துக்களை வெளியிடும்போது சில சந்தர்ப்பங்களில் நமது சில சட்டமன்ற உறுப்பினர்களிடம் தடுமாற்றங்கள் இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. இத்தகைய பிரச்சனைகள் மாநில செயற்குழு, மாநிலக்குழு கூட்டங்களில் விமர்சிக்கப்பட்டு பின்னர் நடைபெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

3.57 சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறும்போது நமது சட்டமன்றக்குழு அலுவலகம் சிறப்பாகச் செயல்படுகிறது. மாவட்டங்கள், வர்க்க - வெகுஜன அமைப்புகளிலிருந்து வரும் மனுக்கள், கோரிக்கைகள் குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது. இருப்பினும் அவ்வாறு வந்தவை மிகக் குறைவானதே. எதிர் காலத்தில் சட்டமன்றம் கூடும் வேளையில் மக்கள் பிரச்சனைகளை சட்டமன்றக்குழுவிற்கு அனுப்பி வைப்பதில் கட்சியின் மாவட்டக்குழுக்கள் - வர்க்க வெகுஜன அமைப்புகள் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும்.

அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் குறித்து

அஇஅதிமுக

3.58 தமிழகத்தில் பலத்திலும், செல்வாக்கிலும் இக்கட்சியே தொடர்ந்து முதல் பெரும் கட்சியாக உள்ளது. ஜெயலலிதாவுக்கு எதிரான தீர்ப்பிற்குப் பிறகும் நிலைமையில் பெரிய மாற்றமில்லை. இக்கட்சி அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வரும் நலத்திட்டங்கள் அடித்தட்டு மக்கள் மத்தியில் இதன் பிடிப்பை பாதுகாத்து வருகிறது. கடந்த மே 2014 நாடாளுமன்றத் தேர்தலில் இக்கட்சி 42.3 சதவிகித வாக்குகளையும் 37 தொகுதிகளையும் பெற்றது அதன் செல்வாக்கிற்கு எடுத்துக்காட்டு. பரவலாக பணவிநியோகம் இருந்தாலும் வலுவான பிடிப்பு இல்லாமல் இவ்வளவு வாக்குகள், தொகுதிகள் பெற முடியாது.

3.59 காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது அதனை வலுவாக அஇஅதிமுக எதிர்த்து வந்தபோதிலும் தமிழகத்தில் தாராளமயக் கொள்கைகளையே அமல்படுத்தி வருகிறது. தற்போதைய பாஜக அரசின்பால் இதன் அணுகுமுறை பெரும்பாலும் விமர்சன பூர்வமாக இல்லை. பல பகுதி உழைப்பாளி மக்களுக்கு பாதகமான தனது அரசின் நடவடிக்கைகளிலிருந்து மக்களை திசை திருப்ப நலத்திட்டங்களை பயன்படுத்தி வருகிறது. தமிழக நலன் காப்பதில் தான் முன்வரிசையில் இருப்பதாக தோற்றத்தை ஏற்படுத்துகிறது.

திமுக

3.60 திமுக தொடர்ச்சியாக அரசியல் பின்னடைவுகளை சந்தித்து வருகிறது. 9 ஆண்டு காலம் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகித்த திமுக தனது எதிர்காலம் கருதி அந்த ஆட்சியின் இறுதிக்கட்டத்தில் இலங்கை தமிழர் பிரச்சனையில் அந்த அரசின் அணுகுமுறையைக் காரணம் காட்டி வெளியேறியது. இருப்பினும் நாடாளுமன்றத் தேர்தலில் கடும் தோல்வியையே சந்தித்தது. இதன் வாக்கு விகிதமும் கடந்த தேர்தலைவிட குறைந்துள்ளது. அஇஅதிமுகவிற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை பயன்படுத்தும் நோக்கத்துடன் தனது தலைமையிலான அணியைப் பலப்படுத்த பல்வேறு கட்சிகளுடன் தொடர்பு கொண்டு பேசி வருகிறது. இதுவரை அதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை. 2ஜி அலைக்கற்றை ஊழலில் இக்கட்சியின் தலைவர்கள் சிக்கியிருப்பது அதன் தோற்றத்தை வெகுவாகச் சிதைத்துள்ளது. நாடாளுமன்றத்தில் பாஜக அரசு கொண்டு வந்த தொழிற்சாலைச் சட்டத் திருத்த மசோதாவிற்கு இக்கட்சியும் ஆதரவுப் போக்கையே வெளிப்படுத்தியது. திமுக தலைவரின் குடும்பத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளும் அழகிரி கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பதும் திமுகவை மேலும் பலவீனப்படுத்தியுள்ளது. பொதுவாக கடந்த 3 ஆண்டு காலத்தில் இக்கட்சியின் செல்வாக்கும், செயல்பாடும் பாதிப்படைந்துள்ளது.

தேமுதிக

3.61 தேமுதிக இக்காலத்தில் பொதுவான பின்னடைவைச் சந்தித்துள்ளது. கடந்த சட்டமன்றத் தேர்தலில் அஇஅதிமுகவுடன் உறவு ஏற்படுத்தியது. பின்னர் தேமுதிக - அஇஅதிமுக உறவு மோசமடைந்து கடும் சர்ச்சைகள் ஏற்பட்டன. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் பாஜகவுடன் உடன்பாடு ஏற்படுத்தி 14 தொகுதிகளில் போட்டியிட்டு 5 சதவிகித வாக்குகளையே பெற்றது. எந்த தொகுதியிலும் வெற்றி பெறவில்லை. தொடர்ந்து பாஜக அரசின் பல செயல்பாடுகளை ஆதரித்து அறிக்கைகளை வெளியிட்டது. தமிழக அரசின் செயல்பாடுகளை தொடர்ந்து விமர்சித்து வருகிறது. பால்விலை உயர்வைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. பொதுவாக இக்கட்சி அணிகளிடையே கடந்த காலத்தில் இருந்த வேகமோ, உற்சாகமோ தற்போது இல்லை.

3.62 காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கும் இக்காலத்தில் சரிவடைந்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப்போட்டியிட்டு 4.3 சதவிகித வாக்குகளைப் பெற்றது. 1967 தேர்தலுக்குப் பிறகு இப்போதுதான் இக்கட்சி தனித்துப்போட்டியிடும் நிலைக்குத் தள்ளப்பட்டது. ஏற்கனவே கோஷ்டி நடவடிக்கைகளால் பாதிப்படைந்துள்ள இக்கட்சிக்கு அகில இந்திய அளவிலும், தமிழகத்திலும் ஏற்பட்ட தேர்தல் தோல்விகள் மேலும் பின்னடைவை ஏற்படுத்தியது. இந்நிலையில் இக்கட்சியிலிருந்து வாசன் வெளியேறி தனிக்கட்சி துவங்கியிருப்பது மேலும் பாதிப்பை ஆழப்படுத்தியுள்ளது.

தமிழ் மாநில காங்கிரஸ்

3.63 வாசன் உருவாக்கியுள்ள த.மா.காவில் காங்கிரஸ் கட்சியிலிருந்து கணிசமான ஊழியர்களும், தலைவர்களும் வெளியேறி இணைந்துள்ளனர். இதன் கொள்கை நிலைகள், செயல்பாடுகளைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டியுள்ளது.

பாமக

3.64 கடந்த கால தேர்தல்களில் பெரும் பின்னடைவைச் சந்தித்த பாமக கடந்த 3 ஆண்டுகளில் சாதி அரசியலை வெகுவாக முன்னெடுத்துச் சென்றது. தலித் மக்களுக்கு எதிரான நிலை எடுத்துச் செயல்படும் இக்கட்சி இதர சாதி அமைப்புகளுடன் இணைந்து சமூக ஜனநாயகக் கூட்டணி என்ற அமைப்பை ஏற்படுத்தியது. வட மாவட்டங்களில் இதன் தாக்கத்தைக் காண முடிகிறது. தர்மபுரி மாவட்டத்தில் தலித் மக்களுக்கு எதிரான தாக்குதலை நடத்தி அதனைத் தொடர்ந்து சாதிவெறியை வலுவாக முன்னெடுத்துச் செல்கிறது. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை வாபஸ் பெற வலியுறுத்தி இதன் வழக்கறிஞர் பிரிவு சார்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது. இலங்கைத் 'தமிழர், காவிரி, முல்லைப்பெரியாறு போன்ற பிரச்சனைகளில் இனவாத அணுகுமுறையுடன் செயல்படுகிறது. பாஜகவுடன் தொகுதி உடன்பாடு செய்து கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 9 தொகுதிகளில் போட்டியிட்டு தர்மபுரியில் வெற்றி பெற்றது.

மதிமுக

3.65 இக்கட்சியின் பலத்திலும் செயல்பாடுகளிலும் 3 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை. கடந்த சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கியிருந்த மதிமுக இந்த நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவுடன் உடன்பாடு செய்து 7 தொகுதிகளில் போட்டியிட்டு எதிலும் வெற்றிபெறவில்லை. சமீப காலங்களில் இலங்கைத் தமிழர் பிரச்சனை, சமஸ்கிருத திணிப்பு, பாஜகவின் இந்துத்துவா அணுகுமுறை போன்ற அம்சங்களில் பாஜகவை கடுமையாக விமர்சித்ததுடன் சமீபத்தில் கூட்டணியை விட்டு வெளியேறிவிட்டது. இலங்கை தமிழர், முல்லைப் பெரியாறு போன்ற பிரச்சனைகளின்பால் இக்கட்சியின் இனவாத அணுகுமுறை தொடர்கிறது.

பாஜக

3.66 கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தேமுதிக, பாமக, மதிமுக மற்றும் சாதி அமைப்புகளை இணைத்துக் கொண்டு இக்கட்சி ஒரு அணியை உருவாக்கியதும் இந்த அணிக்கு 18.5 சதவிகித வாக்குகள் கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது. 8 தொகுதிகளில் போட்டியிட்ட பாஜகவிற்கு மட்டும் 5.5 சதவிகித வாக்குகள் கிடைத்தன. கன்னியாகுமரி தொகுதியில் அக்கட்சி வகுப்புவாத அடிப்படையில் வெற்றிபெற்றது. நாடாளுமன்ற தேர்தலுக்குப் பிறகு பாஜக, மத்தியில் ஆட்சியில் இருப்பதைப் பயன்படுத்தி, தமிழகத்தில் தன்னை முன்னிறுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பல்வேறு சாதியமைப்புகளைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு செயல்படுகிறது. அரசியல் துறையில் மட்டுமின்றி சமூக, கலாச்சார

துறைகளிலும் தலையீடுகளை செய்து வருகிறது. ராஜேந்திர சோழனின் 1125-வது பிறந்த தினவிழா கொண்டாடுவது இதற்கு ஓர் உதாரணம். சமூக வலைத்தளம் உள்ளிட்டவற்றை பயன்படுத்தி தன்னுடைய உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சிக்கிறது.

சிபிஐ

3.67 நம்மையடுத்து ஓரளவு வலுவுள்ள இடதுசாரிக் கட்சியாக சிபிஐ உள்ளது. இக்கட்சியுடன் இணைந்து பல கூட்டு இயக்கங்களை நடத்தியுள்ளோம். இருப்பினும் மத்திய அரசின் கொள்கைகளுக்கு எதிராக கூட்டு இயக்கமாகவே இவை பரவலாக இருந்துள்ளன. மாநில அஇஅதிமுக அரசின் தவறான நிலைபாடுகளுக்கு எதிராக கூட்டு இயக்கம் நடத்த முன்வருவதில் இக்கட்சி ஆர்வம் காட்டுவதில்லை. இக்கட்சியுடன் அரசியல் உறவுகளை பலப்படுத்த தொடர்ந்து முயன்றுள்ளோம். எதிர்காலத்திலும் நம்பிக்கையான இடதுசாரி மாற்றை மக்களிடையே முன்னெடுத்துச் செல்ல இந்த அணுகுமுறை தொடர வேண்டும்.

தலித் அமைப்புகள்

3.68 விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு இக்காலத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருப்பதாகக் கூற முடியாது. பாமகவின் சாதிவெறி நடவடிக்கைகளை எதிர்கொள்ள இக்கட்சி சிலமுறை இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து செயல்பட முன்வந்தது. திமுகவுடன் உடன்பாடு செய்து நாடாளுமன்றத் தேர்தலில் 2 தொகுதிகளில் போட்டியிட்ட இக்கட்சி இரண்டிலும் தோல்வியடைந்தது. சமீபகாலமாக திமுக - விடுதலை சிறுத்தைகள் உறவில் இடைவெளி தெரிகிறது. இலங்கைத் தமிழர், முல்லைப்பெரியாறு போன்ற பிரச்சனைகளில் தொடர்ந்து இனவாத அணுகுமுறையுடன் செயல்பட்டு வருகிறது.

3.69 கடந்த சட்டமன்றத் தேர்தலில் அஇஅதிமுகவுடன் தொகுதி உடன்பாடு செய்து கொண்ட புதிய தமிழகம் நாடாளுமன்றத் தேர்தலில் திமுகவுடன் உடன்பாடு செய்து 1 தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தது. தென்மாவட்டங்களில் இதன் பிடிப்பு தொடர்ந்து தளர்ந்து வருகிறது.

3.70 தமிழகத்தில் பல்வேறு அருந்ததியர் அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் ஆதிதமிழர் பேரவை திமுகவுடன் நெருக்கத்தை இக்காலத்தில் வளர்த்துக் கொண்டுள்ளது. இதர அமைப்புகள் பலவும் தீண்டாமை ஒழிப்பு முன்னணியுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றுவது தொடர்கிறது.

இஸ்லாமிய அமைப்புகள்

3.71 இந்திய யூனியன் முஸ்லீம்லீக், தேசிய லீக் போன்ற கட்சிகளுக்கு இஸ்லாமிய மக்களிடம் மிகக்குறைவான பிடிப்பே உள்ளது. மனிதநேய மக்கள் கட்சிக்கு ஏற்கனவே இருந்து செல்வாக்கு குறைந்துள்ளது. இக்காலத்தில் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் சில தங்கள் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளன. இதில் தௌஹீத் ஜமாத் என்ற அமைப்பு பிளவுபட்டுள்ளது. பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்ற அடிப்படைவாத அமைப்பு எஸ்.டி.பி.ஐ. என்ற அரசியல் பிரிவை உருவாக்கி தேர்தலிலும் போட்டியிடுகிறது. இஸ்லாமிய மக்களுக்கு திராவிடக் கட்சிகளுடன் இருந்த பிடிமானம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. அதேசமயம் பல அடிப்படைவாத, தீவிரவாத அமைப்புகள் அம்மக்களிடையே தங்கள் நடவடிக்கைகளை பலப்படுத்தி வருவது கவலை தரும் அம்சமாகும். தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தில் அப்பாவி இஸ்லாமிய இளைஞர்கள் பலர் கைது செய்யப்படுவதும் சிறையில் அடைக்கப்படுவதுமான தற்போதைய சூழலை இவை பயன்படுத்தி வளர முயற்சிக்கின்றன.

அதிதீவிர இடதுசாரிக் குழுக்கள்

3.72 கடந்த மாநில மாநாட்டில் மதிப்பிட்டதைப்போலவே இக்குழுக்கள் தமிழகத்தின் பல பகுதிகளில் செயல்படுகின்றன. தாராளமயக் கொள்கைகள் கடும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் சூழலில்

மக்களிடையே அதிதீவிர முழக்கங்களை இக்குழுக்கள் எழுப்பி வருகின்றன. குறிப்பாக இளைஞர்களை குறிவைத்து இவை செயல்படுகின்றன. சட்டக்கல்லூரி மாணவர்கள், வழக்கறிஞர்கள், மத்தியில் இவர்களது செயல்பாடுகள் நீடிக்கின்றன. மாநில அளவில் வலுவான சக்தியாக இல்லாவிட்டாலும் செயல்படும் இடங்களில் இவர்களின் அதிதீவிர முழக்கங்களை அரசியலாக எதிர்கொள்வது தேவையாகும்.

இந்துத்துவா அமைப்புகள்

3.73 ஆர்.எஸ்.எஸ். விஸ்வ இந்து பரிஷத், ஏ.பி.வி.பி போன்ற இந்துத்துவா அமைப்புகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ஆர்.எஸ்.எஸ். சார்பாக பல இடங்களில ஊர்வலங்கள் நடத்தப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட அமைப்புகளும், இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி போன்ற அமைப்புகளும் பல இடங்களில் கோவில்களை மையமாகக் கொண்டு செயல்படுவதை அதிகரித்து வருகின்றன.

தன்னார்வ குழுக்கள்

3.74 தமிழகத்தில் தன்னார்வக் குழுக்களின் செயல்பாடுகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவையாக உள்ளன. தாராளமயக் கொள்கைகள் தீவிரமாக அமலாகிவரும் நிலையில் இவற்றின் செயல்பாடுகள் அதிகரித்து வருகின்றன. சமூக, பாலின, மனித உரிமை ஒடுக்குமுறைகள் அதிகரித்து வரும் நிலையை இவை பயன்படுத்திக் கொள்கின்றன. பாதிக்கப்பட்ட மக்களையும் பிரிவினரையும் இந்த அமைப்புகள் தொடர்புகொண்டு அணி திரட்டுவதையும் சில அமைப்புகள் இயக்கங்களாக நடத்துவதையும் தொடர்ந்து காண முடிகிறது. மக்களுக்கு அரசியல் இயக்கங்கள் மீது அவநம்பிக்கை ஏற்படுத்துவதையும், அரசியலற்ற பார்வையைக் கொடுப்பதையும் பல தன்னார்வ குழுக்கள் தொடர்ந்து செய்து வருகின்றன. சில தன்னார்வக் குழுக்கள் இடதுசாரி இயக்கங்களுடன் இணைந்து பணியாற்றுவதும் தொடர்கிறது. பெரியஅளவில் செயல்படும் பல தன்னார்வக் குழுக்கள் வெளிநாடுகளின் நிதி உதவியுடன் செயல்படும் பின்னணியில் இவற்றின் செயல்பாடுகளைத் துல்லியமாக ஆய்வு செய்வது என்ற கடந்த மாநில மாநாட்டின் முடிவை மேலும் காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டும்.

தமிழ் தேசிய அமைப்புகள்

3.75 இக்காலத்தில் தமிழ் தேசிய அமைப்புகள் பலவும் தங்கள் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளன. சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி, நெடுமாறன் தலைமையிலான தமிழ் தேசியக் கட்சி உட்பட பல அமைப்புகள் இலங்கைத் தமிழர், முல்லைப் பெரியாறு போன்ற பிரச்சனைகளில் இனவெறி பிரச்சாரங்களை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன. தமிழ் தேசிய அமைப்புகள் குறித்தும் இந்த அமைப்புகள் மக்கள் மத்தியில் நடத்திவரும் இனவெறி பிரச்சாரம் மற்றும் அதன் தாக்கம் குறித்தும் காலதாமதமின்றி மாநிலக்குழுவில் பரிசீலித்து அதனை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

சாதிய அமைப்புகள் செயல்பாடு

3.76 தமிழகத்தில் சாதியமைப்புகளின் செயல்பாடுகள் அதிகரித்துள்ளன. கொங்கு வேளாளர் முன்னேற்றக் கழகம், புதிய நீதிக் கட்சி போன்றவை அரசியல் கட்சிகளாக செயல்படுகின்றன. தென்மாவட்டங்களில் தேவர் பேரவை, மூவேந்தர் முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட பல சாதிய அமைப்புகள் செயல்படுகின்றன. இவற்றில் பல நாடாளுமன்றத் தேர்தலின் போது பாஜக அணியில் இடம்பெற்றன. புதிய பல சாதியமைப்புகள் மேலும் உருவாகிக் கொண்டிருக்கின்றன. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டும் என்ற பிரச்சாரத்தை பல சாதியமைப்புகள் மேற்கொண்டு வருவதும் தலித் மற்றும் தலித் அல்லாதோர் என பிரிவினையை உருவாக்கி மோதல்களை உருவாக்க முனைவதும் ஆபத்தான போக்குகளாகும். சாதிய

சக்திகள் - அமைப்புகளின் நடவடிக்கைகள் ஜனநாயக மற்றும் இடதுசாரி இயக்கங்களுக்கு ஒரு பெரும் சவால் என்பதுடன், இவற்றின் நடவடிக்கைகள் உழைக்கும் வர்க்கத்தின் ஒற்றுமையை வெகுவாகச் சிதைக்கும் என்பதையும் கணக்கிலெடுக்க வேண்டும்.

அடையாள அரசியலுக்கு எதிராக

3.77 தமிழகத்தில் சாதி, மதம், இனம் அடிப்படையில் செயல்படும் பல அடையாள அரசியல் அமைப்புகள் இக்காலத்தில் தங்கள் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளன. அடையாள அரசியல் முழக்கங்களும் அதிகரித்துள்ளன. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ள சூழ்நிலையில் அதிருப்தியும், விரக்தியும் அடைந்துள்ள இளைஞர்களின் குறிப்பிடத்தகுந்த பகுதியினர் இத்தகைய அடையாள அரசியல் முழக்கங்களாலும் அமைப்புகளாலும் கவரப்படுகின்றனர். தாராளமய கொள்கைகளின் காரணமாக மக்களின் சுமைகள், துயரங்கள் வெகுவாக அதிகரித்துள்ள பின்னணியில் அக்கொள்கைகளுக்கு எதிராக மக்கள் அணிதிரண்டு விடக் கூடாது என்ற நோக்கத்துடன் இத்தகைய அடையாள அரசியல் அமைப்புகளுக்கு ஆளும் வர்க்கங்கள் ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்றன. குறுகிய ஆதாயம் கருதி சில பிராந்திய முதலாளித்துவக் கட்சிகள் இத்தகைய அடையாள அரசியல் அமைப்புகளுடன் இணைந்து செயல்படுவதும், அடையாள அரசியல் முழக்கங்களை முன்னெடுத்துச் செல்வதும் கூட இக்காலத்தில் தீவிரமடைந்துள்ளது. இதனால் அடையாள அரசியலை எதிர்கொள்வது சிரமமான பணியாகவும், பெரும் சவாலாகவும் உருவெடுத்துள்ளது. சாதி, மதம், இனம் அடிப்படையிலான அனைத்துவித ஒடுக்குமுறைகள் மற்றும் பாரபட்சங்களுக்கும் எதிராகப் போராடிக் கொண்டே தான் அடையாள அரசியலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான போராட்டத்தை நடத்த முடியும்.

இலங்கை தமிழர் பிரச்சனை

3.78 இலங்கை தமிழர் பிரச்சனை குறித்து கடந்த மாநாட்டிலும் விவாதித்தோம். இருப்பினும் இப்பிரச்சனைகள் தீர்க்கப்படாத நிலையில் தொடர்ச்சியாக தமிழக அரசியலில் முன்னுக்கு வரும் பிரச்சனைகளாகவே இன்றளவும் உள்ளன. தமிழகத்திலுள்ள பல அரசியல் கட்சிகள் இப்பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வு காண்பது என்பதை விட இனவெறியைத் தூண்டி அரசியல் ஆதாயம் பெறவே முயற்சிக்கின்றன. இப்பின்னணியில், நமது கட்சியின் மாநிலக்குழு இலங்கை தமிழர் பிரச்சனை உருவான பின்னணி, வளர்ச்சிப்போக்கு, இன்றைய சூழல், தீர்வு ஆகிய அம்சங்கள் குறித்து மார்க்சிய அணுகுமுறையுடன் விவாதித்து அரசியல் தலைமைக்குழு உதவியுடன் ஒரு ஆவணத்தை 2012 டிசம்பரில் இறுதிப்படுத்தியது. அதில் உள்ள அம்சங்களை கட்சி அணிகளுக்கு பரவலாக எடுத்துச் சென்றோம்.

3.79 இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை, தமிழ் மக்களுக்கு சம அந்தஸ்து, 13வது அரசியல் சட்ட திருத்தத்தை முழுமையாக அமல்படுத்தி பிரதேச அடிப்படையிலான சுயாட்சி தருவது, தமிழர் குடியிருப்பு பகுதிகளிலிருந்து ராணுவத்தை வெளியேற்றுவது போன்ற அம்சங்களை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்பட்ட போதெல்லாம் இந்தியா அந்த விவாதத்தில் கலந்து கொண்டு நம்பகத்தன்மையுள்ள சுயேட்சையான உயர்மட்ட விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும் எனக் கோரினோம். அதேசமயம் தமிழக சட்டமன்றத்தில் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது, இலங்கையை நட்பு நாடாகக் கருதக்கூடாது, இலங்கை கிரிக்கெட் வீரர்கள் சென்னை மைதானத்தில் விளையாடக் கூடாது போன்ற அம்சங்களை உள்ளடக்கிய ஒரு தீர்மானம் குரல் வாக்கெடுப்பில் நிறைவேற்றப்பட்ட போது நாம் நமது ஆட்சேபணையை எழுத்துப் பூர்வமாக பதிவு செய்தோம்.

3.80 தமிழ்நாட்டில் திமுக, அஇஅதிமுக உட்பட பெரும்பாலான கட்சிகள் இலங்கை தமிழர் பிரச்சனையில் இனவாத அணுகுமுறையுடன் ஏறத்தாழ ஒரேவிதமான நிலைபாட்டையே மேற்கொள்கின்றன. தமிழ் தேசிய அமைப்புகள் இப்பிரச்சனையில் தீவிர இனவெறி நிலையுடன் செயல்படுகின்றன. நாம் மட்டுமே இனவெறி அணுகுமுறைக்கு இடம் தராமலும், அதேசமயம் அம்மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதாவாகவும் குரல் கொடுத்து வருகிறோம். எனினும் நமது சரியான நிலைபாடுகள் பரவலான மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படாத நிலை உள்ளது. இலங்கை தமிழர் பிரச்சனை குறித்து அவ்வப்போது எழுப்பப்படும் அல்லது முன்னுக்கு வரும் அம்சங்கள் குறித்து நமது நிலைபாடுகளை தொடர்ச்சியாக மக்களிடம் கொண்டு செல்வதை எதிர்காலத்தில் உறுதிப்படுத்த வேண்டும்.

3.81 சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் ராஜபக்சே தோற்கடிக்கப்பட்டு புதிய அதிபராக மைத்ரிபால சிறிசேன தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். வடக்கு மாகாண முதல்வர் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நீண்ட நாள் கோரிக்கையான ராணுவ அதிகாரி கவர்னர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பது நிறைவேறியுள்ளது. அதேபோன்று தலைமை செயலாளரும் மாற்றப்பட்டுள்ளார். 13 ஆவது சட்டத் திருத்தத்தை அமல்படுத்தப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

3.82 கச்சத்தீவுப் பிரச்சனையில் இந்தியா - இலங்கை அரசுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை எதிர்த்து அஇஅதிமுக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது. நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறாமல் செய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்திற்கு எதிரான வழக்கில் தன்னையும் இணைத்துக் கொள்ள தமிழக அரசின் வருவாய்த்துறையும் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது. இதற்கான தீர்மானம் சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது, நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அதை ஆதரித்தோம்.

3.83 இலங்கை அகதிகள் பல்லாயிரக்கணக்கானோர் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் முகாம்களில் வசித்து வருகின்றனர். இவர்கள் பற்பல பிரச்சனைகளை சந்திக்கின்றனர். இலங்கை தமிழர் பிரச்சனை பற்றி அதிகமாகப் பேசும் பல அரசியல் கட்சிகள், தமிழ் தேசிய அமைப்புகள் அகதிகள் பிரச்சனையில் கவனம் செலுத்துவதில்லை. நமது கட்சியின் சார்பில் ஆய்வு நடத்தி அரசின் கவனத்திற்கு இவர்களின் பிரச்சனைகளை கொண்டு சென்றதோடு, சில இயக்கங்களையும் நடத்தியுள்ளோம். இலங்கையில் தற்போது புதிய அரசு அதிகாரத்திற்கு வந்துள்ள நிலையில், இலங்கை திரும்ப விரும்பும் அகதிகளுக்கு அதற்கான ஏற்பாடுகளை மத்திய, மாநில அரசுகள் உத்தரவாதம் செய்ய வேண்டும்

மீனவர் பிரச்சனை

3.84 தமிழக மீனவர் பிரச்சனையைப் பொறுத்த வரை, இலங்கை அரசுடன் மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தி தமிழக மீனவர்களின் பாதுகாப்பை உத்திரவாதப்படுத்த வேண்டுமெனவும், இந்தியா - இலங்கை இருநாட்டு மீனவர் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தை நடத்தி இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணும் முயற்சிகளை இரு நாட்டு அரசுகளும் மேற்கொள்ள வேண்டுமெனவும் தொடர்ச்சியாக வற்புறுத்தி வருகிறோம். இருமுறை அத்தகைய பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன.

புதுச்சேரி அரசியல் நிலைமை

3.85 கடந்த மாநில மாநாட்டின் போதே புதுச்சேரியில் என்.ஆர். காங்கிரஸ் அரசு ஆட்சியில் இருந்தது. இந்த அரசுக்கு எதிராக காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பல நிர்வாக ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு நிதி ஒதுக்கீட்டிலும் பாரபட்சமான அணுகுமுறையைக் கையாண்டது. துணைநிலை ஆளுநர் மாற்றம், தலைமைச் செயலாளர் மாற்றம் மற்றும் நிதிச்செயலாளர் மாற்றம் போன்ற நிர்வாக நடவடிக்கைகளை புதுச்சேரி அரசுடன் கலந்து பேசாமல் மத்திய அரசு மேற்கொண்டது.

3.86 இப்பின்னணியில் நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவுடன் சந்தர்ப்பவாத கூட்டணி அமைத்து என்.ஆர். காங்கிரஸ் போட்டியிட்டு புதுவை தொகுதியில் வென்றது. மத்தியில் பாஜக ஆட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து புதுவை சட்டமன்றத்திற்கு நியமனம் செய்யப்பட்ட 2 உறுப்பினர்களில் ஒருவரை பிஜேபியிலிருந்து நியமனம் செய்து மற்றொருவரை என்.ஆர். காங்கிரசிலிருந்து புதுவை அரசு நியமனம் செய்தது. மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் புதுவை அரசிற்கு கூடுதல் நிதி கிடைக்கும் என என்.ஆர். காங்கிரஸ் பிரச்சாரம் செய்தது. ஆனால் பாஜக அரசு தீவிரமாக தாராளமயக் கொள்கைகளை அமலாக்கி வரும் பின்னணியில் புதுவை அரசிற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லை.

3.87 புதுவை என்.ஆர், காங்கிரஸ் அரசும் தனது பங்கிற்கு தாராளமயக் கொள்கைகளையே கடைபிடித்து வருகிறது. ரொட்டி பால் திட்டம், மாணவர்களுக்கு பாக்கெட் பணம் வழங்குவது உள்ளிட்ட திட்டங்களை கைவிட்டுவிட்டது. இலவச அரிசி வழங்கும் திட்டத்தையும் நிறுத்தி வைத்துள்ளது. வீடு கட்டுவதற்கான மானியத் திட்டத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்த ஆண்டிற்கான பட்ஜெட் போதுமான வளர்ச்சித் திட்டங்கள் இல்லாத பட்ஜெட்டாகவே அமைந்துள்ளது. பட்ஜெட்டிற்கு முன்பாகவே பால் மற்றும் பால் பொருட்களின் விலையை மாநில அரசு உயர்த்திவிட்டது. கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை ஆண்டிற்கு 30 நாட்கள் மட்டுமே வேலை வழங்கப்பட்டுள்ளது. அதுவும் நடப்பு பட்ஜெட்டில் குறைவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் ஆண்டிற்கு 20 நாட்கள் மட்டுமே வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. அரசுத்துறை நிறுவனங்கள் பல நட்டத்தில் இயங்குவதாகக் கூறி 5000க்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு பல மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை.

3.88 விவசாயமும் தொழிலும் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. விவசாய விளை நிலப் பரப்பு குறைந்து கிராமப்புற வேலைவாய்ப்பு பாதிக்கப்பட்டுள்ளது. பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. செயல்படும் தொழிற்சாலைகளில் கூடுதலான பணி நேரம், காண்ட்ராக்ட் முறை, குறைந்த ஊதியம் என கடுமையான சுரண்டல்போக்கு உள்ளது. பல நிறுவனங்களில் சங்கம் அமைக்கும் உரிமை மறுக்கப்படுகிறது. தொழிலாளர்துறை செயல்படாத துறையாகவே உள்ளது. கல்வியில் தனியார் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது. வணிக நோக்கத்துடன் ஏராளமான புதிய கல்வி நிறுவனங்களும் துவங்கப்படுகின்றன. தனியார் கல்வி நிறுவனங்களில் கட்டணக் கொள்ளை அதிகரித்த வண்ணம் உள்ளது. இந்நிலையில் மக்களின் அதிருப்தியை சமாளிக்கவும், மத்திய தர வர்க்கத்தினரை கவர்வதற்காகவும் அனைத்து அரசு பள்ளிகளிலும் மத்திய கல்வி திட்டத்தை இந்த கல்வி ஆண்டு முதல் அமல்படுத்தப் போவதாக புதுவை அரசு அறிவித்துள்ளது. அரசு நிர்வாகத்தில் ஊழல் போக்குகள் அதிகரித்துள்ளன.

3.89 மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீராக இல்லை. கொலை, திருட்டு, சமூக விரோதச் செயல்கள் அதிகரித்துள்ளன. சாதிய சக்திகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. முதல்வர் ரெங்கசாமியின் ஆதரவோடு வன்னியர் ஒருங்கிணைப்புக்குழு என்ற சாதியமைப்பு தீவிரமாக செயல்படுகிறது.

தலித் மக்களுக்கு எதிராக தீண்டாமை, வன்கொடுமைகள் அதிகரித்துள்ளன. திரௌபதியம்மன் கோவிலில் தலித்துகளின் ஆலய உரிமைக்காக போராடியதால் மதகடிப்பட்டியில் நமது கட்சி அலுவலகம் சாதிய சக்திகளால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்துள்ளன.

3.90 இவ்வாறு புதுவை என்.ஆர். காங்கிரஸ் அரசு அனைத்துத் துறைகளிலும் பின்னடைவைச் சந்தித்து வருகிறது. இந்நிலையில் காங்கிரஸ், திமுக போன்ற கட்சிகளின் செயல்பாடும் அவற்றின் கொள்கைகள் காரணமாக மக்கள் பிரச்சனைகளில் அக்கறை காட்டும் வகையில் அமையவில்லை. இரு கட்சிகளுமே கோஷ்டி பூசலில் சிக்கியுள்ளன. நாடாளுமன்ற தேர்தலில் அஇஅதிமுக கணிசமான வாக்குகள் பெற்ற போதிலும் சொத்து குவிப்பு வழக்கில் ஜெயலலிதா தண்டனை பெற்றதைத் தொடர்ந்து அக்கட்சிக்கும் செயல்பாட்டில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. பாமக சாதிய அணுகுமுறையோடு ஆளும் அரசிற்கு ஆதரவான போக்கையே கடைப்பிடித்து வருகிறது. பாஜக மத்திய அதிகாரத்தையும், நியமன சட்டமன்ற உறுப்பினரையும் பயன்படுத்தி காலூன்ற முயற்சிக்கிறது. இப்பின்னணியில் சிபிஐ(எம்) மத்திய அரசு, என்.ஆர். காங்கிரஸ் தவறான கொள்கைகளை எதிர்த்து தனித்தும், சிபிஐயுடன் இணைந்தும் பல்வேறு போராட்டங்களை இக்காலத்தில் நடத்தியுள்ளது. இத்தகைய போராட்டங்கள தொடர்வதோடு உள்ளூர்மட்ட பிரச்சனைகளுக்கான ஸ்தல இயக்கங்களை பரவலாக நடத்துவதும் அவற்றின் மூலம் கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன ஸ்தாபனங்களை பலப்படுத்தி சுயேச்சையான அரசியல் சக்தியாக புதுவை மாநிலத்தில் முன்னேறுவதும் முக்கியமான கடமையாகும்.

சிபிஐ(எம்)-ஐ வலுவான அரசியல் சக்தியாக முன்னெடுத்துச் செல்வது இடது ஜனநாயக மாற்றை உருவாக்குவது

3.91 நமது கடந்த மாநில மாநாடு சிபிஐ (எம்)-ஐ வலுவான அரசியல் சக்தியாக மாற்ற கீழ்க்கண்ட அறைகூவலை விடுத்தது:

- "நமது கட்சியை வலுவான அரசியல் சக்தியாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை பலப்படுத்த வேண்டும். நமது தேர்தல் அணுகுமுறை மாத்திரம் இந்நிலையை உருவாக்கிவிடாது. தேர்தல் நடைபெறும் காலங்களில் அகில இந்திய அரசியல் சூழல், நமது கட்சியின் அரசியல் நிலைபாடு, தமிழகத்தின் அரசியல் நிலைமைகள், முறியடிக்கப்பட வேண்டிய பிரதான அரசியல் சக்திகள் இவற்றைக் கணக்கிலெடுத்து நமது அரசியல் உத்தியை உருவாக்குகிறோம். இதற்கு மேல் நாம் பலமான அரசியல் சக்தியாக உருவெடுப்பதற்கு நமது சுயேட்சையான சமூக, பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளை பலப்படுத்த வேண்டும். போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லவேண்டும்."

3.92 அரசியல் உத்தி குறித்த பரிசீலனையை அறிக்கையின் மற்றொரு இடத்தில் செய்திருக்கிறோம். மாநாட்டிற்குப் பின்னர் இடது ஜனநாயக அணியை கட்டுவதில் முழு கவனம் செலுத்தவும் தீர்மானித்திருக்கிறோம்.

இடதுசாரி ஒற்றுமை

3.93 இடது ஜனநாயக அணியின் ஒரு முக்கிய அம்சம் இடதுசாரி ஒற்றுமையாகும். இக்காலத்தில் இடதுசாரிக் கட்சி என்ற முறையில் சிபிஐயுடன் இணைந்து மத்திய அரசின் கொள்கைகளை எதிர்த்தும், ஒரு சில மக்கள் பிரச்சனைகளிலும் கூட்டு இயக்கங்களை நடத்தியுள்ளோம். பல சந்தர்ப்பங்களில் இதற்கான முன்முயற்சிகளை நாம் மேற்கொண்டோம். பொதுவாக மத்திய

அரசின் தாராளமய கொள்கைகளை எதிர்த்தும், வகுப்புவாதத்தை எதிர்த்தும் மக்களின் கேந்திரமான சில கோரிக்கைகளை முன்வைத்தும் இந்த கூட்டு இயக்கங்கள் நடந்தன. மதுரை மாவட்டம் உள்ளிட்ட சில பகுதிகளில் மிகவும் குறைவான தொடர்பும் பலமும் உள்ள அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியை இத்தகைய கூட்டு இயக்கங்களில் நம்மால் இணைக்க முடியவில்லை. அக்கட்சியில் நிலவும் சாதிய அணுகுமுறை இதற்கு தடையாக இருந்துள்ளது. சிபிஎம், சிபிஐ சார்பில் நடைபெற்ற கூட்டு இயக்கங்கள் இரு கட்சிகளின் பலத்தை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் அவை வரையறைக்குட்பட்டவையே. இருப்பினும் இன்றைய அரசியல் சூழலில் ஒன்றுபட்ட இடதுசாரி இயக்கங்களின் தேவையை நாம் உணர வேண்டும். சிரமங்கள், பிரச்சனைகள் இருந்தாலும் அவற்றை எதிர்கொண்டு இடதுசாரி ஒற்றுமையை பலப்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

3.94 தற்போது நமது மத்தியக்குழு இடதுசாரி ஒற்றுமையை விரிவுபடுத்தியிருக்கிறது. அதன்படி சிபிஐ (எம்.எல்.லிபரேசன்), எஸ்.யூ.சி.ஐ (சி) போன்ற அமைப்புகளையும் இணைத்து ஒற்றுமையை விரிவாக்கியுள்ளோம். இதோடு இடதுசாரி சிந்தனையுள்ள அமைப்புகள், தனிநபர்கள், அறிவுஜீவிகள் ஆகியோரையும் இணைத்து ஒரு பரந்த மேடை உருவாக்கி மக்கள் பிரச்சனைகளுக்கான போராட்டங்களுக்கு திட்டமிடுவோம். நமது கட்சி தலைமையிலான வர்க்க - வெகுஜன அமைப்புகளும், சிபிஐ உட்பட இடதுசாரிக் கட்சிகள் தலைமையிலான வர்க்க - வெகுஜன அமைப்புகளும் இணைந்து தொடர்ச்சியான கூட்டு இயக்கங்களை உருவாக்கினால் இன்றைய சூழலில் அதன் தாக்கம் குறிப்பிடத்தக்கதாக இருக்கும். குறிப்பாக கேந்திரமான வர்க்கப் பகுதியினர் என்ற முறையில் தொழிலாளர்கள் - விவசாயிகள் கூட்டணியை முன்னிறுத்தி இயக்கங்கள் நடத்துவதற்கு கூடுதல் முக்கியத்துவம் தர வேண்டும். இவை நாம் மேற்கொள்ள வேண்டிய அடிப்படையான பணிகளாகும்.

இன்றைய சூழலும் வாய்ப்பும்

3.95 தமிழகத்தின் அரசியல் நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு வரும் காலம் இது. ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில் வெளிவந்துள்ள தீர்ப்பையொட்டி மாநில அரசு நிர்வாகத்தின் செயல்பாட்டில் பாதிப்பு உள்ளது. இச்சூழ்நிலையை திமுக பயன்படுத்த முயற்சிகளை மேற்கொண்டாலும் அது வெற்றி பெறுவதற்கான அறிகுறி இதுவரை இல்லை. திமுகவுடன் உறவு ஏற்படுத்திக் கொள்ள பல அரசியல் கட்சிகள் தயங்குவதைக் காண முடிகிறது. திமுக - விடுதலைச் சிறுத்தைகள் உறவிலும் இடைவெளி ஏற்பட்டுள்ளது. 2ஜி அலைக்கற்றை ஊழலில் திமுக தலைவரின் குடும்ப உறுப்பினர்கள் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டிருப்பது அக்கட்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. தேமுதிகவின் செல்வாக்கில் சரிவு ஏற்பட்டுள்ளது. பாமக தொடர்ந்து சாதி அரசியலை வலுவாக முன்னெடுத்துச் செல்கிறது. காங்கிரஸ் பிளவுபட்டு உள்ள செல்வாக்கையும் இழந்து நிற்கிறது. வாசன் கட்சி செயல்பாட்டை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். மதிமுகவின் செல்வாக்கு மிகவும் வரையறைக்குட்பட்டதுதான். விடுதலைச் சிறுத்தைகள் புதிய சூழலை எதிர்கொள்வதில் திணறல் உள்ளது. மனித நேய மக்கள் கட்சி உள்ளிட்ட இதர கட்சிகள் குறிப்பிடத்தக்க சக்திகளாக இல்லை. இந்நிலையில் பாஜக தன்னை முன்நிறுத்தவும் வலுப்படுத்தவும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. சமூக, கலாச்சார தளங்களிலும் கவனம் செலுத்தி வருகிறது. சாதிய அமைப்புகளை தன்னுடன் இணைத்துக் கொண்டுள்ளது.

3.96 தாராளமயக் கொள்கைகளின் தாக்கம் தமிழகத்திலும் வலுவாக உள்ளது. அஇஅதிமுக அரசின் நலத் திட்டங்கள் சில நிவாரணங்களைத் தந்தபோதிலும் கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், குடியிருப்பு உள்ளிட்ட அடிப்படை தேவைகளைப் பெறுவதில் நகர்ப்புற, கிராமப்புற ஏழை எளிய நடுத்தர மக்கள் பெரும் சிரமங்களை சந்திக்கின்றனர்.

3.97 இத்தகைய அரசியல் பொருளாதார பின்னணியில் சிபிஐ(எம்), உள்ளிட்ட இடதுசாரிக் கட்சிகளின் பங்களிப்பு முக்கியமானது. தாராளமயக் கொள்கைகளையும், வகுப்புவாதத்தையும் உறுதிபட எதிர்த்து வந்த பாரம்பரியம் இடதுசாரிக் கட்சிகளுக்கு மட்டுமே உள்ளது. நாம் நமது சுயேச்சையான நடவடிக்கைகளிலும், செயல்பாட்டிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். 2016 சட்டமன்ற தேர்தலில் நாம் போட்டியிட வாய்ப்புள்ளவை என நாம் தீர்மானித்துள்ள தொகுதிகளில் நமது அரசியல் பிரச்சாரம், ஸ்தல இயக்கங்கள், ஸ்தாபன தயாரிப்புகள் என குறிப்பான கவனம் செலுத்த வேண்டும்.

நிறைவாக

3.98 தமிழக மக்கள் தங்களின் துயரங்கள் - பிரச்சனைகளிலிருந்து விடுதலை பெற மாற்றுக் கொள்கைகளை எதிர்நோக்கும் போக்கு வளர்ந்து வருகிறது. அத்தகைய மாற்று முதலாளித்துவ அரசியல் கட்சிகளிடம் இல்லை. இந்திய விடுதலைப்போராட்டத்தில் தீரமிக்க பங்கு வகித்த, விடுதலைக்குப் பிறகு ஆளும் வர்க்கத்தின் கொள்கைகளை எதிர்த்து உறுதியான போராட்டங்களை நடத்திய, தேச ஒற்றுமைக்கு பெரும் ஆபத்தாக விளங்கும் வகுப்புவாதத்திற்கு எதிராக எந்த சமரசமும் இல்லாமல் உறுதியான நிலை எடுத்த பாரம்பரியம் கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி இயக்கத்திற்கு மட்டுமே உண்டு. இத்தகைய பெருமைகளை பின்பலமாகக் கொண்டும் நம்மிடையே காணப்படும் பலவீனங்கள், குறைபாடுகளைக் களைந்தும் இந்திய நாட்டையும், மக்களையும் சுரண்டலிலிருந்தும் வகுப்புவாத அபாயத்திலிருந்தும் விடுவிக்க இடதுசாரி கொள்கைகளை முன்னிறுத்தி நமது எதிர்கால நடவடிக்கைகளை உருவாக்க வேண்டும். இன்றைய சூழலில் இடதுசாரி மாற்றுதான் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணக்கூடிய நம்பிக்கையான மாற்று என்ற உணர்வோடு செயல்பட வேண்டும். விரிவான மக்கள் திரளிடம் நமது மாற்றுக் கொள்கைகளைக் கொண்டு சென்று அதை அடைவதற்கான போராட்டங்களையும் உள்ளூர்மட்ட போராட்டங்களையும் தீவிரப்படுத்த வேண்டும். இந்நோக்கத்தோடு சிபிஐ (எம்) மற்றும் நமது வர்க்க வெகுஜன ஸ்தாபனங்களை பலப்படுத்துவோம். விரிவான இடதுசாரி ஒற்றுமையையும், மாற்றையும் முன்னெடுத்துச் செல்வோம்.

தமிழகத்தில் கட்சியின் அரசியல் நடைமுறை உத்தி குறித்து

3.99 கடந்த 16 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் முடிவு குறித்து பரிசீலனை செய்த கட்சியின் மத்தியக்குழு கீழ்க்கண்ட நான்கு முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென முடிவெடுத்தது:

1) நாம் பின்பற்றி வரக் கூடிய அரசியல் நடைமுறை உத்தி குறித்த மறு ஆய்வு.

2) கட்சி அமைப்பு இயங்கும் விதம் குறித்தும் மக்கள் திரளிடம் நமது பணி நடக்கும் விதம் குறித்தும் மறு ஆய்வு.

3) சுயேட்சையான இயக்கத்திற்கு வழி வகை செய்யும் விதமாகவும், அரசியல் பணி மற்றும் கட்சியைக் கட்டுவது ஆகிய நோக்கிலும் வெகு மக்கள் அமைப்புகள், அவற்றின் செயல்பாடுகள் அவற்றின் இயங்கு விதம் குறித்த மறுஆய்வு.

4) சமூகப் பொருளாதார நிலைமைகளில் தாராளமயமாக்கல் ஆரம்பித்ததிலிருந்து ஏற்பட்டுள்ள மாற்றங்கள், அவை பல்வேறு வர்க்கங்களில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் ஆகியவை பற்றிய ஆய்வு, அதன் அடிப்படையில் திட்டவட்டமான முழக்கங்களை உருவாக்குவது.

இதன் அடிப்படையில் முதல் கடமையான அரசியல் நடைமுறை உத்தி குறித்து ஜனவரி 19-21ல் கூடிய மத்தியக்குழு ஆய்வு செய்து நகலறிக்கையை வெளியிட்டுள்ளது.

மத்தியக்குழுவின் வழிகாட்டுதல்:

16 ஆவது மக்களவைத் தேர்தல் பரிசீலனை அறிக்கையில் மத்தியக்குழு:

3.100 "அடுத்தடுத்த கட்சிக் காங்கிரசில் கட்சியின் சொந்த பலத்தை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வந்துள்ளோம். நாம் முதலாளித்துவக் கட்சிகளுடன் இணைந்து பணியாற்றும் உத்தியைக் கைக்கொண்டதுதான் நமது சொந்த பலம் குன்றியதற்குக் காரணம் என சில மாநிலக் குழுக்கள் கூறியுள்ளன. கட்சியின் சொந்த பலத்தை அதிகரிப்பதில் நாம் அடைந்துள்ள தோல்வி நாம் இதுகாறும் பின்பற்றி வந்த நமது அரசியல் நடைமுறை உத்தியை மறுபரிசீலனைக்கு உட்படுத்துவதை அவசியமாக்கியுள்ளது".

3.101 **இதன் தொடர்ச்சியாகத் தமிழகம் தொடர்பாக;** "கடந்த 40 ஆண்டுகளாக திமுக-அதிமுக கட்சிகளுடன் தொடர்ந்து தேர்தல் உடன்பாடு வைத்து வந்தது நமது சுயேச்சையான வளர்ச்சியையும், அரசியல் செல்வாக்கையும் மோசமாக பாதித்துள்ளதா என்பதைப் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகும்" என முடிவுக்கு வந்தது.

3.102 கட்சியின் மத்தியக்குழு வழிகாட்டுதலின் அடிப்படையில் தமிழகத்தில் நமது கட்சியின் சுயேச்சையான வளர்ச்சியும், அரசியல் செல்வாக்கும் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பரிசீலிக்கும் நோக்கத்தோடு தமிழகத்தில் நமது கட்சி கடைபிடித்து வந்த அரசியல் நடைமுறை உத்தியையும், அதன் ஒரு பகுதியான தேர்தல் உத்தியையும் பரிசீலிப்பது அவசியமென்று மாநிலக்குழு முடிவு செய்தது.

வாக்கு பலம் சரிவு:

3.103 கடந்த மக்களவை தேர்தலில் சிபிஐயுடன் இணைந்து 9 தொகுதிகளில் போட்டியிட்டோம். 9 தொகுதிகளிலும் நமது கட்சிக்கு கிடைத்தது 2,20,614 வாக்குகள். இது மாநிலத்தில் பதிவான மொத்த வாக்குகளில் 0.5 சதவிகிதம். தேர்தல் முடிவு குறித்து பரிசீலித்த கட்சியின் மாநிலக்குழு "கடந்த காலங்களை விட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வாக்கு தளம் வெகுவாக சரிந்துள்ளது என்பதையே 9 தொகுதிகளில் நாம் பெற்ற வாக்குகள் சுட்டிக்காட்டுகின்றது" என்று முடிவுக்கு வந்தது. 1971, 1998 ஆகிய இரண்டு தேர்தல்களில் சிபிஐ உள்ளிட்டு எந்த கட்சிகளுடனும் உடன்பாடின்றி கட்சி தனியே போட்டியிட்டுள்ளது. 1971ம் ஆண்டு 6 நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டு மாநிலத்தில் பதிவான மொத்த வாக்குகளில் 1.64 சதவிகித வாக்குகளைப் பெற்றது. 1998ல் மதுரை, வடசென்னை ஆகிய இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டு பதிவான மொத்த வாக்குகளில் 0.63 சதவிகிதம் வாக்குகளைப் பெற்றது. அரசியல் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் 1971, 1998 ஆகிய இரண்டு தேர்தல்களில் நமது கட்சி தனித்து போட்டியிட்டு பெற்ற வாக்குகளை ஒப்பிடுகிற போது 2014-ம் ஆண்டு தேர்தலில் பெற்ற வாக்குகள் நமது வாக்கு பலம் சரிந்துள்ளதையே உணர்த்துகிறது.

3.104 வெகுஜன புரட்சிகர கட்சியை கட்டுவது என்று சால்கியா பிளீனம் முடிவு செய்த 1978ம் ஆண்டுக்கு பிறகு கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அமைப்புகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. 1978ம் ஆண்டு கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 10,800. கடந்த 36 ஆண்டுகளில் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,05,000 ஆக உயர்ந்துள்ளது. 1978ம் ஆண்டு வர்க்க, வெகுஜன அரங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை 2,28,000 ஆக இருந்தது. 2014ம் ஆண்டு 39,76,362 ஆக உயர்ந்துள்ளது. ஆனால் நமது வாக்கு பலம் அதிகரிக்கவில்லை, மாறாக குறைந்துள்ளது. தேர்தலில் வர்க்க, வெகுஜன அமைப்புகளில் உள்ள பெரும்பான்மையான உறுப்பினர்களை நமக்கு வாக்களிக்கச் செய்ய முடியவில்லை. இவர்கள் முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ கட்சிகளுக்கு மாற்றாக நமது கட்சியைப் பார்க்கவில்லை என்பது அதன் பொருள்.

பரிசீலனை வரம்பு:

3.105 கடந்த காலங்களில் சோசலிசத்திற்கு ஏற்பட்ட பின்னடைவு, தாராளமயக் கொள்கை சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கம், இந்துத்வா வகுப்புவாத சக்திகள் பலம் பெற்றது, சாதிய அடிப்படையிலான அடையாள அரசியல் முன்னுக்கு வந்தது ஆகிய புறக் காரணங்களும் கட்சியின் வளர்ச்சியும், வாக்கு தளம் சரிந்ததற்கு காரணமாக இருந்துள்ளன. அதேபோல கட்சி ஸ்தாபன செயல்பாட்டில் உள்ள குறைபாடுகள், வர்க்க வெகுஜன அமைப்புகளை வழி நடத்துவதில் உள்ள ஸ்தாபன ரீதியான குறைபாடுகள், அரசியல் நடைமுறை உத்தி ஆகியவை நமது வளர்ச்சியும், செல்வாக்கும் பாதிக்கப்பட்டதற்கு முக்கிய காரணங்களாக இருந்துள்ளன. ஸ்தாபனம் சம்பந்தமாக அகில இந்திய அளவில் பிளீனம் நடக்க உள்ள நிலையில் அதன் பிறகு தமிழகத்தில் அது குறித்து தனிக் கவனம் செலுத்தலாம். எனவே, நாம் கடைபிடித்த அரசியல் உத்தி குறித்து மட்டுமே தற்போது பரிசீலனை மேற்கொள்கிறோம்.

3.106 தமிழ்நாட்டில் 1967 பொதுத் தேர்தலில் நமது கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தொகுதி உடன்பாடு கண்டு போட்டியிட்டது. 1971 தேர்தலில் திமுக, இந்திரா காங்கிரசுடன் உடன்பாடு கண்டது. நமது கட்சி அந்த தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தலைமையிலான இண்டிகேட் அணியை எதிர்த்தும், ஸ்தாபன காங்கிரஸ் தலைமையிலான சிண்டிகேட் அணியை எதிர்த்தும் தனித்து போட்டியிட்டது. நாம் போட்டியிட்ட 37 சட்டமன்றத் தொகுதிகளில் 4 தொகுதிகளில் டெபாசிட் பெற்றிருக்கிறோம்.

3.107 1972ம் ஆண்டு அஇஅதிமுக உருவானது. அதிமுக உருவாகின்ற வரையில் தமிழகத்தில் திமுக ஆளும் கட்சி, காங்கிரஸ் எதிர்க்கட்சி என்கிற நிலைமை இருந்தது. 1977ம் ஆண்டு அதிமுக தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்த பிறகு, இன்று வரையில் அதிமுக அல்லது திமுக மாறி மாறி ஆட்சிக்கு வரும் நிலைமை தொடர்கிறது.

3.108 கட்சியின் 10வது காங்கிரஸ் மற்றும் சால்கியா பிளீனம் நடைபெற்றது 1978ம் ஆண்டு. அதிமுக ஆட்சி பொறுப்புக்கு வந்தது 1977ம் ஆண்டு. எனவே 1978ம் ஆண்டுக்கு பிறகு நமது கட்சி கடைபிடித்த அரசியல் நடைமுறை உத்தி மற்றும் தேர்தல் உத்தி பற்றி பரிசீலிப்பதே பொருத்தமாக இருக்கும்.

தேர்தல் உத்தியின் சாதக பாதகங்கள்

3.109 கட்சியின் மத்தியக்குழு இறுதிப்படுத்தியுள்ள நகல் அறிக்கை (ஜனவரி 19 -21)யில் அரசியல் நடைமுறை உத்தி குறித்து கீழ்க்கண்டவாறு விளக்கியுள்ளது;

- "அரசியல் நடைமுறை உத்தி என்பது நமது அடிப்படை இலக்கான மக்கள் ஜனநாயகப் புரட்சியை நோக்கிய முன்னேற்றத்திற்கு வழிவகுக்குமாறு ஒவ்வொரு காலகட்டத்திலும் அந்த காலத்திற்கும் அன்றைய சூழலுக்கும் பொருத்தமானதாக நாம் கடைப்பிடிக்கும் உத்தியாகும். நாம் அவ்வாறு வகுத்துக் கொண்ட அரசியல்- நடைமுறை உத்தியில் நிர்ணயித்த இலக்கு முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ அதிகாரத்திற்கு மாற்றாக ஒரு இடது ஜனநாயக மாற்றை அளிப்பதற்காக ஒரு இடது ஜனநாயக முன்னணியைக் கட்டுவதாகும். இந்த இடது ஜனநாயக மாற்றைக் கட்டு வதற்கான நமது போராட்டம் இருக்கின்ற வர்க்கச் சமன்பாட்டை மாற்றியமைத்து நமது அடிப்படை இலக்கை நோக்கி நாம் முன்னேறுவதற்கான நமது முயற்சியின் பகுதியாகும்". (பாரா 4)

- தேர்தல் உத்தி என்பது நமது கட்சி மேற்கொள்ளும் அரசியல் நடைமுறை உத்தியின் ஒரு பகுதியேயாகும். எனவே, 1978-ம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் நாம் கடைப்பிடித்த தேர்தல் உத்தி, கட்சியின் வளர்ச்சி மற்றும் இடது ஜனநாயக அணியை கட்டுவதற்கு பயன்பட்டுள்ளதா, உதவிகரமாக இருந்துள்ளதா என்பதைப் பரிசீலிப்போம்.

- அகில இந்திய அளவில் காங்கிரஸ் மற்றும் பிஜேபியைத் தோற்கடிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு கட்சியின் மத்தியக்குழு உருவாக்கிய தேர்தல் உத்தியின் அடிப்படையில் நாடாளுமன்றத் தேர்தல்களில் திமுக அல்லது அதிமுகவுடன் தொகுதி உடன்பாடு கண்டு போட்டியிட்டிருக்கிறோம். நாடாளுமன்றத் தேர்தல்களில் கடைப்பிடித்த தேர்தல் உத்தி மற்றும் மாநிலத்தில் நிலவும் அரசியல் நிலைமையைக் கணக்கில் கொண்டு சட்டமன்றத் தேர்தல்களில் உடன்பாடு கண்டோம். 1977, 1980, 2001, 2011 சட்டமன்றத் தேர்தல்களில் அதிமுகவுடனும், 1984, 1989, 1991, 2006 சட்டமன்ற தேர்தல்களில் திமுகவுடனும் தொகுதி உடன்பாடு கண்டு சட்டமன்றத் தேர்தல்களை சந்தித்தோம். 1971-க்குப் பிறகு 1996-ம் ஆண்டு சட்டமன்ற - நாடாளுமன்றத் தேர்தலில் (சேர்ந்து நடந்தது) திமுக அதிமுகவை எதிர்த்து மதிமுகவுடன் தொகுதி உடன்பாடு கண்டு போட்டியிட்டோம்.

- நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியினுடைய மத்தியக்குழு உருவாக்கிய தேர்தல் உத்தியின் அடிப்படையில் திமுக அல்லது அதிமுகவுடன் தொகுதி உடன்பாடு செய்து கொண்டது காங்கிரசை எதிர்த்திட அல்லது பிஜேபியை எதிர்த்திட அரசியலாக பயன்பட்டுள்ளது. இதைப் போலவே தமிழக சட்டமன்றத் தேர்தலில் திமுக அல்லது அதிமுகவுடன் தொகுதி உடன்பாடு கண்டு போட்டியிட்டதால் தமிழக சட்டமன்றத்தில் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்த உறுப்பினர்களை பெறும் வாய்ப்பு கிடைத்தது.

- தமிழக சட்டமன்றத்தில் நமது கட்சிக்கு 1971 - 1976 ஆண்டுகளைத் தவிர மற்ற காலங்களில் தொடர்ச்சியாகப் பிரதிநிதித்துவம் இருந்தபோது, தொழிலாளர்கள், விவசாயிகள், மற்றும் உழைக்கும் மக்களுடைய பிரச்சனைகளை பேசுவதற்கும், நமது அரசியல் நிலைபாட்டை எடுத்துரைப்பதற்கும் பயன்படுத்தியுள்ளோம்.

- 1970களில் துவங்கி இதுவரையில் தமிழகத்தில் தொழிலாளர்கள், விவசாயிகளுடைய வர்க்கக் கோரிக்கைகளுக்காக ஏராளமான இயக்கங்களை நடத்தியுள்ளோம். தொழிலாளர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளுக்காகவும், உரிமைகளுக்காகவும் கிராமப்புறங்களில் நிலத்திற்காக, குத்தகை விவசாயிகளின் உரிமைகளைக் காக்க, விவசாயத் தொழிலாளர்களின் கூலி உயர்வுக்காக வீரம் செறிந்த பல போராட்டங்களை இக்காலத்தில் கட்சியும், வர்க்க வெகுஜன அமைப்புகளும் நடத்தியுள்ளன. இத்தகைய இயக்கங்களை திமுக அல்லது அதிமுக அரசுகள் ஒடுக்கிட முயற்சி எடுத்த போது நமது கட்சியும், வர்க்க வெகுஜன அமைப்புகளும் உறுதியோடு எதிர்த்து போராடியுள்ளன. பல தியாகங்களையும் செய்துள்ளன.

- உழைக்கும் வர்க்கத்தினரின் நலன்களைப் பாதுகாப்பதற்காக நடத்திய இயக்கங்களோடு தீண்டாமை ஒழிப்பிற்காகவும், பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராகவும் பல போராட்டங்களை நடத்தியுள்ளோம். இத்தகைய போராட்டங்கள் சட்டமன்றத்திற்கு வெளியே மாநிலம் முழுவதும் நடைபெற்றபோது தொழிலாளர்கள்/விவசாயிகள் உள்ளிட்ட அனைத்துப்பகுதி மக்களுடைய போராட்டங்களை ஆதரித்து சட்டமன்றத்தில் குரலெழுப்பியதோடு சில பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும் கடந்த 40 ஆண்டு காலமாக சட்டமன்றத்தை நாம் பயன்படுத்தி இருக்கிறோம். மத்திய, மாநில அரசுகளின் கொள்கைகளை அம்பலப்படுத்துவதற்கும், மக்கள் நலனை முன்னெடுத்துச் செல்வதற்கும் சட்டமன்றம் பயன்பட்டுள்ளது.

- இருப்பினும் இடது ஜனநாயக அணியை உருவாக்கும் பணியிலும், கட்சியை பலப்படுத்துவதிலும் ஏற்பட்ட முன்னேற்றம் என்ன என்று நாம் பரிசீலிக்க வேண்டியுள்ளது. இடது ஜனநாயக அணியை உருவாக்குவதும், கட்சியின் சுயேச்சையான பலத்தை அதிகரிப்பதும் பாதிப்புக்குள்ளானது பற்றி மத்தியக்குழு ஆவணம் கீழ்க்கண்டவாறு சுட்டிக்காட்டுகிறது.

“நடைமுறையில் நம்முடைய உடனடிக் கடமையில் பிரதானமாக மூழ்கிப்போவது என்பது அன்றைய சூழல் கோரும் உடனடி அரசியல் தேர்தல் கடமைகளை ஆற்றுவதையும் அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்த கட்சியின் சுயேட்சையான செயல்பாடுகளை மேம்படுத்துவது மற்றும் இடது ஜனநாயக சக்திகளின் போராட்டங்களை முன்னெடுப்பது என்ற நமது அரசியல் நடைமுறை உத்தி வரையறுத்துள்ள அடிப்படைக் கடமைகளை ஆற்றுவதையும் இணைப்பில்லாது துண்டித்து விடுகின்றது”. (ஐக்கிய முன்னணி தொடர்பான அரசியல் நடைமுறை உத்தி குறித்த ஆய்வு, 17 ஆவது காங்கிரஸ்)

அகில இந்திய அளவில் இடது ஜனநாயக முன்னணி கட்டும் கடமை பின்தள்ளப்பட்ட நிலை, தமிழகத்தில் அதற்கான முன்முயற்சி எடுப்பதற்கு உந்துதலாக இல்லை.

கட்சியின் சொந்த பலத்தை அதிகரிப்பது

3.110 இடது ஜனநாயக அணியை உருவாக்குவதற்கு அடிப்படை, பலமான கட்சியைக் கட்டுவதாகும். “தொழிலாளி வர்க்க கட்சியின் பிரம்மாண்டமான வளர்ச்சியில்லாமல் இடது ஜனநாயக அணியை கட்ட முடியாது” என சால்கியா பிளீனம் சுட்டிக்காட்டியுள்ளது.

3.111 கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அமைப்புகளின் சுயேட்சையான இயக்கம், வர்க்க மற்றும் மக்கள் பிரச்சனைகள் மற்றும் அரசியல் பிரச்சனைகள் மீது நாம் தேர்தல் உடன்பாடு வைத்துக் கொண்ட பிராந்திய முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ கட்சிகளுடன் (திமுக, அதிமுக) கூட்டு இயக்கம் ஆகியவை ஒன்றுடன் ஒன்று இணைந்தவை, நமது வளர்ச்சிக்கு அடிப்படையானவை.

3.112 நமது கட்சி மற்றும் வர்க்க வெகுஜன அமைப்புகளின் சுயேச்சையான இயக்கங்கள் மற்றும் நிறை, குறைகளை மாநில மாநாடுகளிலும், மாநிலக்குழுக் கூட்டங்களிலும் தொடர்ந்து பரிசீலித்து வருகிறோம். 21வது மாநில மாநாட்டிலும் பரிசீலிப்போம்.

3.113 வர்க்க மற்றும் வெகுஜன அமைப்புகளின் ஒன்றுபட்ட இயக்கங்களும், கட்சி அளவில் திமுக அல்லது அதிமுகவுடன் கூட்டு இயக்கங்களும் அக்கட்சிகளின் பின்னால் உள்ள மக்கள் பகுதிகளை நமது கட்சி அணுக வழிவகுக்கும். ஆனால் அனுபவம் என்ன? இந்த இரு கட்சிகளின் தலைமையிலான தொழிற்சங்கங்கள் சில நேரங்களில் கூட்டு இயக்கங்களுக்கு வந்துள்ளன. தேர்தல் நெருங்குகிற போது தேர்தலை மனதில் வைத்து இக்கட்சிகள் அரிதாக சில கூட்டு இயக்கங்களுக்கு வந்துள்ளன. தேர்தலில் தொகுதி உடன்பாட்டைப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடிக்கவே இக்கட்சிகள் முனைப்புக் காட்டியுள்ளன. ஆனால் “பொதுவாக மக்கள் பிரச்சனைகளில் கூட்டான இயக்கத்திற்கு வருவதில் திமுக, அஇஅதிமுக போன்ற கட்சிகள் பெரும்பாலும் அக்கறை காட்டுவதில்லை என்பதே அனுபவமாகும்” என்று கட்சியினுடைய 20வது மாநில மாநாடு திமுக, அதிமுக ஆகிய கட்சிகளின் அணுகுமுறை குறித்து கூறியுள்ளது.

3.114 1977ல் துவங்கி (1996 தவிர) அடுத்தடுத்து திமுக அல்லது அதிமுகவுடன் சட்டமன்றத் தேர்தலில் தொகுதி உடன்பாடு செய்து போட்டியிட்டிருக்கிறோம். இக்கட்சிகள் ஆட்சிக்கு வந்த பிறகு அவர்கள் கடைப்பிடித்த மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்து இயக்கங்கள் நடத்தியிருக்கிறோம். ஆனாலும், திமுக அதிமுக அரசுகள் கடைபிடித்த மக்கள் விரோத கொள்கைகள் மற்றும் தவறான அரசியல் அணுகுமுறை குறித்து பல நேரங்களில் கொள்கை ரீதியாக நாம் வேறுபடுத்தி காட்டவில்லை. விமர்சிப்பதிலும் சில தருணங்களில் தயக்கம் இருந்துள்ளது. ஏற்கனவே 17வது கட்சிக் காங்கிரஸ் சுட்டிக்காட்டிய அடிப்படையில் தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் எப்போதும் கூட்டு மேடையாகவே இருப்பதால், நமது நிலைபாடுகளை மக்கள் முன் எடுத்து வைப்பதிலும் சிக்கல்கள் இருந்தன. இவையெல்லாம் கட்சியின் வளர்ச்சிக்கு உதவவில்லை.

மாநிலக் கட்சிகளின் அணுகுமுறை மாற்றம்

3.115 திமுக, அதிமுக ஆகிய கட்சிகள் பிராந்திய முதலாளிகளின் நலன்களை பிரதிபலிக்கக்கூடிய கட்சிகள் என்பது நமது நிர்ணயிப்பு. மத்திய அரசு 1990களின் துவக்கத்தில் தாராளமயக் கொள்கையை அமலாக்க துவங்கிய பிறகு பிராந்திய முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ கட்சிகளின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டது.

3.116 "முதலாளித்துவத்தின் விரிவாக்கம் காரணமாக பிரதேச முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ வர்க்கங்களை பிரதிநிதித்துவம் செய்த பிராந்தியக் கட்சிகளின் அணுகுமுறையில் ஒரு மாற்றம் வந்துள்ளது. அந்நிய மூலதனம் குறித்த அவர்களது அணுகுமுறை மாறியுள்ளது; அவர்கள் தாராளமயக் கொள்கைகளுக்கு ஆதரவாக மாறியுள்ளனர்; ஏனென்றால் பிராந்திய முதலாளித்துவ பகுதியினர் அந்தக் கொள்கைகளில் தமது நலன்களை மேம்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகளைக் காண்கின்றனர்." (அரசியல் தீர்மானம், 17 ஆவது கட்சிக் காங்கிரஸ், 2002)

3.117 "உலகமயமாக்கலின் செல்வாக்கால் நவீன தாராளமயக் கொள்கைக் காலகட்டத்தில் பிராந்திய முதலாளிகளில் சில பகுதியினர் பெருமுதலாளிகளின் அணியில் சேர்ந்து விட்டனர். மேலும் பெரு முதலாளிகளுக்கும் ஏனைய முதலாளிகளுக்கும் இடையேயான முரண்பாடும் மட்டுப்பட்டுள்ளது. இதன் காரணமாக பிராந்திய முதலாளிகளை பிரதிநிதித்துவம் செய்யும் பிராந்தியக் கட்சிகள் நவீன தாராளமயக் கொள்கைகளை ஆதரிப்பவர்களாக மாறியுள்ளதையே நாம் காண்கிறோம். சமீப காலமாக இந்தக் கட்சிகள் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிரான எந்த பொதுமேடைக்கும் வர விரும்புவதில்லை. மேலும் அவர்கள் கிராமப்புற செல்வந்தர்களின் கூட்டத்தையும் பிரதிநிதித்துவம் செய்வதால் ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் குறித்த அவர்களது அணுகுமுறை நமது அணுகுமுறையிலிருந்து மாறுபட்டு உள்ளது. மேலும் அவர்கள் தங்களுக்கு உகந்த நிலையில் காங்கிரசோடோ பாஜகவோடோ இணைந்து கொள்ளும் நிரந்தரமான சந்தர்ப்பவாதத்தோடே உள்ளனர். இவையெல்லாம் இருந்தபோதும் நாம் அவர்களை தேசிய அளவில் பொதுவான மாற்றுக் கொள்கைகளின் அடிப்படையில் ஒன்றிணைப்பதற்கு தொடர்ந்து முயலும் உத்தியைக் கடைப்பிடித்து வந்துள்ளோம். இது எதார்த்தத்திற்கு மாறானதும் தவறானதுமென நிரூபணம் ஆகியுள்ளது". (நகல் அரசியல் நடைமுறை உத்தி - மத்தியக்குழு ஆவணம்)

3.118 இதன் காரணமாகவே தமிழகத்தில் இந்த இரண்டு கட்சிகளும் ஆட்சியில் இருக்கிறபோது மத்திய அரசு கடைபிடிக்கின்ற நவீனதாராளமயக் கொள்கையை மாநிலத்திலும் அமலாக்கி வருகிறார்கள். மத்திய அரசிலும் பங்கேற்று இக்கொள்கைகளின் அமலாக்கத்தில் பங்களிப்பு செய்து வருகிறார்கள். இது குறித்து நமது கட்சியின் 15வது மாநில மாநாட்டில் துவங்கி (1995) தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

3.119 "இக்காலத்தில் தமிழகத்தில் ஆட்சியில் இருந்த திமுக, அதிமுக கட்சிகள் மத்திய அரசின் தாராளமயக் கொள்கைகளையே பின்பற்றி வந்துள்ளன. இதன் விளைவாக சகல பகுதி மக்களும் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர். மத்திய மாநில ஆட்சியாளர்களின் தவறான பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக தமிழகத்தில் உள்ள பிரதான தொழில்கள் அனைத்தும் குறிப்பாக, சிறு தொழில்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளன." (2002 - 17வது மாநில மாநாடு) நாகையில் நடைபெற்ற 20வது மாநில மாநாடும் "அதிமுக அரசும், திமுக அரசைப் போலவே மத்திய அரசின் தாராளமயக் கொள்கையை தங்குதடையின்றி அமலாக்கி வருகிறது" என சுட்டிக்காட்டியது.

நமது கட்சியின் சுயேச்சையான பாத்திரம்

3.120 திமுக, அதிமுக ஆகிய இரண்டு கட்சிகளும் மத்திய அரசு கடைபிடிக்கக்கூடிய நவீன தாராளமயப் பொருளதாரக் கொள்கையை தமிழகத்தில் அமலாக்கி வருவதோடு, ஊழல்களிலும், முறைகேடுகளிலும் ஈடுபட்டு வருகின்றன. இவ்விரண்டு கட்சிகளில் ஏதாவது ஒன்றுடன் நாம் தொகுதி உடன்பாடு வைத்துக் கொள்வதால் இந்த கட்சிகளின் ஆட்சியின் மீது அதிருப்தியுறும் மக்கள் நமது கட்சியை மாற்றாக பார்ப்பதில்லை. இதனாலும் நமது வாக்குபலம் குறைந்து வந்திருக்கிறது.

3.121 இதனால், திமுக, அதிமுக கட்சிகளுடன் நாம் தொகுதி உடன்பாடு கொள்கிறபோது, நாம் போட்டியிட ஒதுக்கும் தொகுதிகளின் எண்ணிக்கையை குறைத்தே வந்திருக்கிறார்கள். 1967ல் நாம் திமுகவுடன் தொகுதி உடன்பாடு கண்டு 5 நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டோம். அடுத்தடுத்து தொகுதிகளை குறைத்து 2 அல்லது 1 எனக்கூறி 2014ல் உடன்பாடே வேண்டாம் என்ற நிலைக்கு அதிமுக சென்றது.

3.122 1985ம் ஆண்டு நடைபெற்ற சேலம் மாநில மாநாட்டு அறிக்கை நமது கட்சியின் பலம் பற்றி கீழ்க்கண்டவாறு கூறுகிறது: "நமது கட்சி 4வது சக்தியாக இருக்கிறது. வரிசை எண்ணிக்கையில் 4வது இடத்தில் இருக்கலாம். ஆனால், முதலாளித்துவ கட்சிகளுக்கு (அதிமுக, திமுக, காங்கிரஸ்) வெகு தூரத்தில் உள்ள 4வது கட்சியாக இருக்கிறோம்".

3.123 மாநிலத்தில் அடுத்தடுத்து அதிமுக, திமுக எதிர்ப்பு நிலை எடுத்த பாட்டாளி மக்கள் கட்சி, தேமுதிக, மதிமுக போன்ற கட்சிகள் உருவான பிறகு, அரசியல் கட்சிகளின் பலத்தின் அடிப்படையில் நாம் பின்னுக்குத் தள்ளப்பட்ட நிலைமை உருவானது.

3.124 1967ல் காங்கிரஸ் தோற்று திமுக ஆட்சிக்கு வந்தது. திமுக ஆட்சியின் தொழிலாளர் விரோத, மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்து 1970கள் முழுவதும் நமது கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அமைப்புகள் நடத்திய போர்க்குணமிக்க பல இயக்கங்களால் தொழிலாளர்கள், விவசாயிகள், வாலிபர்கள், மாணவர்கள், பெண்கள், அறிவு ஜீவிகள் என அனைத்து பகுதி மக்களையும் ஈர்க்கக்கூடிய இயக்கமாக நமது கட்சி இருந்தது. ஆனால், 1990களிலும் அதற்குப் பிறகும் திமுக, அதிமுக மீது அதிருப்தியுற்றவர்களை 1970களைப் போல் ஈர்க்க முடியவில்லை.

3.125 நமது கட்சியின் சொந்த பலமும், அரசியல் செல்வாக்கும் குறைந்ததற்கு ஒரு காரணம், கடந்த 40 ஆண்டுகளாக திமுக, அதிமுகவுடன் தொடர்ந்து உடன்பாடு கொண்டதாகும். இத்துடன் திராவிட கருத்தியலை தத்துவார்த்த ரீதியாக விமர்சிக்கத் தவறியதும் ஒரு காரணம். திராவிடக் கட்சிகளுடனான நமது ஐக்கிய முன்னணி உத்தி என்பது, கூட்டு இயக்கங்கள்/ போராட்டங்களாகப் பரிணமிக்காமல் தேர்தல் கால உடன்பாடாக சுருங்கிப் போனதும், நம்மை வேறுபடுத்திக் காட்டுவதில் ஏற்பட்ட குறைபாடுகளும் நமது சுயேச்சையான பாத்திரத்தை பாதித்திருக்கிறது. கட்சியின் சொந்த பலமும் செல்வாக்கும் விரிவடையாததற்கு அரசியல், ஸ்தாபனம் உள்ளிட்ட இதர காரணங்களும் அடங்கும்.

3.126 தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகள் அமல்படுத்தப்பட்ட பிறகு அவற்றை எதிர்த்து நாம் தொடர்ச்சியாக போராடி வந்திருக்கிறோம். ஆயினும், இக்கொள்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களை திரட்டுவதில் பலவீனம் தொடர்கிறது. அதேபோன்று வகுப்புவாதத்திற்கு எதிரான போராட்டத்தையும் திறன்மிக்க வகையில் நடத்த வேண்டியுள்ளது. நாடாளுமன்றவாதம் கட்சியின் புரட்சிகர குணாம்சத்தில் அரிப்பை ஏற்படுத்துகிறது. எனவே, இந்த மூன்று அம்சங்கள் குறித்து நமது புரிதலை மேம்படுத்த வேண்டியுள்ளது.

தாராளமயப் பொருளாதாரக் கொள்கையை எதிர்கொள்வது

3.127 தாராளமயப் பொருளாதாரக் கொள்கைக்கு எதிராகவும், முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ அரசுக்கு எதிராகவும் தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் மக்களைத் திரட்டி வலுவான இயக்கத்தை நடத்துவதோடு சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களையும், தத்துவார்த்தப் போராட்டங்களையும் நடத்துவதன் மூலமே கட்சியைப் பலப்படுத்த முடியும்.

3.128 இதற்கு நவீன தாராளமய பொருளாதாரக் கொள்கையின் அமலாக்கம் பல்வேறு வர்க்கங்களில் ஏற்படுத்தியுள்ள ஆழமான மாற்றங்களையும், தாக்கங்களையும் ஆய்வு செய்ய வேண்டும். அதனப்படையில் சரியான முழக்கங்களையும், உத்திகளையும் உருவாக்கிடாமல் தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய பகுதி மக்களுடைய இயக்கங்களை உருவாக்குவது இயலாது. இத்தகைய ஆய்வுகளை நாம் இதுவரை செய்திடவில்லை. எதிர்காலத்தில் தாராளமயப் பொருளாதாரக் கொள்கை அமலாக்கத்தினால் ஏற்பட்டுள்ள தாக்கங்களை, பாதிப்புகளை, விளைவுகளை ஆய்வு செய்து கோரிக்கைகளை உருவாக்கி, வலுவான இயக்கத்தினை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

வகுப்புவாதத்தை எதிர்கொள்வது

3.129 வகுப்புவாதத்தை எதிர்த்து இயக்கம் நடத்த வேண்டுமென்று கட்சியின் அகில இந்திய மாநாடும், மாநில மாநாடுகளும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. தமிழகத்தில் வகுப்புவாதத்திற்கு எதிராக சில முயற்சிகளை மேற்கொண்டிருந்தாலும் அது போதுமானதல்ல.

3.130 தமிழகத்தில் குமரி மாவட்டத்திலும், கோவை, திருப்பூர் ஆகிய மேற்கு மாவட்டங்களிலும், மாநிலத்தின் வேறு சில பகுதிகளிலும் பாஜக வளர்ந்துள்ளது. ஏற்கனவே திமுக, அதிமுகவோடு உடன்பாடு கண்டு தேர்தலில் போட்டியிட்டது அந்தக் கட்சிகளின் அணிகளோடு தொடர்பு கொள்ள பாஜகவுக்கு வாய்ப்பளித்தது. 2014ல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேமுதிக, மதிமுக, பாமக, சில சாதிய கட்சிகள் மற்றும் சாதிய அமைப்புகளோடு பாஜக உடன்பாடு கண்டு போட்டியிட்டது. பல இடங்களில் மதவெறியை உருவாக்கக் கூடிய அடிப்படையில் ஆர்எஸ்எஸ் மற்றும் இந்துத்வா அமைப்புகளின் செயல்பாடுகள் உள்ளன. தற்போது மத்தியில் மோடி தலைமையில் ஆட்சி அமைந்துள்ளதைப் பயன்படுத்தி தங்களை பலப்படுத்திக் கொள்ள இந்துத்வா அமைப்புகளும், பாஜகவும் முயற்சிக்கின்றன.

3.131 மேலும் கல்வி, பண்பாடு, ஊடகம் போன்ற பல்வேறு துறைகளில் இந்துத்துவா சக்திகள் கருத்தியல் ரீதியில் தீவிரமாகப் பணியாற்றி வருகிறார்கள். எனவே அரசியல், சமூகம், பண்பாடு உள்ளிட்ட அனைத்து தளங்களிலும் வகுப்புவாதத்திற்கு எதிரான போராட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். நவீன தாராளமயக் கொள்கைகளாலும், முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ அமைப்பினாலும் பாதிக்கப்படும் மக்களின் கோபத்தினைத் திசைதிருப்புவதற்காக வகுப்புவாதம் ஆளும் வர்க்கங்களால் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. எனவே புதிய தாராளமயக் கொள்கைகளுக்கு எதிரான போராட்டமும் வகுப்புவாதத்திற்கெதிரான போராட்டமும் ஒன்றோடொன்று இணைந்தது. வகுப்புவாதத்திற்கு எதிரான போராட்டத்தையும், மக்களின் வாழ்வாதாரங்களுக்கான போராட்டத்தையும் இணைத்து நடத்துவதன் மூலம் தான் வகுப்புவாத சக்திகளுக்கெதிரான போராட்டத்தில் பரந்துபட்ட மக்கள் திரளை ஈர்க்க முடியும்.

3.132 பெரும்பான்மை வகுப்புவாத நடவடிக்கை சிறுபான்மை வகுப்புவாதத்தை தூண்டிவிடுகிறது. சிறுபான்மை வகுப்புவாதத்தையும் எதிர்த்து நாம் போராட வேண்டும். வகுப்புவாத அபாயத்தை எதிர்த்து போராட பரந்த மதச்சார்பற்ற-ஜனநாயக சக்திகளின் ஒற்றுமையை உருவாக்கிட வேண்டும். இதை தேர்தலுக்கான ஒரு மேடையாக பார்க்கக் கூடாது.

3.133 நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக பெரும்பான்மை பெற்று அதிகாரத்திற்கு வந்திருப்பது இந்திய அரசியலில் வலதுசாரித் திருப்பம் ஏற்பட்டுள்ளதை எடுத்துக்காட்டுகிறது என கட்சியின் மத்தியக்குழு கூறியுள்ளது. பாஜக மற்றும் இந்துத்துவா அமைப்புகளின் வகுப்புவாத நடவடிக்கைகளை எதிர்த்து தமிழகத்தில் இடதுசாரி, ஜனநாயக, மதச்சார்பற்ற சக்திகளோடு இணைந்து வலுவான இயக்கத்தை நடத்திட வேண்டும்.

நாடாளுமன்ற வாதம்

3.134 நாடாளுமன்றவாதம் என்பது ஒரு சீர்திருத்த பார்வை; அது கட்சியின் செயல்பாட்டை தேர்தல் பணிகளில் மட்டுமே முடக்குகிறது. கட்சியின் முன்னேற்றத்தைத் தேர்தல் போராட்டத்தின் மூலமே சாதித்துவிட முடியும் என்ற மாயையை உருவாக்குகின்றது. இது மக்கள் திரள் இயக்கங்களை உருவாக்குவது, கட்சியைக் கட்டியமைப்பது, தத்துவார்த்தப் போராட்டத்தை நடத்துவது ஆகியவற்றை புறக்கணிப்பதற்கு இட்டுச் செல்கிறது. வெகுஜன இயக்கங்களையும், அரசியல் போராட்டங்களையும் பலப்படுத்தக்கூடிய அடிப்படையில் நாடாளுமன்ற நடவடிக்கைகளையும், நாடாளுமன்றத்திற்கு வெளியே நடைபெறும் போராட்டங்களையும் இணைத்திட வேண்டும்.

வர்க்க மற்றும் மக்கள் பிரச்சனைகளில் கூட்டு இயக்கம்

3.135 நமது கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அமைப்புகளின் சார்பாக வர்க்க மற்றும் மக்கள் பிரச்சனைகளில் சுயேட்சையான இயக்கம் நடத்துவதோடு கூட்டு இயக்கங்களுக்கும் திட்டமிட வேண்டும்.

3.136 இடதுசாரி கட்சிகள் கூட்டு இயக்கம் நடத்துவதோடு இடதுசாரி கட்சிகள் தலைமையிலான வர்க்க, வெகுஜன அமைப்புகளுடைய கூட்டு இயக்கத்திற்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

3.137 தாராளமயப் பொருளாதார கொள்கைகளுக்கு எதிராக, வகுப்புவாதத்திற்கு எதிராக, மக்கள் பிரச்சனைகளுக்காக, சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, தலித் - பழங்குடி - சிறுபான்மை மக்கள் கோரிக்கைகளுக்காக சுயேச்சையான இயக்கங்களை நடத்துவதோடு கூட்டு இயக்கங்களுக்கும் பொருத்தமாகத் திட்டமிட வேண்டும்.

1.38 எதிர்காலக் கடமைகள்

1. 21வது அகில இந்திய மாநாட்டு முடிவை மாநில நிலைமைகளுக்குப் பொருத்தி இடது ஜனநயாக அணியின் திட்டத்தை உருவாக்குவது. இடது ஜனநாயக அணியில் திரட்ட வேண்டிய சக்திகளை அடையாளம் கண்டு இடது ஜனநாயக முன்னணியை உருவாக்குவது, பல்வேறு வர்க்கங்கள் மற்றும் உழைக்கும் மக்களை அதன் பின்னால் திரட்டுவது.

2. கட்சியின் சுயேச்சையான நடவடிக்கையை அதிகரிப்பது. மேலும் கட்சியின் பலத்தையும், மக்கள் செல்வாக்கையும் விரிவுபடுத்துவதற்கும், வலுப்படுத்திடுவதற்கும் முன்னுரிமை அளிப்பது.

3. தாராளமய பொருளாதாரக் கொள்கை ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை ஆய்வு செய்து அதனடிப்படையில் தொழிலாளிகள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை, எளிய நடுத்தர வர்க்கத்தினர் உள்ளிட்டோரின் வர்க்கப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு திட்டவட்டமான உத்திகளையும் முழக்கங்களையும் உருவாக்குவது.

4. இந்துத்துவா சக்திகளையும், மதவெறி கருத்தாக்கங்களையும் எதிர்த்து அரசியல், தத்துவார்த்த, ஸ்தாபன, பண்பாட்டுத் தளங்களில் போராட்டங்களை நடத்துவது.

5. அடையாள அரசியலை எதிர்ப்பதோடு, சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக உறுதியாக இயக்கம் நடத்துவது, பெண்களின் உரிமைக்காகவும், பெண்களுக்கு எதிராக இழைக்கப்படக் கூடிய

அநீதியை எதிர்த்தும் இயக்கம் நடத்துவதற்கு முக்கியத்துவம் அளிப்பது, சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான வலுவான இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதோடு தலித், பழங்குடி, சிறுபான்மை மக்கள் பிரச்சனைகளிலும் கட்சி வலுவாக தலையிடுவது.

6. வர்க்க, வெகுஜன அமைப்புகள் கூட்டு இயக்கங்களை நடத்துவதற்கு வழிகாட்டுவது. மக்கள் பிரச்சனைகள் மீது ஒன்றுபட்ட இயக்கத்தையும், கூட்டு மேடையையும் உருவாக்குவது.

7. தேவைப்படும் சூழல்களில் கட்சி நலனை பாதுகாக்கக் கூடிய, இடது ஜனநாயக சக்திகளை திரட்டுவதற்கு உதவுகிற வகையில் நமது கட்சி பிராந்திய கட்சிகளோடு தேர்தல் உடன்பாட்டை மேற்கொள்வது. ஐக்கிய முன்னணி உத்தி குறித்து கட்சியின் 17வது அகில இந்திய மாநாட்டின் வழிகாட்டுதலையும் கவனத்தில் எடுப்பது.

8. கட்சியின் அரசியல் நடைமுறை உத்தியை அமலாக்குவதற்கு உகந்த முறையில் ஸ்தாபன செயல்பாட்டினை மேம்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது. 1. திராவிட இயக்கத்தின் பாதகமான அம்சங்களை எதிர்த்த தத்துவார்த்த போராட்டத்தை நடத்துவது. 2. வர்க்க மற்றும் மக்கள் இயக்கங்களை நடத்துவதோடு இவ்வியக்கங்களில் பங்கேற்பவர்கள் மற்றும் வர்க்க வெகுமக்கள் அமைப்புகளின் உறுப்பினர்களை அரசியல்படுத்த கவனம் செலுத்துவது, 3. கட்சியின் அனைத்து நிலையிலுமுள்ள உறுப்பினர்களின் தத்துவார்த்த உணர்வை உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்வது, 4. கட்சி அணிகளுடைய வேலை பாணியில் மாற்றத்தை உருவாக்குவது. 5. வர்க்க, வெகுஜன அமைப்புகளினுடைய சுயேச்சையான செயல்பாட்டை உத்தரவாதப்படுத்துவது.

9. 21-வது கட்சிக் காங்கிரஸ் புதிய அரசியல் - நடைமுறை உத்தியினை தீர்மானித்து ஏற்ற பின், கட்சி அமைப்பு குறித்த பிளீனம் நடத்துவது என மத்தியக்குழு முடிவு செய்துள்ளது. அகில இந்திய அளவிலான பிளீனத்திற்குப் பிறகு அதனுடைய அனுபவத்தில் மாநிலத்தில் பிளீனம் நடத்திட வேண்டுமென மாநிலக்குழு தீர்மானித்துள்ளது.

இயக்கங்கள் - போராட்டங்கள் - அரசியல் பணிகள்

4.1 கட்சியின் 20வது மாநில மாநாட்டை நடத்தும் பொறுப்பினை ஏற்று நாகை மாவட்டக்குழு 2012, பிப்ரவரி 22 - 25ல் நாகப்பட்டிணத்தில் மாநாட்டை சிறப்பாக நடத்தியது. அகில இந்திய மாநாடு 2012 ஏப்ரல் 4-9 கேரள மாநிலம் கோழிக்கோட்டில் எழுச்சியாக நடந்தது.

4.2 மக்களின் வாழ்க்கையை, உழைப்பைச் சூறையாடுகிற தாராளமய, தனியார்மய, உலகமய கொள்கைகளுக்கு எதிராக உறுதியான போராட்டங்களை நடத்துவது. வகுப்புவாத - இந்துத்துவா சக்திகளை எதிர்த்து போராடுவதோடு, சிறுபான்மை வகுப்புவாதம் மற்றும் தீவிரவாதத்தை முறியடிப்பது குறித்தும் கட்சி விழிப்புடன் செயலாற்றுவது. இந்திய - அமெரிக்க கேந்திர கூட்டு மற்றும் ஏகாதிபத்திய தலையீடுகளை எதிர்த்தும் சுயேச்சையான வெளிநாட்டு கொள்கையை பின்பற்ற வலியுறுத்தியும் மக்களை அணிதிரட்டுவது. தலித் - பழங்குடியினர், பெண்கள், சிறுபான்மையினர் மற்றும் இதர ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்கான போராட்டங்களை நடத்துவது. மாற்றுக் கொள்கைகளின் பின்னால் விரிந்து பரந்த மக்களை அணிதிரட்டுவது - முதலாளித்துவ கட்சிகளின் செல்வாக்குப் பிடியில் உள்ள மக்களை வென்றெடுக்க அவர்களது பிரச்சனைகளில் தலையீடு செய்வது என கட்சியின் அகில இந்திய மாநாடு கடமைகளை முன்னிறுத்தியது.

4.3 உள்ளூர் பிரச்சனைகளுக்கான போராட்டங்களை நடத்துவது - கிளர்ச்சிப் போராட்டங்களில் ஏற்படும் தொடர்புகளை அரசியல்படுத்தி கட்சியை விரிவுபடுத்துவது - வர்க்க சக்திகளின் சேர்க்கையில் நமக்கு சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் களத்தில் செயலாற்றுவது. நிலம், வேலை, உணவு, குடிமனை, மனைப்பட்டா, கல்வி, மருத்துவம், சுகாதாரம், சுற்றுச்சூழல் என மக்கள் சந்திக்கும் பிரச்சனைகளில் மக்களை களமிறக்கி தொடர்ச்சியாகவும், தீவிரமாகவும் கிளர்ச்சிப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வது. நகர்ப்புற - கிராமப்புற உழைப்பாளிகள், அமைப்புசாரா தொழிலாளர்கள், தலித் - பழங்குடி - பெண்கள் - சிறுபான்மையினர், நலிவுற்றோர் மற்றும் விளிம்பு நிலை மக்களின் நலன் - வாழ்வுரிமை பிரச்சனைகளில் நமது தொடர்ச்சியான தலையீடுகளை உறுதி செய்வது என கட்சியின் 20வது மாநில மாநாடு அறைகூவல் விடுத்தது.

4..4 கடந்த 3 ஆண்டுகளில் மேற்கண்ட கடமைகளை முன்னெடுத்துச் செல்வதில் நமது தலையீடுகள், கிளர்ச்சிகள், போராட்டங்கள் எண்ணற்றவை - அதனை பரிசீலித்து எதிர்கால இலக்குகளை தீர்மானிப்போம்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு

4.5 இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி சொந்த நாட்டு மக்களைத் தாக்குவதாகச் சொல்லி சிரியா நாட்டின் மீது அமெரிக்கா தாக்குதல் தொடுக்க முனைந்தபோது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க போர் வெறியை எதிர்த்து 2013 செப்டம்பர் 5 அன்று கண்டனம் முழங்க அறைகூவல் விடுத்தோம். பரவலாக இயக்கம் நடந்தது.

4.6 அமெரிக்க போர்க்கப்பல் சென்னை துறைமுகத்திற்கு வந்ததை எதிர்த்து வடசென்னை துறைமுகம் பகுதியிலும், பாலஸ்தீன காஸா பகுதி மக்கள் மீது அமெரிக்க பின்புலத்துடன் இஸ்ரேல் கொடுந்தாக்குதல் நடத்தியபோது சென்னை மற்றும் சில மாவட்டங்களிலும் எதிர்ப்பை வெளிப்படுத்தினோம். பரவலாக சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டன.

4.7 தமிழக மீனவர்கள் துபாய் கடலில் அமெரிக்க கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதை எதிர்த்து 2012 ஜூலை 23 அன்று அமெரிக்க தூதரகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் மாநிலச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. தென்சென்னை - வடசென்னை மாவட்டத் தோழர்கள் பங்கேற்றனர். பங்கேற்பு குறைவு எனினும் உடனடித் தலையீடு என்பதால் பத்திரிகைகளில் செய்தி இடம் பெற்றது.

4.8 இந்திய- அமெரிக்க ராணுவ கூட்டினை பலப்படுத்துவது, அணுஉலை விபத்துக்களுக்கு பொறுப்பேற்க மறுப்பது, இந்திய சந்தையை அமெரிக்க நிறுவனங்களுக்கு திறந்து விடுவது, மருந்து உற்பத்தித்துறையில் காப்புரிமை சட்டங்களை பலவீனப்படுத்துவது உள்ளிட்ட பல நோக்கங்களுடன் 2015 ஜனவரி குடியரசு தினத்தன்று இந்தியா வந்த அமெரிக்க அதிபர் ஒபாமாவை எதிர்த்து இடதுசாரிக்கட்சிகளின் நாடு தழுவிய இயக்க அறைகூவலின் பகுதியாக அனைத்து மாவட்டங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஆர்ப்பாட்டத்தினரை காவல்துறை சில மையங்களில் கைது செய்து பின்னர் விடுவித்தது. சென்னையில் சிபிஎம், சிபிஐ, சிபிஐ-எம்எல்(லிபரேசன்), எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சிகள் சார்பில் அமெரிக்க தூதரகம் அருகில் வலுவான கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

4.9 இவை தவிர்த்து வேறு குறிப்பிடத்தக்க இயக்கங்கள் நடைபெறவில்லை. நடந்த இயக்கங்களிலும் பங்கேற்பு மிகவும் குறைவே. நமது கவனம் போதுமானதாக இல்லை. ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வும், பல துருவ உலகை நோக்கிய செயல்பாடுகளும் வலுப்பெற்று வருகிற நிலையில் ஏகாதிபத்தியங்களோடு நெருக்கமாக உள்ள நாடுகளுக்கும் - அந்த நாடுகளின்

மக்களுக்குமிடையே முரண்பாடுகள் தீவிரமடைந்து வருகிற சூழலில், தமிழகத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை - நடவடிக்கைகளை பரவலான மக்களிடம் எடுத்துச் செல்லும் கடமை நம்முன்னே உள்ளது . செப்டம்பர் 1 யுத்த எதிர்ப்பு தினம் போன்ற முக்கிய தினங்களில் வலுவான எதிர்ப்பு இயக்கங்கள் நடத்திட திட்டமிட்டு செயலாற்ற வேண்டியுள்ளது.

வகுப்புவாத எதிர்ப்பு

4.10 வகுப்புவாதத்தை எதிர்த்தும், மக்கள் ஒற்றுமையை வலியுறுத்தியும் பாபர் மசூதி இடிக்கப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவுற்றதை முன்னிறுத்தி மக்களிடையே பிரச்சார இயக்கம் நடத்திட அரசியல் தலைமைக்குழு அறைகூவல் விடுத்தது. தமிழகத்தில் 2012 டிசம்பர் 3 - 15 வரை இஸ்லாமிய மக்கள் திரளாக வாழும் மையங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்திட செய்த முடிவின்படி சில மையங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. துண்டுப்பிரசுர விநியோகம், சுவரொட்டி வெளியீடு பரவலாக நடந்துள்ளன.

4.11 நாடாளுமன்ற தேர்தலில் அரசியல் ஆதாயம் பெற இந்து வாக்கு வங்கியை கெட்டிப்படுத்தும் நோக்குடன் மதவெறியைத் தூண்டும் நடவடிக்கைகளையும், குஜராத் "வளர்ச்சி மாதிரி" மற்றும் இந்து ராஷ்டிரம் என்பதையும் முன்னிறுத்தி பாஜக செயல்படுவதை எதிர்த்து 2013 அக் 30ல் இடதுசாரிகள் முன்முயற்சியில் மதச்சார்பற்ற மாநில கட்சிகள் பங்கேற்புடன் 9 கட்சிகளின் சிறப்பு மாநாடு டெல்லியில் நடைபெற்றது. மாநாட்டு பிரகடனத்தை நாடு முழுவதும் எடுத்துச் செல்ல மாநாடு அறைகூவல் விடுத்தது. டெல்லி கூட்டத்தில் பங்கேற்ற அதிமுக தமிழகத்தில் நாம் கடிதம் எழுதி கேட்டும் முன்வரவில்லை. சிபிஐ தயங்கியது. எனவே நம் கட்சி சார்பில் பிரச்சாரத்திற்கு திட்டமிட்டோம். 2013 நவம்பர் 16,17 தேதிகளில் வீடுகள், கடைவீதிகள் தோறும் பல லட்சம் துண்டு பிரசுரங்கள், மோடி - குஜராத் - இந்தியா எனும் தலைப்பில் 2 லட்சம் சிறு பிரசுரங்கள் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டன. கூடுதலான கட்சிக் கிளைகள் இவ்வியக்கத்தில் களம் இறங்கின. இது வகுப்புவாதத்தை எதிர்த்து நடந்த ஒரு குறிப்பிடத்தக்க இயக்கமாகும். இதனைத் தொடர்ந்து சிபிஐ - சிபிஐ(எம்) இணைந்து முக்கிய நகரங்களில் வகுப்புவாத எதிர்ப்பு சிறப்பு மாநாடுகள் நடத்தவும் ஆலோசித்தோம் - அடுத்தடுத்து வந்த இதர பணிகள் காரணமாக தொடரவில்லை. கோவையில் 2014 பிப்ரவரியில் தோழர் ஏ.சவுந்தரராசன், பத்திரிகையாளர் மு.வீரபாண்டியன் கலந்து கொண்ட வகுப்புவாத எதிர்ப்புக்கருத்தரங்கு நடைபெற்றது.

4.12 குமரி மாவட்டத்தில் மாணவர்களின் கல்வித்தொகை உள்ளிட்ட பிரச்சனைகளை முன்னிறுத்தி கிறித்தவ, இந்து மக்களை மதரீதியாக பிளவுபடுத்தும் நடவடிக்கையை மேற்கொண்ட பாஜகவை எதிர்த்தும், மக்கள் ஒற்றுமையை வலியுறுத்தியும் மாவட்டம் தழுவிய பிரச்சார இயக்கமும், அக்டோபர் 22, 2013ல் நாகர்கோவிலில் தோழர் பிருந்தா காரத் பங்கேற்ற பொதுக்கூட்டமும் நடைபெற்றது. 5000க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இவ்வியக்கம் பொதுமக்களிடம் வரவேற்பினைப் பெற்றது.

4.13 உ.பி. உள்ளிட்ட வட மாநிலங்களிலும், கேரளம், கர்நாடகம் மாநிலங்களிலும் ஆர்.எஸ்.எஸ்., வி.ஹெச்.பி. ஸ்ரீராம் சேனா போன்ற இந்துத்துவ அமைப்புகளின் மதவெறிக் கலவரம் மற்றும் வன்முறை தூண்டும் நடவடிக்கைகளுக்கு எதிராக மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்கள், துண்டு பிரசுர விநியோகம், சுவரொட்டி வெளியிடுதல் போன்ற வடிவங்களில் நமது கருத்துக்கள் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

4.14 ஆர்.எஸ்.எஸ். வழிகாட்டலில் செயல்படும் பாஜகவின் ஆட்சி அமைந்துள்ளதை தொடர்ந்து இந்திய அரசியலில் ஒரு வலதுசாரி திருப்பம் ஏற்பட்டுள்ளது. பாஜக ஆட்சியில் இந்திய

அரசின் ஏகாதிபத்திய ஆதரவுக் கொள்கை பலப்படும்; அரசு இயந்திரம் இந்துத்துவ கொள்கை பரவலாக்கத்திற்கு பயன்படுத்தப்படும்; மதக்கலவர அரசியல் முன்னுக்குவரும்; உழைப்புச் சுரண்டலும், ஜனநாயகம் மதச்சார்பின்மை, மக்கள் ஒற்றுமை மீதான தாக்குதல்களும் அதிகரிக்கும்; எனவே பெரும்பான்மை - சிறுபான்மை வகுப்புவாத எதிர்ப்பு இயக்கங்களையும், ஜனநாயகம் - மதச்சார்பின்மை - தேசஒற்றுமை காக்கும் நடவடிக்கைகளையும், மக்களின் வாழ்வுரிமைக்கான போராட்டங்களோடு இணைத்து தொடர்ச்சியாகவும், வலுவாகவும் நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

இலங்கை தமிழர் பிரச்சனை - நமது தலையீடு

4.15 இலங்கையில் ராணுவத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான இறுதிக்கட்ட ராணுவ மோதலில் பல்லாயிரம் பேர் கொல்லப்பட்ட - மனித உரிமை மீறல் தொடர்பான குற்றங்கள் மீது சுயேச்சையான விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்கவும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மறுவாழ்வு மற்றும் அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைகள் எடுத்திடவும் இலங்கை அரசை நிர்ப்பந்திக்க - இந்திய அரசின் ராஜீய ரீதியான தலையீட்டை வலியுறுத்தி 2012 மார்ச் 5 அன்று சென்னை இலங்கை தூதரகம் முன்பு பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்தினோம். மாநிலச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இவ்வியக்கத்தில் தென்-வடசென்னை தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.182 பேரை காவல்துறை கைது செய்தது. பங்கேற்பு குறைவே எனினும் இவ்வியக்கம் இலங்கை தமிழ் மக்களுக்கு ஆதரவான அரசியல் இயக்கமாக நடைபெற்றது.

4.16 ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்த நிலையில் இலங்கையில் மனித உரிமை மீறல் குறித்த விசாரணை மற்றும் அரசியல் தீர்வு காண இலங்கையை இந்தியா வலியுறுத்தக் கோரி 2013 மார்ச் 20 அன்று சென்னையில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

4.17 தமிழீழம், ராஜபக்சேவுக்கு தூக்குத் தண்டனை, சர்வதேச விசாரணை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி தமிழீழ ஆதரவு அமைப்புகள், திராவிட இயக்கங்களின் தூண்டுதல் காரணமாக மாணவர் போராட்டங்கள் மாநிலம் முழுவதும் நடந்தன. இப்போராட்டத்திற்கு நிதி உதவி உட்பட அனைத்து உதவிகளும் தமிழ் தேசிய அமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் சார்பில் செய்யப்பட்டன. அஇஅதிமுக அரசும் ஆதரவான நிலையெடுத்து செயல்பட்டது. கட்சி நிலைபாட்டிலிருந்து நமது மாணவர் இயக்கம் மாநிலம் முழுவதும் துண்டு பிரசுரம், சுவரொட்டி, நுழைவாயில் கூட்டம், கருத்தரங்குகள், ஆர்ப்பாட்டம், மறியல் என பல வடிவங்களில் நமது கருத்துக்களை மாணவர்களிடையே எடுத்துச் சென்றது. சென்னை சாஸ்திரிபவன் முன்பு மாணவர்கள் முற்றுகையிட்டு கைதாகினர். மாணவர்களிடையே தனிமைப்படாமல் நமது அரசியல் நிலையை எடுத்துச் சென்றது குறிப்பிடத்தக்கது.

4.18 தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லையில் மீன்பிடிக்கும் போது தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும், உடமைகள் கைப்பற்றப்படுவதும் தொடந்து நிகழும் சம்பவங்களாக உள்ளன. அவ்வப்போது அரசின் தலையீட்டை வலியுறுத்தி கண்டன இயக்கங்கள் நடைபெறுகின்றன. ராமேஸ்வரம் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த மீன் பிடிக்கச் சென்ற 5 மீனவர்கள் மீது போதைப்பொருள் கடத்தல் வழக்கு புனையப்பட்டு, இலங்கை நீதிமன்றம் 5 பேருக்கும் தூக்கு தண்டனை விதித்தது. தூக்கு தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கும் கோரிக்கை தமிழகத்தில் வலுவாக எழுப்பப்பட்டது. நம் தரப்பில் உடனடியாக ராமேஸ்வரத்தில் மீனவர்கள் உட்பட திரளானோர் கலந்து கொண்ட கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர் கே.பி. கலந்து கொண்டார். முன்னதாக மீனவர் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற கண்டன இயக்கத்தில்

தோழர் அண்ணாதுரை கலந்து கொண்டார். அனைத்து தரப்பினரிடமிருந்து எழுந்த வலுவான எதிர்ப்பு மற்றும் அரசின் தலையீட்டினைத் தொடர்ந்து தூக்கு தண்டனையிலிருந்து 5 பேரும் விடுவிக்கப்பட்டனர். எனினும் நிரந்தர தீர்வு காண நடவடிக்கைகள் எடுக்க மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்த வேண்டியுள்ளது.

நவீன தாராளமயக் கொள்கை எதிர்ப்பும் மக்கள் கோரிக்கைகளுக்கான இயக்கங்களும்

4.19 மக்கள் வாழ்க்கையைச் சீரழிக்கும் நவீன தாராளமயக் கொள்கை, விலைவாசி உயர்வு, பேருந்து மற்றும் உத்தேச மின் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு ஆகியவற்றை எதிர்த்து கட்சியின் 20வது மாநில மாநாட்டு அறைகூவலுக்கேற்ப மத்திய - மாநில அரசு அலுவலகங்கள் முன்பு 2012 மார்ச் 27 அன்று பெருந்திரள் மறியல் போராட்டம் தமிழகமெங்கும் எழுச்சியாக நடைபெற்றது. பிரச்சாரத்தின்போது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானம் பல லட்சம் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. தெருமுனைக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள் உள்ளிட்ட வடிவங்களில் நடைபெற்ற பிரச்சாரத்தில் மாநிலக்குழு வெளியிட்ட சிறிய பிரசுரமும், (1,20,000 பிரதிகள்) மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. ஆண்களும், பெண்களுமாக சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை 371 மையங்களில் மறியலில் பங்கேற்கச் செய்ய முடிந்தது. நாகை 4400 பேரை திரட்டியது குறிப்பிடத்தக்கதாகும். வர்க்க, வெகுஜன அமைப்பு மற்றும் சிறுபகுதி கட்சிக்கு அப்பாற்பட்ட மக்களையும் பங்கேற்கச் செய்ய முடிந்த இயக்கமாக இவ்வியக்கம் நடைபெற்றது சிறப்புக்குரியதாகும்.

4.20 எதிர்ப்பை பொருட்படுத்தாமல் மின்கட்டண உயர்வுக்கான அறிவிப்பை அரசு வெளியிட்டதும் 2012 ஏப்ரல் 1 தொடங்கி மாநிலம் முழுவதும் கட்சி மற்றும் வர்க்க வெகுஜன அமைப்புகள் கண்டன இயக்கங்களை எழுச்சியாக பல வடிவங்களில் நடத்தின. பிரதான எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பை தெரிவித்தன. மக்கள் மத்தியில் வலுவான எதிர்ப்பு தொடர்ந்தது. இந்தப் பின்னணியில் ஓரளவு கட்டணக் குறைப்பை அஇஅதிமுக அரசு அறிவிக்க நேர்ந்தது.

மத்திய - மாநில பட்ஜெட், பெட்ரோல் டீசல் விலை உயர்வு எதிர்ப்பியக்கங்கள்

4.21 விலைகளை உயர்த்தி மக்கள் மீது சுமைகளை ஏற்றும் மத்திய - மாநில அரசுகளின் தவறான பொருளதாரக் கொள்கையை மக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில் 2012 மே 15-31 வரை இடைக்குழு வாரியாக தெருமுனைக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்திட மாநில செயற்குழு முடிவு செய்தது. இதன்படி மாநிலமெங்கும் 300க்கும் மேற்பட்ட மையங்களில் தெருமுனைக் கூட்டங்களும், 40 பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன. பரவலாக நமது கருத்துக்கள் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டன. இதனிடையே மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பெட்ரோல் விலையை லிட்டருக்கு ரூ. 7.50 உயர்த்தியது. இதனை எதிர்த்து மாநிலம் முழுவதும் தன்னெழுச்சியான எதிர்ப்பு இயக்கங்கள் கட்சி மற்றும் வர்க்க வெஜன அமைப்புகள் சார்பில் சாலைமறியல், ஆர்ப்பாட்டம் என நடைபெற்றன. மக்கள் மத்தியிலும் கடும் அதிருப்தி எழுந்தது. இந்தப் பின்னணியில் மே 31 அன்று நாடு தழுவிய எதிர்ப்பியக்கத்திற்கு இடதுசாரி கட்சிகள் அறைகூவல் விடுத்தன. அன்றைய தினம் தமிழகத்தில் கோவை, திருப்பூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் முழுமையாகவும், இதர மாவட்டங்களில் பகுதி அளவிலும் கடையடைப்பு நடந்தது. ஆட்டோ மற்றும் தனியார் போக்குவரத்து வாகனங்கள் இயங்கவில்லை. ரயில், சாலை மறியலில் இடதுசாரிக் கட்சிகள் மற்றும் வர்க்க வெகுஜன அமைப்புகளின் தலைவர்களும், தோழர்களும் பங்கேற்றனர். பெண்கள் உட்பட 15000க்கு மேற்பட்டோர் கைது

செய்யப்பட்டனர். குறிப்பிடத்தக்க அரசியல் இயக்கமாக இது நடந்திருந்தாலும் நாடு தழுவிய இயக்கத்தின் முக்கியத்துவத்திற்கேற்ப மாவட்டங்களில் நமது முயற்சிகள் இருந்ததா என்பது பரிசீலனைக்குரியது.

4.22 மாதர் அரங்கம் சார்பில் 2012 மே மாதம் மத்திய காங்கிரஸ் அரசின் மக்கள் விரோத கொள்கைகளையும், செயல்பாடுகளையும் கண்டித்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் இயக்கங்கள் 18 மாவட்டங்களில் பிரதான மக்கள் சந்திப்பு மையங்களில் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

டீசல் விலை உயர்வு - சிலிண்டர் கட்டுப்பாடு எதிர்ப்பியக்கம

4.23 மத்திய அரசு டீசல் விலையை லிட்டருக்கு ரூ. 5 உயர்த்தியதோடு, மானிய விலை சமையல் எரிவாயு சிலிண்டர் வருடத்திற்கு 6 மட்டுமே என்று கட்டுப்படுத்த முனைந்தது. கேந்திர துறைகளில் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிப்பது போல் சில்லரை வணிகத்திலும் 51 சதவிகிதம் நேரடி அந்நிய முதலீட்டை அனுமதிப்பது என்றும் அறிவித்தது. இதற்கு நாடு முழுவதும் பலத்த எதிர்ப்பு வெளிப்பட்டது. தமிழகத்தில் உடனடியாக கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகள் பரவலாக அனைத்து மாவட்டங்களிலும் கண்டனம் முழங்கின - எதிர்த்து சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டன. சில மாவட்டங்களில் குறைந்த பங்கேற்பு எனினும் மறியல் நடைபெற்றது. இதுபோன்ற உடனடி இயக்கங்களுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு.

4.24 இதனைத் தொடர்ந்து இடதுசாரி கட்சிகளின் சார்பில் 2012 செப்டம்பர் 20 அன்று நாடு தழுவிய முழுஅடைப்பு போராட்டத்திற்கு விடுக்கப்பட்ட அறைகூவலை ஏற்று தமிழகத்தில் இடதுசாரி கட்சிகளோடு சில மாவட்டங்களில் விடுதலை சிறுத்தைகள், மனிதநேய மக்கள் கட்சி, மதச்சார்பற்ற ஜனதா தளம், புதிய தமிழகம், மதிமுக, சிபிஐ (எம்.எல்.) போன்ற கட்சிகளும் முழுஅடைப்பு இயக்கத்தில் இணைந்து நின்றன. திமுக, பாமக, தேமுதிக ஆகிய கட்சிகளும், சிஐடியு, ஏஐடியுசி, எல்பிஎப் போன்ற சங்கங்களும் ஆதரவு தெரிவித்தன. வியாபாரிகள் சங்கங்கள் கடையடைப்புக்கு அறைகூவல் விடுத்ததால் கடையடைப்பு முழுமையாக இருந்தது. ஆட்டோ, தனியார் - அரசு பேருந்துகள் குறைவாகவே இயங்கின. தொழில் மையங்களில் வேலைநிறுத்தம், அரசியல் கட்சிகளின் ரயில் - சாலை மறியல் என பல வடிவங்களில் மாநிலத் தழுவிய அளவில் ஓரளவு முழு அடைப்பு இயக்கம் வெற்றிகரமாக நடைபெற்றது.

உணவு பாதுகாப்பு இயக்கம்

4.25 உணவு பாதுகாப்பு மசோதாவில் மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு உணவுப் பொருட்கள் மற்றும் மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை குறைத்து பொதுவிநியோக முறையை பலவீனப்படுத்துவது உள்ளிட்ட பிரச்சனைகள் முன்னுக்கு வந்தபோது இடதுசாரிக் கட்சிகள் சார்பில் டெல்லியில் உணவு பாதுகாப்பு மசோதாவில் திருத்தம் கோரியும், பொதுவிநியோக திட்டத்தை வலுப்படுத்தக் கோரியும் 5 நாட்கள் தர்ணா போராட்டம் நடைபெற்றது. நம் கட்சி சார்பில் தமிழகத்தில் 2012 ஜுலை 7-12 வரை ஆய்வு நடத்துவது, ஜுலை 20 அன்று ரேஷன் கடைகள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது, ஜுலை 30 அன்று தாலுகா அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று மாநிலக்குழு முடிவு செய்தது. அதற்கேற்ப மாநிலம் முழுவதும் 3020 ரேஷன் கடைகளில் ஆய்வு நடைபெற்றது. இந்த ஆய்வு நமது சக்திக்கேற்ப நடைபெறவில்லை. தொடர்ந்து 1665 ரேஷன் கடைகள் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் 67509 பேர் கலந்து கொண்டுள்ளனர். ஜுலை 30 அன்று தாலுகா அலுவலகம் மற்றும் உணவுப் பொருள் வழங்கும் துறை ஆணையர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 31383 பேர் கலந்து கொண்டனர். மாநிலம் முழுவதும் துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் வெளியிடப்பட்டன. தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மத்தியக்குழு

வெளியிட்ட பிரசுரமும் மொழியாக்கம் செய்யப்பட்டு மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டன. ஆர்ப்பாட்டத்தின்போது சென்னையில் சில இடங்களில் காவல்துறை நம் தோழர்களை கைது செய்து வழக்கு தொடுத்தது. அதுபோல் ஜூலை 30 அன்று உணவு வழங்கல் துறை அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களையும் காவல்துறை கைது செய்து பின்னர் விடுவித்தது.

4.26 இடதுசாரிக் கட்சிகள் டெல்லியில் நடத்திய 5 நாள் தர்ணாவில் விடுக்கப்பட்ட அறைகூவலுக்கேற்ப செப்டம்பர் 12 அன்று தமிழகத்தில் சிபிஎம் - சிபிஐ சார்பில் மாவட்ட தலைநகரங்களில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக மக்களிடம் கையெழுத்து இயக்கம் நடத்தி 5 கோடி கையெழுத்துக்களை பெறுமாறு மத்தியக்குழு விடுத்த அறைகூவலுக்கேற்ப தமிழகத்திலும் கையெழுத்துக்கள் பெற்று மத்தியக்குழுவுக்கு அனுப்பப்பட்டது. கையெழுத்து பெறும் இயக்கத்தை சென்னையில் வால்மார்ட் எதிர்ப்பு பிரச்சார பொதுக்கூட்டத்தின் போது தோழர்கள் பிரகாஷ் காரத், து. ராசா மற்றும் தலைவர்கள் தொடங்கி வைத்தனர். சக்திக்கேற்ப கையெழுத்துக்கள் பெறவில்லை. பெரும்பகுதி மக்களின் முக்கிய பிரச்சனைகளில் ஒன்றான இவ்வியக்கத்தில் மாவட்டக்குழுக்கள் இன்னும் கூடுதலான கவனம் செலுத்தியிருக்க வேண்டும். அனைத்து கிளைகளையும் இவ்வியக்கத்தில் ஈடுபடுத்தி ஒரு மக்கள் இயக்கமாக முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை என்பதை பரிசீலித்து முன்னேற வேண்டியுள்ளது.

மாநில பிரச்சார இயக்கம்

4.27 விலைவாசி உயர்வு, மின்வெட்டு, குடிமனைப்பட்டா மற்றும் ஸ்தல அளவிலான மக்கள் பிரச்சனைகளை முன்னிறுத்தி 2012 அக் 16-19 வரை 4 நாட்கள் 3 அல்லது 4 மாவட்டங்களை ஒன்றிணைத்து 11 மண்டலங்களாக மாவட்டத்திற்கு ஒரு நாள் என்ற வகையில் கிராமப்புற, நகர்ப்புற உழைப்பாளி மக்களிடம் இந்த பிரச்சாரம் எடுத்துச் செல்லப்பட்டது. தொடக்க நிகழ்வில் தென்சென்னை போரூரில் சிறப்பான ஏற்பாடுகள் - பெருந்திரளான மக்கள் பங்கேற்புடன் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் சீத்தாராம் யெச்சூரி மற்றும் மாநிலத் தலைவர்கள் உரை நிகழ்த்தினர். மாநில, மாவட்டத் தலைவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த வாகனப் பிரச்சார இயக்கத்தில் ஒவ்வொரு பயணக்குழுவும் நூற்றுக்கணக்கான கிராமங்களில் பல்லாயிரம் மக்களிடம் நமது பிரச்சாரத்தை எடுத்துச் சென்றன. தெருமுனைக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள், கலைநிகழ்ச்சிகளுடன் துண்டு பிரசுர விநியோகம், மாநிலக்குழு வெளியிட்ட பிரசுர விற்பனை என இவ்வியக்கம் நடைபெற்றது. பிரச்சாரக்குழு சென்ற வழிகள் தோறும் கட்சிக் கிளைகள், கமிட்டிகள், தோழர்கள் ஈடுபாட்டுடன் இவ்வியக்கத்தில் பங்கேற்று சிறப்பித்தனர். மக்களின் வரவேற்பை பெற்ற இயக்கமாக இவ்வியக்கம் மாநிலம் முழுவதும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சில்லரை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீடு - வால்மார்ட் எதிர்ப்பியக்கம்

4.28 மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தாராளமயக் கொள்கை செயலாக்கத்தின் பகுதியாக சில்லரை வர்த்தகத்தில் 51 சதவிகிதம் அந்நிய முதலீட்டை அனுமதிப்பது - வால்மார்ட போன்ற பன்னாட்டு பகாசூர நிறுவனங்களை அனுமதிப்பது போன்ற நடவடிக்கைகளை எடுத்தது. இந்த நடவடிக்கைகள் சில்லரை வர்த்தகத்தை சீரழிக்கும் என்பதால் நாடெங்கும் எதிர்ப்பு கிளம்பியது.

4.29 தமிழகம் - புதுவையில் நாம் பரவலாக பிரச்சாரத்தையும், வணிகர் அமைப்புகளுடன் சேர்ந்து கண்டன இயக்கங்களையும் நடத்தினோம். சிறு பிரசுரங்கள், துண்டுப் பிரசுரங்கள், கருத்தரங்குகள், தெருமுனைக் கூட்டங்கள் பொதுக்கூட்டங்கள் என இக்காலத்தில் தொடர்ச்சியாக நமது எதிர்ப்பினையும் - மக்களிடம் கருத்துருவாக்க நடவடிக்கைகளையும் எடுத்துச் சென்றோம்.

4.30 சென்னையில் வால்மார்ட் நிறுவனம் தன்னுடைய செயல்பாட்டைத் தொடங்கிய நிலையில் கட்சியின் வடசென்னை, தென்சென்னை மாவட்டக்குழுக்கள் விரிவான எதிர்ப்பு மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரத்தினை எடுத்துச் சென்றன. நமது முன்முயற்சியில் சிபிஐ மற்றும் வணிகர் அமைப்புகளை இணைத்து வடசென்னை தானா தெருவில் தோழர்கள் பிரகாஷ் காரத், து. ராசா மற்றும் மாநிலத் தலைவர்கள் கலந்து கொண்ட பிரம்மாண்ட பொதுக்கூட்டம் 2012 டிசம்பர் 19ல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விடுக்கப்பட்ட அறைகூவலுக்கேற்ப 2012 டிசம்பர் 26 அன்று சென்னையில் அண்ணா நகரில் தொடங்கப்பட்ட வால்மார்ட் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் காவல்துறையின் தடைகளைத் தகர்த்து முற்றுகையிடப்பட்டது. காவல்துறையினருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே நடைபெற்ற தள்ளுமுள்ளு மோதல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து ஆண்களும், பெண்களுமாக சுமார் 1200 பேரை காவல்துறை கைது செய்தது. காவலில் இருந்த தோழர்களையும், தலைவர்களையும் சந்தித்து வியாபாரி சங்கத் தலைவர்கள் நன்றி பாராட்டினர். இவ்வியக்கச் செய்தி ஊடகங்களில் பிரதான இடத்தை பிடித்தது. இந்த முற்றுகையில் விவசாய இயக்கம் சார்பில் காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

4.31 எழுச்சியோடு நடந்த இவ்வியக்கத்தைத் தொடர்ந்து சென்னை வானகரத்தில் வால்மார்ட்டின் சேமிப்பு கிடங்கு வியாபாரிகள் சங்கம் சார்பில் 2013 பிப் 12 அன்று முற்றுகையிடப்பட்டது. வியாபாரிகள் சங்கத்தோடு நாமும் இணைந்து நடந்த முற்றுகை போராட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வியாபாரிகளும், தோழர்களும் கைது செய்யப்பட்டனர்.

4.32 சென்னை மாவட்டக்குழுக்கள் வால்மார்ட் எதிர்ப்பு பிரசுரங்களையும், துண்டு பிரசுரங்களையும் பரவலான மக்களிடமும், வியாபாரிகளிடமும் எடுத்துச் சென்றன. இன்சூரன்ஸ் அரங்கமும் பிரசுரம் வெளியிட்டு மக்களிடம் பிரச்சாரத்தை எடுத்து சென்றது. சென்னை மணலியில் நடைபெற்ற மறியலில் நம்மோடு வியாபாரிகளும் கலந்து கொண்டு கைதாகினர். ஆர்.கே. நகரில் கடையடைப்பு செய்து வியாபாரிகள் மனிதச் சங்கிலி இயக்கத்திலும், கருத்தரங்க நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்கள். கொளத்தூரில் நாமும், வியாபாரிகளும் இணைந்த வீதிப் பிரச்சாரம் 3 நாட்கள் நடைபெற்றது. இத்தகைய தொடர்ச்சியான இயக்கங்கள் வியாபாரிகளிடம் கட்சி மீதான மரியாதையை உயர்த்தியது.

4.33 இதர மாவட்டங்களிலும் சில்லரை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு, வால்மார்ட் நிறுவனச் செயல்பாட்டுக்கு எதிரான பிரச்சாரமும், இயக்கங்களும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்பட்டன. சில மையங்களில் சிபிஐ கலந்து கொண்டது. மதுரையில் டிசம்பர் 11 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் தோழர் பிருந்தா காரத் டிசம்பர் 29 அன்று திண்டுக்கல்லில் கே. வரதராஜன், டிசம்பர் 2 அன்று திருப்பூரில் தோழர் அ. சவுந்தரராசன் என கலந்து கொண்டனர். இதுபோல் கோவை, கன்னியாகுமரி, கடலூர், காஞ்சிபுரம், திருப்பூர், புதுச்சேரி, விருதுநகர், நெல்லை, திருவாரூர், நாமக்கல், சிவகங்கை என பல மாவட்டங்களிலும் கருத்தரங்குகள் நடைபெற்றன. இக்கருத்தரங்குகளில் வட்டார வியாபாரி சங்கத் தலைவர்களும் கட்சியின் மாநில, மாவட்டத் தலைவர்களும் சில மையங்களில் சிபிஐ கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

4.34 கட்சியும், வர்க்க - வெகுஜன அமைப்புகளும் வியாபாரிகளும் இணைந்த இயக்கங்கள், நம்முடைய முன்முயற்சியால் மாநிலமெங்கும் தொடர்ந்து நடந்த கருத்துப் பிரச்சாரம் - போராட்டங்களின் விளைவால் சென்னையில் வால்மார்ட் நிறுவனத்தின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டன. சேமிப்பு கிடங்கு தமிழக அரசால் 'சீல்' வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இயக்கங்கள் - போராட்டங்கள் - அரசியல் பணிகள்

மின்வெட்டு - டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கை கோரி

4.35 தமிழகத்தில் நீடித்த மின்வெட்டை தவிர்க்க, சீர்படுத்த மத்திய தொகுப்பிலிருந்து கூடுதல் மின்சாரம் பெறவும், மாநிலம் முழுவதும் வேகமாக பரவிய டெங்கு நோய்த் தடுப்பு நடவடிக்கை மற்றும் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் உடனடி சிகிச்சைக்கான ஏற்பாடுகளை உத்தரவாதப்படுத்தக் கோரியும் தமிழக அரசை வலியுறுத்தி பெருந்திரள் தர்ணா போராட்டம் நடத்த மாநிலக்குழு மாவட்டக்குழுக்களை பணித்தது. 2012 நவ 17 அன்று இவ்வியக்கம் மாவட்டத் தலைநகர் மற்றும் முக்கிய மையங்களில் திரளான பங்கேற்புடன் மாநில, மாவட்ட தலைவர்களும் கலந்து கொண்டு மெழுகுவர்த்தி ஏந்தி நடைபெற்றது - சென்னையில் மாநிலச் செயலாளர் கலந்து கொண்டது - பல ஊடகங்களிலும் செய்திகளாக வெளிவந்தது. 2012 டிசம்பர் 4 அன்று மின்வெட்டுக்கு எதிராக சிறு, குறு, நடுத்தர தொழில்களை பாதுகாக்க டீசலுக்கு மானியம் - பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு நிவாரணம் வலியுறுத்தியும் லாந்தர் விளக்கு ஆர்ப்பாட்டம், பேரணி அனைத்து பிரதான மையங்களிலும் நடைபெற்றன. அனைத்தும் அரசின் தலையீட்டை நிர்ப்பந்திக்க உதவியது.

வேலைநிறுத்தங்கள்

4.36 மத்திய காங்கிரஸ் தலைமையிலான அரசின் விலைவாசி உயர்வு, தொழிலாளர் விரோத - மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்து சிஐடியு உள்ளிட்ட 11 மத்திய தொழிற்சங்கங்களின் அறைகூவலுக்கேற்ப 2012 பிப்ரவரி 28 அன்று தமிழகத்தில் 10 லட்சம் தொழிலாளர்கள் பங்கேற்புடன் வேலைநிறுத்தம் நடைபெற்றது. வேலைநிறுத்தம் செய்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 116 மையங்களில் 65000 தொழிலாளர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

4.37 இதன் தொடர்ச்சியாக 2013 பிப்ரவரி 20, 21ல் நாடு தழுவிய 48 மணி நேர வேலை நிறுத்தப்போராட்டத்தில் தமிழகத்தில் கடந்த வேலைநிறுத்தத்தை விட கூடுதலான தொழிலாளர்கள், ஊழியர்கள் என 13 லட்சம் பேர் கலந்து கொண்டனர். வேலைநிறுத்த நாளன்று 180 மையங்களில் 58000 பேர் பங்கேற்ற ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. வங்கி, இன்சூரன்ஸ், பி.எஸ்.என்.எல். போன்ற மத்திய துறைகளில் லட்சத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டனர். திருப்பூரில் 2 நாட்கள், புதுச்சேரியில் 1 நாள் முழு அடைப்பாக நடைபெற்றது. வேலைநிறுத்தத்திற்கு ஆதரவாக திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட டெல்டா மாவட்ட விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் மறியல் போராட்டங்களும் நடைபெற்றன.

4.38 மத்திய தொழிற்சங்க அமைப்புகளுடன், தமிழகத்தில் எல்.பி.எப், ஏ.டி.பி, டபிள்யூ.பி.சி. போன்ற அமைப்புகளும் வேலைநிறுத்தத்தை ஆதரித்தன; சில மையங்களில் கலந்து கொண்டன. வேலைநிறுத்தத்தின்போது உருவான ஒற்றுமையை வலுப்படுத்தி விரிவுபடுத்தும் கடமையை முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. சிறுபகுதியே எனினும் விவசாயிகள் ஆதரவாக களம் இறங்கியது தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டிய உதாரணமாகும்.

வறட்சி நிவாரணம் கோரிய இயக்கம்

4.39 வறட்சியால் டெல்டா பாசன மாவட்ட விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில் 2013 ஜனவரியில் தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முற்றுகையிடப்பட்டன. 3 நாட்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் ஸ்தம்பித்தன. புதுக்கோட்டை அறந்தாங்கியிலும் முற்றுகை நடைபெற்றது. வி.ச., வி.தொ.ச., முன்னின்று நடத்திய இப்போராட்டத்தில் பல்லாயிரம் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் கிராம மக்களும் கலந்து கொண்டது அரசுக்கு நிர்பந்தத்தை ஏற்படுத்தியது. சட்டமன்றத்தில்

பிரச்சனை எழுப்பப்பட்டது. புதுக்கோட்டை, திருச்சி, கடலூர் மற்றும் இதர மாவட்டங்களிலும் இயக்கங்கள் நடத்தப்பட்டன. இதனை தொடர்ந்து மாநிலம் முழுவதும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. அனைவருக்கும் உரிய இழப்பீடு கிடைக்கவில்லை. எனினும், இவ்வியக்கம் மக்களிடம் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

மாற்றுக் கொள்கை - நாடு தழுவிய இயக்கம்

4.40 மத்திய அரசின் நவீன தாராளமய பொருளாதாரக் கொள்கை அமலாக்கத்தின் விளைவாக மக்கள் சந்திக்கும் பிரச்சனைகளை முன்னிறுத்தியும், தீர்வுக்கான மாற்றுக் கொள்கைகளை முன்வைத்தும், நிலம், வேலை, உணவு, கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை கோரிக்கைகளை நிறைவேற்ற ஆட்சியாளர்களை வலியுறுத்தியும், ஊழலை எதிர்த்தும் நாடு தழுவிய இயக்கத்திற்கு மத்தியக்குழு அறைகூவல் விடுத்தது. நான்கு முனைகளிலிருந்து டெல்லி நோக்கி அகில இந்திய தலைவர்கள் பங்கேற்ற பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. நாகர்கோவிலில் 2013 பிப் 24 அன்று குமரி முனையிலிருந்து புறப்பட்ட அகில இந்திய பிரச்சாரக்குழுவின் தொடக்க நாள் பொதுக்கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரகாஷ் காரத் பங்கேற்றார்.

4.41 2013 பிப்ரவரியில் கன்னியாகுமரி முனையிலிருந்து தொடங்கப்பட்ட அகில இந்திய பிரச்சாரக்குழு தமிழகத்தில் செல்லும் மாவட்டங்களைத் தவிர்த்து, இதர மாவட்டங்களை 5 பகுதிகளாக பிரித்து மாநிலம் முழுவதும் மாநில மாவட்டத் தலைவர்கள் தலைமையில் பிரச்சார இயக்கம் பரவலான மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. நீலகிரி, நாமக்கல், கரூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் தனியே மாவட்ட அளவிலான பிரச்சார இயக்கமும் நடத்தப்பட்டது.

4.42 இந்த பிரச்சார இயக்கம் அரசியல் தலைமைக்குழு முன்வைத்த 'மாற்றுப்பாதைக்கான போர் முழக்கப் பயணம்' எனும் முழக்கத்தை முன்னிறுத்தி தமிழக மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. மாற்றுக் கொள்கைகளை உள்ளடக்கிய பிரசுரம், பல லட்சம் துண்டு பிரசுரம், பல்லாயிரம் சுவரொட்டிகள், வரவேற்பு நிகழ்வுகள், தெருமுனைக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள், கலைநிகழ்ச்சிகள் என இவ்வியக்கம் விரிவான பகுதி மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது.

4.43 மாநிலம் முழுவதும் நடைபெற்ற இப்பிரச்சார இயக்கத்தின் செய்திகள் ஊடகங்களில் உள்ளூர் அளவில் வெளிவந்தன. இவ்வியக்கத்தில் பெரும்பாலான கட்சிக் கிளைகள் - தோழர்களை அரசியலாக உற்சாகப்படுத்தி செயலில் இறங்கச் செய்துள்ளோம். இவ்வியக்கத்தின் முத்தாய்ப்பாக 2013 மார்ச் 19 அன்று டெல்லியில் நடைபெற்ற எழுச்சிப் பேரணியில் தமிழகத்திலிருந்து இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தோழர்களைப் பங்கேற்கச் செய்துள்ளோம். டெல்லி பேரணி விடுத்த அறைகூவலுக்கேற்ப 2013 மே 24 அன்று மத்திய அரசு அலுவலகங்கள் முன்பு நடத்திய மறியல் போராட்டத்தில் 34373 பேரை (10,000 பெண்கள் உட்பட) காவல்துறை கைது செய்தது. மறியலில் லட்சம் பேரை பங்கேற்கச் செய்வது என்ற மாநிலக்குழுவின் முடிவை நம்மால் நிறைவேற்ற முடியாமல் போனது பரிசீலனைக்கு உரியதாகும். சிஐடியு மற்றும் வெகுஜன அமைப்புகள் சார்பிலும் ஒரு பகுதியினர் இவ்வியக்கத்தில் கலந்து கொண்டுள்ளனர். எனினும், இதுபோன்ற இயக்கங்களில் வர்க்க - வெகுஜன அமைப்பினரை வலுவாகத் திரட்டுவதில் நாம் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

4.44 தேவை ஆட்சி மாற்றமல்ல - கொள்கை மாற்றமே என்பதை முன்னிறுத்தி மாநில அளவில் ஒரு கோடி மக்கள் சந்திப்பு இயக்கத்தினை வாலிபர் இயக்கம் நடத்தியது. இதில் 'நாம் நல்லா இருக்க' எனும் தலைப்பிலான சிறிய பிரசுரம் 1 லட்சமும், சுமார் 10 லட்சம் துண்டு பிரசுரங்களும் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது குறிப்பான நிகழ்வாகும்.

4.45 மாற்றுக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்ல இடதுசாரிகள், ஜனநாயக- மதச்சார்பற்ற சக்திகள் ஓரணியில் திரள, 2013 ஜூலை 1 அன்று டெல்லியில் நடைபெற்ற இடதுசாரி கட்சிகளின்

சிறப்பு மாநாடு அறைகூவல் விடுத்தது. இதனைத் தொடர்ந்து சென்னையில் ஆகஸ்ட் 30 அன்று தமிழக இடதுசாரிக் கட்சிகள் இணைந்து நடத்திய தோழர்கள் பிரகாஷ் காரத், சுதாகர் ரெட்டி பங்கேற்ற பொதுக்கூட்டம் கலைநிகழ்ச்சிகளுடன் நடந்தது. பார்வர்டு பிளாக் கட்சியும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டது. 2000-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தை ஊடகங்கள் செய்தியாக்கின. சிபிஐ, பார்வர்ட் பிளாக் திரட்டுதலில் கவனம் செலுத்தவில்லை.

4.46 முன்னதாக, பாஜக போன்ற கட்சிகளின் ஆதரவோடு அவசர கோலத்தில் உணவு பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்ற முனைந்த காங்கிரஸ் அரசை எதிர்த்தும், 90 சதவிகித மக்களின் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், பொதுவிநியோக முறையை பலப்படுத்தி ஒவ்வொரு குடும்பத்திற்கும் 35 கிலோ உணவு தானியம் கிடைப்பதை உறுதிப்படுத்தவும் உரிய திருத்தங்கள் இணைக்கப்பட வலியுறுத்தி இயக்கங்கள்/கூட்டங்கள் பிரதான மையங்களில் (2013 ஆகஸ்டில்) கட்சி சார்பில் நடைபெற்றது. அதுபோல் அவ்வப்போது உயர்த்தப்பட்ட பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வால் அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் கடுமையாக உயர்ந்தன. விலை உயர்வை கட்டுப்படுத்த மத்திய அரசை வலியுறுத்தியும், நமது மாற்றுக் கொள்கைகளை முன்னிறுத்தியும் மக்களிடம் தொடர்ச்சியான இயக்கங்கள் இக்காலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன.

2014 பிப்ரவரி 1-7 பிரச்சார இயக்கம்

4.47 இடதுசாரி கட்சிகளின் மாற்றுப் பொருளாதாரக் கொள்கைகளை முன்னிறுத்தி மத்தியக்குழுவின் நாடு தழுவிய பிரச்சார இயக்கத்தின் பகுதியாக தமிழகத்தில் பிப்ரவரி 1-7 பிரச்சார இயக்கம் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. கட்சிக்கிளைகள்/கமிட்டிகள் வாரியாக திட்டமிடப்பட்டு வீடு, வீடாக பல லட்சம் துண்டுப்பிரசுரங்கள், ஆயிரத்திற்கும் மேல் தெருமுனைக்கூட்டங்கள் சில மையங்களில் பொதுக்கூட்டங்கள்/நடைபயண பிரச்சாரம் என நடைபெற்றுள்ளது. கூடுதலான கட்சி அணிகள் இவ்வியக்கத்தில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

தனியார்மய எதிர்ப்பு - தொழிற்சங்க உரிமைக்கான இயக்கங்கள்

4.48 தாராளமயக் கொள்கை செயலாக்கத்தின் பகுதியாக சென்னை பெரம்பூர் ஐ.சி.எப். தொழிற்சாலை உற்பத்தியில் ஒரு பகுதியை புறப்பணி முறையில் தனியாரிடம் விடுவது, சர்வதேச தரம் கொண்ட சென்னை உள்ளிட்ட விமான நிலையங்களை தனியார்மயப்படுத்துவது, பொதுத்துறை ஊழியர்களின் தற்போதைய ஓய்வூதிய நடைமுறைகளை கைவிட்டு புதிய பென்சன் (தனியார்) திட்டம் அமலாக்குவது, அங்கன்வாடி மையங்களை தனியாரிடம் விடுவது போன்ற மத்திய அரசின் தனியார்மயக் கொள்கை மற்றும் நடைமுறைகளை எதிர்த்த இயக்கங்களும், சமவேலைக்கு சம ஊதியம், பன்னாட்டு தொழில் நிறுவனங்களில் தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை, தொழிற்சங்க அங்கீகார சட்டம் இயற்றுவது, காண்ட்ராக்ட் முறை ஒழிப்பு, குறைந்தபட்ச ஊதியம் ரூ. 15,000/-, நலவாரியச் செயல்பாடுகளை பலப்படுத்துவது, நெய்வேலி ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்வது, தொழிற்சங்கங்களின் கருத்தறிந்து ஆட்டோ கட்டணத்தை தீர்மானிப்பது, சர்க்கரை ஆலை தொழிலாளர்களின் ஊதிய உயர்வு, சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்திய இயக்கங்களும், உழைப்புச் சுரண்டல் மற்றும் பன்னாட்டு நிர்வாகங்களின் பழிவாங்கல் நடவடிக்கைகள், காவல்துறையின் அடக்குமுறை நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றை எதிர்த்தும், அவ்வப்போது தலையீடுகள் மற்றும் பல கட்ட இயக்கங்கள், போராட்டங்கள் இக்காலத்தில் பரவலாக நடந்துள்ளன. நோக்கியா தொழிற்சாலை மூடலுக்கு எதிராக சென்னையில் 2000 தொழிலாளர்கள் பங்கேற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. பாக்ஸ்கான் ஆலை

மூடலை எதிர்த்து தொடர் ஆலை நுழைவுப் போராட்டம் நடத்தி மூன்று முறை தலைவர்களும் தொழிலாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கூட்டுறவுத் தேர்தல்

4.49 அஇஅதிமுக அரசு 2013 ஏப்ரலில் கூட்டுறவு தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டது. திமுக, தேமுதிக போன்ற கட்சிகள் தேர்தலில் பங்கு பெறப்போவதில்லை என்று அறிவித்தன. 'கூட்டுறவுத் தேர்தலை அரசியல் அணிசேர்க்கை அடிப்படையில் அணுக வேண்டியதில்லை - நமது அரசியல் நிலைபாடுகளுக்கு குந்தகமின்றி தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வது - மாவட்ட அளவில் உள்ள வாய்ப்புகளை கண்டறிந்து போட்டியிடுவது - சில இடங்களில் மற்றவர்களோடு உடன்பாடு கொண்டு ஓரிரு இடங்களில் போட்டியிடும் வாய்ப்புகளும் இருக்கும்' அனைத்தையும் கருத்தில் கொண்டு தேர்தல் பணிகளை முன்னெடுத்துச் செல்ல மாவட்டக்குழுக்களை கேட்டுக் கொண்டோம்.

4.50 சில சங்கங்களில் நாம் தனியே போட்டியிட்டு வெற்றிபெறும் வாய்ப்பிருந்தது. சில இடங்களில் நமக்குள்ள வாய்ப்புகளுக்கேற்ப மற்றவர்களோடு இணைந்தும் தேர்தலை சந்திக்க முயற்சித்தோம். ஆனால் ஆளுங்கட்சி பெரும்பான்மையான இடங்களில் மற்றவர்களை வேட்பு மனு தாக்கல் செய்ய விடாது அராஜகமாக கூட்டுறவு அமைப்புகளை கைப்பற்றியது. எதிர்தரப்பினர் பெற்ற வெற்றியைக் கூட - தோல்வியுற்றதாக அறிவிப்பு செய்யப்பட்டது. காவல்துறையும், அதிகாரிகளும் அதிமுகவுக்கு துணை நின்றனர். ஆளுங்கட்சியின் அராஜகத்தையும் ஜனநாயக விரோதச் செயல்பாட்டையும் கண்டித்து நாம் மறியல் உள்ளிட்ட இயக்கங்கள் நடத்தி நமது எதிர்ப்பினைத் தெரிவித்தோம்.

4.51 இத்தகு நிலையிலும் நாம் தனித்து போட்டியிட்டு சென்னை மற்றும் மாவட்டங்களில் சில கூட்டுறவு சங்கங்களில் வெற்றி பெற்றுள்ளோம். தொழிலாளர் கூட்டுறவு அமைப்புகளிலும் இதர அமைப்புகளோடு உடன்பாடு கண்டு சில இடங்களில் வெற்றி பெற்றுள்ளோம். அதிமுகவுடன் உடன்பாடு கொண்டும் சில இடங்களில் வெற்றி பெற்றுள்ளோம். கூட்டுறவு தேர்தல் குறித்த பரிசீலனையில் அதிமுகவுடன் உடன்பாடு ஏற்பட்ட இடங்களில் அவர்களின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை நாம் கண்டு கொள்ளாமல் இருந்தது சரியான நடைமுறையல்ல என்று மாநிலக்குழு சுட்டிக்காட்டியது.

பொதுத்துறை பாதுகாப்பு இயக்கம்

4.52 நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் 5 சதவிகிதப் பங்குகளை தனியாருக்கு விற்பனை செய்யும் மத்திய காங்கிரஸ் அரசின் முடிவை தமிழகத்தில் அனைத்து கட்சிகளும் எதிர்த்தன. நெய்வேலி தொழிலாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை தொடங்கினர். கட்சியும், சிஐடியுவும் ஆதரவு இயக்கங்களை நடத்தின. நிர்ப்பந்தம் காரணமாக மாநில அரசு பங்குகளை வாங்க முன்வந்த நிலையில் போராட்டம் முடிவுக்கு வந்தது. மாநில அரசு பங்குகளை வாங்கியது சரியான தீர்வாகாது. எனினும் தனியாருக்கு பதிலாக அரசே வாங்கியது வரவேற்கத்தக்கது. இது நெய்வேலி தொழிலாளர்கள் மற்றும் ஆதரவாக இயக்கம் நடத்திய அமைப்புகளுக்கு கிடைத்த வெற்றியாகும்.

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம்

4.53 நெடிய பாரம்பரியம் கொண்ட சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம், நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக பல்கலைக்கழக ஊழியர்களை வெளியேற்ற முனைந்தது. இதனை எதிர்த்துப் போராடிய பல்கலைக்கழக ஆசிரியர்/ஊழியர்களுக்கு ஆதரவாக கட்சியும், வெகுஜன அமைப்புகளும் துணை நின்றன. சிதம்பரம் சட்டமன்ற தொகுதி - நம்முடைய தொகுதி என்ற முறையில் சட்டப்பேரவையில் வலுவாக தலையீடு செய்தோம் - நிர்வாகத்தின்

தவறான நடவடிக்கைகளை எடுத்து வைத்தோம். தொடர்ந்து மாநில அரசு அண்ணாமலை பல்கலைக்கழகத்தை ஏற்று நடத்த முன்வந்தது. இது பல்கலை ஊழியர்களின் உறுதியான போராட்டத்திற்கும், நமது ஆதரவு நடவடிக்கைகளுக்கும் கிடைத்த வெற்றியாகும். ஊழியர்களிடமும், மக்களிடமும் கட்சிக்கு மரியாதை ஏற்பட்டுள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலையம்

4.54 அமெரிக்காவுடன் இந்திய அரசு ஏற்படுத்திக் கொண்டுள்ள ‘அணுசக்தி ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. இதன்படி நாட்டின் 6 பிரதான மையங்களில் இறக்குமதி செய்யப்படும் அணு உலைப் பூங்காக்கள் அமைக்கும் திட்டத்தையும், கூடங்குளத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 2 அணு உலைகள் தவிர கூடுதலாக அமைக்கப்படவுள்ள அணு உலைத் திட்டத்தையும் நாம் ஏற்கவில்லை. 2011ல் ஜப்பான் புகுஷிமாவில் ஒரே மையத்தில் பல அணு உலைகள் இருந்த நிலையில் விபத்து ஏற்பட்டபோது கூடுதலான பாதிப்புகளை எதிர்கொள்ள நேர்ந்த அனுபவ பின்னணியில் கூடங்குளத்தில் கூடுதலான அணு உலைகளை நிறுவக் கூடாது என்கிறோம்.

4.55 இறக்குமதி செய்யப்பட்டு நிறுவப்படும் அணு உலைகள் கூடுதலான செலவினம் என்பதோடு உற்பத்திச் செலவின் அதிகரிப்பால் மின்சாரத்தின் விலையும் பெருமளவு அதிகரிக்கும். புகுஷிமா விபத்து மக்கள் மத்தியில் கூடுதல் அச்சத்தையும் பதட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் இறக்குமதி செய்து புதிய அணு உலைகள் நிறுவப்படுவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கவில்லை. உள்நாட்டு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன், மக்களின் அச்சத்தைப் போக்கி குறைந்த செலவினத்தில் அணு உலை மின்சார உற்பத்தி மற்றும் மாற்று எரிசக்தி உற்பத்திக்கான திட்டங்களை பரிசீலித்து செயல்படுத்த அரசை வலியுறுத்த வேண்டியுள்ளது.

4.56 கூடங்குளம் இடிந்தகரையில் சுற்றுவட்டார கிராம மக்கள் தொடர்ச்சியாக அணுமின் உலைகளை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் மக்கள் மீதான அரசின் அடக்குமுறை நடவடிக்கைகளை நாம் எதிர்த்தோம். தேசத்துரோக சட்டப்பிரிவுகளின் அடிப்படையில் உட்பட தொடுக்கப்பட்ட பொய் வழக்குகளைத் திரும்பப் பெறவும் வலியுறுத்தினோம், இயக்கங்கள் நடத்தினோம். இடிந்தகரை சென்று ஜனநாயக ரீதியான அவர்களின் போராட்டத்திற்கு நமது ஆதரவினையும், நமது நிலைபாட்டையும் தெரிவித்தோம்.

4.57 தற்போது பாஜக அரசு கூடங்குளத்தில் கூடுதலாக இரண்டு அணு உலைகளை நிறுவ ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இதனை எதிர்த்து மக்களைத் திரட்டி போராட வேண்டியுள்ளது.

2014 நாடாளுமன்றத் தேர்தல்

4.58 16-வது மக்களவை தேர்தலில் காங்கிரஸ், பாஜக கூட்டணிகளை முறியடிக்க தமிழகத்தில் அஇஅதிமுகவுடன் தொகுதி உடன்பாடு கண்டு, போட்டியிடுவது என்று நாமும், சிபிஐ-யும் முடிவு செய்தோம். அஇஅதிமுகவின் அணுகுமுறையால் உடன்பாடு ஏற்படவில்லை. இந்நிலையில் நாமும், சிபிஐ-யும் இணைந்து மக்களவை தேர்தலை எதிர்கொள்வது என முடிவு செய்து தலா 9 தொகுதிகள் வீதம் 18 தொகுதிகளில் தேர்தல் பணிகளை முன்னெடுத்துச் சென்றோம். தேர்தலில் நமது அரசியல் அணுகுமுறையை கட்சி அணிகளுக்கு எடுத்துச் செல்லும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும், கிளை செயலாளர் பேரவை கூட்டங்கள் நடத்தப்பட்டன. முன்னதாக தோழர்களுக்கென பேச்சாளர் பயிற்சிமுகாம் 3 மையங்களில் நடத்தப்பட்டன.

4.59 வேட்பாளர்களை இறுதிப்படுத்தி நாம் போட்டியிட்ட தொகுதிகளில் தேர்தல் பணிக்கென பொறுப்பாளர்கள் நிச்சயித்து கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அமைப்புகளின் முன்னணி தோழர்களை களமிறக்கி திட்டமிட்டு செயலாற்றினோம். தேர்தல் பணிகளின் போதே தேர்தலைச்

சந்திப்பதற்கான நிதியையும் மக்களிடம் திரட்டினோம். விளம்பரம், பிரச்சாரம், மக்கள் சந்திப்பு, வாக்கு சேகரிப்பு என சாத்தியமான அனைத்துப் பணிகளையும் பிரதானக் கட்சிகளின் பண பலம், ஆள் பலம், அதிகார பலம் ஆகியவற்றை எதிர்கொள்ளும் வகையில் முன்னெடுத்துச் சென்றோம். கடந்த தேர்தல்களை விடவும் கூடுதலான உற்சாகதோடு கட்சித் தோழர்களும், ஆதரவாளர்களும் தேர்தல் பணியில் ஈடுபட்டனர்.

4.60 கட்சியின் அகில இந்திய, மாநிலத் தலைவர்கள் பிரச்சாரம், கலைக்குழுக்கள் பிரச்சாரம், பாடல் கேசட், மத்தியக்குழு வெளியிட்ட பிரச்சார குறிப்புகள் - பிரசுரங்கள் மற்றும் பாரதி புத்தகாலயத்தின் தேர்தலுக்கான வெளியீடுகள் என நாம் போட்டியிட்ட தொகுதிகளில் நமது அரசியல் கருத்துக்களை பரவலான மக்களிடம் எடுத்துச் சென்றோம். தீக்கதிர் தேர்தல் செய்திகளையும், நமது அரசியல் கருத்துக்களையும் தாங்கி தனது தேர்தல் காலப் பணியைச் செய்தது.

4.61 சிபிஐ இந்த தேர்தலில் நாம் போட்டியிட்ட அனைத்து தொகுதிகளிலும் இணக்கமாக களத்தில் பணி செய்தனர். சிபிஐ போட்டியிட்ட தொகுதிகளில் நம் தோழர்கள் எந்த எதிர்பார்ப்புமின்றி கடுமையாக உழைத்தனர். நாம் போட்டியிட்ட தொகுதிப் பணிகளுக்காக அருகமை மாவட்டங்களிலிருந்து முன்னணித் தோழர்கள் சென்று பல நாட்கள் தங்கியிருந்து செயல்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

4.62 நமது அரசியலுக்கும், தேர்தல் பணிகளுக்கும் ஏற்ப தேர்தல் முடிவுகள் அமையவில்லை. போதிய வாக்குகள் கிடைக்கவில்லை எனினும் நமது தேர்தல் காலத்து பணிகள், தோழர்கள் உழைப்பு குறிப்பாக பெண்கள், கலைக்குழு தோழர்களின் பங்களிப்பும் - பணியும் பாராட்டுக்குரியதாகும்.

4.63 நமது அரசியல் செல்வாக்கை, ஸ்தாபன பலத்தை பிரதிபலிக்கும் வகையில் நமக்கு வாக்குகள் கிடைக்கவில்லை. கட்சித் தோழர்கள், ஆதரவாளர்கள், வெகுஜன அமைப்பின் முன்னணி தோழர்கள் அவர்தம் குடும்ப வாக்குகளையே நாம் பெற முடிந்துள்ளது. 'வெற்றிபெறும் வாய்ப்பு இல்லை' என்ற நிலையில் பொதுமக்கள் திரளிலிருந்து வாக்குகளை நாம் பெற முடியவில்லை.

4.64 தேர்தல் முடிவுகள், நமக்கு கிடைத்த வாக்குகள் - கட்சிக்கும், மக்களுக்கும் இடையிலான தொடர்பில் பெரிய இடைவெளி உள்ளதை வெளிப்படுத்துகிறது. வாக்குச்சாடி வாரியாக கட்சியை, வர்க்க - வெகுஜன அமைப்புகளை கட்டியெழுப்ப வேண்டிய பெரும் கடமையை நிறைவேற்றிட வேண்டியுள்ளது. மக்களோடு நெருக்கமான தொடர்பில் கட்சி ஊழியர்கள், முன்னணி தோழர்கள் இல்லையெனில் முதலாளித்துவ கட்சிகளை தேர்தலில் எதிர்கொண்டு பின்தள்ளுவது சிரமமான ஒன்று என்பதை அனுபவம் உணர்த்துகிறது. கட்சித் தோழர்கள் அவர்தம் குடும்பத்தினர் வர்க்க - வெகுஜன அமைப்பினர் அனைவரிடமும் நமது அரசியலை, மாற்றுக் கொள்கைகளை தொடர்ச்சியாக எடுத்துச் செல்ல வேண்டிய கடமையை உணர்த்துகிறது. உள்ளூர் அளவில் மக்கள் சந்திக்கும் அன்றாட பிரச்சனைகளில் தலையீடு செய்வது, கிளர்ச்சி இயக்கங்களை முன்னெடுத்துச் செல்வது, மக்களின் நம்பிக்கையை பெறும் இயக்கமாக கட்சியை வர்க்க - வெகுஜன அமைப்புகளை வளர்த்தெடுக்க வேண்டிய அவசியத்தை தேர்தல் அனுபவம் சுட்டுகிறது. இவற்றை கருத்தில் கொண்டு நமது ஸ்தாபன விரிவாக்கப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

மேற்குவங்கத்தில் தேர்தல் மோசடி - வன்முறை எதிர்ப்பியக்கம்

4.65 நடாளுமன்றத் தேர்தலின் போது மேற்கு வங்கத்தில் ஆளும் திரிணாமுல் கட்சியினர் ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி மார்க்சிஸ்ட் கட்சியினர் மீதும், மக்கள் மீதும் தொடுத்த வன்முறைத் தாக்குதலைக் கண்டித்தும், ஆயிரக்கணக்கான வாக்குச்சாவடிகளை கைப்பற்றி முறைகேடாக

தங்கள் கட்சியினருக்கு வாக்குகளை பதிவு செய்து கொண்டதை கண்டித்தும், தேர்தல் முறைகேடுகள் நடைபெற்ற வாக்குச் சாவடிகளுக்கு மறுதேர்தல் நடத்தக் கோரியும் நாடுதழுவிய கண்டன இயக்கம் நடைபெற்றது. சென்னையில் 2014 மே 14 அன்று மாநிலத் தலைவர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட மையங்களிலும் கண்டன இயக்கங்கள், மறு தேர்தல் வலியுறுத்திய ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இதுபோல் திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி.யின் வெறித்தனமான வன்முறை தூண்டிய பேச்சுக்கு கண்டனம் தெரிவித்தும் இயக்கங்கள் நடத்தப்பட்டன.

மக்கள் சந்திப்பு இயக்கம் 2014

4.66 மத்திய பாஜக அரசின் மக்கள் விரோத பட்ஜெட், விலைவாசி உயர்வு, தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பாதிப்பு, தலித் மக்கள் மற்றும் பெண்கள் மீதான தாக்குதல்கள் அதிகரிப்பு, லஞ்சம்-ஊழல், மணல் கொள்ளை, வறட்சி- குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளிட்டவற்றை முன்வைத்து சிபிஎம், சிபிஐ இணைந்து ஆகஸ்ட் 25-31 வரை ஒருவாரகால பிரச்சார இயக்கம் நடத்தப்பட்டது. சிபிஐ முன்வந்த மையங்கள் தவிர இதர இடங்களில் நாம் சுயேச்சையாக திட்டமிட்டு, குழுக்களாக வீடு, வீடாக இவ்வியக்கம் விரிவான பகுதி மக்களிடம் எடுத்துச் சென்றோம். 2014 செப்டம்பர் 1 அன்று மாவட்டத் தலைநகர்களில் மாநில, மாவட்டத்தலைவர்கள் தலைமையில் பெருந்திரள் உண்ணாவிரத போராட்டமும் சிபிஎம்/சிபிஐ சார்பில் நடைபெற்றது. நாடாளுமன்றத் தேர்தலில் பின்னடைவைத் தொடர்ந்து கணிசமான கட்சித் தோழர்கள் பங்கேற்புடன் இவ்வியக்கம் நடைபெற்றது. முன்னதாக மத்திய பாஜக அரசின் பட்ஜெட் பாதிப்புகளை எதிர்த்தும், சிபிஎம், சிபிஐ சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இடதுசாரிகள் இயக்கம்

4.67 மத்திய பாஜக அரசின் நவீன தாராளமயக் கொள்கையை எதிர்த்தும், இந்துத்துவா சக்திகளின் மூர்க்கத்தனமான மதவெறி அரசியல் நடவடிக்கைகளை எதிர்த்தும் - ஆறு இடதுசாரிக் கட்சிகள் கூட்டாக நாடு தழுவிய எதிர்ப்பு இயக்கம் நடத்த அறைகூவல் விடுத்தன. தெருமுனைக் கூட்டங்கள்/பொதுக் கூட்டங்கள், துண்டுப் பிரசுரம், சுவரொட்டிகள் என பரவலான மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது.

'மார்க்சிஸ்ட்' சிறப்பு கருத்தரங்கம்

4.68 மார்க்சிஸ்ட் மாத இதழ் சார்பில் சிறப்பு கருத்தரங்குகள் நடத்தவது, மார்க்சிஸ்ட் இதழுக்கான சந்தாவினை இக்கருத்தரங்க நிகழ்வின் போது பெறுவது என்ற முடிவின்படி சென்னை, மதுரை, திருப்பூர் ஆகிய மையங்களில் சிறப்பு கருத்தரங்குகள் நடந்தன. சென்னையில் 'இடதுசாரிகளின் இன்றைய தேவை' என்பதை முன்னிறுத்தி சிறப்பு கருத்தரங்கு 2014 ஆகஸ்ட் 20 அன்று நடைபெற்றது. தோழர் பிரகாஷ் காரத், மூத்த பத்திரிகையாளர் சசிகுமார், தோழர் ஜி.ஆர். மற்றும் மார்க்சிஸ்ட் மாத இதழ் ஆசிரியர்கள் பங்கேற்று கருத்துரை வழங்கினர். இக்கருத்தரங்கு ஏற்பாடுகளை கட்சியின் சென்னை மாவட்டக்குழுக்கள் சிறப்பாகச் செய்தன. அரங்கம் நிரம்பிய நிகழ்வாக இக்கருத்தரங்கம் நடைபெற்றது. சென்னை அருகமை மாவட்டத் தோழர்கள், சிறு பகுதியும் இந்நிகழ்வில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. திருப்பூரில் "அரசியலமைப்பு சட்டப்பிரிவு 370-ம், மதச்சார்பின்மையும்" என்ற தலைப்பில் தோழர்கள் வாசுகி, அருணன் மற்றும் தலைவர்கள் பங்கேற்ற கருத்தரங்கும், மதுரையில் "தேர்தல் சீர்திருத்தங்கள் - இடதுசாரி பார்வை" எனும் தலைப்பில் தோழர்கள் எம்.ஏ. பேபி, வழக்குரைஞர் வைகை மற்றும் தலைவர்கள் பங்கேற்ற கருத்தரங்கும் திரளான தோழர்கள் பங்கேற்புடன் நடைபெற்றன. இக்கருத்தரங்குகளில் மார்க்சிஸ்ட் இதழுக்கான சந்தாக்களும் வழங்கப்பட்டன.

அரசுப் பள்ளி பாதுகாப்பு இயக்கம்

4.69 அரசுப்பள்ளிகளை பாதுகாப்பது, தமிழ் பயிற்று மொழிக் கல்வியை ஊக்குவிப்பது, அரசுப்பள்ளி கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது உள்ளிட்டவற்றை முன்னிறுத்தி மாநிலக்குழு முடிவின்படி சென்னையில் தோழர் ஜி.ஆர். மற்றும் கல்வியாளர்கள் பங்கேற்ற சிறப்பு கருத்தரங்கு 2014 நவம்பர் 29-இல் நடைபெற்றது. தென்சென்னை மாவட்டக்குழு இதற்கான ஏற்பாடுகளைச் செய்தது.

4.70 திருவண்ணாமலையில் +2 மற்றும் பத்தாம் வகுப்பு தேர்வுகளில் மாணவர்களின் பின்தங்கிய நிலைக்கான காரணங்களை 20 பள்ளிகளில் ஆய்வு செய்து ஆசிரியர் காலிப்பணியிடம் நிரப்புவது, கட்டமைப்பு வசதிகள் செய்வது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி மாவட்டக்கல்வி அலுவலகம் முன்பு வலுவான இயக்கம் நடந்ததைத் தொடர்ந்து கணிசமான காலி பணியிடங்கள் நிரப்பப்பட்டன. இவ்வியக்கம் மக்களிடம் மரியாதையை ஏற்படுத்தியது.

4.71 புதுக்கோட்டை மாவட்டத்தில் நகராட்சி தொடக்கப் பள்ளி மாணவர்கள் வருகை குறைவு காரணமாக மூடப்பட்டது. இதனை எதிர்த்து மக்களிடம் பிரச்சாரம் செய்து, தொடர்ந்து இயக்கம் நடத்தி தற்போது பள்ளி திறக்கப்பட்டு 7 மாணவர்களாக இருந்த அப்பள்ளியில் தற்போது 57 மாணவர்களாக எண்ணிக்கை உயர்ந்துள்ளது. திருமயம் அரிமளத்தில் நமது இயக்கத்தினைத் தொடர்ந்து அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது.

4.72 சென்னையில் மாணவர் சேர்க்கை குறைவு என்று காரணம் சொல்லி சென்னை மாநகராட்சி, மாநகர அரசுப்பள்ளிகளை மூட முனைந்ததை எதிர்த்தும், கல்வித்தரம் - கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வலியுறுத்தியும் 2015 ஜனவரி 7 அன்று மாநகராட்சியை முற்றுகையிடும் போராட்டம் நடைபெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட அரசுப்பள்ளி மாணவர்கள் உட்பட திரளான தோழர்கள் கலந்து கொண்ட இவ்வியக்கத்தின் செய்திகள் அனைத்து ஊடகங்களிலும் வந்தன. அரசு பள்ளிகளை பாதுகாப்பதோடு கல்வித் தரத்தை மேம்படுத்தவும், தனியார் பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்கான 25 சதவிகித இடஒதுக்கீட்டை முறையாக அமல்படுத்தவும் வலியுறுத்திய இயக்கங்களையும் வரும் ஆண்டுகளில் அனைத்து மாவட்டங்களிலும் விரிவாக எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

நிலம், குடிமனை, வேலை, வறட்சி நிவாரணம், பாசன வசதிக்கான இயக்கங்கள்

4.73 நிலமற்றோருக்கு நிலம், விவசாயத் தொழிலாளர்களுக்கு மத்திய சட்டம், வறட்சி நிவாரணம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 2013 பிப்ரவரி 21 அன்று நடைபெற்ற நாடு தழுவிய இயக்கத்தின் பகுதியாக தமிழகத்தில் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் ரயில் மற்றும் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. 70க்கும் மேற்பட்ட மையங்களில் பெண்கள் உட்பட 8000க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

4.74 மனைப்பட்டா கோரி 2012 செப்டம்பர் 26 அன்று அரசு அலுவலகங்கள் முன்பு நடைபெற்ற காத்திருப்பு போராட்டத்தில் 75,000க்கும் மேற்பட்ட கிராமப்புற மக்கள் கலந்து கொண்டனர். இதுபோல் 2013 செப்டம்பரிலும், விவசாய இயக்கத்தின் சார்பில் மனைப்பட்டாவிற்கான இயக்கம் நடத்தப்பட்டது. நாகை, கடலூர், விழுப்புரம், ராமநாதபுரம், திண்டுக்கல், தஞ்சாவூர், திருவள்ளூர், திருச்சி சேலம், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, திருப்பூர், ஈரோடு, பெரம்பலூர், நாமக்கல், கன்னியாகுமரி, தூத்துக்குடி, சிவகங்கை, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மனைப்பட்டா பெறப்பட்டன. திருநீர்மலை மக்களின் போராட்டம் தாம்பரம் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு 6 நாட்கள் நீடித்தது. பட்டா பெறப்பட்டது. ஒட்டப்பிடாரத்தில் 2 நாள் நீடித்த போராட்டத்தில் மனை ஒதுக்கீடு செய்யப்பட்டது.

4.75 கோவில், மடம், அறக்கட்டளை, தேவாலயம், வக்ஃபோர்டுக்கு சொந்தமான இடங்களில் பல தலைமுறைகளாக வசித்துவரும் மக்களுக்கும், குத்தகை விவசாயிகளுக்கும் 2013 டிசம்பரில் தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன்பாக பட்டா வழங்க கோரிய இயக்கம் நடைபெற்றது. நாகையில் 10,000, திருவாரூரில் 3500, தஞ்சையில் 2500 என கிராமப்புற மக்கள் திரண்டு இவ்வியக்கத்தில் பங்கேற்றனர்.

4.76 நீலகிரி, கூடலூர் - பந்தலூர் தாலுகாக்களில் கைவச நிலத்திற்கான பட்டா மற்றும் தனியார் காடுகள் பாதுகாப்புச்சட்டத்தில் பாதகமான பரிந்துரைகளை எதிர்த்து நமது முன்முயற்சியில் 2012 நவம்பர் 18 அன்று அனைத்துக்கட்சிகள் மற்றும் அமைப்புகள் சார்பில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற மனித சங்கிலி இயக்கம் நடைபெற்றது. சக்தியான இவ்வியக்கம் ஊடகங்களில் செய்தியானது. முன்னதாக தொகுதி அளவிலான கடையடைப்பு, பொது வேலைநிறுத்தம் நடைபெற்றது. தூத்துக்குடி தெய்வச்செயல்புரம், திண்டுக்கல் பெரியம்மாபட்டியில் நிலமோசடி பட்டாக்களை ரத்து செய்ய வலியுறுத்திய இயக்கங்கள் நடத்தப்பட்டன. பழனி ஆண்டிப்பட்டி கிராமத்தில் 15 ஏக்கர் உச்சவரம்பு நிலம் 42 பயனாளிகளுக்குப் பெற்றுத் தரப்பட்டது.

4.77 டெல்டா மாவட்டங்களில் மீத்தேன் எரிவாயு திட்டத்தை அமல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது நாம் முன்முயற்சி எடுத்து இதர விவசாய அமைப்புகளையும் இணைத்து நடத்திய இயக்கங்களின் காரணமாக அத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

4.78 கொச்சின் - மங்களூர் எரிவாயு குழாய் இணைப்புத் திட்டம், கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் 136 கிராமங்கள் வழியாக கொண்டு செல்லும் திட்டம் என்பதால் விளைநிலங்கள் பெருமளவு பாதிக்கப்படும். இதனை எதிர்த்த இயக்கங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன. 2013 பிப்ரவரி 26ல் கெயில் அலுவலகம் 2000க்கும் மேற்பட்ட விவசாயிகளால் முற்றுகையிடப்பட்டது. உயர்நீதிமன்றம் தடை விதித்ததைத் தொடர்ந்து குழாய் பதிக்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளது. இது விவசாயிகள் மத்தியில் மதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தற்போது கெயில் நிறுவனம் உச்சநீதிமன்றம் சென்றுள்ளது. தொடர் இயக்கங்கள் நடத்த வேண்டியுள்ளது. இதுபோல் தருமபுரி நல்லம்பள்ளி ஒன்றியம், மதுரை சிவரக்கோட்டை, திண்டுக்கல் குஜிலியம்பாறை ஆகிய பகுதிகளில் 'சிப்காட்' தொழிற்பேட்டை அமைக்க விவசாய நிலங்கள் கையகப்படுத்துவதை தடுத்து நிறுத்தியுள்ளோம். திருவள்ளூர், கண்ணன்கோட்டையில் நீர்த்தேக்கம் அமைக்க நஞ்சை நிலம் கையகப்படுத்துவதை எதிர்த்தும் இயக்கம் நடத்தப்பட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு

4.79 முல்லைப் பெரியாறு அணை தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் 142 அடி உயரத்திற்கு தண்ணீர் தேக்கலாம் என 2014 மே 7 அன்று உத்தரவிட்டது தமிழக மக்களிடம் வரவேற்பை பெற்றுள்ளது. அணைப் பிரச்சனையை பயன்படுத்தி முதலாளித்துவ அரசியல் கட்சிகளும் - பல அமைப்புகளும் இரு மாநில மக்களிடமும் விரோதத்தையும் - இனவெறியையும் தூண்டும் பிரச்சாரங்களை மேற்கொண்ட நிலையில் நாம் பாசன உரிமையை வலியுறுத்தி தொடர் இயக்கங்களை முன்னெடுத்துச் சென்றோம் - இரு மாநில மக்களின் ஒற்றுமையை சிதைக்க முனைந்த சக்திகளுக்கு எதிராகவும் குரல் கொடுத்தோம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது முல்லைப்பெரியாறு பகுதியில் புதிய அணை கட்டுவது குறித்து ஆய்வு செய்வதற்கான அனுமதியை மத்திய வனத்துறை கேரள அரசுக்கு வழங்கியுள்ளது. இது உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு முரணானது என்று மத்திய வனத்துறையை கண்டித்து அறிக்கை விடுத்துள்ளோம். தொடர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது.

4.80 காவிரி குறுக்கே கர்நாடக அரசு மேகதாது மற்றும் சில இடங்களில் தடுப்பணை கட்டுவதை தடுக்க வலியுறுத்தி 2012 ஜூலையில், திருவாரூரில் இடதுசாரி விவசாய சங்கங்கள் சார்பில் நடைபெற்ற காவிரி பாசன உரிமை பாதுகாப்பு சிறப்பு மாநாட்டு அறைகூவலுக்கேற்ப மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் முன்பு 2012 ஜூலை 23 அன்று முற்றுகைப் போராட்டமும், டிசம்பர் 7 அன்று டெல்டா மாவட்டங்களில் பொது வேலைநிறுத்தம் செய்து 32000 பேர் கலந்து கொண்ட ரயில் மறியல் போராட்டமும் நடைபெற்றது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு உச்சநீதிமன்ற தலையீட்டினைத் தொடர்ந்து 2013 பிப்ரவரி 19 அன்று மத்திய நீர்வளத்துறை அமைச்சகத்தால் மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசாணை முறையாக செயல்படுத்தப்படுவதை நாம் மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டியுள்ளது.

ஊரக வேலை உறுதி சட்டம்

4.81 தேசிய ஊரக வேலை திட்டத்தில் சம்பள பாக்கி, வேலை தர மறுப்பது ஆகியவற்றை கண்டித்து 2014 அக்டோபரில் விவசாய சங்கம், தொழிற்சங்கம், மாதர் இயக்கம் சார்பில் கஞ்சிக் கலயம் உடைக்கும் போராட்டம் நடைபெற்றது. நாகை, தஞ்சை, சேலம், திருச்சி, திண்டுக்கல், திருவாரூர், கடலூர், கன்னியாகுமரி, நெல்லை உள்ளிட்ட மாவட்டங்களில் இவ்வியக்கம் சிறப்பாக நடைபெற்றது. 132 மையங்களில் 25000 பேர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து பல இடங்களில் சம்பள பாக்கி வழங்கப்பட்டது. 100 நாள் வேலையை 150 நாட்களாக வழங்கக்கோரி 2014 மே 27 அன்று வி.தொ.ச. சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 25217 பேர் கலந்து கொண்டனர்.

4.82 இத்திட்டத்தில் முறைகேடுகளைக் களையக் கோரி தொடர்ந்து பல்வேறு போராட்டங்களை உள்ளூர் அளவிலும் மாநில அளவிலும் நடத்தி வருகிறோம். 2013 ஆண்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலக முற்றுகைப் போராட்டத்தினைத் தொடர்ந்து தினக்கூலி ரூ. 100/-க்கு மேல் உயர்ந்தது. இவ்வியக்கத்தில் 38043 பேர் கலந்து கொண்டனர். முன்னதாக இதே கோரிக்கைகளை முன்னிறுத்தி 2012 ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் 2 கட்டங்களாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 30000க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். 100 நாள் வேலைத்திட்டத்தில் தொடர்ச்சியாக நாம் மட்டுமே தலையிடு செய்து வருகிறோம். இது விவசாய தொழிலாளர்கள் ஒரு பகுதியினரிடம் நம் மீது நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

4.83 இச்சட்டத்தை தளர்த்துவதற்கு மோடி அரசு கைக்கொண்ட நடவடிக்கைகளைக் கண்டித்து கட்சியின் மத்தியக்குழு நாடு தழுவிய எதிர்ப்பு இயக்கத்திற்கு அறைகூவல் விடுத்தது. 2014 நவம்பரில் தோழர் மாணிக்சர்க்கார் தலைமையில் புதுதில்லியில் தர்ணா நடைபெற்றது. தமிழகத்தில் வட்டார அளவில் தெருமுனைக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் உள்ளிட்ட வடிவங்களில் பரவலாக இவ்வியக்கம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. 2014 டிசம்பரில் திருவண்ணாமலையில் வேலை கேட்கும் அனைவருக்கும் வேலை அளிக்கக்கோரி 14 ஒன்றியங்களில் மனு கொடுக்கும் இயக்கம் நடத்தி 11,000 மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதுபோல் மாநிலமெங்கும் கிராமப்புற மக்களைத் திரட்டி வலுவான இயக்கம் நடத்திட வேண்டியுள்ளது.

வேலை, கல்விக்கான இயக்கங்கள்

4.84 காலிப்பணியிடங்களை நிரப்புவது, சமச்சீர் கல்வியை மேம்படுத்துவது, போதை - ஊழல் எதிர்ப்பு ஆகியவற்றை முன்னிறுத்தி 2012 டிசம்பரில் மாநிலத்தின் 8 முனைகளிலிருந்து 247 இளம் தோழர்கள் 8 குழுக்களாக திருச்சி நோக்கி 4000 கி.மீ. நடை பயண இயக்கத்தை குறிப்பிடத்தக்க நிகழ்வாக வாலிபர் இயக்கம் நடத்தியது. பயணப்பாதை வரவேற்பு நிகழ்ச்சிகளில்

50,000க்கு மேற்பட்ட வாலிபர் சங்க இளைஞர்கள் மற்றும் லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் திரண்டனர். உண்டியலில் ரூ. 3.4 லட்சம் நிதி வசூலானது. 7 லட்சம் துண்டுப் பிரசுரம், 1 லட்சம் சிறிய பிரசுரம், மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. 800 இடங்களில் புதிய தொடர்புகள் கிடைத்தன. வாலிபர் சங்க கிளைகளை இயக்க, தோழர்களை இயங்கச் செய்ய இவ்வியக்கம் பயன்தந்தது.

4.85 கல்வி கட்டண உயர்வு, தேர்வு கட்டண உயர்வுகளுக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டங்களை மாணவர் இயக்கம் நடத்தியுள்ளது. அரசுக் கல்லூரிகளை மேம்படுத்தவும் - அரசு உதவி பெறும் கல்லூரிகளில் நடைபெறும் கல்விக் கட்டணக் கொள்ளையை எதிர்த்தும் மாணவர்களிடம் கையெழுத்து இயக்கம் மற்றும் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்ட வகுப்பு புறக்கணிப்பு போராட்டங்கள் நடைபெற்றன. தனியார் பள்ளிகளில் நடைபெறும் கல்விக் கட்டணக் கொள்ளையை தடுத்திட வலியுறுத்தி பள்ளிக்கல்வி அலுவலகம் முற்றுகையிடப்பட்டது. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்குட்பட்ட 10 கல்லூரிகளில் கல்வி கட்டணம் ரூ. 2,500லிருந்து ரூ. 13,300 ஆக உயர்த்தப்பட்டதை எதிர்த்து நடத்தப்பட்ட மாணவர்கள் முற்றுகையைத் தொடர்ந்து கட்டண உயர்வு திரும்பப் பெறப்பட்டது. இதுபோல் கோவில்பட்டி ஜி.வி.என். கல்லூரியில் கட்டண உயர்வு மற்றும் பழிவாங்கலை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்களைத் தொடர்ந்து கோரிக்கைகள் ஏற்கப்பட்டன.

4.86 2013 செப்டம்பரில் தமிழக உயர்கல்வி மாமன்ற பரிந்துரையை ஏற்று கல்வி நிறுவனங்களில் தேர்வுக் கட்டணங்கள் இரு மடங்காக உயர்த்தப்பட்டதை எதிர்த்து மாநிலமெங்கும் மாணவர்கள் ஆர்ப்பாட்டம், முற்றுகை, வகுப்பு புறக்கணிப்பு என லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் போராட்டத்தினைத் தொடர்ந்து உயர்த்தப்பட்ட கட்டணத்தை உயர் கல்வித்துறை திரும்பப் பெற்றது. புதுச்சேரி மத்திய பல்கலையிலும், வேலூர் - திருவள்ளூர் பல்கலையிலும் உயர்த்தப்பட்ட கட்டணங்கள் ஓரளவு குறைக்கப்பட்டன. கோவை மாவட்ட சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் உள்ள கட்டண கொள்ளை, அபராதம், அடக்குமுறைகளை எதிர்த்து பொறியியல் கல்லூரி மாணவர்களின் தொடர்ச்சியான போராட்டங்களினால் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு சில கல்லூரிகளில் கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. அரசுக் கல்லூரி, அரசு உதவிபெறும் கல்லூரி மாணவர்களுக்கு இலவச மடிக் கணினி வழங்க வலியுறுத்தி நடைபெற்ற போராட்டங்களைத் தொடர்ந்து மடிக்கணினி வழங்குவதாக அரசு அறிவித்தது.

4.87 கோவை சி.பீ.எம்., ஈரோடு சி.என்.சி. அரசு உதவி பெறும் கல்லூரிகளின் நிர்வாகச் சீர்கேடுகள், முறைகேடுகளை எதிர்த்தும், இக்கல்லூரிகளை அரசே ஏற்று நடத்த வலியுறுத்தியும் வகுப்பு புறக்கணிப்பு, முற்றுகை, காலவரையற்ற உண்ணாவிரதம் உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் நடைபெற்ற தொடர்ச்சியான போராட்டங்களைத் தொடர்ந்து அரசுக் கல்லூரிகளாக அறிவிப்பது குறித்து பரிசீலிப்பதாக கல்வித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனை நடைமுறைப்படுத்த வலுவான தொடர் இயக்கங்கள் நடத்த வேண்டியுள்ளது.

4.88 புதுச்சேரி மத்திய பல்கலையில் ராகிங் மற்றும் மாணவிகள் மீதான பாலியல் சீண்டலை எதிர்த்தும், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் பல்கலை மாணவர்களோடு இணைந்து தொடர் போராட்டங்கள் நடைபெற்றன. பாதிக்கப்பட்ட மாணவிகள் சார்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கில் பல்கலை நிர்வாகத்திற்கு ரூ. 40,000 அபராதம் விதித்தும், மாணவிகளுக்கு சிறப்பு வகுப்பு நடத்தி தேர்வுகள் நடத்தவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இது பல்கலை மாணவர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. தற்போது பல்கலை நிர்வாகம் மேல்முறையீடு செய்துள்ளது.

4.89 தமிழ்மொழி வழிக் கல்வியை, கல்வி உரிமைச் சட்டத்தை செயல்படுத்தவும், தனியார் பள்ளிகள் 25 சதவிகித மாணவர் சேர்க்கையை உறுதிப்படுத்தவும் வலியுறுத்திய இயக்கங்கள் அனைத்து மாவட்டங்களிலும் முற்றுகை உள்ளிட்ட பல வடிவங்களில் பல ஆயிரம் மாணவர்கள் பங்கேற்புடன் நடைபெற்றுள்ளன. தொடர்ந்து விரிவான வலுவான இயக்கத்தை நடத்துவதன் மூலமே இதில் நாம் வெற்றிகாண முடியும்.

4.90 உயர்கல்வியில் அந்நிய பல்கலைக்கழகங்கள் அனுமதிப்பது, தனியார் சட்டக் கல்லூரிகளை அனுமதிப்பது ஆகியவற்றை எதிர்த்தும், அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் மாணவர் பேரவை தேர்தல் நடத்துவது ஆகியவற்றை முன்னிறுத்தியும் மாணவர்களின் தொடர் இயக்கங்கள் / போராட்டங்கள் இக்காலத்தில் நடந்துள்ளன.

4.91 தாராளமய கொள்கை செயலாக்கம் காரணமாக இக்காலத்தில் வேலை கிடைப்பதும், கல்வி பெறுவதும் பெரும் பிரச்சனையாக மாறியுள்ளன. வேலை வாய்ப்புகளை உருவாக்கும் உற்பத்தித் துறை சார்ந்த தொழில்கள் வளர்த்தெடுக்கப்படுவதில்லை. அரசுத்துறை, பொதுத்துறை காலிப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படுவதில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் வேலை வாய்ப்புக்கள் நிரந்தரத்தன்மையற்றதாக மாற்றப்படுகின்றன. எனவே வேலை - கல்வி உரிமைக்கான கிளர்ச்சி இயக்கங்களை இளைஞர் - மாணவர் இயக்கங்கள் மட்டுமல்லாது கட்சி தலைமையீடு செய்து அனைத்து மக்களின் இயக்கமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

போதை எதிர்ப்பு - விழிப்புணர்வு இயக்கம்

4.92 தமிழகத்தில் அதிகரித்து வரும், குறிப்பாக அடித்தட்டு உழைப்பாளி மக்கள், இளைஞர்கள் மாணவர்களிடம் அதிகரித்துள்ள போதை பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு இயக்கம் வெகுஜன அமைப்புகள் சார்பில் தொடர்ச்சியாக பல வடிவங்களில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. 2012 டிசம்பரில் வாலிபர் இயக்கம் நடத்திய 4000 கி.மீ. நடைபயண இயக்கத்தில் 'போதை எதிர்ப்பு' பிரச்சாரம் எடுத்துச் செல்லப்பட்டது. இதனைத் தொடர்ந்து திருச்சி, திருவள்ளூர், சேலம், கோவை ஆகிய மையங்களில் பெருந்திரளான இளைஞர்கள் பங்கேற்புடன் மாரத்தான் போட்டிகள் நடத்தப்பட்டன. இதர மாவட்டங்களில் போதை எதிர்ப்பு பேரணி, மனித சங்கிலி, வீதிக் கருத்தரங்கம், இளைஞர்களின் உறுதி ஏற்பு நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் என மக்கள் கவனத்தை ஈர்க்கும் பல வடிவங்களில் போதை எதிர்ப்பு இயக்கங்கள் நடத்தப்பட்டன. மக்களுக்கு இடையூறாக உள்ள இடங்களில் டாஸ்மாக் கடைகளுக்கு பூட்டுபோடும் போராட்டங்களும் நடைபெற்றுள்ளன.

4.93 2013ல் மாதர் இயக்கம் நடத்திய மாநில பிரச்சார பயணத்தின் போதும் 'போதை எதிர்ப்பு' பிரச்சாரம் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. இதனைத் தொடர்ந்து 18 மாவட்டங்களில் 40 மையங்களில் மக்கள் கூடும் இடங்களில் உள்ள டாஸ்மாக் கடைகளை அகற்றக் கோரி 4590 பெண்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 2014ல் டாஸ்மாக் கடைகளுக்கு பூட்டுப்போடும் போராட்டம் நடைபெற்றது. 8000க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்ட இவ்வியக்கத்தின்போது போலீஸ் தடைகளை மீறி 12 கடைகளுக்கு பூட்டு போடப்பட்டன. மேலும் பல இடங்களில் கடைகளை மூடுவதற்கு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

4.94 இவ்வியக்கங்கள் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றன. ஊடகங்களும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டன. விழிப்புணர்வு பிரச்சாரத்தையும், மக்களுக்கு இடையூறான மையங்களில் நேரடி நடவடிக்கைகளையும் - பாதிக்கப்படும் மக்களையும் பங்கேற்கச் செய்து தொடர்ந்து எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

இயக்கங்கள் - போராட்டங்கள் - அரசியல் பணிகள்

சுகாதாரம் - மருத்துவ வசதிக்கான இயக்கம்

4.95 ‘அனைவருக்கும் சுகாதாரம்’ எனும் முழக்கத்தை முன்னிறுத்தி வடசென்னையில் ஸ்தல அளவில் அரசு மருத்துவமனைகளில் ஆய்வு நடத்தி கோரிக்கைகளை முன்னிறுத்தி தொடர் பிரச்சாரம், கிளர்ச்சி இயக்கங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. ‘மருத்துவம் நமது உரிமை எனும் தலைப்பில் கட்சியின் மாநிலச் செயலாளர், மருத்துவ நிபுணர்கள், அறிஞர்கள், சமூக ஆர்வலர்கள் பங்கேற்ற நடைபெற்ற கருத்தரங்க நிகழ்வினைத் தொடர்ந்து கட்சி, வர்க்க - வெகுஜன அமைப்புகள், மத்திய தர அமைப்புகள், சமூக ஆர்வலர்கள் இணைந்து (2013 ஜனவரி 21 அன்று) சென்னை அரசு பொதுமருத்துவமனை முன்பு நீண்ட மனிதச் சங்கிலி இயக்கம் நடைபெற்றது. சாலையில் சென்ற பொதுமக்கள் சிறுபகுதியும் நம்மோடு கரம் கோர்த்தது குறிப்பிடத்தக்கது. ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இவ்வியக்கத்தினைத் தொடர்ந்து சென்னை மாநகராட்சியில் 24 மணி நேர மருத்துவ சேவை மையங்களை செயல்படுத்துவது, புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவமனை அமைப்பது, மண்டலத்திற்கு ஒரு பல் மருத்துவமனை அமைப்பது, காலிப் பணியிடங்களை நிரப்புவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று அரசுத் தரப்பில் எடுக்கப்பட்ட முடிவு நமது இயக்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.

4.96 திருச்சி அரசு மருத்துவமனையில் சுகாதார சீர்கேடுகளைக் களைவது, தரம் உயர்த்துவது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி தொடர்ச்சியாக 5 நாட்கள் திரளான பங்கேற்புடன் நடைபெற்ற உண்ணாவிரதம் மற்றும் கையெழுத்து இயக்கத்தினைத் தொடர்ந்து மருத்துவமனையில் சுகாதாரப்பணிகள், படுக்கை வசதிகள் மேம்படுத்தப்பட்டன. ரூபாய் 186 கோடியில் புதிய கட்டிடப்பணியும் முடிக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கம் மக்களிடம் வரவேற்பினைப் பெற்றது.

4.97 மதுரை ராஜாஜி மருத்துவமனையை மேம்படுத்த 100 கோடி ஒதுக்கீடு செய்ய வலியுறுத்தி மக்களிடம் பிரச்சாரம், கையெழுத்து இயக்கம், உண்ணாவிரதம் என தொடர் இயக்கங்கள் நடத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாக நவீன மருத்துவ சாதனங்கள்-கருவிகள் வாங்கவும், மேம்பாட்டுப் பணிகளுக்காவும் ரூ. 100 கோடி வரை ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதுபோல் மருந்து-மாத்திரை வாங்குவதில் முறைகேடுகள் நடைபெற்றதை எதிர்த்து இயக்கங்கள் நடத்தப்பட்டன. தற்போது மருந்து-மாத்திரை கொள்முதல் செய்ய புதிய வழிகாட்டு வரைமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மதுரை நகர், புறநகர் மாவட்டக்குழுக்களின் இவ்வியக்கம் மக்களிடம் வரவேற்பைப் பெற்றது.

4.98 நெல்லை மாவட்டத்தில் ஸ்தல மருத்துவ வசதிக்கான கோரிக்கைகளை முன்னிறுத்தி பல்லாயிரம் துண்டு பிரசுரங்களை விநியோகித்து, மருத்துவ அதிகாரிகளிடம் மனுக்கள் கொடுத்து 16 மையங்களில் மாலை நேர தர்ணா / ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தொடர்ந்து நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முன்பு பெருந்திரள் உண்ணா விரதப் போராட்டம், இதன் தொடர்ச்சியாக வர்க்க, வெகுஜன அமைப்புகள் - மத்திய தர அமைப்புகள் இணைந்து மனிதச் சங்கிலி இயக்கம் நடத்தப்பட்டது. பொதுமக்களின் ஆதரவைப் பெற்ற தொடர் இயக்கங்கள் / போராட்டங்களின் விளைவாக ஆரம்ப சுகாதார மையங்களில் 64 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டதும், நெல்லை மருத்துவக் கல்லூரியை மேம்படுத்த 80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதும் இவ்வியக்கத்தின் வெற்றியாகும். மக்களிடம் இவ்வியக்கம் நல்ல ஆதரவைப் பெற்றது.

4.99 புதுச்சேரியில் ஜிப்மர் அரசு மருத்துவமனை நிர்வாகத்தால் மருத்துவ சேவைக்கு கட்டணம் அறிவிக்கப்பட்டதை எதிர்த்து கட்சி உள்ளிட்ட ஜிப்மர் பாதுகாப்பு போராட்டக்குழு சார்பில்

இயக்கங்கள் திட்டமிடப்பட்டன. புதுச்சேரி, கடலூர், விழுப்புரம் ஆகிய 3 மாவட்டங்கள் இணைத்து மருத்துவ சேவை கட்டணத்தை திரும்பப் பெற வலியுறுத்தும் கருத்தரங்கம் நடைபெற்றது. தொடர்ச்சியாக 19 மையங்களில் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இவ்வியக்கங்களை தொடர்ந்து மருத்துவ சேவை கட்டணம் நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வியக்கம் ஜிப்மர் மருத்துவ சேவையை பயன்படுத்தும் மக்களிடம் வரவேற்பை பெற்றது.

4.100 நவீன தாராளமயக் கொள்கை செயலாக்கத்தினால் மருத்துவம் - சுகாதாரம் மேலும் மேலும் வர்த்தகமயமாகி வரும் சூழலில் பொதுச்சுகாதாரம் - மருத்துவ வசதிகளை மேம்படுத்த வலியுறுத்தும் இயக்கங்களை முன்னெடுத்துச் செல்வது மாற்றுக் கொள்கைகளின்பால் மக்கள் கவனத்தை ஈர்க்கவும், நமது ஆதரவு தளங்களை விரிவுபடுத்தவும் உதவும்.

கிரானைட் - நிலக்கரி ஊழல் எதிர்ப்பியக்கம்

4.101 நவீன தாராளமயக் கொள்கையின் பகுதியாக முதலாளித்துவ அரசியல் கட்சிகள், அதிகாரிகள், பெரு முதலாளிகள் இணைந்து தேசத்தின் இயற்கை வளங்களை சூறையாடுகின்றனர். இதனால் நிலக்கரி, இரும்புத்தாது வெட்டியெடுப்பதில் அரசுக்கு பல லட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதை மத்திய தணிக்கைத்துறை வெளிப்படுத்தியது. தமிழகத்தில் கிரானைட் கொள்ளையில் மதுரையில் மட்டும் ரூபாய் 30,000 கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுபோல் தாது மணல், ஆற்று மணல், தண்ணீர் மற்றும் கனிம வளங்களும் கொள்ளையடிக்கப்படுகின்றன.

4.102 மேற்கண்ட ஊழலை எதிர்த்தும், கொள்ளையடித்த சொத்துக்களை கைப்பற்றவும், ஊழலுக்கு காரணமானவர்கள் அனைவர் மீதும் உறுதியான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் 2012 ஆகஸ்ட் 24,25 தேதிகளில் கண்டன ஆர்ப்பட்டங்கள், தெருமுனை கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் பரவலாக நடைபெற்றன. ஊழலை அம்பலப்படுத்தி பல லட்சம் துண்டு பிரசுரங்கள், பல்லாயிரம் சுவரொட்டிகள் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டன. சட்டமன்றத்திலும் எடுத்துச் சென்றோம். நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருச்சி உட்பட பல மாவட்டங்களில் மணல் குவாரிகளை மூடவும், விசாரணை நடத்தவும் தமிழக அரசு உத்தரவிட்டது. சென்னை அருகே திருநீர்மலை கல்குவாரி மூடப்பட்டது. சில பகுதிகளில் கட்சிக்கு புதிய தொடர்புகள் கிடைத்துள்ளன. எனினும் முன்வந்த பல பணிகளால் இவ்வியக்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்படவில்லை.

4.103 மதுரை புறநகர்ப் பகுதியில் சட்ட விதிகளுக்கு மாறாக கிரானைட் கற்கள் வெட்டி எடுக்கப்படும் கொள்ளை வெளிப்பட்டபோது, அதனை எதிர்த்து மதுரையிலும் மேலூரிலும் சிபிஐ விசாரணை கோரி இயக்கங்கள் நடத்தப்பட்டன. மாவட்டக்குழு சார்பில் சிபிஐ விசாரணை கோரி வழக்கும் தொடுக்கப்பட்டது.

4.104 வேலூர் மாவட்ட பாலாற்று படுகையில் இரவு பகலாக நடந்த மணல் கொள்ளையின் விளைவாக நிலத்தடி நீர் கடுமையாக பாதிக்கப்பட்டது. குப்பை, மருத்துவக் கழிவுகள் மற்றும் ரசாயனக் கழிவுகளால் பாலாற்றுப் பகுதி மேலும் நஞ்சாக்கப்பட்டது. அரக்கோணம் அருகே மணல் கொள்ளையைத் தடுக்கச் சென்ற காவலர் படுகொலை செய்யப்பட்டார். சுற்று வட்டார மக்கள், வியாபாரிகளிடம் எதிர்ப்புணர்வு ஏற்பட்டது. இந்நிலையில் மணல் கொள்ளையை எதிர்த்தும், நீர்வளம் பாதுகாக்க வலியுறுத்தியும் வாலாஜாபாத் தொடங்கி விஷாரம் வரை 17 கி.மீ நடைபயணப் பிரச்சார இயக்கமும் பொதுக் கூட்டமும் நடத்தப்பட்டன. மாநிலச் செயலாளர் மற்றும் தலைவர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து பாலாற்றுப் படுகை மாதனூர் தோட்டாளத்தில் மணல் எடுப்பது நிறுத்தப்பட்டது. இவ்வியக்கம் இஸ்லாமியர் உள்ளிட்ட அப்பகுதி பொதுமக்கள், வியாபாரிகளிடம் வரவேற்பைப் பெற்றது.

இயக்கங்கள் - போராட்டங்கள் - அரசியல் பணிகள்

சமூக ஒடுக்குமுறை எதிர்ப்பு

தலித் - பழங்குடி மக்கள், பெண்கள் சிறுபான்மையினர் உரிமைக்கான இயக்கங்கள்

4.105 செப்டம்பர் 30 தோழர் பி. சீனிவாசராவ் நினைவு தினத்தை முன்னிட்டு, கடந்த 3 ஆண்டுகளில் கோவை காளப்பட்டி மாரியம்மன் கோவில், ஈரோட்டில் வாவிக்கடை அண்ணமார், மதுரைவீரன் கோவில், எழுமாத்தூர் சத்தீஸ்வரன் கோவில், திருவண்ணாமலையில் சிறுவள்ளூர் நாராயண பெருமாள் கோவில் ஆகிய 4 கிராமங்களில் கோவில் நுழைவு போராட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. புதுச்சேரியில் கலிதீர்த்தான்குப்பம் திரெளபதி அம்மன் கோவில் நுழைவு அறிவிப்பைத் தொடர்ந்து கட்சியின் மதகடிப்பட்டு அலுவலகம் சாதீய சக்திகளால் தீயிடப்பட்டது. கண்டன இயக்கங்கள் நடத்தினோம். இதன் தொடர்ச்சியாக குறிப்பிட்ட தேதிக்கு முன்னரே, அரசு அதிகாரிகள் தலித் மக்களை கோவிலுக்குள் அழைத்துச் சென்றது நமக்கு கிடைத்த வெற்றியாகும்.

4.106 நீலகிரி குன்னூர் காந்திபுரத்தில் தனியார் நிறுவனம் அமைத்திருந்த தீண்டாமை கதவு, திண்டுக்கல் மரியநாதபுரம் மற்றும் வேலூர் வாலாஜாபேட்டை படவேட்டம்மன் கோவில் தீண்டாமை சுவர்கள், திருவண்ணாமலை அம்பேத்கர் நகர் பாதை மற்றும் சேலம் காட்டுமரக்குட்டை பாதை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு தலித் மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

4.107 தஞ்சை ஈச்சன்கோட்டை மற்றும் வீரசிங்கம்பேட்டை, மதுரை வாடிப்பட்டி, விருதுநகர் அனுப்பம் குளம் ஆகிய இடங்களில் உள்ள முடிதிருத்துமிடங்களில் தலித் மக்களுக்கான தடைகள் அகற்றப்பட்டன. திருவண்ணாமலை காப்பலூரில் 3 ஏக்கர் பஞ்சமி நிலம் மீட்கப்பட்டது. நாகை புதுச்சேரி மற்றும் அரியலூர் ஆலாத்தியூர் ஆகிய கிராமங்களில் மயான உரிமை, விருதுநகர் வி. முத்துலிங்கபுரத்தில் பொதுத்தொட்டியில் குளிக்கும் உரிமை பெறப்பட்டன. ஈரோடு சிவகிரி சின்னியம்பாளையத்தில் 53 தலித் குடும்பங்களின் குடிமனை நிலம் மீட்கப்பட்டது.

சாதீய சக்திகளின் தாக்குதலுக்கு எதிராக

4.108 திவ்யா - இளவரசன் சாதி மறுப்புத் திருமணத்தை ஏற்க மறுத்த சில சாதிய சக்திகள் 2012 நவம்பர் 7 அன்று தருமபுரி நத்தம்காலனி, கொண்டம்பட்டி, அண்ணாநகர் ஆகிய கிராமங்களில் உள்ள தலித் மக்கள் வீடுகளை கொள்ளையடித்து பெட்ரோல் குண்டு வீசித் தாக்கி அழித்தன. தோழர்கள் கே. பாலகிருஷ்ணன் எம்.எல்.ஏ., பி. சம்பத், பி.ஆர். நடராஜன் எம்.பி., க. பீம்ராவ் எம்.எல்.ஏ., பி. டில்லிபாபு எம்.எல்.ஏ., மற்றும் தலைவர்கள் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தனர். உடனடியாக மாநிலம் முழுவதும் சாதீய சக்திகளின் தாக்குதலுக்கு எதிராக கட்சி மற்றும் வர்க்க - வெகுஜன அமைப்புகள் கண்டன இயக்கங்கள் நடத்தின. இதர ஜனநாயக அமைப்புகளும் ஆதரவு குரல் எழுப்பின. டிசம்பர் 5 அன்று தருமபுரியில் மாநிலச் செயலாளர் தலைமையில் 2000க்கும் மேலான மக்கள் பங்கேற்புடன் வலுவான கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கட்சி மற்றும் மத்திய தர அமைப்புகள் சார்பில் உடனடி நிவாரணமும் வழங்கப்பட்டது. மாதர்சங்கம் ரூ. 1 லட்சம் நிதி திரட்டி 3 கிராமங்களுக்கு வழங்கியது. வன்முறையை எதிர்த்து தீண்டாமை ஒழிப்பு முன்னணி சார்பில் தொடரப்பட்ட வழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 7 கோடியே 32 லட்சம் வழங்கிட நீதிமன்றம் உத்தரவிட்டது. நமது தொடர்ச்சியான தலையீடுகள் தலித் மற்றும் இதர பிரிவு மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியது.

4.109 இதுபோல் மாமல்லபுரம் அருகே நடந்த பாமகவின் வன்னியர் சங்க மாநாட்டு நிகழ்வின் போதும், பாச்சாரபாளையம், மேலிரும்பு, மரக்காணம், உளுந்தை உள்ளிட்ட கிராமங்களில் தலித் மக்களின் வீடுகள் தாக்கப்பட்டு தீயிடப்பட்டன. இதனை எதிர்த்தும் கண்டனம் முழங்கினோம்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து வட மாவட்டங்களில் சாதி ரீதியான பதற்ற நிலைமை பரவியது. காவல்துறை 144 தடை விதித்தது. இதனிடையே "வேண்டாம் சாதிய மோதல்" என்பதை முன்னிறுத்தி காவல்துறையின் தடையை மீறி விழுப்புரத்தில் வடமாவட்ட இளைஞர்களைத் திரட்டி வாலிபர் இயக்கம் தொடர் முழக்கப் போராட்டத்தை நடத்தியது முக்கிய நிகழ்வாகும். இவ்வியக்கத்தில் 1263 பேர் கலந்து கொண்டனர்.

சாதி மோதல் எதிர்ப்பு – மக்கள் ஒற்றுமை இயக்கம்

4.110 இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடியில் காவல்துறை நடத்திய துப்பாக்கிச் சூடு சம்பவத்தைத் தொடர்ந்து சாதிய மோதலும்-தென் மாவட்டங்களில் பதட்ட நிலைமையும் ஏற்பட்டது. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களிடையே மோதல் தவிர்த்து ஒற்றுமை வலியுறுத்தும் உண்ணாவிரத இயக்கம் மதுரையில் சிபிஐ(எம்)-சிபிஐ சார்பில் நடத்தப்பட்டது. மதுரை மற்றும் அருகமை மாவட்டங்களிலிருந்து 1000க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். சிபிஐ சார்பிலும் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். மக்களிடம் வரவேற்பைப் பெற்ற இவ்வியக்கம் முக்கியச் செய்தியாக ஊடகங்களில் வெளிவந்தன.

4.111 கடலூர், பண்ருட்டி மேலிருப்பு கிராமத்தில் தலித் – வன்னியர் இளைஞர்களிடையே ஏற்பட்ட தகராறு சாதி மோதலாக மாறியது. தலித் மக்களின் 10 வீடுகள் கொளுத்தப்பட்டன. இதனை எதிர்த்து இயக்கம் நடத்தி வழக்குப் பதிவு செய்யப்பட்டு பாதிக்கப்பட்ட தலித் மக்கள் குடும்பங்களுக்கு ரூ.5.80 லட்சம் இழப்பீட்டுத் தொகை பெறப்பட்டது. குறிஞ்சிப்பாடி பச்சாரப்பாளையம் கிராமத்தில் தலித் இளைஞர்கள் வன்னியப் பெண்களை கேலி செய்ததாகச் சொல்லி 10க்கும் மேற்பட்ட தலித் மக்கள் வீடுகள் தாக்கப்பட்டன. உண்மையில் தலித் இளைஞர்கள் சிலர் காவலர் பணிக்கு தேர்வானதால் ஏற்பட்ட காழ்ப்புணர்வால்தான் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனை எதிர்த்த இயக்கத்தினைத் தொடர்ந்து இழப்பீட்டுத் தொகை ரூ.5 லட்சம், 8 பசுமை வீடுகள் கட்டித் தருவது, தனி ரேசன் கடை அமைப்பது உள்ளிட்டவை நிறைவேற்றப்பட்டன.

4.112 சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டவர்களை, காதலர்களை கொலை செய்யும் கௌரவக் கொலைகள் நடைபெறும்போது தலையீடு செய்து குற்றவாளிகள் மீது உறுதியான நடவடிக்கை எடுக்க வற்புறுத்துகிறோம். சில இடங்களில் கண்டன இயக்கங்கள் நடத்துகிறோம். சாதி மறுப்புத் திருமண ஆதரவு கருத்தரங்குகள், பிரச்சாரங்கள் செய்கிறோம். தீண்டாமை வன்கொடுமை எதிர்ப்பு மாநில பிரச்சார பயணம் 9 குழுக்களாக நடத்தப்பட்டுள்ளது. ஆய்வரங்குகள், பொது விசாரணை மன்றங்களும் நடத்தப்பட்டன. சாதி மத வெறிக்கு எதிரான பொது நிகழ்ச்சிகள் கலை இலக்கிய அமைப்புகள் இணைந்தும் நடத்தப்படுகின்றன. விழிப்புணர்வு பிரசுரமும் வெளியிடப்படுகின்றன.

4.113 இக்காலகட்டத்தில் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் பிருந்தா காரத் கலந்து கொண்ட கௌரவக் கொலைகள் எதிர்ப்பு சிறப்பு மாநாடு புதுக்கோட்டையில் நடைபெற்றது. கௌரவக் குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களும் பங்கேற்றனர்.

இதர தலையீடுகள்

4.114 தலித் மக்கள் மீதான பாலியல் வல்லுறவுகள், சிவகங்கையில் தலித் ஊராட்சி மன்றத் தலைவர் சேகர் உள்பட தலித் மக்கள் மீதான 40க்கும் மேற்பட்ட தாக்குதல்கள், தஞ்சாவூர் பொய்யுண்டார்கோட்டையில் எரிந்து கொண்டிருந்த தலித்தின் சடலத்தை தூக்கி வீசியது உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட மயானப் பிரச்சனைகள், காஞ்சிபுரம் தொடூரில் அம்பேத்கர் கல்வெட்டு நிறுவியதற்காக கொலை செய்யப்பட்ட முனுசாமி உள்ளிட்ட 16க்கும் மேற்பட்ட கொலைகள், சிவகங்கை பாப்பா குளத்தில் 28 தலித் மக்கள் வீடுகள் இடிப்பு உள்பட 11 குடியிருப்பு தொடர்பான பிரச்சனைகள், கரூர் கொக்கம்பட்டியில் ஊட்டச்சத்து மையத்தில் தனி உணவுத்

தட்டு உள்பட 9 பள்ளிக்கூடம் தொடர்பான பிரச்சனைகள், திருவாரூர் மாஞ்சேரி தலித் மக்களின் சாமி ஊர்வலம் உள்பட 23 வழிபாடு தொடர்பான பிரச்சனைகள், கரூர் செக்கம்பட்டியில் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் கே. வரதராஜன் தலைமையில் செருப்பணிந்து செல்லும் போராட்டம், காஞ்சிபுரம் நத்தாநல்லூரில் நாமும், டி.பி.ஐ.யும் இணைந்து நடத்திய அடஞ்சியம்மன் கோவில் நுழைவுப் போராட்டம், தலித் மக்களின் பாதை தொடர்பான ஏராளமான பிரச்சனைகளில் தலையீடு செய்து தீர்வு காணப்பட்டுள்ளன, தலித் மக்களின் உரிமைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

அருந்ததிய மக்கள் பிரசச்னை - தலையீடுகள்

4.115 அருந்ததிய மக்கள் உள்ஒதுக்கீட்டை ஆதரித்து சென்னையில் 1000க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்ற உண்ணாவிரதம் 2012 நவம்பர் 20 அன்று நடைபெற்றது. இதற்கு ஆதரவாக உச்சநீதிமன்றத்தில் வழக்கும் தொடுக்கப்பட்டுள்ளது. கையால் மலம் அகற்றும் தடைச்சட்டத்தை கறாராக செயல்படுத்த வலியுறுத்தி 2013 டிசம்பர் 9 அன்று சுமார் 2000 பேர் பங்கேற்ற மறியல் நடைபெற்றது. இதுபோல் பாதாளச் சாக்கடை மற்றும் செப்டிக் டேங்க் மரண நிகழ்வுகளுக்கு எதிராக தொடர்ச்சியான இயக்கங்கள் நடத்தப்படுகின்றன. பணியின்போது ஏற்பட்ட 3 மரணங்களுக்கு ரூ. 12 லட்சம் நிவாரணமும் பெற்றுத் தரப்பட்டுள்ளது. எஸ்.சி., எஸ்.டி. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை ரத்து செய்திட பாமக சார்பில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கிற்கு எதிராக நம் தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4.116 மேலும் ஆசிரியர் தகுதித்தேர்வில் இட ஒதுக்கீட்டு பிரிவினருக்கு மதிப்பெண் தளர்வு கோரி போராடினோம் - 43652 பேர் பயனடைந்தனர். வங்கித் தேர்வுகளில் இடஒதுக்கீட்டு விதிமீறல்களை அம்பலப்படுத்தி இடஒதுக்கீட்டு பிரிவினருக்கு பணி கிடைக்கச் செய்துள்ளோம்.

4.117 மேற்கண்ட தலையீடுகள், போராட்டங்களின் விளைவாக ஒரு பகுதி தலித் - பழங்குடி மக்களிடமும் நமது செல்வாக்கு விரிவடைந்துள்ளது. தலித் மக்களை அமைப்புகளாக்கி செயல்படுகிற சில தலித் மக்கள் அமைப்புகள் அவர்கள் நிகழ்ச்சிகளுக்கு நம்மை அழைப்பது - நமது இயக்கங்களில் அவர்கள் பங்கேற்பது எனும் நிலைமை சற்று அதிகரித்துள்ளது. அதேசமயம் அடையாள உணர்வை முன்னிறுத்தி தலித் மக்களை அணிதிரட்டி செயல்படும் பிரதான அமைப்புகள் தங்கள் செல்வாக்கு தளங்களில் சரிவு ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் எச்சரிக்கையோடு செயல்படுவதை உணர முடிகிறது. எனினும் கூட்டுமேடையை, கூட்டு இயக்கங்களை மேலும் பலப்படுத்திட வேண்டும். சாதீய ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டத்தோடு வாழ்வுரிமைக்கான போராட்டத்தையும் இணைத்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும். நமது தலையீடுகளின் போது ஏற்படும் தொடர்புகளை வர்க்க வெகுஜன அமைப்புகளில் சேர்த்திட முயற்சிக்கப்படுகின்றன. 50க்கும் மேற்பட்ட இடங்களில் கட்சி கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் ஏற்படும் தொடர்புகளை அமைப்பாக்குவதில் நமது கவனம் போதாது. இதில் கட்சிக் கமிட்டிகள், கிளைகள் கவனம் செலுத்த வேண்டும்.

பழங்குடி மக்கள் உரிமைக்கான இயக்கம்

4.118 வன உரிமைச்சட்ட அமலாக்கம், சாதி சான்றிதழ் உடன் வழங்குதல், வாச்சாத்தி மக்களுக்கு நிவாரணம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி சென்னை கோட்டை முன்பு சுமார் 10,000பேர் பங்கேற்ற முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. தோழர் பிருந்தகாரத் மற்றும் மாநிலத் தலைவர்கள் கலந்து கொண்ட இவ்வியக்கத்தின்போது நடந்த பேச்சுவார்த்தையில் கோரிக்கைகளை பரிசீலிப்பதாக அரசு உறுதியளித்தது. கோவை, திருப்பூர், கொடைக்கானல் பகுதிகளில் உள்ள 'புலையன்' பிரிவு மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வலியுறுத்தி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து 'பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க' தமிழக அரசு

மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. இதுபோல் 'குறும்பன்' பிரிவு மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது குறித்து தேசிய பழங்குடியினர் ஆணையம் பரிசீலித்து வருகிறது. இது நமது இயக்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.

4.119 உயர்நீதிமன்ற உத்தரவின்படி காலி பணியிடங்களை நிரப்பவும் - பழங்குடி மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலையளிக்கவும் வலியுறுத்தி சுமார் 1800 பேர் பங்கேற்ற ஆர்ப்பாட்டம் காஞ்சிபுரத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடத்தப்பட்டது நல்ல முயற்சியாகும். இதுபோல் மதுரை, உசிலம்பட்டி, வேலூர், மாந்தரங்கல் கிராமங்களில் இருளர் இனப் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைக்கு எதிராகவும், பழங்குடி மக்கள் வாழ் பகுதியில் அடிப்படை வசதி மற்றும் சாதிச் சான்றிதழ்களுக்கான இயக்கங்களும் திண்டுக்கல், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், சேலம், வேலூர், தருமபுரி, கோவை, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலும் நடைபெற்றுள்ளன.

4.120 வாச்சாத்தி மக்களுக்கு வன்கொடுமைச் சட்டப்படி நீதிமன்ற தீர்ப்பினைத் தொடர்ந்து இழப்பீட்டுத் தொகையை வழங்க வலியுறுத்தி தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு சுமார் 750 பேர் பங்கேற்ற காத்திருப்பு போராட்டம் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து பாக்கித் தொகை ரூ. 12.20 லட்சமும், தவணைத் தொகை ரூ. 63 லட்சமும் வழங்கப்பட்டுள்ளது. இது நமது தொடர் முயற்சியின் வெற்றியாகும். வாச்சாத்தி மக்கள் மீது வனத்துறையினரின் தாக்குதல்கள், பாதிப்புகள், நமது போராட்டங்கள், கிடைத்துள்ள வெற்றி ஆகியவை தொகுக்கப்பட்டு ஆவணப் படமாகவும் வெளியிடப்பட்டுள்ளது.

4.121 பழங்குடி மக்கள் பிரச்சனையில் நமது தொடர்ச்சியான தலையீடுகள், இயக்கங்கள் நமது அமைப்பை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பை சில பகுதிகளில் ஏற்படுத்தியுள்ளது. பழங்குடி மக்கள் மத்தியில் இந்துத்துவா அமைப்புகள், கிறித்துவ மிஷினரிகள், தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகளை எதிர்கொள்ளும் வகையில் வனஉரிமைச் சட்ட அமலாக்கத்திற்கான இயக்கங்களையும், பழங்குடி மக்களின் வாழ்வாதார கோரிக்கைகளுக்கான இயக்கங்கள் மற்றும் ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டங்களையும் நடத்துவதில் அவர்கள் திரளாக வாழும் பகுதிகள் - மாவட்டங்களில் தொடர் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக பழங்குடி பிரிவு இளைஞர்களை அணி திரட்டுவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

பெண்கள் நலன் தொடர்பான இயக்கங்கள்

4.122 தமிழகத்தில் பெண்கள், குழந்தைகள், பள்ளிச் சிறுமிகள் மீதான வன்முறைகள், தீண்டாமை கொடுமைகள், சாதி மறுப்புத் திருமணங்களால் நடக்கும் கௌரவக் கொலைகள், சமூக விரோத நடவடிக்கைகள் போன்றவை அதிகரித்துள்ளன.

4.123 டில்லி மாணவி மீதான வன்முறை - மரணத்தை கண்டித்து நாடெங்கும் தன்னெழுச்சியான எதிர்ப்பியக்கங்கள் நடைபெற்றன. தமிழகத்திலும் கட்சி மற்றும் வர்க்க வெகுஜன அமைப்புகள் கண்டன இயக்கங்களை நடத்தின. சென்னையில் சாஸ்திரி பவன் முன்பு மாணவர்களின் முற்றுகை போராட்டம் நடைபெற்றது. மாதர் சங்கம் முன்னின்று வர்க்க - வெகுஜன மத்திய தர அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் பிற பெண்கள் அமைப்புகள் இணைந்து சென்னையில் 5000க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்று நடந்த மனித சங்கிலி இயக்கம் குறிப்பிடத்தக்கது.

4.124 165 பள்ளிகளில் 11-17 வயதுள்ள மாணவிகளிடம் ஆய்வு செய்து, அடிப்படை வசதிகள், சுற்றுச்சூழல், ஆண் - பெண் சமத்துவ பாடத்திட்டம் உள்ளிட்ட பல கோரிக்கைகள் எழுப்பப்பட்டு 'பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம்' எனும் முழக்கத்தை முன்னிறுத்தி கையெழுத்து இயக்கமும், மனிதச் சங்கிலி இயக்கமும் நடத்தப்பட்டன. சில கோரிக்கைகள் ஏற்கப்பட்டு

அமலாக்கத்திற்கான உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதுபோல் கல்லூரி மாணவிகள் மற்றும் வேலைக்குச் செல்லும் இளம் பெண்களிடம் 19 மாவட்டங்களில் ஆய்வு செய்து அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகளை முன்னிறுத்தி பெண்கள் மீதான அமில வீச்சு, கௌரவக் கொலைகளை தடுத்து நிறுத்த சிறப்புச் சட்டம் நிறைவேற்ற வலியுறுத்தியும் 'வன்முறை எதிர்ப்பு சிறப்பு மாநாடு' ஆகஸ்ட் 2013ல் திண்டுக்கல்லில் நடைபெற்றது.

4.125 மதுரை பொதும்பு பள்ளி மாணவிகள் மீதான பாலியல் சீண்டல் வழக்கில் நீதிமன்றத் தலையீட்டால் தலைமையாசிரியர் கைது செய்யப்பட்டதோடு, குற்றச் செயல்களை கண்டுகொள்ளாத அனைத்து ஆசிரியர்களும் ஒட்டுமொத்தமாக வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டனர். பாதிக்கப்பட்ட 32 குழந்தைகளுக்கு நிவாரணம் தலா ரூ. 1,20,000 வீதம் பெற்றுத் தந்தோம். விருதுநகர் - திருத்தங்கல் பள்ளி மாணவிகள் மீதான பாலியல் சீண்டலுக்கு எதிரான நமது தலையீட்டினைத் தொடர்ந்து தலைமையாசிரியர் பதவி உயர்வு நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது. உடுமலைப்பேட்டையில் பெண் கைதி காவல் நிலையத்தில் சித்ரவதை செய்யப்பட்ட பிரச்சனையில் நமது தலையீட்டினால் வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டு பாதிக்கப்பட்டவருக்கு ரூ. 2 லட்சம் வழங்கிட நீதிமன்றம் உத்தரவிட்டது. கடலூர் மாவட்டம் திட்டக்குடியில் 2 பள்ளி மாணவிகள் கடத்தப்பட்ட பிரச்சனையில் தலையீடு செய்து, பாதுகாப்பு மற்றும் குழந்தைகளின் தடைப்பட்ட கல்வி தொடர்வதற்கான ஏற்பாட்டை நீதிமன்ற உத்தரவால் பெற்றுள்ளோம்.

4.126 மேலும் பள்ளி மாணவிகள் பாலியல் சீண்டல் குறித்து பொது விசாரணையின் போது முன்வந்தவற்றில் விருதுநகரில் 10 வழக்குகளும், தஞ்சையில் 26 வழக்குகளும், தென்சென்னையில் 10 வழக்குகளும், விழுப்புரத்தில் 10 வழக்குகளும், தேனியில் 16 வழக்குகளும் பொதுவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதுபோல் எல்லா மாவட்டங்களிலும் பள்ளி மாணவிகள் பாலியல் சீண்டல் குறித்த பிரச்சனைகளில் நம்முடைய தலையீடு குறிப்பிடத்தக்கது.

4.127 கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் பிளாஸ்டிக் பொருட்கள் விற்கும் ராஜஸ்தான் மாநில பெண்கள் இருவரும், இரண்டு குழந்தைகளும் அங்குள்ள காவல்நிலையத்தில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தில் நமது பொது நல வழக்கின் மூலம் குற்றம் செய்த காவலர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு, வழக்கு விசாரணை சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

4.128 பெண்கள் மீதான வன்முறை, வறுமை, போதை - மதவெறி ஆகியவற்றை எதிர்த்து மாதர் இயக்கம் சார்பில் 7 குழுக்களாக மாநில பிரச்சார பயண இயக்கம் நடைபெற்றது. 300 மையங்களில் பிரச்சார கூட்டங்கள் நடத்தப்பட்டன. சாதி மறுப்பு திருமணங்களை ஊக்குவிக்கும் வகையில் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியருக்கு பாராட்டு நிகழ்ச்சிகளும் சில மையங்களில் இக்காலத்தில் மாதர் இயக்கம் சார்பில் நடத்தப்பட்டுள்ளன. இதுபோல் கல்வி நிலையங்களில் பெண்கள் மீதான வன்முறையை எதிர்த்தும், மாணவிகள் பாதுகாப்பை உறுதிப்படுத்த வலியுறுத்தியும் மாணவர் இயக்கம் சார்பில் 16 மாவட்டங்களில் மாணவ - மாணவிகள் திரளாக பங்கேற்ற ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன.

4.129 விருதுநகரில் கட்சியின் சார்பில் வரதட்சணை எதிர்ப்பு மாநாடு சிறப்பான ஏற்பாடுகளோடு நடத்தப்பட்டது. மாநிலச் செயலாளர் பங்கேற்றார். வரதட்சணையால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்களது பிரச்சனைகளிலும் கட்சியின் உதவியையும் பகிர்ந்து கொண்டது உத்வேகம் அளிப்பதாக இருந்தது.

4.130 பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ள நிலையில் பெண்கள் நலன் மற்றும் உரிமைக்கான இயக்கங்களை தொடர்ச்சியாக நடத்துவதில் கட்சியின் கவனம் போதுமானதாக இல்லை. இதனைக் கருத்தில்கொண்டு எதிர்வரும் காலத்தில் பெண்கள் மீதான வன்முறை தொடர்பான பிரச்சனை - தாராளமயக் கொள்கை தாக்கத்தினால் கிராமப்புற/ நகர்ப்புற பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் பெண்கள் உரிமை சார்ந்த பிரச்சனைகளில் கட்சியின் வலுவான தலையீடுகளை உறுதி செய்ய வேண்டியுள்ளது.

மதவழி சிறுபான்மை மக்கள் உரிமைக்கான நடவடிக்கைகள்

4.131 சமூகப் பொருளாதார தளத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள இஸ்லாமியர்கள், தலித் கிறித்துவர்களை அணிதிரட்டுவதில் நமது கவனம் மிகவும் குறைவு. அடிப்படைவாதிகள், பிற்போக்கு சக்திகள் இவர்களை அணிதிரட்ட பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிற நிலையில் நாம் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆர்வமுள்ளவர்களைக் கண்டறிந்து அரசியல், ஸ்தாபனப்படுத்தும் பணிகளைச் செய்ய வேண்டும் என்று கட்சியின் 20வது மாநில மாநாடு வலியுறுத்தியது. இதற்கேற்ப மாவட்டங்களில் சிறுபான்மையினரை அணிதிரட்டுவதில் நாம் கவனம் செலுத்தினோமா என்பதை விவாதித்து இதில் ஒரு முறிப்பை ஏற்படுத்தி முன்னேற வேண்டியுள்ளது.

4.132 நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா கமிஷன் மற்றும் சச்சார்குழு முடிவுகளை அமலாக்க வலியுறுத்தி வேலூரில் மாநிலச் செயலாளர் கலந்து கொண்ட ஒரு கருத்தரங்கமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றன. திருவண்ணாமலையில், விருதுநகரில் மதவெறி எதிர்ப்பு - மக்கள் ஒற்றுமை திறந்த வெளி மாநாடு, திருச்சியில் ரங்கநாத் மிஸ்ரா கமிஷன் பரிந்துரைகளை செயல்படுத்த வலியுறுத்தி ஒரு ஆர்ப்பாட்டம் ஆகியவை மட்டுமே நடந்துள்ளன. இதிலும் பங்கேற்பு போதுமானதாக இல்லை.

4.133 சிறுபான்மையினரை அணிதிரட்டுவதில் அவர்களது பிரச்சனைகளில் தலையீடு செய்வதில் உள்ள சிரமங்களை, மாவட்டங்களில் உள்ள பலவீனங்களைக் கண்டறிந்து களைவது என்பதற்கேற்ப கட்சியின் மாவட்டச் செயலாளர்கள், சிறுபான்மை பிராக்ஷன் கன்வீனர்களைக் கொண்ட மாநில அளவிலான கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டம் சிறுபான்மை மக்களை கட்சி நேரடியாக திரட்டுவதற்கு மாறாக கட்சி சார்பற்ற ஒரு அமைப்பை ஏற்படுத்திடலாம் என்ற ஆலோசனையை தெரிவித்தது. இதனை கட்சியின் மாநிலக்குழு ஏற்று 2014 பிப்ரவரியில் சிறுபான்மை மக்கள் நலக் கோரிக்கை சிறப்பு மாநாடு திருச்சியில் நடத்தப்பட்டு 'தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக்குழு' எனும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இச்சிறப்பு மாநாட்டில் 2000 பேர் கலந்து கொண்டனர்.

4.134 தற்போது மாவட்ட அளவில் 15 மாவட்டங்களில் மாநாடுகள் நடத்தப்பட்டு மாவட்ட அமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மாநாடுகளில் இஸ்லாமிய, கிறித்துவ பிரமுகர்கள் - பெரியவர்கள் கலந்து கொண்டு மாவட்ட அமைப்பிலும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மாவட்ட அமைப்புகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் மாவட்டங்களில் சில முன்முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. மாவட்ட அமைப்புகள் தொடர்ச்சியாக செயல்படுவதை கட்சியின் மாவட்டக்குழுக்கள் உறுதிசெய்வது அவசியமாகும். அதுபோல் மாவட்ட அமைப்புகள் ஏற்படுத்தாத மாவட்டங்களில் உடனடியாக சிறப்பு மாநாடுகள் நடத்தி அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

4.135 தற்போது இஸ்லாமிய - கிறித்துவ மக்களிடம் நமக்கு போதுமான தொடர்புகள் இல்லை. மத்திய மதவெறி பாஜக ஆட்சி மத ரீதியாக மக்களை பிளவுபடுத்தவும், இந்துத்துவ திட்டங்களைச் செயல்படுத்தவும் ஆட்சியதிகாரத்தை பயன்படுத்துகிற சூழலில் - இஸ்லாமிய கிறித்துவ மக்களிடம் தொடர்பு கொண்டு அவர்களை ஜனநாயக, மதச்சார்பற்ற இயக்கங்களில் ஈடுபடச்

செய்திட- நம்பிக்கையூட்டும் தொடர் நடவடிக்கைகள் எடுத்திட வேண்டும். கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் நடத்துவதோடு 'வாழ்வாதாரம் மற்றும் வாழ்வுரிமைக்கான' கோரிக்கைகளையும் முன்னிறுத்தி அவர்களையும் இணைத்து அவர்களின் உணர்வு நிலையை கருத்தில் கொண்டு செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

மாவட்ட-உள்ளூர் அளவிலான இயக்கங்கள்

4.136 தூத்துக்குடி கருங்குளம் ஆறாம் பண்ணை கிராமத்தில் 27 ஏழை முஸ்லீம் குடும்பங்களுக்கு கொடுக்கப்பட்ட வீட்டு மனைகள் தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டதை எதிர்த்துப் போராடி நிலம் மீட்டுக் கொடுக்கப்பட்டது. கோவில்பட்டி விஸ்வநாததாஸ் நகரில் மயான கொட்டகை, குடிநீர் உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக மக்கள் பங்கேற்புடன் முற்றுகை நடத்தி கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டனர். ஒரு கட்சி கிளையும் உருவாக்கப்பட்டுள்ளது. கோவில்பட்டி இழுப்பையூரணி பிற்பட்டோர் விடுதிக்குச் சொந்தமான இடத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்ததை எதிர்த்து போராடி இடம் மீட்கப்பட்டது. சலவைத்துறை ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடி ஆக்கிரமிப்பு முறியடிக்கப்பட்டது. ஆழ்வார் திருநகர் ஆத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தமான இடத்தை தனியார் கல்வி நிறுவனம் ஆக்கிரமித்ததை எதிர்த்துப் போராடி முறியடித்தது. ஸ்ரீவைகுண்டம், ஒட்டப்பிடாரம் பகுதிகளில் நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு தொழிற்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டதை எதிர்த்து இயக்கம் நடத்தி நிலத்தடி நீர் எடுப்பது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இதுபோல் ஒட்டப்பிடாரம், சாத்தான்குளம், நாலுமூலைக்கிணறு பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட குடிமனைப் பட்டாக்கள் பெறப்பட்டன.

4.137 திருப்பூரில் மின்வெட்டு, மின் கட்டண உயர்வு, தொழில் பாதுகாப்பு ஆகியவற்றை முன்னிறுத்தி தொடர் இயக்கங்களும், 2013 அக்டோபரில் ஸ்தல அளவிலான கடைஅடைப்பு வேலை நிறுத்தமும் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளன. திருப்பூர் தெற்கு/வடக்கு மற்றும் 15 வேலம்பாளையம் ஆகிய மூன்று இடங்களில் நடைபெற்ற இயக்கத்தினைத் தொடர்ந்து டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டன. உடுமலை பள்ளி ஒன்றில் இரண்டு மாணவர்கள் மரணத்திற்கு காரணமான நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்க நடத்தப்பட்ட இயக்கத்தினைத் தொடர்ந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது பள்ளி மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றது. நொய்யல் ஆற்றங்கரை ஒர வீடுகளை அகற்ற முனைந்தபோது மாற்று இடம் வழங்கும் வரை அகற்றக்கூடாது என்று இயக்கம் நடத்தி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இதுபோல் கட்சி கிளை அளவிலும், வர்க்க, வெகுஜன அமைப்புகள் சார்பிலும் ஏராளமான இயக்கங்கள் நடத்தப்பட்டுள்ளன. இயக்கம் நடத்தப்பட்ட இடங்களில் மக்களிடம் மரியாதை உயர்ந்துள்ளது. புதிய தொடர்புகளும் ஏற்பட்டுள்ளன.

4.138 விருதுநகரில் பட்டாசு ஆலை வெடிவிபத்துக்கள் நிகழ்வதும், உயிரிழப்புகள் ஏற்படுவதும் நாம் தலையீடு செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு பெற்றுத்தருவதும் தொடர் நடவடிக்கைகளாக உள்ளன. விருதுநகர் தேசபந்து திடலை அரசு நிர்வாகம் வேலி அமைத்து தடுக்க முயன்றதை நாம் தடுத்து நிறுத்தியது சிறுவியாபாரிகளிடம் வரவேற்பினைப் பெற்றது. ராசை நகர் - எம்ஜிஆர் நகர் குடியிருப்பில் உள்ள வீடுகளை அறநிலையத்துறை அகற்ற முயன்றது நமது தலையீட்டினால் தடுத்து நிறுத்தப்பட்டது. மேலகோடங்கிப்பட்டி கிராமத்தில் மக்களைத் திரட்டிய இயக்கத்தினால் டாஸ்மாக் கடை மூடப்பட்டது. இதுபோல், குடிநீர்-கழிப்பிட வசதி, சாலை வசதி, பட்டா உள்பட ஸ்தல மட்ட பிரச்னைகளை முன்னிறுத்திய இயக்கங்கள் பல நடந்துள்ளன. எனினும், கடந்த ஆண்டுகளை விட இக்காலத்தில் தலையீடுகளும் தோழர்களின் பங்கேற்பும் குறைவாகவே இருந்துள்ளது.

4.139 புதுக்கோட்டை, கறம்பக்குடி தெற்கு ஒன்றியத்தில் நூறு நாள் வேலை - கூலி பிரச்சனையில் தலையீடு செய்து கூலி உயர்வும், 1200 பேருக்கு வேலைக்கான அட்டையும் பெற்றுத் தரப்பட்டுள்ளது. இதன்மூலம் 100 பெண்கள் கட்சியில் சேர்க்கப்பட்டுள்ளனர். கறம்பக்குடி தெற்கு ஒன்றிய ஊராட்சிப் பள்ளியில் துப்புரவு பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படாததை கண்டித்தும், பொன்னமராவதியில் துப்புரவு பணியாளர்களுக்கு சாதிச் சான்றிதழ் கோரியும் இயக்கம் நடத்தி பெற்றுத் தரப்பட்டுள்ளது. கந்தவர்க்கோட்டை, மட்டங்கால், குண்றாண்டார் கோவில், காரடிவயல் கிராமங்களில் பழுதடைந்த மின்மாற்றி மாற்றப்பட்டு நமது இயக்கத்தினால் புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டன. இதுபோல் குடிநீர் மற்றும் மனைப்பட்டாவிற்கான இயக்கங்கள் கூடுதலாக நடந்துள்ளன. திருவரங்குளம் ஆங்குடியில் திறக்கப்படாத அரசுப் போக்குவரத்து பணிமனை நமது தலையீட்டினால் திறக்கப்பட்டது. விராலிமலை தொண்டமாநல்லூரில் சாகுபடி நிலத்தில் தொழிற்சாலை அமைக்க நில ஆர்ஜிதம் நமது தலையீட்டினால் தடுக்கப்பட்டுள்ளது.

4.140 வடசென்னையில் நமது போராட்டங்களின் தொடர்ச்சியாக எழும்பூர் நேரு பூங்கா குடிசை மாற்று வாரிய குடியிருப்பைச் சார்ந்த மக்களுக்கு மாற்று வீடு வழங்குவதற்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. பெரம்பூர் பாரதி நகர் சமூகக் கூடத்திலிருந்த 173 குடும்பங்களுக்கு மாற்று இடம் பெற்றுத் தரப்பட்டது. திருவொற்றியூர், மணலி பகுதிகளில் கிராம நத்தம் பகுதியில் வசித்த மக்களுக்கு நூற்றுக்கணக்கான பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. எழும்பூர் பிரிக்லின் ரோடு, பெரம்பூர் கண்ணதாசன் நகர் சிட்கோ மற்றும் பெரம்பூர் பழனியாண்டவர் தெருவிலுள்ள டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டன. பாரதி மகளிர் கல்லூரிக்கு அருகில் இருந்த டாஸ்மாக் கடை மாணவர் இயக்க போராட்டத்தினால் அகற்றப்பட்டது.

4.141 தென்சென்னை ஆயிரம்விளக்கு புஷ்பா நகர் பகுதியில் தீ விபத்தால் எரிந்துபோன 163 குடிசைவாழ் குடும்பங்களுக்கு எழில் நகர் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு ஆணை பெற்றுத் தரப்பட்டது. குரோம்பேட்டை ரெயில்வே ஸ்டேசன் பிரதான சாலையில் மக்கள் பயன்பாட்டிற்கு மேம்பாலம் அமைக்க வலிறுத்தி நடைபெற்ற தொடர் இயக்கத்தினால் நவீன படிக்கட்டுக்கள் (எஸ்கலேட்டர்) அமைக்கப்பட்டுள்ளது. விருகம்பாக்கம் சாலிகிராமத்தில் நமது தலைமையில் நலச் சங்கங்கள் பற்கேற்புடன் நடைபெற்ற இயக்கத்தினைத் தொடர்ந்து டாஸ்மாக் கடை மூ டப்பட்டது.

4.142 காஞ்சிபுரம் - மதுராந்தகம் குளம்பாக்கத்தில் தலித் மக்களுக்கான நிலம் தனியாருக்கு பட்டா போட்டு கொடுக்கப்பட்டதை எதிர்த்து இயக்கம் நடத்தி நிலம் மீட்கப்பட்டு அந்த நிலத்தில் தோழர் டி.கே.ரங்கராஜன் எம்.பி நிதி உதவியோடு சமுதாயக் கூடம் எழுப்பப்பட்டு தலித் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. திருப்போரூர் பகுதி ராமையன்குப்பத்தில் ரியல் எஸ்டேட் நோக்கத்திற்காக பொதுப் பாதை (200 ஏக்கர் நிலம்) ஆக்கிரமிப்பை எதிர்த்து இயக்கம் நடத்தி பாதை மீட்கப்பட்டது.

4.143 நெல்லை மாவட்டத்தில் புலிகள் காப்பகம் எனும் பெயரில் 37 மலைகளிலிருந்து மலைவாழ் மக்களை வெளியேற்றும் நடவடிக்கை வனவிலங்கு சட்டத்தின்படி எடுக்கப்பட்டது. இது வன உரிமை சட்டத்திற்கு எதிரானது என்பதை முன்னிறுத்தி இயக்கம் நடத்தி மலைவாழ் மக்களை வெளியேற்றும் நடவடிக்கை தடுக்கப்பட்டுள்ளது.

4.144 தஞ்சாவூரில் பாளையம்பட்டி, செங்கிப்பட்டி பஞ்சாயத்துப் பகுதிகளில் 100 நாள் வேலை சம்பள முறைகேடு மற்றும் பாக்கியை வழங்க வலியுறுத்தி மறியல், முற்றுகை உள்ளிட்ட இயக்கங்கள் நடத்தி ரூபாய் ஒரு லட்சத்திற்கும் மேல் சம்பள பாக்கி பெறப்பட்டது. பூதலூர் ரயில் நிலையத்தில் அனைத்து ரயில்களும் நின்று செல்ல வலியுறுத்தி நடந்த இயக்கங்களைத் தொடர்ந்து அனைத்து ரயில்களும் நின்று செல்கின்றன.

இயக்கங்கள் - போராட்டங்கள் - அரசியல் பணிகள்

4.145 மதுரை மாநகரில் அரசுப் போக்குவரத்தில் ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு பணிக்கொடை, பென்சன் மற்றும் சட்டபூர்வ சலுகைகள் 2 ஆண்டுகளாக வழங்கப்படாமலிருந்ததை எதிர்த்து இயக்கம் நடத்தி நிலுவையிலிருந்த (மாநிலத்தில் சுமார் ரூ.900/-கோடி அளவில்) பணப் பலன்களை தமிழக அரசு வழங்க நேர்ந்தது. ஜெய்ஹிந்துபுரம், மதிச்சியம் பகுதிகளில் நமது இயக்கங்களினால் டாஸ்மாக் கடை திறப்பு முயற்சிகள் கைவிடப்பட்டன.

4.146 கடலூர் விக்கிரவாண்டி-கும்பகோணம் சாலை நெய்வேலி, பண்ரூட்டி பகுதிகளில் மிகவும் பழுதடைந்திருந்த நிலையில் பண்ரூட்டி, சேத்தியாதோப்பு, நெய்வேலி ஆகிய மையங்களில் மறியல், தர்ணா இயக்கங்கள் நடைபெற்றதின் தொடர்ச்சியாக ரூ.5 கோடியில் சாலை சீரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது. வணிகர்கள், பொது மக்கள் வரவேற்றனர்.

4.147 தேனி மாவட்டத்திலிருந்து செல்லும் அரசுப் பேருந்துகளுக்கு பிபி, எக்ஸ்பிரஸ் எனப் பெயரிட்டு ரூ.3 முதல் 30 வரை கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்பட்டதை எதிர்த்து தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டன. சட்டமன்றத்திலும் எழுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து கட்டணங்கள் குறைக்கப்பட்டன. அரசு மருத்துவமனையில் சுகாதாரக் கேடு மற்றும் மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ளிட்டவைகளை முன்னிறுத்தி தர்ணா போராட்டம் நடத்தப்பட்டது. சட்டமன்றத்திலும் எழுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து மருத்துவமனை சீரமைக்கப்பட்டது. பெரியகுளம் கீழவடகரை எஸ்பிஜ காலனியில் முற்றுகை நடத்தி டாஸ்மாக் கடை அகற்றப்பட்டது.

4.148 கிருஷ்ணகிரி போச்சம்பள்ளி வட்டத்தில் உள்ள ஏரிகளுக்கு தென்பெண்ணை ஆற்றின் உபரி நீரை திருப்பிட வலியுறுத்தி இயக்கம் நடத்தி தற்போது கால்வாய் வெட்டப்பட்டு 28 ஏரிகளில் உபரி நீர் நிரப்பப்படுகிறது. இது நமது போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும். தேன்கனிக்கோட்டை மற்றும் போச்சம்பள்ளி அரசு மருத்துவமனை சீர்கேடுகளைக் கண்டித்தும், மருத்துவர்கள், ஆம்புலன்ஸ் உள்ளிட்டவைகளை முன்னிறுத்தியும் இயக்கம் நடத்தி தற்போது மருத்துவமனை சீரமைக்கப்பட்டு கூடுதல் சிகிச்சைக்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

4.149 நாமக்கல் பள்ளிப்பாளையம் தெற்கு, வடக்கு கமிட்டிகளில் வீட்டுமனை, கழிப்பிட வசதி, குடிநீர், சுகாதாரம், பாதை வசதிகள், ஆக்கிரமிப்புகள் அகற்றுவது, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது உள்ளிட்ட பல்வேறு ஸ்தல மக்கள் கோரிக்கைகளை முன்னிறுத்தி இயக்கங்கள் நடத்தப்பட்டு கோரிக்கைகள் வென்றெடுக்கப்பட்டன. தடுப்பணை கட்டப்பட்டதால் காவிரி கரையோர மக்கள் 700 பேருக்கு இயக்கம் நடத்தி மாற்று இடம் பெறப்பட்டது.

4.150 நாகை தரங்கம்பாடி அரசூர் ஊராட்சியில் ஆதிக்க சக்திகள் மட்டுமே பயன்படுத்தி வந்த பொதுக்குளம் நமது தலையீட்டினைத் தொடர்ந்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. நாகை-தஞ்சை நெடுஞ்சாலையை செப்பனிட இரண்டு மையங்களில் நடைபெற்ற சாலை மறியலைத் தொடர்ந்து சாலை சீர்படுத்தப்பட்டது.

4.151 திருவண்ணாமலை மலை அடிவாரத்தில் உள்ள சுமார் 7000 வீடுகளை அகற்ற மாவட்ட நிர்வாகம் முனைந்ததை எதிர்த்து இயக்கம் நடத்தி வீடுகளை அகற்றும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது. அத்திமூர் பகுதியில் அருந்ததிய மக்களின் சுடுகாட்டுப்பாதை ஆக்கிரமிப்பு நமது தலையீட்டினால் அகற்றப்பட்டுள்ளது.

4.152 திண்டுக்கல் வேடசந்தூரிலிருந்து திண்டுக்கல் செல்லும் தனியார் பேருந்து கட்டண உயர்வை எதிர்த்து இயக்கம் நடத்தி குறைக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் 10-வது வார்டில் மக்களை இணைத்து இயக்கம் நடத்தி டாஸ்மார்க் கடை அகற்றப்பட்டது. கொடைக்கானல் கருவேலம்பட்டி ஆதிவாசிகள் குடியிருப்புக்கு செல்லும் பாதை ஆக்ரமிப்பை எதிர்த்து இயக்கம் நடத்தி பாதை திறந்து விடப்பட்டது. பழனி பாப்பாம்பட்டி ஊராட்சி தலைவர் ஊழலை எதிர்த்த இயக்கத்தினைத் தொடர்ந்து தலைவர் பதவி நீக்கம் செய்யப்பட்டது.

4.153 சிவகங்கையில் மேலவெள்ளஞ்சி கிராமத்தில் 210 தலித் குடும்பங்கள் மீதான தாக்குதலை எதிர்த்து நடத்தப்பட்ட இயக்கத்தினை தொடர்ந்து அக்கிராமத்தில் வாலிபர் சங்க கிளை அமைக்கப்பட்டது. காளையார்கோவில் - இளையாண்குடி பகுதியில் நெல் கொள்முதல் செய்ய வலியுறுத்தி இயக்கம் நடத்தி கிடைத்த வெற்றியால் விவசாயிகளிடம் மரியாதை ஏற்பட்டது. 100 நாள் வேலை, ரேசன் கடை முறைகேடுகள் ஆகியவற்றை முன்னிறுத்திய இயக்கங்களும் நடைபெற்றுள்ளன.

4.154 விழுப்புரம் முண்டியம்பாக்கத்தில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் அடிப்படை வசதிகள் கோரி நடைபெற்ற இயக்கங்களைத் தொடர்ந்து சில வெற்றிகளும், புதிய தொடர்புகளும் ஏற்பட்டுள்ளன. உளுந்தூர்பேட்டை - சேலம் நான்குவழிச்சாலை, புதுச்சேரி - கிருஷ்ணகிரி நெடுஞ்சாலை அமைக்கும் திட்டத்திற்கு நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வலியுறுத்தி இயக்கம் நடத்தி, இழப்பீடு பெற்றுத் தரப்பட்டதில் புதிய தொடர்புகள் கிடைத்தன.

4.155 மதுரை புறநகரில் சிலம்பக்கோல்பட்டி வனப்பகுதியில் மின்இணைப்பை துண்டித்து வனத்திலிருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கை நமது எதிர்ப்பு இயக்கத்தினை தொடர்ந்து வெளியேற்றுவது தடுக்கப்பட்டது. திருப்பரங்குன்றம் தொடக்கக்கூட்டுறவு வங்கியில் ரூபாய் 80 லட்சம் மோசடியை எதிர்த்து இயக்கம் நடத்தி 60 சதம் தொகை திரும்பப்பெறப்பட்டுள்ளது. யா.ஒத்தக்கடை அருகில் டாஸ்மாக் கடை திறப்பு முயற்சி நமது தலையீட்டினால் தடுத்து நிறுத்தப்பட்டது. குடிநீர், பட்டா, சுடுகாடு மற்றும் பாதை ஆக்ரமிப்பு, காவல்துறையின் அத்துமீறல்கள் உள்ளிட்ட பிரச்னைகளை முன்னிறுத்திய இயக்கங்களும் நடந்துள்ளன.

4.156 திருச்சி மணப்பாறையில் குடிநீர், மண்ணச்சநல்லூர் வட்டத்தில் பட்டா, மயானப்பாதை, பேருந்து வசதி, லால்குடியில் கழிப்பறை மற்றும் சுகாதார வசதி, துறையூரில் ரேசன் முறைகேடு, 100 நாள் வேலை, மனைப்பட்டா, ஆகியவற்றை முன்னிறுத்திய இயக்கங்களும்; காவல்துறை அத்துமீறல்கள் மற்றும் மணல்கொள்ளையை எதிர்த்த இயக்கங்களும் நடைபெற்றுள்ளன.

4.157 புதுச்சேரியில் காரைக்கால் பகுதியில் 100 நாள் வேலை, பட்டா உள்ளிட்ட ஸ்தல பிரச்னை தலையீட்டின் விளைவாக, நல்லம்பல், சுரக்குடி, நெடுங்காட்டில் வடமட்டம் ஆகிய பகுதிகளில் புதிய தொடர்புகள் எற்பட்டு துணைக்குழு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

4.158 குமரி மாவட்டத்தில் குடிமனை கேட்டு இயக்கம் நடத்தி அனந்தன்நகர் பகுதியில் 45 பேருக்கு மாற்று இடமும், வீரப்புலி பகுதியில் 67 பேருக்கு இந்திரா குடியிருப்பு திட்டத்தின் கீழ் வீடுகளும் பெறப்பட்டது. பார்வதிபுரம் பகுதியில் சுமார் 50 ஏக்கர் நில ஆக்கிரமிப்பை இயக்கம் நடத்தி ஒருபகுதி நிலம் மீட்டு குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தாதுமணல் கொள்ளையை எதிர்த்தும், அரசு மருத்துவமனை கோரிக்கைகளுக்கான இயக்கங்களும் நடந்துள்ளன.

4.159 கோவை பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க தொடர் இயக்கம் நடத்தி ஒருபகுதி இழப்பீட்டுத் தொகை பெறப்பட்டது. ரூ.650 கோடியில் இஎஸ்ஐ மருத்துவக்கல்லூரி நவீன வசதிகளுடன் 2வது அரசு மருத்துவ கல்லூரி ஆகியவை அமைய நமது நாடாளுமன்ற உறுப்பினர் தலையீட்டை பயன்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்டு விரைவில் பயன்பாட்டுக்கு வரவுள்ளது.

4.160 நீலகிரி மாவட்டத்தில் அய்யன்கொல்லி பகுதியில் அரசு மருத்துவமனைக்கு மருத்துவர்கள் வருவதில்லை என்பதால் இயக்கம் நடத்தி இரண்டு மருத்துவர்கள் வருகை உறுதி செய்யப்பட்டது. மனைப்பட்டா, சாலை சீரமைப்பு, ரேசன் கடை, டாஸ்மாக் கடை எதிர்ப்பு உள்ளிட்ட பிரச்சனைகளை முன்னிறுத்தியும் இயக்கங்கள் நடந்துள்ளன.

4.161 ஈரோடு ஆப்பக்கூடல் சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய பணப்பாக்கியை உடனே வழங்க நிர்ப்பந்தித்து ஆலை வாயில் முன்பு காலவரையற்ற உண்ணாவிரத இயக்கம் நடத்தி விவசாயிகளுக்கு சேர வேண்டிய ரூ.15 கோடி தொகையைப் பெற்று தந்தது விவசாயிகளிடம் பெரும் வரவேற்பினை பெற்றது.

4.162 திருவாரூர் தப்பளாம்புலியூரில் டாஸ்மாக் கடை நமது போராட்டத்தினால் அகற்றப்பட்டது. இதில் கணிசமான பெண்கள் கலந்து கொண்டுள்ளனர். சேலம் ஏற்காட்டில் நமது இயக்கத்தினை தொடர்ந்து மலைவாழ் மக்களுக்கு வனதரிசு நிலத்தில் 300-க்கும் மேற்பட்ட குடிசைகள் அமைக்கப்பட்டன. தர்மபுரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தக் கோரி இயக்கம் நடத்தி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. திருவள்ளூர் பொன்னேரி தடப்பெரும்பாக்கம் ஏரியில் மண் குவாரியை ரத்து செய்ய வலியுறுத்தி இயக்கம் நடத்தப்பட்டு தற்போது குவாரி செயல்பாடு நிறுத்தப்பட்டுள்ளது.ராமநாதபுரம் மாவட்டத்தில் மனைப்பட்டா, மருத்துவமனை சீர்கேடுகள் மற்றும் கூடுதல் வசதிகள் கோரிய இயக்கங்களும் காவல்துறை அத்துமீறல்களை எதிர்த்த இயக்கங்களும் நடைபெற்றுள்ளன. வேலூர், பெரம்பலூர், கரூர் ஆகிய மாவட்டங்களிலும் ஸ்தல பிரச்சனைகளில் சில இயக்கங்கள் நடந்துள்ளன.

4.163 இக்காலத்தில், உள்ளூர் அளவிலான பிரச்சனைகளில் நமது தலையீடுகள், இயக்கங்கள், போராட்டங் கள் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. நமது தலையீடுகள், போராட்டங்களைத் தொடர்ந்து பல பிரச்சனைகளில் வெற்றியும் கிடைத்துள்ளது. இது ஸ்தல மக்களிடம் நமது மரியாதையை உயர்த்தியுள்ளது. இயக்கங்களில் பங்கேற்ற கட்சித் தோழர்களிடம் உற்சாகத்தை யும் ஏற்படுத்தியுள்ளது. சில இடங்களில் புதிய தொடர்புகள் ஏற்பட்டு கட்சி கிளைகள் மற்றும் வர்க்க வெகுஜன அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனினும், சில மாவட்டங்களில் ஸ்தல மட்டப் பிரச்சனைகளில் தலையீடு செய்வதில் பிரச்சனைகளை கண்டறிந்து இயக்கங்கள் நடத்துவதில் பலவீனங்கள் தொடர்கின்றன. அதுபோல் எந்தப்பகுதி மக்களுக்கான கோரிக்கைகளுக்காக போராடுகிறோமோ அந்தப் பகுதி மக்களைத் திரட்டுவதிலும் பலவீனம் நீடிக்கிறது.

4.164 "ஸ்தல கோரிக்கைகளை முன்னிறுத்திய போராட்டங்களை அறிவிப்பதும், அறிவிப்பினைத் தொடர்ந்து அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமரசம் செய்யும் நடைமுறையும் சில இடங்களில் உள்ளன. இதுபோல் முகஸ்துதி பார்க்கும் போக்கும் உள்ளூரில் ஏன் விரோதத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற தயக்கமும் சில இடங்களில் உள்ளன" என்று திருவாரூர் மாவட்ட அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. ஸ்தல மட்ட பிரச்னைகளில் இதுபோன்ற பார்வை, அணுகுமுறை குறைபாடுகள் எந்த மட்டத்தில் இருந்தாலும் அத்தகைய குறைபாடுகள் களையப்பட வேண்டும்.

4.165 ஸ்தல அளவிலான தலையீடுகள் - மக்களிடம் நமது அரசியலை கொண்டு செல்ல உதவிடும் வலுவான கிளர்ச்சி ஊடகமாகும். தொடர்ச்சியான கிளர்ச்சி இயக்கங்கள் நடத்துவது, முன்வைக்கப்படும் கோரிக்கைகளில் ஒரு பகுதியேனும் வெற்றி பெறுவது - பாதிப்புக்குள்ளான மக்களிடம் நம்மீதான நம்பிக்கையை வளர்த்தெடுக்கும். புதிய தொடர்புகளை எற்படுத்தும். ஸ்தாபன விரிவாக்கத்திற்கு உதவும். உள்ளூர் மக்கள் கோரிக்கைகளுக்கான இயக்கத்தை உலக மய கொள்கை எதிர்ப்பிற்கான இயக்கமாக வளர்த்தெடுக்க முடியும்.

சமூக விரோதிகளின் தாக்குதலை எதிர்த்து

4.166 தூத்துக்குடியில் தோழர் க. கனகராஜ், கோவில்பட்டியில் சீனிவாசன் ஆகியோரைத் தாக்கும் நோக்கத்தோடு சமூக விரோத சக்திகள் வெடிகுண்டு வீசிய பிரச்சனையில் காவல்துறை அணுகுமுறையைக் கண்டித்து தோழர் கனகராஜ் தலைமையில் நமது தோழர்கள் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டதையொட்டி தமிழக அரசு தலையிட்டு சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிட்டது.

இதர நிகழ்வுகள்

தீக்கதிர் பொன்விழா

4.167 தீக்கதிர் நாளேட்டின் பொன்விழா நிகழ்வை அரசியல் பொது நிகழ்வாக முக்கிய மையங்களில் நடத்துவது, கூடுதல் சந்தா சேர்ப்பது, தீக்கதிருக்காக உழைத்தவர்களை பாராட்டுவது - பங்களிப்பு செய்பவர்களை ஊக்குவிப்பது என்ற முடிவிற்கேற்ப - தொடக்க நிகழ்வு திருவாரூரில் 2012 ஜூன் 29 அன்று சிறப்பாக நடத்தப்பட்டது. தொடக்க விழா நிகழ்வைப் போல கோவை, சென்னை, திருச்சி ஆகிய மையங்களிலும் பதிப்பு வாரியாக பொன்விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டன. மதுரையில் நிறைவு நிகழ்ச்சி சுமார் 4 ஆயிரம் பேர் பங்கேற்புடன் எழுச்சியாக நடைபெற்றது. இந்நிகழ்வு இதர மாவட்டங்களில் தோழர் சுந்தரய்யா நூற்றாண்டு விழாவோடு இணைத்து சிறப்பு பேரவைக் கூட்டங்களாக நடைபெற்றன. அகில இந்திய, மாநில, மாவட்டத் தலைவர்கள் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். மாநிலம் முழுவதும் 3000 தீக்கதிர் சந்தாக்கள் வழங்கப்பட்டன.

வெண்மணி புதிய நினைவகம் திறப்பு நிகழ்வு

4.168 வெண்மணித் தியாகிகள் நினைவிடத்தில் வெண்மணி தியாகிகளின் வீர வரலாற்றை என்றென்றும் நினைவுகூறும் வகையில் சிஐடியு மாநிலக்குழு முயற்சித்து புதிதாக எழுப்பப்பட்டுள்ள தியாகிகள் நினைவகத்தை 2014 மார்ச் 9 அன்று கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலாளர் தோழர் பிரகாஷ் காரத் அவர்கள் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார். வெண்மணி நினைவகத்தில் திரண்ட மக்கள் சக்தியை ஊடகங்கள் செய்திகளாக்கின. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தோழர் ஜி. பழனிச்சாமி கலந்து கொண்டார். தியாகிகள் நினைவக கட்டுமான பணிகளுக்கு உதவிடும் வகையில் கட்சி சார்பிலும் மக்களிடம் நிதி சேகரித்து ரூ. 23,52,739 வழங்கப்பட்டது.

தோழர் சுந்தரய்யா நூற்றாண்டு விழா

4.169 தோழர் சுந்தரைய்யா நூற்றாண்டு நிகழ்வு 2012 டிசம்பர் 28-ல் திருப்பூரில் நடைபெற்றது. தோழர் பிரகாஷ் காரத், கே.வி, ஜி.ஆர் மற்றும் தலைவர்கள் கலந்து கொண்டனர். கோவையில் தோழர் பி.வி.ராகவலு, பி.சம்பத் கலந்து கொண்ட கருத்தரங்கம் நடைபெற்றது. இதுபோல் மாவட்டங்களில் சிறப்புக் கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன.

தோழர் ஜோதிபாசு நூற்றாண்டு விழா

4.170 சென்னையில் தோழர் ஜோதிபாசு நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளை சிஐடியு பரவலாக நடத்தியது. தொடக்க நிகழ்வு 2013 ஜூலை 8 அன்று நடைபெற்றது. இதில் இரா. செழியன், வி.ஐ.டி. நிறுவனர் ஜி. விஸ்வநாதன், நீதிபதி கே. சந்துரு, வழக்குரைஞர் வைகை, மேற்கு வங்க முன்னாள் தலைமைச் செயலாளர் பி.எஸ். ராகவன் மற்றும் நம் தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கோவை கவுண்டம்பாளையத்தில் தோழர் பிரகாஷ் காரத், ஜி.ராமகிருஷ்ணன், ஏ.சவுந்தரராசன் கலந்து கொண்ட கருத்தரங்கும், தூத்துக்குடியில் நூற்றாண்டு மாரத்தான் ஓட்டமும், இதர மாவட்டங்களில் கருத்தரங்கு, சிறப்பு பேரவை, பயிற்சிக் கூட்டங்களாகவும் நடந்துள்ளன.

தோழர் என்.வி. மறைவு

4.171 கட்சியின் மூத்த தோழரும், மாநிலக்குழுச் செயலாராகவும் செயலாற்றிய தோழர் என்.வி. அவர்கள் 2012 ஏப்ரல் 10 அன்று காலமானார். தோழர் என்.வி. அவர்களின் படத்திறப்பு நிகழ்வு 2012 ஏப்ரல் 26 அன்று சென்னையில் நடைபெற்றது. தோழர் பிரகாஷ் காரத் தோழர் என்.வி.யின் உருவப்படத்தை திறந்து வைத்து உரை நிகழ்த்தினார்.

இயக்கங்கள் - போராட்டங்கள் - அரசியல் பணிகள்

தோழர் ஆர். உமாநாத் மறைவு

4.172 கட்சியின் மூத்த தோழரும், அரசியல் தலைமைக்குழு உறுப்பனராகவும் செயலாற்றிய தோழர் ஆர். உமாநாத் 2014 மே 21ல் காலமானார். சென்னையில் மே 28 அன்று நடைபெற்ற நினைவு அஞ்சலி கூட்டத்தில் தோழர் பிரகாஷ் காரத் பங்கேற்று தோழர் ஆர். உமாநாத் அவர்களின் உருவப்படத்தை திறந்து வைத்தார்.

தோழர்களே!

4.173 கடந்த மூன்றாண்டுகளில் மத்திய, மாநில அரசுகள் பின்பற்றும் புதிய தாராளமயக் கொள்கை அமலாக்கத்தின் தாக்கங்களை எதிர்த்தும் மக்களின் கோரிக்கைகளை முன்னிறுத்தியும் கிளர்ச்சி இயக்கங்கள், போராட்டங்கள் பல வடிவங்களில் மாநில அளவிலும், புதுவை உள்ளிட்ட மாவட்ட அளவிலும் தொடர்ச்சியாக கட்சி மற்றும் வர்க்க வெஜன தளங்களில் நடத்தப்பட்டுள்ளன. நமது அரசியல் கருத்துக்களும், மாற்றுக் கொள்கைகளும் பரவலான மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இவ்வியக்கங்களும், நமது செயல்பாடுகளும் தமிழக மக்களிடம் நமக்குச் சாதகமான அரசியல் தாக்கத்தை ஏற்படுத்த முடியாத நிலையே தொடருகிறது. இதில் முறிப்பை ஏற்படுத்த நமது சாதகமான அரசியல் தாக்கத்தை ஏற்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன?. மேலும் நாம் நடத்திய இயக்கங்களில் பங்கேற்பு, திரட்டுதல் ஓரிரு இயக்கங்கள் தவிர பொதுவாக குறைவே. சக்தியான திரட்டுதலுக்கும், வலுவான கிளர்ச்சி இயக்கங்களை நடத்திடவும் செய்ய வேண்டியவை என்ன? என்பன குறித்தும் விவாதித்து வலுவான மக்கள் இயக்கத்தை கட்டும் பணியை முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

4.174 இக்காலத்தில் உள்ளூர் அளவிலான தலையீடுகள், இயக்கங்கள் மாவட்டங்களில் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். நமது தலையீட்டால் பல இடங்களில் மக்களுக்கு உடனடி நிவாரணமும் கிடைத்துள்ளன. இயக்கம் நடந்த இடங்களில் மக்களிடம் வரவேற்பும், அறிமுகமும், புதிய தொடர்புகளும் ஏற்படுகின்றன என்பதே அனுபவமாகும். எனினும் இதனை பயன்படுத்தி கட்சி வர்க்க வெகுஜன விஸ்தரிப்பு பணிகள் நடந்துள்ளனவா? அரசியலாக உறுதிப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதா? என்பன குறித்தும் மாநாடு விவாதித்து முன்னேற்றம் காண வேண்டியுள்ளது. மாவட்ட அறிக்கைகளில் இது குறித்து போதுமான விபரம் இல்லை. உள்ளூர் மட்ட தலையீடுகளையும், கிளர்ச்சி இயக்கங்களையும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதோடு ஏற்படும் தொடர்புகளை உடனுக்குடன் அமைப்புகளாக்கி அரசியல்படுத்தும் பணிகளிலும் கவனம் செலுத்திட வேண்டும்.

4.175 நிலம், குடிமனை, உணவு, வேலை, கல்வி, சுகாதாரம், பாசன வசதிகள் உள்ளிட்ட பிரச்சனைகளிலும் கிராமப்புற, நகர்ப்புற உழைப்பாளி மக்களின் வாழ்வாதாரத்திற்கான பிரச்சனைகளிலும், சமூக ஒடுக்குமுறை சார்ந்த பிரச்சனைகளிலும் நமது தலையீடுகள் தொடர்ச்சியாக உள்ளன. நமது தலையீடுகள் ஒருபகுதி மக்களிடம் இயக்கத்தின் மீதான மரியாதையை உயர்த்தியுள்ளது. எனினும் அரசியலாக மக்களை வென்றெடுக்க தாக்கத்தை ஏற்படுத்தும் அளவில் சக்தியான மக்கள் இயக்கங்களை வளர்த்தெடுப்பது குறித்து மாநாடு விவாதித்து முன்னேற்றத்திற்கான வழிமுறைகளை உருவாக்கிட வேண்டியுள்ளது. சிறுபான்மை மக்கள் பிரச்சனையில் குறிப்பிடத்தக்க தலையீடுகள் இக்காலத்தில் இல்லை என்பதை முன்னிறுத்தி எதிர்வரும் காலத்தில் திட்டமிட்டு செயலாற்ற வேண்டியுள்ளது. நகர்ப்புறங்களில் திரட்டப்படாத உடலுழைப்புத் தொழிலாளர்கள், சேவைத்துறையில் சுய வேலை செய்து பிழைக்கும் உழைப்பாளி மக்கள், அறிவுசார் உழைப்பாளிகள் மற்றும் நடுத்தர பிரிவினரை அணிதிரட்டும் பணியினையும் முனைப்போடு கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

4.176 ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்துத்துவ அமைப்புகளின் மதவெறி தூண்டும் நடவடிக்கைகள் செயல்பாடுகள், அரசியலாக கெட்டிப்படுத்தும் நடவடிக்கைகள் ஆகியவற்றை எதிர்கொள்ளவும், சிறுபான்மை தீவிரவாத கருத்துக்களை பின்தள்ளவும் கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன தளங்களில் மட்டுமல்லாது, கலை இலக்கிய பண்பாட்டு தளங்களில் செயல்பாட்டிற்கு குறிப்பான செயல்திட்டங்களை உருவாக்கி மக்களிடையே தொடர்ச்சியான செயல்பாடுகளை எடுத்துச்செல்ல வேண்டியுள்ளது.

4.177 இனம், சாதி, மதம், சமூக ஒடுக்குமுறைகள் அடையாள அரசியல் சக்திகளுக்கு அடையாளத்தின் அடிப்படையில் மக்களைத் திரட்டுவதற்கான வாய்ப்பை அளிக்கிறது. அடையாள அரசியல் இயக்கத்தின் வளர்ச்சி தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக அமையும் - வர்க்க ஒற்றுமையை சிதைக்கும். எனவே மூலதனச் சுரண்டலுக்கும், தாராளமய கொள்கை தாக்குதலுக்கும் உழைப்புச் சுரண்டலுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ள உழைப்பாளி மக்களை சாதி, மதம், இன அடையாளங்களுக்கு அப்பால் வர்க்கமாக ஒன்றுபடுத்தும் பணியை மேலும் வலுப்படுத்த வேண்டியுள்ளது.

4.178 நமது செயல்பாடுகளினால் பொதுவான மரியாதை உயர்ந்துள்ளபோதிலும், ஒரு வலுவான மக்கள் இயக்கமாக மாற - நாம் வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது என்பதை முன்னிறுத்தி நமது கிளர்ச்சிப்பணிகளை எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். மாற்றுக் கொள்கைகளின் பின்னால் மக்களைத் திரட்ட வேண்டும். இடதுசாரி மற்றும் ஜனநாயக எண்ணம் கொண்டோரை அணிதிரட்டும் முயற்சிகளை தொடர்ச்சியாக எடுத்திட வேண்டும். வர்க்க சக்திகளின் சேர்க்கையில் நமக்குச் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்த முனைப்போடு களப்பணியாற்றிட வேண்டும்.

5. வர்க்க வெகுஜன அரங்கங்கள்

தொழிற்சங்க அரங்கம்

5.1 **கடந்த மாநாட்டிற்கு பின்பு நடைபெற்ற பிரதான பணிகள்:**

- 2012 பிப் 28 அகில இந்திய வேலை நிறுத்தம்.
- 2013 பிப் 20,21 இரண்டு தினங்கள் (48 மணி நேரம்) வேலை நிறுத்தம்.
- பல்வேறுகட்ட அனைத்து சங்க கூட்டு இயக்கங்கள்.
- NLC பங்கு விற்பனையை எதிர்த்த நடவடிக்கைகள்
- நோக்கியா, பாக்ஸ்கான் ஆலை மூடலை எதிர்த்த போராட்டங்கள் - ஆதரவு நடவடிக்கைகள்.
- மாருதி தொழிலாளர்களுக்கு சகோதர ஆதரவு நிதி திரட்டல் (ரூ.8 லட்சம் வரை வசூல்)
- முறைசாரா வாரிய குளறுபடிகளை எதிர்த்த நடவடிக்கை.
- தொழிற்சங்க அங்கீகார தேர்தல்கள் - ரயில்வே, NTC ஆலைகள்
- புதிய ஊதிய ஒப்பந்தங்கள் - மின்சாரம், கூட்டுறவு, NTC பஞ்சாலைகள் மற்றும் MNC களின் நோக்கியா, ATC டயர்ஸ், BMW - ஒப்பந்தங்கள்.

5.2 கட்சியின் கடந்த மாநில மாநாடு பிப். 22-25, 2012ல் நடைபெற்றது. இம்மாநாட்டில் விரிவாக்கம் - கட்சி மற்றும் வர்க்க/வெகுஜன அமைப்புகளின் விரிவாக்கம். கட்சி அணிகள் மத்தியில்

அரசியல், ஸ்தாபன ஒற்றுமையை உருவாக்குவது, தரம் உயர்த்துதல் என நமது ஸ்தாபன இலக்கு தீர்மானிக்கப்பட்டது.

விரிவாக்கம்:

5.3 சிஐடியு அமைப்பின் உறுப்பினர்கள் விவரம்:

2010 - 5,46,581; 2011 - 5,61,021; 2012 - 5,35,254; 2013 - 5,17,727 (இறுதிப்படுத்தப்படவில்லை)

- சிஐடியு அமைப்பின் உறுப்பினர் பலத்தில் உயர்வு இல்லை. தேக்கம் நீடிக்கிறது.
- இந்த நான்கு ஆண்டுகளில் - திருச்சி, நெல்லை, தஞ்சை, கடலூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலும், மருந்து விற்பனை பிரதிநிதி, சிவில்சப்ளை, விரைவு போக்குவரத்து ஆகிய மாநில சங்கங்களில் 500 முதல் 3000 வரை உயர்வு ஏற்பட்டுள்ளது. அதே வேளையில் – ரயில்வே (23000), அங்கன்வாடி (5000), மின்சாரம் (2000) என மாநில சங்கங்களில் சுமார் 30,000ம் குறைவும், மதுரை மாநகர், கோவை, திருப்பத்தூர், தூத்துக்குடி, தேனி, திருவாரூர், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் 2000 முதல் 1000 வரை குறைவும் ஏற்பட்டுள்ளது.
- அணிதிரட்டப்பட்ட பகுதியில் - மின்சாரம் - 5000, காஞ்சிபுரம் - 5000, நெல்லை - 1000 என சில பகுதிகளில் உயர்வு ஏற்பட்டுள்ளது.
- முறைசாரா வாரியக் குளறுபடிகள் காரணமாக கட்டுமானம், தையல், முறைசாரா பகுதிகளில் குறைவு ஏற்பட்டுள்ளது.

5.4 **விரிவாக்கத்திற்காக எடுத்த முயற்சிகள்:** (1) முறைசாரா சங்கங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்ட ஒன்பது மண்டல பேரவைகள், (2) 10000 உறுப்பினர்களுக்கும் குறைவாக உள்ள மாவட்ட தலைவர், செயலாளர் கூட்டங்கள், (3) பதிவுக்கான சிறப்புக்காலம்/முயற்சி என சிஐடியு மாநிலக் குழுவின் தலையீடுகள் செய்யப்பட்டன. (4) கூடுதலாக கட்சி மாவட்டக்குழுக்கள் குறிப்பாக திருப்பூர் (பனியன்), விருதுநகர் (பட்டாசு) உதவி குறிப்பிடத்தக்கது.

5.5 **மாநில உபகுழு:** கடந்த மாநாட்டிற்குப் பிறகு தோழர்கள் அ.சவுந்தரராசன், டி.கே.ரங்கராஜன் உட்பட 19 பேர் கொண்ட உபகுழு அமைக்கப்பட்டது. உபகுழு இடைப்பட்ட காலத்தில் ஏழுமுறை கூடியுள்ளது.

5.6 மத்தியக்குழுவின் தொழிற்சங்க அரங்கம் குறித்த ஆவணத்தை தமிழக நிலைமைகளுக்கு பொருத்தி நமது அனுபவங்களையும், கடமைகளையும் இறுதி செய்து ஒரு ஆவணத்தை தயார் செய்தது மிக முக்கியமான பணியாகும்.

5.7 வெண்மணி நினைவாலயம், சிஐடியு மாநில மாநாடு போன்ற பணிகளை முன்னெடுத்துச் செல்ல உபகுழுவில் விவாதிக்கப்பட்டு, கட்சியின் வழிகாட்டும் பாத்திரத்தை உறுதி செய்வது, வர்க்கத்தை அரசியல்படுத்துவது, அமைப்பை விரிவுபடுத்துவது, திரட்டப்பட்ட இவர்களை ஆளும் வர்க்கத்தோடு – மூலதனத்தோடு மோதும் தீவிரமான போராட்டங்களில் ஈடுபடுத்துவது, அதில் கிடைக்கும் தீவிரமான முன்னணி தொழிலாளர்களை கட்சிக்கு நெருக்கமாகவும், கட்சிக்கும் கொண்டு வருவது போன்ற கடமைகளை மாநில உபகுழு சிரத்தையோடு நிறைவேற்ற வேண்டியுள்ளது.

5.8 தொழிற் சங்க அரங்கில் போக்குவரத்து, மின்சாரம், ரயில்வே, மருந்து விற்பனைப் பிரதிநிதி, லிகாய் மற்றும் மத்தியதர வர்க்க அமைப்புகளான வங்கி, காப்பீடு, தொலைத் தொடர்பு போன்ற அரங்கங்களில் தனித்தனியாக பிராக்ஷன்கள் அமைக்கப்பட்டு செயல்படுகின்றன.

5.9 இதில் மின்சார அரங்கில் - தொழிற்சங்கத்தில் முன்னணியான ஆதரவாளர்களைக் கொண்ட

கூட்டங்கள் தர்மபுரி, சேலம், திருப்பத்தூர், தூத்துக்குடி, பெரம்பலூர், திருச்சி, சென்னை, விழுப்புரம், காஞ்சி, நெல்லை, நாகை, திருவாரூர், கோவை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டு கட்சி துணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. இதேபோல் ரயில்வே அரங்கில் சென்னை டிவிஷனில் துணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

5.10 போக்குவரத்து அரங்கில் சமீபத்தில் நடைபெற்ற போராட்டத்தின் பின்னணியில் மாவட்டத்தில் கட்சி போக்குவரத்து இடைக்கமிட்டி உறுப்பினர்கள், கிளைச் செயலாளர்கள் கொண்ட 6 மண்டலக் கூட்டங்களை நடத்தி கட்சியை விஸ்தரிப்பதற்கான திட்டமிடுதல் நடைபெற்றுள்ளது.

5.11 மின்சாரம் மற்றும் ரயில்வே அரங்கில் (சென்னை டிவிஷன்) அரசியல் பயிற்சி, பத்திரிகை - விற்பனை, லெவி வசூல் ஆகியவற்றில் தொடர்ச்சியான தலையீடும், நடவடிக்கைகளும் ஓரளவு முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது. சென்னை ரயில்வே டிவிஷனில் 217000 ரூபாய்க்கு புத்தக விற்பனை நடத்தியதும், மின் அரங்கில் பீப்பிள்ஸ் டெமாக்கரசி ஆண்டு சந்தா 150 சேகரித்ததும் பாராட்டுக்குரியது.

அரசியல் படுத்துதல் மற்றும் தொழிற்சங்க கல்வி

5.12 சிஐடியு மாநில கல்விக்குழு கட்சியின் மாநில மாநாட்டிற்கு பின்பு நான்கு முறை கூடியுள்ளது. இதில் தொழிற்சங்க கல்விக்கு திட்டமிடப்பட்டது. மாநில ரீதியிலான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

5.13 சிஐடியுவின் தலைமைப் பொறுப்பில் உள்ள தோழர்களான - மாநில நிர்வாகிகள், மாவட்டத் தலைவர், செயலாளர், சம்மேளன/மாநில சங்கங்களின் தலைவர், செயலாளர்களுக்கான மூன்று நாள் அரசியல் பயிற்சி முகாம் 2013 நவம்பர் 8-10 தேதிகளில் விருதுநகரில் நடைபெற்றது.

5.14 இதில் இந்திய தொழிற்சங்க இயக்க வரலாறு, சமகால முதலாளித்துவம், விடுதலைக்கு பின் இந்திய நாட்டு வளர்ச்சியின் அரசியல் பொருளாதாரம், சமகால தொழிற்சங்க சவால்கள், புத்தக வாசிப்பு, கணினி பயன்பாடு ஆகிய தலைப்புகளில் பயிற்சியளிக்கப்பட்டது. இதில் 155 பேர் கலந்து கொள்ள வேண்டும்.102 பேர் மட்டுமே பங்கேற்றனர். அடுத்த கட்ட மூன்று நாள் பயிற்சி முகாம் மார்ச் 2015ல் கோவையில் நடைபெறவுள்ளது.

5.15 பெண் ஊழியர்களுக்கான அரசியல் வகுப்பு திண்டுக்கல்லில் 2013ல் நடத்தப்பட்டது. 88 தோழர்கள் கலந்து கொண்டனர்.

5.16 பெருகி வரும் அரசியல்படுத்துதல் மற்றும் தொழிற்சங்க கல்வித் தேவையை பூர்த்தி செய்ய ஒரு ஆசிரியர் குழுவை உருவாக்குவது என முடிவு செய்த அடிப்படையில் மாநிலம் முழுவதும் 42 தோழர்கள் அடையாளம் காணப்பட்டு முதல் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. குறைந்தபட்ச கூலி ரூ.15 ஆயிரம் - ஏன், எப்படி மற்றும் முறைசாரா அரங்கம் குறித்தும் குறிப்புகளுடன் விளக்கப்பட்டது. இந்த முயற்சி தொடர வேண்டும். தோழர் ஜோதிபாசு நூற்றாண்டு விழா துவக்க நிகழ்ச்சியை சென்னையில் எழுச்சியோடு நடத்தினோம். பல்வேறு அறிஞர்கள், கருத்தாளர்கள் தோழர் ஜோதிபாசுவின் பன்முகப் பணிகளை விளக்கி பேசினார்கள். இதையொட்டி நாம் பிரசுரம் வெளியிடுவது என்ற முயற்சி வெற்றி பெறவில்லை.

5.17 பிப்ரவரி 20,21 வேலைநிறுத்தத்தையொட்டி பத்து அம்ச கோரிக்கைகளை விளக்கி 70 ஆயிரம் பிரசுரம் வெளியிடப்பட்டது. அகில இந்திய மாநாட்டு குழு விவாத முடிவுகள் தமிழில் வெளியிடுவது என்ற முடிவு இன்னும் அமலாகவில்லை. தொழிலாளர் சட்டத் திருத்தம் 70000 பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. பொதுத்துறையும் இன்றைய நிலையும் குறித்த பிரசுரம் 20000மும், டாஸ்மாக் சம்மேளனம் சார்பில் தோழர் என். ராமகிருஷ்ணன் எழுதிய சிங்காரவேலர் குறித்த சிறு பிரசுரம் 2000 கொண்டு வரப்பட்டுள்ளது.

வர்க்க வெகுஜன அரங்கங்கள்

5.18 அகில இந்திய மாநாட்டு முடிவுகளை விளக்கியும், பெல்லாரி பொதுக்குழு முடிவுகளை விளக்கியும், முறைசாரா அரங்கில் விரிவாக்கத்தை ஒட்டிய 9 மண்டல வாரியான சிறப்பு பேரவைகளும், தோழர்.ஜோதிபாசு நூற்றாண்டு விழாவை ஒட்டிய வகுப்புகள், பேரவைகள் பரவலாக நடைபெற்றுள்ளன. இதுவும் நமது தேவைக்கும், வாய்ப்புகளுக்கும் ஏற்ப நடைபெற்றதாக சொல்ல முடியாது.

5.19 மதுரை மாநகர் மாவட்டக்குழு சார்பாக தொடர் வகுப்பு மொத்தத்தில் 11 அமர்வுகளாக நடைபெற்றுள்ளது. பி.ஆர்.சி. தோழர்களுக்கு இரண்டு நாட்கள் பயிற்சி முகாம் நடத்தப்பட்டுள்ளது. புதுக்கோட்டை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட அளவிலான பயிற்சி முகாம் நடத்தப்பட்டுள்ளது. திண்டுக்கல், இராமநாதபுரம், நெல்லை ஆகிய மாவட்டங்களில் ஏரியா வாரியாக சில அரங்கங்களில் வகுப்புகள் நடைபெற்றுள்ளது. தென்சென்னையில் தற்போது தொடர்வகுப்பு துவக்கப்பட்டுள்ளது.

5.20 உள்ளாட்சி, சுமை ஆகிய இரண்டு சம்மேளனங்களில் வருடம் ஒரு வகுப்பு என்ற முறையில் இரண்டு வகுப்புகள் நடைபெற்றுள்ளன. உள்ளாட்சியில், கிராம ஊராட்சி ஊழியர்கள், நகராட்சி, பேரூராட்சி ஊழியர்கள், மாநகராட்சி என தனித்தனியாக நடத்துவது நல்ல முயற்சி. டாஸ்மாக், கைத்தறி, பஞ்சாலை, கட்டுமானம் ஆகிய சம்மேளனங்கள் தலா இரண்டு நாட்கள் வகுப்பு நடத்தப் பட்டது. இதில் சம்பந்தப்பட்ட அரங்கங்கள் சார்ந்த தலைப்புகளில் வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. கட்டுமான அரங்கில் 15 தோழர்களை கொண்ட மாநில ஆசிரியர் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இவர்களை இவ்வரங்களிலும் மற்ற இடங்களிலும் பயன்படுத்த முடியும்.

பன்னாட்டு நிறுவனங்களில் போராட்டங்கள்:

5.21 ”தொழிற்சங்க உரிமையை பாதுகாக்கவும் மற்றும் சங்கம் அமைக்கும் உரிமையைக் கோரியும் தீரமிக்க நீண்ட நெடிய போராட்டங்கள் ஹூண்டாய் மற்றும் பாக்ஸ்கான் உள்ளிட்ட ஏராளமான பன்னாட்டு நிறுவனங்களில் தமிழ்நாட்டில் நடைபெற்றது குறிப்பிடத்தக்க போராட்டங்களாகும்” என கடந்த 20வது கட்சி காங்கிரஸ் அறிக்கையில் குறிப்பிட்ட போராட்டங்கள், இந்த இடைப்பட்ட காலத்தில் தொடர்ச்சியாகவும் மேற்கொள்ளப்பட்டது. இதில் நோக்கியா, பாக்ஸ்கான் போன்ற நிறுவனங்கள் ஆலைகளை மூடிவிட்டு தொழிலாளர்ளை நிர்க்கதியில் நிறுத்தியது. இதை எதிர்த்து தொடர் போராட்டங்களையும் நாம் மேற்கொண்டோம். BMW போன்ற உயர்தர கார் உற்பத்தி நிறுவனங்களில் நாம் நிலைகொண்டு, புதிய ஊதிய ஒப்பந்தம் கண்டுள்ளோம்.

5.22 இந்த பன்னாட்டு நிறுவனங்களில் நமது விடாப்பிடியான தொடர் முயற்சிகளின் விளைவாக காஞ்சிபுரத்தில் 5000 உறுப்பினர்களும், நெல்லையில் 1000 உறுப்பினர்களும் சிறப்பு பொருளாதார மண்டலங்களிலேயே நமது இணைக்கப்பட்ட சங்கங்களாக கிடைத்துள்ளன. இதற்குமேல் கூடுதலாக நமது தலைமையிலான சுயேச்சையான சங்கங்களில் சுமார் 7000 தொழிலாளர்கள் அமைப்பு ரீதியாக திரட்டப்பட்டனர். இதில் நோக்கியா, பாக்ஸ்கான் போன்ற நிறுவனங்கள் மூடப்பட்டதால் சுமார் 4000க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை இழக்க நேரிட்டது.

5.23 காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிஎம்டபுள்யூ, ஹூண்டாய், போஃர்டு போன்ற நிறுவனங்களில் சுமார் 150 பேர் வரை கட்சியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதேபோல் நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான், சிறப்பு பொருளாதார மண்டலத்திலுள்ள ஏடிசி டயர்ஸ் எனும் பன்னாட்டு நிறுவனத்தில் பணியாற்றும் 176 தோழர்கள் கட்சி துணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

5.24 **முறைசாரா பகுதி:** சமகால முதலாளித்துவ வளர்ச்சியின் ஒரு பகுதியாக இந்த வகை தொழிலாளர்கள் எண்ணிக்கை பெருகிக் கொண்டே வருகிறது. விவசாயம் சாராத இதர

முறைசாரா உழைப்பாளிகளை திரட்டுவதில் நாம் வெகு தூரம் செல்ல வேண்டியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள உழைப்பாளிகள் (15 வயது முதல் 50 வயது வரை) 3 கோடியே 29 லட்சம்பேர். சுமார் 2 கோடிப் பேர் விவசாயம் சாரா பகுதியினர். இதில் 23.71 லட்சம் பேர் அணிதிரட்டப்பட்டவர்கள். மீதம் உள்ள 1.7 கோடிப் பேர் முறைசாரா பகுதியினர். பல்வேறு பிரிவுத் தொழிலாளர்கள். இதில் நமது பங்கு 4.5 லட்சம். வெறும் நான்கு சதமானவர்களை மட்டுமே நாம் திரட்டியுள்ளோம்.

5.25 இதில் தற்போது தேக்கம் ஏற்பட்டுள்ளது. கட்டுமானத்தில் மட்டும் சுமார் 10000 உறுப்பினர்கள் குறைவு ஏற்பட்டுள்ளது. இதர தொழிலாளர்களில் சொல்லிக் கொள்ளும் அளவிலான முன்னேற்றம் இல்லை. தொழிற்சங்க மட்டத்தில் இந்த தேக்கத்தை உடைக்க சில முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் நமது கட்சி காங்கிரஸ் சுட்டிக்காட்டியபடி நமது கட்சி இந்தப் பணிகளில் முழுமையாக ஈடுபட்டாக வேண்டும். கட்சி மாநிலக்குழு சார்பாக முறைசாரா தொழிலாளர்களை திரட்டுவது குறித்த பாடக்குறிப்பு தயார் செய்யப்பட்டு, மாவட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி முகாமில் விளக்கப்பட்டது.

5.26 இன்றும் நாம் இதன் முக்கியத்துவத்தை உள்வாங்குதல், முன்னுரிமை பகுதி, அடையாளம் காணுதல், ஊழியர் திரட்டும் பொதுத் திட்டம், தொடர் கண்காணிப்பு, தொழிலாளர் பிரச்னைகளோடு வாழ்விடம் சார்ந்த பிரச்னைகளிலும் தலையீடு எனத் திட்டவட்டமான ஏற்பாடுகள் அனைத்து மட்டத்திலும் செய்யப்பட வேண்டும்.

5.27 கட்சி உறுப்பினர் பதிவுப் பரிசீலனையை கட்சியின் மாநிலக்குழு நடத்தியபோது இந்தப் பகுதியில் கட்சி உறுப்பினர் சேர்ப்பிற்கும், அரசியல் ரீதியாக இவர்களை வென்றெடுக்க வேண்டிய அவசியமும் வலியுறுத்தப்பட்டது. ஆயினும் இதன் மீது தொழிற்சங்க அரங்க மட்டத்தில் எவ்வித பணிகளும்·திட்டமிட்டபடி நடைபெறவில்லை.

சிஐடியு இதழ்கள்

5.28 சிஐடியு செய்தி, போக்குவரத்து தொழிலாளி., மின்கதிர், தொழிலரசு, சுமை செய்தி, எழுச்சி, (நுகர்பொருள் வாணிபக்கழகம்) கூட்டுறவு ஊழியர், டி.என்.எம்.எஸ்.ஆர்.எ. செய்தி, ஆகிய இதழ்கள் சுமார் ஒருலட்சம் பிரதிகள் மாதாமாதம் கொண்டுவருகிறோம். இவற்றின் உள்ளடக்கத்தை மேம்படுத்த வேண்டியுள்ளது.

ஐடி துறையில் தலையீடு

5.29 வளர்ந்து வரும் சேவைத் துறையில் மிக முக்கியமானது ஐடி துறை. இதில் பணிபுரியும் தொழிலாளர்களைத் திரட்டுவதற்கான முயற்சிகள் துவக்கப்படாமலேயே உள்ளது. சமீபத்தில் டிசிஎஸ் நிறுவனத்தில் உத்தேசிக்கப்பட்ட ஆட் குறைப்பையொட்டி வடசென்னை, தென்சென்னை பகுதிகளில் இத்துறையில் பணியாற்றும் ஊழியர்களிடம் தொடர்பு ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

விவசாய அரங்கம்

5.30 கடந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட கடமைகள் நிறைவேற்றப்பட்ட விதம்:

நெருக்கடியில உழலும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களைத் திரட்டிட – சக்திமிக்க தனியான கூட்டு இயக்கங்களை நடத்திட வேண்டும்.

- ♦ நிலம், வீட்டு மனைப்பட்டா மற்றும் உள்ளூர் பிரச்சனைகள் மீத தொடர் இயக்கங்கள் நடத்திட வேண்டும்.
- ♦ மாநிலக்குழு நிறைவேற்றியுள்ள “விவசாய அரங்கில் நமது பணிகளும் கடமைகளும்” என்ற

ஆவணத்தை அமுலாக்கிட இதுவரை விளக்கப்படாத மாவட்டங்களில் பேரவைக் கூட்டங்களை நடத்தி விளக்கிட வேண்டும் – மேற்கண்ட மூன்று கடமைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- மாவட்ட விவசாய நிலைமை, கவனம் செலுத்த வேண்டிய முன்னுரிமை பிரச்சனைகள், ஊழியர், மற்றும் ஸ்தாபன ஏற்பாடுகள் குறித்து எழுத்துப்பூர்வமான குறிப்பு தயார் செய்து மாவட்ட செயற்குழு, மாவட்டக்குழு கூட்டங்களில் விவாதித்து உரிய முடிவுகளை 6 மாதத்திற்குள் மேற்கொள்ள வேண்டும். மூன்று மாவட்டங்களில் மட்டுமே அமலாகியுள்ளது.
- கிராமப்புற வேலை உறுதித் திட்டத்தை கவனித்திடவும், மாவட்டப் பணிகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தேவையான ஊழியர்களை கட்சி மாவட்டக்குழுக்கள் தாமதப்படுத்தாமல் தீர்மானித்திட வேண்டும். –வி.தொ.ச மாநிலக்குழு உதவி மூலம் சில ஊழியர்கள் போடப்பட்டுள்ளனர்.
- இம்முடிவுகளை நிறைவேற்றப்பட்ட விதம் குறித்து 6 மாதத்திற்கு ஒரு முறை கட்சி மாவட்ட செயற்குழு மாவட்டக் குழுக்களில் தனியான பரிசீலனை மேற்கொள்ள வேண்டும். மாநில உபகுழு அவ்வப்போது கூடி, ஆவண அமலாக்கம் குறித்து பரிசீலித்து முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். – மாநில உபகுழு மட்டும் அவ்வபோது பரிசீலித்துள்ளது.

கூட்டுப் போராட்டங்கள்

5.31 காவிரி நதிநீர் மேலாண்மை வாரியம் அமைக்க வற்புறுத்தியும், காவிரி நதியின் குறுக்கே கர்நாடகம் தானடித்த மூப்பாக அணை கட்டுவதை மத்திய அரசு தடுத்து நிறுத்தக் கோரியும், வறட்சி நிவாரணம் கரும்புக்கான விலை, பாக்கி வழங்கிடக் கோரி, பால் கொள்முதல் விலை உயர்வு கோரி போன்ற பிரச்சனைகளில் கூட்டுப் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. குறிப்பாக 9.7.12 அன்று திருவாரூரில் காவிரி பாசன உரிமைப் பாதுகாப்பு மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாட்டின் முடிவு படி ஜுலை 23ந் தேதி மத்திய - மாநில அரசு அலுவலகங்கள் முன்பாக முற்றுகை போராட்டம் டிசம்பர் 7ந் தேதி தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் பொது வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது. ரயில்மறியலில் 32000 பேர் பங்கேற்றனர். 2014 டிசம்பர் 4 ஆம் தேதி தஞ்சை, நாகை, திருவாரூர், திருச்சி, கடலூர் மாவட்டங்களில் நடைபெற்ற ரயில் மற்றும் சாலை மறியல் போராட்டங்களில் சுமார் 70,000 பேர் கைது செய்யப்பட்டனர். மன்னார்குடி மானாமதுரை எக்ஸ்பிரஸ் முற்றிலும் ரத்து செய்யப்பட்டது. திருவாரூர் மாவட்டத்தில் அதிகமான பங்கேற்பு இருந்தது. திமுக கூடுதலாக திரட்டியிருந்தது.

அ.இ.மாநாடு:

5.32 அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33வது அகில இந்திய மாநாட்டை 2013 ஜுலை 24,25,26,27 ஆகிய நான்கு நாட்கள் கடலூரில் வெற்றிகரமாக நடத்தியுள்ளோம். பேரணியில் சுமார் 55000 பேர் பங்கேற்றுள்ளதும் பொதுக்கூட்டத்தில் திரிபுரா முதலமைச்சர் தோழர் மாணிக் சர்க்கார் பங்கேற்றதும் குறிப்பிடத்தக்கது. மாநாட்டையொட்டி ஜுலை 21 முதல் 27 வரை வரலாற்று கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பார்த்துள்ளனர். மாநாட்டையொட்டி சிறப்பு மலர் மற்றும் பாடல் சி.டி வெளியிடப்பட்டது.

மாநாடுகள்:

5.33 தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில மாநாடு 28.11.12 அன்று ஈரோட்டில் நடைபெற்றது. 365 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 59 பேர் கொண்ட மாநிலக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

5.34 தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் மாநில மாநாடு 4.12.12 அன்று நாமக்கல்லில் நடைபெற்றது. 293 பிரதிநிதிகள் பங்கேற்றனர். 41 பேர் கொண்ட மாநிலக்குழு தேர்வு செய்யப்பட்டது.

5.35 தமிழ்நாடு கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில மாநாடு விழுப்புரத்தில் 4.1.2014 அன்று நடைபெற்றது. 350 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 35 பேர் கொண்ட மாநிலக்குழு தேர்வு செய்யப்பட்டது.

வி.தொ.ச 8வது மாநில மாநாடு:

5.36 2013 டிசம்பர் 19ந் தேதி பேரணியும், 20,21 தேதிகளில் மாநாடும் தேனியில் நடந்தது. 412 பேர் பங்கேற்க நிச்சயிக்கப்பட்டதில் 394 தோழர்கள் பங்கேற்றனர். மாநாட்டு பிரதிநிதிகளில் 40 வயதுக்குட்பட்டோர் 100 பேர், 50 வயதுக்குட்பட்டோர் 227 பேர், மாநாட்டையொட்டி தீக்கதிர் சிறப்பு மலர் 22455 வாங்கி விற்பனை செய்யப்பட்டது. 77 தோழர்கள் கொண்ட மாநிலக்குழு தேர்வு செய்யப்பட்டது. 17 தோழர்கள் நிர்வாகிகளாகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு கரும்பு வெட்டும் தொழிலாளர்கள் சங்கம்:

5.37 தமிழ்நாட்டில் உள்ள 46 சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வெட்டி அனுப்பும் தொழிலாளர்களைத் திரட்டி தனியாக தமிழ்நாடு கரும்பு வெட்டும் தொழிலாளர்கள் சங்கம் உருவாக்கப்பட்டது.

5.38 அடையாள அட்டை, விபத்து காப்பீடு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இயக்கம் நடத்துகின்றனர். 29.4.12ல் இக்கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் அரசு விருந்தினர் மாளிகை முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 2645 பேர் பங்கேற்றனர்.

5.39 விழுப்புரம், திருவண்ணாமலை, நாமக்கல், தருமபுரி, கடலூர் மாவட்டங்களில் சங்கம் பிடிப்புடன் உள்ளது. இதர மாவட்டங்களில் சுமாராக உள்ளது. கரும்பு வெட்டுபவர்களில் பெரும்பாலானோர் விழுப்புரம், கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். விபத்து ஏற்படும் போது தொழிலாளர்களைத் திரட்டி நிவாரணம் பெற முடிகிறது. பாம்பு கடித்து இறந்த தொழிலாளிக்கு நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி பாரி நிர்வாகத்திடமிருந்து ரூ.1 லட்சம் நட்ட ஈடு பெற்றுத்தந்தோம்.

பெண் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம்:

5.40 கிராமப்புற பெண்களை, குறிப்பாக 100 நாள் வேலை செய்யும் பெண்களை திரட்டும் நோக்கத்துடன் இச்சங்கம் 2.8.11ல் உருவாக்கப்பட்டது. 13 மாவட்டங்களில் அமைப்புக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. மாநில அமைப்புக்குழுவில் 12 தோழர்கள் உள்ளனர்.

பயிற்சி வகுப்புகள்:

5.41 மாநில அளவில் விவசாயிகள் சங்க மாவட்ட நிர்வாகிகளுக்கான இரண்டு நாள் வகுப்பு 2014 பிப்ரவரி 14,15 தேதிகளில் புதுக்கோட்டையிலும் பிப்ரவரி 22,23 தேதிகளில் விழுப்புரத்திலும் நடைபெற்றது. இரண்டு மையங்களிலும் சுமார் 300 பேர் பங்கேற்றனர். இது தவிர்த்து மாவட்டங்களில் ஒருநாள் வகுப்பு பரவலாக நடைபெற்றுள்ளது. கூடுதலான பயிற்சி வகுப்புகள் மாநில அளவில் நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

5.42 வி.தொ.ச சார்பில் 2013 ஜுலை 28, 29ல் மாநில பயிற்சி முகாம் கும்மிடிப்பூண்டியில் நடத்தப்பட்டது. 184 தோழர்கள் பங்கேற்றனர். இத்துடன் மண்டல பயிற்சி முகாம், மாவட்ட பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டது.

5.43 மத்திய, மாநில அரசுகள் நலத்திட்டங்கள் மூலம் கிராம மக்களிடம் மாயையை ஏற்படுத்துகின்றனர். நலத்திட்டங்களில் நாம் தலையிட்டு அந்த மாயையை உடைப்பதுடன் அரசின் போலித்தனத்தை அம்பலப்படுத்துவது என்ற வகையில் கிராம அளவில் உள்ள 1200 தோழர்களுக்கு 2014 டிசம்பர், 2015 ஜனவரியில் 9 மையங்களில் நலத்திட்டத்தில் நமது தலையீடு பற்றி பயிற்சி முகாம் நடந்துள்ளது.

வர்க்க வெகுஜன அரங்கங்கள்

உபகுழு – மைய செயல்பாடு:

5.44 உபகுழு கூட்டம் எட்டு முறை நடைபெற்றுள்ளது. இன்னும் கூடுதலாக கூட்டங்கள் நடத்தியிருக்க வேண்டும். இக்கூட்டங்களில் விவசாய அரங்கில் கட்சி விரிவாக்கம், வி.ச அரங்க ஆவண அமலாக்கம், தேசீய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் மாநிலம் முழுவதும் தலையிடுவது குறித்து, அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் அகில இந்திய மாநாட்டை தமிழ்நாட்டில் நடத்துவது குறித்து, புதிய தாராளமய கொள்கை அமலாக்கத்தால் தமிழக கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், மாற்றங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வது, வி.ச, வி.தொ.ச, மாநில நிர்வாகிகள் தேர்வு, நாடாளுமன்றத் தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறை, அரங்கங்களின் சார்பில் தலையிட வேண்டிய முக்கிய பிரச்சனைகள் ஆகிய அம்சங்கள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. உபகுழுக் கூட்டத்தின் முடிவுகள் மீதான மாநில செயற்குழு வழிகாட்டுதல் மேலும் பலப்பட வேண்டும். மாவட்ட உபகுழுக்களின் செயல்பாடுகளில் பெரிய மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. கட்சி விரிவாக்கத்திற்கு திட்டமிட்டு முயற்சிப்பது போன்றவற்றில் மாவட்ட உபகுழுக்கள் கவனம் செலுத்துவது அவசியம்.

வி.ச அரங்க ஆவண அமலாக்கம்:

5.45 கிராமப்புற மக்களைத் திரட்டுவதற்காக வழிகாட்டும் ஆவணம் மாநிலக்குழுவால் இறுதிப்படுத்தப்பட்டு 4 ஆண்டுகள் கடந்த பிறகும் அதை அமல்படுத்தாமல் இருப்பது பெரும் குறையே.

5.46 மாநில உபகுழுவின் தொடர் வற்புறுத்தலின் காரணமாக கன்னியாகுமரி தவிர அனைத்து மாவட்டங்களிலும் கிளைச் செயலாளர்கள் வரை விளக்கப்பட்டுள்ளது. திருவாரூர், விருதுநகர், திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் மாவட்டக்குழுக்களில் மாவட்டம் தொடர்பான குறிப்பு தயார் செய்யப்பட்டு இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களிலும் இது விரைவுபடுத்தப்பட வேண்டும்.

உறுப்பினர் பதிவு:

5.47 வி.ச, வி.தொ.ச அமைப்புகளில் உறுப்பினர் சேர்ப்பில் ஓரளவு முன்னேற்றம் உள்ளது. உறுப்பினர் பதிவுக்கு ஏற்ற காலத்தை அந்தந்த மாவட்டங்கள் முன்கூட்டியே தீர்மானித்து குறிப்பிட்ட காலத்தில் பதிவு முடிக்கப்பட வேண்டும் என்ற முடிவு அமலாகவில்லை. மாறாக, கட்சியின் பல்வேறு பணிகள் காரணமாக காலநீட்டிப்பு செய்யப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. இதில் மாற்றம் காண வேண்டும். கடந்த மாநாட்டின் போது இருந்ததை விட வி.ச.வில் 56,931ம், வி.தொ.சவில் 1,06,079ம் உயர்வு ஏற்பட்டுள்ளது. வி.சவில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, திருச்சி, புதுக்கோட்டை, திருப்பூர், கோவை, நீலகிரி, சேலம், கடலூர், பாண்டிச்சேரி ஆகிய மாவட்டங்களில் உறுப்பினர் பதிவு குறைவு ஏற்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டம் இலக்கை முடித்துள்ளது பாராட்டுக்குரியது.

5.48 வி.தொ.ச.வில் மதுரை, கோவை, சிவகங்கை, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் பதிவு குறைந்துள்ளது. வேலூர் மாவட்டத்தில் மட்டும் 2013-14ம் ஆண்டில் 50500 உறுப்பினர் சேர்த்திருப்பது பாராட்டத்தக்கது. நாகப்பட்டிணம், தஞ்சை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் பதிவில் தொடர்ந்து தேக்க நிலை நீடிக்கிறது.

5.49 நமது இடைவிடாத செயல்பாட்டிற்கு ஏற்ப உறுப்பினர் பதிவில் முன்னேற்றம் ஏற்படாதது மிகப்பெரும் குறை. வேளாண்மைத் துறையில் மேலும் மேலும் நெருக்கடிகள் ஆழமாகிக் கொண்டிருக்கிறது. இத்தகைய நிலையில், பாதிப்புக்குள்ளாகும் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களை அமைப்பிற்குள் கொண்டு வருவதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

5.50 நமது இயக்கங்களில் பங்கேற்பவர்கள், இயக்கத்தால் பலனடைந்தவர்களைக் கூட அமைப்பின் கீழ் திரட்டுவதில் குறைபாடு நீடிப்பது சரியல்ல. கிராமப்புற கட்சி உறுப்பினர்கள், கிராமப்புற இடைக்கமிட்டிகள் பிரதானமாக விவசாய அரங்கப் பணிகளில் ஈடுபட வேண்டுமென்ற கட்சியின் முடிவு உறுதியாக அமல்படுத்தப்படுவதை மாவட்டக்குழுக்கள் கவனிக்க வேண்டும்.

5.51 இலட்சக் கணக்கில் உறுப்பினர்கள் சேர்ப்பு, குறிப்பிட்ட சில கோரிக்கைகளில் பல்லாயிரக்கணக்கில் பங்கேற்பு, கோரிக்கைகள் வெற்றி பெறுவது என பல சிறப்பான பணிகள் நடைபெற்றிருந்தாலும் நமது இடதுசாரி அரசியலை கிராமப்புற மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் நம்மால் சிறு முன்னேற்றம் கூட ஏற்படுத்த முடியவில்லை. நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாம் பெற்ற வாக்குகள் இதை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. நாகை தொகுதி தவிர வேறு எந்தத் தொகுதியிலும் நமது வெகுஜன செல்வாக்கு பிரதிபலிக்கவில்லை.

உழவன் உரிமை:

5.52 தொடர்ந்து முயற்சி செய்தும் விற்பனை 4000 என்ற அளவிலேயே உள்ளது. உறுப்பினர் எண்ணிக்கைக்கும் உழவன் உரிமை இதழ் விற்பனைக்கும் சம்பந்தமில்லாமல் உள்ளது.

ஊழியர் உதவி:

5.53 வேலூரில் நடைபெற்ற வி.தொ.ச 7வது (2010 ஏப்ரல் 15,16) மாநில மாநாட்டு முடிவுப்படி 2011 டிசம்பர் முதல் 6 தோழர்களுக்கு போக்குவரத்து மற்றும் சில்லரை செலவுகளுக்கு ரூ.2000 முதல் ரூ.5500 வரை உதவி அளிக்கப்பட்டு வருகிறது. 2013 டிசம்பர் 20, 21 - 8வது மாநில மாநாட்டு முடிவுப்படி 2015 ஜனவரி முதல் 25 தோழர்களுக்கு மாதம் தலா ரூ.2000 உதவி அளிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிஐடியு உதவி:

5.54 சிஐடியுவால் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு வழங்கப்படும் நிதி வி.ச அரங்கப் பணிகளுக்கு பேருதவியாக இருந்து வருகிறது. 2014 ஆம் ஆண்டு வழங்க வேண்டிய நிதி இதுவரை கொடுக்கப்படவில்லை. ஏற்கனவே மூன்றாண்டுகள் பாக்கி தர வேண்டியுள்ளது. இந்த இடைவெளி தவிர்க்கப்பட்டு ஆண்டுதோறும் உரிய காலத்தில் நிதி வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

5.55 எதிர்கால கடமைகள்:

➢ தாராளமயக் கொள்கையினாலும் மத்திய - மாநில அரசுகளின் நடவடிக்கைகளாலும் பாதிக்கப்பட்டுவரும் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களைத் திரட்டிட மேலும் வலுவான இயக்கங்கள் நடத்துவது, நமது அமைப்பின் கீழ் பெருவாரியான கிராமப்புற மக்களை அணி திரட்டுவது

➢ நிலம், மனைப்பட்டா மற்றும் உள்ளூர் பிரச்சனைகள் மீது தொடர் இயக்கங்கள் நடத்துவது

➢ மாநிலக்குழு நிறைவேற்றியுள்ள "விவசாய அரங்கில் நமது பணிகளும், கடமைகளும்" என்ற ஆவணத்தை மாவட்டங்களில் அமலாக்கிட தீவிர கவனம் செலுத்துவது, குறைந்தபட்சம் அடுத்த ஆறு மாத காலத்திற்குள் மாவட்டங்களில் குறிப்பு தயார் செய்து விவாதிப்பது

➢ தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் தொடர்பான பிரச்சனைகளில் விரிவான பகுதிகளில் வலுவாக தலையிடுவது, கூட்டு இயக்கங்களுக்கு முயற்சி எடுப்பது.

➢ கிராமப்புற மக்களின் மத்தியில் வகுப்புவாத அபாயம், தீண்டாமை போன்ற பிரச்சனைகளில்

விழிப்புணர்வுப் பிரச்சாரம், நேரடி இயக்கங்கள் நடத்துவது.

- ஊழியர்களின் தரத்தை மேம்படுத்தும் வகையில் பயிற்சி வகுப்புகளை அனைத்து மட்டத்திலும் கூடுதலாக நடத்துவது.
- திட்டமிட்ட கிராமங்களில் ஆய்வை விரைவில் முடிப்பது.

பழங்குடியினர் அரங்கம்

5.56 தமிழ்நாட்டில் மாநில அளவில் பழங்குடியினர் உபகுழு நாகப்பட்டிணம் மாநில மாநாட்டிற்கு பிறகு முதல்முறையாக அமைக்கப்பட்டது. இக்குழுவில் 15 பேர் இடம் பெற்றுள்ளனர். உபகுழு அமைக்கப்பட்ட பிறகு உள்ள 32 மாதங்களில் 4 முறை மட்டுமே கூட்டம் நடைபெற்றுள்ளது.

நடைபெற்ற முக்கிய இயக்கங்கள்:

2012 ஏப்ரல் 24ல் கோட்டை முற்றுகைப் போராட்டம்:

5.57 வன உரிமைச் சட்டத்தை அமல்படுத்த வேண்டியும், சாதிச்சான்று உடன் வழங்கிடக் கோரியும், பழங்குடி பட்டியலில் விடுபட்டுள்ள ஈரோடு மாவட்ட மலையாளி, நரிக்குறவர், குறுமன்ஸ் இனத்தின் உட்பிரிவினர், குறவன் பழங்குடி இன மக்கள் ஆகியோரை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்திட வேண்டியும், குறுமன்ஸ் கொண்டாரெட்டி பழங்குடி மக்களுக்கு உடன் சாதிச் சான்று வழங்கிட வேண்டியும், அரசாணை எண் 1168ஐ ரத்து செய்ய வேண்டியும், வாச்சாத்தி மக்களுக்கு வன்கொடுமை தடுப்புச்சட்டப்படி வழங்க வேண்டிய தீருதவித் தொகையை உடன் வழங்கக் கோரியும், புலையன் இனத்தை பழங்குடி பட்டியலில் சேர்க்க ஆய்வு நடத்தக் கோரியும் சென்னை கோட்டை முன்பு முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. தோழர். பிருந்தாகாரத் பங்கேற்றார். இதில் 1000 பெண்கள் உட்பட சுமார் 10000 பேர் பங்கேற்றனர். அமைச்சர்கள் மட்டத்தில் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்று கோரிக்கைகளை ஏற்பதாக அரசு உறுதியளித்தது.

5.58 இதன் விளைவாக குறவன் இனத்தின் உட்பிரிவினரை பழங்குடி பட்டியலில் சேர்ப்பதற்கான ஆய்வு அறிக்கையை பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்திடமிருந்து அரசு கோரி பெற்றது. புலையன் இனத்தை பழங்குடி பட்டியலில் சேர்க்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பியது. நிலுவையிலிருந்த சாதிச் சான்றிதழ் ஆயிரக்கணக்கில் வழங்கப்பட்டது. வனவுரிமைச் சட்ட வழக்கை முடிக்க அரசு முயற்சித்து வருகிறது.

5.59 காஞ்சிபுரத்தில் நமது சங்கத்தின் முன்முயற்சியால் பழங்குடி மக்கள் மத்தியில் பணியாற்றும் தொண்டு நிறுவனம் மற்றும் இதர அமைபபையும் ஒன்று திரட்டி கடந்த 2014 செப் 11ம் தேதி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உயர்நீதிமன்ற உத்தரவுப்படி காலிப் பணியிடங்களை உடன் நிரப்ப வேண்டுமென்றும், பழங்குடி மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்க வேண்டுமென்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டம் நடைபெற்றது. இதில் சுமார் 1800க்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டது ஒரு நல்ல முயற்சியாகும்.

5.60 திருப்பூர், கோவை, கொடைக்கானல் பகுதிகளில் 'புலையன்' பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். இவர்களை பழங்குடி பட்டியலில் இருந்து 1979ம் ஆண்டு நீக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது தொடர்பாக பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் ஆய்வு செய்திட தமிழக அரசைக் கோரினோம். இக்கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் ஆய்வு செய்து "இம்மக்கள் பழங்குடியினர்தான்" என்றும் பழங்குடி பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று பரிந்துரை செய்தது. இதை ஏற்று தமிழக அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. இதற்காக பலகட்ட போராட்டங்களை நடத்தியுள்ளோம்.

23.11.13ந் தேதி கொடைக்கானல் மலையில் சுமார் 1200 பேர் பங்கேற்ற கோரிக்கை மாநாடு நடத்தப்பட்டது. சத்தியமங்கலம் வனப்பகுதியில் புலிகள் சரணாலயம் அமைக்கப்பட்டதை எதிர்த்து தொடர் போராட்டங்கள் நடைபெற்றது.

5.61 பழங்குடி பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளுக்கெதிராக வலுவாக தலையிட்டுள்ளோம்.

வாச்சாத்தி வழக்கு – தீர்ப்பும் – நட்டஈடும்:

5.62 வாச்சாத்தி மக்கள் மீது வனத்துறையினர் தொடுத்த வழக்கில் 20 ஆண்டு காலம் கழித்து 1.11.2012ம் தேதி சென்னை உயர்நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட வாச்சாத்தி மக்கள் நிரபராதிகள் என்று அவர்கள் மீதான வழக்குகள் அனைத்தும் தள்ளுபடி செய்துள்ளது. இம்மக்களுக்கு கிடைத்த இரண்டாவது வெற்றி இது.

வாச்சாத்தி ஆவணப் படம் வெளியீடு:

5.63 வாச்சாத்தியில் பாதிப்புக்குட்பட்ட மக்களையும், அதன் வெற்றியையும் தொகுத்து ''வாச்சாத்தி உண்மையின் போர் குரல்'', இயக்குனர் பாரதி கிருஷ்ணகுமார் இயக்கிய ஆவணப்படம் 2012 செப்டம்பர் 30 ஆம் தேதி சென்னையில் வெளியீட்டு விழா நடைபெற்றது. சிடியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் பிரகாஷ்காரத் அவர்கள் வெளியிட்டார். வாச்சாத்தி செல்வி சிடியை பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் பொது செயலாளர் கே.வரதராஜன், வழக்கறிஞர். வைகை, மற்றும் மாநிலத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மலைவாழ் மக்கள் தலைவர்கள் என சுமார் 1200க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

5.64 வாச்சாத்தி மக்களுக்கு வன்கொடுமை தடுப்புச் சட்டப்படி தீர்ப்புக்குப் பிறகு தர வேண்டிய பாக்கி நட்டஈட்டுத் தொகையை வழக்கு முடிந்து கடந்த இரண்டரை ஆண்டுகளாக பல்வேறு கட்ட போராட்டம் வாயிலாகவும், சட்டமன்றத்தில் பேசியும் தமிழக அரசும், மாவட்ட நிர்வாகமும் எந்த முயற்சியும் மேற்கொள்ளாத நிலையில் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு காத்திருக்கும் போராட்டம் 9.9.14 அன்று நடைபெற்றது.வாச்சாத்தி மற்றும் சுற்றுவட்டாரத்திலிருந்து சுமார் 750க்கும் மேற்பட்ட மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர். அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிமன்ற ஆணைப்படி வழங்க வேண்டிய பாக்கித் தொகை 12,20,000, 2ம் தவணை 63,00,000 ஆக 75 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மீதி தொகை தரப்படாமல் நிலுவையில் உள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்க வேண்டிய நீதியும், நிவாரணமும் நமது தொடர் முயற்சியால் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

5.65 குறவன் பழங்குடியின மக்கள் மீது முன்னால் குற்றப் பரம்பரையினர் என்று காவல்துறையால் பொய் வழக்கு போடப்படுவது, தாக்குதல், பாலியல் துன்புறுத்தல் போன்ற கொடுமைகள் தொடர்கின்றன. இதற்கு எதிரான வலுவான போராட்டங்களை நடத்தி வருகிறோம்.

பயிற்சி வகுப்பு:

5.66 பழங்குடி கட்சி உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் வகுப்பு 2013 மே 15,16 ஆகிய தேதிகளில் கருமந்துறையில் நடைபெற்றது. 110 பேருக்கு திட்டமிட்டு 92 பேர் பங்கேற்றனர். அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் பிருந்தாகாரத் உட்பட கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு வகுப்புகளை நடத்தினர்.

5.67 9.8.2014 அன்று சர்வதேச ஆதிவாசிகள் தின கருத்தரங்கம் ராசிபுரத்தில் நடைபெற்றது. அகில இந்திய பொருளாளர் தோழர்.ஜிதேந்திர சௌத்ரி எம்.பி பங்கேற்றார். சுமார் 1500 மலைவாழ் மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வர்க்க வெகுஜன அரங்கங்கள்

மாநாடுகள்:

5.68 தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் 6வது மாநில மாநாடு 2012 ஆகஸ்ட் 11,12,13 ஆகிய தினங்களில் தருமபுரியில் நடைபெற்றது. பேரணியில் சுமார் 10000 பேர் பங்கேற்றிருப்பர். பிரதிநிதிகள் மாநாட்டில் 250 பேர் கலந்து கொண்டனர். 45 பேர் கொண்ட மாநிலக்குழு தேர்வு செய்யப்பட்டது. 11 பேர் நிர்வாகிகளாகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

5.69 குறவன் பழங்குடி மக்கள் முன்னேற்ற சங்கத்தின் முதல் மாநில மாநாடு நவம்பர் 4 அன்று திருப்பத்தூரில் நடைபெற்றது. 340 பிரதிநிதிகள் 18 மாவட்டங்களிலிருந்து பங்கேற்றனர். நீதியரசர் சந்துரு மாநாட்டை துவக்கி வைத்தார். 42 பேர் கொண்ட மாநிலக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. புதிய நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உறுப்பினர் பதிவு:

5.70 உறுப்பினர் பதிவில் ஆண்டுக்காண்டு உயர்வு ஏற்பட்டுள்ளது. 2011ம் ஆண்டு 51747 என்ற நிலையிலிருந்து 2014ம் ஆண்டு 70353 என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. இது மொத்த பழங்குடியினர் எண்ணிக்கையில் 9 சதவிகிதமாகும். ஆனால் நாம் நடத்தும் இயக்கங்கள், பெற்ற வெற்றிகளோடு ஒப்பிடும் போது இது குறைவே. நமது வாய்ப்புகள் முழுவதையும் அமைப்பு ரீதியாக திரட்டுவதிலும் தக்க வைப்பதிலும் மிகப்பெரும் பலவீனம் நீடிக்கிறது. இதற்கு காரணம் போதுமான ஊழியர்கள் இன்மையே. கிடைத்த தொடர்புகள் அனைத்தையும் தக்க வைப்பது மிக முக்கியம். குறிப்பாக சேலம் கல்வராயன், குத்தியாலத்தூர் மலை, காஞ்சிபுரம், திண்டுக்கல், திருவண்ணாமலை ஆகிய கமிட்டிகளில் தொடர்ச்சியாக உறுப்பினர் பதிவு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

5.71 **எதிர்காலப் பணிகள்:**

1. ஒவ்வொரு மலைக்கமிட்டியும், புதிய ஊழியர்களை கண்டறிந்து அவர்களுக்கான பிரத்தியேக பயிற்சி வகுப்புகளை ஏற்பாடு செய்வது - மாநில அளவிலும் பயிற்சி வகுப்புகள் நடத்துவது.
2. பழங்குடியினர் மத்தியில் கட்சி ஆதரவாளர்களைக் கொண்ட கிளைகளை அமைப்பது. தொடர் அரசியல்- ஸ்தாபன பயிற்சிகளை அளிப்பது
3. மத்திய - மாநில - பொதுத்துறை நிறுவனங்களில் ஏராளமான பழங்குடி ஊழியர்கள் பணியாற்று கின்றனர். அவர்களை ஒன்று திரட்டவும், மலைவாழ் மக்கள் சங்கத்துடன் இணைந்து செயல் படவும் திட்டமிடுவது. பின்னடைவு காலிப் பணியிடங்களை நிரப்பக்கோரி இயக்கம் நடத்துவது.
4. வனஉரிமைச்சட்டத்தை அமுல்படுத்தவும், ரேகா, பழங்குடியினர் துணைத்திட்டம் இனச்சான்றிதழ் ஆகிய பிரச்சனைகளில் வலுவான இயக்கம் நடத்துவது.
5. உபகுழு கூட்டத்தில் தீர்மானித்த அடிப்படையில் முழுநேர ஊழியர்களை தாமதமில்லாமல் நியமிப்பது.
6. பழங்குடியினர் மத்தியில் இந்துத்துவா அமைப்புகள் செயல்படத் துவங்கியுள்ளன. கிறிஸ்துவ மிஷனரிகளும் கல்வி, சிறு உதவிகள் என்ற முறையில் ஆதிவாசிகளை தங்களின் பிடிக்குள் வைத்துக் கொள்ள முயற்சிக்கின்றன. இவ்வகைளை எதிர்கொள்ள விழிப்புணர்வை ஏற்படுத்துவது, மாற்று நடவடிக்கையில் ஈடுபடுவது.
7. பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல் தொடர்பான கோரிக்கையில் மத்திய அரசை வற்புறுத்தி இயக்கங்கள் நடத்துவது.

வாலிபர் அரங்கம்

உறுப்பினர் பதிவுப் பணிகள்

5.72 உறுப்பினர் பதிவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவு செய்வதை உத்தரவாதப்படுத்த வேண்டும். மேலும், வெகுமக்கள் உறுப்பினர் பதிவின் அரசியல் நோக்கம் குறித்து பத்து தலைப்புகளில் குறிப்புகள் தயார் செய்து பயிற்சிப் பட்டறையை வாலிபர் சங்கம் இக்காலத்தில் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்க விசயமாகும். குறைந்த, குறிப்பிட்ட காலத்திற்குள் திட்டமிட்ட உறுப்பினர் பதிவு மற்றும் புதிய தொடர்புகளை அடையாளப்படுத்துதல் நடைபெற்றதன் விளைவாக 2014ம் ஆண்டில் நல்ல பலன்களும் கிடைத்துள்ளன.

5.73 உறுப்பினர் பதிவு 2013ல் 1012109 நடந்தது. 2014ல் 874388 முடிந்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 131721 குறைவாகும். 2014ல் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து ஆகஸ்டில் தான் பதிவு துவங்கப்பட்டது. திருப்பூர் போன்ற சில மாவட்டங்களில் தயாரிப்பு ஏற்பாடுகளில் பலகீனம் இருந்தது. சில மாவட்டங்கள் உறுப்பினர் அட்டை அடிக்கவே கடும் தாமதம் ஏற்பட்டதால் செப்டம்பரில் தான் பதிவு துவங்கப்பட்டது. சில மாவட்டங்கள் கிளை அளவிலான பதிவுக்குழுக்கள் அமைக்கவில்லை. மாநிலக்குழு வழிகாட்டினாலும், மாவட்ட பிராக்சன் முடிவின் அடிப்படையில்தான் உறுப்பினர் பதிவுக்கான காலமும், அணுகுமுறையும் தீர்மானிக்கப் படுவதால் பதிவு குறிப்பிட்ட காலத்தில் முடிக்கப்படாத நிலை ஏற்படுகிறது.

5.74 விழுப்புரம், திண்டுக்கல், நாகை, வேலூர் ஆகிய மாவட்டங்கள் இக்காலத்தில் உறுப்பினர் பதிவில் முன்னேறியுள்ளன. திருப்பூர், வடசென்னை, தென்சென்னை, மதுரை மாநகர், மதுரை புறநகர், விருதுநகர், தஞ்சாவூர், கோவை, புதுக்கோட்டை, குமரி ஆகிய மாவட்டங்கள் இக்காலத்தில் பின்னடவை அடைந்துள்ளன. இதர மாவட்டங்கள் முன்னேற்றமில்லாமல் பழைய நிலையில் நீடிக்கின்றன.

5.75 புதுச்சேரி, தஞ்சாவூர், கரூர், இராமநாதபுரம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, நெல்லை, ஆகிய மாவட்டங்களில் தேக்கம் நீடிக்கிறது. சம்மந்தப்பட்ட கட்சி மாவட்டக்குழுக்கள் இம்மாவட்டங்களில் அமைப்பை அடுத்த கட்டம் நோக்கி வளர்க்க திட்டமிட்ட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. சிவகங்கை, நீலகிரி, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட அமைப்பே இல்லாத நிலை உள்ளது.

5.76 புதுக்கோட்டை, தஞ்சாவூர், கிருஷ்ணகிரி, சிவகங்கை, பெரம்பலூர் ஆகிய மாவட்டக்குழுக்கள் 2013-ஆம் ஆண்டு சந்தாவைக்கூட கட்டவில்லை.

5.77 வெகுமக்கள் உறுப்பினர் பதிவுக்காக மூன்று நாட்கள் பட்டறை திட்டமிடப்பட்டு திருப்பூரில் மாநில அளவில் நடத்தப்பட்டது. அதில் கீழ்க்காணும் வழிகாட்டுதல்கள் தரப்பட்டுள்ளன.

1. 2015 முதல் பொருத்தமான காலம் தேர்ந்தெடுத்து உறுப்பினர் பதிவு சேர்ப்பது.

2. 250 உறுப்பினர் பதிவுக்கு ஒரு குழு என உருவாக்கி பதிவை நிறைவு செய்வது மற்றும் பதிவு முடிந்த உடன் அக்குழுவை ஒரு கிளையாக மாற்றுவது. (நான்கைந்து மாதம் கழித்து கிளைமாநாடு எனச் செல்வது ஆர்வமுள்ள உறுப்பினர்களைக்கூட திரட்ட உதவாது) பதிவு முடிந்த அன்றே, உறுப்பினர் விபரங்களை தொகுத்து, கிளையில் பராமரிக்கவேண்டும். ஒவ்வொரு உறுப்பினரோடும் குறுஞ்செய்தி, முகநூல் என தகவல் வழியை அறிந்துகொள்ளவேண்டும்.

3. விளையாட்டு, இரத்ததானம், வார இதழ்கள் வாசிப்பு, அரசு வேலைக்குப் பயிற்சி எடுத்தல் என உறுப்பினர்களின் ஆர்வம் மற்றும் தேவைக்கு ஏற்ப அவரோடு தொடர் உறவு மற்றும் அவரை பங்கேற்க வைப்பது.

4. உள்ளூர் வளர்ச்சி இயக்கம், கிளையின் பொங்கல் விழா போன்ற ஒரு விழா, அரசின் கொள்கை சார்ந்த அல்லது சமூகப்பிரச்னைக்கான ஒரு பிரச்சாரம் என எழுத்துப்பூர்வமான அழைப்போடு குறைந்தபட்சம் ஆண்டுக்கு மூன்று முறை உறுப்பினர்களை சந்திக்கும் உரையாடல் இயக்கத்தை நடத்துவது.

5. கிளைகளை உருவாக்கிய உடன், கிளைகள் எப்படி செயல்படவேண்டும் என கிளையின் உறுப்பினர்களுக்கு முறையான பயிற்சி அளிப்பது. இதன் மூலம் தான் அமைப்பின் செயல்பாட்டையும், உள்ளூர் மட்ட செயல்பாடு மற்றும் உறுப்பினரோடு நெருங்கி கிளையை செயல்படுத்த முனைதல் எனும் நோக்கத்தையும் நிறைவேற்ற இயலும்.

கிளை செயல்பாடு இன்றைய அவசரத் தேவை

5.78 கிளைகளைப் பலப்படுத்தும் முயற்சியில் தொடர் முயற்சிகள் மற்றும் விவாதங்கள் நடக்கின்றன என்றாலும் பலகீனங்கள் தொடர்கின்றன. இதற்கு இடைக்குழு நிர்வாகிகள் வரையிலான வாலிபர் சங்கத் தோழர்களுக்கு நேரம் கிடைக்காத நெருக்கடிகளும், வாழ்வுச்சூழல் மாறிவருவதும் முக்கிய காரணம். எந்த நெருக்கடிகள் ஏற்பட்டாலும், கிளை என்ற வடிவம் பலகீனம் அடைவதை அனுமதிக்கக் கூடாது.

5.79 இதற்கு கட்சிக்கிளைகளும் உதவிட வேண்டும். கட்சிக்கிளைகள் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் வாலிபர் சங்கக் கிளைகளை உருவாக்கி, செயல்படுத்துவதை முன்னுரிமை கடமையாகக் கொள்ள வேண்டும். தமிழகத்தில் 379 கட்சி பகுதிக்குழுக்கள் இருப்பினும், வாலிபர் சங்கத்தில் 364 பகுதிக்குழுக்களே உள்ளன. இதில் கட்சிப்பகுதிக்குழுக்கள் அல்லாத 60க்கும் மேற்பட்ட பகுதிகளில் வாலிபர் சங்கம் செயல்படுகிறது. கட்சிப்பகுதிக்குழுக்கள் செயல்படும் 100 பகுதிகளில் வாலிபர் சங்கம் இல்லை. கிளைகளில் உள்ள நிலை மிகுந்த கவலையளிப்பதாகும். 11513 கட்சிக்கிளைகள் உள்ளன. ஆனால், வாலிபர் சங்க கிளைகள் 4501 மட்டுமே ஆகும். ஆக, கட்சிக்கிளைகள் உள்ள 7012 கிளைகளில் வாலிபர் சங்கம் இல்லை. மாவட்ட வாரியாக பட்டியலிடப்பட்டுள்ளது. இந்நிலையை சரி செய்ய வேண்டும்.

இயக்கங்கள் குறித்த புரிதலும், புதிய தேவைகளும்;

5.80 உள்ளூர் சார்ந்து செயல்படுவதுதான் வாலிபர் சங்கத்தின் பிரதான நோக்கமாக இருக்க வேண்டும். சாதி, மத சக்திகளுக்கு எதிராக நாம் வலுப்பெறவும் இத்தகைய உள்ளூர் செயல்பாடுகளே உதவும். ஆனால், போராட்டங்கள், இரத்ததான முகாம்கள், விளையாட்டு நிகழ்ச்சிகள் போன்றவை மாவட்ட, பகுதி அளவில் மட்டுமே பிரதானமாக நடத்தப்படுகின்றன. வேலை முதல் விளையாட்டுப் போட்டி வரை கிளை அளவிலான உள்ளூர் சார்ந்து செயல்பட வேண்டும் என வாலிபர் சங்கம் முயற்சித்து வருகிறது.

5.81 மேலும், அடிக்கடி போராட்டம் என்ற வகையில் வலுவற்ற போராட்டம் நடத்துவது பலனை ஏற்படுத்தவில்லை. வலுவான இயக்கம் மற்றும் உள்ளூர் பிரச்னைகளுக்கான தொடர் இயக்கம் என்ற போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது.

5.82 வேலைவாய்ப்பிற்கான தகவல்கள் மையம், திறன் மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் என இளைஞர் நலன் சார்ந்த நடவடிக்கைகள். விளையாட்டுப் போட்டிகள், பயிற்சிகள், உடற்பயிற்சிக் கூடங்கள் எனப் பொது நடவடிக்கைகள், உள்ளூர் வளர்ச்சி நடவடிக்கைகள். ரேசன் கடை பிரச்சனைகள், உள்ளாட்சி நிர்வாகம் சார்ந்த அடிப்படைப் பிரச்சனைகள், அரசுப்பள்ளி வளர்ச்சி, அரசுத் திட்டங்களை அமல்படுத்தல் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெற்றுத்தருதல், ஏழை மாணவர்களுக்கு உதவி செய்தல் முதலான இலவச கல்விப் பயிற்சிப் பணிகள் என இதில் பல அம்சங்களில் தலைமீடுகள் தேவைப்படுகின்றன.

5.83 மேலும், சமூக, கலாச்சார நடவடிக்கைகள், சமூக ஊடகங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், நற்பணி மற்றும் இரசிகர் மன்றங்கள், உள்ளூர் அளவில் இளைஞர் குழுக்கள் என பலவாறாக நடைபெறும் சமூகப் பங்கேற்பு மற்றும் சமூக உரையாடல்களில் வாலிபர் சங்கம் பங்களிப்பு செய்திட வேண்டியுள்ளது.

சில முக்கிய பன்முகப் பணிகள்:

5.84 **சேதுகால்வாய் இயக்கம்;** சேதுகால்வாய் திட்டத்தை அமல்படுத்தக்கோரியும், மதவாத சக்திகளுக்கு அடிபணியாமல் விரைந்து நிறைவேற்ற வலியுறுத்தியும் தென் மாவட்ட இளைஞர்கள் பங்கேற்ற மாபெரும் பேரணி- பொதுக்கூட்டம் தூத்துக்குடியில் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

5.85 **நடைபயணம்;** போதை எதிர்ப்பு, இயற்கை வளம் பாதுகாப்பு, காலிப்பணியிடங்களை நிரப்புதல், சமச்சீர் கல்வி, ஊழல் எதிர்ப்பு என ஐந்து கோசங்களை முன்வைத்து, 2012ம் ஆண்டு எட்டு குழுக்களாக திருச்சி நோக்கி நடைபயணம் நடைபெற்றது இக்காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வாகும். 50000-க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்புடன் 4007 கி.மீ. 247 தோழர்களைக் கொண்ட நெடிய பயணமாக நடைபெற்ற இந்த நிகழ்வின் மூலம் 340000 ரூபாய் உண்டியல் வசூலானது. 800 இடங்களில் புதிய தொடர்பு கிடைத்தது. தொடர்புகளை வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

5.86 **மாநில மாநாடு:** அமைப்பின் 14வது மாநில மாநாடு கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் நடைபெற்றது.

5.87 கல்வி, வேலை, சுகாதாரம்- வேண்டாம், போதை, பாலியல் வன்கொடுமை, சாதி மத மோதல் என்ற கோசத்தை முன்வைத்து விழுப்புரத்தில் தொடர் முழக்கப் போராட்டம் வடமாவட்டங்களைத் திரட்டி நடைபெற்றது. 1263 தோழர்கள் பங்கேற்றனர். காவல்துறையின் 144 தடை உத்தரவையும் மீறி போராட்டம் நடந்தது.

5.88 தர்மபுரி இளவரசனுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையிலும். ஆதிக்க சாதி வெறியை எதிர்த்தும் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

5.89 **இளம் பெண்கள் மாநில மாநாடு:** இதில் 150க்கும் மேற்பட்ட பெண் தோழர்கள் கலந்து கொண்டனர்.

5.90 **தேர்தல் பிரச்சார இயக்கம்:** மதவாதி மோடியின் உண்மை முகத்தை மக்களிடம் அம்பலப்படுத்துகின்ற விதமாகவும். தேவை ஆட்சி மாற்றமல்ல கொள்கை மாற்றமே என்பதை வலியுறுத்தி நாம நல்லா இருக்க என்ற பிரசுரம் வெளியிடப்பட்டு தோழர் சங்கரய்யா கலந்து கொண்டு பிரசுரததை வெளியிட்டு உரையாற்றினார். லட்சக்கணக்கான மக்கள் சந்திப்பு மற்றும் தமிழகம் முழுவதும் 10,00,000 பிரசுரங்கள் விற்பனை செய்யப்பட்டது

5.91 **போதை எதிர்ப்பு இயக்கம்:** போதை எதிர்ப்பியக்கங்களை பிரச்சாரமாகவும், போராட்டமாகவும் பல வித வடிவங்களில் தொடர்ச்சியாக பல கட்டப் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. கள்ளச்சாராயத்திற்கு எதிராகப் போராடியதற்காக கள்ளச்சாராய ரவுடிகளால் படுகொலை செய்யப்பட்ட குமார்/ ஆனந்தன் நினைவைப் போற்றும் வகையில் தமிழகம் முழுவதும் வெகுமக்கள். இளைஞர்கள் பெரும் திரளாய் பங்கேற்கும் வகையில் நாகை. திருச்சி. திருவள்ளூர். சேலம். கோவை ஆகிய இடங்களில் இளைஞர்கள் பெரும் திரளில் பங்கெடுத்த மராத்தான் போட்டிகள் நடைபெற்றது.

வர்க்க வெகுஜன அரங்கங்கள்

பல தளங்களில் துணை அமைப்புகள்

5.92 நூற்றுக்கணக்கான மக்களைத்திரட்டும் செல்வாக்கு படைத்த கிளைகளை மலைவாழ் மக்களிடையே வாலிபர் சங்கம் உருவாக்கியுள்ளது என்பது இக்காலத்தின் முக்கிய அம்சமாகும்.

5.93 இரத்ததானக்கழகம், விளையாட்டுக்கழகம், பண்பாட்டுக்கழகம் ஆகிய மூன்று துணை அமைப்புகளை வாலிபர் சங்கம் உருவாக்கி செயல்படுத்தி வருகின்றது. இந்த அமைப்புகளின் செயல்பாடுகளை ஸ்தாபன ரீதியாக உத்தரவாதப்படுத்த வேண்டியுள்ளது. இரத்த தானக்கழகத்தின் செயல்பாடுகள் வருடம் முழுவதும் இருக்கிறது, அரசின் விருதுகளையும் பெறுகிறது.

5.94 வாலிபர் சங்கத்தின் இந்த துணை அமைப்புகளையும், தேர்வாணைய பயிற்சி வகுப்புகள், ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் பல வகைகளில் செயல்பட நடுத்தர வர்க்கத் தோழர்களைப் பயன்படுத்திடலாம். இதுபோன்று, பல முயற்சிகளை மேற்கொண்டு வாலிபர் சங்க செயல்பாடுகளை நகரங்களில் விரிவுபடுத்த வேண்டும். இதற்கு கட்சி மாவட்டக் குழுக்கள் பெருமளவில் உதவிட வேண்டியுள்ளது.

பிராக்சன் செயல்பாடுகள்

5.95 மாநில ஃப்ராக்சன் கூட்டம் 21 முறை கூடியுள்ளது. மாநில ஃப்ராக்சனில் கட்சி கட்டும் பணி குறித்தும், அதில் மாவட்ட ஃப்ராக்சன்கள் செலுத்த வேண்டிய கவனம் குறித்தும் தொடர்ந்து விவாதிக்கப்படுகிறது, ஆனால், மாவட்டப் ஃப்ராக்சன்களில் கட்சி கட்டும் பணி ஆழமாக விவாதிக்கப்படாத நிலை உள்ளது. மாவட்ட பிராக்சன்கள் தொடர்ச்சியாக கூட்டப்படுவதிலும் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது.

5.96 கட்சி கட்டும் பணி என்றால் துணைக்குழு உறுப்பினர்களை சேர்ப்பது, சேர்ந்த உறுப்பினர்களை அரசியல் தத்துவார்த்தக் கல்வி அளித்து கட்சியில் உறுதிப்படுத்திட திட்டமிடுதல் வேண்டும். நாகை, விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் கடந்தாண்டு 200 முதல் 400 வரையாக துணைக்குழு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். எனினும், அவர்களை அரசியல்படுத்தும் முயற்சி போதுமான அளவில் நடைபெறவில்லை. கட்சி துணைக்குழுவில் சேர்க்கப்படுவது வரையான இடதுசாரி அரசியல் ஞானத்தை வாலிபர் சங்கம் போதிப்பது, துணைக்குழுவில் சேர்ந்த பின்னர் அவருக்கு மார்க்சிஸ்ட் கட்சியின் திட்டம் முதல் தத்துவம் வரையானவற்றை கட்சி மூலம் போதிப்பது என்ற புரிதலோடு முயற்சிகள்மேற்கொள்ளப்பட வேண்டும்.

5.97 பல பகுதிகளில் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களைக் கண்டறிந்து கட்சிக்குள் கொண்டு வருவதில் பலகீனம் உள்ளது. கட்சிக்குள் வரும் இளம் தோழர்களுக்கு வாலிபர் சங்கப் பணியைத் தீர்மானித்து வழங்கிட வேண்டும். அதுவே அவர்களுக்கான கட்சிப் பொறுப்பு எனவும் உணர்ந்து செயல்பட வேண்டும். வாலிபர் அரங்கின் செயல்பாட்டுக்குத் தேவையான இளந்தோழர்களை உத்தரவாதப்படுத்துவதே முதற்கடமையாகும்.

முழு நேரஊழியர்கள் / புதிய ஊழியர்கள்

5.98 தற்போது கிருஷ்ணகிரி, அரியலூர்-பெரம்பலூர், கடலூர், நாமக்கல், தேனி, சிவகங்கை, நீலகிரி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் ஒரு ஊழியர் கூட இல்லை. மாநிலம் முழுவதும் 43 ஊழியர்கள் மட்டுமே உள்ளனர். ஐம்பதாயிரம் பதிவுக்கு மேல் உள்ள மாவட்டங்களில் இரண்டு முழுநேர ஊழியர்கள் மற்றும் இருபதாயிரம் பதிவு கொண்ட பகுதிகளில் ஒரு பகுதிநேர ஊழியர் என்ற முடிவு அமலாகவில்லை. குறிப்பாக, இடைக்குழுக்களில் பகுதிநேர ஊழியர்களைக் கண்டறிந்து எடுக்கும் நடைமுறையை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. கூடுதலாக மேலும் ஒரு ஊழியரை உறுதிப்படுத்த வேண்டிய மாவட்டங்களாக சேலம், நாகை, திருப்பூர், வடசென்னை, திருச்சி, தென்சென்னை, விழுப்புரம் ஆகிய மாவட்டக் குழுக்கள் உள்ளன.

5.99 முடிவெடுத்த பின்னும் ஊழியராய் தீர்மானிப்பதில் ஏற்படும் அதிகமான தாமதம், மிகக்குறைந்த ஊதியம் போன்ற பிரச்சனைகள் நீடிக்கின்றன.

5.100 வாலிபர் சங்கத்தில் இருந்து புதிய எழுத்தாளர்களை இளைஞர் முழக்கத்திற்காக உருவாக்குவதற்கான பயிற்சி முகாம், மாநில அளவில் மாவட்ட பிராக்சன் கமிட்டி உறுப்பினர்களுக்கான 5 நாட்கள் பயிற்சி முகாம், முழுநேர ஊழியர்களுக்கான இரண்டு நாள் அரசியல் பயிற்சிப் பட்டறை, மாநில அளவில் 3 மண்டலங்களாகப் பிரித்து 6 மையங்களில் இரண்டு நாள் வகுப்புகள் உள்ளிட்ட பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இளைஞர் முழக்கம்;

5.101 இளைஞர் முழக்கமும் மிகுந்த பொருளாதாரச் சிரமத்துடன் நடத்தப்பட்டு வருகிறது. 3000 சந்தாதாரர்கள் என்ற நிலையில் பல ஆண்டுகளாக முன்னேறவில்லை. மொத்தம் 5000 பிரதிகள் வரை அச்சடிக்கப்படுகிறது. உள்ளடக்கம் குறித்த தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. வாலிபர் சங்கத்தோழர்களிடம் படிக்கும் ஆர்வத்தை மேம்படுத்தி, இதையொரு அரசியல் பணியாய் மேற்கொண்டு பல முயற்சிகளைத் துவங்க வேண்டியுள்ளது.

மாதர் அரங்கம்

5.102 கடந்த கட்சி மாநில மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட எதிர்கால கடமைகள்:

- ஏகாதிபத்திய எதிர்ப்பு, வகுப்புவாத எதிர்ப்பு இயக்கம்/பிரச்சாரத்தை வலுப்படுத்துவது நவீன தாராளமயக் கொள்கைகளினால் தாக்கப்படுகிற ஏழை பெண்களின் வாழ்வுரிமை பிரச்சனைகள் மீதும் புதுப் புது வடிவத்தில் வரக்கூடிய வன்முறை பிரச்சனைகள் மீதும் உறுதியான தலையீட்டைத் தொடர்வது; நிவாரணம் கிடைக்கும் வரையிலான தொடர் போராட்டங்களை உருவாக்குவது.
- அடையாள அரசியல் முன்னுக்கு வரும் இச்சூழலில் தலித், மலைவாழ், முஸ்லீம் பெண்கள் போன்ற பகுதிவாரி பிரச்சனைகளில் தலையீட்டைக் கூர்மைப்படுத்துவது,
- இளம் பெண்களைத் திரட்டுவது,
- உறுப்பினர் பதிவை அதிகரித்து, கமிட்டிகளின் செயல்பாட்டில் அபிவிருத்தி காண்பது.
- கட்சிக்குள் பெண்கள் வருகையைக் கணிசமாக முன்னேற்றுவது; தர உயர்வுக்குப் பயிற்சி அளிப்பது,
- பாலின ஒடுக்குமுறைப் பிரச்சனைகளில் தலையீடு மற்றும் பிரச்சாரம் குறித்து, கட்சியின் மாவட்டக் குழுக்களின் கவனத்தை திருப்புவது,
- மாநில, மாவட்ட பிராக்ஷன்களின் செயல்பாட்டில் முன்னேற்றம் காண்பது; அதற்குத் தேவையான பயிற்சி அளிப்பது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு

5.103 ஏகாதிபத்திய எதிர்ப்பு குறித்து கிளை மட்டப் பெண்கள் வரை கொண்டு போவதன் அவசியத்தின் அடிப்படையில் சில்லரை வர்த்தகத்தில் அந்நிய நேரடி மூலதனத்தை எதிர்த்து வட்ட மேசை கூட்டங்கள், கருத்தரங்குகள் நடத்தப் பட்டன. இப்பின்னணியுடன் சாலையோரம் சிறு வியாபாரம் செய்யும் பெண்களிடம் ஆய்வு செய்து தென் சென்னையில் அப்பெண்களின் கோரிக்கை மாநாடு நடத்தப்பட்டது. பாலஸ்தீன காசா பகுதியின் மீது இஸ்ரேல் தாக்குதலைக் கண்டித்து இயக்கம் நடத்தப்பட்டது.

மதவெறி எதிர்ப்பு:

5.104 மாநிலம் முழுவதும் "மதவெறி மாய்ப்போம், மக்கள் ஒற்றுமை காப்போம்" என்ற தலைப்பில் 140 வட்டமேசை கூட்டங்கள் நடத்தப்பட்டன. மதநல்லிணக்கப் பொங்கல் விழா, சமத்துவ பொங்கல் விழா என பல வடிவங்களில் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டது. மத வெறிக்கு எதிராக சிறு பிரசுரம் அரசியல் + மதவெறி = அபாயம் என்ற 5000 பிரசுரம் மாதர் சங்க சார்பில் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டன.

பிரச்சனைகளில் தலையீடு – வாழ்வுரிமைப் பிரச்சனை

5.105 விலை உயர்வு, பொது விநியோக முறை, நலத்திட்டங்கள், கேஸ் விலை உயர்வு, மானிய வெட்டு, நூறு நாள் வேலை உள்ளிட்ட பிரச்சனைகளில் ஏராளமான இயக்கங்கள் (மறியல் உட்பட) நூதன வடிவங்களில் நடந்துள்ளன. கடந்த காலத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்பில் மாதர் சங்க தலையீட்டால் 30000க்கும் மேற்பட்ட உறுப்பினர் பதிவு நூறு நாள் வேலை செய்யும் பெண்களிடம் போடப்பட்டது.

5.106 பெட்ரோல் டீசல் விலை உயர்வைக் கண்டித்து 25 மாவட்டங்களில், 199 மையங்களில் 2734 பெண்கள் பங்கெடுத்த இயக்கம் நடைபெற்றது.

5.107 கேஸ் விலை உயர்வை கண்டித்து சிலிண்டருக்குப் பட்டை நாமம், சிலிண்டருக்கு பாடைகட்டி ஒப்பாரிப் போராட்டம், மின்சார கட்டணத்தைக் கண்டித்து ஆட்டுக்கல், அம்மிக்கல்லில் மாவு அரைக்கும் போராட்டம், என பல வடிவங்களில் இயக்கங்கள் நடைபெற்றன.

5.108 2012ல் டாஸ்மாக் கடைகளை அகற்றக்கோரி 40 மையங்களில் 4690 பெண்கள் பங்கெடுத்த ஆர்ப்பாட்டம், தூக்கில் தொங்கும் போராட்டம், பூட்டுப் போடும் போராட்டம் என நூதன வடிவங்களில் நடைபெற்றது. 2014ல் 85 மையங்களில் 8000 பெண்கள் பங்கேற்ற பூட்டுப்போடும் போராட்டம் நடந்தது. பரவலான ஊடக செய்திகளுடன் மக்கள் மத்தியில் சிறப்பான வரவேற்பைப் பெற்றது.

5.109 தனித்து வாழும் பெண்கள் பிரச்சனைகளில் தலையீடு, நலத்திட்டங்கள், தையல் மிஷின், குழந்தைகளுக்கான இலவச சீருடை, உதவித்தொகை நோட்டுப் புத்தகங்கள் பல மாவட்டங்களில் பெற்றுத் தரப்படுகிறது. "நாம் டிரஸ்ட்" அமைப்பின் மூலம் தன்னம்பிக்கைப் பயிற்சி சில மாவட்டங்களில் தனிப்பெண்களுக்கு தரப்படுகிறது. இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் தனிப்பெண்கள் முன்னணி ஊழியராகவும், மாவட்ட, இடைக்கமிட்டி பொறுப்புகளுக்கும் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கருத்தியல் ரீதியான தலையீடுகள்:

5.110 பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தலைத் தடுக்கும் சட்டம் குறித்து ஒரு ஒலிநாடா, விடுதலைப் போரில் பெண்கள், எது கௌரவம், வன்முறை வர்மா குழு சட்டங்கள் என்ற தலைப்புகளில் பிரசுரங்களும் போடப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. மகளிர் சிந்தனை மிகுந்த சிரமங்களுக்கிடையே சராசரியாக 10000 பிரதிகள் கொண்டு வரப்படுகிறது.

இளம் பெண்கள்:

5.111 இளம்பெண்களின் பிரச்சனைகள் குறித்து ஆய்வு மற்றும் சிறப்பு மாநாடுகள் நடத்தப் பட்டுள்ளன. கடந்த மாதர் சங்க மாநில மாநாட்டில் பங்கேற்ற பிரதிநிதிகளில் 37 சதவிகிதம் பேர் 40 வயதிற்கு உட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது சென்ற மாநில மாநாட்டைவிட அதிகம். மாநில மாநாட்டில் விவாதத்தில் பங்கேற்றவர்களில் சரிபாதியினர் இளம் பெண்கள். மாநிலக் குழுவில் சிலர் இணைக்கப் பட்டுள்ளனர். கடந்த 3 ஆண்டுகளில் மாதர் சங்கத்தின் சார்பில் பல

கல்லூரிகளில் கருத்தரங்குகள் நடத்தப் பட்டன. இந்த வருடம் 100 கல்லூரிகளை அணுகுவது என்று முடிவு செய்யப் பட்டுள்ளது.

கூட்டு இயக்கங்கள்:

5.112 பள்ளி மாணவிகள் மீதான பாலியல் துன்புறுத்தல், மதுரை அமில வீச்சு போன்ற பிரச்சனைகளில் மாணவர் சங்கத்துடன் கூட்டு இயக்கம் நடத்தப் பட்டது. போதைப் பழக்கத்துக்கு எதிராக வாலிபர் சங்கத்துடன் கூட்டாக போராட்டம் நடத்தப்பட்டது.டெல்லி மாணவி நிர்பயா பாதிக்கப்பட்ட போது நமது வர்க்க வெகுஜன அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், மத்தியதர ஊழியர் அமைப்புகளுடன் இணைந்து நடத்திய மனிதச் சங்கிலி இயக்கத்தில் 5000 பேர் கலந்து கொண்டனர். சில முக்கிய பிரச்சனைகளில் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்துடன் கூட்டுப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. வன்முறைப் பிரச்னையில் ஆங்காங்கே சில தன்னார்வ அமைப்புகள் நம்முடன் இணைகின்றன. காப்பீட்டு ஊழியர் சங்கத்தின் உதவி மற்றும் பங்கேற்பு இக்காலத்தில் அதிகரித்துள்ளது. இக்கால கட்டத்தில் மதுரை மற்றும் விருதுநகரில் தன்னார்வ அமைப்புகளை அழைத்துக் கூட்டம் நடத்தி, பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகளில் ஒத்த கருத்தை உருவாக்க எடுக்கப்பட்ட முயற்சி பயனுள்ளதாக அமைந்தது. தமிழகத்தில் அமில வீச்சு சம்பவங்கள் அதிகரித்த காலத்தில் அமில வீச்சால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சட்ட ரீதியான தலையீடுகளை அமலாக்க கோரி 13 அமைப்புகளை இணைத்து விவாதித்து அதற்கான ஆலோசனைகளை மனுவாக உள்துறைச் செயலாளரிடம் கொடுக்கப்பட்டது. மார்ச்-8 சர்வ தேச மகளிர் தினத்தை முன்னிட்டு கடந்த 2 ஆண்டுகளில் உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழு மற்றும் பல பெண்கள் அமைப்புகளை இணைத்து கூட்டு இயக்கங்கள் நடத்தப்பட்டுள்ளன. பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு பெண்களுக்கான கோரிக்கைகளை தயாரித்து அனைத்துப் பெண்கள் கூட்டமைப்பு சார்பாக கோரிக்கை சாசனம் வெளியிடப்பட்டது. இருப்பினும் கூட்டு இயக்கங்கள் இன்னும் பலப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

இயக்கங்களில் பெண்களைத் திரட்டுதல்:

5.113 பொதுவாக மாதர் சங்க இயக்கங்களில் பெண்கள் பங்கேற்பு பலவீனமாக இருப்பதில் முறிப்பை ஏற்படுத்த முடியவில்லை. காரணம் இன்றைய பொருளாதாரச் சூழலில் தங்களின் வருவாயை இழந்து இயக்கங்களில் பங்கேற்க முடிவதில்லை. மற்ற பல அமைப்புகளும், கட்சிகளும் காசுகொடுத்துத் திரட்டுகிற போக்குக்குப் பழக்கப் பட்டிருக்கிறார்கள். உலகமய ஊடக மூளைச் சலவை காரணமாகப் போராட்டம் நடத்தினாலும் தீர்வு கிடைக்கும் என்பதில் நம்பிக்கை குறைந்துள்ளது. ஊழியர்கள் கிளைகள் வரை சென்று மக்களை சந்தித்து இயக்கத்தின் பங்கேற்பை அதிகப்படுத்த முயற்சிப்பதில்லை. கட்சி உறுப்பினர்கள் குடும்பத்தை அரசியல்படுத்தாததும் ஒரு காரணம். இவற்றை எதிர்கொள்வது பற்றி திட்டவட்டமாக சிந்திக்க வேண்டியுள்ளது.

ஸ்தாபனம்

5.114 மாநில மையம், செயற்குழு, மாநிலக்குழு கூட்டங்கள் முறையாக நடக்கின்றன. மாநிலக் குழுக் கூட்டங்களில் அரசியல் ரீதியாக விவாதம், விளக்கம் என்று விரிவான முக்கியத்துவத்துடன் அரசியல் அறிக்கை வைக்கப்படுகிறது. மாநில செயற்குழு கருத்தொற்றுமையுடன் கூட்டாக செயல்படுகிறது. நிர்வாகிகள் வேலைப் பரிசீலனை 6 மாதங்களுக்கு ஒரு முறை எழுத்துப்பூர்வமாக முன் வைத்து விவாதிக்கப்படுகிறது. ஆண்டு தோறும் ஓராண்டுத் திட்டம், மாநில, மாவட்ட அளவில் போடப்படுகிறது. இது இலக்கை நோக்கி நகரவும், பகுதிவாரிப் பிரச்சனைகளில் தலையீடு செய்யவும் உதவிகரமாக இருந்தது. குறிப்பான பிரச்னைகளில்

உபகுழுக்கள் அமைக்கப் படுவது உதவிகரமாக உள்ளது. இவற்றை செயல்படுபவையாக மாற்றுவதில் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும்.

5.115 மாவட்டக்குழுக்கள் கூடுவதில் மாநில மையம் கவனமெடுக்கின்றது. இருந்தபோதிலும் புதுக்கோட்டை, கரூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் ஸ்தாபன தேக்கத்தை உடைக்க கட்சியின் கூடுதல் உதவி தேவைப்படுகிறது. சில மாவட்டங்களில் நிர்வாகிகளிடம் கருத்தொற்றுமை, கூட்டுச் செயல்பாட்டை மேம்படுத்த வேண்டியுள்ளது. பொதுவாகவே இடைக்குழு செயல்பாட்டை பலப்படுத்த வேண்டியுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் 837 புதிய கிளைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மொத்தம் 3338 கிளைகள் உள்ளன. இதில் கிராமப்புற கிளை 61 சதவிகிதம், நகர்ப்புறம் 39 சதவிகிதமாகும். கிளைகள் செயல்பாட்டில் காணப்படும் பலவீனம் தொடர்ச்சியாக நீடிக்கிறது.

5.116 தஞ்சை, வடசென்னை, தென்சென்னை, காஞ்சிபுரம், சேலம், திருப்பூர் ஆகிய 6 மாவட்டங்களில் சட்ட உதவி மையங்கள் செயல்படுகின்றன. மாநில மையத்தின் சார்பில் சட்ட உதவி மையம் ஊழியர் பற்றாக்குறையுடன் சமாளித்து நடத்தப் படுகின்றது. சமூக நல வாரிய உதவியுடன் குடும்ப நல ஆலோசனை மையமாகவும், குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ் சேவை அமைப்பாகவும் சங்கம் செயல்பட்டு வருகிறது. வழக்குகளில் நாம் செய்யும் ஏராளமான தலையீடுகளை ஆவணப்படுத்துவதில் முன்னேற்றம் வேண்டும். மாநில அளவிலும், சில மாவட்டங்களிலும் வழக்கறிஞர்கள் உதவி பெருமளவு இருக்கிறது. அனைத்து மாவட்டங்களிலும் இந்த உதவியை உறுதி செய்ய வேண்டும்.

உறுப்பினர் பதிவு

பிராக்சன் கமிட்டி செயல்பாடு

5.117 மாதர் அரங்க மாநில பிராக்ஷன் கமிட்டி 3 ஆண்டுகளில் 12 முறை கூடியுள்ளது. கூட்டத்தில் அரசியல் ரிப்போர்ட், கட்சிக்குள் பெண்களைக் கொண்டுவருவது, அரசியல்படுத்துவது, தரத்தை உயர்த்துவது, தத்துவார்த்த ரீதியாக வளர்ப்பது, பயிற்றுவிப்பது மற்றும் வெகுஜன அரங்கின் சில முக்கிய கொள்கை முடிவுகள், முக்கியமான மாநிலம் தழுவிய இயக்கங்கள் ஆகியவை விவாதிக்கப்படுகின்றன. எடுக்கப்படும் முடிவுகள் மீது ஓரளவு கவனம் செலுத்தப்படுகிறது. எதிர்காலத்தில் கட்சிக்குள் பெண்களை கொண்டுவருவதில் கூடுதல் கவனம் பிராக்சன் எடுப்பதுடன், இது குறித்த முடிவுகளை மாவட்டங்களில் நிறைவேற்ற வேண்டி உள்ளது.

5.118 மாவட்ட பிராக்சன் பொறுப்பாளர் + கன்வீனர்கள் கூட்டம் ஒருமுறையும், மாவட்ட கன்வீனர்கள் கூட்டம் 2 முறையும் நடத்தப்பட்டது, பிராக்சன் செயல்பாடுகள், பெண் கட்சி உறுப்பினர்கள், ஊழியர்களின் செயல்பாடுகள் பற்றி அறிக்கை வைத்து விவாதிக்கப்பட்டதும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

5:119 பெண் கட்சி உறுப்பினர்களுக்கும், கிளை செயலாளர்களுக்கும் வகுப்புகள், அரசியல் ரிப்போர்ட்டுகள் ஓரளவு செய்யப்பட்டுள்ளது. மண்டல வாரியாகக் கட்சி மாவட்ட செயற்குழு, மாவட்டக் குழு, இடைக்குழு உறுப்பினர்களுக்கு 4 தலைப்புகளில் 2 நாள் வகுப்பு நடந்துள்ளது. பயனுள்ளதாக இருந்தது. ஆனால் வருகை என்பது 66 சதவிகிதம் தான். இது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் கட்சி மாவட்ட மையங்களுடன் பேசி பெண் கட்சிக் கிளை செயலாளர்களுக்கு மாவட்ட அளவில் வகுப்புகள் எடுக்கப்பட்டுள்ளன. சுமார் 1000 பெண் கட்சிக் கிளை செயலாளர்கள் உள்ளனர், இவர்களுக்கு மாவட்டக் கல்விக் குழுக்களின் மூலம் கட்சி வகுப்புகள் நடத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

5.120 மாதர் அரங்க பிராக்சனில் 2012, 2013, 2014ல் பெண் கட்சி உறுப்பினர், துணைக்குழு சேர்ப்பு சம்பந்தமாக அறிக்கை வைத்து விவாதிக்கப்பட்டது. மொத்தக் கட்சி உறுப்பினர்களில் பெண்களின்

சதவிகிதம் 2012 - 15.2%, 2013 - 16.5%, 2014 - 16.9%. கடந்த மாநாட்டிலிருந்து, இந்த மூன்றாண்டுகளில் உயர்வு 1.7 என்பதும் பரிசீலிக்கப்பட்டு 2015ல் மாதர் அரங்க உறுப்பினர் பதிவில் 1 சதவிகிதம் துணைக்குழு சேர்ப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மாதர் சங்க உறுப்பினர் பதிவு முடிந்தவுடன் கிளைகளில் இலக்கு நிர்ணயித்து குறிப்பாக தலித், சிறுபான்மை பெண்களைக் கொணடுவர கூடுதல் முயற்சி எடுப்பது எனவும் பேசப்பட்டுள்ளது.

5.121 மாதர் அரங்க பிராக்சனின் சில முக்கிய முயற்சிகளாக மாதர் அரங்க விரிவாக்கம் குறித்தும், மாதர் அரங்கில் நெறிபடுத்தும் இயக்கம் அமலாக்கம் குறித்தும், அதிகரித்து வரும் குடிப்பழக்கத்தின் சமூக விளைவுகளை எதிர்கொள்வது குறித்தும் குறிப்புகள் தயாரித்து விவாதிக்கப்பட்டுள்ளது. கட்சி மாநிலக்குழுவில் போதைப் பழக்கம் குறித்து விவாதிக்கப்பட்டு கட்சியின் மாநிலக்குழுவின் முடிவாக கட்சி உறுப்பினர்கள் வரை ரிப்போர்ட் செய்யப்பட வேண்டும்.

5.122 மாநிலம் முழுவதும், முழுநேர, பகுதிநேர அலவன்ஸ் ஊழியர்கள் 69 பேர் உள்ளனர். கோவை, மதுரை மாநகர் ஆகிய மாவட்டங்களில் ஊழியர் எண்ணிக்கையைக் கூடுதலாக்க வேண்டும். இடைக்குழு அளவில் அலவன்ஸ் ஊழியர்களைப் போடவேண்டும்.

5.123 பெண்களை மாநாடுகளில் தலைமைப் பொறுப்பில் போடுவதில், மாநில மாவட்ட அளவில் சிறு முன்னேற்றம் என்பது உள்ளது. ஆனால் கட்சிப் பொதுக் கூட்டங்கள், போராட்டங்களில் பெண்களை தலைமை தாங்க வைப்பதில் முன்னேற்றத்தைப் பெரிதாகக் காண முடியவில்லை.

5.124 **மதிப்பீடு:**

1. ஏகாதிபத்திய, வகுப்புவாத எதிர்ப்பு ஆகியவற்றில் ஒரு சில முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.
2. வாழ்வுரிமை பிரச்சனைகளில் நூறு நாள் வேலையில் தலையீடு, முதியோர், விதவை உதவித்தொகை ஆகியவற்றில் தலையீடுகள் இக்காலகட்டத்தில் அதிகரித்துள்ளது. வன்முறை பிரச்சனைகளில் நிவாரணம் கிடைக்கும் வரை உறுதியான தலையீடுகள் அதிகரித்துள்ளன. 1. மதுரை புறநகர் பொதும்பு பள்ளி மாணவிகள் பிரச்சனையில் நமது நீதிமன்ற தலையீட்டால் 32 குழந்தைகளுக்கு தலா 1,20,000மும். 2. விருதுநகரில் திருத்தங்கல் பள்ளி மாணவிகள் பிரச்சனையில் நமது நீதிமன்றத் தலையீட்டால் குற்றவாளியின் பதவி உயர்வு ரத்து செய்யப்பட்டது. 3.திருப்பூர் உடுமலை சந்திரா என்ற பெண் வழக்கில் நமது நீதிமன்ற தலையீட்டால் சிபிஐ விசாரணை பெற்றுளோம். 4. கடலூர் மாவட்டம் திட்டக்குடி பள்ளி மாணவிகள் வழக்கில் நமது நீதிமன்ற தலையீட்டால் அம்மாணவிகளுக்கு பாதுகாப்பு, கல்வியைத் தொடர்வதற்கான் உத்தரவை நீதிமன்றம் மூலம் பெற்றுள்ளோம்.
3. அடையாள அரசியல் முன்னுக்கு வந்துள்ள சூழலில் தலித், மலைவாழ், முஸ்லிம் பெண்கள் பிரச்சனைகளில் மாதர் சங்கத் தலையீடு போதுமானதாக இல்லை. தீண்டாமை ஒழிப்பு முன்னணி, சிறுபான்மையினர் நலக்குழு உருவாக்கப்பட்டுள்ள பின்னணியில் இவற்றுடன் இணைந்து செயல்பட்டாலும், இதனால் பொதுவாக இதர வெகுஜன அமைப்புகளின் சுயேச்சையான தலையீடு குறைகிறது என்னும் பிரச்னை எழுகிறது.
4. இளம் பெண்கள் மத்தியில் ஆய்வு மற்றும் அவர்களது பிரச்சனைகளில் தலையீடுகள் அதிகரித்துள்ளன. கல்லூரிகளில் இளம் பெண்கள் உரிமை குறித்த கருத்தரங்கு தொடர்ந்து நடத்தப்படுகிறது.
5. மாதர் அரங்க உறுப்பினர் பதிவு அதிகரித்திருந்தாலும் கமிட்டிகளின் செயல்பாட்டில் போதுமான முன்னேற்றம் இல்லை.
6. கட்சிக்குள் பெண்களின் வருகையில் ஒரு சிறிய முன்னேற்றம் உள்ளது.
7. பாலின ஒடுக்குமுறை பிரச்சனைகளில் பெரும்பான்மையான கட்சியின் மாவட்டக் குழுக்கள்

தலையீடு செய்துள்ளன. இதில் தலையீடே செய்யாத மாவட்டக்குழுக்களும் உள்ளன.

8. மாநில, மாவட்ட பிராக்சன்களின் செயல்பாட்டில் சிறு முன்னேற்றம் உள்ளது. அதற்கான பயிற்சிகளும் கொடுக்கப்பட்டுள்ளது.

5.125 எதிர்கால கடமைகள்

- ஏகாதிபத்திய எதிர்ப்பு, வகுப்புவாத எதிர்ப்பு இயக்கங்களை வட்டமேசை கூட்டங்கள், கருத்தரங்குகள், பிரச்சாரங்கள் மூலம் வலுப்படுத்துவது.
- சாதிய மதவாத சக்திகளுக்கு எதிரான மக்கள் ஒற்றுமை மாநாடுகளை நடத்துவது. இதர அமைப்புகளை இணைத்து பரந்த மேடை உருவாக்குவது, கௌரவக் கொலைகளுக்கு எதிரான பிரச்சாரத்தை வலுப்படுத்துவது, தனிச் சட்டம் கொண்டுவரப் போராடுவது
- வாழ்வுரிமைப் பிரச்சனைகள் மீதான போராட்டங்களை அதிகரிப்பது; ஸ்தல இயக்கங்களில் கவனம் செலுத்துவது
- தனித்து வாழும் பெண்கள், பிரச்சனைகளில் தலையீடு செய்வதும், இயக்கங்கள் நடத்துவதும், அவர்களை ஊழியர்களாகக் கொண்டுவருவதற்கான முயற்சிகளையும் தொடர்ந்து செய்வது.
- இளம் பெண்கள், பள்ளி மாணவிகள், குழந்தைகள் மீதான வன்முறை பிரச்சனைகளில் போராட்டங்களையும், தொடர்ந்த தலையீட்டையும் அதிகப்படுத்துவது. கல்லூரிகளுடன் தொடர்பை அதிகப்படுத்துவது.
- மாதர் சங்கக் கிளைகள் செயல்பாட்டில் முறிப்பை ஏற்படுத்துவது.
- மாதர் சங்க உறுப்பினர் பதிவில் 1 சதவிகிதம் என்ற அடிப்படையில் 2015ல் துணைக்கு போட எடுத்த முடிவினை அமுலாக்கத் தொடர்ந்து முயற்சி செய்வது.
- கட்சிக் கிளைகள் ஒவ்வொன்றிலும் ஒரு ஆண்டிற்கு 2 பெண்களைத் துணைக்குழு ஆக்குவதற்கு முயற்சி செய்வது.
- மாவட்ட கட்சி அமைப்பின் மூலம் பெண் கட்சிக் கிளை செயலாளர்களுக்கு அரசியல் ரிப்போர்ட் செய்வது, கட்சிக் கிளைகளை கூட்டுவது, போதுமான பயிற்சியளிப்பது. அனைத்து மாவட்ட பிராக்சன் கமிட்டிகளையும் முறையாகக் கூட்டுவது, அவற்றின் செயல்பாட்டில் முன்னேற்றத்தை உருவாக்குவது.

மாணவர் அரங்கம்

நமது முக்கியமான ஸ்தாபன நடவடிக்கைகளும் - *சில தலையீடுகளும்*

5.126 14 வது அகில இந்திய மாநாட்டு வெற்றிகரமாக மதுரை மாநகரில் எழுச்சியோடு 2012 செப்டம்பர் 4 முதல் 7 வரை நடைபெற்றது. மாநாட்டுப் பணிகள் மாநிலம் முழுவதும் உற்சாகமாக முன்னெடுத்து செல்லப்பட்டன. இதன் மூலம் புதிய ஊழியர்களும், புதிய தொடர்புகளும் ஏராளமாகக் கிடைத்தது. கடந்த 6 மாத காலமாக மாநாட்டினை மையப்படுத்தியே மாநிலம் முழுவதும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கலைவிழாக்கள், விளையாட்டு விழாக்கள், கருத்தரங்குகள், பிரசுரங்கள் வெளியீடு என சிறப்பு மிக்க மாநாடாக அமைந்தது. எழுச்சி மிக்க பேரணி, பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

5.127 மாநிலம் முழுவதும் 15,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பேரணியில் பங்கேற்றனர். இம்மாநாடு ஸ்தாபன விரிவாக்கத்திற்கு மாநிலம் முழுவதும் பயன்பட்டது. உறுப்பினர் பதிவு கடந்த மூன்றாண்டுகளில் சிறு முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

5.128 அரசுக்கல்லூரிகளை மேம்படுத்தவும் பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகளை அரசுக் கல்லூரிகளாக மாற்றிடக் கோரியும், அரசு உதவிபெறும் கல்லூரிகளின் கட்டணக் கொள்ளையை தடுக்கக் கோரியும் 2013 பிப்ரவரி 19ல் 42 கல்லூரிகளில் 60,000 க்கும் மேற்பட்ட மாணவர்களை போராட்டக் களத்தில் இறக்கினோம்.

5.129 தனியார் பள்ளிக் கட்டணக் கொள்ளைக்கு எதிராக மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்தை முற்றுகையிட்டு மாநிலம் முழுவதும் வலுவான போராட்டத்தை முன்னெடுத்து சென்றோம்.

5.130 உயர்கல்வி நிலையங்களில் அரசாணை 92 யை நடைமுறைப்படுத்த வலியுறுத்தி 2013 ஆகஸ்ட் 8ல் மாநிலம் முழுவதும் வலுவான ஆர்ப்பாட்டம் மற்றும் மறியல் போராட்டங்களை நடத்தினோம்.

5.131 மனோன்மனீயம் சுந்தரனார் பல்கலைகழகத்திற்கு உள்ளிட்ட கல்லூரிகளுக்கான கல்விக் கட்டண உயர்வு, புதுச்சேரி மத்திய பல்கலை தேர்வுக் கட்டண உயர்வு, தமிழக பல்கலைகழக தேர்வுக் கட்டண உயர்வு ஆகியவற்றை எதிர்த்து 1 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் வகுப்புகளை புறக்கணித்து போராட்டங்களில் பங்கேற்றனர்.

5.132 23 வது மாநில மாநாட்டினை 2013 ஆகஸ்ட் 22-24 ஆகிய தேதிகளில் தென்சென்னையில் எழுச்சியோடு நடத்தினோம். 324 பிரதிநிதிகள் , 11 பேர் கல்வியாளர்கள் 46 மாநிலக்குழு உறுப்பினர்கள் என 386 தோழர்களின் பங்கேற்போடு நடைபெற்றது. பேரணி பொதுக்கூட்டத்தில் 5994 மாணவர்கள் பங்கேற்றனர். கலைவிழாக்கள், கருத்தரங்கம், புத்தக வெளியீடுகள் என வெற்றிகரமாக மாநாட்டை நடத்தினோம்.

5.133 அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கு வேலை வாய்ப்பில் அரசு முன்னுரிமை தர வலியுறுத்தி ஜனவரி 28 முதல் பிப்ரவரி 3 முதல் தமிழகத்தில் உள்ள 23 கல்லூரிகளிலும் நாம் தலைமை தாங்கி வழிநடத்தினோம்.

5.134 குடந்தை பள்ளி தீ விபத்து தீர்ப்புக்கு எதிராக மாநிலம் முழவதும் ஆர்ப்பாட்டம் நடத்தினோம். ரயில் கட்டண உயர்வுக்கு எதிராக DYFI - AIDWA இணைந்து மாநிலம் முழுவதும் இரயில் மறியல் போராட்டம் நடத்தினோம்.

5.135 ஈரோடு சி.என்.சி கல்லூரியை அரசுக் கல்லூரியாக ஏற்கக் கோரி 2014 ஜுலை 16 முதல் ஆகஸ்ட் 10 வரை தொடர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

5.136 கோவை சி.பி எம் கல்லூரியை அரசே ஏற்கக் கோரி 105 நாட்கள் தொடர் போராட்டத்தை நடத்தியுள்ளோம்.

5.137 கோவை பொறியியல் கல்லூரிகளில் 2014 செப்4 முதல் 24 வரை மஹாராஜா ,ஸ்கேடு, புரபெசனல், நேரு கல்லூரிகளில் தொடர் போராட்டம் நடத்தினோம்.

5.138 பாண்டிச்சேரி மத்திய பல்கலையில் மாணவிகள் காவியா, மீதான பாலியல் சீண்டல், ராக்கிங் கொடுமைக்கு எதிராக தொடர் போராட்டம் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் நாடு முழுவதுமுள்ள உயர்கல்வி நிலையங்களில் பாலியல் சீண்டல், ராக்கிங் கொடுமைக்கு எதிரான உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்த மிக முக்கியமான பரிந்துரைகளை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

5.139 மாணவி ஸ்ருதி தனியார் பள்ளி பேருந்து விபத்தில் இறந்தது குறித்து நாம் தொடுத்த பொது நல வழக்கில் பல்வேறு முக்கிய பரிந்துரைகளை, தனியார் பள்ளி வளாகங்களை ஒழுங்குபடுத்துவது குறித்து முதல் கட்ட உத்தரவினை பெற்றுள்ளோம்.

5.140 திருவள்ளூர் பல்கலை கழகம் தேர்வு கட்டணங்கள் இருமடங்காக உயர்த்தியதற்கு எதிராக கடலூர், தி.மலை,விழுப்புரம், வேலூர், ஆகிய மாவட்டங்களில் நாம் நடத்திய தொடர் போராட்டம் உயர்த்தப்பட்ட கட்டணங்களை குறைத்திட முடிந்தது.

5.141 கல்வி நிலையங்களில் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக தொடர்ந்து இயங்கி வருகிறோம். டிசம்பர் 25 பொதுக்கூட்டம் கருத்தரங்க நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

5.142 இலங்கை தமிழர் பிரச்சனையில் போர்க்குற்றங்கள் குறித்தும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் உயர்மட்ட, நம்பகத் தன்மையுள்ள சுயேட்சையான விசாரணை நடத்த வலியுறுத்தியும் தமிழ் மக்களுக்கு சம உரிமை , சம அந்தஸ்து, வழங்கக் கோரியும் நமது நிலையிலிருந்து 2013 மார்ச் 19 மாநிலந் தழுவிய போராட்டத்தை நடத்தினோம். தமிழ்தேசிய அமைப்புகள்

அதிதீவிர இடதுசாரி அமைப்புகள் தமிழக அரசியல் கட்சிகளின் பின்னிருந்து மாநிலந் தழுவிய தன்னெழுச்சி போராட்டமாக மாற்றப்பட்டது. மிகுந்த சவாலோடு நாம் எதிர்கொண்டோம் கருத்து ரீதியான போராட்டத்தை நடத்தினோம்.

சட்டம்

5.143 தமிழக அரசு சட்டக் கல்வியில் தனியாருக்கு அனுமதி அளிக்கும் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து அரசின் முடிவை திரும்பபெற வலியுறுத்தியும் திருச்சி, திருநெல்வேலி, வேலூர், செங்கல்பட்டு, சென்னை, ஆகிய சட்டக்கல்லூரிகளில் வகுப்பு புறக்கணிப்பும், சாலை மறியல் போராட்டமும் நடைபெற்றது. திருச்சியில் காவல்துறையால் மாநில நிர்வாகிகளும், மாணவர்களும் கடுமையாக தாக்கப்பட்டனர். இதனைக் கண்டித்து திருச்சி சட்டக்கல்லூரியில் மூன்று நாள் தொடர் உள்ளிருப்பு போராட்டம் நடைபெற்றது. மாநிலம் முழுவதும் 2012 மார்ச் 13-16 கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது. மதுரை, வேலூர் சட்டக் கல்லூரிகள் தவிர மற்ற சட்டக் கல்லூரிகளில் நமது அமைப்பின் சார்பில் 5 நாட்கள் தொடர்ந்து போராட்டத்தை நடத்தினோம்.

5.144 2014 பிப்ரவரி 22, 23 ,ஆகிய தேதியில் சட்டக்கல்வி தனியார்மயத்திற்கு எதிராகவும், சட்டக்கல்வியின் தரத்தினை மேம்படுத்த வலியுறுத்தியும் காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டில் சிறப்பு கருத்தரங்கம் நடைபெற்றது. தமிழகத்தில் 8 கல்லூரிகளிலிருந்தும் 101 பிரதிநிதிகள் பங்கேற்றனர். சட்ட மாணவர் உபகுழுவும் தேர்வு செய்யப்பட்டது.

மாணவிகளுக்கான இயக்கம்

5.145 டில்லி மருத்துவ மாணவி மீதான பாலியல் வன்கொடுமைக்கு எதிராக மாநிலம் தழுவிய கண்டன போராட்டங்களை நடத்தினோம். சென்னையில் சாஸ்திரி பவன் முன்பு முற்றுகைப் போராட்டத்தை நடத்தினோம் 120 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். பாலியல் வன்முறைக்கு எதிராக திருச்சியில மாணவிகளின் கண்டனப் பேரணி நடைபெற்றது. மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டமும், கண்டன போஸ்டரும் வெளியிடப்பட்டது. 2013 ஜனவரி 23- பெண்களின் மீதான வன்கொடுமைகளுக்கு எதிராக வலுவான சட்டமியற்ற வலியுறுத்தி பெண்கள் மற்றும் கல்வி நிலையங்களின் மாணவிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வலியுறுத்தி மாநிலந்தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருவாரூர்,நாகை,தேனி காஞ்சிபுரம், தஞ்சாவூர் ,விருதுநகர், தென்சென்னை, இராமநாதபுரம், திருச்சி, கரூர், நாமக்கல், தூத்துக்குடி உட்பட 16 மாவட்டங்களில் இப்போராட்டம் நடைபெற்றது.

5.146 நமது அமைப்பில் மாணவிகளை அணிதிரட்டவும், ஊழியர்களை பயிற்றுவிக்கவும் , அரசியல்படுத்தவும் திட்டமிட்டு தலைமை பொறுப்புக்கு உயர்த்தவும் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

பல்கலைக்கழகம்

5.147 2014 நவம்பர் 1,2 தமிழக பல்கலைகழக மாணவர் சிறப்பு மாநாட்டை மதுரை புறநகரில் நடத்தினோம். பெரும்பாலான பல்கலைக்கழகத்திலிருந்தும் முதுகலை மற்றும் ஆய்வு மாணவர்கள் 130 பேர் பங்கேற்றனர். பல்கலைகழகத்தில் நமது அமைப்பின் வளாக செயல்பாட்டை பலப்படுத்திட வேண்டும். அனைத்து பல்கலைக்கழகங்களிலும் கட்சி கிளை துவக்குவது என முடிவெடுத்தோம். சென்னை பல்கலை, சிதம்பரம் அண்ணாமலை பல்கலை, மதுரை MKU AM கிளை ஆகிய பல்கலையில் மட்டுமே கட்சிக் கிளை செயல்பாடு உள்ளது. வாய்ப்புள்ள, பாரதிதாசன், எம்.எஸ்.யு, தஞ்சை தமிழ் பல்கலைகழகங்களிலும் உடனடியாக கட்சி கிளைகளை துவங்கிட வேண்டும்.

பொறியியல், மருத்துவம்

5.148 பொறியியல் கல்லூரி மாணவர்களை அணிதிரட்டும் முயற்சியாக 2014 அக்டோபர் 11 மாநில சிறப்பு மாநாடு நாமக்கலில் நடைபெற்றது. 30 கல்லூரிகளிலிருந்து 80 மாணவர்கள் பங்கேற்றனர்.

சில புதிய தொடர்புகளும் ஏற்பட்டுள்ளது. பொறியியல் மாணவர்களை அணிதிரட்டிட மேலும் நமது தலையிட்டை அதிகப்படுத்த வேண்டியுள்ளது. மருத்துவக் கல்லூரிகளில் நாம் பலவீனத்தோடு உள்ளோம். மாநிலக்குழுவின் முயற்சியின்மை விமர்சனத்துக்குரியது. கட்சியின் மாவட்டக்குழுக்களும் தொடர்பினை உருவாக்கிட வழிகாட்டி உதவிட வேண்டும்.

புதிய பாதை .

5.149 நமது ஊழியர்களுக்கான பத்திரிகையாக புதிய பாதை இதழை கடந்த 2009 லிருந்து தொடர்ந்து கொண்டு வந்துள்ளோம். நிதி நெருக்கடி பிரச்சனையால் அவ்வப்பொழுது கொண்டு வர முடியாத நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளோம். 2012 ஜுலையில் இருந்து மத்திய தர அரங்கங்களின் உதவியோடு சில இதழ்களை கொண்டு வந்தோம். மீண்டும் தொடர்ச்சியாக கொண்டு வர நிரந்தர நிதி உருவாக்கம் இல்லாததால் பத்திரிகை நடத்துவதில் தொடர் சிரமத்தை சந்திக்க வேண்டியுள்ளது. ஆகையால் 2013 ஜுலையிலிருந்து இருமாத இதழாக கொண்டு வருவதென முடிவெடுத்து தொடர்ந்து வெளிவருகிறது.

உறுப்பினர் பதிவு

5.150 ஒவ்வொரு ஆண்டும் தொடக்கத்திலும் குறித்த காலத்தில் பதிவினை முடிப்பதோ இலக்கினை எட்டுவதோ நடப்பதில்லை. இதனால் கடந்த சில ஆண்டுகளாகவே நம்மால் பாய்ச்சல் வேக வளர்ச்சியினை நோக்கி செல்ல முடியவில்லை. தமிழ்நாட்டில் நாம் நடத்தும் இயக்கங்களுக்கும் உறுப்பினர் பதிவுக்கும் மிக பெரும் இடைவெளி உள்ளது. உறுப்பினர் பதிவுப் பணியில் திட்டமிட்ட இலக்கினை அடையும் வகையில் தயாரிப்புப் பணிகளை மேற்கொள்வதிலும் மாவட்டக் குழுக்களிடம் தொடர் பலவீனம் உள்ளது. உறுப்பினர் பதிவு குறித்து கட்சி மாவட்டக்குழுக்கள் உரிய கவனம் செலுத்துவதில்லை. உறுப்பினர் பதிவில் ஏற்பட்டுள்ள சிறு முன்னேற்றத்தையும் ஸ்தாபனப் படுத்துவதில் உள்ள பலவீனம் களையப்பட வேண்டும்.

5.151 மாநிலம் முழுவதும் கடந்த ஆண்டில் 592 கல்வி நிலையங்களில் உறுப்பினர் பதிவு நடந்துள்ளது. ஆனால் 265 கல்வி நிலையங்களில் மட்டுமே கிளைச் செயல்பாடு உள்ளது. தமிழகத்தில் நமது அமைப்பு விரிவாக்கத்திற்கு மிகப்பெரும் தடையாக இருப்பது கல்வி நிலை அளவிலான செயல்பாடின்மையே.

ஸ்தாபனம்

செயல்படும் மாவட்டக்குழுக்கள்

5.152 வடசென்னை, தென்சென்னை, காஞ்சிபுரம், பாண்டிச்சேரி, கடலூர், விழுப்புரம், தி.மலை, தஞ்சை, விருதுநகர், நாகப்பட்டிணம், மதுரைபுறநகர், மதுரை மாநகர் , திருவாரூர், திருச்சி, திண்டுக்கல், இராமநாதபுரம், தூத்துக்குடி, வேலூர், கோவை, ஈரோடு, நாமக்கல், ஆகிய மாவட்டங்கள் செயல்படும் மாவட்டங்களாக உள்ளன. மேலும் பன்முகத் தன்மையான வேலைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதில் தஞ்சை, திருவாரூர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஊழியர் என்பதை உறுதிப்படுத்திட வேண்டும்.

தேக்கம் நீடிக்கும் மாவட்டங்கள்

5.153 செயல்படும் மாவட்டங்களாக இருந்த திருநெல்வேலி, தேனி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் மாவட்டக்குழு செயல்பாடு இல்லாமல் பெரும் தேக்கம் உருவாகியுள்ளது. சில ஊழியர்களின் வேலையாக மாற்றப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கட்சியின் முயற்சியில் இருந்தும் கூடுதல் முன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மாணவர் சங்க மாநில மையத்திலிருந்து கூடுதல் தலையீட்டையும், கூடுதல் கண்காணிப்பையும் உறுதிபடுத்த வேண்டியுள்ளது.

வர்க்க வெகுஜன அரங்கங்கள்

ஓரளவு செயல்படும் மாவட்டங்கள்

5.154 திருவள்ளூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, சிவகங்கை, திருப்பூர், சேலம், கரூர் நீலகிரி, மாவட்டங்கள் ஓரளவு செயல்படும் மாவட்டங்களாக உள்ளன. கட்சியின் மாவட்டக்குழுக்கள் கூடுதல் கவனத்தை செலுத்தும் போதுதான் இம்மாவட்டங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும். குறிப்பாக கட்சி ஸ்தாபனம் வலுவாக உள்ள திருப்பூர் மாவட்டத்தில் ஒரு நிரந்தரமான செயல்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு வாய்ப்புகள் இருந்தும் தவறவிட்டுள்ளோம்.

5.155 மாநில தலைநகரான சென்னையில் ஒட்டுமொத்த உயர்கல்வி பயிலும் மாணவர்களில் சுமார் 20 சதம் பேர் சென்னையில் உள்ளனர். இங்கு திட்டமிட்ட இலக்குகளோடு சென்னை மாவட்டக்குழுக்கள் பணியாற்றிட வேண்டியுள்ளது. முன்னுக்கு வரும் கல்விப் பிரச்சனைகளில் உடனக்குடனான தலையீட்டினை உறுதிசெய்திட வேண்டியுள்ளது. குறிப்பிட்ட கல்வி நிலையங்களைத் தாண்டி புதிய கல்வி நிலையங்களில் தொடர்பினையும், செயல்பாட்டையும் உருவாக்குவதில் பெரும் தேக்கம் நீடித்து வருகிறது. இது களையப்பட வேண்டும். கல்வி வளாகத்தை அடிப்படையாக கொண்ட ஸ்தாபன செயல்பாட்டை உறுதிபடுத்திட வேண்டும். உடனடி தலையீட்டையும் அதிகரிக்க வேண்டியுள்ளது.

5.156 மாநில மையத்தில் 7 தோழர்கள் உள்ளனர் ஜோ.ராஜ்மோகன், பி.உச்சிமாகாளி, ரெ.ஸ்டாலின், வீ.மாரியப்பன், பா.சரவணத்தமிழன் ஆகியோர் சென்னையை மையமாக கொண்டு செயல்படுகின்றனர். பா.ஆறுமுகம், த.சித்தார்த்தன் தங்கள் மாவட்டங்களில் இருந்து கொண்டு சென்னை மையமாக கொண்டு செயல்படுகின்றனர். மாநில மையப் பணிகளை மேலும் பலப்படுத்த வேண்டியுள்ளது. முன்னுக்கு வரும் பிரச்சனைகளை அறிந்து உடனடியாக தலையிடுதல், கூட்டு செயல்பாடு, வேலை பகிர்வு, மாவட்டங்களுக்கு வழிகாட்டுதல், உபக்குழுக்களை செயல்படுத்துதல் மற்றும் சுய கல்வி போன்ற அம்சங்களில் மாநில மையம் முன்னேற வேண்டியுள்ளது.

பிராக்சன் செயல்பாடு

5.157 16 தோழர்களை கொண்ட மாநில பிராக்சன் செயல்படுகிறது. பொதுவாக 2 மாதங்களுக்கு ஒரு முறை கூடுகிறது. கட்சியின் மத்திய, மாநில முடிவுகள், கட்சி கட்டும் பணி மற்றும் மாணவர் அரங்க பணிகள் பற்றி விவாதிக்கப்படுகிறது. மாநில பிராக்சன் முடிவுகளை அமல்படுத்துவதில் மாவட்ட பிராக்சன் அல்லது ஆலோசனைக் குழுக்களை கூட்டுவதிலும் மாநில பிராக்சன் தோழர்களிடம் கூடுதல் முன்முயற்சி தேவை

மாவட்ட பிராக்சன்

5.158 வடசென்னை, தென்சென்னை, காஞ்சிபுரம், கடலூர்,திருவள்ளூர், பாண்டிச்சேரி, நாமக்கல், கோவை, திருச்சி, நாகை, தஞ்சை, ,தேனி, மதுரை நகர், இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, விழுப்புரம், திருவாரூர், இந்த மாவட்டங்களில் பிராக்சன் கமிட்டிகள் செயல்படுகின்றன. மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடுவதை உறுதிபடுத்திட வேண்டியுள்ளது. பெரும்பாலும் மாணவர் அரங்கப் பணிகள் குறித்து மட்டுமே பேசப்படுகிறது. கட்சி கட்டும் பணி குறித்து கூடுதல் முக்கியத்துவத்தோடு விவாதிக்க வேண்டியுள்ளது. கட்சியின் மேல் கமிட்டியின் முடிவுகள் ரிப்போர்ட் செய்யப்படுவதிலும் முன்னேற்றம் தேவை.

5.159 திண்டுக்கல், தூத்துக்குடி, பெரம்பலூர், ஈரோடு, திருப்பூர், சேலம், மாவட்டங்களில் ஆலோசனை குழுவாக செயல்படுகிறது. கன்னியாகுமரி, தி.மலை, தருமபுரி, கிருஷ்ணகிரி, நீலகிரி, கரூர், புதுக்கோட்டை, சிவகங்கை, ஆகிய மாவட்டங்களில் ஆலோசனைக் குழு கூட இல்லாத நிலை உள்ளது. இம்மாவட்டங்களில் மாணவர் அமைப்பின் செயல்பாட்டை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. மாணவர் அரங்கத்தை பலப்படுத்த கட்சி மாவட்டக்குழுக்கள் கவனம் செலுத்த

வேண்டும் கட்சியின் ஆதரவாளர்களை, துணைக்குழு உறுப்பினர்களை சேர்ப்பதற்கான தொடர்ச்சியான திட்டமிடலும் முயற்சியும் வேண்டும்.

அரசியல்படுத்துதல்

5.160 மாணவர் பணிகளில் முன்னணி ஊழியர்களாக செயல்படும் தோழர்களை அடையாளம் கண்டு அரசியல் உணர்வு மட்டத்தை உணர்த்திடும் வகையில் தொடர் பயிற்சி வகுப்புகள் அவசியம். 2012 ஜுன் 1 முதல்7 வரை திருநெல்வேலி பாபநாசத்தில் நடைபெற்றது. 2014 மே 28 முதல் 31 வரை கிருஷ்ணகிரியில் அரசியல் வகுப்புகள் நடைபெற்றது. மாவட்ட அளவில் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை அரசியல் வகுப்புகளை கட்சியின் மாவட்டக்குழுவின் முயற்சியில் நடத்திட வேண்டும்.

மாணவர் அரங்க ஆவணம்

5.161 கட்சியின் மாணவர் அரங்கம் குறித்த மத்தியக் குழுவின் ஆவணத்தை கட்சியின் மாநிலக்குழு தமிழகத்தின் சூழலுக்கேற்ப விவாதித்து 2012 மே மாதம் நடைபெற்ற மாநிலக்குழுக் கூட்டத்தில் இறுதிப்படுத்தியது. இந்த ஆவணம் கட்சியின் அணிகள் மற்றும் உறுப்பினர்கள் வரை கொண்டு செல்லப்பட வேண்டும். மாணவர்களிடையே கட்சியை கட்டுவதற்கும், மாணவர் அரங்கத்தை விரிவுப்படுத்துவதற்கும் மாவட்ட தன்மைக்கேற்றவாறு ஆவணத்தை பொருத்தி மாணவர் அரங்கத்திற்கான வேலைத் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்துவது என முடிவெடுக்கப்பட்டது. ஆனால் இந்த முடிவு பெரும்பாலும் அமல்படுத்தப்படவில்லை. கட்சியின் மாவட்டக்குழுவில் ரிப்போர்ட் செய்ததோடு முடிந்து விட்டது. வடசென்னை, கடலூர், விருதுநகர், திருப்பூர், மதுரை மாநகர், ஆகிய மாவட்டங்களில் மட்டுமே ஆவணம் மாவட்டத்தன்மைக்கேற்றவாறு உருவாக்கப்பட்டுள்ளது. தென்சென்னை, காஞ்சிபுரம், மதுரை புறநகர், தஞ்சாவூர், ஆகிய மாவட்டங்களில் மாவட்ட பிராக்சனில் விவாதிக்கப்பட்டு கட்சியின் மாவட்டக்குழுவில் இறுதிப்படுத்தப்படாமல் உள்ளது. ஆவணத்தில் விவாதிக்கப்பட்டு எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் கோவை மண்டலத்திற்கென ஒரு ஊழியரை தீர்மானித்துள்ளோம். அதன்படி நாமக்கல் கண்ணன் கோவை மண்டலத்தில் உள்ள தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், திருப்பூர், கோவை உதவி என்கிற அடிப்படையில் செயல்பட்டு வருகிறார்.

கட்சி உறுப்பினர் பதிவு

5.162 மாணவர் அரங்கில் பணியாற்றும் முன்னணி ஊழியர்களை கட்சியின் ஆதரவாளர்களாக்குவது குறித்து இலக்கு தீர்மானித்து தொடர்ந்து விவாதிக்கிறோம் ஆனால் அதில் பாய்ச்சல் வேக முன்னேற்றம் இல்லாத தன்மையே தொடர்கிறது. ஆனால் கடந்த காலத்தை விட ஒரு சிறு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதன்படி 549 ஏ.எம் 216 சி.எம் 403 பி.எம் என மொத்தம் 1168 பேர் உள்ளனர். இதில் பெரும் முன்னேற்றத்தை உருவாக்குவதற்கு கட்சியின் மாவட்டக்குழுவும், மாநில பிராக்சனும் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. மாநிலம் முழுவதும் கட்சி கிளை 67 உள்ளன. பெரும்பாலும் தேவையை ஒட்டியும் புதுப்பித்தல்களுக்காகவும் மட்டுமே கூடுகின்றன. இந்த பலவீனம் களையப்பட வேண்டும். இதில் 22 கிளைகள் கல்வி நிலைய அளவில் கிளை செயல்பாடுகளை கொண்டு உள்ளன. இந்த எண்ணிக்கையை நாம் பலப்படுத்த வேண்டியுள்ளது

5.163 நிறைவேற்ற வேண்டிய உடனடி இலக்குகள்:

- மாணவர் அரங்க ஆவணத்தை மாவட்டங்களில் பொருத்துவது, வேலைத் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்துவது
- அடுத்த கல்வியாண்டில் 5 லட்சம் என்ற இலக்கினை அடைவது.
- 500 செயல்படும் மாணவர் சங்கக் கிளைகளை உருவாக்குவது

வர்க்க வெகுஜன அரங்கங்கள்

- 100 முன்னுரிமை எஸ்.எப்.ஐ கிளைகளை பலப்படுத்துவது அக்கிளைகளை கட்சிக் கிளைகளாக உருவாக்குவது கட்சிக் கிளை உடனடியாக அமைக்க வாய்ப்புள்ள திருச்சி பாரதிதாசன் நெல்லை எம்.எஸ்.யு, தஞ்சை தமிழ் பல்கலை மற்றும் கோவை, மதுரை சட்டக்கல்லூரி ஆகிய கல்லூரிகளிலும் கட்சிக் கிளைகளை உருவாக்குவதிலும் அரசியல் பயிற்சி முகாம் ஆண்டுதோறும் மண்டல அளவிலும், மாவட்ட அளவிலும் நடத்துவது
- புதிய பாதை இதழுக்கான நிரந்தர நிதி உருவாக்கத்தை ஏற்படுத்துவது, மாணவர் பேரவை தேர்தலுக்கான இயக்கத்தை வலுவாக முன்னெடுப்பது.
- பல்கலைக் கழக உறுப்பு கல்லூரி மற்றும் அரசு கல்லூரிகளைப் பாதுகாப்பதற்கான இயக்கத்தை நடத்துவது.
- அரசுப் பள்ளி பாதுகாப்பு இயக்கம் மற்றும் மாணவர் நல விடுதிக்கான இயக்கத்தையும் முன்னெடுப்பது,
- மாணவர் கலைவிழாக்கள் போன்ற பன்முக செயல்பாட்டை முன்னெடுப்பது

தீண்டாமை ஒழிப்பு முன்னணி

5.164 தோழர்.பி.சீனிவாசராவ் நினைவு தினம் (செப்-30) தீண்டாமை கொடுமைகளுக்கு எதிரான நேரடி களப்போராட்டங்களுக்கான தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

5.165 2012,2013,2014 ஆண்டுகளின் செப்டம்பர் 30 அன்று கோயம்புத்தூர் மாவட்டம் காளப்பட்டி மாரியம்மன் கோவில், ஈரோடு மாவட்டம் வாவிக்கடை அண்ணமார் மதுரை வீரன் கோவில், எழுமாத்தூர் சத்தீஸ்வரன் கோவில், திருவண்ணாமலை மாவட்டம் சிறுவள்ளூர் நாராயண பெருமாள் கோவில் ஆகிய 4 கிராமங்களில் கோவில் நுழைவுப் போராட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற்றன. 2014 ஆம் ஆண்டு புதுச்சேரி மாநிலம் கலித்தீர்த்தாள் குப்பம் திரௌபதி அம்மன் கோவில் நுழைவுப் போராட்ட அறிவிப்பையொட்டி மதகடிபட்டில் உள்ள நமது கட்சியின் ஒன்றியக்குழு அலுவலகத்தை வன்னியர் குடும்ப ஒருங்கிணைப்பு என்ற அமைப்பினர் 22.09.14 அன்று தீயிட்டு எரித்தனர். கண்டன இயக்கங்கள் நடத்தப்பட்டன. முன்னணியின் சார்பில் அலுவலகத்தை புணரமைக்க ரூ 20,000 வழங்கப்பட்டது. கோவில் நுழைவுப் போராட்டத்திற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. நீலகிரி மாவட்டம் குன்னூர் காந்திபுரத்தில் தனியார் நிறுவனம் அமைத்திருந்த தீண்டாமைக் கதவு, திண்டுக்கல் மாவட்டம் மரியநாதபுரம் தீண்டாமைச் சுவர் வேலூர் மாவட்டம் வாலாஜாபேட்டை படவேட்டம்மன் கோவில் தடுப்புச்சுவரில் ஒரு பகுதி, திருவண்ணாமலை மாவட்டம் அம்பேத்கர் நகர் பாதை ஆக்கிரமிப்பு, சேலம் மாவட்டம் காட்டுமரக்குட்டை பாதை ஆக்கிரமிப்பு ஆகிய 5 இடங்களில் தீண்டாமையின் காரணமாக அமைக்கப்பட்டிருந்த தடுப்புகள் அகற்றி தலித் மக்களுக்கு பாதை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

5.166 தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டை, வீரசிங்கம் பேட்டை, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி, விருதுநகர் மாவட்டம் அனுப்பன் குளம் ஆகிய 4 இடங்களில் உள்ள முடிதிருத்தகங்களில் தலித் மக்களுக்கு இருந்த தடைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. திருவண்ணாமலை மாவட்டம் காப்பலூரில் 3ஏக்கர் பஞ்சமி நிலம் மீட்கப்பட்டது. நாகை மாவட்டம் புதுச்சேரி, அரியலூர் மாவட்டம் ஆலாத்தியூர் ஆகிய இரு கிராமங்களில் மயான உரிமை விருதுநகர் மாவட்டம் வி.முத்துலிங்கபுரத்தில் பொதுக்குளியல் தொட்டியில் குளிக்கும் உரிமைகள் நிலை நாட்டப்பட்டன. ஈரோடு மாவட்டம் சிவகிரி சின்னியம் பாளையத்தில் 53 தலித் குடும்பங்களுக்கான குடிமனை

நிலம் மீட்கப்பட்டது. இதே தினத்தில் நீலகிரி மாவட்டம் குன்னூர் பரளிஆறு தலித் மக்களின் நடைபாதை, திருச்சி மாவட்டம் மால்வாய் குடிமனை நிலம், திண்டுக்கல் ஒட்டன் சத்திரம் குடிமனை நிலம், திருப்பூர் மாவட்டம் நடுவேலம் பாளையம் குடிமனை நிலம், புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி குடிமனை நிலம் ஆகிய 5 இடங்களில் போராட்டங்களை மேலும் தொடர வேண்டியுள்ளது.

2. தருமபுரி வன்கொடுமை

5.167 திவ்யா, இளவரசன் சாதி மறுப்புத் திருமணத்தை சகித்துக்கொள்ள முடியாத சாதி ஆதிக்க சக்திகள் 2012 நவம்பர் 7 அன்று தருமபுரி மாவட்டத்தின் நத்தம் காலனி, கொண்டம்பட்டி, அண்ணாநகர் ஆகிய கிராமங்களில் வரலாறு காணாத வன்முறையில் ஈடுபட்டது. பா.ம.க வினரால் ஒருங்கிணைக்கப்பட்ட சாதிவெறிக் கும்பல் மூன்று கிராமங்களின் ஒட்டுமொத்த வீடுகளின் பீரோக்களை உடைத்து கொள்ளையிட்டு அதன் பிறகு பெட்ரோல் குண்டுகளை வீசி வீடுகளை எரித்து அழித்தது. நமது கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.பாலகிருஷ்ணன், க.பீம்ராவ், பி.டெல்லிபாபு நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.நடராஜன் கட்சி மற்றும் முன்னணியின் தலைவர்கள் கிராமங்களுக்குச் சென்று ஆறுதல் தெரிவித்தனர். நமது மத்திய தர மற்றும் வர்க்க வெகுஜன அமைப்புகள் மூலமாக சுமார் 17 லட்சம் மதிப்புள்ள நிவாரணப்பொருட்கள் வழங்கப்பட்டன. தருமபுரி மாவட்ட கட்சியோடு இணைந்து முன்னணியின் மாநில மையம் குறிப்பிடத்தக்க களப்பணியாற்றியது உண்மையான அழிவுகளை மதிப்பிட்டு நிவாரணம் கோரி நாம் தொடர்ந்த வழக்கில் 7 கோடியே 32 லட்சம் நிவாரணம் வழங்கிட நீதி மன்றம் உத்தரவிட்டது. கல்வி மற்றும் பொதுவினியோக அட்டை உள்ளிட்ட ஒட்டுமொத்த ஆவணங்களும் எரிக்கப்பட்டுவிட்டதால் அனைத்து துறையினரும் பங்கேற்கிற சிறப்பு முகாம் நடத்தி சான்தழ் மற்றும் ஆவணங்கள் கிடைத்திட வலியுறுத்தினோம். முகாம் நடைபெற்று ஆவணங்கள் வழங்கப்பட்டன.

5.168 டிசம்பர் 5 அன்று தருமபுரியில் சுமார் 2000 பேர் பங்கேற்ற கண்டன ஆர்ப்பாட்டம் கட்சியின் மாநிலச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. நமது வலுவான தொடர்ச்சியான தலையீடுகள் மாநில அளவில் தலித் மற்றும் ஜனநாயக அமைப்புகளால் பேசப்பட்டது.

தருமபுரியைத் தொடர்ந்து

5.169 தேர்தல் ஆதாயமே மையமாக இருந்ததால் பா.ம.க தொடர் வன்முறையில் ஈடுபட்டது. பச்சார பாளையம், மேலிருப்பு, மரக்காணம் உளுந்தை என பல்வேறு கிராமங்களில் தலித் மக்களின் வீடுகள் அடித்து நொறுக்கியும், தீ வைத்தும் எரிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு நிவாரணம், மற்றும் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருவது என களப்பணியாற்றி வருகிறோம்.

3.கௌரவக் கொலைகள்

5.170 சாதி அரசியலின் கொடூர வடிவமாக சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்களை அல்லது காதலர்களை கொலை செய்யும் கௌரவக் கொலைகள் அதிர்ச்சி அளிக்கும் விதத்தில் தமிழகத்தில் அதிகரித்து வருகிறது. தருமபுரி இளவரசன் திண்டுக்கல் களுக்காம்பட்டி பெண் காவலர் கன்னீஸ்வரி தஞ்சாவூர் சூரக்கோட்டை மாரிமுத்து, மதுரை உசிலம்பட்டி விமலாதேவி, திண்டுக்கல் இராமராஜபுரம் ரஞ்சிதா கிருஷ்ணவேணி, இராமநாதபுரம் விளத்துள் சசிகலா, திருவண்ணாமலை மாவட்டம் கைக்கிளை தாங்கல் சுகன்யா , சிவகங்கை மல்லல் முத்துலட்சமி, விழுப்புரம் மாவட்டம் காந்தலவாடி பிரியா, கடலூர் மாவட்டம், சென்னி நத்தம் கோபாலகிருஷ்ணன் அரியலூர், மாவட்டம் ஜெயங்கொண்டம், இளஞ்சியம், விழுப்புரம் மாவட்டம் குண்ணத்தூர் கண்ணன் என்று நீள்கிறது. மரணமடைந்தவர்களின் பட்டியல்.

கௌவரக் கொலைக் குற்றவாளிகளுக்கு எதிராக சாத்தியமான அளவு செயல்பட்டுள்ளோம். புதிய சட்டம் தேவை என கோரிவருகிறோம். காவல்துறைக்கும், குற்றவாளிகளுக்கும் அச்சத்தை ஏற்படுத்தும் விதத்தில் உசிலம்பட்டி விமலாதேவி வழக்கை உயர்நீதி மன்றத்தின் கவனத்திற்கு எடுத்துச் சென்று சி.பி.ஐ மத்திய புலனாய்வுத்துறை விசாரணைக்கு உத்தரவு பெற்று விசாரணை நடைபெற்று வருகிறது.

4.சாதி வெறிக்கு எதிரான கருத்துப் பிரச்சாரங்கள்

5.171 2012 ஆகஸ்ட் மாதத்தில் ஒன்பது வேன் பிரச்சாரக் குழுக்கள் மூலமாக மாநிலம் முழுவதும் தீண்டாமை, வன்கொடுமைகளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யப்பட்டது. சாதிமறுப்புத் திருமண ஆதரவு மாநாடுகள் 5.01.13ல் வியாசர்பாடி 16.02.13ல் தருமபுரி, 02.03.2013ல் திருவள்ளூர், 08.06.13ல் புதுச்சேரியிலும் அம்பேத்கர், பெரியார், சீனிவாசராவ், பாரதியார் நினைவு மற்றும் பிறந்த தினங்களையொட்டி நூற்றுக்கணக்கான கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன.

5.172 மாநில அமைப்பின் சார்பில் தோழர் சம்பத் எழுதிய 10,000 பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. 2014 மார்ச் மாதத்தில் தமுஎகசவுடன் இணைந்து சாதி வெறி, மதவெறிக்கு எதிராக பொது நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அணையா வெண்மணி இதழும் கருத்துப் பிரச்சாரம் செய்து வருகிறது.

5. நேரடி களப்போராட்டங்கள்

செப்டம்பர் 30 தவிர்த்து மற்ற தினங்களில் நடைபெற்ற நேரடி களப்போராட்டங்கள்.

5.173 கரூர் மாவட்டம் கொக்கம்பட்டியில் 26.01.2013ல் செருப்பணிந்து செல்லும் போராட்டம் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் கே.வரதராஜன் தலைமையில் நடைபெற்றது. காஞ்சிபுரம் மாவட்டம் நத்தாநல்லூரில் 05.09.2013ல் இந்து அறநிலையத்துறைக்கு உரிய அடஞ்சியம்மன் கோவில் நுழைவுப்போராட்டம் டி.பி.ஐயுடன் இணைந்து நடத்தப்பட்டது. மதுரை மாவட்டம் சந்தையூர் முள்வேலி, சேலம் மாவட்டம் நரசோதிப்பட்டி சுவர், நீலகிரி மாவட்டம் பழனியப்பா எஸ்டேட் கருப்புக்கதவு, ஈரோடு மாவட்டம் கள்ளிவலசு சுவர்,தூத்துக்குடி மாவட்டம் வேலாயுதபுரம் முள்வேலி திண்டுக்கல் மாவட்டம் செட்டியபட்டி பாதை ஆகிய பிரச்சனைகளில் நேரடி களப்போராட்டங்கள் நடைபெற்று தலித் மக்களின் உரிமைகள் மீட்கப்பட்டன.

6. தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளுக்கு எதிராக

5.174 காஞ்சிபுரம் மாவட்டம் தொடூரில் அம்பேத்கர் கல்வெட்டு நிறுவியதற்காக கொலை செய்யப்பட்ட முனுசாமி உள்பட 16 கொலைகள், திருநெல்வேலி மாவட்டம் 60 வயது தலித் மூதாட்டி மாரியம்மன் பாலியல் வல்லுறவு உள்பட 6 பாலியல் வல்லுறவுகள், சிவகங்கை மாவட்டம் தலித் ஊராட்சி மன்றத் தலைவர் சேகர் உள்பட 41 தாக்குதல்கள் , தஞ்சாவூர் மாவட்டம் பொய்யுண்டார் கோட்டையில் எரிந்து கொண்டிருந்த தலித்தின் சடலத்தை தூக்கி வீசியது உள்பட 10 மயானப் பிரச்சனைகளிலும், சிவகங்கை மாவட்டம் பாப்பாகுளத்தில் 28 தலித்துகளின் வீடுகளை இடித்தது உள்பட 11 குடியிருப்புகள் தொடர்பான பிரச்சனைகளிலும், கரூர் மாவட்டம் கொக்கம்பட்டியில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மையத்தில் தனி உணவுத் தட்டு உள்பட 9 பள்ளிக்கூடம் தொடர்பான பிரச்சனைகளிலும், திருவாரூர் மாவட்டம் மாஞ்சேரி தலித் மக்களின் சாமி ஊர்வலம் உள்பட 23 வழிபாட்டு உரிமை தொடர்பான பிரச்சனைகளிலும், இதர வகை தீண்டாமை தொடர்பாக 16 பிரச்சனைகள், என மொத்தம் 132 தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளுக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. எஸ்சி.எஸ்.டி துணைத்திட்ட நிதியை பயன்படுத்திட அரசை வலியுறுத்தி போராட்டங்கள் நடத்தியுள்ளோம்.

7. குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்

5.175 எஸ்.சி/எஸ்.டி வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்திட கோரி பா.ம.க வழக்கறிஞர் பாலு வழக்கிற்கு எதிர் வழக்கு தோழர் பி.சம்பத் பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.176 அருந்ததியர் உள் இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவாக உச்சநீதி மன்றத்தில் தோழர்கள் ஜி.ராமகிருஷ்ணன், பி.சம்பத் பெயரில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. உள் ஒதுக்கீட்டை ஆதரித்து 20.11.12 ல் சென்னையில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற உண்ணாவிரதம் நடைபெற்றது.

5.177 கையால் மலம் அகற்றும் தடைச்சட்டம் 2013னை நடைமுறைப் படுத்திடக்கோரி 09.12.2013 அன்று சென்னையில் தோழர் டி.கே.ரெங்கராஜன் தலைமையில் 2000க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற மறியல் சென்னையில் நடைபெற்றது.

5.178 பாதாள சாக்கடை மற்றும் செப்டிக்டேங்க் மரணங்களுக்கு எதிராக தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. பாதாள சாக்கடையில் பணியில் இருந்தபோது மரணமடைந்த தருமபுரியை சேர்ந்த மூவருக்கு அதிகபட்சமாக தலா 4 லட்சம் வீதம் 12 லட்சம் நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் தகுதித் தேர்வில் இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு மதிப்பெண் தளர்வு கோரி தொடர்ந்து போராடி வந்தோம். 03.02.14 ல் 5 சதவிகிதம் மதிப்பெண் தளர்வு அறிவிக்கப்பட்டதில் எஸ்சி. 7349,எஸ்சி (a) 879, எஸ்.டி 155, பிசிஎம் 826, பிசி 21,572 எம்பிசி 12374 மாற்றுத் திறனாளிகள் 504 என மொத்தம் 43,652 பேர் பயனடைந்தனர். தற்போது மதிப்பெண் தளர்வை மதுரை உயர்நீதி மன்றம் தடைசெய்துள்ளது. தொடர்ந்து போராடி வருகிறோம். வங்கித் தேர்வுகளில் நடைபெற்ற இட ஒதுக்கீட்டு மீறல்களை அம்பலப்படுத்தி இட ஒதுக்கீட்டு பிரிவினர்களுக்கு பணி கிடைக்கச் செய்தோம். எனினும் வங்கித் தேர்வுகளில் தொடர்ந்து இட ஒதுக்கீடு மீறப்படுகிறது. பேரா.ஆனந்த் டெல்டும்டே, பி.எஸ்.கிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்ற தலித் உரிமைகளுக்கான ஆய்வரங்கம் சென்னையில் 2013 ஆகஸ்ட் 10,11 தேதிகளில் நடைபெற்றது. தலித் உள்ளாட்சி பிரதிநிதிகளின் சிறப்பு மாநாடு நெல்லையில் நடைபெற்றது. தலித் மக்கள் மீதான வன்கொடுமைகள் குறித்த பொது விசாரணை 2014 ஆகஸ்ட் 16 அன்று சென்னையில் நீதிபதி கே.சந்துரு பங்கேற்புடன் நடைபெற்றது. வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட தலித் மக்களைத் திரட்டி தலித் மக்கள் உரிமை மாநாடு 09.10.2014 அன்று சிவகங்கையில் தோழர் ஜி.ஆர் அவர்கள் பங்கேற்புடன் நடைபெற்றது. சிவகங்கை தலையீடுகள் பற்றி தோழர் கந்தசாமி எழுதிய புத்தகம் வெளியிடப்பட்டது.

5.179 தலைவராக பி.சம்பத், பொதுச்செயலாளராக கே.சாமுவேல்ராஜ், பொருளாளராக ஆர்.ஜெயராமன் செயல்பட்டு வருகின்றனர். தொடர் போராட்டங்கள், மற்றும் தலையீடுகள், நிகழ்வுகள் காரணமாக தலித் மற்றும் ஜனநாயக அமைப்புகளிடமும் ஒரு பகுதி தலித் மக்களிடம் அங்கீகாரம் பெற முடிந்துள்ளது. அறிவு ஜீவிகள் மற்றும் படைப்பாளர்கள் வட்டாரத்தில் ஓரளவு செல்வாக்கு பெற முடிந்துள்ளது. மாநில அளவிலும், மாவட்டங்களிலும் சுமார் 50க்கும் மேற்பட்ட தலித் அமைப்புகள் தங்களது நிகழ்ச்சிகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து நம்மை அழைக்கும் தன்மை உருவாகியுள்ளது. எனினும் தலித் அமைப்புகள் தங்களது செல்வாக்கில் சரிவு வந்துவிடக் கூடாது என்கிற எச்சரிக்கையுடன் செயல்படுவதையும் உணர உமுடிகிறது. கூட்டு மேடையை மேலும் பலப்படுத்திட வேண்டும்.இத்தகைய நமது தலையீடுகளின் விளைவாக நமது வர்க்க வெகுஜன அமைப்புகளின் சில ஆயிரம் உறுப்பினர் பதிவுகள் நடைபெற்றுள்ளன. 50க்கும் மேற்பட்ட கட்சிக் கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன. அமைப்பாக்கும் பணிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டியுள்ளது.

டாக்டர் அம்பேத்கர் கல்வி வேலைவாய்ப்பு பயிற்சி மைய செயல்பாடு

5.180 தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் ஒரு அங்கமாக 2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் துவக்கப்பட்ட டாக்டர் அம்பேத்கர் கல்வி வேலைவாய்ப்பு பயிற்சி மையம் கடந்த மூன்றாண்டுகளில் ப்ரந்து விரிந்துள்ளது. கிட்டத்தட்ட 23 மாவட்டங்களில் பல்வேறு

தேர்வுகளுக்கான வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. கோவை, மதுரை, சென்னை, கோவில்பட்டி, கும்பகோணம், பாண்டிச்சேரி, கடலூர், திருச்சி, தஞ்சாவூர், கூடலூர், திருச்செங்கோடு, திருநெல்வேலி ஆகிய இடங்களில் தொடர்ந்து வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. சில இடங்களில் ஆசிரியர் தகுதித் தேர்வு, சில இடங்களில் டி.என்.பி.எஸ்.சி. தேர்வுக்கான பயிற்சி என்ற மட்டும் நடத்தப்படுகின்றன.

5.181 கடந்த ஐந்தாண்டுகளில் நமது மையங்களில் பயின்ற 400க்கும் மேற்பட்டோர் அரசுப்பணிகளில் சேர்ந்திருக்கிறார்கள். கோவை மையத்திலிருந்து மட்டும் 80 பேருக்குப் பணி கிடைத்திருக்கிறது. ஆசிரியர்கள், வங்கி, இன்சூரன்ஸ், ரயில்வே, மாநில அரசுப்பணி, மத்திய அரசுப்பணி என்று கிட்டத்தட்ட அனைத்துத் துறைகளிலும் நமது மையங்களில் பயின்ற மாணவர்கள் பணியில் அமர்ந்திருக்கிறார்கள்.

5.182 இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் இட ஒதுக்கீடு முறையாக அமலாகாத நிலையில் மையத்தின் சார்பில், தீண்டாமை ஒழிப்பு முன்னணி மற்றும் இந்திய வங்கி ஊழியர் சங்கத்தோடு இணைந்து அப்பிரச்சனையைக் கையிலெடுத்தோம். நிறைவில், தாங்கள் செய்தது தவறுதான் என்று ஒப்புக்கொண்ட நிர்வாகம், 451 பேர் கொண்ட புதிய பட்டியலை வெளியிட்டது நமக்குக் கிடைத்த வெற்றியாகும்.

5.183 பல்வேறு வங்கிகளில் இந்த இடஒதுக்கீடு பிரச்சனை தற்போதும் தொடர்கிறது. அந்தப் பிரச்சனையில் ஒரு நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மையத்தின் பணி இன்னும் செழுமையோடு நடைபெற வேண்டிய அவசியம் இருக்கிறது.

மாநில உபகுழு செயல்பாடு

5.184 மாநில தலித் உபகுழு கூட்டம் கடந்த 3 ஆண்டுகளில் 9 முறை கூடியுள்ளது. பிரதான இயக்கங்கள், தலையீடுகள், கள ஆய்வுகள் குறித்து விவாதித்து தக்க முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. நாம் தலையிட்ட இடங்களில் வர்க்க, வெகுஜன ஸ்தாபன உறுப்பினர் பதிவு, கட்சி பதிவு குறித்து ஓரிரு முறை விவாதித்துள்ளோம். எனினும் இந்த ஸ்தபானப் பணி முறையாக நடைபெறாதது பெரும் குறைபாடாகும்.

கலை இலக்கிய அரங்கம்

5.185 கலை இலக்கிய அரங்கம் பிற அரங்கங்களினின்று தன்மையில் மாறுபட்ட, முற்றிலும் கருத்தியல் தளத்தில் இயங்கும், அரங்கம் இது. அமைப்பின் பலம் மட்டும் கலை இலக்கியத் துறையில் இயங்கும் பிற கலைஞர்கள், எழுத்தாளர்களை நம் பக்கம் ஈர்த்துவிடாது. பொது மக்களையும் ஈர்த்து விடாது. படைப்பு ரீதியாக நாம் முன் வைக்கிற பங்களிப்புகள் மூலமே பிறரை நம் அமைப்பை நோக்கி ஈர்க்க முடியும். நாகப்பட்டிணம் மாநில மாநாட்டுக்குப் பிறகு இவ்வரங்கில் நடைபெற்றுள்ள பணிகள்:

1. நூல்கள் – பிரசுரங்கள்

(அ) தமிழக பண்பாட்டு மலர்

5.186 விளம்பரங்கள் உள்ளிட்டு 400 பக்கங்களுக்கு மேல் கொண்ட ஒரு பண்பாட்டு மலரை தமுஎகச 2012 ஜுன் மாதம் வெளியிட்டது. தமிழகத்தின் முக்கியமான ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள் எழுதிய தமிழகப் பண்பாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டுத் தளத்தில் இன்று நாம் சந்திக்கும் சவால்கள், நமது பண்பாட்டின் முற்போக்குப் பாரம்பரியம் நமது பண்பாட்டில் பொதிந்துள்ள பிற்போக்கான அம்சங்கள் என எல்லாவற்றையும் பற்றி விரிவாகப் பேசும் கட்டுரைகளின் தொகுப்பாகவும் பண்பாடு என்றால் என்ன என்கிற கேள்விக்கு விடைகாண முயலும் கட்டுரைகளின் தொகுப்பாகவும் இது அமைந்துள்ளது. பல வண்ணத்தாளில் அழகியல் உணர்வோடு தயாரிக்கப்பட்டுள்ள இம்மலர் நமது பண்பாட்டு இயக்கத்துக்கான கருத்தியல் பங்களிப்பாக அமைந்துள்ளது.

5.187 கூடுதலாக இம்மலருக்கான விளம்பரங்கள் பெறுவதில் பெரிய முயற்சி எடுக்கப்பட்டது. 30 லட்சம் ரூபாய் என்கிற இலக்கில் 85 சதவீதம் முடிக்கப்பட்டது. 30 மாவட்டங்களில் இப்பணி நடைபெற்றுள்ளது. தமுஎகச என்ற அமைப்பின் வெகுஜன உறவு அதாவது சிறு வணிகர்கள், தொழில்முனைவோர், கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூகத்தின் பல அடுக்குகளில் உள்ளவர்களோடு நமது அமைப்பிற்கு உள்ள உறவின் வெளிப்பாடுதான் இவ்வளவு பெரிய பணியினை குறிப்பிட்ட காலத்தில், பெரிய ஸ்தாபன அழுத்தம் கொடுக்கப்படாமலே முடிக்க முடிந்துள்ளது.

5.188 இவ்வுறவு என்பது தமுஎகச அமைப்பு, கலை இரவு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் கடந்த பல ஆண்டுகள் தொடர்ந்த உழைப்பு மற்றும் முயற்சியினால் உருவாக்கப்பட்டது. நமது அமைப்பின் முற்போக்கான, தனித்துவமிக்க குணாம்சங்களை பாதுகாத்துக் கொண்டே இத்தகைய உறவுகளைப் பயன்படுத்த வேண்டும்.

(ஆ) எழுத்து ஏன்?எதை? எப்படி?

5.189 ஒசூரில் 2013 மே மாதம் 18 முதல் 20 வரை மூன்று நாள் படைப்பூக்க முகாம் நடத்தப்பட்டது. ஏன் எழுத வேண்டும்? எதை எழுத வேண்டும்? எப்படி எழுத வேண்டும்? என்ற தலைப்புகளில் தோழர்கள் ஆதவன் தீட்சண்யா, பிரளயன், தமிழ்ச்செல்வன் ஆகியோர் கட்டுரை வாசித்தனர். தோழர் அருணன் தலைமை தாங்கினார். சு.வெங்கடேசன், பெருமாள் முருகன், சுகிர்தாராணி மூவரும் தங்களின் படைப்பாக்க அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர். அழகியபெரியவன், லிவிங்ஸ்மைல் வித்யா இருவரும் எழுத்து எழுத்தாளன் சமூகம் என்ற தலைப்பில் தங்களின் கருத்துக்களை முன் வைத்தனர்.

5.190 இம்முகாமில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் முகாமில் வந்த கேள்விகளையும் உள்ளடக்கி செழுமைப்படுத்தப்பட்டு எழுத்து-ஏன்?எதை?எப்படி? என்கிற சிறுநூலாகக் கொண்டுவரப்பட்டுள்ளது.இளம் படைப்பாளிக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கும் வண்ணம் இந்நூல் அமைந்துள்ளது.நமது அமைப்புக்கு அப்பாற்பட்ட எழுத்தாளர்கள் மத்தியிலும் எழுத ஆசைப்படுபவர்கள் மத்தியிலும் பெரிய வரவேற்பை இந்நூல் பெற்றுள்ளது.

இ) சாதி மறுப்பில் காதல்

5.191 தர்மபுரி மாவட்டத்தில் திவ்யா-இளவரசன் காதலுக்கு எதிராக நத்தம் காலனி, அண்ணாநகர், கொண்டாம்பட்டி ஆகிய மூன்று தலித் கிராம மக்களின் வாழ்வு முற்றிலுமாகச் சிதைக்கப்பட்டதும் கடலூர் மாவட்டத்தில் பாச்சிராப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த எட்டு வீடுகள் இதே பாணியில் தகர்க்கப்பட்டதும் தமிழகமெங்கும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது.

5.192 இதற்கு எதிராகவும் சாதி மறுப்புக்காதலுக்கு ஆதரவாகவும் 2013 ஜனவரி 6ஆம் நாள் கடலூரில் சாதி மறுப்பில் காதல் என்னும் தலைப்பில் சிறப்பு மாநாடு நடத்தப்பட்டது. அம்மாநாட்டில் சாதி மறுப்பில் காதல் என்னும் தலைப்பிலான சிறு நூல் வெளியிடப்பட்டது. 10000 பிரதிகள் விற்பனை செய்யப்பட்டது. சாதி மறுப்புக் காதலில் தமிழகத்தின் வரலாறு பற்றியும் இன்று முன்வந்துள்ள சவாலை எதிர்கொள்வது பற்றியுமான இலக்கிய ரீதியான நூலாக அது அமைந்தது.

(ஈ) தமிழகப் பண்பாட்டுச் சூழல்

5.193 இன்றைய தமிழகப்பண்பாட்டுச் சூழல் குறித்து அறிக்கைகள் வைத்து விவாதித்த ஒரு சிறப்பு மாநாட்டினை தமுஎகச ஆகஸ்ட் 2013இல் தூத்துக்குடியில் நடத்தியது. அந்த ஆறு அறிக்கைகளும் செழுமைப்படுத்தப்பட்டு நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

5.194 1. தாய்மொழி வழிக்கல்வி, 2. சேது சமுத்திரமும் இந்துத்வா அரசியலும், 3. பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள், 4. ஊடகங்களின் அரசியல், 5. தொடரும் தீண்டாமைக் கொடுமைகளும் சாதிய அரசியலும் 6. மாற்றுப் பண்பாட்டு முன்வைப்புகள் ஆகிய ஆறு

பொருள் குறித்த ஆழமான விரிவான ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய இந்நூல் கட்சி அணிகள் அனைவராலும் வாசித்து உள்வாங்கப்பட வேண்டிய ஒன்று. பாரதி புத்தகாலயம் இதை வெளியிட்டுள்ளது.

5.195 மேற்கண்ட நான்கு புத்தகங்களும் மிக முக்கியமான பங்களிப்புகளாகும். கட்சிக்கு அப்பாற்பட்ட எழுத்தாளர்கள், வாசகர்களிடம் பரவலான கவனிப்பை இவை பெற்றுள்ளன.

2. இலக்கிய உலகில்

5.196 கடந்த மூன்று ஆண்டுகளில் வெளி இலக்கிய அமைப்புகளும் தமிழக அரசு மற்றும் மத்திய அரசுகளும் வழங்கும் பல இலக்கியப் பரிசுகள், விருதுகளை தமுஎகச தோழர்கள் பெற்றுள்ளனர். குறிப்பாக மத்திய அரசின் இலக்கியத்துக்கான உயர் விருதான சாகித்ய அகாதமி விருதினை நம்முடைய தோழர்கள் சு.வெங்கடேசன் (2011) அவருடைய காவல்கோட்டம் நாவலுக்காகவும் தோழர் டி.செல்வராஜ் (2013) அவருடைய தோல் நாவலுக்காகவும் பெற்றுள்ளனர். சாகித்ய அகாதமியின் குழந்தைகள் நூல்களுக்காக பால புரஷ்கார் விருதினை புத்தகம் பேசுது ஆசிரியர் தோழர் இரா.நடராசன் பெற்றுள்ளார்.

5.197 நம்முடைய மூன்று தோழர்கள் இத்தகைய நாட்டின் உயர்ந்த விருதுகளை அடுத்தடுத்துப் பெற்றிருப்பது வேறு மாநிலங்களில் நடந்திராத முக்கியமான, பெருமைப்படத்தக்க நிகழ்வாகும். ஏற்கனவே மேலாண்மை பொன்னுச்சாமி சாகித்ய அகாதமி விருது பெற்றுள்ளார்.

5.198 தோழர் அருணன்,தோழர் நந்தலாலா திராவிடர் கழகத்தின் பெரியார் விருதுகளையும் தோழர் செந்தில்நாதன் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அறக்கட்டளை வழங்கிய பட்டுக்கோட்டையார் விருதினையும் பெற்றுள்ளனர். புதிய தலைமுறை தொலைக்காட்சி வழங்கும் தமிழன் விருதினை தோழர் சு.வெங்கடேசன் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. சிறந்த நாவலுக்கான ஆனந்த விகடன் விருதினை ம.காமுத்துரை, சு.வெங்கடேசன், குழந்தை இலக்கியத்துக்காக விழியன் ஆகிய நம் கட்சித் தோழர்கள் பெற்றனர்.

5.199 நாடகவியலாளர் பிரளயன் எழுதிய வஞ்சியர் காண்டம் என்னும் முழு நீள மேடை நாடகம் தமிழகத்தின் 22 நகரங்களில் மேடையேற்றப்பட்டது.தமுஎகச அல்லாத பிற அமைப்புகள் இந்நாடகத்தை பல இடங்களில் மேடையேற்றின.

3. திரைப்பட இயக்கம்

5.200 தமுஎகசவின் திரை இயக்கம் நடத்துகிற சர்வதேச திரைப்பட விழாக்களும் தேசிய குறும்பட ஆவணப்பட விழாக்களும் இன்று பரவலான கவனம் பெற்று வருகின்றன. மத்திய அரசின் பிலிம் டிவிசனுடன் தமுஎகச இணைந்து புதுவைப் பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் நட்த்துகிற குறும்பட ஆவணப்பட விழாக்க்கள் 500 பேருக்குக் குறையாமல் இளைஞர்கள், மாணவர்கள், நம் தோழர்கள் பங்கேற்கும் விழாவாக பரிணாமம் பெற்றுள்ளது. எழுத்தாளர் கலைஞர்களின் சர்வதேசத் திரைப்பட விழா சென்னை பிரசாத் பிலிம் அகாடமியுடன் இணைந்து துவக்கத்தில் சிறிய அளவில் நடத்தப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக பட்டுக்கோட்டை, கம்பம் போன்ற சிறு நகரங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு திரையரங்குகளை வாடகைக்கு எடுத்து ஆறு நாள் விழாவாக நடத்தப்படுகிறது. திரைப்படத் துறை சார்ந்த ஆளுமைகளும் பங்கேற்கும் இவ்விழாவில் பொதுமக்களும் பங்கேற்கத் துவங்கியுள்ளனர். ஏராளமான புதிய தொடர்புகளையும் வாய்ப்புகளையும் இவ்விழாக்கள் நமக்குத் தந்துள்ளன.

5.201 ஆண்டுதோறும் தமுஎகச வழங்கும் சிறந்த திரைப்படங்களுக்கான விருது வழங்கும் விழாக்களும் குறும்பட ஆவணப்படங்களுக்கான விழாக்களும் 2011,2012,2013,2014 ஆகிய ஆண்டுகளிலும் இடைவிடாது நடத்தப்பட்டது. திரைப்படத்துறையினரோடு நெருக்கமான

உறவைப் பேணவும் விமர்சனப்பூர்வமாக அவர்களோடு விவாதிக்கவும் இவ்விழாக்கள் உதவுகின்றன.

5.202 இந்திய சினிமாவின் நூற்றாண்டு விழாவை தமுஎகச தெருவில் திரைப்படங்களைத் திரையிடும் இயக்கமாக 15 மாவட்டங்களில் நடத்தியது. ஒட்டு மொத்தமாக சுமார் 80 ஆயிரம்பேர் இவ்விழாக்ளில் பங்கேற்றனர். பல கல்லூரிகளிலும் படங்கள் திரையிடப்பட்டன. பத்து மாவட்டங்களில் தமுஎகச மாவட்டக்குழுக்கள் சொந்தமாக டிவிடி ப்ரொஜெக்டர்கள் வைத்துள்ளன. மாநில மையத்திலும் இரண்டு ப்ரொஜெக்டர்கள் உள்ளன. வடசென்னை, தஞ்சாவூர் மாவட்டங்களில் விஸ்காம் மாணவர்கள் மற்றும் இளம் ஆர்வலர்களுக்குத் திரைப்படம் குறித்த பயிற்சி முகாம்களும் நடத்தப்படுகின்றன.

4.பயிலரங்குகள்-சந்திப்புகள்

(அ) மார்க்சீயத் தத்துவ பயிற்சி முகாம்

5.203 மார்க்சீயத் தத்துவப் பயிற்சி முகாம் திருப்பூரில் 2013 செப் 30, அக் 1, 2, ஆகிய தேதிகளில் நடைபெற்றது. 1. மார்க்சீயம் படைப்புச் சமூகத்தின் முன்வைக்கும் சவால்கள், 2. மார்க்சீய தத்துவம், 3. மாறும் வரையறைகளும் மார்க்சீயமும், 4. வர்க்கமும் அடையாளமும், 5. தேசிய இனப்பிரச்சனை, 6. வரலாறு பற்றிய மார்க்சீயக் கண்ணோட்டம். ஆகிய ஆறு தலைப்புகளில் வகுப்புகள் நடைபெற்றது

(ஆ) பெண் படைப்புகள் குறித்த கருத்தரங்கம்

5.204 பெண் படைப்புகள் குறித்த மாநிலக் கருத்தரங்கம் 2013 அக்டோபர் 20ஆம் தேதி வடசென்னையில் மூன்று தலைப்புகளில் நடைபெற்றது.1. பெண் படைப்புகளில் பெண், 2. ஊடகங்களில் பெண், 3. நாட்டுப்புற இலக்கியங்களில் பெண்,

(இ) கலை இலக்கிய இரவு, பரிசீலனைக் கூட்டம்

5.205 கலை இலக்கிய இரவுகளைப் பற்றியும் அதன் உள்ளடக்கத்தை மேம்படுத்துவது பற்றி விவாதிக்கவும் விரிவானதொரு கூட்டம் 2013 பிப் 24 ஆம் தேதி மதுரையில் நடத்தப்பட்டது. 25 மாவட்டங்களில் இருந்து 102 தோழர்கள் பங்கெடுத்தனர். கலை இலக்கிய இரவுகளின் பலம், மற்றும் பலவீனம் பற்றி மாநிலக்குழுவில் விவாதித்ததன் அடிப்படையில் அறிக்கை முன்வைக்கப்பட்டது. தோழர் வேலாயுதம் முன்வைத்த இவ்வறிக்கையின் மீது தோழர்கள் பயனுள்ள விவாதத்தினை நடத்தினர். கலை இலக்கிய இரவுகளை அடுத்தக் கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தை இக்கூட்டம் மிகவும் வலியுறுத்தியது. புதிய பாடல்கள் மற்றும் நாடகங் களின் தேவையை நாம் கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்கான ஏற்பாட்டினை செய்வது என்பது அடிப்படை தேவையாக உள்ளது. உள்ளடக்கரீதியில் நாம் நம்மை தற்காலப்படுத்திக் கொள்வதென்பதன் அவசியத்தை இச்சந்திப்பு மிகவும் வலியுறுத்தியது.

(ஈ) திருநங்கையர் புரிந்துணர்வு முகாம்

5.206 தென்சென்னை மாவட்டம் துவக்கி வைத்த தமுஎகச-திருநங்கையர் உறவுப்பாலம் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்கிற உணர்வுடன் திருநங்கையர் புரிந்துணர்வு முகாம் ,2013 மே 25, 26 தேதிகளில் விழுப்புரத்தில் நடைபெற்றது. திருநங்கையரின் தோற்றம், அவர்கள் குறித்த சமூக உளவியல், அவர்களின் வரலாறு, எதிர்கொள்ளும் பிரச்சனைகள் - தேவைகள் - எதிர்ப்பார்ப்புகள், தேவைப்படும் சட்டங்கள் முதலியவற்றை புரிந்து கொள்ளும் வகையில் அமர்வுகள் திட்டமிடப்பட்டிருந்தன. கருத்தாளர்கள் பிரியாபாபு, சுதா, ஆல்கா ஆகியோர் கூடுதல் தயாரிப்புகளுடன் கணினியைப் பயன்படுத்தி பவர்பாயின்ட் முறையில் எளிமையாகப் புரிய வைத்தனர். மருத்துவர் மணிகண்டனும் தோழர் பாரதிகண்ணம்மாவும் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். அவர்களில் எழுதும் திறன் படைத்தவர்களுக்காக ஏலகிரியிலும்

சென்னையிலும் எழுத்துப்பயிற்சிப் பட்டறை நடத்திட தமுஎகச இணைந்து செயல்பட்டுள்ளது. புதுச்சேரியில் திருநங்கையர் பற்றிய குறும்பட ஆவணப்பட விழாவை தமுஎகச முன்முயற்சி எடுத்து 2014 ஜுன் 21,22 தேதிகளில் நடத்தியது.ஆண்டுதோறும் ஏப்ரல் 15 திருநங்கையர் தினத்தை தென்சென்னை தமுஎகச கலைவிழாவாக நடத்தி வருகிறது.

5.207 பொது சமூகத்தால் முற்றிலுமாக்க் கைவிடப்பட்ட திருநங்கையர் சமூகத்துடன் தொடர்ச்சியாக தமுஎகச அரங்கம் கவனம் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

(உ) பிரஞ்சு இன்ஸ்டிடூட் ஆஃப் இந்தியவுடன் இணைந்த பயிலரங்குகள்

5.208 ஆண்டுதோறும் புதுச்சேரியில் இயங்கும் பிரஞ்சு இன்ஸ்டிட்யூட் ஆஃப் இந்தியாவின் இந்தியவியல் துறையுடன் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் ஒரு தலைப்பில் நான்கு நாள் பயிலரங்கை தமுஎகச நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. 2013இல் உழைப்பு,சமூக உறவுகள்-வரலாறு என்னும் தலைப்பில் மூன்றுநாள் முகாம் ஆகஸ்ட் 21,22,23 தேதிகளில் நடத்தப்பட்டது.காலனிய காலத்தில் தமிழக உழைப்பாளிகள் பற்றிய படக்காட்சியும் பயிலரங்கில் வைக்கப்பட்ட்து.இக்கண்காட்சியை மாவட்டங்களுக்கு எடுத்துச்செல்ல பிரஞ்சு இன்ஸ்டிட்யூட் அனுமதிக்கும் என்பது கூடுதல் தகவல்.

(ஊ) திறந்த வெளி அரசியல் அரங்கிற்கான நாடக முகாம்

5.209 2014 பிப் 12 முதல் 23 வரை 12 நாட்கள் கன்னியாகுமர் மாவட்டம் முட்டத்தில் நாடகம் எழுதுபவர்கள் மற்றும் இயக்குபவர்களுக்கான மாநில அளவிலான பயிலரங்கு நடைபெற்றது. பிரளயன் முன்னின்று நடத்திய இம்முகாமில் புதுடெல்லி தேசிய நாடகப்பள்ளி,தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம்,கர்நாடக மாநிலத்தின் சமுதாயா நாடக இயக்கம் சார்ந்த பல நாடக ஆளுமைகளும் மூத்த நாடகவியலாளர் முனைவர் செ.ராமானுஜம் போன்றோரும் முழுமையாக இருந்து நடத்திக் கொடுத்தனர்.

(எ) பண்பாட்டுக் கருத்தரங்குகள்

5.210 தூத்துக்குடியில் நடைபெற்ற தமிழகப் பண்பாட்டுச் சூழல் மாநாடு மற்றும் நூல் வெளியீட்டைத் தொடர்ந்து தாய் மொழி வழிக் கல்விக்கான சிறப்புக்கருத்தரங்கு வட சென்னையிலும்(அக்-24) சேது சமுத்திரத்திட்டம் குறித்த கருத்தரங்கு மதுரையிலும்(அக்-19) 2013 அக்டோபரில் அடுத்தடுத்த வாரங்களில் நட்த்தப்பட்டது.

5.211 அதைத்தொடர்ந்து எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் பண்பாட்டு அறிக்கையின் ஒரு தலைப்பில் சிறப்புக்கருத்தரங்குகள் நட்த்தப்பட்டன.

5. இயக்கங்கள்

5.212 மதுரை ஆதின கர்த்தாவாக நித்தியானந்தா நியமிக்கப்பட்டதை எதிர்த்து மதுரை மாநகர் மாவட்டக்குழுவின் சார்பில் 2012 ஜுன் 2ம் தேதி சிறப்பு கருத்தரங்கு நடத்தப்பட்டது. கன்னியாகுமரியில் தேசியநாடகப்பள்ளியோடு இணைந்து பாதல் சர்க்கார் குறித்த தேசியக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. வழக்கு எண் 18/9 திரைப்படத்திற்கு வடசென்னை, தென்சென்னை, கோவை, திண்டுக்கல் போன்ற இடங்களில் பாராட்டுக் கூட்டம் நடத்தப்பட்டது.

5.213 குமரியில் ஐயா வைகுண்ட சுவாமிகள் வாழ்க்கை வரலாற்றை பாடநூலில் சேர்க்கவேண்டும் என வழியுறுத்தி சிறப்பு மாநாடு நடத்தப்பட்டது. இது ஒரு மிக முக்கியமான பண்பாட்டு நிகழ்வாகும்.

5.214 தஞ்சை மாவட்டக்குழுவின் சார்பில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை பாதுகாக்கவும். பலப்படுத்தவும், தொடர்ந்து இயக்கங்கள் நடத்தப்பட்டுள்ளன. சிறுபிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

5.215 எழுத்தாளர் சதத் ஹசன் மாண்டோவின் நூற்றாண்டு விழா தென் சென்னையில் நட்த்தப்பட்ட்து. தோழர் சீத்தாராம் யெச்சூரி பங்கேற்றார்.

5.216 மத்தியில் பாஜக தலைமையிலான ஆட்சி பொறுப்பேற்ற பிறகு சமஸ்கிருதத்திணிப்பு,இந்திக்கு முக்கியத்துவம், தமிழ் உள்ளிட்ட இதர மொழிகள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுவது தொடர்ந்தபோது அதற்கு எதிராகவும் தமிழகத்தில் அரசுப்பள்ளிகளே ஆங்கில வழிக்கு மாற்றப்படுவதை எதிர்த்தும் 2014 ஆகஸ்ட் 24 ஆம் தேதி மதுரையில் 1000 பேர் பங்கேற்ற பெருந்திரள் உண்ணாநிலைப்போராட்டம் நடத்தப்பட்ட்து.

5.217 மத்திய அரசு சிபிஎஸ்சி பள்ளிகளில் சமஸ்கிருத வாரம் நட்த்த உத்தரவிட்ட்து போல் தமிழகத்தில் உள்ள அனைத்து சிபிஎஸ்சி பள்ளிகளிலும் செமொழித்தமிழ் வாரம் நட்த்த வலியுறுத்தி பெரியார் பிறந்த செப் 17 அன்று சென்னையில் முழக்கப்போராட்டம் நட்த்தப்பட்ட்து.தி.க தலைவர் கி.வீரமணி, விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் தொல்.திருமாவளவன்,நமது மாநிலச்செயலர் தோழர் ஜி.ராமகிருஷ்ணன் மற்றும் பல்வேறு கலை இலக்கிய அமைப்பினர் பங்கேற்றனர்.

5.218 எழுத்தாளர் பெருமாள் முருகனின் மாதொருபாகன் நாவலை முன் வைத்து திருச்செங்கோட்டில் சாதிய மதவாத சக்திகள் பிரச்சனையை உருவாக்கி,அவரை நிர்ப்பந்தம் செய்து எழுத்து வாழ்க்கையிலிருந்தே அவரைத் துரத்திய சம்பவம் நாட்டையே உலுக்கியுள்ளது.அப்பிரச்னையில் முதல் எதிர்ப்புக்குரல் எழுப்பிய இயக்கம் தமுஎகச.மாநிலம் முழுக்க்க் கண்டன இயக்க்ங்களை நட்த்தியதுடன் சென்னை உய்ரநீதி மன்றத்தில் வழக்கும் தொடுத்துள்ளது.இது தமிழகத்திலும் இந்திய அளவிலும் தமுஎகசவுக்கு ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது.

5.219 தமுஎகசவின் மாநில மாநாடு முற்போக்குத் தமிழ் மரபை முன்னெடுப்போம்.ம நுதர்மத் தந்திரத்தை முறியடிப்போம் 'என்கிற மைய முழக்கத்தை முன் வைத்தும் உலகமய பொருளாதாரம் பண்பாட்டுத்தளத்தில் ஏற்படுத்திவரும் தாக்கங்களை விவாதிக்கவும் 2015 மார்ச் 19 முதல் 22 வரை திருப்பூரில் நடைபெற உள்ளது.

5.220 மத்தியில் வலதுசாரிசக்திகள் ஆட்சிக்கு வந்த பிறகு தமிழகத்தில் வெகு வேகமாக அவர்களின் நிகழ்ச்சி நிரலைக் கொண்டு செலுத்தும் பின்னணியில் தமிழகத்தில் உள்ள எழுத்தாளர்கள், கலைஞர்கள், அறிவுஜீவிகளின் பரந்த மேடை ஒன்றை உருவாக்கி அதன் மூலம் அறிவுத்தளத்தில் ஓர் ஒன்றுபட்ட எதிர்ப்பையும் பண்பாட்டு நடவடிக்கைகளையும் முன்னெடுக்க தமுஎகச முன் முயற்சி எடுத்து வருகிறது.

5.221 பொதுச்செயலாளர், 2 துணைப்பொதுச்செயலாளர்கள் தமுஎகசவின் முழு நேர ஊழியர்களாகப் பணியாற்றுகிறார்கள்.ஒருவருக்கு மட்டும் பாதி ஊதியமும் இருவருக்கு முழுமையான ஊதியமும் தமுஎகச அரங்கத்தின் மூலமே வழங்கப்படுகிறது. 18000 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். 17 பேர் கொண்ட மாநில பிராக்ஷன் 6 முறை கூடியுள்ளது.

வழக்குரைஞர் அரங்கம்

5.222 நமது தலைமையிலான அகில இந்திய வழக்குரைஞர் சங்கம் வலுவாக உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு பிரதான இடம் வகிக்கிறது. இக்காலத்தில் இந்த அரங்கில் நடைபெற்ற முக்கியமான பணிகள் வருமாறு.

5.223 சென்னையில் மாநில அளவில் தென்னிந்தியாவில் உச்சநீதிமன்ற கிளை அமைக்கக் கோரி 2.10.2013 அன்று கருத்தரங்கம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி ஏ.ஆர். லட்சுமணன், தோழர். அ. சவுந்தரராசன் மற்றும் அகில இந்திய வழக்குரைஞர்கள்

சங்க தலைவர்கள் பங்கேற்றனர். தமிழகத்தின் 18 மாவட்டங்களிலிருந்து சுமார் 400க்கும் மேற்பட்ட வழக்குரைஞர்கள் பங்கேற்றனர். சென்னையிலிருந்து மட்டும் சுமார் 130 பேர் கலந்து கொண்டனர்.

5.224 உயர்நீதிமன்றத்தில் தமிழையும் வழக்கு மொழியாக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி மாநிலந்தழுவிய ஆர்ப்பாட்டங்கள் நடத்திய பின்னர், கடந்த 28.11.2014 அன்று சென்னையில் மாநில அளவிலான பேரணியை நடத்தி ஆளுனரிடம் மனு அளிக்கப்பட்டது. இக்கோரிக்கையை வலியுறுத்தி சென்னையில் ஒரு சிறப்பு மாநாடு நடைபெறவுள்ளது.

5.225 இளம் வழக்குரைஞர்கள் மற்றும் பெண் வழக்குரைஞர்களுக்கான கோரிக்கைகளுக்காக மாநில அளவில் பல போராட்டங்களை நடத்தியுள்ளோம். 2012, 2013 ஆண்டுகளில் சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை முறையே 6971, 2888 ஆகும். 2013ம் ஆண்டு உறுப்பினர் பதிவில் போதுமான முனைப்பு காட்டாததது குறைபாடாகும். 2014ஆம் ஆண்டில் 4000க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இன்னும் உறுப்பினர் பதிவு இறுதி செய்யப்படவில்லை.

5.226 கட்சி வழக்குரைஞர்களுக்கான மாநில வகுப்பு 2012 ஆகஸ்ட் 4,5 தேதிகளில் புதுச்சேரியில் நடைபெற்றது. மொத்தம் 28 மாவட்டங்களிலிருந்து 123 பேர் (10 பெண்கள் உட்பட) பங்கேற்றனர். நாமக்கல், ஈரோடு, நீலகிரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து கட்சி உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை. தோழர் பி. சம்பத் “சில தற்கால பிரச்சனைகளும், மார்க்சிய அணுகுமுறையும்” என்ற தலைப்பிலும், தோழர் என். குணசேகரன் “இடதுசாரிகளும், அதிதீவிரவாத அமைப்புகளும்” என்ற தலைப்பிலும், தோழர் எம்.என்.எஸ். வெங்கட்ராமன் “கட்சி ஸ்தாபனம்” என்ற தலைப்பிலும் வகுப்பெடுத்தனர்.

5.227 அகில இந்திய வழக்குரைஞர்கள் சங்கத்தின் 10வது மாநில மாநாடு 9-10 நவம்பர் 2013 தேதிகளில் திண்டுக்கல்லில் நடைபெற்றது. துவக்கவுரை வழங்கிய நீதிபதி கே.என். பாஷா நமது சங்கத்தைப் பற்றியும் அதன் நோக்கங்கள் பற்றியும் மிகப்பெருமையாக பேசினார். மாநாட்டில் 80 பேர் கொண்ட மாநிலக்குழுவும், 20 பேர் கொண்ட நிர்வாகக்குழுவும் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். மாநிலத் தலைவராக என்.ஜி.ஆர். பிரசாத், செயல் தலைவராக ஏ. கோதண்டம், பொதுச் செயலாளராக ந. முத்து அமுதநாதன், பொருளாளராக ஏ. சிவக்குமார் தேர்வு செய்யப்பட்டனர்.

5.228 வழக்குரைஞர் அரங்கத்தில் தமிழகம் முழுவதும் மொத்த கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை சுமார் 300. வழக்குரைஞர் அரங்க மாநில உபகுழு கடந்த 3 ஆண்டுகளில் 9 முறை கூடியுள்ளது. சங்கத்திற்கு உறுப்பினர்களை சேர்த்து ஸ்தாபன ரீதியாக செயல்பட வைப்பதிலும், பொதுநல வழக்குகள் தாக்கல் செய்வதிலும் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது.

மாற்றுத்திறனாளி அரங்கம்

5.229 கடந்த நான்கரை ஆண்டுகளில் பெரம்பலூரை தவிர அனைத்து மாவட்டங்களிலும் அமைப்பை ஏற்படுத்தி செயல்பட முடிந்துள்ளது. கட்சியின் 20-வது மாநில மாநாட்டிற்கு பிறகு மாநில பிராக்ஷன் அமைக்கப்பட்டு 11 கூட்டங்கள் 3 மாதங்களுக்கு ஒரு முறை தொடர்ந்து கூட்டப்பட்டு கட்சி மாநில மையத்தின் சார்பில் வழிகாட்டப்படுகிறது. மாநில பிராக்ஷனில் 19 பேர் உள்ளனர். வருகை சராசரியாக 70 முதல் 80 சதவீதம் வரை உள்ளது.

5.230 22 மாவட்டங்களில் இந்த அரங்கத்திற்கான மாவட்ட அளவிலான பிராக்ஷன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரங்கத்தை மாவட்டங்களில் கவனிப்பதற்கென செயற்குழு

அல்லது மாவட்டக்குழு மட்டத்தில் உள்ள தோழர்கள் பொறுப்பாளராக வழிகாட்டுகிறார்கள். வடசென்னை, தருமபுரி, அரியலூர், நாமக்கல், கரூர், நீலகிரி, திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், மாவட்டங்களில் பிராக்ஷன் அமைப்பு இன்னும் உருவாக்கப்படவில்லை. பல மாவட்டங்களில் இடைக்கமிட்டி அளவில் கட்சி பொறுப்பாளர்கள் தீர்மானிக்கப்பட்டு சங்கத்தின் ஊராட்சி, கிராம அளவில் கட்சி வழிகாட்டுதலுடன் செயல்பட்டு வருகிறது.

5.231 கட்சியின் மாநில மையம் சார்பில் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் இந்த அரங்கத்திற்கு பொறுப்பான கட்சி மாவட்ட செயற்குழு/மாவட்டக்குழு தோழர்களை கொண்ட கூட்டம் 2012 டிச.11 அன்று மதுரையில் நடத்தப்பட்டது. இதில் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் பிருந்தா கராத், மத்தியக்குழு உறுப்பினர் உ.வாசுகி கலந்து கொண்டனர்.

5.232 மேற்கண்ட கூட்ட முடிவின் அடிப்படையில் மாவட்டங்களிலும் கட்சியின் மாவட்டக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டங்கள் தென் சென்னை, சேலம், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி, திண்டுக்கல், மதுரை புறநகர், விருதுநகர், சிவகங்கை, நாகை, திருவாரூர், திருவள்ளூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் நடத்தப்பட்டன.

6. அரங்கத்தில் கட்சி கட்டும் பணி

5.233 மாற்றுத்திறனாளி தினத்தில் வருடந்தோறும் கட்சி மாநில மையத்தின் சார்பில் பல்வேறு தகவல்களுடன் வாழ்த்து செய்தி வெளியிடப்படுகிறது. மாற்றுத்திறனாளி பிரச்சனைகளில் போராட்டம் நடக்கிறபோது கோரிக்கைகளுக்கு ஆதரவாக கட்சியின் சார்பில் அறிக்கை வெளியிடுவது போன்ற நடவடிக்கைகள் பொதுவான மாற்றுத்திறனாளிகள் மத்தியில் கட்சியின் மீது நன் மதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

5.234 இந்த அரங்கத்தின் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் கட்சிக்கு PM, CM என 49 பேர் வந்துள்ளதாக மாவட்டங்களில் இருந்து தகவல்கள் பெறப்பட்டுள்ளது. சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த ஒருவர் இடைக்கமிட்டி உறுப்பினராகவும் ஆகியுள்ளார்.

5.235 2014ல் 388 பேர் துணைக்குழு உறுப்பினர்களாக மாநிலம் முழுவதும் சேர்க்கப்பட்டுள்ளது.

5.236 ஆண்டு மற்றும் மாத சந்தா அடிப்படையில் தீக்கதிர் சுமார் 30 வரை இந்த அரங்கத்தின் மூலம் கொண்டு செல்லப்படுகிறது.

5.237: 7. ஸ்தாபனம் பற்றி

1 93 பேர் கொண்ட மாநிலக்குழுவும் 11 பேர் கொண்ட நிர்வாகக்குழுவும் செயல்படுகிறது.

2. சராசரியாக 3 மாதங்களுக்கு ஒரு முறை மாநிலக்குழு கூடுகிறது. இதுவரை 11 முறை கடந்த மாநாட்டிற்கு பிறகு மாநிலக்குழு கூடியுள்ளது. பங்கேற்பு 50 சதவீதம் சராசரியாக உள்ளது.

3. 29 மாவட்டங்களில் மாவட்ட கமிட்டிகள் தேர்வு செய்யப்பட்டு செயல்படுகின்றன. செயல்பாடுகளில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன.

4. மாநிலம் முழுவதும் ஒன்றிய மற்றும் தாலுக்கா கமிட்டிகள் 150க்கும் மேல் அமைக்கப்பட்டிருந்தாலும் செயல்பாடுகளில் பலகீனம் உள்ளது.

5. மாநிலம் முழுவதும் சுமார் 600 கிளைகள் வரை அமைக்கப்பட்டுள்ளன. எனினும், பல மாவட்ட பிராக்ஷன் செயல்பாடுகளில் பெரிய அளவில் முன்னேற்றம் தேவைப்படுகிறது.

5.238: 6. கடந்த 3 ஆண்டுகளில் சங்க உறுப்பினர் விபரம்:

2012 = 8827, 2013 = 20,485, 2014 = 20,600

ஊனமுற்றோர் உரிமைக்குரல் காலாண்டிதழ்

5.239 2012 அக்டோபர் முதல் தமிழக ஆளுநரால் வெளியிடப்பட்டு தொடர்ந்து கொண்டு வருகிறோம்.

இருப்பினும், நிதி, விளம்பரம், சந்தா சேர்ப்பு ஆகியவற்றில் உள்ள சிரமங்கள் காரணமாக தொடர்ந்து கொண்டு வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதுவரை 4 இதழ்கள் 5000 பிரதிகள் வரை வந்துள்ளது.

மூன்றாண்டுகளில் தலையீடுகள் / நடைபெற்ற இயக்கங்கள்

9. அரசியல் இயக்கங்கள்:

5.240 2012 செப்-20 பொது வேலைநிறுத்தத்தில் பங்கேற்க, ஆதரவளிக்க அறிக்கை விட்டு பரவலாக மறியலில் ஈடுபட்டனர்.

5.241 2013 பிப்-1 முதல் 10 வரை உணவுப் பாதுகாப்பு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள கோரி கையெழுத்து இயக்கம் நடத்தி சுமார் 8,000 கையெழுத்துக்கள் வாங்கி தரப்பட்டன.

5.242 2014 ஜூலை 8ல் அகில இந்திய பொது செயலாளர் காந்தி கங்குலி மீது கொலைப்பழி சுமத்தி கைது செய்ய முயன்ற மேற்குவங்க அரசின் முயற்சியை தடுக்க வலியுறுத்தி ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோருக்கு 1500 இமெயில், தொலைநகல்கள் அனுப்பப்பட்டன.

10. உதவித்தொகைக்கான இயக்கம்

5.243 2012 அக்.2 காந்தி ஜெயந்தி அன்று உதவித்தொகை உயர்த்தக் கோரி பிரதமருக்கு 3,500 தபால் கார்டுகள் அனுப்பும் இயக்கம் பரவலாக நடத்தினோம்.

5.244 2012 ஜூன்-26-ல் உதவித் தொகை உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக வட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களை முற்றுகையிட்டு மாநிலம் முழுவதும் 1362 பெண்கள் குழந்தைகள் உட்பட 3841 பேர் கைதாகி விடுதலையாகினர்.

5.245 2012 டிச-3 அன்று மேற்கண்ட உதவித்தொகை கோரிக்கைகளுக்காக காத்திருப்பு போராட்டம் வட்டாட்சியர் அலுவலகங்களில் நடத்தப்பட்டது. மாநிலம் முழுவதும் 74 மையங்களில் 4500 பேருக்கு மேல் பங்கேற்று 1500 பேருக்கு மேல் உதவித்தொகை உத்தரவும் பெறப்பட்டது.

5.246 இதுவரை சுமார் 15000 பேருக்கு மேல் மூன்றாண்டுகளில் உதவித் தொகை பெற்றுத் தந்துள்ளோம்.

5.247 7 ஆண்டுகளுக்கு முன்பிருந்த 250 ரூபாய் உதவித் தொகையை 1000 ரூபாய்க்கு உயர்த்த நமது போராட்டங்கள் பயன்பட்டுள்ளன. தற்போது ரூ.5000 மற்றும் 3000 கேட்டு இயக்கம் நடத்துகிறோம்.

5.248 2013 அக்.7 அன்று இரயில் பயண சிரமங்களை தீர்த்திட சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சுமார் 350 பேர் பங்கேற்றனர்.

5.249 2014 ஜூலை 23ல் உதவித்தொகையை 5000 ஆக உயர்த்தக் கோரியும் தமிழகத்தில் கடும் விதிமுறைகளை ரத்து செய்யக் கோரியும் அகில இந்திய அறைகூவலின்படி 22 மாவட்ட தலைநகரங்களில் நடைபெற்ற இயக்கத்தில் 2800 பேருக்கும் மேல் கலந்து கொண்டனர்.

5.250 2014 டிச.2 அன்று நிறுத்தப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித் தொகையை தொடர்ந்து வழங்க கோரியும், கடும் விதிமுறைகளை ரத்து செய்யக் கோரியும் வட்டாட்சியர் அலுவலகங்களை முற்றுகையிடும் போராட்டம் 27 மாவட்டங்களில் 65 மையங்களில் நடைபெற்றுள்ளது. சுமார் 6000 பேர் வரை இப்போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

11. வேலை வாய்ப்பு குறித்து

5.251 2013 ஜுன்-13 அன்று ஊரக வேலை கேட்டு பிடிஓ அலுவலகங்களில் காத்திருப்பு போராட்டம் நடத்தினோம். நாகை, சேலம் மாவட்டங்களில் இந்தப் போராட்டம் பெரும் வெற்றியைத் தேடித் தந்தது என்றாலும், மற்ற மாவட்டங்களிலும் அதே முனைப்பில் ஈடுபட்டிருந்தால் கூடுதலான பலன் கிடைத்திருக்கும்.

5.252 கிராமப்புற ஊரக வேலை திட்டத்தில் தமிழகத்தில் 4 மணி நேர வேலை முழு ஊதியம் என்பதற்கு அரசாணை நமது முயற்சியில் பெற்றுள்ளதோடு, மாற்றுத்திறனாளி செய்யக்கூடிய சிறப்பு வேலைகளை கண்டறிய வைத்துள்ளதோடு, எப்படிப்பட்ட ஊனமுற்றவருக்கும் வேலை அளிக்க வேண்டும் என்பதை உத்தரவாதப்படுத்தியுள்ளோம்.

5.253 நாம் உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கின் மூலம் சத்துணவுத்துறை, மின்சார வாரியத்தில் பொறியாளர்கள் பணி உள்ளிட்டவைகளில் 3 சதவீத வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தியுள்ளோம்.

5.254 தமிழகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு கூடுதலான பணியிடங்கள் கண்டறியப்பட்டு அரசாணை வெளியிட வைத்துள்ளோம்.

5.255 சென்னை மெட்ரோ ரயில் திட்டம், உள்ளிட்டவைகளில் 3 சத வேலை உறுதி செய்ய தொடர்ந்து வழக்குகள் நடத்தி வருகிறோம்.

5.256 மருத்துவர் பணியமர்த்துதலில் மாற்றுத்திறனாளிகளுக்கு பாரபட்சம் காட்ட முயற்சித்ததை முறியடித்துள்ளோம்.

5.257 மின்சாரவாரியத்திலும், அரசுப் போக்குவரத்திலும் பணியிலிருக்கும் காலத்தில் ஊனம் ஏற்பட்ட காரணத்தினால் பணிநீக்கம் செய்யப்பட்டவர்களை நமது முயற்சியினால் தொடர்ந்த வழக்குகளினால் மீண்டும் பணி பெற்றுத்தரப்பட்டனர்.

5.258 கிருஷ்ணகிரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மாற்றுத்திறனாளி உள்ளிட்ட பலவீனமான பிரிவினரின் பதிவு மூப்புகளை மற்றவர்களுக்கு மாற்றி முறைகேடுகளில் ஈடுபட்ட வேலைவாய்ப்பு அதிகாரிக்கு எதிராக போராட்டம் நடத்தினோம். இதனால் அவர் பணிமாறுதல் மட்டும் செய்யப்பட்டார். எனவே, பாதிக்கப்பட்ட நமது சங்க உறுப்பினர் திரு.ராமராஜ் மூலம் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு, தவறு செய்த அதிகாரி மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

12. பேருந்து பயண சலுகைகள்

5.259 ஆன்லைன் மூலம் முன்பதிவு திட்டத்தில் முதலில் மறுக்கப்பட்ட இருக்கைகள், நமது தலையீட்டிற்கு பின்னர் தர ஏற்பாடு செய்யப்பட்டது. இருப்பினும் பிரச்சனைகள் உள்ளன.

5.260 இப்படிப்பட்ட பிரச்சனைகளைத் தீர்க்க ஹெல்ப் லைன் கோரிக்கை நாம் வைத்துள்ளோம். போக்குவரத்து துறை செயலர் உள்ளிட்ட அதிகாரிகளை சந்தித்து பிரச்சனைகளை தீர்க்க நடவடிக்கைகளை வலியுறுத்தி வருகிறோம்.

13. இரயில் பயணம் சம்பந்தமாக

5.261 2013 அக்.7 அன்று இரயில் பயண சிரமங்களை தீர்த்திட சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது சுமார் 350 பேர் பங்கேற்றனர். அதன் பலனாக தென்னக ரயில்வே பொது மேலாளர் நம்முடன் பேச்சு நடத்தியதுடன், பிரச்சனைகளை தீர்க்க ஒப்புக்கொண்டார்.

5.262 நமது மத்திய அமைப்பின் சார்பில் மத்திய இரயில் அமைச்சரை சந்தித்து, இணையதள முன்பதிவு உள்ளிட்ட கோரிக்கைகளை தீர்க்க வலியுறுத்தியுள்ளோம். அண்மையில் நடைமுறையாகத் துவங்கியிருக்கிறது.

14. கல்வி சம்பந்தமாக

5.263 காதுகேளாத-வாய்பேசாத குழந்தைகளுக்கு +1, +2 வகுப்புகளில் கணினி படிப்பை கட்டாயமாக்க வைத்தது, அமல்படுத்த மறுத்த தருமபுரி அரசு பள்ளி நிர்வாகத்தை எதிர்த்து வழக்கு தொடர்ந்து,

கணினி படிப்பை உறுதிப்படுத்தியது.

5.264 பள்ளி கல்லூரிகளில் 3 சதவிகித இட ஒதுக்கீட்டை அமல்படுத்த தொடர்ச்சியான தலையீடுகள் மற்றும் எம்.பி.பி.எஸ் படிப்பில் பாரபட்சம் காட்டி, சட்ட விதிகளை பின்பற்றாமல் மாற்றுத்திறனாளி இடங்களை பொது இடங்களுக்கு மாற்றும் அரசின் மோசடி முயற்சிகளை எதிர்த்து தொடர்ந்து வழக்குகள் நடத்தி வருகிறோம்.

5.265 10, 12 ஆம் வகுப்பில் மாநில மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களை பிடிக்கும் மாற்றுத்திறனாளிகளை பாராட்டி, உதவித் தொகை வழங்க அரசாணை பெற்றதோடு, வேற்று மொழியை அடிப்படையாக வைத்து படித்தாலும் இதனை வழங்க வேண்டுமென்கிற வகையில் அரசாணை பெற்றோம்.

5.266 அரசு பார்வையற்றோர் பள்ளிகளில் மங்கலான பார்வை உயடையவர்களை சேர்ப்பதை தடுக்கும் நோக்குடன், இந்த ஆண்டு முதல் மருத்துவரைக் கொண்டு பரிசோதனை செய்து, முழுமையாக பார்வை இழந்தால் மட்டுமே சேர்க்க முயற்சிக்கப்பட்டதை அறிந்து, பூந்தமல்லி பார்வையற்றோர் பள்ளியில் மற்ற அமைப்புகளுடன் இணைந்து உள்ளிருப்பு தர்ணா நடத்தி வெற்றி பெற்றோம். இதற்காக வரவழைக்கப்பட்ட மருத்துவர் திருப்பி அனுப்பப்பட்டதோடு, ஆணையரும் இந்த முயற்சியை கைவிடுவதாக அறிவித்தார்.

5.267 தஞ்சாவூர் பார்வையற்றோர் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த, அங்கு பயின்ற மாணவர்களை இணைத்து ஆட்சியரை சந்தித்து மனு கொடுக்கும் போராட்டம் நடத்தினோம். தரம் உயர்த்தப்பட்டு இந்த ஆண்டே படிப்பு துவங்கப்பட்டுள்ளது.

5.268 ஆசிரியர் கலந்தாய்வில் மாற்றுத்திறனாளிகளுக்கு முதல் முன்னுரிமை அளிக்க அரசாணை பெற்றுத்தந்துள்ளோம்.

5.269 விழுப்புரம் மாவட்டத்தில் மாணவர் சங்கத்துடன் இணைந்து மாற்றுத்திறனாளி கல்வி சிறப்பு மாநாடு நடத்தியுள்ளோம்.

15. மாவட்டங்களில் கண்காணிப்பு மற்றும் தனியான குறைதீர்ப்பு

5.270 மாற்றுத்திறனாளி திட்டங்களை கண்காணிக்க மாவட்ட ஆட்சியர் தலைமையில் கண்காணிப்புக்குழு அமைக்க அரசாணை போடவைத்து, தற்போது அவைகளை அமல்படுத்த மாவட்டங்களில் தலையீடு செய்து நிர்ப்பந்திக்கிறோம்.

அரசு நலத்திட்டங்கள், சலுகைகள்

5.271 வீட்டு வசதி, குடிசைமாற்று வாரிய வீடுகளில் 3 சதவிகித வீடுகளைத் தர அரசாணை போட வைத்துள்ளதோடு, ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் பசுமை வீடுகள், இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகளிலும் நமது தலையீட்டினால் இக்காலங்களில் 3 சதவிகித ஒதுக்கீட்டிற்கு அரசாணை பெற்றுள்ளோம்.

5.272 தொழில் வரி செலுத்துவதில் விலக்கு, அரசு ஊழியராக உள்ள மாற்றத்திறனாளிகளுக்கு போக்குவரத்துப்படி ரூ.1000 இக்காலத்தில் நாம் போராடி பெற்றுள்ளோம்.

5.273 ஆடு-மாடு வழங்கும் திட்டம் உள்ளிட்ட எல்லா வறுமை ஒழிப்பு திட்டங்களிலும் 3 சத ஒதுக்கீட்டை சட்டப்படி தர தலையிட்டு பெற்றுத்தந்து வருகிறோம்.

5.274 முதலமைச்சர் மருத்துவ காப்பீடு திட்டத்தில் வருமான உச்சவரம்பை நீக்கி, ஒரு குடும்பத்தில் ஒரு மாற்றுத்திறனாளி இருந்தாலே குடும்பத்தில் உள்ள மற்ற அனைவருக்கும் தனியான காப்பீடு பெற அரசாணை, முகாம் நடத்தி வழங்க வழிகாட்டு நெறிமுறை பெற்றுத்தந்துள்ளோம்.

5.275 நமது சங்க முயற்சியால் மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் இதுவரை சுமார்

150-க்கும் மேற்பட்ட அரசு முகாம்கள் நடத்தப்பட்டு அடையாள சான்று, உதவித்தொகை, உபகரணங்கள் பெற்று தந்துள்ளோம்.

வழிபாட்டு உரிமை சம்பந்தமாக

5.276 கோவிலுக்கு வழிபாடு செய்ய வரும் மாற்றுத்திறனாளிகளை அவர்கள் அணியும் செயற்கைக்கால் உள்ளிட்ட உபகரணங்கள் தோல் பொருளினால் செய்யப்பட்டது என்ற காரணம் காட்டி வெளியே கழற்றிவைக்க வேண்டும் என்றிருந்த நடைமுறையை எதிர்த்து கோரிக்கை வைத்த அடிப்படையில் நமது தலையீட்டின் பேரில் அத்தடை நீக்கப்பட்டுள்ளது.

பாலியல் பிரச்சனைகளில் தலையீடு

5.277 மதுரை நாகமலை புதுக்கோட்டை, தஞ்சை, பெரியகுளம், நெல்லை கங்கைகொண்டான், கடலூர் மாவட்டம் சிதம்பரம், விருத்தாசலம் மற்றும் தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட இடங்களில் மனவளர்ச்சி குன்றிய மற்றும் வாய்பேசமுடியாத குழந்தைகளை பாலியல் தாக்குதல், தொந்தரவு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வைத்துள்ளோம். தருமபுரி பாலக்கோடு ஒன்றியத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு இளம் மாற்றுத்திறனாளி பெண்கள் பலாத்காரத்தை அம்பலப்படுத்தி தலையீடு செய்துள்ளோம்.

5.278 தருமபுரி, தென் சென்னை மாவட்டங்களில் பெண் மாற்றுத்திறனாளிகள் சிறப்பு மாநாடு ஜனநாயக மாதர் சங்கத்துடன் இணைந்து நடத்தி, பல பிரச்சனைகளில் பாலியல் வன்முறை மற்றும் பல்வேறு பிரச்சனைகளில் வெளிக்கொண்டு வந்துள்ளோம்.

5.279 மதுரை புறநகரில் இயங்கி வரும் அக்ஷயா என்கிற மனநலம் பாதிப்பு மற்றும் மாற்றுத்திறனாளி காப்பகத்தில் நடைபெற்ற பாலியல் வன்முறை குறித்து தலையீடு செய்து இயக்கம் நடத்தியதோடு, மாதர் அரங்கத்துடன் இணைந்து வழக்கும் தொடுத்தோம்.

தொழுநோய் பாதிப்புக்குள்ளான மாற்றுத்திறனாளிகள் பிரச்சனை

5.280 சேலம் தலைவாசல் அருகே தேவியாக்குறிச்சியில் 21 தொழுநோய் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி குடும்பங்களின் குடும்ப அட்டைகளை 4 ஆண்டுகளுக்கு முன் பறித்துச் சென்றதை திரும்ப கிடைக்க இயக்கம் நடத்தி குடும்ப அட்டைகள் மீண்டும் பெற்றுத்தரப்பட்டன.

5.281 தேர்தலில் ஓட்டுப்போட தேவைப்பட்டால் இவர்களுக்கு உதவியாளரை அனுமதிக்க வலியுறுத்துகிறோம்.

உயர வளர்ச்சி

5.282 இவர்களது ஊனத்தை குறைத்து சான்றளிக்கும் முறைக்கு எதிராக தலையிட்டு சென்னை உட்பட பல இடங்களில் வெற்றி பெற்றுள்ளோம்.

5.283 21 வயது பூர்த்தியாகிறபோது 4.2 அடி உயரம் இருந்தால் 40 சதம் ஊனம் என்பதை கணக்கிட்டு சான்றளிக்க வேண்டும் என்பதற்கு மாறாக, 3.2 அங்குலம் இருந்தால்தான் சான்று என தவறாக மாநில ஆணையரகம் வழிகாட்டியிருந்ததை எதிர்த்துள்ளோம்.

மன நோய் பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தமாக

5.284 100 நாள் வேலையில் இவர்களுக்கும் வேலையை உறுதி செய்துள்ளோம்.

5.285 மாவட்டங்களில் பிரத்தியேக மருத்துவமனையுடன் கூடிய பிரத்தியேக பாதுகாப்பு இல்லங்களை அரசின் சார்பில் தொடங்கி நடத்திட தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

மனவளர்ச்சி குன்றியோர்

5.286 மனவளர்ச்சி குன்றியோருக்கு சுமார் 1 லட்சம் பேருக்கு எந்த நிபந்தனையும் இல்லாமல் உதவித் தொகை வழங்க வைத்துள்ளோம். 60 சதவிகிதம் ஊனம் இருக்க வேண்டும் என்ற

விதியை குறைக்க நமது சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் வலியுறுத்தினோம். அதன் பலனாக, இக்காலத்தில் 45 சதவிகிதம் இருந்தாலே கொடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. 40 சதவிகிதம் இருந்தாலே கொடுக்க வலியுறுத்தி வருகிறோம்.

5.287 சிறப்புப் பள்ளிகளை அரசு சார்பில் உருவாக்கவும், சிறப்பாசிரியர் மற்றும் பயிற்றுநர்களை காலமுறை ஊதியத்தில் பணியமர்த்தவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

காதுகேளாதோர்-பேச முடியாதோர் பிரச்சனை

5.288 நமது இணையதளம் துவக்க விழாவிற்கு வந்திருந்த தனியார் தொலைக்காட்சி மூத்த பத்திரிக்கையாளரிடம் சொல்லி, அதனடிப்படையில் தற்போது செய்கை மொழிபெயர்ப்புடன் குறிப்பிட்ட நேரத்தில் செய்தி ஒளிபரப்ப ஏற்பாடாகியுள்ளது.

இதர பிரச்சனைகளில் தலையீடு

5.289 சமீபத்தில் நடைபெற்ற கூட்டுறவு தேர்தல்களில் பார்வையற்றவர்கள் போட்டியிடுவதை தடுத்து, இருவருடைய வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து உச்சநீதிமன்றம் வரை சென்று வழக்காடி வருகிறோம்.

5.290 அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் சம்பந்தமாக மத்திய அரசு கொண்டு வரவிருக்கும் உத்தேச சட்டத்திலிருந்து நீக்கிய அம்சங்களை திரும்ப சேர்க்க வலியுறுத்தி டெல்லியில் தர்ணா உட்பட நடத்தியுள்ளோம்.

5.291 பொதுத் தேர்தல்களில் வாக்குச்சாவடிகளில் மாற்றுத்திறனாளி வாக்களார்களுக்கு சாய்வுதளம் உள்ளிட்ட சிறப்பு வசதிகளை தேர்தல் ஆணயம் மற்றும் மாற்றுத்திறனாளி நலத்துறையை வலியுறுத்தி சிறப்புக் கூட்டங்கள் நடத்த முயற்சி எடுத்ததோடு, பரவலாக இந்த வசதிகளை நடைமுறைப்படுத்தவும் நமது தலையீடு செய்யப்பட்டது.

5.292 எதிர்கால இலக்கு

- தற்போதுள்ள சங்க உறுப்பினர் பலத்தை மூன்று மடங்காக்க உயர்த்துவது
- எல்லா ஒன்றியங்களிலும் செயல்படும் அமைப்பாக மாற்றி, பெரும்பாலான ஊராட்சிகளில் இலக்கு வைத்து 1000 சங்க கிளைகளை உருவாக்குவது.
- சங்க காலாண்டிதழை மாத இதழாக மாற்றி 5000 வரை அச்சிட முயற்சிப்பது
- கட்சி மாவட்ட பிராக்ஷன் இல்லாத மாவட்டங்களில் பிராக்ஷன்களை உருவாக்குவது
- ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு கட்சி துணைக்குழு வீதம் கட்சி கிளைகளை உருவாக்குவது
- தீக்கதிர் சந்தா மாவட்டத்திற்கு குறைந்தது 25 சேர்ப்பது
- மாவட்ட அளவில் தனியான ஊழியரை உருவாக்குவது

தீக்கதிர்

5.293 தமிழ்நட்டின் அரசியல் அரங்கிலும், ஊடகப்பகுதியிலும் தீக்கதிர் நாளிதழ் முக்கிய பங்கு வகிக்கிறது. அரசியல் கட்சிகள் நடத்தும் பத்திரிகைகளில் தீக்கதிர் மட்டும்தான் நான்கு பதிப்புகளாக தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. இந்த வளர்ச்சிக்கு ஒட்டுமொத்த கட்சி அணிகளின் முயற்சிகள் முக்கிய காரணமாகும்.

5.294 வண்ணக்கதிர், இலக்கியச் சோலை, கணினிக்கதிர், அறிவியல் கதிர், பொருளியல் அரங்கம், உலகைச் சுற்றி, விளையாட்டுக் கதிர், புத்தக மேசை, மக்கள் மன்றம் பகுதிகள் மற்றும் கேலிச்சித்திரங்கள் தீக்கதிரில் இடம் பெறுகின்றன. பீப்பிள்ஸ் டெமாக்ரசி தலையங்கம்

வாரந்தோறும் வெளியிடப்படுகிறது. மாநிலத் தலைவர்களின் கட்டுரைகளும் பரவலாக வருகிறது. பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் தொடர்ச்சியாக தரக்கூடிய படைப்பாளிகள் வட்டம் நம்மிடம் உள்ளது. இந்த வட்டத்தை மேலும் வலுப்படுத்த வேண்டும். கட்டுரை மற்றும் தலையங்கங்கள் கூடுதல் தகவல்களோடும் கூர்மையான விமர்சனங்களோடும் வரவேண்டும்.

5.295 இதர பத்திரிகைகள் நடுநிசி வரை செய்திகளை சேகரித்து அச்சிட்டு தனி வாகனங்கள் மூலம் விநியோகித்து வருகின்றன. தீக்கதிர் பெரும்பாலும் பேருந்துகள் மூலம் அனுப்பப்படுவதால் இரவு 7 மணி வரை தான் செய்திகளை பெறமுடிகிறது. இரவு 8 மணிக்கு நான்கு பதிப்புகளிலும் செய்திகளை இறுதிபடுத்தி பக்கங்கள் அச்சிடுவதற்கு தரப்படுகிறது.

5.296 மாவட்டங்களில் நமது இயக்கம் சார்ந்த செய்திகளையும் படங்களையும் ஓரளவுக்குத்தான் வெளியிட முடிகிறது. கூடுதல் பத்திரிகை விற்பனையாகும் மாவட்டங்களுக்கு உள்ளூர் செய்திகளை தருவதற்கு தனியாக பக்கங்களை ஒதுக்க வேண்டிய தேவை உள்ளது.

5.297 கட்சியின் 20வது மாநில மாநாட்டில் தொடங்கப்பட்ட தீக்கதிர் இணைய இதழ் வரவேற்பை பெற்றுள்ளது. இதன் வடிவமைப்பை மேலும் நவீனப்படுத்த வேண்டியுள்ளது. இதனை கவனிப்பதற்கு தனி ஏற்பாடு தேவைப்படுகிறது.

5.298 மாவட்டத்திற்கு ஒரு நிருபர் என்ற அடிப்படையில் தீக்கதிர் செயல்பாடு உள்ளது. சில மாவட்டங்களில் மாவட்ட நிருபர்களே இல்லை. சில இடங்களில் வட்டார நிருபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிருபர்கள் விளம்பர முகவர்களாகவும் செயல்படுகின்றனர். நிருபர் வட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டியுள்ளது. அவர்களது செயல்பாடுகளிலும் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது.

5.299 குறிப்பாக வட்டார நிருபர்கள் அதிகமாக நியமிக்கப்பட்ட வேண்டும். வட்டார செய்திகளை கூடுதலாக இடம் பெறச் செய்வதுடன் இவர்கள் மூலம் கூடுதல் விளம்பரம் பெறுவது தீக்கதிரின் நிதி ஆதாரத்தையும் மேம்படுத்த முடியும்.

5.300 ஆசிரியர் குழுவிலும், நிர்வாக பிரிவுகளிலும் பணியாற்ற புதிய தோழர்கள் கிடைப்பதே இல்லை. மாணவர்-வாலிபர் அமைப்புகளிலிருந்து பொருத்தமான தோழர்களை இப்பணிகளுக்கு சேர்க்க வேண்டும். கட்சிக்கு வெளியே இத்தகைய தோழர்களை கண்டுபிடித்து, தக்கவைப்பதிலும் சிரமம் உள்ளது. கட்சித் தோழர்களே தீக்கதிருக்கு என்றும் துணையாக இருப்பார்கள்.

5.301 கடந்த மாநில மாநாட்டில் தீக்கதிர் பொன்விழா ஆண்டினை சிறப்பாகக் கொண்டாடிட முடிவு செய்தோம். அடுத்து நடந்த ஏலகிரி மாநிலக்குழு கூட்டத்தில் தீக்கதிர் பொன்விழாவினை மாவட்டந்தோறும் நிகழ்த்திடவும், விற்பனையினை 40000 ஆக உயர்த்திடவும் முடிவு செய்யப்பட்டது.

5.302 திருவாரூர் மாவட்டத்தில் பொன் விழா ஆண்டின் துவக்கவிழா 29.06.2012 அன்று சிறப்பாக நடைபெற்றது. அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் கே.வரதராஜன் பங்கேற்றார்.

5.303 அனைத்து மாவட்டங்களிலும் இவ்விழா சிறப்பாக நடத்தப்பட்டது. சில இடங்களில் தோழர் சுந்தரய்யா நூற்றாண்டு விழாவுடன் சேர்த்து நடத்தப்பட்டது. விற்பனை இயக்கமும் நடத்தப்பெற்று 2013 மார்ச் மாதத்தில் விற்பனை 33000 பிரதிகளைத் தாண்டியது. ஆனால் இந்த உயர்வை நம்மால் தக்கவைக்க முடியவில்லை. இதற்கான காரணங்களை இம்மாநாடு விவாதிக்க வேண்டும். நிறைவு விழா மதுரையில் 29.06.2013 அன்று நடைபெற்றது. நமது கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரகாஷ் காரத் கலந்து கொண்டார். ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற இக்கூட்டத்திற்கு சிறப்பான ஏற்பாடுகளை மதுரை மாநகர், புறநகர் மாவட்டக்குழுக்கள் செய்திருந்தன. இந்நிகழ்வில் பொன்விழாவையொட்டி தீக்கதிர் மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. நல்ல ஆவணமாக இம்மலர் திகழ்கிறது.

5.304 தற்போது 28000 பிரதிகள் விற்பனையாகின்றன. ஆண்டுக்கொருமுறை ஆகஸ்ட்/செப்டம்பர் மாதங்களில் ஆண்டு சந்தா சேர்ப்பது என்ற வழக்கம் திருப்பூர், கோவை மாவட்டக்குழுக்களில் உறுதியாக கடைபிடிக்கப்படுவது நல்ல முன்னுதாரணம் ஆகும். இதுபோல் அனைத்து மாவட்டங்களிலும் குறிப்பிட்ட காலத்தை சந்தா தீக்கதிர், செம்மலர், மார்க்சிஸ்ட், பீப்பிள்ஸ் டெமாக்ரசி ஆகியவற்றுக்கு சந்தா சேர்க்கும் காலமாக தொடர்ந்து திட்டமிட்டு செயல்படுத்துவது சந்தாக்கள் விடுபடாமல் பாதுகாக்க உதவும்.

5.305 பணம் கட்டாமல் பத்திரிகை நிறுத்தப்படும்போது அதை பணம் கட்டி புதுப்பிக்காமல் விட்டுவிடுகிற ஏஜெண்டுகள் கணிசமாக உள்ளனர். நான்கு பதிப்புகளிலும் ஒவ்வொரு மாதமும் பணம் கட்டாததால் நிறுத்தப்படுகிற பத்திரிகை எண்ணிக்கை 1000லிருந்து 2000 வரை உள்ளது. மாவட்டக்குழுக்கள் உரிய கவனம் செலுத்தினால், உரிய தேதிக்குள் பணம் கட்டுவதை உறுதிப்படுத்தினால், இந்த கணிசமான விடுதலைத் தவிர்க்க முடியும். என்ன முயற்சித்தாலும் நின்று போவதில் ஒரு சிறு பகுதி புதுப்பிக்கப்படுவதே இல்லை. நிரந்தரமாக நின்று விடுகிறது. திருச்சி பதிப்பு துவங்கப்படும்போது குறைந்தபட்சம் 500 பிரதிகள் விற்பனை ஆக வேண்டும் என திட்டமிட்டோம். ஆனால் இன்று வரை 4000 பிரதிகளைக் கூட தாண்ட முடியவில்லை. இப்போது 3800 பிரதிகள் மட்டுமே விற்பனையாகின்றன. திருச்சி பதிப்புக்குட்பட்ட மாவட்டக்குழுக்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

5.306 மேலும், கடைகளில் போடுவதும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கடைகளில் வாங்குவதற்கு தோழர்களை நிச்சயித்துவிட்டு கடைகளில் போட வேண்டும். இவை பத்திரிகை விளம்பரமாவதற்கும், வர்த்தக விளம்பரங்கள் பெறவும் பயன்படும்.

5.307 தீக்கதிர் விற்பனை விபரம் வருமாறு:

♦ 2012 - 30648, 2013 - 30082, 2014 - 28006 (மாவட்ட வாரியான விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.)

நிதிநிலை

5.308 தீக்கதிர் நிதி ஆதாரத்தை வலுப்படுத்த 2 முறை அனைத்து மாவட்டங்களிலும் உண்டியல் மூலம் தீக்கதிர் வளர்ச்சி நிதி சேகரிப்பு இயக்கம் நடத்தப்பட்டு, 2012ல் ரூ 28,71,662-ம் 2014ல் ரூ38,96,765-ம் வரவானது. நிதி வரவான விவரங்கள் இணைப்பில் உள்ளன.

5.309 மாநில அரசு விளம்பரங்கள் (தமிழகம், கேரளம்) நிறுத்தப்பட்டுவிட்ட பின்னணியிலும், விலைவாசி உயர்ந்து வரும் சூழ்நிலையிலும் கடும் நெருக்கடிக்கு மத்தியில்தான் தீக்கதிரை நடத்தி வருகிறோம். முகவர் பாக்கிகள், விளம்பர பாக்கிகள், பிரசுர பாக்கிகள் கணிசமாக மாவட்டக்குழுக்கள் தரவேண்டிய பின்னணியில் இந்நிலை உள்ளது. இந்த பாக்கிகளை விரைந்து கொடுத்து மாவட்டக்குழுக்கள் உதவிட வேண்டும்.

செம்மலர்

5.310 செம்மலர் இலக்கிய மாத இதழின் விற்பனை பின்வருமாறு இருந்துள்ளது.

2012 - 9414, 2013 - 8732, 2014 - 9351

5.311 மாவட்ட வாரியான விவரம் இணைப்பில் உள்ளது. விற்பனை தேக்க நிலையிலேயே உள்ளது. ஆண்டுக்கு ஒரு முறை குறிப்பிட்ட மாதத்தில் சந்தா சேர்ப்பதும், அடுத்து வரும் ஆண்டுகளில் புதுப்பிப்பதும், தொடர்ந்து கவனித்து விற்பனையை உயர்த்துவதும் அவசியம்.

மார்க்சிஸ்ட்

5.312 மார்க்சிஸ்ட் தத்துவார்த்த மாத இதழ், விற்பனை பின்வருமாறு இருந்துள்ளது.

2012 - 8522, 2013 - 6592, 2014 - 13133

5.313 கடந்த ஆண்டு சென்னை, மதுரை, திருப்பூர் ஆகிய இடங்களில் சிறப்பு கருத்தரங்குகள்

நடத்தப்பட்டன. அவற்றில் மாவட்டக்குழுக்கள் சந்தா சேர்த்து தரவும் திட்டமிடப்பட்டது. இவை மூலம் கணிசமாக சந்தா உயர்வு ஏற்பட்டுள்ளது. இவற்றை புதுப்பிப்பதில் உரிய கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் இந்த உயர்வை தக்க வைக்க முடியும்.

பீப்பிள்ஸ் டெமாக்ரசி

5.314 பீப்பிள்ஸ் டெமாக்ரசி விற்பனை தொடர்ந்து சரிந்து வருவது கவலைக்குரியது. சென்னையில் பதிப்பு துவங்கியபோது இருந்த நிலைக்கு தற்போது குறைந்துவிட்டது. விவரம் வருமாறு:

2012 - 1177, 2013 - 2146, 2014 - 1034

5.315 நடுத்தர வர்க்க அரங்கங்கள் ஆங்கிலம் தெரிந்த தோழர்களிடம் தொடர்ந்து சந்தா பெற்று புதுப்பித்திட உரிய கவனம் செலுத்த வேண்டும். மாநில செயற்குழு தற்போது முடிவு செய்துள்ள இலக்கை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

பிரசுரங்கள்:

5.316 இக்காலத்தில் வெளியிடப்பட்ட பிரசுரங்களின் பட்டியல் இணைப்பில் தரப்பட்டுள்ளது. மொத்தம் 18 பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

5.317 பிரசுர பாக்கிகள் கணிசமாக உயர்ந்துள்ள நிலையில் தீக்கதிரின் நிதி நெருக்கடியும் அதிகமாகிறது. எனவே இந்த பாக்கிகளை உடனடியாக தீர்க்க மாவட்ட குழுக்கள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

உப குழுக்கள்:

5.318 இக்காலத்தில் ஆசிரியர் உபகுழு கூட்டம் 19 முறையும், நிர்வாக உபகுழு கூட்டம் 14 முறையும் கூடியுள்ளது. மேலும் தேவைக்கேற்ப நிர்வாகிகள் கூட்டம் தனியே நடத்தப்படுகிறது.

5.319 திருச்சி மாநிலக்குழுவில் தீக்கதிர் உள்ளடக்கம், விநியோகம், நிதி பற்றி விரிவாக விவாதித்தோம். மிகுந்த பயனுள்ள விவாதமாக இது அமைந்தது. சென்னையில் இருமுறை தீக்கதிர் பற்றி மாநிலக் குழுவில் விவாதித்துள்ளோம். மாநிலக்குழுவில் விவாதித்தது மிக மிக பயனுள்ளதாக இருந்தது.

பாலர் அரங்கம்

5.320 2008 அகில இந்திய மாநாட்டின் போது, பங்கேற்ற செந்தொண்டர் அணிவகுப்பில், பாலர் பருவத்தினரின் ஆர்வத்தில் இருந்து, பாலர் அரங்கம் குறித்து விவாதித்து வருகிறோம். எடுத்த முயற்சி சில மாவட்டங்களில், குறைவான நிகழ்ச்சிகள் என்றாலும், இதன் தாக்கம் நல்ல விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது. கடந்த மாநாட்டிற்குப் பின், பாலர் அரங்கத்தினை உருவாக்கிடும் வகையில், 16 தோழர்களைக் கொண்ட ஆலோசனைக்குழு உருவாக்கப்பட்டது. அப்போது மாநிலத்தில் 43 கிளைகள் மட்டுமே இருந்தன.

5.321 அதன் பின், திருப்பூர் 41, விருதுநகர் 21, சேலம் 11, மதுரை மாநகர் 9, காஞ்சிபுரம் 12, கடலூர் 6, நாகை 5, தென்சென்னை 5, குமரி 5, வடசென்னை 2, பாண்டி 5 ஆகியவற்றுடன், கோவை, திண்டுக்கல், தருமபுரி, திருச்சி, பெரம்பலூர், திருவள்ளூர், ஈரோடு, ஆகிய 18 மாவட்டங்களில் 152 கிளைகள் அமைக்கப் பட்டு சில செயல்பாடுகள் நடைபெற்றுள்ளன. முதலில் குறிப்பிட்ட 11 மாவட்டங்களில் ஓரளவு செயல்பாடு உள்ளன. பின்னர் குறிப்பிட்ட 7 மாவட்டங்களில் எப்போதாவது செயல்பாடுகள் உள்ளன.

5.322 கதை சொல்லல், ஓவியப் பயிற்சி, போட்டிகள் நடத்துதல், இரவுப் பள்ளி நடத்துதல், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், திரையிடல், சுற்றுலா ஆகியவை தொடர்ந்து இடம் பெற்றுள்ளன. கண்காட்சி வைத்தல் சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது 70க்கும் மேற்பட்ட கிளைகளில்

சிறப்பாகச் செய்யப்பட்டது. தொடர்ந்து முதன்மைப் பயிற்சியாளர்களை உருவாக்கும் முயற்சி தென்மாவட்டங்கள் அளவில் நடந்துள்ளது. கடந்த 2013 ஜனவரி 27 அன்று சேலத்தில் மாநில அளவில் அமைப்புக் குழுவை உருவாக்குவதற்கான கூட்டம் நடைபெற்றது. இதில் மேலே குறிப்பிட்ட 18 மாவட்டங்களுக்கு அப்பாற்பட்டு நெல்லை, திருவாரூர், ராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் இருந்தும் வந்திருந்தனர். மொத்தம் 56 பாலர்கள் உள்ளிட்டு 84 தோழர்கள் பங்கேற்ற இந்த நிகழ்ச்சியில் மாநில அமைப்புக் குழு உருவாக்கப் பட்டது. தோழர். கே.எஸ். கனகராஜ் அமைப்பாளராகவும் 11 ஆலோசகர்கள் உள்ளிட்டு 21 தோழர்கள் கொண்ட அமைப்புக்குழுவும் தேர்வு செய்யப்பட்டது.

5.324 2014 ஜுலை 20,21 தேதிகளில், விருதுநகரில் இரண்டு நாள் பயிற்சிமுகாம், மாவட்டப் பொறுப்பாளர்களுக்காக நடத்தப் பட்டது. இதில் காஞ்சிபுரம், பாண்டி, கடலூர், சிவகங்கை, ராமநாதபுரம், நெல்லை, தூத்துக்குடி, குமரி, விருதுநகர், மதுரை மாநகர், கோவை, திருப்பூர், சேலம் ஆகிய 13 மாவட்டங்களில் இருந்து, 48 தோழர்கள் பங்கேற்றனர். மாவட்டங்களில் உள்ள கிளைகள் மூலம், பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகள் நடைபெற்று உள்ளன. நாம் தொடர்ந்து செல்வதிலும், பணியாற்றுவதிலும் தான் பலவீனம் உள்ளது.

5.325 ஆலோசனைக் குழு அமைக்கப்பட்ட பின், 5 முறை ஆலோசனைக் குழு கூட்டமும், இரண்டு முறை அமைப்புக் குழு கூட்டமும் நடைபெற்றுள்ளது. இது போதாது. இன்னும் கூடுதல் கவனம் செலுத்தும் பொறுப்பாளர் தீர்மானிக்கப்பட வேண்டும். மாநில அமைப்பிற்கு என கொள்கை அறிக்கை, அமைப்பு முறை ஆகியவை குறித்து ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. இன்னும் இறுதிப்படுத்தவில்லை. செயல்பாடுகளுக்கான வழிகாட்டுதல்களாக இதைக் கருதி உடனடியாக இறுதி செய்வது அவசியம். மாவட்டங்களில் தொடர் ஒத்துழைப்பு இருந்தால், மேற்கொண்டு எல்லா மாவட்டங்களிலும் முயற்சிக்க முடியும். வகுப்புவாத சக்திகளின் தீவிர கவனம் குழந்தைகளைக் கவருவதில் இருக்கிறது, என்பதையும், தாரளமயப் பொருளாதாரக் கொள்கை மற்றும் நுகர்வு கலாச்சாரம், இன்றைய முதலாளித்துவக் கல்வி ஆகியவற்றின் தாக்கத்தையும் பாலர் அரங்கத் தேவையுடன் இணைத்துப் பார்த்திடல் வேண்டும்.

செந்தொண்டர் அணி

5.326 கோவையில் நடைபெற்ற 19வது கட்சி காங்கிரஸ் பேரணியில் செந்தொண்டர் அணி வகுப்பு, குறிப்பிடத் தக்கதாக இருந்தது. செந்தொண்டர்கள் அணி உருவாக்கம் நமது கட்சியில், மரியாதையைத் தந்தாலும், அதைப் பராமரிப்பதில் தொடர்ந்து பலவீனம் நீடிக்கிறது. மாநாடுகளில் மட்டும் அணிவகுப்பிற்காகத் தேவைப்படும் ஒரு ஏற்பாடாக மட்டுமே கருதப்படுகிறது. இது மாற்றப்பட வேண்டியுள்ளது.

5.327 2008 வேலைப் பிரிவினையில் மாநில பிராக்சன் உருவாக்கப்பட்டது. உருவாகியிருந்த 7200 செந்தொண்டர்களைப் பராமரிப்பது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாவட்டமும் குறைந்த பட்சம் ஒரு ஸ்குவாடை (30 பேர் கொண்ட அணி) உருவாக்குவது. இவர்கள் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களாக இருக்கும் வகையில் தேர்வு செய்வது. ஸ்பெஷல் ஸ்குவாடு ஒன்றை சில குறிப்பிட்ட மாவட்டங்களில் உருவாக்குவது. வருடம் ஒரு முறை ஏதாவது ஒரு தேர்ந்தெடுத்த கிராமத்தில், உடலுழைப்புப் பணியில் ஈடுபடுவது. மே தினம், நவம்பர் புரட்சி தினங்களில் அணிவகுப்பில் ஈடுபடுவது என்று பிராக்சன் மூலமாக முடிவு செய்தோம். இந்த முடிவுகளின் நோக்கம் சிரமப்பட்டு அமைத்திருந்த 7200 தோழர்களைக் கொண்ட செந்தொண்டர்களைப் பராமரிக்க வேண்டும் என்பதே ஆகும்.

5.328 மாவட்ட அளவில் ஒருங்கிணைப்புக் குழு உருவாக்குவது, அதற்கு கட்சி செயற்குழு மட்டத்தில் ஒரு பொறுப்பாளர் தீர்மானிப்பது ஆகிய பணிகள் மாவட்டக்குழுக்களில் முழுமையாக நிறைவேறவில்லை. 2012ல் நாகையில் நடைபெற்ற 20வது மாநில மாநாட்டின் போது, 2100 தோழர்கள் பங்கெடுத்த அணி வகுப்பு நடைபெற்றது. இதில் நாகை, தஞ்சை, திருவாரூர், விருதுநகர், மதுரை மாநகர், மதுரை புறநகர், கடலூர், காஞ்சிபுரம், தென்சென்னை, வடசென்னை, கோவை, திருப்பூர், திருவள்ளூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் இருந்து பங்கெடுத்தனர். அதேபோல், சி.ஐ.டி.யு மாநில மாநாடு திருச்சியில் நடைபெற்ற போது, 500 பேர் அளவிலும், விவசாயிகள் சங்கத்தின் அகில இந்திய மாநாட்டின் போது, 500 பேர் அளவிலும் பங்கெடுத்தனர். விவசாயிகள் சங்கத்தின் அகில இந்திய மாநாட்டின் அணிவகுப்பிற்கான தயாரிப்புப் பணியில் ஈடுபட்ட போது, மாநாடுகளின் போது மட்டுமே செந்தொண்டர்கள் நினைக்கப்படுகின்றனர், என்ற விமர்சனம் முன்வைக்கப் பட்டது. இது சரியானதே, இது களையப்பட வேண்டும். கடந்த 3 ஆண்டுகளில் இதற்கான பிராக்சன் 3 முறை மட்டுமே கூடியுள்ளது. ஒருமுறை மாவட்டப் பொறுப்பாளர்களுக்கானக் கூட்டம் நடத்தப் பட்டது. இது போதாது. அதேபோல் மாநில அளவிலான இரண்டு நாள் பயிற்சி முகாம் மாவட்ட கேப்டன்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்காக, கோவையில் நடத்த திட்டமிட்டு, இதர ஸ்தாபனப்பணிகள் காரணமாக நின்று போனது.

5.329 எனவே மாநில பிராக்சன் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் உரிய கால அவகாசத்தில் கூடுவதும், மாதம் ஒரு பயிற்சிக்குத் திட்டமிடுவதும், ஸ்குவாடு அளவில் வாரம் ஒரு பயிற்சிக்குத் திட்டமிட்டு செயலாற்றுவதும் அவசியமாகும். வருடத்திற்கு ஒரு முறை புதிய அணியினரை ஈர்க்கும் வகையிலும் செயல்பாட்டை வடிவமைக்க வேண்டும். அதைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

சமூக ஊடகச் செயல்பாடு

5.330 இணையதளம் பயன்படுத்துவோர் அதிலும் குறிப்பாக சமூக வலைத்தளத்தைப் பயன்படுத்தி அரசியல் பிரச்சாரம் மற்றும் கருத்தியல் பிரச்சாரம் செய்வோர் எண்ணிக்கை தமிழகத்தில் அதிகரித்து வருகிறது. 2013ல் 8.67 கோடியாக இருந்த சமூக வலைத்தளப் பயன்பாட்டாளர் எண்ணிக்கை, 2014 ஜுலையில் 19.7 கோடியாக உயர்ந்துள்ளது. இப்பிரிவினர் மத்தியில் கட்சியின் கருத்துப் பிரச்சாரம் சென்றடைவது அவசியம் என மாநிலக்குழு கருதி ஒரு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பது என முடிவு அடிப்படையில் 11 தோழர்களைக் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டது.

5.331 இதுவரை 7 முறை கூடியுள்ளது. 1. மார்க்சீயக் கருத்துக்களை இணைய தளத்தில் கொண்டு செல்ல ஏற்கனவே பயன்பட்டு வரும், இணைய இதழ் மற்றும் வலைப்பூ உள்ளிட்டவற்றைப் பயன்படுத்துவது. 2. புதிய தொடர்புகளை உருவாக்க இணையதளத்தையும், சமூக வலைத்தளத்தையும் ஒருங்கிணைந்து பயன்படுத்துவது. 3. மார்க்சிஸ்ட் கட்சி மீதான அவதூறுகளை எதிர்கொள்ள சமூகவலைத்தளத்தில் நமது கட்சித் தோழர்கள் ஒருங்கிணைந்து சீரிய எதிர்வினையாற்றுவது. 4. மக்கள் திரட்டுதல் போராட்டங்களுக்கான தகவல் பரிமாற்றத்தை அதிக அளவில் ஏற்படுத்துவது ஆகிய நோக்கங்களைக் கொண்டு ஒருங்கிணைப்புக்குழு செயல்பட்டுள்ளது. மாற்று என்ற இணைய இதழ் தொடர்ந்து வெளியிடப்படுகிறது.

5.332 மாற்று இணைய இதழ் கடந்த ஆகஸ்ட் 2013 துவங்கி 17 மாதங்களில் 440 கட்டுரைகள் வெளியிட்டு உள்ளது. கட்சிக்கு அப்பாற்பட்ட இளைஞர்களும் எழுதுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டு, வெகுஜன ஊடகமாக செயல்பட்டு வருகிறது.

5.333 விக்கிப்பீடியாவில் எடுத்த முயற்சி காரணமாக குறிப்பிடத்தக்க அளவில் விவரங்கள், நமது கட்சி குறித்து புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. தீக்கதிர் கட்டுரைகளை ரெஃபெரென்ஸ் ஆக தொடர்ந்து கொடுத்து வருகிறோம். இதில் கூடுதலான தகவல்களை உருவாக்க நாம் தொடர்ந்து முயற்சித்து வருகிறோம்.

5.334 இரண்டு நாள் பயிற்சி முகாம், தென்சென்னையில் நடத்தப்பட்டது. 18 மாவட்டங்கள் மற்றும் 17 அரங்கங்களில் இருந்து 48 தோழர்கள் பங்கெடுத்தனர். பங்கெடுத்தவர்கள் அவரவர் மாவட்டங்களில் தேர்தலின் போது சிறப்பாகச் செயல்பட்டனர்.

5.335 மாநிலக்குழு இணையதளம் புதுப்பொழிவுடன், மாவட்டக்குழுக்கள் குறித்த விவரங்கள் அனைத்தையும், மாவட்டத்தில் இருந்தவாறே இந்த இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கு ஏற்ற வசதியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்த மாவட்டக்குழுக்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்வதில் பலகீனம் உள்ளது.

5.336 .left@lists.riseup.net என்கிற இ-மெயில் குழுமம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. நாடாளுமன்றத் தேர்தல் பணியின் ஒரு பகுதியாக, சமூகவலைத்தளத்தில் நாம் எடுத்த முயற்சி அதிகம். 9 தொகுதிகளிலும், முகநூல் பக்கங்கள் உருவாக்கப்பட்டு பிரச்சாரம் செய்யப்பட்டது. தொகுதி அளவில் கூட்டம் நடத்தப்பட்டது ஓரளவு பயனளித்தது. கட்சி மாநிலக் குழுவிற்கு http://facebook.com/tncpim, http://twitter.com/tncpim ஆகிய முகவரிகள் உருவாக்கப்பட்டது. அகில இந்தியத் தலைவர்களின் பிரச்சாரப் பொதுக் கூட்டங்கள் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. Whatsaapலும் இன்றைய தலைமுறை செயல்படுவதைக் கணக்கில் கொண்டு நம்முடைய பணிகளை துரிதப்படுத்த வேண்டும்.

5.337 இணைய தொலைக்காட்சி அளவிற்கு நமது உள்கட்டமைப்பை மேம்படுத்துவது அவசியம். ஏராளமான மாற்றங்கள் தொழில்நுட்பம் மற்றும் பிரச்சார யுக்திகள் உருவாகியுள்ள இக்காலத்தில், நமது கட்சி இத்துறையில் இருக்கும் வாய்ப்பை முறையாகப் பயன்படுத்தினால், கூடுதலான மக்கள் மத்தியில் நமது கருத்துக்களை கொண்டு சேர்க்க முடியும்.

5.338 மேற்கண்ட ஒவ்வொரு முயற்சியிலும் மாவட்டத்தில் ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் இணையதள செயல்பாட்டாளர்களின் ஒத்துழைப்பும் புதிய இளம் இணையதள செயல்பாட்டாளர்களை நம்மோடு இணைப்பது மிக முக்கியமானதாகும். மாவட்டக்குழுக்களும் மாவட்டங்களில் இதற்கென பொறுப்பளிக்கப்பட்டவரும் இதன் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டதாக தெரியவில்லை. வளர்ந்து விரிந்து வரும் ஊடகம் என்ற முறையில் கார்ப்பரேட் ஊடகங்களில் புறக்கணிப்பையும் ஒதுக்குதலையும் மீறி இதை நமக்காக பயன்படுத்த வாய்ப்பிருப்பதை உணர வைப்பதும், மாவட்ட அளவில் கூடுதல் ஒத்துழைப்பை உத்தரவாதப்படுத்துவதும் அவசியமாகும்.

பாரதி புத்தகாலயம்

5.339 கட்சி அணிகளின் சித்தாந்த மட்டத்தை மேம்படுத்தும் நோக்கிலும் கட்சிக்கு வெளியிலான மக்களிடம் அறிவியல் பூர்வமானதும், வரலாற்று ரீதியாக உண்மையானதுமான கருத்துகளைப் பரப்பவும், பாரதி புத்தகாலயம் 2002 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. குழந்தைகள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கவும் அறிவியல் பூர்வமான பார்வையை ஏற்படுத்தவும் உதவும் விதமாக 2006 ஆம் ஆண்டு முதல் குழந்தைகளுக்கான நூல்களும் வெளியிடப்பட்டு வருகின்றன. இது நமது தொடர்பு மற்றும் செல்வாக்குப் பரப்பை விரிவாக்க உதவியுள்ளது. கல்வி குறித்த நூல்கள் அறிவுத் தளத்திலும் ஆசிரியர்கள் மத்தியிலும் பெரிதும் விவாதிக்கப்பட்டவையாக இருந்தன. புத்தகங்களையும் ஆசிரியர்களையும் அறிமுகம் செய்யும் விதமாக பாரதி புத்தகாலயத்தால் நடத்தப்படும் புத்தகம்

பேசுது மாத இதழும் அது கொண்டு வந்துள்ள சிறப்பு மலர்களும் எழுத்தாளர்கள், அறிவுஜீவிகள் மற்றும் கல்வி வளாகத்தினர் மத்தியில் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது. அடிப்படை அறிவியல், தத்துவம், பொருளாதாரம், அரசியல், வரலாறு, சூழலியல், இலக்கியம் என பல்வேறு வகையில் 1300க்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. பல நூல்கள், தமுஎகச, கலை இலக்கியப் பெருமன்றம், விகடன், 'நல்லி திசை எட்டும் உள்ளிட்ட பல விருதுகளை பெற்றுள்ளன. குழந்தை இலக்கியத்திற்கான சாகித்ய அகடெமியின் 2014 ஆம் ஆண்டிற்கான விருது ஆயிஷா .இரா. நடராசன் எழுதிய விஞ்ஞான விக்கிரமாதித்தன் எனும் நூலுக்கு வழங்கப்பட்டுள்ளது. நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலின் போது பாரதி புத்தகாலயம் வெளியிட்ட 15 சிறு பிரசுரங்கள் பல்லாயிரம் பிரதிகள் வெளியிடப்பட்டுள்ள பல சிறு பிரசுரங்களும் தொடர்ந்து சிறந்த பிரச்சார சாதனமாகப் பயன்பட்டு வருகின்றன.

5.340 பாரதி புத்தகாலயத்திற்கென்று ஒரு உபகுழு இயங்கிவருகின்றது. ஆண்டுத் திட்டம் மற்றும் நூல் தேர்வு ஆகியவை குறித்து உபகுழு ஆலோசனை வழங்கி வருகின்றது. இந்த உபகுழு கடந்த மாநாட்டிற்குப் பிறகு ஏழுமுறை கூடியுள்ளது. திருவாரூர், நாகை, கரூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், சிவகங்கை, திருவள்ளூர், இராமநாதபுரம், நீலகிரி, நாமக்கல், புதுக்கோட்டை, தூத்துக்குடி தவிர்த்து ஏனைய மாவடங்களில் ஓரளவு நிரந்தரமான நூல் விற்பனை ஏற்பாடுகள் உள்ளன. மதுரை, திண்டுக்கல், திருப்பூர், ஈரோடு, கோவை, வேலூர் ஆகிய இடங்களில் காட்சி கடைகள் உள்ளன. ஏனைய மாவட்டங்களில் மாவட்டக் குழு அலுவலகங்களிலேயே விற்பனை மையங்கள் செயல்படுகின்றன. சென்னையில் செயல்படும் மையக் கடை விரிவுபடுத்தப்பட்டு இயங்கி வருகின்றது. ஏற்கனவே இருந்த 1000 சதுர அடி குடோனோடும் ஒரு சிறிய புதிய குடோனும் அமைக்கப்பட்டுள்ளது.

5.341 ஆண்டிற்காண்டு விற்பனை அதிகரித்து வருகின்றது. 2011 ஆம் ஆண்டு சுமார் 1 கோடி என இருந்த விற்பனை, நடப்புக்கணக்காண்டில் 2 கோடியைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. விருதுநகர், திண்டுக்கல், திருநெல்வேலி, கோவை, திருச்சி ஆகிய மாவட்டக் குழுக்களும், சென்னை பி.எஸ்.என்.எல் அரங்கமும் பரவலாக நடத்திய புத்தகக் கண்காட்சிகள் நல்ல வரவேற்பை பெற்றன.

5.342 எதிர்காலத் திட்டம்

1. பல மாவட்டக் குழுக்களில் இருந்து வரவேண்டிய நிலுவைகள் பாரதி புத்தகாலயத்தின் விரிவாக்க செயல்பாடுகளை பாதிப்பதாக இருக்கின்றது.

2. மாவட்டக் குழுக்கள் கூடுதல் கவனம் செலுத்தினால் விற்பனையைக் கணிசமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. விற்பனை இயக்கம், புத்தகக் கண்காட்சிகள் ஆகியவற்றை தமுஎகச, அறிவியல், மாணவர், வாலிபர், ஆசிரியர் அமைப்புகளை இணைத்து நடத்துவது விற்பனையை அதிகரிப்பது கட்சிக் கருத்துகள் பரவுவதற்கும் அரசியல் பிரச்சாரம் நடத்துவதற்கும் வாய்ப்புகளை உருவாக்கும். மாவட்டக் குழுக்கள் நிரந்தர காட்சி அரங்கக் கடைக்கும் ஒரு பொறுப்பாளருக்கும் ஏற்பாடு செய்திட வேண்டியுள்ளது.

   இலக்கியம், சுற்றுச் சூழல் ஆகிய துறைகளில் நமது தலையீட்டையும் அதற்கான நூல்களையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. தமிழ்நாடு அறிவியல் இயக்கம் பல இடங்களிலும், தமுஎகச சில இடங்களிலும் நடத்திய வாசிப்பு முகாம்கள் பரஸ்பரம் பயனுள்ள நிகழ்வுகளாக இருந்துள்ளன. தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இதனைத் தொடர வேண்டும். தமுஎகச இதனைப் பரவலாக்க வேண்டும். ஏனைய அரங்கங்களும் இந்த வடிவத்தைப் பயன்படுத்த வேண்டும்.

மார்க்சிஸ்ட் இதழ்

5.343 மார்க்சிய அடிப்படைத் தத்துவம், அரசியல் பொருளாதாரம், சோசலிசம் போன்றவற்றில் பல தலைப்புகளில் கட்டுரைகளை மார்க்சிஸ்ட் கொண்டு வந்துள்ளது. அன்றாட நிகழ்வுகளிலும் மார்க்சிய நோக்கில் பல படைப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளன. வகுப்புவாதம், நவீன தாராளமயம் என முன்னுக்கு வந்துள்ள சூழலில் பல கோணங்களில் கட்டுரைகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

5.344 தேசம், சர்வதேசிய நிலை, தத்துவம், பொருளாதாரம், அன்றாட நடப்புக்கள், சமூக ஒடுக்குமுறை, கல்வி, சுகாதாரம், பாலியல் உள்ளிட்ட பல தலைப்புகளில் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. கலை, இலக்கியம், பண்பாட்டுத்துறையில் படைப்புகள் மிகவும் குறைவு. பன்முகத்தன்மையினை கொண்டதாக உள்ளடக்கத்தை உயர்த்திட வேண்டிய தேவை உள்ளது.

5.345 மார்க்சிஸ்ட் வாசிப்பினை பரவலாக கட்சி அணிகளிடம் ஊக்குவிக்க வேண்டியுள்ளது. காஞ்சிபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், மதுரை மாநகர், தென்சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் மார்க்சிஸ்ட் வாசிப்பு வட்டம் நடத்தப்படுகிறது. வாசிப்பு ஆர்வத்தை உயர்த்திட இந்த முயற்சிகள் பயன்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் மார்க்சிஸ்ட் வாசகர் வட்டங்கள் அமைத்திட கட்சி மாவட்டக்குழுக்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

5.346 ஆசிரியர் குழு கூட்டங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டாலும், பங்களிப்பில் தொடர்ந்து பலவீனம் உள்ளது. ஆசிரியர் குழுவின் செயல்பாட்டை மேம்படுத்திட வேண்டும், ஆசிரியர் குழுவிற்கு அப்பாற்பட்டு பல பங்களிப்பாளர்களை நிச்சயித்து படைப்புக்களை பெற வேண்டும்.

5.347 தற்போது நீண்ட காலமாக இருந்த மேலட்டை வடிவம் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதழின் வடிவமைப்பை பெருமளவிற்கு மேம்படுத்த வேண்டியுள்ளது.

5.348 நீண்ட காலமாக விற்பனை தேக்கமடைந்து இருந்தது. அவ்வப்போது குறைவும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கட்சியின் மாநிலக்குழு திட்டமிட்டு, சிறப்புக் கருத்தரங்கள் நடத்தி விற்பனையை 13 ஆயிரம் என ஏறத்தாழ, இரு மடங்காக எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. இந்த எண்ணிக்கையை உறுதிப்படுத்த வேண்டும். இன்னமும் பல மாவட்டங்களில் மிகக் குறைவான எண்ணிக்கையில் தான் விற்பனை உள்ளது. மார்க்சிஸ்ட் விற்பனை முக்கியமான சித்தாந்தப் பணியாக கருதுகிற உணர்வை கட்சி அணிகளிடம் ஏற்படுத்த வேண்டியுள்ளது.

5.349 வருகின்ற ஆண்டுகளில் 25 ஆயிரம் என்ற அளவில் இலக்கு வைத்து விற்பனையை உயர்த்திட முயற்சிக்கலாம். விற்பனையை அதிகரிக்கவும் தொடர்ந்து பரவலாக விநியோகிக்கவும் கட்சியின் மாவட்டக்குழு, இடைக்குழுக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

5.350 மார்க்சிஸ்ட் இதழினை ஒரு பகுதி தோழர்கள் மட்டுமே வாசிக்கின்றனர். கட்சி அணிகள் வாசிப்பதில் அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை. தத்துவார்த்தக் கட்டுரைகள் வெளியிடப்படுவதால் வாசிப்பதற்கு அதிக முயற்சிகள் தேவைப்படும்.

5.351 கட்சி அணிகளின் அரசியல் தத்துவார்த்த மட்டத்தை உயர்த்திடுவதற்கான கருவியாக மார்க்சிஸ்ட் பயன்படுத்தப்பட வேண்டும். கட்சிக்கு அப்பாற்பட்ட பகுதியினரிடமும் மார்க்சிஸ்ட்டினை கொண்டு சென்று மார்க்சிய லெனினிய தத்துவப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்த வேண்டும்.

ஐடி கிளை

5.352 ஐடி கிளை மூன்று வகையான பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. கட்டற்ற மென்பொருள் பற்றிய பிரச்சாரம், தகவல் தொழில்நுட்ப ஊழியர்களை திரட்டுவது, கட்சியின் தகவல் தொழில்நுட்ப கட்டுமான வசதிகளை மேம்படுத்துவது - தகவல் தொழில்நுட்பத்தை கட்சியின் பிரச்சாரத்திற்கு பயன்படுத்துவது ஆகியவை. தற்போது 8 கிளை உறுப்பினர்களும் 1 சிறப்பு அழைப்பாளரும் உள்ளனர். கட்டற்ற மென்பொருள் இயக்கம் ஐஐடி சென்னை மற்றும் சென்னை அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்டு மாநில அளவில் பொறியியல் கல்லூரிகளில் கட்டற்ற மென்பொருள் பயிற்சி வகுப்புகள் மற்றும் கட்டற்ற மென்பொருள் பற்றிய பிரச்சாரத்தை மேற்கொள்கிறது. இந்த அரங்கத்தின் செயல்பாடுகள் தற்போது பாண்டிச்சேரி மற்றும் தமிழகத்தின் இதர மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

5.353 தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்ட நெருக்கடிகளால், எச்.சி.எல் இல் ஊழியர்களை பணியமர்த்துவதில் ஏற்பட்ட பிரச்சனை மற்றும் டி.சி.எஸ் இல் ஊழியர்கள் வெளியேற்றம் ஆகிய பிரச்சனைகளில் தலையீடு செய்தோம். மேலும் அதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, குறிப்பாக 2008க்குப் பிறகு தகவல் தொழில்நுட்பத் துறையில் வேலை பார்ப்பவர்களுக்கு பல விதமான நெருக்கடிகள் நேர்ந்து வருகின்றன. "சத்யம்" நிறுவனம் துவங்கி பல்வேறு நிறுவனங்களில் இந்தப் பிரச்சனைகள் தலைதூக்கியபோது நாம் தலையீடு செய்தும், பெரிய முறிப்பை ஏற்படுத்த முடியவில்லை. நமது கட்சித் தோழர்கள்/தலைவர்கள் குடும்பங்களிலிருந்து இந்தத் துறையில் பணியாற்றுபவர்கள் சில ஆயிரங்களுக்கு மேலிருக்கிறார்கள். அவர்களை ஒருங்கிணைக்க நாம் செய்த முயற்சிகள் இதுவரை பலனளிக்கவில்லை.

இணையதளப் பணிகள்:

5.354 கட்சியின் மாநிலக்குழு இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தீண்டாமை ஒழிப்பு முன்னணி, தீக்கதிர் மற்றும் சிஐடியு ஆகியவற்றிற்கு இணையதளங்கள் வடிவமைக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளோம். முற்போக்கு இடதுசாரித் தளமான மாற்று இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாரதி புத்தகாலயத்திற்கு என்று இணையதளத்தில் புத்தகங்கள் விற்பனை செய்யும் அளவிற்கு பிரத்தியேகமான முறையில் இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ் மார்க்சிஸ்ட், புத்தகம் பேசுது, புதிய ஆசிரியன் ஆகிய இதழ்கள் இணைதளத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் மற்ற இதழ்களையும் இணைய தளத்தில் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கட்சியின் மாநிலக்குழு அலுவலகத்திலுள்ள தோழர் ஏ.நல்லசிவன் நூலகத்திற்கு KOHA எனும் நூலக மேலாண்மை மென்பொருள் கொண்டு அதன் பணிகள் செழுமைப்படுத்தப்பட்டுள்ளது. இதை மாவட்டக்குழு நூலகங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

5.355 இணையதள ஒருங்கிணைப்புக்குழுவின் பணிகளையும் செய்து வருகிறோம். இணையதள பயிற்சி வகுப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாடாளுமன்றத் தேர்தலில் இணையதள பிரச்சாரத்தை கட்சியின் மாநிலக்குழு அலுவலகத்திலிருந்து மேற்கொண்டோம். டெல்லியில் மத்திய ஒருங்கிணைப்புக் குழு நடத்திய வகுப்பிலும் தோழர்கள் கலந்து கொண்டனர். ஐஐடி சென்னையிலும் கட்சிக் கிளை உருவாக்கப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களிலிருந்து இணையதள வடிவமைப்பிற்கான தொழில்நுட்ப உதவிகள் கேட்டுள்ளனர். இதையும் ஒருங்கிணைக்கும் முயற்சியில் தோழர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஸ்தாபனம்

6.1 கட்சி உருவாக்கிடும் அரசியல் நடைமுறை உத்தியை, அவ்வப்பொழுது கட்சியின் மத்தியக்குழு, மாநிலக்குழு எடுத்திடும் அரசியல் ஸ்தாபன முடிவுகளை வெற்றிகரமாக அமலாக்கிட தேவை வலுவான கட்சி அமைப்பு. வலுவான கட்சி மற்றும் வர்க்க, வெகுமக்கள் அமைப்புகளை உருவாக்காமல் கட்சி தீர்மானிக்கும் அரசியல் ஸ்தாபன கடமைகளை அமலாக்கிட இயலாது. மேற்கண்ட அடிப்படை அம்சங்களை கணக்கில் கொண்டு 20-வது கட்சி காங்கிரஸ் மற்றும் மாநில மாநாடு தீர்மானித்த ஸ்தாபனக் கடமைகளை தமிழகத்தில் எவ்வாறு அமலாக்கினோம், அமலாக்கத்தில் கிடைத்த அனுபவம் ஆகியவற்றை பரிசீலித்து எதிர்கால கடமைகளை தீர்மானிக்க வேண்டும்.

6.2 20 ஆவது கட்சி காங்கிரஸ் மற்றும் மாநில மாநாடு கீழ்க்கண்ட முக்கிய ஸ்தாபனக் கடமைகளை தீர்மானித்தது.

கட்சி காங்கிரஸ் தீர்மானித்த கடமைகள்

- கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அமைப்புகளின் விரைவான வளர்ச்சிக்கு திட்டமிட வேண்டும்.
- தொழிலாளர்கள், முறைசாராத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகள், மத்திய தர வர்க்க ஊழியர்கள் மற்றும் அனைத்து உழைக்கும் மக்கள் பிரிவினரைப் பாதிக்கும் பிரச்சனைகளின் மீது போராட்டங்களை கட்சியும், வெகுஜன அமைப்புகளும் நடத்திட வேண்டும்.
- சமூகப் பிரச்சனைகள் மீது இயக்கங்கள் நடத்திட வேண்டும்.
- போராட்டங்கள் நீடித்த முறையில் (Sustained) நடத்தப்பட வேண்டும்.
- போராட்டங்கள் மூலம் ஏற்படும் புதிய தொடர்புகளை ஸ்தாபன ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் உறுதிப்படுத்திட வேண்டும்.
- கட்சி அணிகளின் தரத்தை மேம்படுத்திட அவர்களுக்கு அரசியல் மற்றும் ஸ்தாபனப் பயிற்சி அளித்து ஊக்கப்படுத்திட வேண்டும்.
- போதுமான எண்ணிக்கையில் முழுநேர ஊழியர்கள் கொண்டு வரப்படுவதோடு அவர்களின் வேலைகளை பரிசீலித்து பயிற்சி அளிக்க வேண்டும்.

6.3 மாநில மாநாடு தீர்மானித்த கடமைகள்

- கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகளின் விரிவாக்கம்
- கட்சியில் ஒற்றுமை
- கட்சி அணிகளின் தரத்தை உயர்த்துதல்

மேற்கண்ட கடமைகளை அமலாக்கிட 2012 மே மாதத்தில் கூடிய மாநிலக்குழு திட்டமிட்டது. அதன் அடிப்படையில், அனைத்து மாவட்டக்குழுக்களிலும் திட்டங்கள் உருவாக்கப்பட்டு அமலாக்கப்பட்டன.

6.4 விரிவாக்கம்

- கடந்த 3 ஆண்டுகளில் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை 10,593 அதிகரித்துள்ளது.
- வர்க்க, வெகுமக்கள் அமைப்புகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 2,71,804 அதிகரித்துள்ளது.
- மாநிலம் முழுவதும் கட்சி அணிகள் மத்தியில் கட்சி மற்றும் வர்க்க, வெகுமக்கள் அமைப்புகளின்

விரிவாக்கம் பற்றிய ஒரு உணர்வை உருவாக்க முடிந்தது. ஆனால் விரிவாக்கம் போதுமானதல்ல.

6.5 உறுப்பினர்கள் விபரம்

ஆண்டு	பி.எம்	சி.எம்	மொத்தம்	கூடுதல்/குறைவு	சதவிகிதம்
2011	80350	14108	94458	--	--
2012	80734	12652	93386	-1072	-1.13
2013	81337	20726	102063	+8677	9.29
2014	90353	14698	105051	+2988	2.93

6.6 கடந்த 3 ஆண்டுகளில் சராசரியாக 4.3 சதவிகிதம் கட்சி உறுப்பினர் எண்ணிக்கையில் உயர்வு ஏற்பட்டுள்ளது. (2012-ம் ஆண்டு முந்தைய ஆண்டை விட 1.13 சதவிகிதம் குறைந்துள்ளது). தென்சென்னை மாவட்டத்தில் 1000த்திற்கு மேலாகவும், விழுப்புரம், கடலூர், கோவை, சேலம் ஆகிய மாவட்டங்களில் உறுப்பினர்கள் எண்ணிக்கை 500-க்கும் மேலாகவும் உயர்ந்துள்ளது. குறிப்பாக தென்சென்னையில் உயர்வு 1055, கிருஷ்ணகிரி, திருப்பூர், மதுரை மாநகர் ஆகிய மாவட்டங்களில் 400க்கும் மேல் உயர்வு ஏற்பட்டுள்ளது. திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, திருச்சி, தேனி ஆகிய மாவட்டங்களில் 300க்கும் மேல் உயர்வு ஏற்பட்டுள்ளது. திண்டுக்கல், தஞ்சாவூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, புதுச்சேரி, பெரம்பலூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 100க்கும் மேல் உயர்வு ஏற்பட்டுள்ளது. தருமபுரியில் 2176 உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. தருமபுரி மாவட்டத்தில் சிபிஐ-லிருந்து நமது கட்சிக்கு கணிசமான தோழர்கள் வந்ததால் இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது.

6.7 விரிவாக்கத்திற்கு திட்டமிட்டு முயற்சி எடுத்த மாவட்டங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக தென்சென்னை மாவட்டக்குழு கடந்த மூன்றாண்டுகளில் உறுப்பினர் புதுப்பித்தலை எவ்வித தாராளவாதமுமின்றி நடத்தியதாகப் பரிசீலித்துள்ளது. இது பற்றி மாவட்டக்குழுவின் அறிக்கை,

6.8 "ஆண்டுதோறும் விரிவான முறையில் அறிக்கை வைத்து உறுப்பினர் பரிசீலனை செய்வதில் கவனம் செலுத்தப்பட்டது. படிவம் வராமல் உறுப்பினர் சந்தா பெறுவதில்லை என்ற முடிவு கறாராக அமல்படுத்தப்படுகிறது. மாவட்ட மையத்தில் லெவி கட்டாத எந்த உறுப்பினர் படிவத்தையும் பெறுவதில்லை என்ற முடிவு அமலாக்கப்பட்டு வருகிறது." என்று தெரிவிக்கிறது. கட்சி உறுப்பினர் புதுப்பித்தலில் கறாராக இருந்ததும் அதே நேரத்தில் 40.09 சதவிகிதம் உயர்வு ஏற்பட்டிருப்பதும். விரிவாக்கத்திற்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருப்பதை வெளிப்படுத்துகிறது.

6.9 வேலூர், நாமக்கல், இராமநாதபுரம், விருதுநகர், மதுரை புறநகர் ஆகிய மாவட்டங்களில் உறுப்பினர் எண்ணிக்கையில் சிறிதளவு உயர்வு ஏற்பட்டுள்ளது. திருவள்ளூர், கரூர், ஈரோடு, சிவகங்கை, தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

6.10 மூன்றாண்டுகளில் அதிகரித்துள்ள 10,593 கட்சி உறுப்பினர்களில் 13 மாவட்டங்களிலிருந்து மட்டும் 7,445 உயர்வு ஏற்பட்டுள்ளது. மீதமுள்ள 21 மாவட்டங்களில் 15 மாவட்டங்களில் சிறிதளவு உயர்வு ஏற்பட்டுள்ளது. 5 மாவட்டங்களில் எண்ணிக்கை குறைந்துள்ளது. எல்லா மாவட்டங்களிலும் விரிவாக்கத்திற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தேக்கமுள்ள மாவட்டங்களிலும் எண்ணிக்கை குறைந்துள்ள மாவட்டங்களிலும் இதற்கான காரணங்களைக் கண்டறிந்து தடைகளைக் களைய வேண்டும்.

6.11 விரிவாக்கம் என்பது எண்ணிக்கை உயர்வு மட்டுமல்ல; புதியபகுதிகளுக்குச் செல்வது என்பதை உள்ளடக்கியதாகும். புதிய கிராமங்களிலும் - நகரங்களிலும் கிளைகளை உருவாக்குவதோடு தற்போது கிளைகள் உள்ள இடங்களில் புதியகிளைகளை உருவாக்கிட வேண்டும். மேலும் அனைத்து உழைக்கும் மக்கள் மத்தியிலும் கிளைகளை உருவாக்கிட வேண்டும்.

விடுபடுதல்

6.12 விடுபடுதலை குறைத்திருந்தால் விரிவாக்கம் மேலும் அதிகரித்திருக்கும். விடுபடுதலை குறைப்பது விரிவாக்கத்தின் முக்கிய பகுதி என்ற அடிப்படையில் உணர்த்தப்பட்டாலும், விடுபடுதல் சதவிகிதம் அதிகமாகவே உள்ளது.

உறுப்பினர்கள் விடுபடுதல்

ஆண்டு	உறுப்பினர்	விடுபடுதல்	சதவிகிதம்
2011	பி.எம் + சி.எம்	13408	14.1
2012	பி.எம் + சி.எம்.	10320	11
2013	பி.எம் + சி.எம்.	9718	10.6
2014	பி.எம் + சி.எம்	10508	10.3

♦ விடுபடுதலுக்கான காரணங்களை துல்லியமாக கண்டறிந்து விடுபடுதலை குறைக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென மாநிலக்குழு முடிவு செய்தது. விடுபடுவர்களில் 60 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள் செயல்பாடின்மையாலும், லெவி தராமையாலும் விடுபடுவதாக மாவட்டக்குழு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த அம்சங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

20-வது மாநில மாநாடு சுட்டிக் காட்டிய விடுபடுதலுக்கான காரணங்கள்:

6.13 "கட்சிக் கிளைகள் முறையாக செயல்படாதது, கட்சி உறுப்பினர்களை செயல்பட வைக்காதது, உள்ளூர் மக்கள் பிரச்சனைகளில் இயக்கம் நடத்தி கட்சி உறுப்பினர்களை உற்சாகப்படுத்தாதது, கட்சி உறுப்பினர்களுக்கு பொருத்தமான வேலைப்பிரிவினை செய்யாதது, கட்சி உறுப்பினர்களை வர்க்க வெகுஜன ஸ்தாபனங்களில் முழுமையாக செயல்பட வைக்கத் தவறியது, கிளையில் ஸ்தாபன பிரச்சனை ஏற்பட்டால் உடனடியாக தீர்த்து வைக்காதது, மாதா மாதம் லெவி வசூலித்திட முயற்சிக்காதது, தீக்கதிர் வாசிப்பு உள்ளிட்ட கடமைகளை கட்சி உறுப்பினர்கள் நிறைவேற்றாதது, ஒருவர் கட்சி உறுப்பினராக இருப்பது தனது வாழ்க்கையில் கிடைத்த நல்ல வாய்ப்பு என்று உணர்த்தப்படாதது போன்ற காரணங்களினால் கட்சி உறுப்பினர்கள் விடுபடுகிறார்கள். இடம் பெயர்ந்து போவது, இறப்பு போன்ற சில காரணங்களினால் விடுபடுதல் இருந்தாலும், மேற்கண்டவை பெரும்பான்மையான உறுப்பினர்கள் விடுபடுதலுக்கு காரணங்களாக உள்ளன."

6.14 கட்சி உறுப்பினராக இருப்பதை ஒருவர் பெருமையாகக் கருதிடும் உணர்வை ஊட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் **'மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சாதனை சரித்திரம்'** பாடக்குறிப்பு உருவாக்கி கட்சி அணிகளுக்கு வகுப்பு எடுக்க வேண்டும் என்று முடிவு செய்தோம். மேலும் 20 ஆவது கட்சி காங்கிரஸ் நிறைவேற்றிய தத்துவார்த்த தீர்மானத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து விரிவான விளக்கக் குறிப்பு உருவாக்கி அதனடிப்படையில் கட்சி அணிகளுக்கு வகுப்பு எடுக்க வேண்டுமென்றும் முடிவு செய்தோம். மேற்கண்ட தலைப்புகளில் இடைக்கமிட்டி உறுப்பினர்கள் வரை வகுப்புகள் நடைபெற்றது. கட்சி உறுப்பினர்களுக்கு எடுத்துச் செல்ல முடியவில்லை. இருப்பினும் சில மாவட்டக்குழுக்கள் இதில் முறிப்பை ஏற்படுத்த முயற்சித்துள்ளன.

6.15 சில பகுதிகளில் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால் விடுபடுதலை குறைக்க முடியவில்லை. உதாரணமாக விழுப்புரம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக கட்சி உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்து வந்திருக்கிறது. 2014ம் ஆண்டு 21 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. அதேநேரத்தில் விடுபடுதல் சதவிகிதமும் அதிகமாக உள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் விடுபடுதல் மாநில சராசரி 10.6 சதவிகிதம். ஆனால், விழுப்புரம் மாவட்டத்தில் விடுபடுதல் மூன்றாண்டு சராசரி 16.92 சதவிகிதமாக உள்ளது.

6.16 வங்கி, பிஎஸ்என்எல் மற்றும் விசேஷ அரங்கங்கள் உள்ளிட்ட மத்திய தர அரங்கங்களில் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை குறைந்துள்ளது. மேலும் தொழிற்சங்க அரங்கத்தில் முறைசாராத் தொழிலாளர்கள் மத்தியிலும் மாணவர்கள், வாலிபர் அரங்கத்திலும் விரிவாக்கத்திற்கு திட்டமிட வேண்டுமென்று முடிவெடுத்தோம். ஆனால் அமலாகவில்லை.

6.17 கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை 3 ஆண்டுகளில் சில மாவட்டங்களில் குறைந்துள்ளதற்கும், சில மாவட்டங்களில் தேக்கம் நீடிப்பதற்கும் இத்தகைய மாவட்டங்கள் விரிவாக்கத்திற்காக மாநிலக்குழு எடுத்த முடிவை சரியாக அமலாக்காதது ஒரு முக்கியமான காரணமாகும்.

துணைக்குழு

6.18 கட்சி உறுப்பினராவதற்கு நுழைவாயில் துணைக்குழு. கடந்த மூன்று ஆண்டுகளில் வடசென்னை, தென்சென்னை, கடலூர், விழுப்புரம், கோவை, திண்டுக்கல், மதுரை மாநகர், புறநகர் ஆகிய மாவட்டங்களே 1000-த்திற்கும் மேற்பட்ட துணைக்குழு உறுப்பினர்களை சேர்த்துள்ளன.

ஆண்டு	துணைக்குழு உறுப்பினர்கள்	பரிட்சார்த்த உறுப்பினர்கள்
2011	16,581	
2012	17,732	12,652
2013	15,397	20,726
2014	22,984	14,698

- 2013ம் ஆண்டு வரை பதிவுப் பரிசீலனையின் போது பரிட்சார்த்த உறுப்பினர்களிலிருந்து கட்சி உறுப்பினர்களாக உயர்த்த முடியாதவர்கள் பரிட்சார்த்த உறுப்பினர்கள் பட்டியலிலேயே வைக்கப்பட்டிருந்தனர். (இதனால்தான் 2012-ம் ஆண்டு இருந்த துணைக்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கையை விட 2013ம் ஆண்டு பரிட்சார்த்த உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.) ஆனால் கட்சி அமைப்புச்சட்டம் பரீட்சார்த்த உறுப்பினர் குறித்து கீழ்க்கண்டவாறு வழிகாட்டுகிறது:
- "பரீட்சார்த்த காலம் முடியும் பொழுது சம்பந்தப்பட்ட கட்சிக்கிளையோ, அல்லது கட்சி கமிட்டியோ ஒரு பரீட்சார்த்த உறுப்பினர் கட்சியில் முழு உறுப்பினர் ஆவதற்குத் தகுதி பெற்றிருக்கிறாரா என்பதை விவாதிக்க வேண்டும், ஒரு பரீட்சார்த்த உறுப்பினர் தகுதியற்றவர் என்று காணப்பட்டால் கட்சி கிளையோ அல்லது கமிட்டியோ அவரது பரீட்சார்த்த உறுப்பினர் தகுதியை ரத்து செய்ய வேண்டும்" (பிரிவு 4, உபபிரிவு 8). 2014ம் ஆண்டு முதல் அமைப்புச்சட்டத்தின் அடிப்படையிலேயே பரீட்சார்த்த உறுப்பினர் புதுப்பித்தல் /விடுவித்தல் நடைபெற்றுள்ளது.
- கடந்த மாநாட்டில் விரிவாக்கத்தை விவாதப் பொருளாக்கி மாநாட்டிற்குப் பிறகு மாநிலக்குழுவில் திட்டமிட்டு மாவட்டக்குழுக்களுக்கு எடுத்துச் சென்று இடைக்குழுக்கள், கிளைகள் மூலமாக அமலாக்கிட எடுத்த முயற்சியினால் தேக்கம் உடைந்துள்ளது. ஆனால் மாநிலக்குழுவில் முடிவெடுக்கிற போது இருந்த முனைப்பு கீழே செல்லச் செல்ல குறைகிறது. இதனால் விரிவாக்கம்

போதுமானதாக இல்லை. இடைக்குழுக்கள், கட்சிக் கிளைகள் விரிவாக்கத்தை முக்கியமான பணியாக கருதாத வரையில் எதிர்பார்க்கிற விரிவாக்கம் நடைபெறாது. அதேநேரத்தில் மாநில செயற்குழுவிலிருந்து மாவட்டக்குழு வரை அவ்வப்போது விரிவாக்கம் பற்றி பரிசீலனை செய்து இடைக்கமிட்டிகளையும், கிளைகளையும் ஊக்குவிக்க வேண்டியுள்ளது.

♦ கடந்த மாநில மாநாட்டிற்குப் பிறகு 2012, 2013, 2014 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் கட்சி உறுப்பினர் பதிவு பரிசீலனையை மாநிலக்குழு மேற்கொண்டது. விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

6.19 கட்சி உறுப்பினர் தகுதி ஆய்வு விபரங்கள்

1. வர்க்க பின்னணி (சதவிகிதத்தில்)

	2012	2013	2014
தொழிலாளி	47.3	43.5	48
வி.தொழிலாளி	25.7	21.9	28
ஏழை விவசாயி	14.6	11.1	14.7

2. சமூகப் பின்னணி (சதவிகிதத்தில்)

	2012	2013	2014
தலித்	30.4	31.7	30.7
பழங்குடி	1.5	1.8	1.55
முஸ்லிம்	2.8	2.7	2.9
கிறித்தவர்	5.7	5.5	6.9

3. வயது விபரம் (சதவிகிதத்தில்)

	2012	2013	2014
25 வரை	5.7	5.9	5.19
26-30 வரை	12	12.7	9.67
31-40 வரை	25.2	26.1	20.08

4. பெண்கள் (சதவிகிதத்தில்)

2012	2013	2014
15.1	16.8	16.9

5. மாநிலக்குழுவிற்கு வந்த லெவி

2012	2013	2014
22,49,286	28,03,531	32,38,273

6. கட்சி உறுப்பினர் எண்ணிக்கை விபரம்

	2012	2013	2014
5000க்கு மேல் உள்ள மாவட்டக்குழுக்கள்	1	3	4
4000-5000 வரை உள்ள மாவட்டக்குழுக்கள்	7	7	5
3000-4000 வரை உள்ள மாவட்டக்குழுக்கள்	6	8	10
2000-3000 வரை உள்ள மாவட்டக்குழுக்கள்	6	4	4
1000-2000 வரை உள்ள மாவட்டக்குழுக்கள்	11	10	9
1000க்கும் குறைவு உள்ள மாவட்டக்குழுக்கள்	3	2	2

6.20 கட்சி உறுப்பினர்களின் உள்ளடக்கத்தில் தொழிலாளி, விவசாயத் தொழிலாளி, ஏழை விவசாயிகள் சதவிகிதம் 2012 ல் 87.6 ஆக இருந்தது 2014ல் 90.7 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

6.21 இதில் தலித் மற்றும் பழங்குடி மக்களை கூடுதலாக கட்சிக்குள் கொண்டு வர வேண்டுமென்று கட்சி முடிவு செய்தது. 2012ம் ஆண்டு தலித் மற்றும் பழங்குடி பகுதியைச் சார்ந்த கட்சி உறுப்பினர்கள் 31.9 சதவிகிதம். 2014ம் ஆண்டு 32.25 சதவிகிதமாகியுள்ளது. சிறிதளவு உயர்ந்துள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் தீண்டாமை ஒழிப்பிற்கான இயக்கம் மாநிலம் முழுவதும் நடைபெற்றுள்ளது. இருப்பினும் ஏன் கட்சி உறுப்பினர்களில் தலித் உறுப்பினர்கள் எண்ணிக்கை உயரவில்லை ? பல பகுதிகளில் கோரிக்கைகளை வென்றெடுத்திருக்கிறோம். நாம் நடத்திய தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் கலந்து கொண்ட கட்சிக்கு அப்பாற்பட்ட தலித் மக்களின் ஒரு பகுதியை கட்சிக்குள் கொண்டுவர திட்டமிட்ட முயற்சி எடுத்திருந்தால் கட்சி உறுப்பினர் எண்ணிக்கையில் தலித் பகுதியினர் எண்ணிக்கையை கூடுதலாக உயர்த்தியிருக்க முடியும்.

6.22 2012ம் ஆண்டு 15.1 சதவிகிதமாக இருந்த பெண் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை 2014ல் 16.9 சதவிகிதமாக அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

6.23 கடந்த மூன்றாண்டுகளில் விரிவாக்கத்தில் சிறுபான்மை மக்கள் பகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை எதிர்பார்ப்பிற்கேற்ப உயரவில்லை என்பதைப் பரிசீலித்து உயர்த்துவதற்கு தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

6.24 இளைய தலைமுறையினரை கட்சிக்குள் கூடுதலாக சேர்த்திட வேண்டுமென்று முடிவு செய்தோம். 25 வயதிற்குட்பட்ட இளம் வயதுடையோர் 2012ல் 5.7 சதவிகிதமாக இருந்து 2014ல் 5.19 ஆக குறைந்துள்ளது. 26 முதல் 30 வயது வரையிலானவர்கள் எண்ணிக்கை 12 சதவிகிதத்திலிருந்து 9.67 சதவிகிதமாக குறைந்துள்ளது. அதைப்போலவே 31-40 வயதுடையோர் உறுப்பினர்கள் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் இளம் தலைமுறையினரை வென்றெடுக்க வேண்டுமென்று கடந்த மாநாடு எடுத்த முடிவு அமலாகவில்லை. குறிப்பாக 40 வயதிற்குட்பட்ட கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 சதவிகிதம் குறைந்திருப்பதை ஆழமாக பரிசீலித்து எதிர்காலத்தில் இளைஞர்களைக் கூடுதலாக வென்றெடுக்க முயற்சிக்க வேண்டும்.

6.25 வர்க்க - வெகுமக்கள் அமைப்புகளின் உறுப்பினர்கள்

அரங்கம்	2012	2013	2014	உயர்வு/குறைவு	சதவிகிதம்
தொழிற்சங்கம்	5,60,961	5,35,254	5,01,797	-59,164	-11.79
வி.ச.அரங்கம்	7,07,396	6,97,001	7,64,327	56,931	7.45
வி.தொ.ச.	5,55,566	6,21,063	6,61,645	1,06,079	16.03
வாலிபர்	10,53,084	9,98,083	10,00,619	-52,465	-5.24
மாதர்	6,15,870	7,01,243	7,29,182	1,13,312	15.54
மாணவர்	2,11,681	2,44,177	3,18,792	1,07,111	33.60
மொத்தம்	**37,04,558**	**37,96,821**	**39,76,362**	**2,71,804**	**6.84**

6.26 கடந்த மூன்றாண்டுகளில் வர்க்க - வெகுஜன அமைப்புகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 2,71,804 அதிகரித்துள்ளது. 19வது மாநாட்டிலிருந்து 20வது மாநாடு வரையில் உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்வு 6,39,778. கடந்தமுறை உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்வு 21.88 சதவிகிதம். ஆனால் 2012-க்கு பிறகு உயர்வு 6.84 சதவிகிதம். கடந்த மூன்றாண்டுகளில் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு சதவிகிதம் குறைந்துள்ளது. குறிப்பாக தொழிற்சங்க அரங்கத்திலும், வாலிபர் அரங்கத்திலும் உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்துள்ளது; இது பற்றி பரிசீலிக்க வேண்டும்.

வர்க்க - வெகு மக்கள் அமைப்புகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்திட

6.27 கட்சி மற்றும் வர்க்க, வெகு மக்கள் அமைப்புகளின் சார்பில் ஏராளமான இயக்கங்கள் நடத்துகிறோம். இவ்வியக்கங்களில் பங்கேற்பவர்களை சம்பந்தப்பட்ட அரங்க அமைப்புகளில் உறுப்பினர்கள் ஆக்குவதற்கு போதுமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதில்லை. உரிய முயற்சி எடுத்திருந்தால் வர்க்க, வெகுமக்கள் அமைப்புகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்திருக்கும். இந்த குறைபாட்டிற்கு என்ன காரணம் என்று பரிசீலிக்க வேண்டும்.

6.28 கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு (வேலைப் பிரிவினையில் விதிவிலக்கு அளித்தால் தவிர) வர்க்க வெகு மக்கள் அமைப்பில் வேலை செய்ய வேண்டுமென்ற கடமை அமலாக்கப்படுகிறதா? கட்சி உறுப்பினர் பதிவு படிவத்தில் வர்க்க வெகுஜன அமைப்பில் வேலை செய்கிறாரா என்ற கேள்வி இருந்தாலும் மாநிலக்குழுவிற்கு வரும் அறிக்கைகளில் இந்த விபரம் துல்லியமாக இல்லை. சில மாவட்டங்களை தவிர பெரும்பான்மையான மாவட்ட மாநாட்டு அறிக்கைகளிலும் இந்த விபரங்கள் இல்லை.

6.29 கணிசமான ஸ்தல கட்சி கிளைகள் செயல்படும் பகுதிகளில் வர்க்க வெகுஜன அமைப்புகள் ஒன்று கூட இல்லாத நிலைமை பல மாவட்டங்களில் உள்ளது. தென்சென்னையில் ஸ்தல கிளைகள் 261ல் 85 கிளைகள் உள்ள பகுதிகளில் வர்க்க வெகுஜன அமைப்புகள் இல்லை. மதுரை மாநகரில் 2202 கட்சி உறுப்பினர்கள் வெகுஜன அரங்கில் பணியாற்றுவதில்லை. வடசென்னையில் 801 கட்சி உறுப்பினர்கள் (16.9 சதவிகிதம்) அரங்க வேலைகள் எதுவும் செய்வதில்லை. நெல்லை மாவட்டத்தில் 56 கிளைகள் உள்ள பகுதிகளில் வெகு மக்கள் அமைப்புகள் இல்லை. சில மாவட்டங்களில் கட்சி உறுப்பினர்கள், வர்க்க வெகுஜன அமைப்புகளில் வேலைசெய்கிறார்களா என்பது சரியாக பரிசீலிக்கப்படவில்லை.

6.30 2013ம் ஆண்டு 28 மாவட்டக்குழுக்கள் அளித்துள்ள பதிவுப் பரிசீலனை அறிக்கைகளின்படி இம்மாவட்டங்களில் உள்ள மொத்த கட்சி உறுப்பினர்கள் 86,074ல், 53,796 தோழர்களே அரங்கங்களில் வேலை செய்வதாகக் குறிப்பிட்டுள்ளனர். மூன்றில் ஒரு பகுதி கட்சி உறுப்பினர்கள் அரங்கங்களில் வேலை செய்வதில்லை.

6.31 மாநிலத்தில் உள்ள மொத்த கட்சி உறுப்பினர்களில் சுமார் 50 சதவிகித தோழர்கள் எந்த வர்க்க - வெகுமக்கள் அமைப்புகளிலும் வேலை செய்யாதது வேகமான விரிவாக்கத்திற்கு தடையாக அமைந்துள்ளது. இதனால் சம்பந்தப்பட்ட கட்சி உறுப்பினர்களின் அரசியல் ரீதியான வளர்ச்சியும் பாதிக்கிறது, வர்க்க - வெகுஜன அமைப்புகளின் விரிவாக்கமும் பாதிக்கிறது. எனவே எதிர்காலத்தில் அனைத்து கட்சி உறுப்பினர்களும் ஏதாவது ஒரு வர்க்க - வெகுஜன அமைப்புகளில் வேலை செய்வதை உத்தரவாதப்படுத்திட வேண்டும்.

கட்சி அணிகளின் தரத்தை உயர்த்திட

6.32 கட்சி அணிகளுக்கு கட்சிக் கல்வி, ஸ்தாபனப் பட்டறை உள்ளிட்ட வடிவங்களில் பயிற்சி அளித்து தரத்தை உயர்த்திட முயற்சிகளை மேற்கொண்டோம், இருப்பினும் கட்சி அணிகளின் தரத்தை

உயர்த்துவதில் நாம் போதுமான வெற்றி பெறவில்லை. தரம் உயர்த்துவது கட்சிக்கல்வி, ஸ்தாபன பட்டறை மட்டும் அல்ல: அது பல அம்சங்களைக் கொண்டது. ஒரு கம்யூனிஸ்ட் மக்கள் மத்தியில் எப்படி செயல்பட வேண்டுமென்று லெனின் சுட்டிக்காட்டியதை இங்கே மேற்கோள் காட்டுவது பொருத்தமாக இருக்கும்;

6.33 "தத்துவாசிரியர்கள், பிரச்சாரக்கர்த்தாக்கள், கிளர்ச்சியாளர்கள், அமைப்பாளர்கள் என்கிற வகையில் நாம் மக்களின் எல்லா வர்க்கங்களிடையேயும் போக வேண்டும். பல்வேறு வர்க்கங்களின் சமுதாய, அரசியல் நிலைமையின் தனிக்குறிப்பான எல்லா முனைப்புக் கூறுகளையும் பயில்வதை சமூக - ஜனநாயகவாதிகளின் (கம்யூனிஸ்டுகள்) தத்துவார்த்தப் பணி தனது குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும்."

6.34 கட்சி அணிகளின் தரத்தை உயர்த்துவதென்பது வெகுஜன புரட்சிக் கட்சியை கட்டுவது என்பதேயாகும். வெகுஜன புரட்சிக் கட்சியை கட்டிட வேண்டுமென 1978-ல் சால்கியா ஸ்தாபன சிறப்பு மாநாடு முடிவெடுத்தது. 14 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக்கடமை எவ்வாறு அமலாக்கப்பட்டது என்பது குறித்து 14-வது கட்சி காங்கிரஸ் (1992) பரிசீலித்து கீழ்க்கண்டவாறு சுட்டிக்காட்டியது.

6.35 "கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை விரிவடைகிற போது, அவர்களது வேலையை பரிசீலித்திடவும், கட்சிக்கல்வி அளித்திடவும், அவர்களுக்கு பயிற்சி அளித்திடவும் கட்சி தவறிவிட்டது. மேலும் கட்சி அமைப்புச்சட்டம் 11-வது அத்தியாயம் குறிப்பிடக்கூடிய கடமைகளை கட்சி உறுப்பினர்கள் அமலாக்கிடுவதை உத்தரவாதப்படுத்திட வேண்டும்".

6.36 1992ம் ஆண்டு 14-வது கட்சி காங்கிரஸ் சுட்டிக்காட்டிய பிறகு கடந்த 22 ஆண்டுகளில் கட்சிக் கல்வி மற்றும் பயிற்சிப் பட்டறைகள் மூலமாக கட்சி அணிகளின் தரத்தை உயர்த்திட சில முயற்சிகளை மேற்கொண்டோம். ஸ்தாபன பட்டறை, கட்சி வகுப்பு மட்டும் போதாது. கட்சி அணிகளுடைய அரசியல் தத்துவார்த்த பிடிமானத்தை உயர்த்துவதோடு போராட்டம் உள்ளிட்ட நடைமுறைப் பணிகளிலும் ஈடுபடுத்திட வேண்டும். இதனடிப்படையில் பரிசீலித்தால் கட்சியின் அமைப்புச் சட்டம் 11-வது அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து அம்சங்களின் அடிப்படையில் கட்சி உறுப்பினர்களை நாம் பயிற்றுவிக்கவில்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

6.37 வெகுஜன புரட்சி கட்சியை கட்டிட கட்சி அமைப்புச்சட்டம் 11-வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட கடமைகளை அமலாக்கிட கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் பயிற்சி அளிக்க வேண்டும்.

6.38 **கட்சி வேலைகளில் பங்கேற்பது, கட்சி முடிவுகளை அமலாக்குவது, மார்க்சிய-லெனினியத்தை பயில்வது மேலும் மேம்படுத்திக் கொள்வது, கட்சி பத்திரிகைகள், பிரசுரங்களை படிப்பதோடு, மக்களுக்கு எடுத்துச் செல்வது, கட்சிக் கட்டுப்பாட்டை கடைப்பிடிப்பது, மக்களுக்கு சேவை செய்வதோடு மக்கள் நலனை காப்பது, மக்களோடு தொடர்பு கொள்வது, அவர்களிடமிருந்து கற்றுக் கொள்வது, ஏதாவது ஒரு வெகுஜன அமைப்பில் வேலை செய்வது, தோழமை உணர்வை வளர்ப்பது, விமர்சனம், சுயவிமர்சனத்தை கடைப்பிடிப்பது, கட்சியின்பால் திறந்த மனதோடு, நேர்மையாக இருப்பதோடு, கட்சிக்கு நம்பிக்கைக்கு உரிய முறையில் நடந்து கொள்வது, கட்சி ஒற்றுமையைப் பாதுகாப்பது போன்ற கடமைகளை கட்சி உறுப்பினர்கள் அமலாக்குவதை உத்தரவாதப்படுத்த வேண்டும்.**

6.39 மேற்கண்ட அம்சங்கள் கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, கட்சியில் அனைத்து மட்டத்திலுள்ள தோழர்களுக்கும் பொருந்தும்.

6.40 நாம் அளித்த அரசியல் பயிற்சி பெரும்பான்மையாக இடைக்குழு உறுப்பினர்கள், கிளைச் செயலாளர்களோடு நின்றுவிட்டது. கட்சி உறுப்பினர்களில் ஒரு சிறு பகுதியினரே - (20 சதவிகிதம்) கலந்து கொண்டனர். கிளைக்கூட்டம் முறையாக மாதம் ஒருமுறை நடந்திருந்தால் இந்த பங்கேற்பை அதிகமாக்குவதோடு தரத்தை உயர்த்திடவும் முடிந்திருக்கும்.

6.41 14-வது கட்சிக் காங்கிரஸ் சுட்டிக்காட்டிய அடிப்படையில் எதிர்காலத்தில் கட்சி அணிகளுக்கு பயிற்சி அளித்து தரத்தை உயர்த்திட திட்டமிட வேண்டும்.

கோஷ்டிப் போக்கை களைந்திட

6.42 கட்சியின் 20வது மாவட்ட மாநாடுகளில் வடசென்னை, வேலூர், சேலம், கோவை, திருச்சி, கிருஷ்ணகிரி, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் கோஷ்டிப்போக்கு இருந்தது. இந்த கோஷ்டிப்போக்கை களைய மாநிலக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று 20வது மாநில மாநாடு முடிவு செய்தது.

6.43 வடசென்னை மாவட்டக்குழு கலைக்கப்பட்டு அமைப்புக்குழு உருவாக்கப்பட்டது. 2013ல் வடசென்னையில் சிறப்பு மாநாடு நடத்தப்பட்டு புதிய மாவட்டக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. வடசென்னையில் ஒரு இடைக்குழுவைத் தவிர்த்து அனைத்து இடைக்குழு மாநாடுகளும், 21வது மாவட்ட மாநாடும் ஜனநாயகப்பூர்வமாக நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார். வடசென்னையில் கோஷ்டிப்போக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

6.44 திருச்சி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய மாவட்டங்களிலும் கோஷ்டிப்போக்கு பெருமளவுக்கு களையப்பட்டுள்ளது. சேலம், திருவள்ளூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் 21வது மாவட்ட மாநாடுகளிலும் கோஷ்டிப்போக்கு இருந்தது. திருவள்ளூர் மாவட்ட மாநாட்டில் மாவட்டக்குழு தேர்வில் பிரச்சனையில்லை. ஆனால் மாவட்டச் செயலாளர் தேர்வில் கோஷ்டிப்போக்கு இருந்தது. சேலம் மாவட்ட மாநாட்டில் மாவட்டக்குழுவிற்கு நடைபெற்ற தேர்தலில் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் 241ல் 39 பேர் மட்டுமே மாவட்டக்குழு முன்மொழிந்த பட்டியலுக்கு வாக்களித்துள்ளனர். கோவை மாவட்டக்குழுவிற்கு நடைபெற்ற தேர்தலில் 251 பிரதிநிதிகளில் 79 பேர் மட்டுமே மாவட்டக்குழு முன்மொழிந்த பட்டியலுக்கு வாக்களித்தனர். இதுவும் கோஷ்டிப்போக்கின் வெளிப்பாடே. இது கோஷ்டிப்போக்கை வெளிப்படுத்துகிறது. கோவை மாவட்டத்தில் கோஷ்டிப்போக்கு மட்டுப்பட்டாலும் மிச்சசொச்சம் நீடிக்கிறது.

6.45 விழுப்புரம் மாவட்ட மாநாட்டில் விழுப்புரம் வடக்கு, தெற்கு என இரண்டு மாவட்டக்குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் வடக்கு மாவட்டக்குழுவிற்கு நடைபெற்ற தேர்தலில் பிரதிநிதிகள் 141ல் 44 பேர் மட்டுமே மாவட்டக்குழு முன்மொழிந்த பட்டியலுக்கு வாக்களித்துள்ளது கோஷ்டிப்போக்கு இருந்ததையே பிரதிபலிக்கிறது.

6.46 மேலும் காஞ்சிபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் மாவட்டச் செயலாளர் தேர்வில் கோஷ்டிப்போக்கு இருந்துள்ளது. மதுரை மாநகர் மாவட்டத்தில் தலைமையில் ஒற்றுமையின்மை பல பிரச்சனைகளை உருவாக்கி இருக்கிறது.

6.47 மாநிலத்தில் பல மாவட்டங்களில் இடைக்குழு மாநாடுகளில் கோஷ்டிப்போக்கு இருந்தது என பல மாவட்ட மாநாட்டு அறிக்கைகள் கூறுகின்றன.

6.48 நாகையில் நடைபெற்ற 20வது மாநில மாநாடு கோஷ்டிப்போக்கு பற்றியும் கோஷ்டிப்போக்கு கட்சியை எவ்வாறு பாதிக்கிறது என்பது பற்றியும், இதை களைய வேண்டிய அவசியம் பற்றியும் கீழ்க்கண்டவாறு சுட்டிக்காட்டியது.

6.49 “கோஷ்டிப்போக்கு ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டிற்கு முரணானது. கட்சியின் ஒற்றுமையை பாதித்து நாளடைவில் உற்சாகம் இழந்து கமிட்டிகள் முன்முயற்சியை இழக்கின்றன. இதனால் கட்சியின் புரட்சிகரத் தன்மை பாதிப்புக்குள்ளாகிறது.”

6.50 எனவே, “ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையில் கட்சிக் கமிட்டிகள் செயல்படுவதை உத்திரவாதப்படுத்திட வேண்டும். சில மாவட்டக்குழுக்களிலும், இடைக்கமிட்டிகளிலும் கோஷ்டிப்போக்கு நிலவுவதை களைந்து கட்சிக்குள் ஒற்றுமையை உருவாக்குவது இன்றைய அவசரத் தேவையாக இருக்கிறது.”

6.51 கடந்த மாநில மாநாட்டிற்கு பிறகு கோஷ்டிப்போக்கை களைவது குறித்து கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரகாஷ்காரத் அவர்களும் கலந்து கொண்ட பிரத்தியேகமான மாநிலக்குழுக் கூட்டத்தில் விவாதித்து முடிவெடுத்து கோஷ்டிப்போக்கு நிலவிய மாவட்டங்களில் தலையிட்டோம். பல ஒழுங்கு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டது. கல்விக்குழு சார்பில் ஜனநாயக மத்தியத்துவம் என்ற தலைப்பில் மாநிலம் முழுவதும் வகுப்புகள் நடத்தப்பட்டன.

6.52 ஏற்கனவே கோஷ்டிப்போக்கு நிலவிய சில மாவட்டங்களில் கோஷ்டிப்போக்கு களையப்பட்டுள்ளது. ஆனால் புதிதாக சில மாவட்டங்களில் கோஷ்டிப்போக்கு உருவாகியுள்ளது. கோஷ்டிப்போக்கு உருவாவதற்கான காரணங்களை கண்டறிந்து அவைகளை களைவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். கோஷ்டிப்போக்கு உருவாவதற்கான காரணங்கள் என்ன என்பது பற்றி 20வது மாநில மாநாடு கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது.

6.53 “மாவட்ட செயற்குழு (அ) மாவட்டக்குழு ஜனநாயகப்பூர்வமாக செயல்பட வேண்டும். அஜெண்டா மீது அனைவரும் ஜனநாயகப் பூர்வமாக, விருப்பு, வெறுப்பின்றி கருத்து தெரிவித்து விவாதம் நடத்தி கருத்தொற்றுமையை உருவாக்கி முடிவு எடுக்க வேண்டும். கோஷ்டிபோக்கு உள்ள கமிட்டிகளில் விவாதம் ஆரோக்கியமாக இருப்பதில்லை. பிரச்சனையின் சாதக பாதக அம்சங்களை பரிசீலித்து கருத்து தெரிவிப்பதற்குப் பதிலாக விருப்பு, வெறுப்போடு கருத்து தெரிவிக்கும் நிலை உள்ளது.

6.54 பொதுவாகத் தாங்கள் வகிக்கும் பொறுப்பை தக்க வைத்துக் கொள்ள அல்லது ஒரு பொறுப்பை பிடிக்க ஆசைப்பட்டு அதற்காக பிற தோழர்களுடைய ஆதரவை திரட்டுவதற்கு முற்படுகிறபோது கோஷ்டி உருவாகிறது. ஆதரவைத் திரட்டுகிற போது சம்மந்தப்பட்ட தோழர்களோடு எல்லா பிரச்சனைகளிலும் விமர்சனமற்ற முறையில் சமரசம் செய்து கொள்கிறார்கள். பிரச்சனையின் தன்மை அடிப்படையில் கருத்து சொல்வதற்கு பதிலாக தனக்கு ஆதரவாக தோழர்களை சேர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு விருப்பு, வெறுப்போடு கருத்து சொல்லும் போக்கு உருவாகிறது. தகுதி, அனுபவம், திறமை ஆகியவற்றை பார்க்காமல் கட்சி நலனைப்பற்றி கவலைப்படாமல் ஒருவரை ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது என்பது கட்சியின் ஆரோக்கியத்தை பாதிப்பதோடு தரம் உயர்த்த எடுக்கப்படும் முயற்சிகளுக்கும் தடையாக உள்ளது.

6.55 இது ஜனநாயக மத்தியத்துவ கோட்பாட்டிற்கு முரணானது மட்டுமல்ல உட்கட்சி ஜனநாயகத்தை தவறான முறையில் பயன்படுத்துவதுமாகும். இதனால் கட்சிக்குள் ஆரோக்கியமற்ற போக்கு உருவாகி கட்சியின் புரட்சிகரத்தன்மை பாதிப்புக்குள்ளாகிறது. கோஷ்டிப்போக்கில் ஈடுபடாமல் உறுதியாக பணியாற்றும் ஒரு பகுதி தோழர்களின் கட்சி உணர்வையும் பாதிக்கிறது. புதிதாக வரும் இளம் தோழர்களிடம் நம்பிக்கையின்மையை ஏற்படுத்துகிறது.

6.56 ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் கட்சிக் கமிட்டிகள் செயல்படுவதை உத்தரவாதப்படுத்திட வேண்டும். மேலும் அரசியல் தத்துவார்த்த ரீதியில் ஒற்றுமையை உருவாக்கிட வேண்டும். இம்மாநாடு முடிந்த பிறகு தமிழகத்தில் கோஷ்டிப் போக்கை களைவதற்கு மாநிலக்குழு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வர்க்க மற்றும் மக்களின் கோரிக்கைகளுக்கான போராட்டத்தை நீடித்த முறையில் நடத்துவது :

6.57 வர்க்க மற்றும் மக்களின் பொதுவான கோரிக்கைகள் மீது இக்காலத்தில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பல இயக்கங்கள் நடத்தி இருக்கிறோம். கடந்த 3 ஆண்டுகளில் கட்சி மற்றும்

வர்க்க, வெகுஜன அமைப்புகள் நடத்திய இயக்கங்கள் பற்றிய பரிசீலனை, வேலை அறிக்கை பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. போராட்டங்கள் நடத்துவது மட்டுமல்ல, கோரிக்கைகளை வென்றெடுக்கும் வரை நீடித்த போராட்டமாக நடத்திட வேண்டுமென 20வது கட்சி காங்கிரஸ் முடிவெடுத்தது. இம்முடிவை தமிழகத்தில் அமலாக்கினோமா என்பதை பரிசீலிக்க வேண்டும்.

6.58 டெல்டா பிரதேசத்தில் வறட்சி நிவாரணம் கோரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தொடர் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. 3 ஆவது நாள் மாநில அரசு நிவாரணம் அளிக்க உறுதியளித்த பிறகு போராட்டம் முடிவுற்றது. மனைப்பட்டாவுக்காக மாநிலம் முழுவதும் காத்திருக்கும் போராட்டம் நடைபெற்றது. இதில் சில இடங்களில் கோரிக்கை வென்றெடுக்கிற வரையில் நீடித்த போராட்டமாக நடைபெற்றது. 100 நாள் வேலைத் திட்டத்திலும் கோரிக்கைகளை வென்றெடுக்கிற வரையில் நீடித்த போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. விருதுநகரில் பட்டாசுத் தொழிலாளர்கள் பிரச்சனையிலும் அந்த மாவட்டக்குழுவின் முயற்சி குறிப்பிடத்தக்கது. முறைசாராத் தொழிலாளர்கள் பிரச்சனையிலும் மாநில அளவில் பல இயக்கங்கள் நடைபெற்றுள்ளன. மேற்கண்ட போராட்டங்களைத் தவிர கோரிக்கைகள் நிறைவேறும் வரையில் நீடித்த போராட்டங்களை கட்சி மற்றும் வர்க்க, வெகுமக்கள் அமைப்புகள் நடத்திட இயலவில்லை.

6.59 தீண்டாமை ஒழிப்பு முன்னணி சார்பாக கடந்த காலத்தை விட கூடுதலான இயக்கங்கள் நடந்துள்ளன; கோரிக்கைகளும் ஏற்கப்பட்டுள்ளன. இப்பிரச்சனையிலும் கோரிக்கைகள் நிறைவேறுகின்ற வரையில் நீடித்த போராட்டத்திற்கு திட்டமிட வேண்டும். தீண்டாமை ஒழிப்பிற்காக நாம் உறுதியாகவும், சமரசமற்றும் போராடுகிற போது, சாதி ரீதியிலான அமைப்புகள் மக்கள் மத்தியில் பிளவை உருவாக்கிட முயற்சிக்கிறார்கள். அத்தகைய முயற்சி வெற்றி பெற்றால் வர்க்க ஒற்றுமை சீர்குலையும். அதை முறியடிக்க வேண்டியது ஒரு வர்க்க கட்சியின் கடமையாகும். அனைத்துப்பகுதி உழைக்கும் மக்களின் கோரிக்கைகளுக்காக இயக்கத்தை உருவாக்கி போராடுவதன் மூலமே உழைக்கும் மக்களின் ஒற்றுமையை உருவாக்கிட முடியும்.

6.60 மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் கோரிக்கைகள் மீது உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், மறியல் போன்ற வடிவங்களில் இயக்கங்கள் நடந்துள்ளன. தொடர்ந்து நடத்திடவும் வேண்டும். ஆனால் ஒரு நாள் நடைபெறும் இயக்கங்களினால் பல நேரங்களில் கோரிக்கைகளை வென்றெடுக்க முடிவதில்லை. இத்தகைய போராட்டங்கள் தேவையென்றாலும் கோரிக்கைகள் நிறைவேறும் வரையில் நீடித்த போராட்டங்கள் நடத்துவதன் மூலமாகவே மக்களை ஈர்க்க முடியும்.

6.61 எல்லா பிரச்சனைகளிலும் நீடித்த போராட்டங்களுக்கு வாய்ப்பிருக்காது. உடனடிப் பிரச்சனை, நீண்ட காலப் பிரச்சனை என பிரச்சனைகளின் தன்மையை கணக்கிலெடுத்து நீடித்தப் போராட்டங்களுக்கு திட்டமிட வேண்டும். மணல் கொள்ளை, குடிமனைப் பட்டா, குடியிருப்பு போன்ற பிரச்சனைகளைத் தேர்வு செய்து நீடித்த போராட்டம் நடத்திடலாம். இத்தகைய போராட்டங்களை உருவாக்கிட மாவட்டக்குழுக்கள் திட்டமிட வேண்டும். மேலும், மாநில செயற்குழுவும் இத்தகைய போராட்டங்களுக்கு வழிகாட்டிட வேண்டும்.

6.62 நீடித்த போராட்டத்தை சில நேரங்களில் தொடர்ச்சியாக நடத்த முடியாமல் இருக்கலாம். நீடித்த போராட்டம் என்பதன் பொருள் கோரிக்கைகள் நிறைவேறும் வரை அல்லது முடிவு ஏற்படும் வரை நடத்தப்பட வேண்டும் என்பதுதான். இந்தப் போராட்டங்களை நடத்தும்பொழுது மக்களை இப்போராட்டங்களில் ஈடுபடுத்துவதும், போராட்டங்களுக்கு பயிற்றுவிப்பதும் நடைபெற வேண்டும்.

6.63 அடுத்தடுத்து ஏராளமான அன்றாட நடைமுறை வேலைகளில் - இயக்கங்களில் ஈடுபட வேண்டியுள்ளதால் நீடித்த போராட்டங்களுக்கு திட்டமிட முடிவதில்லை. முக்கியமான கோரிக்கைகளில் நீடித்த போராட்டங்களை நடத்துவதற்கு குறிப்பிட்ட காலத்தை தீர்மானித்து (இதர வேலைகளைத் தவிர்த்து) மாவட்ட, மாநில தலைவர்கள் தலைமையேற்று கோரிக்கைகள் நிறைவேறும் வரையில் உறுதியாக போராடுவது வர்க்க, வெகுஜன அமைப்புகளுடைய விரிவாக்கத்திற்கு மட்டுமல்ல, கட்சி விரிவாக்கத்திற்கும் பயன்படும்.

தாராளமயக் கொள்கைகளின் தாக்கம்

6.64 கடந்த காலங்களைப் போல் உழைப்பாளி மக்களின் வர்க்க கோரிக்கைகள் மீது போர்க்குணமிக்க இயக்கங்களை நடத்த இயலவில்லை. இதற்கு காரணம் நம்முடைய பலவீனமா அல்லது சூழலில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்க வேண்டும். உதாரணமாக விவசாயத் தொழிலாளர்கள், ஆலைத் தொழிலாளர்களின் வர்க்க கோரிக்கைகளுக்காக போராட்டங்களை நடத்துவதன் மூலமே வர்க்க அமைப்புகளை பலப்படுத்திட முடியும்; கட்சியையும் பலப்படுத்திட முடியும். கிராமப்புறங்களில் விவசாயத் தொழிலாளர்களின் விவசாயப் பணிகளுக்கு கூலி உயர்வுக்கான போராட்டங்கள் சமீப காலங்களில் முன்பு போல் நடக்கவில்லை. சமீபத்தில் போக்குவரத்து மற்றும் பாக்ஸ்கான் தொழிலாளர்கள் போராட்டங்கள் நடந்துள்ளன. இருப்பினும் ஆலைத் தொழிலாளர்கள் போராட்டங்கள் கடந்த காலங்களைப் போல் பரவலாக நடக்கவில்லை.

6.65 வங்கி, காப்பீட்டுத்துறை, பிஎஸ்என்எல் போன்ற பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள நடுத்தர ஊழியர் அமைப்புகள் மத்திய அரசினுடைய தனியார்மய, தாராளமயக் கொள்கைக்கு எதிராக பல வேலைநிறுத்தப் போராட்டங்கள் நடத்துகின்றன. எனவே, நவீன தாராளமயக் கொள்கை அமலாக்கம் விவசாயத்தின் மீதும், ஆலைத்தொழிலாளர்கள் மீதும் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை ஆய்வு செய்து கோரிக்கைகளை உருவாக்கி போராட்டங்களுக்கு திட்டமிட வேண்டும். இதுகுறித்து 20-வது கட்சி காங்கிரஸ் அறிக்கையில் கீழ்க்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

6.66 "பொதுத்துறை மற்றும் தனியார் துறையிலுள்ள அமைப்பு ரீதியான தொழில்களில் நமது வலிமை மற்றும் தாக்குதல் திறனில் தேக்க நிலை நிலவுகிறது. சில துறைகளில் உறுப்பினர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருகிறது. பெரும்பாலான இடங்களில் நவீன படித்த தொழிலாளர்களை நம் பக்கம் ஈர்ப்பதற்கு முடியாததும், அப்பகுதியிலுள்ள ஒப்பந்தத் தொழிலாளர்களை திரட்டுவதை புறக்கணிப்பதும் இதற்கான காரணங்களாகும்".

6.67 அணி திரட்டப்பட்ட தொழில்களில் உள்ள வலிமையே மூலதனத்திற்கு எதிரான போராட்டத்தின் மிக முக்கியமான ஆயுதமாகும். அதேசமயம் முறைசாராத் தொழிலாளர்கள் அதிகரித்து வரும் நிலையில், அவர்களை திரட்டுவது ஒட்டு மொத்த போராட்டத்திற்கு மிக முக்கியமானதாகும். சிஐடியு உறுப்பினர்களின் கணிசமான பகுதி முறைசாரா தொழிலாளர்கள். அவர்களுக்கு நல வாரியத்தின் மூலமாக நமது சங்கங்கள் பல சலுகைகளைப் பெற்றுத் தருகின்றன. நலவாரியப் பயன்களை பெற பல இயக்கங்களையும் நமது சங்கங்கள் நடத்தியுள்ளன. முறைசாராத் தொழிலாளர்கள் கடுமையாக சுரண்டப்படுகிறார்கள். இவர்களின் சமூகப் பாதுகாப்பிற்காகவும் அவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் சமூக ஒடுக்குமுறைகள் மற்றும் அநீதிகளுக்கு எதிராகவும் அவர்களின் குடியிருப்பு பகுதிகளில் உள்ள பிரச்சனைகளுக்காகவும், போர்க்குணமிக்க போராட்டங்களை கட்டவிழ்த்து விட வேண்டும். நவீன தாராளமயப் பொருளாதாரக் கொள்கை அமலாக்கப் பின்னணியில் தொழிலாளி வர்க்கத்தில் 86 சதவிகிதமாக உள்ள, எந்தவித சமூக பாதுகாப்பின்றி கடுமையாக சுரண்டப்படுகின்ற முறைசாராத் தொழிலாளர்களை திரட்டுவதன்

மூலமே தொழிலாளர்கள் மத்தியில் பலமான தொழிற்சங்க இயக்கத்தையும் கட்சியையும் உருவாக்க முடியும்._மேலும் கிராமப்புறங்களில் முறைசாராத் தொழிலாளர்கள் மூலம் புதிய பகுதிகளில் கட்சி அமைப்புகளை உருவாக்கிட இயலும். இது குறித்தும் மாநில மாநாடு பரிசீலிக்க வேண்டும்.

6.68 தாராளமயப் பொருளாதாரக் கொள்கை அமலாக்கத்தால் கடந்த பத்தாண்டுகளில் மக்கள் பகுதியில் மேல்தட்டிலுள்ள ஒரு சதவிகிதத்தினரின் சொத்து மதிப்பு நாட்டின் மொத்த சொத்தில்38 சதவிகிதத்திலிருந்து 49 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. மீதமுள்ள 99 சதவிகித மக்கள் கையில் இருந்த சொத்து 62 சதவிகிதத்திலிருந்து 51 சதவிகிதமாக குறைந்துள்ளது. பொருளாதார ஏற்றத்தாழ்வு வேகமாக அதிகரித்து வருகிறது. கிராமப்புற, நகர்ப்புற ஏழைகள், தொழிலாளர்கள், விவசாயிகள் உள்ளிட்ட உழைக்கும் மக்களின் வாழ்வதாரத்தின் மீது அரசும், ஆளும் வர்க்கமும் கடுமையான தாக்குதல் தொடுத்துள்ள பின்னணியில் வர்க்க மற்றும் மக்கள் கோரிக்கைகள் மீது போர்க்குணமிக்க இயக்கங்கள் நடத்துவதற்கு திட்டமிட வேண்டும். இத்தகைய இயக்கங்களுக்கு தலைமை தாங்கவும் வேண்டும்.

ஸ்தல இயக்கம்

6.69 கடந்த மூன்றாண்டுகளில் கட்சி மற்றும் வர்க்க - வெகுமக்கள் அமைப்புகள் ஸ்தல இயக்கங்களை பரவலாக நடத்தியுள்ளன. ஆனாலும் வாய்ப்புள்ள அளவிற்கு ஸ்தல இயக்கங்கள் நடத்தப்படவில்லை. ஸ்தல இயக்கங்கள் நடத்திய அனுபவத்தையும் ஏன் போதுமான அளவிற்கு நடத்தப்படவில்லை என்பதையும் நாம் பரிசீலிக்க வேண்டும்.

6.70 திருப்பூர் மாவட்ட மாநாடு ஸ்தல இயக்கங்கள் பற்றிய அனுபவத்தை அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. "மாவட்டத்தில் அனைத்து கிளைகளும் இந்த மூன்றாண்டு காலத்தில் 669 ஸ்தல இயக்கங்களை 300 கிளைகளில் நடத்தியுள்ளன. இவற்றில் கையெழுத்து இயக்கம், தட்டி கட்டுவது, மனுக் கொடுப்பது, மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம், தர்ணா, உண்ணாவிரதம், மறியல், முற்றுகை உள்ளிட்டு பல்வேறு நூதன வடிவங்களிலும் நடந்துள்ளன. கடந்த மாநாடு காலத்தை ஒப்பிடும் போது இரட்டிப்பாகியுள்ளது பாராட்டுக்குரியது. இருந்தபோதிலும் 3 ஆண்டில் அரங்கக் கிளை தவிர்த்து குடியிருப்புப் பகுதிகளில், ஒவ்வொரு கிளையும் ஆண்டுக்கு இரண்டுமுறை இயக்கம் நடத்த வேண்டுமென மத்தியக்குழு ஆவணம் வலியுறுத்துகிறது. அந்த அடிப்படையில் 2400க்கும் மேலே நடத்தியிருக்க வேணடும். 25 சதவிகிதம் இயக்கம் மட்டுமே நடைபெற்றுள்ளது."

6.71 பகுதிக்குழு அளவில் மொத்தம் 110 இயக்கங்கள் நடத்தப்பட்டுள்ளன என மதுரை மாநகர் மாவட்டக்குழு அறிக்கை கூறுகிறது.

6.72 கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ளூர் மக்களின் சமூக, பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக மட்டுமல்ல, ஸ்தல இயக்கத்தின் ஒரு வடிவமாக பண்பாட்டுப் பிரச்சனைகளை எடுப்பதும் நமது அமைப்புகள் வேர் பிடிக்க அடிப்படையாக அமையும்.

6.73 கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அமைப்புகள் கிராமங்களிலும், நகரங்களிலும் ஸ்தல கோரிக்கைக்கான இயக்கங்களை நடத்துவதன் மூலம் புதிய மக்கள் பகுதியினரை நமது அமைப்புக்குள் கொண்டு வர முடியும். அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் அரசியல், சமூகப் பிரச்சனைகளில் கட்சி மேற்கொள்ளும் நிலைபாட்டிற்கு மக்கள் மத்தியில் வரவேற்பு இருந்தாலும், அவர்கள் தானாக நமது கட்சியையோ, வர்க்க, வெகுஜன அமைப்புகளையோ அணுக மாட்டார்கள். பொதுவாக நமது கட்சியின் அரசியல் அணுகுமுறைக்கு மரியாதை உருவாகிற போது நமது ஸ்தல இயக்கங்கள் மூலமே மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி நமது அரசியல் செல்வாக்கை ஸ்தாபனமாக்கிட முடியும். பிரச்சனைகளை தொட்டு, பிறகு விட்டுவிடுவது

நமது இயக்கத்திற்கு மரியாதை சேர்க்காது. ஸ்தல கோரிக்கைகளுக்கான இயக்கங்களையும் நீடித்த முறையில் கோரிக்கைகளை வென்றெடுக்கும் வகையில் நடத்திட வேண்டும்.

அரசியல் ரீதியாக, ஸ்தாபன ரீதியாக உறுதிப்படுத்திட

6.74 மக்கள் கோரிக்கைகள் மீது நடத்தப்படும் நமது சுயேச்சையான போராட்டங்களினால் கோரிக்கைகளை வென்றெடுக்க முடிந்தாலும், வென்றெடுக்க முடியவில்லை என்றாலும் நாம் நடத்தும் போராட்டங்களினால், நமது அமைப்புக்கும் மக்களுக்கும் தொடர்பு ஏற்படுகிறது. இத்தகைய தொடர்புகளை பயன்படுத்தி சம்பந்தப்பட்ட பகுதி மக்களை வர்க்க, வெகுஜன அமைப்புகளுக்குள் கொண்டு வர வேண்டும். அதற்குப்பிறகு, அவர்களை கட்சிக்குள் கொண்டு வர முயற்சிக்க வேண்டும். போராட்டங்களினால் கோரிக்கைகளை வென்றெடுத்த பகுதிகளில், போராட்டங்களில் பங்கேற்ற கட்சிக்கு அப்பாற்பட்டவர்களை நமது அமைப்புகளுக்குள் கொண்டு வரக்கூடிய வேலையை கட்சிக் கிளைகளோ, அமைப்புகளோ சரிவர செய்வதில்லை. இதில் மாவட்டக்குழுக்களும் மாநிலக்குழுவும் போதுமான அளவுக்கு உதவியும் செய்யவில்லை.

6.75 மேலும் போராட்டங்கள் முடிந்த பிறகு போராட்டங்களில் பங்கேற்ற பகுதியினரை வர்க்க-வெகுஜன அமைப்புகளுக்குள் கொண்டு வருவதற்கு கால அவகாசம் தேவைப்படுகிறது. அடுத்தடுத்து பல அரசியல்-ஸ்தாபன வேலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களை ஸ்தாபனப்படுத்த முடியாமல் போய்விடுகிறது. எனவே, எதிர்காலத்தில் போராட்டத்திற்குப் பிறகு ஸ்தாபனப்படுத்திட சம்மந்தப்பட்ட பகுதிகளுக்கு கால அவகாசம் அளித்திட வேண்டும்.

6.76 வர்க்க, வெகுஜன அமைப்புகளுக்குள் கொண்டு வரப்பட்டவர்களை அரசியல் ரீதியாக, ஸ்தாபன ரீதியாக உறுதிப்படுத்திடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பிற கட்சிகளைச் சார்ந்த மக்கள் பகுதியினர் நமது போராட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டு. (டெல்டா பிரதேசத்தில் வறட்சி நிவாரணம், மாநில அளவில் மனைப்பட்டா, தீண்டாமை ஒழிப்பு போன்ற இயக்கங்கள்) பிற கட்சிகளைச் சார்ந்தவர்களை அல்லது எந்த கட்சியையும் சாராதவர்களை அவர்களுடைய பின்னணிக்கு ஏற்ப வர்க்க, வெகுஜன அமைப்புகளில் சேர்த்து, அவர்கள் மத்தியில் நமது கட்சி அரசியலை கொண்டு சென்று அவர்களை துணைக்குழு உறுப்பினர்களாக்கிட தொடர்ச்சியான முயற்சி தேவை. துணைக்குழு உறுப்பினர்களான பிறகு அவர்களுக்கு அரசியல், தத்துவார்த்த, ஸ்தாபன பயிற்சி அளிப்பதோடு, கட்சி வர்க்க, வெகுமக்கள் அமைப்புகள் நடத்தக் கூடிய இயக்கங்களிலும் பங்கேற்கச் செய்திட வேண்டும்.

கிளர்ச்சி – பிரச்சாரம்

6.77 கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அமைப்புகள் நடத்தும் இயக்கங்களில் பங்கேற்பவர்களை கட்சிக்குள் கொண்டு வருவதில் நம்மால் முன்னேற்றம் காண முடியவில்லை. கட்சி கட்டும் இப்பணியை செய்திட கிளர்ச்சி – பிரச்சாரம் என்ற இருவிதமான முறைகளை கையாள வேண்டுமென்று லெனினை மேற்கோள் காட்டி 1983-ம் ஆண்டு தொழிற்சங்க அரங்கில் நமது கடமை என்ற ஆவணம் கூறுகிறது. இந்த ஆவணத்தில் சொல்லப்பட்ட வழிகாட்டுதல் தொழிற்சங்க அரங்கத்திற்கு மட்டுமல்ல, எல்லா அரங்கங்களுக்கும் பொருந்தும்.

6.78 தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் இதர பகுதி மக்கள் போராடுகிற போது அத்தகைய போராட்டத்தில் பங்கேற்பதோடு, அவர்கள் மத்தியில் உரையாற்றுகிற போது, கிளர்ச்சி – பிரச்சாரம் என்ற இரண்டு அம்சங்களையும் உள்ளடக்கியதாக பேச்சு இருக்க வேண்டும்.

6.79 கிளர்ச்சி என்பது பிரச்சாரத்துடன் பிரிக்க முடியாத பகுதியாக இணைக்கப்பட்டுள்ளது. ஆட்குறைப்பு அல்லது ஆலை மூடலினால் தொழிலாளிகள் பல நேரங்களில் வேலை இழக்கின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மத்தியில் பேசுகிற போது வேலை

இழப்பால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதோடு அவர் குடும்பமும் பாதிக்கப்படுகிறது. வருமானமின்றி குடும்பம் வறுமையில் வாடுகிறது. வருமான இழப்பால் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் குடும்பத்தில் உள்ளவர்களின் வாழ்வாதாரம் பாதித்து சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகிறார்கள். இவைகளையெல்லாம் விளக்கி ஆட்குறைப்பு, ஆலை மூடல் இவைகளுக்கு எதிராக உறுதியாக போராட வேண்டுமென்று பேசுவது கிளர்ச்சி.

6.80 அதேநேரத்தில் ஆட்குறைப்பு, ஆலைமூடல் ஏற்படுவதற்கான காரணம் என்ன? ஆலை நிர்வாகத்தின் இத்தகைய நடவடிக்கைகளை அரசு தடுத்து நிறுத்தாததோடு பலநேரங்களில் இத்தகைய நிறுவனங்களுக்கு ஆதரவாக நிற்கிறது. இதுதான் முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. இதுதான் ஆளும் வர்க்கங்களின் அணுகுமுறையாக இருக்கிறது. ஆட்குறைப்பை, ஆலை மூடலை எதிர்க்கிற போது அரசினுடைய கொள்கைக்கு எதிராகவும் போராட வேண்டும். இத்தகைய கொள்கையை முறியடிக்க வேண்டும் என்பதோடு நமது மாற்றுக் கொள்கையை முன்வைத்து உரையாற்றுவது பிரச்சாரம். எனவே, கிளர்ச்சி - பிரச்சாரம் என்ற இரண்டு அம்சங்களையும் நமது பேச்சில் கொண்டு வர வேண்டும்.

6.81 இதைப் போலவே, விவசாயத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியால் விவசாயிகள் பாதிக்கப்படுவதோடு, அவர்களுடைய குடும்பங்களும் பாதிக்கப்படுகின்றன. வாழ்வாதாரத்தை இழந்து விவசாயக்குடும்பங்களுக்கு ஏற்படும் பாதிப்பை, அதனுடைய விளைவுகளை படம் பிடித்து காட்டி விவசாயிகளை தட்டி எழுப்புவது கிளர்ச்சி. அதேநேரத்தில் மத்திய அரசும், மாநில அரசும் கடைபிடித்து வரும் விவசாயக்கொள்கை, விவசாயத்தில் உருவாகி வரும் நெருக்கடியை விளக்கி, விவசாயிகளையும், மற்ற பகுதி மக்களையும் திரட்டி அரசுக்கு எதிராக அரசினுடைய கொள்கைக்கு எதிராக உறுதியாகப் போராடுவதோடு, விவசாயிகள் விரோதக் கொள்கையை முறியடித்து, விவசாயிகளை பாதுகாக்கக்கூடிய நமது மாற்றுக் கொள்கைகளை முன்வைத்து ஒன்றுபட்ட போராட்டத்தை நடத்த வேண்டுமென பேசுவது பிரச்சாரம். இங்கும் கிளர்ச்சி - பிரச்சாரம் என்ற இரண்டு அம்சங்களையும் விளக்கிட வேண்டும்.

6.82 தொழிலாளர்கள், விவசாயிகள் மட்டுமல்ல, இதர பகுதி மக்கள் மத்தியிலும் கிளர்ச்சி பிரச்சாரம் என்ற வடிவத்தில் நமது பணிகளை மேற்கொள்வதன் மூலமே கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அமைப்புகள் நடத்தும் போராட்டங்களில் பங்கேற்பவர்களுக்கு அரசியல் உணர்வூட்டி கட்சிக்குள் கொண்டு வர முடியும்.

முழுநேர ஊழியர்கள்

6.83 மாநிலத்தில் 970 முழுநேர ஊழியர்கள் கட்சி மற்றும் வெகுமக்கள் அமைப்புகளில் செயல்பட்டு வருகின்றனர். இவர்களல்லாமல் மாவட்டங்களிலும், அரங்கங்களிலும் பல பகுதி நேர ஊழியர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

6.84 முழுநேர ஊழியர்களின் வேலைகளை 6 மாதங்களுக்கு ஒருமுறை பரிசீலிப்பதோடு அவர்களுக்கு முறையாக பயிற்சியளித்திட வேண்டுமென்றும் கடந்த மாநில மாநாடு தீர்மானித்தது. மேலும் மாநிலம் முழுவதுமுள்ள முழுநேர ஊழியர்களுக்கு மாநிலக்குழு தீர்மானிக்கும் ஊதியத்தை வழங்கிட வேண்டுமென்றும் மாநில மாநாடு தீர்மானித்தது.

6.85 மாநிலக்குழு தீர்மானித்த ஊதியம் மாவட்டங்களிலும், அரங்கங்களிலும் பணியாற்றும் முழுநேர ஊழியர்களுக்கு வழங்கிட வேண்டும், கல்வித்தொகை வழங்கிட வேண்டும், மருத்துவ காப்பீடு செய்ய வேண்டும் என்ற முடிவு இன்னும் பல மாவட்டங்களில் அமலாக்கப்படவில்லை. எதிர்காலத்தில் முழுநேர ஊழியர்களுக்கு மாநிலக்குழு தீர்மானித்த ஊதியத்தை வழங்கிட வேண்டும். அவர்களுக்கு முறையான பயிற்சி அளிப்பதோடு சுயமான வளர்ச்சிக்கும் உதவி செய்திட வேண்டும்.

6.86 மாநில செயற்குழு உறுப்பினர்கள் வேலைகள் 2 முறை மாநில செயற்குழுவில் பரிசீலிக்கப்பட்டுள்ளது. கடந்த மாநில மாநாட்டிற்கு முன்னதாக 16 மாவட்டங்கள் மட்டுமே முழுநேர ஊழியர்களின் வேலைகளை பரிசீலித்திருந்தன. கடந்த மூன்று ஆண்டுகளில் 29 மாவட்டக்குழுக்கள் இத்தகைய பரிசீலனையைச் செய்துள்ளன. இருப்பினும், குமரி, தஞ்சை, புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, நீலகிரி ஆகிய 5 மாவட்டங்களில் பரிசீலனை நடைபெறவில்லை. மாநாடு எடுத்த முடிவை மேற்கண்ட 5 மாவட்டங்கள் அமலாக்கவில்லை என்பதை சம்பந்தப்பட்ட மாவட்டக்குழுக்கள் சுயவிமர்சனத்தோடு பரிசீலிக்க வேண்டும். அதே சமயம் பரிசீலனை நடந்த மாவட்டங்களில் 6 மாதத்திற்கு ஒரு முறை தொடர்ச்சியாக செய்யப்பட்டதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

6.87 மாவட்டக்குழுக்களில் அங்கமாக இருந்து செயல்படும் மாநிலக்குழு உறுப்பினர்களின் பணி மாவட்டக்குழு முழுநேர ஊழியர்களின் வேலைப் பரிசீலனையின் ஒரு பகுதியாக நடந்துள்ளது. ஆனால், வர்க்க, வெகுமக்கள் அமைப்புகளிலும் மாநில மையத்திலிருந்தும் செயல்படும் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர்களின் வேலை பிரத்தியேகமாக பரிசீலிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் இத்தகைய பரிசீலனையை நடத்திட வேண்டும்.

6.88 அடிப்படை வர்க்கங்கள், மாதர், தலித் மற்றும் பழங்குடி, மற்றும் சிறுபான்மையினர் பகுதிகளிலிருந்து முழுநேர ஊழியர்களை கொண்டு வருவதற்கு தனியான கவனம் செலுத்திட வேண்டுமென்று 20-வது கட்சி காங்கிரஸ் முடிவு செய்தது. கடந்த காலத்தில் தமிழகத்தில் வாலிபர், மாணவர், மற்றும் மாதர் அரங்கங்களிலிருந்து கணிசமான முழுநேர ஊழியர்களை கொண்டு வந்திருக்கிறோம். எதிர்காலத்தில் கட்சி காங்கிரஸ் முடிவை அமலாக்கிட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

வாக்கு பலத்தை அதிகரித்திட

6.89 கட்சி வளர்ச்சி என்பது கட்சி மற்றும் வர்க்க வெகுஜன உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்வு, இயக்கங்களுக்கு திரட்டும் திறன், நமது பத்திரிகை, பிரசுரங்களின் விற்பனை, தேர்தல்களில் கட்சி பெறும் வாக்கு ஆகியவைகள் அடங்கும். எனவே வாக்கு பலத்தை அதிகரிக்க திட்டவட்டமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

6.90 வாக்கு பலத்தை அதிகரிக்கக் கூடிய பணியில் கட்சியின் மாநிலக்குழு, மாவட்டக்குழுக்களுக்கும் பங்குள்ளது. இருப்பினும் அடிப்படையில் மக்களோடு நேரடி தொடர்புள்ள கட்சி கிளைகளுக்கும் இடைக்குழுக்களும்தான் கூடுதல் பொறுப்பு உள்ளது.

6.91 வாக்கு பலத்தை அதிகரிப்பது வர்க்க வெகுஜன அமைப்புகளில் உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை போன்றதல்ல. கட்சி மற்றும் வர்க்க வெகுஜன அமைப்புகள் நடத்தக்கூடிய இயக்கங்கள் மக்கள் மீது ஏற்படும் தாக்கம், மரியாதை ஆகியவைகளினால் நமது கட்சிக்கு உருவாகும் செல்வாக்கை வாக்குகளாக மாற்றிட வேண்டும். இதற்கும் திட்டமிட்ட முயற்சி தேவைப்படுகிறது.

- வாக்கு பலத்தை அதிகரிப்பதற்கு அடிப்படையானது மக்களோடு இடைவிடாத தொடர்பு.
- மக்களோடு தொடர்பை உருவாக்க ஸ்தல கோரிக்கைகள், வர்க்க மற்றும் பொதுவான கோரிக்கைகள் மீதான இயக்கம்,
- இயக்கங்கள் மூலமாக கிடைக்கும் தொடர்பை பயன்படுத்தி வர்க்க வெகுஜன அமைப்புகளை உருவாக்குவது,
- அவர்கள் மத்தியில் நம்முடைய அரசியலைக் கொண்டு சென்று கட்சி கிளைகளை உருவாக்குவது,

- கட்சி கிளைகள் மூலமாக மக்கள் மத்தியில் நமது அரசியலைக் கொண்டு செல்வது.
- அவ்வப்போது உருவாகும் அரசியல் சமூக பொருளாதார சூழல்களை பற்றிய நமது நிலைபாட்டை எடுத்துச் செல்வது,

6.92 ஆகிய வேலைகளை தொடர்ச்சியாக உறுதியாக நிறைவேற்றுகிறபோது நமது ஆதரவு தளத்தை கெட்டிப்படுத்தி, வாக்கு பலத்தை அதிகரிக்க முடியும்.

6.93 விரிவாக்கப்பட்ட ஆதரவு தளத்தை, வாக்கு பலத்தை கட்சி கிளைகள் மூலமாக பாதுகாக்க வேண்டும். அவ்வப்போது எழும் சில அரசியல் பிரச்சனைகள் நமது ஆதரவு தளத்தை, வாக்கு பலத்தை கரைக்கக் கூடும். நமது கட்சி அணிகளுக்கோ கட்சிக்கு அப்பாற்பட்டு நம்மை ஆதரிக்கக் கூடிய மக்கள் பகுதியினருக்கோ, நமது நிலைபாட்டின் மீது சந்தேகமோ, அதிருப்தியோ, மாறுபட்ட கருத்தோ உருவானால் அவர்கள் மத்தியில் நம்முடைய நிலைபாட்டை அவர்கள் ஏற்கும் வகையில் எடுத்துச் சொல்ல வேண்டும். மேலும் முதலாளித்துவ, நிலப்பிரபுரத்துவ கட்சிகளிடமிருந்து நாம் வேறுபட்டுள்ளோம் என்பதையும் நம்முடைய மாற்றுத் திட்டத்தையும், இடது ஜனநாயக முன்னணி திட்டத்தையும் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இது ஒரு தத்துவார்த்த போராட்டம். கட்சி அணிகள் மத்தியில் தத்துவார்த்த போராட்டத்தை நடத்துவதோடு மக்கள் மத்தியிலும் இந்தப் போராட்டத்தை நடத்துவதன் மூலமே நமது பலத்தை தக்க வைக்க முடியும்; மேலும் அதிகரிக்க முடியும். இதற்கு துண்டு பிரசுரம், சிறு பிரசுரம், தெருமுனைக் கூட்டம், பொதுக் கூட்டம் போன்ற வடிவங்கள் மட்டும் போதாது. கிராம, நகர வார்டுகளில் நமது கட்சி தோழர்கள் நேரடியாக ஒருவருக்கொருவர் தனிப்பட்ட முறையில் மக்களோடு உறவாடி, உரையாடி செய்ய வேண்டும். கலை, இலக்கிய வடிவங்களையும் இப்பணிக்கு பயன்படுத்திட வேண்டும். இந்த வேலையை செய்திட கட்சி அணிகளை பயிற்றுவித்திட வேண்டும். கட்சி அணிகள் முழுவதையும் இந்த வேலையில் ஈடுபடுத்தினால்தான் நமது வாக்கு பலத்தை விரிவுபடுத்திட முடியும்.

6.94 போராட்டங்கள் மூலமாக மக்களைத் திரட்ட முயற்சிப்பதோடு ஆக்கப்பூர்வ நடவடிக்கைகள் மூலமாகவும் நமது ஆதரவு தளத்தையும் வாக்கு பலத்தையும் விரிவாக்கிட முயற்சிக்க வேண்டும். குறிப்பாகக் கல்வி, சுகாதாரம் போன்றவற்றோடு தொடர்புடைய ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு வேலைவாய்ப்பிற்கான பயிற்சியளிப்பதன் மூலமும் மக்களுடனான நமது தொடர்பு வட்டத்தை விரிவுபடுத்திட முடியும். கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் மக்கள் தங்களுடைய அன்றாடத் தேவைகளுக்காக கூட்டுறவு சங்கங்களையும், உள்ளாட்சி மன்றங்களையும் அணுக வேண்டியுள்ளது. இத்தகைய அமைப்புகளில் நாம் பொறுப்பு வகிப்பது மக்களுக்கும், வர்க்க, வெகுஜன அரங்கத்தில் உள்ள உறுப்பினர்களுக்கும் பணியாற்றுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குகிறது. எனவே இத்தகைய வாய்ப்புகளை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

6.95 வர்க்க வெகுஜன அரங்க உறுப்பினர்கள் மத்தியில் ஒரு பக்கம் கட்சி கட்டும் பணியை செய்ய வேண்டும். மறுபுறத்தில் வெகுஜன அரங்க மேடையில் வரம்புக்குட்பட்ட முறையில் இடதுசாரி ஜனநாயக உணர்வை உருவாக்கும் அளவிற்கான அரசியலையும் கொண்டு செல்ல வேண்டும். இதன் மூலமும் நமது வாக்கு பலத்தை அதிகரிக்க முடியும்.

6.96 நாம் நடத்தும் இயக்கங்களில் கலந்து கொள்வது கட்சி உறுப்பினர்களில் ஒரு பகுயினர் மட்டுமே. ஒரு பிரச்சனையில் கட்சிக்கு அப்பாற்பட்ட பாதிக்கப்பட்ட மக்கள் பகுதியினரை போராட்டத்தில் ஈடுபடுத்துவதன் மூலமே அவர்களை நம்முடைய அரசியல் பற்றி சிந்திக்க வைக்க முடியும்.

6.97 பெரும்பகுதி கட்சி உறுப்பினர்கள் வர்க்க வெகுஜன அமைப்புகளில் வேலை செய்யாதபோது மேற்கண்ட அரசியல் பணி நடக்காது. ஒரு கட்சி உறுப்பினர் அவர் வாழும் பகுதியில் கட்சியின்

அரசியல் செல்வாக்கோடு, மக்கள் மத்தியில் அவருக்குள்ள செல்வாக்கையும் பயன்படுத்தி நமது வாக்குபலத்தை விரிவாக்கிட முயற்சிக்க வேண்டும். பெரும்பான்மையான கட்சி உறுப்பினர்கள் தாங்கள் வாழும் பகுதிகளில் தனிமரமாக இருந்தால் நமது ஆதரவு தளத்தை, வாக்கு பலத்தை விரிவாக்க முடியாது.

6.98 மேற்கண்ட முறையில் ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் செயல்பட வேண்டுமென்றால் ஏதாவதொரு வர்க்க வெகுஜன அமைப்பில் இருந்து செயல்பட வேண்டும் என்கிற அமைப்புச் சட்ட விதியை அமலாக்கிட வேண்டும். ஒரு கட்சி உறுப்பினர் மேற்கண்ட முறையில் செயல்பட வேண்டுமென்றால் அவர் இருக்கக் கூடிய கிளை அத்தகைய வேலைகளைச் செய்திட முடிவெடுக்க வேண்டும். ஒரு கிராமத்தில் வாக்கு பலத்தை உருவாக்கக் கூடிய, விரிவுபடுத்தக் கூடிய வேலையை அந்த கிளைதான் செய்ய முடியும். இதற்கு இடைக்குழுக்களுக்கும், மாவட்டக்குழுக்களும் உதவி செய்திட வேண்டும். கிளை செய்ய வேண்டிய வேலையை இடைக்குழுக்களோ, மாவட்டக்குழுக்களோ செய்ய இயலாது. இம்முறையில் கிளையை செயல்பட வைக்க வேண்டியது கிளைச் செயலாளரே. இடைக்குழுவிற்கு கிளைகளை இயக்கக்கூடிய பொறுப்பு உள்ளது. என்றாலும் சம்பந்தப்பட்ட கிளையை இயக்க வேண்டியது, முன்முயற்சி எடுக்க வேண்டியது அக்கிளைக்கு பொறுப்பாக இருக்கக்கூடிய இடைக்குழு உறுப்பினரே. இங்குதான் கிளையின் செயல்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. மாதம் ஒருமுறை கிளை கூட வேண்டிய அவசியத்தை உணர்த்த முடியும். கிளையில் கட்சி உறுப்பினர்கள் இப்பணியை செய்ய வேண்டுமென்றால் அவர்கள் மத்தியில் வேலைப் பிரிவினை செய்திட வேண்டும். அந்த வேலைப் பிரிவினை அமலாக்கப்படுகிறதா என்பதை இடைக்குழு கண்காணிக்க வேண்டும். இடைக்குழு செய்கின்றதா என்பதை மாவட்டக்குழுவும், மாவட்டக்குழு செய்கிறதா என்பதை மாநிலக்குழுவும் பரிசீலித்து உதவிட வேண்டும்.

6.99 வாக்கு பலத்தை அதிகரித்திட திட்டத்தை உருவாக்கி மாநிலக்குழுவும் மாவட்டக்குழுவும் இடைக்குழுக்களுக்கும் கிளைகளுக்கும் வழிகாட்டிட வேண்டும். மாநிலக்குழு முடிவெடுத்தாலும், மாவட்டக்குழு முடிவெடுத்தாலும் ஸ்தலத்தில் மக்களோடு நேரடியாக தொடர்புள்ள கிளைகள் மூலமே மாநிலக்குழு எடுத்த முடிவை அமலாக்கிட முடியும்.

6.100 நமது அரசியல் நிலைப்பாட்டை விளக்கி கட்சிக்கு அப்பாற்பட்டவர்களோடு விவாதிக்கக் கூடிய திறமையை நமது கட்சி உறுப்பினர்களுக்கு வளர்க்க வேண்டியுள்ளது. நமது கட்சி நிலைப்பாட்டை பற்றி தெளிவில்லாத ஒரு கட்சி உறுப்பினர் மக்களுக்கு நமது கட்சி நிலைப்பாட்டை தெளிவுபடுத்திட முடியாது. இதற்கு ஒவ்வொரு கிளையும் தீக்கதிர் வாங்கிடுவதோடு கிளை உறுப்பினர்கள் தீக்கதிர் மற்றும் நமது இதழ்களை, பிரசுரங்களை படித்திட ஏற்பாடு செய்ய வேண்டும்.

6.101 மேற்கண்ட கடினமான பணியை நிறைவேற்றுவதன் மூலமே ஆதரவு தளத்தையும் வாக்கு பலத்தையும் விரிவுபடுத்திட முடியும்.

6.102 கட்சியின் ஆதரவு தளத்தை, வாக்கு பலத்தை விரிவுபடுத்திடும் வேலையை எங்கிருந்து துவங்குவது?, கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரும் (எல்லா மட்டத்திலும்) தன்னுடைய குடும்ப உறுப்பினர்களை, வர்க்க, வெகுமக்கள் அமைப்பு உறுப்பினர்களை, கட்சி உறுப்பினர்களாக அல்லது கட்சி ஆதரவாளர்களாக, கட்சிக்கு வாக்களிப்பவர்களாக உருவாக்கிட முயற்சிக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்களோடு ஜனநாயக முறையில் அணுகுவது, கட்சி உறுப்பினர் செய்யும் கட்சி வேலையை குடும்ப உறுப்பினர்கள் பெருமையாக கருதும்படி உணரவைப்பது தேவை. இதற்கு கட்சி மற்றும் வர்க்க, வெகுமக்கள் அமைப்புகள் நடத்தும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வைப்பதோடு, குடும்ப விழாக்களிலும் கலந்து கொள்ள வைக்க வேண்டும்.

வர்க்க வெகுஜன அமைப்புகளுடைய உறுப்பினர்கள் மத்தியில் கட்சி கட்டும் பணியின் மூலம் கட்சியின் ஆதரவு தளத்தை, வாக்கு பலத்தை உருவாக்கிட, விரிவாக்கிட திட்டமிட வேண்டும். இத்தகைய பணிக்கு பிராக்சன் மற்றும் கட்சி கமிட்டிகள் திட்டமிட வேண்டும்.

6.103 வாக்கு பலத்தை அதிகரித்திட கிராமங்களிலும் நகரங்களிலும் பூத் கமிட்டிகள் அமைத்து பொறுப்பாளர்களை நியமித்து, நமது வாக்கு பலத்தை உறுதிபடுத்திட வேண்டும்.

பங்கேற்பு

6.104 கிளைக் கூட்டங்கள், கட்சிப் பேரவைக் கூட்டங்கள், கட்சி மாநாடுகள், தேர்தல் பணி, கட்சி மற்றும் வர்க்க-வெகுஜன அரங்க இயக்கங்கள் போன்றவைகளில் கட்சி உறுப்பினர்களின் பங்கேற்பு பல நேரங்களில் மூன்றில் ஒரு பகுதிக்கும் குறைவாகவே உள்ளது. இது பற்றி பலமுறை பரிசீலித்துள்ளோம். ஆனால், அதில் முன்னேற்றம் இல்லை.

6.105 கட்சி உறுப்பினர்களுடைய பங்கேற்பில்லாமல் கட்சி மற்றும் வர்க்க-வெகுஜன அரங்க முடிவுகளை அமல்படுத்த முடியாது. கட்சி உறுப்பினர்களின் செயல்பாடு பற்றி சால்கியா ஸ்தாபனத் தீர்மானம் கீழ்க்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளது;

6.106 "தற்போது பெரும் எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் குறைந்தபட்சக் கடமைகளைக் கூட நிறைவேற்றுவதில்லை. அதனால், கட்சியானது ஒரு வரையறுக்கப்பட்ட உருவமில்லாத தனிநபர்களின் கதம்பத் திரளின் நிலைக்கு சுருக்கப்பட்டு ஒரு கட்சிக்கான அடிப்படையே இல்லாததாக இருந்து வருகிறது".

6.107 கட்சி உறுப்பினர்களுக்கு வேலைப் பிரிவினை செய்து அதனடிப்படையில் அவர்களுடைய செயல்பாட்டை மேம்படுத்துவதோடு கட்சி மற்றும் வர்க்க-வெகுஜன அரங்க நடவடிக்கைகளில் அவர்களுடைய பங்கேற்பை உறுதிபடுத்திட இடைக்குழுக்களும், மாவட்டக்குழுக்களும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

கட்சி கிளைச் செயல்பாடு

6.108 மாநிலத்தில் மொத்தம் 12,377 கிளைகள் உள்ளன. வர்க்க மற்றும் வெகுமக்கள் அமைப்புகளின் விரிவாக்கம், ஸ்தல கோரிக்கைகளுக்கான இயக்கம், மாநிலக்குழு, மாவட்டக்குழு, இடைக்குழுக்கள் நடத்திடும் இயக்கங்களுக்கு கட்சி அணிகளையும், மக்களையும் பங்கேற்க வைப்பது, மக்கள் மத்தியில் அரசியல் பிரச்சாரம், தீக்கதிர் மற்றும் கட்சி பிரசுர விற்பனை, கட்சியின் ஆதரவு தளத்தை, வாக்கு பலத்தை அதிகரிப்பது போன்று பன்முக பணிகளை கட்சிக் கிளை / உறுப்பினர்கள் செய்ய வேண்டியுள்ளது.

6.109 மேற்கண்ட கடமைகளை நிறைவேற்றிட கட்சிக்கிளை மாதமொருமுறை கூடுவதை உத்தரவாதப்படுத்திட வேண்டும். கடந்த மூன்றாண்டுகளில் பெரும்பான்மையான மாவட்டங்களில் கிளைகளை கூட்டுவதற்கு கூடுதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் சிறுபகுதி கிளைகள் மட்டுமே மாதமொருமுறை கூடியுள்ளது.

6.110 சில மாவட்டக்குழுக்கள் மாதமொருமுறை கிளைகளை கூட்டிட எடுத்த முயற்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் மாதமொருமுறை கிளைகளை கூட்டுவதில் நாம் வெற்றி பெறவில்லை. மாதமொருமுறை கிளைகளை கூட்டுகிற போது அதனால் ஏற்படும் பலன் மதுரை மாநகர் மாநாட்டு அறிக்கையில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

6.111 "மாதாந்திர கிளைக்கூட்டம் நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. 90 முதல் 240 கிளைகளின் கூட்டங்கள் வரை ஏற்ற, இறக்கத்துடன் இந்த காலங்களில் நடைபெற்றுள்ளது. தொடர்ச்சியாக மாதாந்திர கிளைக்கூட்டம் நடத்திய கிளைகளில், இயக்கப் பங்கேற்பு, லெவி முடித்தல், வெகுஜன அரங்க செயல்பாடு, ஸ்தல இயக்கம், போன்றவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக பகுதிக்குழுக்களின் அறிக்கை தெரிவிக்கிறது."

6.112 எதிர்காலத்தில் எல்லா மாவட்டங்களிலும் மாதமொருமுறை கிளைகளை கூட்டுவதன் மூலமே கட்சியின் அரசியல், ஸ்தாபன இயக்க கடமைகளை முழுமையாக நிறைவேற்றிட முடியும்.

இடைக்குழுக்கள்

6.113 மாநிலத்தில் ஸ்தல இடைக்குழுக்கள் 421, அரங்க இடைக்குழுக்கள் 59. மொத்தம் 480 இடைக்குழுக்கள் உள்ளன.

கடந்த மாநில மாநாடு இடைக்குழுக்கள் செயல்பாடுகள் பற்றி கீழ்க்கண்டவாறு சுட்டிக்காட்டியது.

6.114 "கிளைகளுக்கு அடுத்ததாக மக்களுடன் நெருக்கமாக இருப்பது இடைக்குழுக்கள் என்பதால் இடைக்குழுக்களின் செயல்பாட்டில் முன்னேற்றம் இல்லாமல் கட்சி மற்றும் வெகுமக்கள் அமைப்புகளின் வளர்ச்சி ஏற்படாது."

6.115 எல்லா மாவட்டக்குழுக்களும் இடைக்குழுக்கள் செயல்பாட்டில் உள்ள குறைபாடுகளைக் களைந்து செயல்பாட்டை மேம்படுத்திட முயற்சிகளை மேற்கொண்டன. இடைக்குழு உறுப்பினர்களுக்கு தனியாகவும், கிளைச் செயலாளர்களோடு சேர்த்தும் பயிற்சி முகாம்கள் மாவட்ட வாரியாக நடத்தப்பட்டுள்ளன. இருப்பினும் இடைக்கமிட்டி செயல்பாடுகளில் ஓரளவுக்கே முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தேவையான முன்னேற்றம் ஏற்படவில்லை.

6.116 கட்சியின் மாவட்ட மாநாடுகள் இடைக்குழு செயல்பாட்டில் உள்ள குறைபாடுகளை பரிசீலனை செய்து முன்னேற்றம் காண முடிவெடுத்துள்ளன. விழுப்புரம் மாவட்ட மாநாட்டு அறிக்கை இடைக்குழுக்கள் செயல்பாடுகள் பற்றி கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

6.117 "இடைக்குழு கூட்டங்களில் அரசியல் ரிப்போர்ட் செய்வது அதன் மீது விவாதம் செய்வது. நடைபெற்ற பணிகள் அறிக்கை வைத்து பரிசீலனை செய்வது, அதன்மீது முடிவுகள் எடுப்பது மாதாந்திர வரவு - செலவு அறிக்கையை இடைக்குழுவில் ஒப்புதல் பெறுவது, இதற்கு ஏற்ப கால அவகாசம் எடுத்துக் கொண்டு இடைக்குழு கூட்டங்களை நடத்துவது ஆகியவற்றில் பெரும் குறைபாடு உள்ளது. இதனால் கூட்டங்களில் சுயவிமர்சனம், விமர்சனம் இல்லாமல் தனிநபர் விமர்சனம் அல்லது தனிநபர் சார்புநிலை உருவாகிறது. முடிவுகளை அமலாக்குபவர்கள், அமலாக்காதவர்கள் என்ற இரு பகுதியினர் உள்ளனர். ஒருபகுதி இடைக்குழு உறுப்பினர்கள் கிளைகளை சுயமாக இயக்கும் திறமை இல்லாததால் கிளைகளின் செயல்பாட்டில் முன்னேற்றத்தை உருவாக்கிட முடியவில்லை. எனவே, ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டை நிறைவேற்றுவதில் பலவீனமும், தாராளவாத அணுகுமுறையும் உள்ளதையே இப்பகுதி உணர்த்துகிறது."

6.118 இடைக்குழுக்கள் செயல்பாடுகள் பற்றிய மேற்கண்ட மதிப்பீடு பல மாவட்டங்களுக்கு பொருந்தும்.

6.119 இடைக்குழுக்களில் மைய செயல்பாடு பெரும்பான்மையான மாவட்டங்களில் பலவீனமாகவே உள்ளது. உதாரணமாக மாதமொரு முறை கூடும் இடைக்ககுழுக்களில் இரண்டு கூட்டங்களுக்கு இடையில் வரும் வேலைகளை ஓரிரு தோழர்களோடு கலந்து ஆலோசித்து செய்திடும் வகையில் மைய செயல்பாடு அமைந்திட வேண்டும்.

6.120 அரங்கங்களுக்கு தலைமை தாங்கி நடத்துவது, கட்சிக் கிளைகளை இயக்குவது, ஸ்தல இயக்கங்களைத் திட்டமிட்டு நடத்துவது, மேல்கமிட்டி முடிவுகள் - இயக்கம், பிரச்சாரம், கட்சி மற்றும் வர்க்க வெகுஜனம் அமைப்புகளின் விரிவாக்கம், மேல்கமிட்டி முடிவுகளை கிளைகளுக்கு ரிப்போர்ட் செய்வது, கிளைகளில் இருந்து வரும் புகார்களை விசாரித்து தீர்வு காண்பது போன்ற பல வேலைகளை செய்ய வேண்டியுள்ளது.

6.121 இடைக்கமிட்டி உறுப்பினர்கள் ஒரு பகுதியினர் நேரடியாக வர்க்க வெகுமக்கள் அமைப்புகளுக்கு நிர்வாகிகளாக உள்ளதோடு கட்சி கிளைகளுக்கும் பொறுப்பாக உள்ளனர். ஒரு பகுதி இடைக்குழு

உறுப்பினர்கள் கிளைகளுக்கும், அரங்கங்களுக்கும் பொறுப்பாக (நிர்வாகிகளாக இல்லாமல் அரங்கத்திற்கு இடைக்குழு சார்பில் வழிகாட்டியாக) இருந்து செயல்படுகின்றனர்.

6.122 வேலைப்பிரிவினை அடிப்படையில் மேற்கண்ட பொறுப்புகளை இடைக்குழு உறுப்பினர்கள் நிறைவேற்றுகிறார்களா? என்பதை கூட்டாக இடைக்குழு கூட்டத்தில் பரிசீலிக்க வேண்டும். இத்தகைய பரிசீலனை ஒருபகுதி இடைக்குழுக்களில் மட்டுமே நடக்கிறது.

6.123 இடைக்குழுக்களுக்கு உட்பட்ட பகுதிகளில் எந்த பிரச்சனையில் இயக்கத்திற்கு வாய்ப்புள்ளது என்பதை கண்டறிந்து அந்த பிரச்சனையின் மீது ஸ்தல அளவிலோ இடைக்குழு அளவிலோ இயக்கங்களுக்கு திட்டமிடுவதில் குறைபாடு நீடிக்கிறது.

6.124 கட்சி மற்றும் வர்க்க வெகுமக்கள் அமைப்புகள் எடுக்கும் எல்லா முடிவுகளையும் கிளைகள் மூ லமாகவே அமலாக்க வேண்டியுள்ளது. முடிவுகள் அமலாவது கிளை செயல்பாட்டை பொறுத்தே உள்ளது. இந்த அம்சத்தை மனதில் கொண்டு இடைக்குழு உறுப்பினர்கள் கிளைகளை இயக்கிட வேண்டும். ஆனால் கணிசமான இடைக்குழு உறுப்பினர்கள் கிளைகளை சுயமாக இயக்கிடும் திறமையில்லாத தோழர்களாக உள்ளனர்.

6.125 சில மாவட்டங்களில் இடைக்குழுக்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து இடைக்குழுக்களை இயக்கிட மாவட்டக் குழுக்கள் அழுத்தம் கொடுத்துள்ளன. உதாரணமாக நெல்லை மாவட்டக்குழு இடைக்குழு செயல்பாட்டை பலப்படுத்திட "பலமான இடைக்கமிட்டிகளுக்கு பத்து அம்சங்கள்" என்ற முழக்கத்தை முன்வைத்து முயற்சிகளை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. 1. இடைக்கமிட்டிக் கூட்டம், திட்டமிடல், அலுவலகம், கூட்டுச் செயல்பாடு, 2. விரிவாக்கம் - வர்க்க வெகுஜன அமைப்புகள் துணைக்குழு சேர்ப்பு, 3. வர்க்க வெகுஜன அமைப்புகளின் இடைக்கமிட்டிகளை உருவாக்குவோம், பலப்படுத்துவோம். 4. கட்சிக் கல்வி, 5. கட்சிக் கிளைக்கூட்டங்கள், 6. ஸ்தல இயக்கம், 7. கட்சி பத்திரிகைகள், 8. தலித், சிறுபான்மை, பெண்கள் பிரச்சனைகளில் தலையிடுவது, 9. செந்தொண்டர் அணி, 10. கட்சி நிதி." நெல்லை மாவட்டக் குழுவின் முயற்சி குறைந்தபட்சம் அம்மாவட்டத்தில் நீடித்து வந்த தேக்கத்தை உடைக்க பயன்பட்டது.

6.126 இடைக்குழு உறுப்பினர் ஒவ்வொருவரும் சுயேச்சையான முயற்சியை மேற்கொண்டால் இடைக்குழுவிற்கு உட்பட்ட பகுதிகளின் இயக்கங்கள் நடத்துவதிலும் விரிவாக்கத்திலும் பெரிய முன்னேற்றத்தை உருவாக்க முடியும். இடைக்குழுவில் தலைமைப் பொறுப்பில் உள்ள இடைக்குழு உறுப்பினர்கள் இடைக்குழு கூட்டத்தில் முடிவு எடுப்பதோடு அதை அமலாக்கிட தங்களுடைய வேலை பாணியில் உரிய மாற்றத்தை கொண்டு வந்தால் வளர்ச்சியை காண முடியும். இது குறித்து மாசேதுங் 1943ல் கூறியதை இங்கு மேற்கோள் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

6.127 "தலைவர்கள் பொதுவான உத்தரவுகளை பிறப்பிப்பதுடன் திருப்தியடைந்துவிடாமல் தங்களது அமைப்புகள் சிலவற்றில் எடுத்துள்ள வேலைகளை நிறைவேற்றி ஒரு இடத்தில் ஆரம்ப வெற்றியைப் பெற்று அவ்வாறு கிடைத்த அனுபவத்தை இதர அமைப்புகளின் வேலைக்கு வழிகாட்ட உபயோகப்படுத்த வேண்டும்."

6.128 உதாரணமாக ஸ்தல இயக்கம் நடத்தவேண்டுமென்று இடைக்குழு எடுத்த முடிவை அமலாக்கிட இடைக்குழு உறுப்பினர் தான் பொறுப்பாக உள்ள ஒரு கிராமத்தில் அல்லது நகரத்தில் அல்லது அரங்கத்தில் -மக்கள் பிரச்சனைகளைக் கண்டறிந்து அதன் மீது இயக்கத்தை உருவாக்கி அந்த இயக்கத்திற்கு தலைமை தாங்கி கோரிக்கையை வென்றெடுக்க முயற்சிக்க வேண்டும். இதில் கிடைக்கும் வெற்றியை இடைக்குழு மூலமாக இதர பகுதிகளுக்கு எடுத்துச் சென்றால் தேக்கத்தை உடைக்க முடியும், வளர்ச்சியை காண முடியும்.

6.129 மாநிலம் முழுவதும் - இடைக்குழுக்களும் - அரங்க குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. இடைக்குழுக்களின் செயல்பாட்டை பலப்படுத்திட வேண்டுமென தொடர்ச்சியாக மாநில மாநாடுகள் முடிவெடுத்தன. சில முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பினும் கடந்த காலத்தில் மாநில மாநாடுகள் எடுத்த முடிவை இன்னும் அமலாக்கிட இயலவில்லை._இடைக்குழுக்களின் செயல்பாட்டில் அலுவலகங்கள் மிக முக்கியமானவை. அலுவலகம் இல்லாத இடைக்குழுக்கள் உடனடியாக அலுவலகங்கள் அமைத்து செயல்படுவதை உத்தரவாதப்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் இடைக்கமிட்டிகளின் செயல்பாட்டில் முன்னேற்றம் காண திட்டமிட வேண்டும்.

மாவட்டக்குழுக்கள்

6.130 கடந்த மாநில மாநாடு மாவட்டக்குழு, மாவட்ட செயற்குழு கீழ்க்கண்டவாறு செயல்பட வேண்டுமென்று முடிவெடுத்தது.

6.131 "மாவட்ட செயற்குழு, மாவட்டக்குழு மாவட்ட அளவில் கட்சியின் அரசியல் ஸ்தாபன தலைமை என்ற அடிப்படையில் இயக்கங்களுக்கு திட்டமிடுவது, இடைக்குழுக்கள், அரங்கங்களுக்கு வழிகாட்டுவது, கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அரங்க விரிவாக்கத்திற்கு முயற்சி எடுப்பது, தீக்கதிர் விற்பனையை அதிகரிப்பது, கட்சியின் மத்தியக்குழு, மாநிலக்குழு முடிவுகளையும், அகில இந்திய, மாநில அளவிலான வர்க்க, வெகுஜன அரங்கங்களின் முடிவுகளையும் அமலாக்கிடுவது போன்ற அளவிலான பன்முகப் பார்வை கொண்ட தன்மையுடன் செயல்பட வேண்டும்."

6.132 மேற்கண்ட மாநிலக்குழு முடிவுகளை அமலாக்கிட எல்லா மாவட்டங்களிலும் மாவட்டக்குழுக்கள் முயற்சிகளை மேற்கொண்டன.

6.133 இக்காலத்தில் விரிவாக்கத்திற்கு திட்டமிடல், அகில இந்திய, மாநில அளவிலான அரசியல் ஸ்தாபன முடிவுகளை அமலாக்குதல், வர்க்க, வெகுமக்கள் அமைப்புகளின் மேல்கமிட்டி முடிவுகளை அமலாக்குதல், கட்சிக் கல்வி போன்று பல அம்சங்களில் மாவட்டக்குழுக்களின் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

6.134 சில மாவட்டங்களில் மாவட்ட அளவிலான பிரச்சனைகளில் சுயேச்சையான முன்முயற்சி எடுத்து இயக்கங்கள் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக கடலூர் மாவட்டத்தில் அண்ணாமலை பல்கலைக்கழக நிர்வாகத்தை அரசே ஏற்க வேண்டுமென்றும்; நாகை, திருவாரூர், தஞ்சை டெல்டா பிரதேசங்களில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் அளிக்க வேண்டுமென்றும்; தூத்துக்குடியில் நிலப்பிரச்சனையிலும், தருமபுரியில் தலித் மக்களுக்கு ஆதரவு, பாண்டிச்சேரியில் ஜிப்மர் மருத்துவமனையை தனியார் மயமாக்கும் முயற்சியின் ஒருபகுதியாக முக்கிய மருத்துவ சேவைகளுக்கான கட்டணங்கள் உயர்த்தப்பட்டதற்கு எதிரான போராட்டம் போன்று பல மாவட்டங்களில் மாவட்டக்குழுக்களினுடைய தலையீடு இருந்துள்ளது.

6.135 பல மாவட்டங்களில் தீண்டாமை ஒழிப்புக்கான, மனைப்பட்டாவிற்கான இயக்கங்களும் நடத்தப்பட்டுள்ளன.

6.136 கடந்த மூன்றாண்டுகளில் மாவட்டக்குழுக்களின் செயல்பாட்டில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் பல அம்சங்களில் குறைபாடுகள் நீடிக்கின்றன.

6.137 கட்சியின் மத்தியக்குழு, மாநிலக்குழு முடிவுகளை அமலாக்குவது, வர்க்க - வெகுமக்கள் அமைப்புகளின் மாநில அளவிலான முடிவுகளை அமலாக்குவதற்கு அப்பால் மாவட்டத்திலுள்ள பிரத்தியேகமான அரசியல், சமூக, பொருளாதார சூழல்களை பரிசீலித்து கோரிக்கைகளை

உருவாக்கி மாவட்ட அளவிலான அல்லது பகுதி அளவிலான இயக்கங்களை நடத்துவதில் மாவட்டக்குழுக்கள் கூடுதல் முயற்சி எடுத்திருக்க வேண்டும்.

6.138 உதாரணமாக, வட மாவட்டங்களில் பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச்சிறுத்தைகள், மேற்கு மாவட்டங்களில் கொங்கு முன்னேற்றக்கழகம், தென்மாவட்டங்களில் புதிய தமிழகம், குமரி மாவட்டத்தில் பாஜக போன்ற அமைப்புகள் அடையாள அரசியல் நடைமுறையை கடைபிடித்து வருகின்றன. விடுதலை சிறுத்தைக் கட்சியையும், புதிய தமிழகத்தையும் மேற்கண்ட கட்சிகளோடு ஒப்பிடக்கூடாது. இருப்பினும் இந்த இரண்டு அமைப்புகளும் தலித் மக்களை தங்களுடைய வாக்கு வங்கிகளாக திரட்டிடும் முயற்சியை புறந்தள்ளி விட முடியாது. இத்தகைய மாவட்டங்களில் உள்ள பிரத்தியேகமான சூழலை பரிசீலித்து சம்பந்தப்பட்ட பகுதி மக்களை அரசியல் ரீதியாக, வர்க்க ரீதியாக திரட்டக்கூடிய முயற்சிகளை பெரும்பான்மையான மாவட்டக்குழுக்கள் எடுக்கவில்லை.

6.139 2011-ம் ஆண்டு தீக்கதிர் விற்பனை 30,505. தற்பொழுது தீக்கதிர் விற்பனை 28.500. பல மாவட்டங்களில் தீக்கதிர் விற்பனை குறைந்துள்ளது. மாவட்டக்குழுக்கள் முன்முயற்சி எடுத்துள்ள மாவட்டங்களில் கடந்த கால விற்பனையை தக்க வைத்ததோடு மேலும் சற்று விற்பனை உயர்ந்துள்ளது.

6.140 வர்க்க, வெகுஜன அமைப்புகளினுடைய செயல்பாடுகள் குறித்து மாநிலக்குழு நிறைவேற்றிய ஆவணங்களை மாவட்ட நிலைமைக்கேற்ப அமலாக்கிட பெரும்பான்மையான மாவட்டக்குழுக்கள் திட்டமிடவில்லை.

6.141 எல்லா மாவட்டங்களிலும் கட்சி மைய செயல்பாடு ஏற்பாடுகள் இருந்தாலும் மையத்திற்கு வரக்கூடிய மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எல்லாம் கலந்து கொள்வது தான் மையம் என்ற அடிப்படையில் இன்னும் ஒருபகுதி மாவட்டங்களில் செயல்பாடு அமையவில்லை.

6.142 மாவட்டக்குழு, மாவட்ட செயற்குழு எடுக்கும் முடிவுகளை அமலாக்கிட மாவட்ட செயலாளரோடு சில மாவட்ட செயற்குழு உறுப்பினர்களும் மையத்திலிருந்து செயல்பட வேண்டுமென்ற முடிவு இன்னும் சில மாவட்டங்களில் அமலாகவில்லை.

6.143 மாவட்ட செயற்குழு உறுப்பினர்களில் ஒரு பகுதியினர், வர்க்க-வெகுஜன அமைப்புகளுக்கு நிர்வாகிகளாக இருக்கிறார்கள். மற்றொரு பகுதியினர் இடைக்குழுச் செயலாளர்களாக இருக்கிறார்கள். மாவட்ட செயற்குழு, மாவட்டக்குழுக் கூட்டம் முடிந்த பிறகு சம்பந்தப்பட்ட மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் அரங்க, இடைக்கமிட்டி பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்கிற அதேநேரத்தில் மையத்திலிருந்து செய்ய வேண்டிய அரசியல், ஸ்தாபனப் பணிகளை செய்யக்கூடிய அடிப்படையில் மாவட்டக்குழுவின் வேலைப்பிரிவினை அமைய வேண்டும்.

6.144 மாவட்டக்குழு, மாவட்டத்திலுள்ள அரங்கங்கள் எடுக்கும் முடிவுகள் சில பகுதிகளில் / அரங்கங்களில் சரியாக அமலாகாதபோது, சம்பந்தப்பட்ட பணிக்கு பொறுப்பாக உள்ள மாவட்டசெயற்குழு, மாவட்டக்குழு தோழர்களின் பணியை விமர்சிக்கக் கூடிய நடைமுறை பல மாவட்டங்களில் இல்லை. இதனால் தனிப்பட்ட பொறுப்பை நிறைவேற்றவில்லையென்றால் விமர்சிக்கப்படுவோம் என்ற நிர்ப்பந்தம் இருப்பதில்லை.

6.145 பிரதானமான அரங்கங்களைத் தவிர அறிவியல், எழுத்தாளர் அரங்கம், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறுபான்மை, பாலர் அரங்கம் போன்ற அமைப்புகளுக்கு மாவட்ட செயற்குழுக்களும், மாவட்டக்குழுக்களும் போதுமான கவனம் செலுத்துவதில்லை.

6.146 கடந்த கால அரசியல் ஸ்தாபன படிப்பினைகளை கணக்கில்கொண்டு எந்த பணியில் ஒரு மாவட்டக்குழு பின்தங்கியிருக்கிறதோ அதற்கு கூடுதல் கவனம் செலுத்தி முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பார்வை பல மாவட்டக்குழுக்களுக்கு இல்லை.

6.147 மாவட்டக்குழுக் கூட்டங்களில் மத்தியக்குழு, மாநிலக்குழு அரசியல் முடிவுகள் விளக்கப்பட்ட பிறகு பெரும்பான்மையான மாவட்டக்குழுக்களில் ஓரிரு கேள்விகள் அல்லது சந்தேகங்கள் எழுப்புவதோடு முடிந்துவிடுகிறது. முறையான அரசியல் விவாதம் நடப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

6.148 மாவட்ட செயற்குழு செயல்பாட்டில் பல மாவட்டங்களில் செயற்குழு உறுப்பினர்களுக்கிடையில் இணக்கமில்லாத நிலை தொடருகிறது. இதனால் கருத்தொற்றுமை, செயலொற்றுமையோடு செயல்படுவதில் பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் விமர்சன, சுயவிமர்சன ரீதியில் பெரும்பான்மையான மாவட்டங்களில் விவாதம் இல்லாததால் வேலைகளில் உள்ள தேக்கத்தை களைய முடிவதில்லை.

6.149 பல மாவட்டங்களில் மாவட்ட மையப்பணிகளைச் செய்திட போதுமான ஏற்பாடு இல்லை. கணினி இல்லை; கணினி இருந்தாலும் அதை இயக்கிட பயிற்சிபெற்ற ஊழியர் இல்லை; இண்டர்நெட் ஏற்பாடும் இல்லை; இதனால் பல வேலைகள் தாமதமாகிறது.

6.150 கட்சி உறுப்பினர் பதிவு, நடைபெற்ற இயக்கங்கள் பற்றிய தகவல்கள், தீக்கதிர், பிரசுர விற்பனை விநியோகம் பற்றிய விபரங்கள் போன்ற பல விபரங்களை உடனுக்குடன் மாநிலக்குழுவிற்கு அனுப்பிடும் ஏற்பாடு பல மாவட்டங்களில் இல்லை. இத்தகைய பணிகளைச் செய்திட சில தோழர்களுக்கு தனிப்பொறுப்பு அளிக்க வேண்டுமென்ற முடிவும் அமலாக்கப்படவில்லை.

6.151 மாவட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கு, மாநில அளவில் அளிக்கப்பட்ட பயிற்சியில் மாவட்ட செயற்குழு, மாவட்டக்குழு உறுப்பினர்கள் சேர்ந்து செய்ய வேண்டிய பணிகளின் பட்டியல் அளிக்கப்பட்டது. அத்தனை பணிகளையும் மாவட்ட நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் அமலாக்கிட மாவட்டக்குழுக்கள் எதிர்காலத்தில் முயற்சிக்க வேண்டும்.

6.152 கட்சி மற்றும் வர்க்க-வெகுமக்கள் அமைப்புகளின் அகில இந்திய, மாநில அளவிலான அரசியல் - ஸ்தாபன - இயக்க முடிவுகளை அமலாக்குவதோடு, மாவட்டத்தில் கட்சி மற்றும் அரங்கக் குழுக்களுக்கு தலைமை தாங்குவது மற்றும் மாவட்ட நிலைமைக்கேற்ப இயக்கங்கள் நடத்துவது, கட்சி அணிகள் மத்தியில், மக்கள் மத்தியில் அரசியல் தத்துவார்த்த பிரச்சாரத்தை எடுத்துச் செல்வது போன்ற பன்முகப் பணிகளை மாவட்டச் செயற்குழு, மாவட்டக்குழு உறுப்பினர்கள் செய்திட வேண்டும்.

மாநிலக்குழு - மாநில செயற்குழு செயல்முறை:

6.153 20வது மாநில மாநாட்டில் கட்டுப்பாட்டுக்குழுத் தலைவர் உட்பட 80 மாநிலக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். சிறப்பு அழைப்பாளர்களாக 5 தோழர்கள் இடம்பெறுகின்றனர். மாநிலக்குழு அலுவலகச் செயலாளர் அழைப்பாளராகக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்.

6.154 கட்சி காங்கிரஸ் முடிந்து திரும்பிய பிறகு தோழர் என். வரதராஜன் காலமானார். மாநிலக்குழு உறுப்பினர் தோழர் அ. சேகர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டார். மாநிலக்குழுவிலிருந்து எம். அர்ச்சுணன் வெளியேற்றப்பட்டார்.

6.155 மாநில செயற்குழு கடந்த மூன்றாண்டுகளில் 54 முறை கூடியுள்ளது. சராசரியாக 20 நாட்களுக்கு ஒரு முறை செயற்குழு கூட்டம் நடைபெற்றுள்ளது. இதில் 7 முறை இரண்டு நாள் கூட்டங்களாக நடந்துள்ளன.

6.156 தோழர்கள் ஆர்.கோவிந்தராஜன், ஐ.ஆறுமுக நயினார், டி.லட்சுமணன், வே.மீனாட்சி சுந்தரம், வெங்கடேஷ் ஆத்ரேயா, எஸ்.ரமணி ஆகிய தோழர்கள் மாநில மையப் பணிகளைச் செய்து வருகிறார்கள்.

மாநில செயற்குழு

6.157 மாநில செயற்குழு கூட்டுத் தலைமையாக செயல்பட்டு வருகிறது. கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அரங்க விரிவாக்கம், கட்சியில் ஒற்றுமை, கட்சி அணிகளின் தரத்தை உயர்த்துதல் ஆகிய மாநில மாநாட்டு முடிவுகளை அமலாக்கிட மாநில செயற்குழு முன்னுரிமை அளித்தது.

6.158 2013ம் ஆண்டு மாநில செயற்குழுவின் ஆலோசனை முன்வைக்கப்பட்டு மாநிலக்குழு இடைக்கால ஸ்தாபன பரிசீலனை செய்தது.

6.159 2012, 2013, 2014 ஆகிய மூன்றாண்டுகளிலும் கட்சி உறுப்பினர் பதிவுப்பரிசீலனை மாநில செயற்குழு, மாநிலக்குழு மேற்கொண்டது.

6.160 கடந்த மூன்றாண்டுகளில் மாநில செயற்குழு மூன்று முறை மாநில அரசியல் நிலைமைகள் குறித்து விவாதித்து மாநிலக்குழுவிற்கு விவாதத்திற்காக முன்வைத்துள்ளது. அவ்வப்பொழுது எழும் சில அரசியல் பிரச்சனைகள் குறித்து மாநில செயற்குழு விவாதித்து தீர்மானங்கள் நிறைவேற்றுவதோடு குறிப்பிட்ட பிரச்சனைகள் மீது கட்சி நிலைபாட்டையும் உருவாக்கியுள்ளது. சட்டமன்ற குழுவின் சட்டமன்றத்திற்குள்ளான பணிகள் இருமுறை விரிவாக பரிசீலிக்கப்பட்டுள்ளது.

6.161 அவ்வப்பொழுது எழும் அரசியல் பிரச்சனைகள், மக்கள் பிரச்சனைகள், காவல்துறையின் மனித உரிமை மீறல்கள், பாலின கொடுமைகள், தீண்டாமை கொடுமைகள், உழைக்கும் மக்கள் மற்றும் ஜனநாயக இயக்கங்கள் போன்ற பிரச்சனைகள் குறித்து விவாதித்து அறிக்கைகள் வெளியிடுவதோடு சில பிரச்சனைகள் மீது இயக்கங்களுக்கும் அறைகூவல் விடுத்துள்ளது.

6.162 மாநில செயற்குழு கூட்டங்களுக்கு இடைப்பட்ட நாட்களில் முன்னுக்கு வரும் அரசியல், ஸ்தாபன பிரச்சனைகளுக்கு மாநில மையம் கூடி வழிகாட்டி வருகிறது.

6.163 மாவட்டங்களிலும், அரங்கங்களிலும் எழும் அரசியல், ஸ்தாபன பிரச்சனைகளுக்கு மாநில செயற்குழு விவாதித்து வழிகாட்டி வருகிறது. மேலும் தேவைப்படுகிற போது மாவட்டங்களுக்கும், அரங்கங்களுக்கும் சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களுடன் கூடுதலாக செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு உதவி செய்து வருகிறார்கள்.

6.164 கடந்த மாநில மாநாட்டிற்கு பிறகு தொழிற்சங்க அரங்கில் நமது கடமை, நெறிப்படுத்தும் இயக்க ஆவணம், இலங்கைத் தமிழர் பிரச்சனை, மாணவர் அரங்கத்தில் நமது கடமை ஆகிய ஆவணங்கள் குறித்து மாநில செயற்குழு விவாதித்து மாநிலக்குழுவில் இறுதிப்படுத்தி ஆவணங்கள் கட்சிக் கடிதங்களாக வெளியிட்டிருக்கிறோம். இருப்பினும் இந்த ஆவணங்களை மாநிலம் முழுவதும் அமலாக்கிட மாநில செயற்குழு, மாநிலக்குழு கூடுதல் முயற்சிகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.

6.165 மாநில செயற்குழுவில் முடிவெடுத்து சில அரங்கப் பணிகளை மேம்படுத்த மாவட்டச் செயலாளர்கள் மற்றும் அரங்கத்தில் பணியாற்றும் தோழர்களைக் கொண்ட கூட்டம் நடத்தப்பட்டது. கட்சிக் கல்வியை மேம்படுத்திட மாவட்டச் செயலாளர்கள், மாவட்ட கட்சி கல்விக்குழு கன்வீனர்கள் கூட்டம், நகர்ப்புறங்களில் கட்சி கட்டும் பணி பற்றி விவாதித்திட மாவட்டச் செயலாளர்கள், நகர்ப்புற கட்சி இடைக்குழு செயலாளர்கள் கூட்டம், மாவட்டச் செயலாளர்கள், மாணவர் அரங்க மாவட்டப் பொறுப்பாளர்கள், மாணவர் அரங்க மாவட்ட பிராக்சன் கன்வீனர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. இத்தகைய கூட்டங்கள் சம்மந்தப்பட்ட பணிகளில் உள்ள தொய்வைப் போக்குவதற்கு பயன்பட்டது.

6.166 மாநில பிராக்சன், உபகுழு முடிவுகள் பற்றி விவாதித்து மாநில செயற்குழு வழிகாட்டி வருகிறது. அதே நேரத்தில் தேக்கமுள்ள அரங்கங்கள் குறித்தும், மாவட்டங்கள் குறித்தும் விவாதித்து தேக்கத்தை உடைப்பதற்கு மாநில செயற்குழு முயற்சிகளை மேற்கொள்ள இயலவில்லை.

6.167 சட்டமன்றக் கூட்டம் கூடுவதற்கு முன்பு மாநில செயற்குழு சட்டமன்றத்தில் நாம் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறை குறித்து விவாதித்து வழிகாட்டுகிறது. மேலும் சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகிற போதும் மாநில செயற்குழு சட்டமன்றக்குழுவிற்கு வழிகாட்டி வருகிறது.

6.168 கட்சி மற்றும் வர்க்க வெகுஜன அரங்கங்களிலிருந்து தோழர்கள் அனுப்பும் புகார்கள், கடிதங்களை மாநில மையம் பரிசீலிக்கிறது. மாவட்டக்குழு அல்லது அரங்கங்களில் விவாதிக்க வேண்டிய பிரச்சனையாக இருந்தால் மாநில மையத்திற்கு வரும் புகார் கடிதங்களை மாவட்டக்குழுவிற்கும் அரங்கங்களுக்கும் அனுப்பி வைக்கிறோம். மாநில செயற்குழுவில் விவாதிக்க வேண்டிய பிரச்சனையாக இருந்தால் மாநில செயற்குழு விவாதித்து தீர்வு காண்கிறோம். மாவட்டங்களுக்கு, அரங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள் மீது சம்பந்தப்பட்ட கமிட்டிகள் மேல்நடவடிக்கை எடுக்காத போது மாநில செயற்குழு தலையீட்டு தீர்வு காண முயற்சிக்க வேண்டும்.

6.169 மாநில செயற்குழு உறுப்பினர்கள் அரங்கங்களுக்கும், மாவட்டங்களுக்கும் வழிகாட்டுவதோடு மாநில அளவில் நடைபெறக்கூடிய இயக்கங்கள் மற்றும் பிரச்சாரங்களில் கலந்து கொள்கிறார்கள்.

6.170 தோழர்கள் ஜி.ஆர், டி.கே.ஆர், உ.வாசுகி, பி.சம்பத், பி.செல்வசிங், என்.குணசேகரன், க.கனகராஜ் ஆகிய தோழர்கள் மாநில மையத்திலிருந்து செயல்பட்டு வருகிறார்கள்.

6.171 மாநில மைய அலுவலகத்திற்கு அன்றாடம் வருகைதரும் மாநில செயற்குழு தோழர்கள் கலந்து கொள்ளக்கூடிய மையக் கூட்டம் நடைபெறுகிறது. தேவையின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட பிரச்சனையை விவாதிப்பதற்கு விரிவடைந்த மையக் கூட்டமும் நடத்தப்படுகிறது.

6.172 மாநிலக்குழு முடிவுகளையும் மாநிலத்தில் நடைபெறும் முக்கிய இயக்கங்களையும் அறிக்கையாக மத்தியக்குழுவிற்கு அவ்வப்பொழுது அனுப்பி வைக்கிறோம்.

6.173 மாநில செயற்குழு இக்காலத்தில் ஆவணங்களை உருவாக்குவதிலும், வழிகாட்டுவதிலும், திட்டமிடுவதிலும் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆயினும், ஆவணங்களை அமலாக்குவதில் தொடர்ச்சியாக கண்காணித்து அவற்றில் பலன் கிடைக்கும் வரை சம்பந்தப்பட்ட அமைப்புகளை இயக்குவது, வர்க்க, வெகுஜன ஸ்தாபனங்களின் செயல்பாட்டை கண்காணித்து பரிசீலித்து வழிகாட்டுவது, தமிழகத்தின் ஒட்டுமொத்த நலன் சார்ந்த பிரச்சனைகளில் தன்முனைப்போடு விவாதித்து இயக்கங்களுக்குச் செல்வது போன்ற பல அம்சங்களில், கூடுதல் கவனத்தோடு மாநில செயற்குழு செயல்பட்டிருக்க வேண்டும்.

6.174 மாநில செயற்குழு உறுப்பினர்களின் வேலைகளை பரிசீலித்தபோது வேலைபாணியில் மாற்றத்தை உருவாக்க வேண்டுமென்று மாநில செயற்குழு கீழ்க்கண்ட முடிவை மேற்கொண்டது.

6.175 "நடப்பு நிலைமைகளை பயில்வது, வரலாற்றை பயில்வது, மார்க்சிய - லெனினியத்தை பொருத்துவது (பிரயோகிப்பது)" ஆகிய மூன்று அம்சங்களில் கூடுதல் கவனம் செலுத்தக் கூடிய அளவிற்கு கம்யூனிஸ்டுகள் தங்கள் வேலைபாணியை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று மாசேதுங் குறிப்பிட்டுள்ளார். அன்றாட அரசியல் ஸ்தாபன வேலைகளை செய்வதோடு அடிப்படையான அரசியல் தத்துவார்த்த அம்சங்களிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்று மாநில செயற்குழு முடிவு செய்துள்ளது.

6.176 இத்தகைய மாற்றத்தை மாநில செயற்குழுவில் துவங்கி, மாநிலக்குழுவிற்கு, மாவட்டக்குழுவிற்கு மற்றும் இடைக்குழு வரையில் கொண்டு செல்ல வேண்டுமென்று மாநில செயற்குழு முடிவெடுத்தது.

மாநிலக்குழு

6.177 மாநிலக்குழு 22 முறை கூடியுள்ளது. அதில் 6 மூன்று நாள் கூட்டங்களும், 7 இரண்டு நாள் கூட்டங்களாகவும் நடந்துள்ளன. பெரும்பான்மையான கூட்டங்களுக்கு மாநிலக்குழு உறுப்பினர்கள் அல்லாத மாவட்டச் செயலாளர்களும் அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் ஐந்து முறை நடந்துள்ளது.

6.178 மாநிலக்குழு உறுப்பினர்களில் ஒரு பகுதித்தோழர்கள் மாவட்டக்குழுக்களின் அங்கமாக இருந்து செயல்பட்டு வருகிறார்கள். ஒரு பகுதி மாநிலக்குழு உறுப்பினர்கள் வர்க்க - வெகுஜன அமைப்புகளின் மாநில மையங்களிலிருந்து பணியாற்றுகிறார்கள். ஒரு பகுதி மாநிலக்குழு உறுப்பினர்கள் தீக்கதிரில் பணியாற்றுகிறார்கள். மேலும் ஒரு பகுதி மாநிலக்குழு உறுப்பினர்கள் மாவட்டக்குழுவிற்கு பொறுப்பாக இருந்து செயல்படுகின்றனர்.

6.179 மாநில மாநாடு முடிந்தபிறகு ஏலகிரியில் நடைபெற்ற மாநிலக்குழுக் கூட்டத்தில் விரிவாக்கம், ஒற்றுமை, தரம் உயர்த்துதல் ஆகிய முடிவுகள் குறித்து விவாதித்து அமலாக்கத்திற்கு திட்டமிடப்பட்டது.

6.180 கடந்த மூன்றாண்டுகளிலும் மாநிலக்குழு கட்சி உறுப்பினர் பதிவுப் பரிசீலனையை மேற்கொண்டது. 2013ல் இடைக்கால ஸ்தாபன பரிசீலனையும் மாநிலக்குழுச் செய்தது.

6.181 தொழிற்சங்க அரங்கம், மாணவர் அரங்கம், நெறிப்படுத்தும் இயக்கம், இலங்கைத் தமிழர் பிரச்சனை ஆகிய ஆவணங்களை மாநிலக்குழு இறுதிப்படுத்தியது.

6.182 மத்தியக்குழு முடிவுகளை அமலாக்கிட திட்டமிடுவதோடு மாநில அளவிலான இயக்கங்களுக்கும் மாநிலக்குழு திட்டமிட்டுள்ளது.

6.183 நாகை மாநாட்டிற்கு பிறகு மூன்று முறை மாநிலக்குழு அரசியல் நிலைமைகள் குறித்து விவாதித்து அணுகுமுறையை உருவாக்கியுள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அஇஅதிமுகவுடன் உறவு முறிந்த போது மாநிலக்குழுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. நமது கட்சியும், சிபிஐயும் இணைந்து போட்டியிடுவது என்று மாநிலக்குழு முடிவு செய்தது.

6.184 மத்தியக்குழுக் கூட்டங்களுக்கு பிறகு நடைபெறும் மாநிலக்குழுக் கூட்டங்களில் மத்தியக்குழுவின் அரசியல் தீர்மானங்கள் மற்றும் முடிவுகள் விளக்கப்படுகின்றன. ஓரிரு கேள்விகளை தவிர கடந்த காலத்தைப் போல் மாநிலக்குழுவில் மத்தியக்குழுவின் அரசியல் தீர்மானத்தின் மீது போதுமான அளவிற்கு விவாதம் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்.

6.185 ஒரு பகுதி மாநிலக்குழு உறுப்பினர்கள் மாநில அளவில் நடைபெறக்கூடிய இயக்கங்களிலும், பிரச்சாரங்களிலும் கலந்து கொள்கிறார்கள். எதிர்காலத்தில் கூடுதலான மாநிலக்குழு உறுப்பினர்களுக்கு மாநில அளவிலான அரங்க ஸ்தாபன பொறுப்புகளை அளித்திட வேண்டிய அவசியம் உள்ளது.

6.186 அன்றாட அரசியல் ஸ்தாபன வேலைகளில் பங்கேற்பதோடு அரசியல் ரீதியாக, தத்துவார்த்த ரீதியாக தங்களை வளர்த்துக் கொள்ள மாநிலக்குழு உறுப்பினர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

முக்கியக் கடமைகள்

6.187 கடந்த 20 ஆவது அகில இந்திய மாநாடும், மாநில மாநாடும் பல கடமைகளை தீர்மானித்தது. அதில் கட்சி மற்றும் வர்க்க-வெகுஜன அரங்க விரிவாக்கம், கட்சி அணிகளின் தரத்தை உயர்த்துதல், கட்சியில் ஒற்றுமை ஆகிய மூன்று கடமைகளை அமலாக்குவதற்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுத்தோம். அதுகுறித்து இவ்வறிக்கையில் பரிசீலிக்கப்பட்டுள்ளது. இன்றைய அரசியல், ஸ்தாபன சூழலை கணக்கிலெடுத்துக் கொண்டு எதிர்காலத்தில் கீழ்க்கண்ட மூன்று முக்கியமான கடமைகள் அமலாக்கிட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

6.188 வேலைப் பிரிவினை - மாவட்டக்குழு பொறுப்பு விவரம் (2012)

வ.எண்	மாவட்டம்	பொறுப்புத் தோழர்கள்
1.	வடசென்னை	ஜி. இராமகிருஷ்ணன் (ப. செல்வசிங்)
2	காஞ்சிபுரம்	டி.கே ரங்கராஜன்
3.	திருப்பூர்	உ. வாசுகி
4.	விருதுநகர்	உ. வாசுகி
5.	திருவள்ளூர்	அ. சவுந்தரராசன்
6.	நாகப்பட்டிணம்	கே. பாலகிருஷ்ணன்
7.	திருவாரூர்	கே. பாலகிருஷ்ணன், வி. மாரிமுத்து (உதவி)
8.	கோவை	பி. சம்பத்
9.	கன்னியா குமரி	பி. சம்பத்
10.	தென்சென்னை	ப. செல்வசிங்
11.	விழுப்புரம்	ப. செல்வசிங் (க. கனகராஜ்)
12.	கடலூர்	ப. செல்வசிங் (ஜி. ராமகிருஷ்ணன்)
13.	சேலம்	கே. தங்கவேல்
14.	நாமக்கல்	கே. தங்கவேல்
15.	திண்டுக்கல்	கே. தங்கவேல்
16.	மதுரை புறநகர்	எம்.என்.எஸ். வெங்கட்ராமன்
17.	மதுரை மாநகர்	எம்.என்.எஸ். வெங்கட்ராமன்
18.	தூத்துக்குடி	எம்.என்.எஸ். வெங்கட்ராமன், கே. கனகராஜ்
19.	நீலகிரி	என். சீனிவாசன்
20.	ஈரோடு	ஏ. லாசர்
21.	புதுக்கோட்டை	ஏ. லாசர்
22.	தேனி	பி. சண்முகம்
23.	தஞ்சாவூர்	பி. சண்முகம்
24.	திருச்சி	எஸ். நூர்முகமது
25.	திருநெல்வேலி	எஸ். நூர்முகமது
26.	வேலூர்	என். குணசேகரன்
27.	புதுச்சேரி	என். குணசேகரன்
28.	சிவகங்கை	கே. கனகராஜ் (எம்.என்.எஸ். வெங்கட்ராமன்)
29.	கரூர்	கே. துரைராஜ்
30.	கிருஷ்ணகிரி	பி. சுந்தரராசன்
31.	பெரம்பலூர்	ஆர். ஜோதிராம்
32.	தருமபுரி	ஜி. ஆனந்தன்
33.	இராமநாதபுரம்	எஸ். பாலசுப்பிரமணியன்
34.	திருவண்ணாமலை	கே. சாமுவேல்ராஜ்
35.	மாநிலக்குழு அலுவலகச் செயலாளர்	எஸ். ரமணி
36.	எஸ். ஸ்ரீதர்	திருச்சி மாவட்டச் செயலாளர்
37.	கே. காமராஜ்	திருப்பூர் மாவட்டச் செயலாளர்
38.	பி. மாரிமுத்து	ஈரோடு மாவட்டச் செயலாளர்
39.	டி. ஆறுமுகம்	கடலூர் மாவட்டச் செயலாளர்
40.	எம். சின்னதுரை	புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர்

41.	என். பாண்டி	திண்டுக்கல் மாவட்டச் செயலாளர்
42.	ஐ.வி. நாகராஜன்	திருவாரூர் மாவட்டச் செயலாளர்
43	வி. பெருமாள்	புதுச்சேரி பிரதேச செயலாளர்
44.	ஏ.வி. முருகையன்	நாகை மாவட்டச் செயலாளர்
45.	என். முருகேசன்	குமரி மாவட்டச் செயலாளர்
46.	பா. விக்ரமன்	மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர்
47.	கே.ஜி. பாஸ்கரன்	திருநெல்வேலி மாவட்டச் செயலாளர்
48.	ஏ. பாக்கியம்	தென்சென்னை மாவட்டச் செயலாளர்
49.	ஜி. நீலமேகம்	தஞ்சாவூர் மாவட்டச் செயலாளர்
50.	அ. சேகர்	விருதுநகர் மாவட்டச் செயலாளர்
51.	ஏ. ரெங்கசாமி	நாமக்கல் மாவட்டச் செயலாளர்
52.	டி. வெங்கடேசன்	தேனி மாவட்டச் செயலாளர்
53.	சி. ராமகிருஷ்ணன்	மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர்
54.	டி. ஏழுமலை	விழுப்புரம் மாவட்டச் செயலாளர்
55.	ஜி. மோகனன்	காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர்
56.	எம். வீரபத்திரன்	திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர்
57.	ஆர். பத்ரி	நீலகிரி மாவட்டச் செயலாளர்

6.189 வடசென்னை மாவட்ட அமைப்புக்குழுவிற்கு தோழர் ப.செல்வசிங் கன்வீனராக செயல்படுவது என்று முடிவெடுக்கப்பட்ட அடிப்படையில் ஏற்கனவே அவர் பொறுப்பேற்று கவனித்து வந்த கடலூர் மாவட்டக்குழுவை தோழர் ஜி.ஆரும், விழுப்புரம் மாவட்டக்குழுவை தோழர் க.கனகராஜும் பொறுப்பேற்று கவனிப்பது என 2012 ஜுலையில் முடிவெடுக்கப்பட்டது.

மாநில செயற்குழு / மாநிலக்குழு உறுப்பினர்கள் - அரங்கப் பொறுப்பு விபரம்

கட்சி மாநில மையத்திலிருந்து

6.190 தோழர்கள் 1. ஜி. ராமகிருஷ்ணன், 2. டி.கே.ரங்கராஜன், 3. உ. வாசுகி, 4. பி. சம்பத், 5.ப.செல்வசிங், 6.என். குணசேகரன், 7. க. கனகராஜ் ஆகியோர் செயல்படுவது. இதர மாநில செயற்குழு உறுப்பினர்கள் வாய்ப்புக்கேற்ப மையக்கூட்டங்களில் கலந்து கொள்வது.

வர்க்க - வெகுஜன அரங்கம்

1. தொழிற்சங்க அரங்கம்: அ.சவுந்தரராசன், ஆர்.சிங்காரவேலு, ஆர். கருமலையான், மாலதி சிட்டிபாபு, ஜி. சுகுமாறன்
2. விவசாய அரங்கம் - ப.சண்முகம், கே.பாலகிருஷ்ணன், ஏ.லாசர், எஸ். திருநாவுக்கரசு, கே. முகமது அலி, ஜி. மணி
3. வாலிபர் அரங்கம் - என். குணசேகரன், ஆர். வேல்முருகன்
4. மாணவர் அரங்கம் - ப. செல்வசிங்,
5. மாதர் அரங்கம் - உ.வாசுகி, என். அமிர்தம், பி. சுகந்தி
6. தீக்கதிர் ஆசிரியர் குழு - எம்.என்.எஸ். வெங்கட்ராமன், வி. பரமேஸ்வரன், மதுக்கூர் ராமலிங்கம்
7. தீக்கதிர் நிர்வாகம் - என்.சீனிவாசன், ஜி. உதயகுமார், சி. கல்யாண சுந்தரம்
8. மார்க்சிஸ்ட் மாத இதழ் - என். குணசேகரன் (ஆசிரியர்), வே. மீனாட்சிசுந்தரம், கே. கனகராஜ், ஆர்.கோவிந்தராஜன், வி.பி. ஆத்ரேயா, ஆர். சந்திரா, ஏ. பாக்கியம், கே. சுவாமிநாதன், எஸ். கண்ணன்

9. செம்மலர் - எஸ்.ஏ. பெருமாள் (ஆசிரியர்), ச. தமிழ்ச்செல்வன்,
10. தபால் - ஆர். கோவிந்தராஜன்
11. தொலைத்தொடர்பு அரங்கம் - பி. சம்பத், உதவி: ஆர்.கருமலையான்
12. வங்கி அரங்கம் - ஏ.ஆறுமுக நயினார்
13. இன்சூரன்ஸ் அரங்கம் - உ. வாசுகி, கே. சுவாமிநாதன்
14. மருத்துவ பிரதிநிதிகள் அரங்கம் - ஆர். சிங்காரவேலு
15. மாநில அரசு ஊழியர் அரங்கம் - எஸ். நூர்முகமது, உதவி: ப. சுந்தரராசன், உதவி : ஆர். ஜோதிராம்
16. ஆசிரியர் அரங்கம் - டி.கே.ரங்கராஜன், உதவி : ஆர். மனோகரன், உதவி: ப. சுந்தரராசன், உதவி : ஆர். ஜோதிராம், உதவி: ஏ.ஆறுமுக நயினார்
17. நாடாளுமன்றம் - டி.கே.ரங்கராஜன், பி.ஆர். நடராஜன்
18. சட்டமன்றம் - டி.கே. ரங்கராஜன், அ. சவுந்தரராசன், கே. பாலகிருஷ்ணன், கே. தங்கவேல், ஏ, லாசர், கே. பாலபாரதி, க. பீம்ராவ், ஆர். அண்ணாதுரை
19. அறிவியல் அரங்கம் - என். குணசேகரன்
20. உள்ளாட்சி அமைப்புகள் - எஸ். நூர்முகமது, ஆர். மல்லிகா
21. பாரதி புத்தகாலயம் - என். குணசேகரன், கே. நாகராஜன், உதவி: ஜி.ராமகிருஷ்ணன்
22. கட்சிக்கல்வி - ஜி.ராமகிருஷ்ணன், உதவி: என். குணசேகரன்
23. எழுத்தாளர் - எம்.என்.எஸ்.வெங்கட்ராமன்,
கலை பண்பாட்டு அரங்கம் - ச. தமிழ்ச்செல்வன்
24. நிதிக்குழு - ப.செல்வசிங், கன்வீனர், பி. சம்பத், என். சீனிவாசன்
25. தணிக்கைக்குழு - ஆர். கருமலையான், ஜி. மணி, எஸ். கண்ணன்
26. வழக்குரைஞர் அரங்கம் - பி. சம்பத்
27. சிறுபான்மையினர் அரங்கம் - எஸ்.நூர்முகம்மது, தே. இலட்சுமணன், மூசா, என்.அமிர்தம், ஆர். லீமாறோஸ்
28. தீண்டாமை ஒழிப்பு முண்ணனி - பி.சம்பத், கே. சாமுவேல்ராஜ், எஸ்.கே. பொன்னுத்தாய்
29. மத்திய அரசு ஊழியர்கள் சங்கம் - ஏ. ஆறுமுகநயினார்
30 ரயில்வே அரங்கம் - டி.கே.ரங்கராஜன், உதவி : அ.சவுந்தரராசன்
31. போக்குவரத்து அரங்கம் - அ.சவுந்தரராசன்
32. மருத்துவர்கள் அரங்கம் - ஏ. ஆறுமுகநயினார்
33. மின் அரங்கம் - கே. கனகராஜ், உதவி: ஆர்.கருமலையான்
34. செந்தொண்டர் - எஸ். கண்ணன்
35. சுதந்திர மென்பொருள் / தகவல் தொழில்நுட்பம் - ஏ. ஆறுமுகநயினார்
36. உழைக்கும் மக்கள் அறக்கட்டளை மற்றும் சொத்துக்கள் - என். சீனிவாசன் உதவி: ஜி. உதயகுமார்
37. கூட்டுறவு அரங்கம் - கே. பாலகிருஷ்ணன்
38. அங்கன்வாடி - ஆர்.கருமலையான், மாலதி சிட்டிபாபு
39. கிராமப்புற வேலை உறுதி திட்டம் - ஜி. மணி, ஜி. ஆனந்தன், எஸ்.திருநாவுக்கரசு
40. பாலர் அரங்கம் - எஸ். கண்ணன், உதவி: கே. ஜோதிலெட்சுமி
41. மாற்றுத் திறனாளி - உ. வாசுகி, தே. இலட்சுமணன், பி. ஜான்சிராணி

42. மலைவாழ் மக்கள் சங்கம் - ப. சண்முகம்,

43. ஆய்வு மையம் - வி.பி. ஆத்ரேயா, ஆர். கோவிந்தராஜன், ஆர். சந்திரா, கே.சுவாமிநாதன்

சிறப்பு அழைப்பாளர்கள்: 1. என்.சங்கரய்யா, 2. என்.வரதராஜன், 3. ஜி.வீரய்யன், 4. தே.லட்சுமணன், 5. ஆர்.கோவிந்தராஜன்

விசேட அழைப்பாளர் - 1. எஸ். ரமணி

நெறிப்படுத்தும் இயக்கம்

6.191 சென்ற மாநாட்டுக்குப் பின் மத்திய ஆவணத்தின் அடிப்படையில் மாநில நிலைமைக்கேற்ப குறிப்பு செயற்குழுவால் தயாரிக்கப்பட்டு, மாநிலக் குழுவில் இறுதிப்படுத்தப்பட்டது. ரிப்போர்ட்டிங் நோக்கத்துக்காக ஒரு சுருக்கமும் தயாரிக்கப்பட்டு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டது. அத்துடன் கட்சிக் கடிதமாகவும் வெளியிடப்பட்டது. அநேகமாக, பெரும்பாலான மாவட்டங்களில், இக்குறிப்பு ரிப்போர்ட் செய்யப்பட்டுவிட்டது. ஆனால், மாவட்ட நிலைக்கு இதைப் பொருத்தி, மாவட்ட செயற்குழு, மாவட்டக்குழு நெறிப்படுத்த வேண்டிய அம்சங்களை இணைத்துக் குறிப்பு தயாரிப்பது என்ற பணி ஒரு சில மாவட்டங்களிலேயே நடைபெற்றிருக்கிறது.

6.192 2013 பிப்ரவரியில் நடந்த மாநில செயற்குழுக் கூட்டத்தில், நெறிப்படுத்துதல் சம்பந்தமாக செயற்குழு, மாநிலக்குழு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் வரையறுக்கப்பட்டு, அதற்கான பொறுப்புகளும் நிச்சயிக்கப்பட்டன. இவற்றில், சட்டமன்ற உறுப்பினர்களின் பணி பரிசீலனை, வரவு செலவு கணக்கு பராமரிப்பு குறித்து மாவட்ட நிதிக்குழு பொறுப்பாளர்களுக்குப் பயிற்சி, கட்சிக் கல்விக்குத் திட்டமிடல், தொழிற்சங்க அரங்கில் நமது கடமை குறித்த ஆவணம் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. திராவிட இயக்கம் பற்றிய நமது பார்வை குறித்து செயற்குழுவில் ஒரு சுற்று விவாதிக்கப்பட்டிருக்கிறது. மாநாட்டுக்குப் பின் இறுதிப்படுத்திட வேண்டும்.

6.193 அதே சமயம் வரவு செலவு பராமரிப்பில், வெகுஜன அமைப்புகளுக்குப் பயிற்சி அளிக்கப்படவில்லை. தமிழ் தேசிய இயக்கங்கள் பற்றிய மார்க்சீய அணுகுமுறை, மதச்சார்பின்மைக்கான செயல் திட்டம், உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நமது உறுப்பினர்களின் பணி பரிசீலனை, தீண்டாமை ஒழிப்பு இயக்கம்-பாமகவின் சாதிய அணி திரட்டல் பற்றிய நமது அணுகுமுறை, மாநில சமூகப் பொருளாதார வளர்ச்சி, கட்சியின் மாநில மையம் மற்றும் மாவட்ட மையங்கள் செயல்பாடுகள் பற்றிய பரிசீலனை, வர்க்க வெகுஜன அரங்கம் குறித்த மத்திய ஆவணங்களை அமலாக்கிட நடவடிக்கை, மாநில மைய/அரங்க முழு நேர ஊழியர்களின் வேலை பரிசீலனை போன்ற கடமைகளை விரைவுபடுத்த வேண்டும். மாநில செயற்குழு, மாநிலக்குழு உறுப்பினர்களின் வேலை பாணியில் வர வேண்டிய மாற்றம் குறித்து விவாதிப்பதில் ஒரு சிறு துவக்கம் ஏற்பட்டுள்ளது. வெகுஜன அமைப்புகள் குறித்தும், அரங்கங்களில் கட்சி கட்டும் பணி குறித்தும் சரியான பார்வையைக் கட்சி அணிகள் மத்தியில் ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதை ஒட்டி, 6 மாதத்துக்கு ஒரு முறை ஒரு வெகுஜன அமைப்பின் செயல்பாடு குறித்து செயற்குழு விவாதிக்க வேண்டும் என்று தீர்மானித்து, முதலில் விதொச அமைப்பு தேர்வு செய்யப்பட்டது. அரங்க பிராக்ஷன் கமிட்டி குறிப்பு தயாரித்துக் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. 2013 பிப்ரவரியில் தீர்மானிக்கப்பட்ட இந்தக் கடமைகள் குறித்து தொடர் கவனம் செலுத்துவதில் பலவீனம் நீடிக்கிறது.

6.194 மேலும் நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதிப் பணி பரிசீலனை நடக்கவில்லை. 3 ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிப்பணி பரிசீலனை 2012ம் ஆண்டுக்கானது

மட்டும் செய்யப்பட்டுள்ளது. மாவட்டங்கள் அறிக்கை அனுப்புவதில் மிகுந்த பலவீனம் நீடிக்கிறது. ஒரு முறை செய்த பரிசீலனையில், பணிகள் நடப்பதில், மக்கள் அணுகக் கூடியவராக இருப்பதில், தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு செய்வதில், எளிமையாகவும் நேர்மையாகவும் இருப்பது பற்றிய நன்மதிப்பு உருவாவதில் பொதுவாக திருப்திகரமான நிலை உள்ளது. ஆனால் சட்டமன்ற உறுப்பினரைப் பயன்படுத்தி கட்சி, வெகுஜன இயக்க விரிவாக்கம் செய்வது குறித்த பார்வையும், திட்டமிடலும் மாவட்டக் குழுக்களிடம் இல்லை என்பது கவலைக்குரியது என்று மாநில செயற்குழு மதிப்பீடு செய்திருக்கிறது.

6.195 இக்காலத்தில் மாநிலக்குழு உறுப்பினர் எம்.அர்ஜுனன், கம்யூனிச நெறிமுறை மீறல் மற்றும் ஊழல் நடவடிக்கைகள் காரணமாகக் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளார். கட்சி விரோத நடவடிக்கைகளுக்காக ஒரு முக்கிய அரங்கத்தின் தலைவர்களில் ஒருவரான கங்காதரன் நீக்கப்பட்டார். மாநாடுகள், கமிட்டி கூட்டங்களில் உணவு முறை எளிமைப்படுத்தப்படுவதில் துவக்கத்தை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. வாழும் தலைவர்களின் படங்கள் போடக்கூடாது என்ற வழிகாட்டுதல் ஓரளவு நிறைவேற்றப் படுகிறது. இருப்பினும் திருமண அழைப்பிதழ்களில் போடப்படுகிறது. மாநில செயற்குழுவின் தலையீடு இத்தகைய அம்சங்களில் வலுப்பட வேண்டும்.

6.196 நிதி வசூல் குறித்த முறையான வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நிதி தேவையின் பெரும் பகுதியைப் பூர்த்தி செய்வதற்கு வெகுஜன வசூலைப் பயன்படுத்துவது என்பது பெரும்பாலான மாவட்டங்களில் முன்னேற்றகரமாக உள்ளது. இது மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். நிதி கையாளுவதில் பலவீனங்கள், முறைகேடுகள் சில மாவட்டங்களில் முன்னுக்கு வந்தன. மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் உட்பட தவறு செய்தவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தனிநபர் ஒழுக்கக் கேடுகள் குறித்த ஓரிரு குற்றச்சாட்டுகளும் இக்காலத்தில் வந்து, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கம்யூனிச நெறிமுறைகளில் சரிவை ஏற்படுத்தும் இத்தகைய போக்குகள் கண்டிப்பாகத் தடுக்கப்பட வேண்டும். போதைப் பழக்கத்துக்கு இரையாவது அதிகரித்திருக்கிறது. கணிசமான மாவட்ட மாநாடுகளில் இது குறித்து ஆழ்ந்த கவலையுடன் விவாதம் எழுந்துள்ளது. இவையெல்லாம் கறாராகக் களையப்பட வேண்டும்.

6.197 மத்தியக் குழு, மாநிலக் குழு, மாவட்டக் குழு உறுப்பினர்கள் தங்கள் சொத்து விவரங்களை சம்பந்தப்பட்ட கட்சிக் கமிட்டிக்கு அளித்திட வேண்டும் என்றும், அது குறித்து அடுத்த உயர்மட்டக் குழு பரிசீலித்திட வேண்டும் என்றும் சென்ற மாநில மாநாட்டு அறிக்கை சுட்டிக் காட்டியது. அறிக்கைகள் பெறப்படுகின்றன. ஆயினும் அவற்றைப் பரிசீலிப்பது என்ற முடிவினை நடைமுறைப்படுத்துவதில் முன்னேற வேண்டியுள்ளது.

6.198 நெறிப்படுத்தும் இத்தகைய முயற்சிகளை மத்தியக் குழு 'இயக்கம்' என்று கூறுகிறது. ஒரு முறை ரிப்போர்ட் செய்து விட்டு விடுவதல்ல. தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை. மேலிருந்து கீழ் வரை தொடர் கவனம் வேண்டும். பொது வாழ்க்கையிலும் சொந்த வாழ்க்கையிலும் முதலாளித்துவ கட்சிகளிடமிருந்து நம்மை வேறுபடுத்திக் காட்டும் முக்கிய அளவுகோல்களில் ஒன்று கம்யூனிச நெறிமுறைகள் தாம். சாதிய, மதவாத கருத்துக்கள், மொழி வெறி, இன வெறி போக்குகள் போன்ற அந்நிய வர்க்க கருத்தியல்கள் நமது புரட்சிகர குணாம்சங்களில் அரிப்பை ஏற்படுத்துகின்றன. நவீன தாராளமயக் கொள்கைகளின் சமூகத் தாக்கம், முதலாளித்துவ கட்சிகளுடன் உறவு போன்றவை கம்யூனிஸ்டுகளின் வாழ்வியலில் உருவாக்கும் விரும்பத் தகாத பாதிப்புகளை உறுதியுடன் எதிர்த்துப் போராட வேண்டும். இந்த சவாலை கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் ஒரே மனிதராக நின்று எதிர்கொள்ள வேண்டும்.

கட்சிக் கல்வி

6.199 கட்சியின் 20வது அகில இந்திய மாநாடு, மாநில மாநாடு முடிவுகளின் அடிப்படையில் 1. கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அரங்க விரிவாக்கம். 2. கட்சி ஒற்றுமை, 3. கட்சி அணிகளின் தரத்தை உயர்த்துவது. ஆகிய கடமைகளை அமலாக்கிட கட்சிக் கல்விக்கு உள்ள பங்கு பற்றி மாநில கட்சிக் கல்வி உபகுழுவில் விவாதிக்கப்பட்டது. 2012 ஜுலையில் துவங்கி 2013ம் ஆண்டு இறுதி வரையிலுக்குமான 17 மாதங்களுக்கு என கட்சிக் கல்விக்கு திட்டமிடப்பட்டது. கட்சியின் மாவட்டச் செயலாளர்கள், மாவட்ட கட்சிக் கல்வி உபகுழு கன்வீனர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. அகில இந்திய கட்சிக் கல்வி உபகுழு ஆலோசனைகளை, தமிழகத்தில் அமல்படுத்துவதற்கான செயல்திட்டம் உருவாக்கப்பட்டது. அடுத்தகட்டமாக, 2014ல் செயல்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

6.200 இதையொட்டி, கட்சியின் மாநில உபகுழு தொடர்ச்சியான பல முயற்சிகளை பல்வேறு வடிவங்களில் மேற்கொண்டது. உலகமய தாராளமயம் ஏற்படுத்தியுள்ள பல தவறான கண்ணோட்டங்கள், தமிழகத்தில் இனவாத சந்தர்ப்பவாத போக்குகள், கட்சிக்குள் புதிய தோழர்கள் வந்துள்ள பின்னணியில் கட்சிக்கல்வியின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. தற்போது உருவாகியுள்ள புதிய சூழல் அரசியல் தத்துவார்த்தத் துறைகளில் புதிய சவால்களை முன்வைத்துள்ளது. எனவேதான் 20வது மாநில மாநாடு தரம் உயர்த்துதலை முக்கியமான கடமை என தீர்மானித்தது. 2014ல் நடைபெற்ற அகில இந்திய விரிவடைந்த கல்வி உபகுழுக் கூட்டத்தில் "தொடர்ச்சியான கட்சிக் கல்வி கட்சியின் அன்றாட நடவடிக்கையாக அமைய வேண்டும்" என்று வலியுறுத்தப்பட்டது.

6.201 நவீன தாராளமயம், வகுப்புவாதம் ஆகிய இரண்டும் இன்றைய சூழலையொட்டி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வகுப்புகள் நடந்துள்ளன. கட்சியின் நிலைபாடுகள் குறித்து அவ்வப்போது பேரவை மற்றும் வகுப்புகள் வடிவில் நடத்தப்பட்டுள்ளன. மத்தியக்குழு முடிவுகள் மற்றும் 20வது கட்சிக் காங்கிரசின் அரசியல் தீர்மானம் ரிப்போர்ட் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக நடத்தப்பட்டுள்ளன. அரசியல் தத்துவார்த்த தீர்மானத்தை பல பிரிவுகளாகப் பிரித்து தொடர்ச்சியாக வகுப்புகள் நடத்தப்பட்டன.

6.202 அடையாள அரசியல், சாதியம், வகுப்புவாதம் ஆகிய தலைப்புகளையொட்டி பல அம்சங்கள் அவ்வப்போது விளக்கப்பட்டுள்ளன. இலங்கைப் பிரச்சனை பற்றி மாநிலக்குழு குறிப்பு அனைத்து மாவட்டங்களிலும் ரிப்போர்ட் செய்யப்பட்டது.

6.203 மார்க்சியத்தின் அடிப்படைக்கூறுகள் குறித்து கட்சிக் கமிட்டிகள், வெகுஜன அரங்கங்கள், சார்பில் தொடரந்து வகுப்புகள் எடுக்கப்பட்டன. வாசிப்பு வட்டங்கள் நடத்தி அடிப்படை நூல்கள் படிப்பது சில இடங்களில் முயற்சிக்கப்பட்டுள்ளன. பல்வேறு மார்க்சீய-லெனினிய சித்தாந்தத் தலைப்புகளில் பல மாவட்டங்களில் தொடர்ந்து வகுப்புகளும், விளக்கப்பேரவைகளும் நடத்தப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் முழுமையாக இப்படிப்பட்ட முயற்சிகள் நடந்துள்ளதாக நாம் மதிப்பிட இயலவில்லை. இவற்றை மேற்கொள்வதில் மாவட்டங்களில் ஏற்ற இறக்கங்கள் நீடித்து வந்துள்ளன.

6.204 கட்சியின் எதிர்கால கடமைகளை அமலாக்குவதற்கு கட்சி அணிகளை தயார்படுத்திடவும், கட்சி முடிவு செய்யும் அரசியல், தத்துவார்த்த, ஸ்தாபன முடிவுகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்தோடு கட்சிக் கல்விக்கான செயல்திட்டங்கள் நிச்சயிக்கப்பட்டு மாவட்டக்குழுக்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

கிளை செயலாளர் இடைக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி:

6.205 கட்சி உறுப்பினர்கள் விரிவாக்கத்திற்கும், விடுபடுதலை குறைப்பதற்கும் கிளை செயலாளர்/ இடைக்குழு செயலாளர் - இடைக்குழு உறுப்பினர்களுக்கு பிரத்தியேகமான பயிற்சி அளிக்க முடிவெடுக்கப்பட்டது. பல மாவட்டக்குழுக்கள் இத்தகைய பயிற்சிப் பட்டறைகளை இந்த 3 ஆண்டு காலத்தில் நடத்தியுள்ளன. கிளை மட்டத்தில் பயிற்சி அளிக்கவும் பல மாவட்டங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

6.206 தத்துவம், கட்சித் திட்டம், ஸ்தாபனம் போன்ற தலைப்புகளில் தொடர்ந்து வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. வகுப்புகள் கட்சி மற்றும் அரங்கங்களின் தேவைக்கேற்ப எடுக்கப்பட்டுள்ளன. எனினும் தத்துவார்த்த போதனை மற்றும் வாசிப்பு ஏற்பாடுகளில் தொடர் கவனம் செலுத்துவதில் பலவீனம் நீடிக்கிறது.

6.207 பெரும்பாலான வர்க்க-வெகுஜன அரங்கங்களில் இந்த மூன்று ஆண்டுகளில் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரங்க வகுப்புகளும், கட்சி உறுப்பினர்களுக்கு வகுப்புகளும் என அனைத்து அரங்கங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாணவர் அரங்கம் 10 நாட்கள் பயிற்சி முகாமும், வாலிபர் அரங்கம் சார்பில் பல மண்டல வகுப்புகளும் நடந்துள்ளன.

மாவட்ட செயலாளர்கள் / முழுநேர ஊழியர்கள் பயிற்சி

6.208 முழுநேர ஊழியர்களின் இன்றைய வேலை, உணர்வு, திறன், தரம் போன்ற பல்வேறு அம்சங்களை உயர்த்துவதற்கு ஏற்றவாறு அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்று முடிவு எடுத்த அடிப்படையில் முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6.209 “மாநில மாநாடு தீர்மானித்த எதிர்காலக் கடமைகளை அமலாக்கிட பன்முகப் பணிகளை செய்ய வேண்டிய மாவட்ட செயலாளர்களுக்கு ஒரு பயிற்சிப் பட்டறை மாநில மாநாடு முடிந்தவுடன் நடத்தப்பட்டது.

கட்சி உறுப்பினர்களுக்கான வகுப்பு

6.210 கட்சி உறுப்பினர் தரத்தை உயர்த்துதல் என்ற அடிப்படையில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சில முன்னணி மாவட்டங்கள் மட்டுமே கட்சி உறுப்பினர்களுக்கான தொடர் வகுப்புகள் நடத்துவதில் கவனம் செலுத்துகின்றன. வகுப்புகளில் கட்சி உறுப்பினர் வருகை 20 சதவிகிதம் முதல் 30 சதவிகிதம் வரை மட்டுமே இருந்தது.

6.211 கட்சி உறுப்பினர்களுக்கான வகுப்புகளுக்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், ஒருசிறு பகுதி கட்சி உறுப்பினர்களே வகுப்புகளில் கலந்து கொண்டனர். பெரும்பகுதி கட்சி உறுப்பினர்களுக்கு கட்சிக்கல்வி செல்லவில்லை. இதற்காக திட்டமிடுவதில் வருகை மற்றும் ஆசிரியர்கள் ஆகிய இரண்டு முக்கிய பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

6.212 மாவட்ட அளவில் வகுப்பெடுக்கும் ஆசிரியர்களை தயார்படுத்திட எல்லா மாவட்டங்களிலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் மாவட்டங்களில் ஆசிரியர் பயிற்சி முகாம்கள் நடத்திட வலியுறுத்தப்பட்டது.

6.213 பங்கேற்பை அதிகப்படுத்திட 50 கட்சி உறுப்பினர்களுக்கு ஒரு மையம் என்று தீர்மானித்து வகுப்புகள் நடத்த முடிவு செய்யப்பட்டது. இதனை அமலாக்கிய மாவட்டங்களில் முன்னேற்றம் ஏற்பட்டது.

6.214 வகுப்புக்கள் ஒளி அமைப்பு முறையில் படங்களுடன் விளக்குவதற்கான ஏற்பாடுகளை செய்வது **(Power Point Presentation)** என்ற முடிவு அமலாக்கப்படவில்லை. சில இடங்களில் மட்டுமே பவர் பாய்ண்ட் வகுப்புகள் நடத்தப்பட்டன. வருகிற காலங்களில் இதில் கூடுதல் கவனம் செலுத்த

வேண்டும். நவீன தகவல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கல்வி போதனை முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

6.215 மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் ஒரு வாசிப்பு வட்டமாவது (Study Circle) துவக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. இந்த வகையில், தென்சென்னை, ஈரோடு உள்ளிட்ட சில மாவட்டங்களில் முயற்சிக்கப்பட்டுள்ளன. இதுபோன்று வாசிப்பு வட்டங்கள் அமைப்பதை உறுதி செய்ய வேண்டும். படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க கட்சி இடைக்குழு, மாவட்டக்குழு மற்றும் பேரவைக் கூட்டங்களில் 15 நிமிடம் நூல் அறிமுகம் செய்வது என்ற வகையில் பல மாவட்டங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6.216 புதிதாக சேர்க்கப்பட்ட துணைக்குழு உறுப்பினர்களுக்கு கட்சி அறிமுகம், திட்டம், ஸ்தாபனம் என்று குறைந்தபட்சம் இந்த மூன்று தலைப்புகளில் வகுப்புகளுக்கு திட்டமிட தீர்மானிக்கப்பட்டது. ஆனால், பெரும்பாலான மாவட்டங்களில் அறிமுக வகுப்புடன் கல்விப் பணி முடிவடைந்து விடுகிறது. தத்துவம், ஸ்தாபனம், கட்சித்திட்டம் குறித்த அறிமுக வகுப்புகள் ஓரளவே நடத்தப்படுகின்றன. வரும் காலங்களில் இதில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம்.

கட்சி கல்விக்குழு – வகுப்பெடுக்கும் ஆசிரியர்கள்

6.217 மாநில ஆசிரியர் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. 20வது கட்சி காங்கிரசின் தத்துவார்த்த தீர்மானம் 3 பகுதிகளாகப் பிரித்து பாடக்குறிப்புக்கள் உருவாக்கப்பட்டன. அத்துடன் கட்சி வரலாறு பாடக் குறிப்பும் உருவாக்கப்பட்டது. கட்சிக் கல்வி போதனை போதிக்கும் முறைகளை மேம்படுத்த வழிகாட்டுதல்கள் அளிக்கப்பட்டது. நிச்சயிக்கப்பட்ட 77 பேரில் 60 தோழர்கள் கலந்து கொண்டனர். இதன் தொடர் முயற்சியாக 24 மாவட்டங்களில் ஆசிரியர் பயிற்சி முகாம் நடத்தப்பட்டு கட்சி உறுப்பினர்களுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டன.

6.218 இந்த மாவட்டங்களில் கட்சி உறுப்பினர் கடமை, உரிமைகள், ஜனநாயக மத்தியத்துவம், அடையாள அரசியல், சேலத்தில் நடந்த மாநில ஆசிரியர் பயிற்சி முகாமின் 3 குறிப்புகள் உள்ளிட்ட பல தலைப்புகளில் ஆசிரியர் பயிற்சி நடத்தப்பட்டுள்ளன. இதர மாவட்டங்களில் இந்த ஆசிரியர் பயிற்சி முகாம்கள் நடத்தப்படவில்லை என்பது முக்கிய பலகீனமாகும். ஆசிரியர் தயார் செய்யப்பட்ட மாவட்டங்களில் கட்சி உறுப்பினர்களுக்கான வகுப்புக்கள் நடைபெற்றுள்ளன.

6.219 ஆனால், பயிற்சி முகாமில் கலந்து கொண்ட ஆசிரியர்களில் பாதிக்கும் குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றனர். ஆசிரியர் பயிற்சி முகாம்கள் முழுத் தயாரிப்புடன் நடத்துவதில் பலகீனம் உள்ளது.

6.220 மாநில கட்சி கல்விக்குழு இரண்டு முறை கூட்டப்பட்டது. மாவட்ட கல்வி உபகுழுவின் தொடர்ச்சியான செயல்பாட்டை உறுதி செய்ய வேண்டுமென அகில இந்தியத்தலைமை வலியுறுத்தி வந்துள்ளது. பல மாவட்டங்களில் கல்விக்குழு சராசரியாக ஆண்டிற்கு இரண்டு முறை கூட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மையான மாவட்டங்கள் ஒருமுறை மட்டுமே கல்விக்குழு கூட்டப்பட்டு திட்டமிடப்பட்டுள்ளன. கல்விக்குழுவில் திட்டமிட்ட பணிகளை மாவட்டம் முழுவதும் அமலாக்குவதில் பலகீனம் உள்ளது.

6.221 35 வயதுக்குட்பட்ட திறமையான இளம் தோழர்களுக்கு கட்சிக் கல்விக்கு ஏற்பாடு செய்வது என்ற முடிவு அடிப்படையில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நாகை, திருவாரூர் ஆகிய இரண்டு மாவட்டங்களைச் சேர்த்து திருவாரூரில் இளம் கம்யூனிஸ்ட் வகுப்பு நடத்தப்பட்டது. விருதுநகர் மாவட்டக்குழுவின் முயற்சியும் குறிப்பிடத்தக்கது.

6.222 மாவட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி முகாம் நான்கு மண்டலங்களாகப் பிரித்து திருப்பூர், தர்மபுரி, தூத்துக்குடி, சென்னை ஆகிய மையங்களில் நடத்தப்பட்டது. மொத்தம்

394 மாவட்ட செயற்குழு உறுப்பினர்களில் 359 பேர் (91 சதவிகிதம்) கலந்து கொண்டனர். அரசியல், தத்துவார்த்த தலைப்புகளோடு அன்றாட நடைமுறைப்பணிகளுக்கான பயிற்சியும் இதில் அளிக்கப்பட்டது. இதைப்போலவே மாவட்டக்குழு உறுப்பினர்களுக்கும் பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது.

அரசியல் கல்விக்கான நிரந்தரமான ஏற்பாடுகள்

6.223 மாநில அளவில் ஒரு நிரந்தர அரசியல் தத்துவார்த்தப் பயிற்சிப்பள்ளியை சென்னையில் வி.பி.சி. நினைவகத்தில் அமைத்திட நாகை மாநாட்டில் முடிவெடுத்தோம். இந்த 3 ஆண்டு காலத்தில் தீக்கதிர் நிதி வசூல், வெண்மணி வசூல் எனத் தொடர்ந்து மாநில ரீதியான வசூல் இயக்கங்கள் வந்ததால் இதற்கென்று நிதி அறைகூவல் விட இயலவில்லை. அதனை அடுத்த மாநாட்டிற்குள் நிறைவேற்றிட திட்டமிடலாம்.

6.224 புதிய பாடத்திட்டங்கள் உருவாக்குவது, புதிய ஆசிரியர்களை பயிற்சி கொடுத்து பயன்படுத்துவது போன்ற கட்சிக்கல்வியின் அடிப்படை ஏற்பாடுகளை உறுதிப்படுத்த வேண்டும்.

6.225 வரும் காலங்களில் கட்சி உறுப்பினர்கள் உட்பட அனைத்து மட்டங்களிலும் பணியாற்றும் தோழர்களுக்கு, மார்க்சிய அடிப்படை தத்துவார்த்தக் கண்ணோட்டத்தை ஏற்படுத்துதல் மற்றும் சுயகல்வியை ஊக்குவிக்கும் வகையில் கட்சிக்கல்விக்கான முயற்சிகளை அதிகரிக்க வேண்டும். 'மார்க்சியம் நடைமுறைக்கு வழிகாட்டி' என்ற கருத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுகிற வெகுஜனப் புரட்சிக் கட்சியாக, கட்சி, உயர்ந்திடும் வகையில் அரசியல் தத்துவார்த்தப் பயிற்சி முறைகளை அதிகரிப்பதும், மேம்படுத்துவதும் அவசியம்.

உபகுழு பிராக்ஷன் செயல்பாடுகள்

6.226 வர்க்க, வெகுஜன அரங்கங்களின் நோக்கமும், தேவையும் அரசியல் ரீதியாக பின்தங்கிய நிலையில் உள்ள வர்க்கப் பிரிவினரையும், வெகுமக்களையும் கட்சியின் அரசியல் நிலைபாட்டோடு இணைப்பதும் உணர்வு ரீதியாக மேம்பட்ட பகுதியினரையும் போராட்டக்குணமுள்ளோரையும் கட்சிக்குள் கொண்டு வருவதுமேயாகும். இந்தப்பணியை வெகுஜன அமைப்புகளின் ஜனநாயக செயல்பாட்டு வரையறைக்குள் நின்று செயல்படுத்துவதே உபகுழு மற்றும் பிராக்ஷன்களின் முக்கியமானதும், தலையாயதுமான கடமையாகும்.

6.227 இந்தக்கடமையை நிறைவேற்றுவதற்கு வெகுஜன அரங்க உறுப்பினர்கள் எண்ணிக்கையை உயர்த்துவது, கட்சியுடனான வெகுஜன அரங்கின் உறவை மேம்படுத்துவது, கட்சியின் அரசியல் நிலைபாட்டோடு வெகுஜன அரங்க உறுப்பினர்களை ஒருங்கிணைப்பது, வெகுஜன அரங்கங்களில் கட்சி கட்டுவது ஆகிய அம்சங்கள் எப்படி நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை பரிசீலிக்க வேண்டும்.

6.228 இந்தக் காலத்தில் ஏற்கனவே இருந்த உபகுழு மற்றும் பிராக்ஷன்களோடு புதிதாக சில பிராக்ஷன்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பிராக்ஷன்களையும், உபகுழுக்களையும் கூட்டுவதிலும், கட்சி கட்டுவது குறித்து விவாதிப்பதிலும் கடந்த காலத்தைக் காட்டிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தொழிற்சங்க அரங்கில் பன்னாட்டு நிறுவனங்களில் செயல்படுவோர் மத்தியில் திட்டமிட்ட முயற்சிகளால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 150 பேரும், நெல்லை மாவட்டம், கங்கைகொண்டான், சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 17 பேரும், கட்சி உறுப்பினர்களாக்கப்பட்டுள்ளனர். 2013-ம் ஆண்டு உறுப்பினர் பதிவுப் பரிசீலனையின்போது முறைசாரா பகுதியில் கட்சி கட்டும் பணியில் உள்ள இளம் தொழிலாளர்களை இலக்கு வைத்து செயல்படுத்த வேண்டுமென்று வழிகாட்டப்பட்டிருந்தது. அதுகுறித்து விவாதிக்கப்படாதது சரியல்ல.

6.229 மின்சார அரங்கத்தில் உள்ள கட்சித்தோழர்களுக்குப் பயிற்சி அளிக்கும் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தீக்கதிர், பீப்பிள்ஸ் டெமாக்ரசி விற்பனையை உயர்த்துவதற்காக முடிவு செய்யப்பட்டு தீக்கதிர் எண்ணிக்கை 650லிருந்து 900-ஆகவும், பீப்பிள்ஸ் டெமாக்ரசி 150ம் உயர்த்தப்பட்டன. பகுதிநேர பெண் ஊழியர்கள் நமது தலையீட்டால் பலன் பெற்றதை முன்னிறுத்தி, அப்பகுதிக்குள் கட்சி கட்ட வேண்டுமென்று முடிவு செய்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. சென்னை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் மட்டும் 80 பெண் ஊழியர்கள் உறுப்பினர்களாக்கப்பட்டனர். இதர பகுதிகளில் இதுபோன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த மாநில மநாட்டிற்குப் பிறகு 16 மாவட்டங்களில் மின்னரங்கில் வெகுஜன ஸ்தாபனத்தில் உறுப்பினர் ஆக உள்ள கட்சிக்கு வருவதற்கு வாய்ப்புள்ளவர்கள் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 1165லிருந்து 1429 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சமீபத்தில் நடைபெற்ற போராட்டத்திற்குப் பிறகு, போக்குவரத்து அரங்கத்திலும் கட்சி உறுப்பினர்களை அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6.230 2013-ம் ஆண்டு வாலிபர் மற்றும் மாணவர் அரங்கில் உள்ள வெகுஜன ஸ்தாபன உறுப்பினர்களில் ஒருசதவிகிதம், அரை சதவிகிதம் என இலக்கு வைத்து கட்சி உறுப்பினர்களாக்குவது என்கிற முடிவு எடுக்கப்பட்டது. இந்த முடிவுகள் குறித்து சில முறை விவாதிக்கப்பட்டாலும், முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. இதர உபகுழுக்கள் மற்றும் பிராக்ஷன்கள் கட்சி கட்டுவது குறித்து விவாதிக்கின்ற போதும் மாவட்டங்களில் அவற்றை கண்காணித்து அரங்க வாரியாக கட்சி உறுப்பினர்கள் வருகை குறித்து ஆய்வு செய்வதற்கான துல்லியமான விவரங்கள் கிடைக்கவில்லை. இக்காலத்தில் தொழிற்சங்க அரங்கிலும், மத்தியதர வர்க்கப்பகுதியிலும் லெவியை உயர்த்துவதற்கான திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்பட்ட முன்னேற்றங்கள் சமச்சீராக இல்லை. எனினும், கடந்த காலத்தை விட இக்காலத்தில் எடுக்கப்பட்ட திட்டமிட்ட, தொடர்ந்த முயற்சிகளுக்கு ஓரளவு பலன் கிடைத்துள்ளது.

6.231 தீக்கதிர் பொன்விழா ஆண்டையொட்டி தீக்கதிர் எண்ணிக்கையை உயர்த்துவதற்கும், பீப்பிள்ஸ் டெமாக்ரசி எண்ணிகையை உயர்த்துவதற்கும் சில அரங்கங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த முயற்சிகளுக்கு ஓரளவு பலனும் கிடைத்தது. ஆயினும் அதை நிலை நிறுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

6.232 உபகுழுக்கள், பிராக்ஷன்கள் கூடுகிற போதெல்லாம் கட்சி கட்டும் பணி ஒரு விவாதப் பொருளாக இருப்பதையும், தீக்கதிர் மற்றும் பிரசுரங்கள் விற்பனையை அதிகரிப்பதற்கான விவாதங்களும் லெவியை உயர்த்துவதற்கான முயற்சிகளையும் உத்தரவாதப்படுத்த வேண்டும். உபகுழு மற்றும் பிராக்ஷன் உறுப்பினர்கள் மூலம் வெகுஜன அரங்க மேடைகள் மற்றும் அமைப்புகளில் இடதுசாரி அரசியலை கொண்டு செல்வதற்கான திட்டமிட்ட தொடர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். கட்சியின் வாக்கு தளத்தை அதிகரிக்கவும், மக்கள் ஜனநாயக அணியின் பகுதியாகவும், ஆதரவாளர்களாகவும் மாற்ற தொடர் முயற்சிகளை உபகுழு மற்றும் பிராக்ஷன் உறுப்பினர்கள் கவனமுடன் செயல்பட வேண்டும்.

நிதி மற்றும் கணக்கு பராமரிப்பு

6.233 கட்சி மாநிலக்குழுவின் வரவு-செலவு கணக்கு 31 டிசம்பர் 2014 வரை மாநிலக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உள்/வெளி தணிக்கைகள் முறையாக செய்யப்படுகின்றன. இந்த நடைமுறை பெரும்பாலான மாவட்டங்களிலும் பின்பற்றப்படுகின்றன. சில மாவட்டங்களில் இன்னும் பலப்படுத்த வேண்டியுள்ளது. கணக்கு பராமரிப்பை அனைத்து மாவட்டங்களிலும் கணினிமயமாக்கல் செய்திட வேண்டியுள்ளது.

6.234 வருமான வரி சட்டத்திலிருந்து கட்சி வரி விலக்கு பெற அகில இந்திய அளவில் ஒவ்வொரு ஆண்டும் வருமான வரி அதிகாரியிடம் கணக்குகளை சமர்ப்பிக்க வேண்டும். மாநிலக்குழு ஆண்டுதோறும் மாவட்டங்களிலிருந்து வெளித்தணிக்கை (**External Audit - Chartered Accountants**) செய்த கணக்குகளைப் பெற்று, மாநிலக்குழுவின் கணக்குகளையும் ஒருங்கிணைத்து மாநில அளவில் வெளித்தணிக்கை செய்து மத்தியக்குழுவுக்கு அனுப்பி வருகிறது. மாவட்டக்குழுக்கள் வெளித்தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை உரிய நேரத்தில் மாநில மையத்திற்கு அனுப்பி வைக்காத காரணத்தினால் குறித்த காலத்திற்குள் தணிக்கை அறிக்கையை மத்தியக்குழுவுக்கு அனுப்ப முடியாத நிலை இன்னும் தொடர்கிறது. எனவே, மாவட்டக்குழுக்கள் உரிய காலத்திற்குள் தணிக்கை அறிக்கையை மாநில மையத்திற்கு அனுப்பி வைப்பதை உறுதி செய்திட வேண்டும்.

6.235 கட்சியின் அமைப்புச் சட்டப்பிரிவு 16ன் விதி 2-ல் உள்ளபடி - மாவட்டக்குழுக்கள் அதனுடைய வரவு செலவு கணக்கையும், மாவட்டக்குழுவின் கீழ் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ் கமிட்டிகளின் வரவு-செலவு கணக்கையும் ஒருங்கிணைத்து வெளித்தணிக்கை செய்து ஒவ்வொரு ஆண்டும் மாநிலக்குழுவுக்கு அனுப்பிவைக்க வேண்டும். இது போல் மாநிலக்குழு அதனுடைய வரவு-செலவு கணக்குகளையும், அதன் கீழ் உள்ள மாவட்டக்குழுக்களின் கணக்குகளையும் ஒருங்கிணைத்து வெளித்தணிக்கை செய்து ஒவ்வொரு ஆண்டும் மத்தியக்குழுவுக்கு அனுப்பிவைக்க வேண்டும். எனவே, மாவட்டக்குழுக்கள் இடைக்குழுக்களின் கணக்குகளை மே 31-க்குள் பெற்று மாவட்டக்குழுவின் வரவு-செலவு கணக்கையும் ஒருங்கிணைத்து வெளித்தணிக்கை செய்து ஜூன் 30-க்குள் மாநில மையத்திற்கு அனுப்பிவைத்திட வேண்டும்.

6.236 மாநிலக்குழுவின் செலவுகள் கட்சி நிதி மற்றும் லெவி ஈவுத்தொகை மூலமே சந்திக்கப்படுகிறது. 2012-ல் லெவி ஈவுத்தொகையாக ரூ. 25,23,908/-ம், 2013-ல் ரூ.31,91,914/-ம், 2014-ல் ரூ.35,16,827-ம் மாநிலக்குழுவுக்கு வந்துள்ளது. லெவி வசூலிலும் மாநில மையத்திற்கு ஈவுத் தொகை அனுப்புவதிலும் தொடர்ச்சியான முன்னேற்றம் உள்ளது. இதனை மேலும் பலப்படுத்திட வேண்டும். மத்தியக்குழு நிர்ணயித்துள்ள விகிதாச்சார லெவியை வருமானமுள்ள கட்சி உறுப்பினர்கள் அனைவரும் செலுத்துவதை மாவட்டக்குழுக்கள் உறுதி செய்திட வேண்டும்.

6.237 கட்சி நிதி, நாடாளுமன்ற நிதி இலக்கினை ஓரளவு மாவட்டக்குழுக்கள் நிறைவேற்றியுள்ளன. எனினும் கட்சி நிதி இலக்கில் திண்டுக்கல், வேலூர், திருவாரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், நீலகிரி, சிவகங்கை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டக்குழுக்களும் நாடாளுமன்றத் தேர்தல் நிதி இலக்கில் தேர்தலில் போட்டியிட்ட மாவட்டக்குழுக்கள் தவிர்த்து, திருவள்ளூர், திருவாரூர், பெரம்பலூர், கிருஷ்ணகிரி, தேனி, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டக்குழுக்களும் 50 சதவிகிதம் அல்லது அதற்கு குறைவாகவே இலக்கினை நிறைவேற்றியுள்ளன. இந்தக் குறைபாடு களையப்பட வேண்டும். தீர்மானிக்கப்படும் இலக்கினை மாவட்டக்குழுக்கள் நிறைவேற்றிட வேண்டும்.

6.238 இக்காலத்தில் பொது மக்களிடம் உண்டியல் மூலம் இரண்டு முறை நிதி சேகரித்து தீக்கதிர் வளர்ச்சிக்காக கொடுக்கப்பட்டுள்ளது. இதுபோல் வெண்மணி நினைவகத்திற்காகவும் நிதி சேகரித்து சிஐடியு மையத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

6.239 கணக்கு பராமரிக்கும் முறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் சம்பந்தமாக மாவட்டச் செயலாளர்கள், நிதிப் பொறுப்பாளர்கள் கூட்டம் ஒரு முறை மாநில அளவில் நடத்தப்பட்டது. இதற்கேற்ப மாவட்டங்களில் வரவு-செலவு கணக்குகள் பராமரிப்பில் ஓரளவு முன்னேற்றம் உள்ளன. வழிகாட்டுதல்படி ஆண்டுதோறும் வரவு-செலவு (**Receipts and Payments**), வருவாய்-

செலவினங்கள் (Income and Expenditure) ஆண்டு இருப்பு நிலைக் குறிப்பு (Balance Sheet) ஆகியவற்றுடன் தணிக்கையாளரின் தணிக்கை சான்றிதழும் பெற்று மாநில மையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

6.231 எதிர்காலக் கடமைகள்:

1. ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை தொடர்ச்சியாக நடத்திட வேண்டும்.
2. வகுப்புவாத சக்திகளுக்கு எதிரான இயக்கத்தை எல்லா தளத்திலும் நடத்திட வேண்டும்.
3. மத்திய அரசினுடைய நவீன தாராளமயப் பொருளாதாரக் கொள்கையையும், அதனுடைய விளைவுகளையும் எதிர்த்து இயக்கங்களுக்கு திட்டமிட வேண்டும்.
4. மாநில அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்து இயக்கம் நடத்திட வேண்டும்.
5. இயற்கை வளங்கள் கொள்ளை போவதை எதிர்த்தும், ஊழலை எதிர்த்தும் இயக்கத்திற்கு திட்டமிட வேண்டும்.
6. மக்களுக்கான நமது மாற்றுக் கொள்கையை விரிவான முறையில் எடுத்துச் செல்வது.
7. தீண்டாமைக் கொடுமை, பெண்கள் மீது இழைக்கப்படும் அநீதி உள்ளிட்ட சமூகக் கொடுமைகளுக்கு எதிராக இயக்கம் நடத்திட வேண்டும்.
8. கலை, இலக்கியப் பண்பாட்டுத்தளத்தில் நமது பணியை மேலும் பலப்படுத்திட வேண்டும்.
9. தீக்கதிர் விற்பனையை அடுத்து வரும் ஓராண்டில் 40 ஆயிரமாகவும், அடுத்த மாநில மாநாட்டிற்குள் 60 ஆயிரமாகவும் உயர்த்திட வேண்டும்.
10. அ. கட்சி மற்றும் வர்க்க-வெகுஜன அரங்கங்களை விரிவுபடுத்துவது,

    ஆ. கிளை மற்றும் இடைக்குழுக்களின் செயல்பாட்டை மேம்படுத்துவது,

    இ. வாக்கு பலத்தை அதிகரிப்பது,
11. தலித் மக்கள், சிறுபான்மை மக்கள், பெண்கள், இளைஞர்களை பெருமளவில் கட்சிக்குள் கொண்டு வர திட்டமிட வேண்டும்.

மார்க்சியம்– லெனினியம் வாழ்க!

மக்கள் ஜனநாயகப் புரட்சி ஓங்குக!!

* * *

கட்சி உறுப்பினர் பதிவு விபரம்				
வ.எண்	மாவட்டம்	2012	2013	2014
1	வடசென்னை	4501	4641	4,684
2	தென்சென்னை	2675	3279	3659
3	திருவள்ளூர்	1776	1879	1688
4	காஞ்சிபுரம்	1675	1680	1802
5	வேலூர்	1,637	1660	1781
6	திருவண்ணாமலை	1185	1342	1,465
7	விழுப்புரம்	3230	4009	3843
8	கடலூர்	4411	4743	5,069
9	புதுச்சேரி	839	938	970
10	திருவாரூர்	3331	3625	3922
11	நாகப்பட்டிணம்	4194	4195	4535
12	தஞ்சாவூர்	4027	4117	4283
13	புதுக்கோட்டை	2980	3156	3361
14	திருச்சி	4498	4477	4906
15	கரூர்	1251	1218	1187
16	பெரம்பலூர்	943	1013	1027
17	நாமக்கல்	1946	1937	2093
18	சேலம்	3105	3800	3618
19	கிருஷ்ணகிரி	1974	2317	2469
20	தருமபுரி	1557	3901	3642
21	ஈரோடு	1667	1733	1661
22	திருப்பூர்	3829	4236	4362
23	கோவை	4965	5264	5603
24	நீலகிரி	876	901	975
25	தேனி	2233	2402	2497
26	திண்டுக்கல்	5296	5469	5570
27	மதுரை புறநகர்	2978	2951	3089
28	மதுரை மாநகர்	3372	3639	3835
29	விருதுநகர்	3275	3510	3383
30	சிவகங்கை	1315	1448	1270
31	இராமநாதபுரம்	1873	1917	1940
32	தூத்துக்குடி	2118	2182	2,212
33	திருநெல்வேலி	2913	3019	3230
34	கன்னியாகுமரி	4736	5265	5212
35	மையம்	205	200	208
	மொத்தம்	93,386	102063	105051

துணைக்குழு உறுப்பினர் பதிவு விபரம்				
வ.எண்	மாவட்டம்	2012	2013	2014
1	வடசென்னை	--	--	1980
2	தென்சென்னை	1372		1642
3	திருவள்ளூர்	503	301	756
4	காஞ்சிபுரம்	400	450	550
5	வேலூர்	314	352	295
6	திருவண்ணாமலை	514	185	150
7	விழுப்புரம்	1478	1457	1363
8	கடலூர்	1102	1336	1559
9	புதுச்சேரி	242	238	239
10	திருவாரூர்	409	160	363
11	நாகப்பட்டிணம்		520	737
12	தஞ்சாவூர்	912	592	623
13	புதுக்கோட்டை	643	352	417
14	திருச்சி	897	969	1701
15	கரூர்	382	298	272
16	பெரம்பலூர்	294	234	322
17	நாமக்கல்		540	155
18	சேலம்	835	374	998
19	கிருஷ்ணகிரி	556	200	--
20	தருமபுரி	292	688	758
21	ஈரோடு	23	519	342
22	திருப்பூர்	498		1250
23	கோவை			1529
24	நீலகிரி			--
25	தேனி	958	926	1344
26	திண்டுக்கல்	1375	1426	1297
27	மதுரை புறநகர்	1150	2214	1213
28	மதுரை மாநகர்	1170	696	1393
29	விருதுநகர்	402	385	939
30	சிவகங்கை	350	250	515
31	இராமநாதபுரம்	306	204	224
32	தூத்துக்குடி	337	112	--
33	திருநெல்வேலி			964
34	கன்னியாகுமரி		214	510
35	மையம்	18	11	504
	மொத்தம்	17732	18203	26407

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்
உறுப்பினர் பதிவு விபரம்

வ. எண்	மாவட்டம்	2011-12	2012-13	2013-14
01	கன்னியாகுமரி	26,110	18,580	20,109
02	தூத்துக்குடி	35,012	40,077	50,006
03	திருநெல்வேலி	17,700	15,195	12,046
04	விருதுநகர்	20,000	15,333	17,000
05	சிவகங்கை	9,352	12,000	7,500
06	இராமநாதபுரம்	14,235	12,350	11,200
07	மதுரை	23,500	14,000	17,340
08	தேனி	40,387	42,012	45,069
09	திண்டுக்கல்	30,000	30,500	32,000
10	திருச்சி	25,000	18,000	21,500
11	புதுக்கோட்டை	31,000	25,380	25,016
12	நாகப்பட்டினம்	41,000	45,000	53,333
13	திருவாரூர்	32,500	35,000	40,000
14	தஞ்சாவூர்	28,000	26,203	30,000
15	கரூர்	2,500	4,000	4,000
16	ஈரோடு	4,158	5,550	6,453
17	திருப்பூர்	7,000	7,725	6,450
18	கோவை	5,500	4,000	4,000
19	நீலகிரி	6,312	6,210	5,160
20	சேலம்	24,025	18,500	15,000
21	நாமக்கல்	10,125	12,000	12,970
22	கிருஷ்ணகிரி	20,220	22,231	23,120
23	தர்மபுரி	17,750	26,500	30,000
24	பெரம்பலூர்	14,000	16,266	17,000
25	வேலூர்	11,114	10,200	11,150
26	தி.மலை	16,150	16,666	20,651
27	கடலூர்	22,000	20,000	21,000
28	விழுப்புரம்	42,350	45,636	47,560
29	காஞ்சிபுரம்	11,150	12,400	19,120
30	திருவள்ளூர்	12,500	14,127	15,016
31	வடசென்னை	4,100	2,500	3,500
32	தென்சென்னை		2,500	3,300
33	பாண்டிச்சேரி	4,100	3,500	3,440
34	மலை சங்கம்	56,800	57,700	69,358
35	பால் சங்கம்	17,500	19,250	22,800
36	கரும்பு சங்கம்	21,090	18,155	20,054
37	தென்னை	1,900		
38	கறிக்கோழி	1,250	1,750	1100
39	மையம்	6	5	6
	மொத்தம்	7,07,396	6,97,001	7,64,327

அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் - உறுப்பினர் பதிவு விபரம்				
எண்	மாவட்டம்	2011-12	2012-13	2013-14
1	நாகப்பட்டினம்	27200	32000	32000
2	தஞ்சாவூர்	32000	32000	33000
3	திருவாரூர்	30000	30000	30000
4	மதுரை	20000	15000	15000
5	தேனி	40000	40150	40500
6	திண்டுக்கல்	31000	34000	35000
7	திருச்சி	30000	35000	36000
8	விழுப்புரம்	42000	47000	45000
9	கடலூர்	32000	35000	40000
10	சேலம்	26000	31000	31300
11	நாமக்கல்	21768	27500	27719
12	ஈரோடு	22545	25000	26000
13	கன்னியாகுமரி	41500	45000	45123
14	திருப்பூர்	9200	11450	10000
15	புதுக்கோட்டை	25100	28000	30000
16	கோயம்புத்தூர்	10200	13000	10000
17	திருவள்ளூர்	20000	22000	22000
18	காஞ்சிபுரம்	2000	2000	5000
19	தி. மலை	12000	15000	15000
20	கரூர்	5000	5500	5500
21	புதுச்சேரி	5200	6300	8000
22	தூத்துக்குடி	6500	11000	7000
23	பெரம்பலூர்	5000	5000	6000
24	சிவகங்கை	5000	5000	2000
25	வேலூர்	12000	12100	50500
26	விருதுநகர்	11000	12000	12000
27	திருநெல்வேலி	5000	5000	5500
28	ராமநாதபுரம்	8350	9060	10000
29	தருமபுரி	10000	15000	12000
30.	க.வெ.தொ.சங்கம்	8000	10000	10000
31.	கிருஷ்ணகிரி	-	5000	4500
32	மையம்	3	3	3
	மொத்தம்	555566	621063	661645

அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் - உறுப்பினர் பதிவு விபரம்					
வ. எண்	மாவட்டங்கள்	2011	2012	2013	2014
1.	வட சென்னை	59635	57240	53625	55730
2.	தென் சென்னை	30000	35000	26490	20490
3.	காஞ்சிபுரம்	22283	25000	27100	28000
4.	திருவள்ளூர்	10000	9550	14730	18000
5.	திருச்சி	26000	28065	25200	2400
6.	பெரம்பலூர்	10000	11000	13000	12000
7.	கரூர்	4350	4000	4000	1500
8.	தஞ்சை	15500	22000	40500	41200
9.	திருவாரூர்	10000	13000	15000	15000
10.	நாகை	21000	26836	30500	30000
11.	கோவை	38575	43016	44000	45029
12.	திருப்பூர்	35000	45200	47420	50087
13.	நீலகிரி	3187	4300	5620	4500
14.	மதுரை மாநகர்	35100	38428	40415	18676
15.	மதுரை புறநகர்	20000	24000	18000	20000
16.	தேனி	21000	25133	21100	15000
17.	திண்டுக்கல்	37712	44525	40040	33550
18.	புதுக்கோட்டை	5000	6300	5300	5000
19.	நெல்லை	18000	21000	21000	14000
20.	தூத்துக்குடி	10200	13500	20000	18185
21.	விருதுநகர்	26650	32000	35025	25000
22.	குமரி	25000	32000	30000	28597
23.	இராமநாதபுரம்	2500	1500	4000	5000
24.	சிவகங்கை	10000	15450	7437	10000
25.	வேலூர்	13800	7000	12000	11000
26.	திருவண்ணாமலை	8000	6000	11000	10000
27.	சேலம்	25000	23300	28515	26787
28.	நாமக்கல்	3500	5400	5000	2500
29.	தர்மபுரி	15333	15000	23015	19000
30.	கிருஷ்ணகிரி	4000	11000	12000	15000
31.	ஈரோடு	7000	5500	3000	5595
32.	பாண்டி	5045	4000	2500	4000
33.	கடலூர்	27500	35000	30000	31000
34.	விழுப்புரம்	10000	11000	12650	9000
	மொத்தம்	**6,15,870**	**7,01,243**	**7,29,182**	**6,50,826**

இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் உறுப்பினர் பதிவு விவரம்			
மாவட்டம்	**2011**	**2012**	**2013**
வடசென்னை	72150	74112	60086
தென்சென்னை	39506	43505	42000
திருவள்ளூர்	34999	36355	37619
காஞ்சிபுரம்	24216	21440	22554
வேலூர்	5603	4455	13200
விழுப்புரம்	74072	68832	70112
தி.மலை	23527	24228	27405
பாண்டிசேரி	10429	5086	8397
கடலூர்	41287	41795	41834
நாகப்பட்டிணம்	42287	42532	56272
திருவாரூர்	37000	42748	45481
தஞ்சாவூர்	25211	20490	19950
பெரம்பலூர்	1000	1000	4500
அரியலூர்	-		4000
கரூர்	9760	10150	5415
திருச்சி	46000	31250	35143
புதுக்கோட்டை	50065	40600	40671
சிவகங்கை	9609	10060	9610
இராமநாதபுரம்	11000	8730	9911
தூத்துக்குடி	23420	20235	25169
கன்னியாகுமரி	25409	27909	17306
திருநெல்வேலி	16200	15430	16895
விருதுநகர்	40763	43500	39050
மதுரை புறநகர்	25181	16200	21073
மதுரை மாநகர்	50521	43870	44250
தேனி	25000	19711	7064
திண்டுக்கல்	43556	45840	46736
ஈரோடு	13454	14454	14595
கோவை	33457	31420	37556
திருப்பூர்	86203	86241	87311
நீலகிரி	12000	7500	8500
நாமக்கல்	16800	11770	10035
சேலம்	43767	46700	46177
தருமபுரி	19172	17305	17000
கிருஷ்ணகிரி	20350	22550	19150
மாநிலக்குழு	80	82	82
மொத்தம்	**10,53,054**	**9,98,085**	**10,12,109**

இந்திய மாணவர் சங்கம் உறுப்பினர் பதிவு விபரம்				
எண்	மாவட்டங்கள்	2011-12	2012-13	2013-14
1	வடசென்னை	6065	12085	12158
2	தென்சென்னை	8639	10266	20150
3	காஞ்சிபுரம்	8460	10402	11305
4	திருவள்ளூர்	4550	4400	5550
5	வேலூர்	5150	5900	6150
6	தி.மலை	2000	2000	5020
7	கடலூர்	6855	10730	11099
8	விழுப்புரம்	1700	4300	6500
9	பாண்டிச்சேரி	6066	10630	11338
10	தர்மபுரி	1620	2000	5350
11	கிருஷ்ணகிரி	1850	-	5760
12	சேலம்	7218	3174	4150
13	நாமக்கல்	8643	8661	11406
14	ஈரோடு	4382	4008	4127
15	நீலகிரி	300	750	2000
16	கோவை	2663	620	3200
17	திருப்பூர்	2000	2656	1150
18	திருவாரூர்	11584	16200	18333
19	நாகப்பட்டிணம்	11100	13510	20052
20	தஞ்சாவூர்	18633	15784	18947
21	திருச்சி	4700	7436	10560
22	கரூர்	-	1665	1863
23	பெரம்பலூர்	2000	4500	4900
24	புதுக்கோட்டை	3000	6000	1125
25	திண்டுக்கல்	11890	7061	14014
26	தேனி	4376	7040	12935
27	மதுரை நகர்	10105	8025	6232
28	மதுரை புறநகர்	10023	7603	10136
29	இராமநாதபுரம்	11200	12445	14800
30	சிவகங்கை	2000	1500	2400
31	விருதுநகர்	10200	10805	11620
32	திருநெல்வேலி	10650	12783	18448
33	தூத்துக்குடி	100	9110	15520
34	கன்னியாகுமரி	11959	10128	10494
	மொத்தம்	211681	244177	318792

பெண் கட்சி உறுப்பினர் பதிவு விபரம்				
வ.எண்	மாவட்டம்	2012	2013	2014
1	வடசென்னை	914	1045	1098
2	தென்சென்னை	397	613	761
3	திருவள்ளூர்	271	196	390
4	காஞ்சிபுரம்	256	281	294
5	வேலூர்	347	383	416
6	தி. மலை	172	176	171
7	விழுப்புரம்	501	622	653
8	கடலூர்	730	793	889
9	புதுச்சேரி	121	138	154
10	திருவாரூர்	529	589	575
11	நாகப்பட்டிணம்	659	643	695
12	தஞ்சாவூர்	535	603	646
13	புதுக்கோட்டை	495	625	621
14	திருச்சி	714	680	829
15	கரூர்	232	200	217
16	பெரம்பலூர்	187	224	294
17	நாமக்கல்	233	229	282
18	சேலம்	384	556	465
19	கிருஷ்ணகிரி	205	278	193
20	தருமபுரி	269	685	613
21	ஈரோடு	309	321	298
22	திருப்பூர்	538	629	668
23	கோவை	606	708	763
24	நீலகிரி	108	107	135
25	தேனி	310	474	356
26	திண்டுக்கல்	627	960	909
27	மதுரை புறநகர்	375	381	416
28	மதுரை மாநகர்	612	696	786
29	விருதுநகர்	457	557	544
30	சிவகங்கை	-	256	221
31	இராமநாதபுரம்	321	348	344
32	தூத்துக்குடி	285	340	340
33	திருநெல்வேலி	296	311	352
34	கன்னியாகுமரி	1167	1429	1332
35	மையம்		40	42
	மொத்தம்	14162	17116	17762

சிஐடியு உறுப்பினர் பதிவு விபரம்

வ.எண்	மாவட்டம்	2011	2012	2013
1	கன்னியாகுமரி	51,462	47,901	47,800
2	தென்சென்னை	34,358	32,790	31,811
3	வடசென்னை	32,712	33,161	29,148
4	மதுரைமாநகர்	25,049	23,470	22,502
5	கோவை	24,950	24,641	24,554
6	திருப்பூர்	23,855	20,997	25,040
7	கடலூர்	21,220	23,905	22,461
8	திருநெல்வேலி	19,774	21,348	24,379
9	விருதுநகர்	19,550	21,222	20,692
10	சேலம்	17,772	16,406	16,767
11	காஞ்சிபுரம்	15,039	13,047	11,401
12	துத்துக்குடி	14,523	11,013	12,159
13	திண்டுக்கல்	12,721	13,797	14,201
14	திருச்சி	12,081	12,331	14,015
15	தேனி	11,096	9,009	8,729
16	தஞ்சாவூர்	10,042	10,397	12,464
17	வேலூர்	9,768	8,937	10,202
18	நாகை	8,958	5,383	7,192
19	ஈரோடு	8,957	8,601	8,631
20	கிருஷ்ணகிரி	8,520	8,573	8,875
21	திருவாரூர்	8,284	8,750	2,225
22	விழுப்புரம்	8,181	6,259	2,196
23	மதுரை புறநகர்	7,171	7,507	7,551
24	பெரம்பலூர்	6,712	7,678	5,886
25	திருவள்ளுர்	6,242	6,362	6,584
26	புதுச்சேரி	6,215	6,272	5,448
27	இராமநாதபுரம்	6,049	5,706	1,009
28	நாமக்கல்	5,634	5,896	6,281
29	தர்மபுரி	5,502	6,014	5,679
30	திருவண்ணாமலை	4,719	2,971	2,500
31	புதுக்கோட்டை	4,340	3,204	3,964
32	கரூர்	4,280	5,098	5,328
33	நீலகிரி	4,015	2,432	2,662
34	சிவகங்கை	3,997	2,619	3,697
35	மின்ஊழியர்	28,150	26,070	25,060
36	இரயில்வே	36,589	31,134	12,642
37	மருத்துவ பிரதிநிதி	6,781	7,652	8,341
38	அரசு விரைவு போக்குவரத்து	2,131	2,080	2,363
39	நுகர்பொருள்	673	1,283	1,235
40	கனிமம்	554	632	832
41	கதர்	217	135	79
42	அங்கன்வாடி	22,118	22,571	17,212
	மொத்தம்	5,60,961	5,35,254	5,01,797

சிஐடியு உறுப்பினர் பட்டியல் 20.12.2014 வரையுள்ளது. 2013ம் ஆண்டுக்கான உறுப்பினர் பட்டியல் முழுமைபெறவில்லை. இன்னும் சில மாவட்டங்களிலிருந்து வர வேண்டியுள்ளது.

கட்சி உறுப்பினர் லெவி விபரம் (2012 முதல் 2014)				
வ.எண்	மாவட்டம்	2012	2013	2014
1	வடசென்னை	1,21,362	233745	334928
2	தென்சென்னை	2,67,960	296542	349346
3	திருவள்ளூர்	36,872	33182	42247
4	காஞ்சிபுரம்	89,081	103070	112275
5	வேலூர்	35,000	36419	40076
6	திருவண்ணாமலை	514	41901	30806
7	விழுப்புரம்	70,207	90936	99931
8	கடலூர்	75,464	100223	118024
9	புதுச்சேரி	18,870	24914	24008
10	திருவாரூர்	50,210	35015	89694
11	நாகப்பட்டினம்	51,612	60000	50652
12	தஞ்சாவூர்	46,067	81235	85238
13	புதுக்கோட்டை	36,571	41734	52327
14	திருச்சி	84,820	90841	95352
15	கரூர்	33,280	39576	43970
16	பெரம்பலூர்	12,000	16794	19993
17	நாமக்கல்	38,000	59900	61414
18	சேலம்	66,671	50000	70114
19	கிருஷ்ணகிரி	19,000	26000	33229
20	தருமபுரி	9,344	39010	44064
21	ஈரோடு	95,868	102932	109406
22	திருப்பூர்	1,52,264	171331	189524
23	கோவை	1,70,669	189583	211282
24	நீலகிரி	17,140	18688	22084
25	தேனி	37,031	55862	48152
26	திண்டுக்கல்	77,983	92805	107612
27	மதுரை புறநகர்	65,793	109778	90030
28	மதுரை மாநகர்	1,98,305	225217	261806
29	விருதுநகர்	36,113	47577	108700
30	சிவகங்கை	12,020	21654	27445
31	இராமநாதபுரம்	30,500	31000	38534
32	தூத்துக்குடி	50,000	126497	86479
33	திருநெல்வேலி	40,000	55000	70000
34	கன்னியாகுமரி	68,853	54570	69531
35	மையம்	3,08,464	388383	395889
	மொத்தம்	25,57,750	3191914	3634162

தீக்கதிர் வளர்ச்சி நிதி (2012 & 2014) மற்றும் வெண்மணி நினைவக கட்டிட நிதி				
		தீக்கதிர் வளர்ச்சி நிதி		வெண்மணி நிதி
வ.எண்	மாவட்டம்	2012	2014	
1	வடசென்னை	2,00,000	4,00,000	1,42,000
2	தென்சென்னை	1,50,000	4,00,000	1,50,000
3	திருவள்ளூர்	50,000	70,500	50,000
4	காஞ்சிபுரம்	1,00,000	1,90,000	50,000
5	வேலூர்	80,000	55,312	42,000
6	தி.மலை	50,000	1,20,000	32,000
7	விழுப்புரம்	75,000	1,00,000	75,000
8	கடலூர்	1,00,000	1,70,500	1,00,000
9	பாண்டிச்சேரி	50,000	37,000	36,200
10	திருவாரூர்	1,01,000	50,000	1,00,000
11	நாகப்பட்டினம்	68,330	50,000	1,00,000
12	தஞ்சாவூர்	1,00,000	1,00,000	75,000
13	புதுக்கோட்டை	75,000	25,000	30,000
14	திருச்சி	1,85,000	1,03,530	1,32,492
15	கரூர்	50,334	19,410	20,000
16	பெரம்பலூர்	20,000	-	20,000
17	நாமக்கல்	50,000	49,000	10,000
18	சேலம்	1,00,000	10,000	50,000
19	கிருஷ்ணகிரி	50,000	50,000	50,000
20	தருமபுரி	-	60,000	10,000
21	ஈரோடு	1,02,788	1,67,500	43,000
22	திருப்பூர்	2,00,000	2,16,540	1,71,700
23	கோவை	-	2,00,000	1,26,947
24	நீலகிரி	33,000	-	23,000
25	தேனி	1,00,000	1,37,632	70,000
26	திண்டுக்கல்	1,00,000	1,64,841	1,00,000
27	மதுரை புறநகர்	75,000	1,65,000	60,000
28	மதுரை மாநகர்	1,03,690	4,00,000	58,900
29	விருதுநகர்	1,00,000	75,000	90,000
30	சிவகங்கை	22,000	15,000	40,000
31	இராமநாதபுரம்	47,000	50,000	32,000
32	தூத்துக்குடி	1,00,000	1,00,000	85,000
33	நெல்லை	1,00,000	1,00,000	1,00,000
34	குமரி	1,00,000	-	77,500
35	மையம்	33,520	5,000	-
	மொத்தம்	28,71,662	38,56,765	23,52,739

தீக்கதிர் - செம்மலர் - விற்பனை விபரம்

		தீக்கதிர்			செம்மலர்		
வ.எ	மாவட்டம்	2012	2013	2014	2012	2013	2014
1	வடசென்னை	1833	1707	1551	689	629	518
2	தென்சென்னை	1,701	1,570	1,441	401	370	370
3	திருவள்ளூர்	362	419	382	25	35	12
4	காஞ்சிபுரம்	507	582	691	316	276	330
5	வேலூர்	433	471	470	304	36	160
6	விழுப்புரம்	441	787	537	109	113	144
7	திருவண்ணாமலை	334	417	406	83	72	83
8	புதுச்சேரி	376	373	327	30	131	15
9	கடலூர்	613	867	691	336	329	205
10	நாகப்பட்டிணம்	690	639	500	55	90	64
11	திருவாரூர்	722	528	597	138	136	203
12	தஞ்சாவூர்	757	938	979	248	167	150
13	பெரம்பலூர்	189	208	167	7	7	2
14	கரூர்	315	268	290	117	114	78
15	திருச்சி	1,332	1,017	1,052	129	326	182
16	புதுக்கோட்டை	438	537	439	73	87	94
17	சிவகங்கை	362	403	368	53	58	68
18	ராமநாதபுரம்	214	241	306	122	110	105
19	தூத்துக்குடி	1,023	777	762	111	221	302
20	கன்னியாகுமரி	817	1,041	797	266	385	345
21	திருநெல்வேலி	952	1,029	943	339	367	358
22	விருதுநகர்	1,107	1,370	1,279	315	371	637
23	மதுரை மாநகர்	1,383	1,577	1,356	724	716	624
24	மதுரை புறநகர்	808	820	857	93	70	38
25	தேனி	771	726	692	91	87	127
26	கேரளா	1,437	527	512	-	-	-
27	திண்டுக்கல்	1,377	1,414	1,357	349	265	485
28	ஈரோடு	1,168	1,080	1,046	421	432	478
29	கோவை	2,603	2,017	2,072	788	414	610
30	திருப்பூர்	3,003	3,033	2,777	2200	1832	1860
31	நீலகிரி	283	330	274	79	28	19
32	நாமக்கல்	707	470	476	182	164	171
33	சேலம்	785	899	751	168	236	151
34	தருமபுரி	328	531	449	11	18	19
35	கிருஷ்ணகிரி	292	256	260	11	8	10
36	மற்றவை	185	213	152	31	32	334
	மொத்தம்	30648	30082	28006	9414	8732	9351

மார்க்சிஸ்ட் - பீப்பிள்ஸ் டெமாக்ரசி - விற்பனை விபரம்							
		மார்க்சிஸ்ட்			பீப்பிள்ஸ் டெமாக்ரசி		
வ.எ	மாவட்டம்	2012	2013	2014	2012	2013	2014
1	வடசென்னை	1070	668	1648	220	279	54
2	தென்சென்னை	351	350	1,135	192	343	172
3	திருவள்ளூர்	19	84	70	13	15	5
4	காஞ்சிபுரம்	155	275	476	63	71	62
5	வேலூர்	36	45	35	9	16	24
6	விழுப்புரம்	59	67	140	3	12	12
7	திருவண்ணாமலை	57	55	150	1	8	1
8	புதுச்சேரி	17	27	25	20	15	4
9	கடலூர்	635	545	771	27	65	81
10	நாகப்பட்டிணம்	49	209	236	6	8	8
11	திருவாரூர்	366	99	313	19	34	18
12	தஞ்சாவூர்	106	126	190	5	94	22
13	பெரம்பலூர்	7	7	55	1	0	3
14	கரூர்	90	92	117	0	13	2
15	திருச்சி	491	91	155	35	86	41
16	புதுக்கோட்டை	53	42	175	11	26	10
17	சிவகங்கை	75	79	90	6	14	2
18	ராமநாதபுரம்	73	55	108	5	18	6
19	தூத்துக்குடி	50	74	122	4	67	31
20	கன்னியாகுமரி	139	130	124	27	64	10
21	திருநெல்வேலி	335	223	424	76	99	69
22	விருதுநகர்	169	108	337	21	58	31
23	மதுரை மாநகர்	755	748	1,315	25	149	21
24	மதுரை புறநகர்	75	70	86	0	0	0
25	தேனி	473	60	486	11	8	11
26	திண்டுக்கல்	301	260	320	44	37	35
27	ஈரோடு	185	194	456	17	47	36
28	கோவை	1,178	815	1,023	67	65	64
29	திருப்பூர்	804	693	1,364	44	213	122
30	நீலகிரி	12	11	155	38	36	0
31	நாமக்கல்	186	154	288	1	10	6
32	சேலம்	83	69	116	44	81	30
33	தருமபுரி	4	32	102	7	29	0
34	கிருஷ்ணகிரி	37	11	132	2	10	2
35	மற்றவை	27	24	394	113	56	39
	மொத்தம்	8,522	6,592	13,133	1177	2146	1034

2012-2014 இல் வெளியிடப்பட்ட பிரசுரங்கள் பட்டியல்			
எ	தேதி	தலைப்பு	பிரதிகள்
1	மார்ச் 2012	மார்ச் 27 மறியல்	1,20,000
2	மார்ச் 2012	20வது கட்சி காங்கிரஸ் அரசியல் தீர்மானம்	7,500
3	மார்ச் 2012	20வது கட்சி காங்கிரஸ்-தத்துவார்த்த தீர்மானம்	6,000
4	மார்ச் 2013	மாற்று பாதைக்கான போர் முழக்க பயணம்	1,10,000
5	மே.2012	அரசியல் தத்துவார்த்தம்	9,000
6	ஜுலை 2012	சொல்லக் கொதிக்குது நெஞ்சம் சோற்றுக்கோ வந்திடுமோ பாசம்	50,000
7	அக். 2012	களவு போகுது தேசம் கனவாகுது மின்சாரம்	65,000
8	நவ. 2012	மத்திய குழு அறிக்கை	3,300
9	மே.2012	இலங்கை தமிழர் பிரச்சனையில் சிபிஎம் அணுகுமுறை	15,000
10	செப்.2013	அரசியல் ஸ்தாபன அறிக்கை	4,500
11	நவ. 2013	மோடியின் குஜராத் இந்தியாவின் மாதரி அல்ல	2,23,000
12	டிச. 2013	இடைக்கால ஸ்தாபன பரிசீலனை	14,200
13	ஜுலை2014	16வது பாராளுமன்ற தேர்தல் அறிக்கை	2,600
14	ஜுலை 2014	தமிழகத்தில் நெறிப்படுத்தும் இயக்கம்	10,000
15		16வது பாராளுமன்ற தேர்தல் பரிசீலனை	10,000
16		தொழிற்சங்க அரங்கில் நமது கடமை	10,000
17	ஆக. 2014	மக்கள் சந்திப்பு இயக்கம். பொங்கி எழுகவே-புத்திபுகட்டவே	2,60,000
18	அக். 2014	ஊழலை ஒழிக்க ஊரைத் திரட்டிடுவோம்	2,20,000

சர்வதேசிய கீதம்

பட்டினிக் கொடுஞ்சிறைக்குள் பதறுகின்ற மனிதர்காள்
பாரில் கடையரே எழுங்கள் வீறுகொண்டு தோழர்காள்
கொட்டுமுரசு கண்டன முழக்கமெங்கும் குமுறிட
கொதித்தெழுப் புதியவுலக வாழ்வதில் திளைத்திட

(பட்டினி)

பண்டையப் பழக்கமென்னும் சங்கிலி அறுந்தது
பாடுவீர் சுயேட்சை கீதம் விடுதலை பிறந்தது
இங்கு புதிய முறையிலே இப்புவனமும் அமைந்திடும்
இன்மை சிறுமைதீரநம் இளைஞருலக மாகிடும்

(பட்டினி)

தொன்று தொட்டுழைத்த தொழிலாளி விவசாயிகள்
தோழராயினோம் உழைப்போர் யாவரேனும் ஓர்குலம்
உண்டுநம் உழைப்பிலே உயர்ந்தவர்க்குச் சொல்லுவோம்
உழைப்பவர்கள் யாவருக்கும் சொந்தம் இந்த உலகளலாம்.

(பட்டினி)

மக்களின் உழைப்பெலாம் மறைத்துவைத்து ஒருசிலர்
பொக்கிசங்களில் கிடந்து புரளுகின்ற தறிகுவீர்
இக்கணம் அதைத்திரும்பக் கேட்பதென்ன குற்றமோ
இல்லைநாம் நமக்குரிய பங்கைத்தானே கேட்கிறோம்

(பட்டினி)

பாடுபட்டுழைத்தவர் நிணத்தைத் தின்ற கழுகுகள்
பறந்தொழிந்து போதல் திண்ணம் பாரும் சில நாளதில்
காடுவெட்டி மலையுடைத்துக் கட்டிடங்கள் எழுப்புவோம்
கவலையற்ற போகவாழ்வை அனைவர் உரிமையாக்குவோம்

(பட்டினி)

கட்சி கட்டமைப்பு - விபரம்

எண்	மாவட்டம்	இடைக் குழுக்கள்	அரங்க இடைக் கமிட்டிகள்	கிளைகள்	முழுநேர ஊழியர்கள்	பகுதிநேர ஊழியர்கள்
1	வடசென்னை	13	6	465	30	17
2	தென்சென்னை	14	4	364	33	19
3	திருவள்ளூர்	9	1	192	6	10
4	காஞ்சிபுரம்	8	1	218	19	8
5	வேலூர்	12	2	220	9	4
6	தி.மலை	14	1	192	8	14
7	விழுப்புரம்	16	1	412	17	17
8	கடலூர்	16	2	538	18	11
9	புதுச்சேரி	6	1	109	11	1
10	திருவாரூர்	14	0	345	32	0
11	நாகப்பட்டினம்	12	0	302	22	10
12	தஞ்சாவூர்	18	1	486	13	13
13	புதுக்கோட்டை	15	1	390	23	0
14	திருச்சி	21	3	687	24	12
15	கரூர்	8	0	183	15	2
16	பெரம்பலூர்	9	0	142	8	0
17	நாமக்கல்	12	2	286	17	0
18	சேலம்	16	4	408	11	10
19	கிருஷ்ணகிரி	7	0	265	11	5
20	தருமபுரி	12	1	356	8	9
21	ஈரோடு	8	3	234	25	0
22	திருப்பூர்	15	1	507	30	16
23	கோவை	15	6	611	24	14
24	நீலகிரி	5	1	125	9	1
25	தேனி	8	1	342	10	16
26	திண்டுக்கல்	16	1	790	32	31
27	மதுரை புறநகர்	10	1	453	11	20
28	மதுரை மாநகர்	10	5	406	36	21
29	விருதுநகர்	18	1	474	22	31
30	சிவகங்கை	10	0	169	9	5
31	இராமநாதபுரம்	10	1	264	10	9
32	தூத்துக்குடி	14	3	312	27	10
33	திருநெல்வேலி	16	2	392	22	3
34	கன்னியாகுமரி	14	2	738	21	9
	மொத்தம்	421	59	12377	623	348